SLIC
ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்
தந்தையும் தாயும் போன்று
GENERAL



# ஒப்பற்ற பாதுகாப்புடன் எதிர்காலத்தை வலிமைப்படுத்தல்

ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோபரேஷன் ஜெனரல் லிமிடட்

ஆண்டறிக்கை 2024

எமது நிதியியல் வலிமைக்குள் நிலைபெற்றுள்ளமை காப்புறுதியையும் தாண்டி ஒப்பற்ற பாதுகாப்பினை வழங்குவதற்கான எமது இயலுமையினை எடுத்துக்காட்டுகின்ற புத்தாக்கத்திற்கும் முன்னேற்றத்திற்கும் உறுதியாக கவனம்செலுத்தல் மீது அமைந்திருக்கின்றது. இடர்களை தணிப்பதன் மூலம் பாதுகாப்பினை வழங்குவதன் மீது நாம் கவனம் செலுத்துகின்றமையினால் 2024இல் இடம்பெற்ற மாறுதல்மிக்க நிலைமாறல் எமது உறுதிப்பாட்டினையும் எமது முன்னேற்றத்தையும் ஒன்றாக வளர்ச்சியுறச் செய்தது. உன்னதமான உற்பத்திகளை கொண்ட எமது நாம் வழங்குகின்ற தொகுதியினை கொண்ட ஒழுக்க நெறிசார்ந்த அணுகுமுறையும் வெளிப்படைத்தன்மையும் செயல்திறன் மிக்கவையென எண்பிக்கப்பட்ட நிபுணத்துவத்துடன் கூடிய காப்புறுதி சேவை வழங்குனர் என்ற வகையில் போட்டியிலிருந்து எம்மை வேறுபடுத்திக் காட்டுகின்றது. வியாபாரங்களினதும் தனிப்பட்ட சொத்துக்களினதும் எதிர்காலத்தை பாதுகாக்கின்ற அதேவேளை ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோபரேஷன் ஜெனரல் லிமிடட் நிலைபெறத்தக்க நீண்ட காலத்திற்கான பெறுமதி உருவாக்கத்தில் அதன் சந்தை தலைமைத்துவத்தை தொடர்ந்தும் மீள வலுப்படுத்துகின்றது. தசாப்தங்களுக்கு மேற்பட்ட அனுபவத்திலிருந்து பெற்றுக் கொண்ட உன்னதம் மற்றும் நேர்மை என்பவற்றை கொண்டு நாம் தேசத்திற்கும் அதன் மக்களுக்கும் பணியாற்றுகின்றோம்.

# Cont

## 01 எம்மைப் பற்றி

5 ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோபரேஷன் ஜெனரல் லிமிடட் பற்றி
6 பணிப்பாளர் சபை
11 தலைமைத்துவக் குழு
21 நிதியியல் சிறப்புக்கூறுகள்
22 நிதிசாரா சிறப்புக்கூறுகள்

## 02 தலைமைத்துவ மீளாய்வுகள்

25 தலைவரின் செய்தி
29 குழும பிரதம நிறைவேற்று அலுவலரின் மீளாய்வு

## 03 அறிக்கை பற்றி முகக்குறிப்பு

33 அறிக்கை பற்றி முகக்குறிப்பு

## 04 மூலோபாய கவனம்

38 தொழில் மாதிரி
40 முக்கியத்துவம் மிக்க விடயங்கள்
42 பங்குதாரர் ஈடுபாடு
44 உபாய ரீதியான முன்னுரிமைகள்

இந்த ஆண்டறிக்கையை பார்க்க இங்கே ஸ்கேன் செய்யவும்
ஆன்லைனில் https://www.srilankainsurance.com/en/about-us/annual-reports இல் இணையுங்கள்

## 05 முகாமைத்துவக் கருத்துரை

46 தொழிற்பாட்டுச் சூழல்
48 நிதியியல் மூலதனம்
52 தயாரிக்கப்பட்ட மூலதனம்
55 புலமைசார் மூலதனம்
57 மனித மூலதனம்
62 சமூக மற்றும் உறவுமுறை ரீதியிலான மூலதனம்
75 இயற்கை மூலதனம்

## 06 ஆளுகையும் இடர்நேர்வு கண்காணித்தலும்

80 நிறுவன ஆளுகை அறிக்கை
84 கணக்காய்வு மற்றும் இணக்கப்பாட்டுக் குழு அறிக்கை
86 முதலீட்டுக் குழு அறிக்கை
88 இடர்நேர்வு முகாமைத்துவ அறிக்கை
94 இணக்கப்பாட்டு அறிக்கை
98 உள்ளகக் கட்டுப்பாட்டு அறிக்கை

## 07 நிதி அறிக்கைகள்

100 கம்பனியின் பணிப்பாளர்கள் சபையின் ஆண்டறிக்கை
104 பணிப்பாளர்களின் பொறுப்புடமைக் கூற்று
105 பிரதம நிதியியல் அலுவலரின் பொறுப்புடமைக் கூற்று
106 உறப்பட்ட ஆனால் (போதுமான அளவில்) அறிக்கையிடப்படாத உரிமைக்கோரல்கள் பற்றிய சான்றிதழ்
107 சுயாதீன கணக்காய்வாளர் அறிக்கை
110 நிதி நிலை அறிக்கை
111 இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்று
112 பங்குரிமையில் மாற்றங்கள் பற்றிய கூற்று
114 காசுப்பாய்ச்சல் கூற்று
116 நிதி அறிக்கைகள் மீதான குறிப்புகள்

## 08 துணைத் தகவல்கள்

167 காப்புறுதித் தொழில் செயலாற்றம்
168 பத்து வருட தொகுப்பு வருமானக் கூற்று
170 இருப்புநிலை மீதான பத்தாண்டுச் சுருக்கம்
172 கிளை வலையமைப்புக்கள்
184 நிறுவனம் பற்றிய தகவல்கள்
185 வருடாந்த பொதுக்கூட்டம் பற்றிய அறிவித்தல்
மூடப்பட்ட பதில் படிவம்

# 01

# எம்மைப் பற்றி





5 ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோபரேஷன் ஜெனரல் லிமிடட் பற்றி

6 பணிப்பாளர் சபை

11 தலைமைத்துவக் குழு

21 நிதியியல் சிறப்புக்கூறுகள்

22 நிதிசாரா சிறப்புக்கூறுகள்

# ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோபரேஷன் ஜெனரல் லிமிடட் பற்றி

அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனமாக 1962 இல் தாபிக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் காப்புறுதி துறையில் தேசத்தின் முன்னோடி துறையாக விளங்கி, நாட்டின் மிகவும் அனுபவம் மிக்க காப்புறுதி வழங்குநராக இருந்து வருகின்ற தனிச் சிறப்பை கொண்டுள்ளது. மக்களுக்கு சிறப்பாக சேவையாற்றுவதற்கான அதன் மையபணியின் மூலம் இயக்கப்பட்டு இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் அதன் சேவை சென்றடைவினை விரிவுபடுத்துகின்ற அதேவேளை புத்தாக்கம், பெறுமதி சேர்க்கப்பட்ட தீர்வுகளை இடையறாது கொண்டு சேர்ப்பதற்கு உறுதி பூண்டுள்ளது. வாடிக்கையாளர் வசதி மற்றும் சேவை உன்னதம் மீதான இவ்வுறுதியான கவனம் செலுத்தல் தொழிற்துறை அளவுகோலை தொடர்ந்தும் நிர்ணயிப்பதுடன் காப்புறுதி தோற்ற அமைப்பில் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தலைமைத்துவத்தை மீளவலுவூட்டுகின்றது.

காப்புறுதி ஒழுங்குபடுத்துநர்களின் வழிகாட்டல்களுடனும் அரசாங்க பணிப்புரைகளுடனும் ஒருங்கமைவதில் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுதாபனம் 01 பெப்ரவரி 2024 தொடக்கம் சட்ட ரீதியான மறுசீரமைப்புக்குட்பட்டது. இப்பணி வைத்திருக்கின்ற கம்பனி கட்டமைப்பின் கீழ் இரு வேறான சட்ட நிறுவனங்களாக பிரிக்கப்பட்டு இரு முழுமையாக உரித்தான துணை நிறுவனங்களாக அதாவது ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோபரேஷன் லைப் லிமிடட் மற்றும் ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோபரேஷன் ஜெனரல் லிமிடட் என உருவாக்கப்பட்டன இவ் மறுசீரமைப்பானது அதற்குரிய வியாபாரங்களுக்கு நிறுவனம் அதன் முழுமையாக கவனம் செலுத்தி மிகுந்த பெறுமதியினையும் அதிக செயல்திறன் வாய்ந்த தன்மையினையும் வழங்கி அதன் இலக்கு சந்தை துறைகளின் தனித்துவமான தேவைகளை இனங்காண்பதற்கு ஒவ்வொரு நிறுவனமும் அர்ப்பணிப்புமிக்கதாக இருப்பதை இயலச்செய்தது.

பொதுக் காப்புறுதி தோற்ற அமைப்பில் முன்னணியில் தலைமை வகித்து நாம் சமூகத்தின் அனைத்து வகையான தரப்பினருக்கும் பொருந்துகின்ற சிறந்த தரத்திலான உற்பத்தியினை வழங்கி, கட்டாயம் மற்றும் பரிணாம வளர்ச்சியடைகின்ற தேவைகளை நிறைவேற்றுகின்றோம். காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் மூலம் சான்றுபடுத்தப்பட்ட நன்கு பயிற்றப்பட்ட காப்புறுதி நிபுணர்களைக் கொண்ட அணியானது சமூகத்திற்கு சேவையாற்றி பன்முகப்படுத்தப்பட்ட உற்பத்திச் சொத்துப்பட்டியல் மற்றும் தேவை அடிப்படையிலமைந்த உயர்தளவான உற்பத்திகளை வழங்கி வாடிக்கையாளர் தரவு மற்றும் அந்தரங்கத்தை பாதுகாப்பது தொடர்பில் மிகவும் முக்கியத்துவத்துடன் கோரிக்கைகளை நிறைவுசெய்வதில் துணையளிக்கின்றது.

பல வங்கித்தொழில், நிதியியல், சுகாதாரக் கவனிப்பு, மின்சக்தி மற்றும் எரிசக்தி அத்துடன் விருந்தோம்பல் தொழிற்துறைகள் முழுவதும் முன்மதிமிக்க முதலீடுகள் தற்போது பொருந்தத்தக்க அத்துடன் எதிர்காலத்திற்கு ஒப்பான மற்றும் தேசத்தின் பொருளாதாரத்தை மீட்கும் செயன்முறையில் இலங்கை அரசாங்கத்துடன் பங்குடமையாளராகி நிலைபெறத்தக்க தொழிற்பாடொன்றுக்கு பங்களிக்கின்றது.

## எமது நோக்கு

தேவைக்கேற்றவாறான காப்புறுதி தீர்வுகளை கொண்டு அனைத்து இலங்கையர்களினதும் வாழ்வை மேம்படுத்தி அனைவருக்கும் காப்புறுதிக்கான பெறுவழியினை நாம் ஏற்படுத்துகின்றோம்.

## எமது தொலைநோக்கு

இடர்நேர்வு பாதுகாப்பில் தேசத்தின் முதல் தெரிவாக திகழ்தல்

## எமது பணி

புத்தாக்கம்மிக்க மற்றும் தனிப்பட்ட தேவைக்கான தீர்வுகளை வழங்குவதன் மூலம் எமது சேவைநாடிகளின் எதிர்பார்க்கைகளை விஞ்சிச்சென்று, அனைத்து பங்குதாரர்களுக்குமான நிதியியல் பாதுகாப்பினை பேணிவளர்த்தல்.

## எமது விழுமியங்கள்

**பரஸ்பர நம்பிக்கை மற்றும் மரியாதை:** ஒவ்வொரு ஊழியரும் அவரது பால், இனம், நம்பிக்கை அல்லது ஏதேனும் வேறு வேறுபாட்டை பொருட்படுத்தாது ஆட்களுக்கும் பதவிகளுக்கும் மதிப்பளித்தலை எடுத்துக்காட்டுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றனர். இது உயர்பதவி வகிப்பவர்கள், சகஊழியர்கள், இளையானவர்கள், கீழ் பணியாற்றுபவர்கள் நம்பிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளடங்கலாக நிறுவனத்தின் அனைத்து பங்குதாரர்களையும் உள்ளடக்குகின்றது. இவ் எண்ணப்பாங்கு பங்குதாரர்களுடனான அனைத்து இடைத்தொடர்புகளிலும் பிரதிபலிக்க வேண்டும்.

**அனைத்து பங்குதாரர்களுடனும் இடைத்தொடர்பின் போதும் ஒன்றாக சேர்ந்திருத்தல்:** ஒவ்வொரு ஊழியரும் ஒத்திசைவான அணியாக குழுவை கட்டியெழுப்பும் நோக்குடன் ஆதரவு, மூலவளங்கள், ஒத்துழைப்பு என்பவற்றை வழங்குவதன் மூலம் எல்லா நேரங்களிலும் ஒன்றில் தனியாக அல்லது குழுவாக நோக்காக கொண்ட அடைவுகளை நோக்கி பணியாற்றும் போதும் இந்நடத்தையினை எடுத்துக்காட்டுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றனர்.

**நேர்மை மற்றும் ஒழுக்க ரீதியான நடத்தை:** ஊழியர்களின் விட்டுக்கொடுக்காத நேர்மையையும் வலுவான ஒழுக்கம்சார் நடத்தையையும் கம்பனி வலுவாக ஊக்குவிப்பதுடன் ஊழியர்கள் அவர்களது தனிப்பட்ட தொழில்சார் கடமைகளை எல்லா நேரங்களிலும் நெறிமுறை சார்ந்தும் சமூகரீதியாக ஏற்றுக்கொள்ளத்தக்க விதத்திலும் மேற்கொள்வதற்கு ஒவ்வொரு ஊழியரும் எதிர்பார்க்கப்படுகின்றார்.

**தொழில்சார் கடமைப்பொறுப்பு:** ஒவ்வொரு ஊழியரும் சமூகத்திற்கு ஏற்ற உயர் நெறிமுறை சார்ந்த தரநியமங்களை பேணி கம்பனியின் பங்குதாரர்களுடன் அனைத்து தனிப்பட்ட தொழில்சார் இடைத்தொடர்புகளின் போது நியாயமான, முறையான மற்றும் வினைத்திறன் மிக்க நடத்தையினை உறுதி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுவர்.

**உன்னதத்திற்காக பாடுபடுதல்:** வாடிக்கையாளர் எதிர்பார்க்கைகளை கொண்டு சேர்ப்பதை விஞ்சிச் செல்வதை நோக்கி அனைத்து முயற்சிகளும் திசைப்படுத்தப்படுத்தப்பட்டிருக்கின்ற அதேவேளை கம்பனியின் குறித்துரைக்கப்பட்ட விதிகள் ஒழுங்குவிதிகள் அத்துடன் தரநியமங்களை கடைப்பிடிக்க வேண்டும்.

# பணிப்பாளர் சபை



திரு றொஹான் புல்ட்ஜென்ஸ்

திரு துஸ்மந்த தொட்டவத்தே

திரு நுசித் குமாரதுங்க



திரு ரவீந்திர பத்மபிரிய

திரு நீல் உனம்புவே (சனாதிபதி சட்டத்தரணி)

திரு ரஜீவ் தர்மேந்திர

திருமதி ஷிரோமி கோதாகொட



**திரு நுஷித் குமாரதுங்க**
பணிப்பாளர்

திரு நுஷித் குமாரதுங்க மூன்று தசாப்தங்களுக்கும் மேற்பட்ட அனுபவத்துடன் கூடிய சிறப்புவாய்ந்த நிதிசார் தொழிலசார் நிபுணராவார். இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் சக உறுப்பினரும் சான்றுப்படுத்தப்பட்ட முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவனத்தின் உறுப்பினருமான இவர் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் இருந்து சொத்து முகாமைத்துவம் மற்றும் விலை உலக மதிப்பீட்டில் விஞ்ஞானமானி பட்டத்தையும் பெற்றுள்ளார். அவரது தொழில்வாழ்க்கை பிரைஸ்வோட்டஹவுஸ் கூப்பரில் தொடங்கியதுடன் 2000 ஆம் ஆண்டில் கணக்காய்வு, வரித்திட்டமிடல் மற்றும் வியாபார ஆலோசனை சேவைகளை குறிப்பாக சிறிய மற்றும் நடுத்தர முயற்சிகள் மையப்படுத்தி ஆலோசனை வழங்குகின்ற நன்கு அங்கீகரிக்கப்பட்ட நுஷித் குமாரதுங்க கம்பனி என்ற தனது சொந்த கம்பனியை நிறுவினார்.

திரு நுஷித் குமாரதுங்க, இலங்கையில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித்துறையின் அபிவிருத்தியில் முக்கியத்துவம் பெற்றவராக இருந்து, தொழில்முயற்சியாளர்களுக்கு உதவுவதற்கு உலக வங்கி மற்றும் நிதி அமைச்சு மூலம் நிதியளிக்கப்படும் நிதிசார் முகாமைத்துவ துறைகளை மேம்படுத்துவதற்கு பல் எண்ணிக்கையான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தினார். இவர், தேசிய பொருளாதாரக் கலந்துரையாடல்களிலும் ஈடுபட்டு வரிவிதிப்பு மற்றும் பொருளாதார கொள்கைகளை மேம்படுத்துவதற்கான ஆலோசனைக் குழுக்களிலும் பணியாற்றினார். தற்போது திரு குமாரதுங்க ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ் கோப்பரேஷன் லிமிடெட், ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோபரேஷன் லைப் லிமிடட், ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோபரேஷன் ஜெனரல் லிமிடட் என்பவற்றில் தலைவராக இருப்பதுடன், இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை ஹொஸ்பிடல் கார்ப்பரேஷன் பீஎல்சி என்பவற்றின் சபை உறுப்பினராகவும் விளங்குகிறார்.



**திரு துஷ்மந்த தொட்டவத்தே**
பணிப்பாளர்

துஷ்மந்த தொட்டவத்தே, 22 ஓகஸ்ட் 2022 முதல் பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்டதுடன் அவர் Canwill Holdings Pvt Ltd மற்றும் LCB Finance PLC ஆகியவற்றின் தலைவராக உள்ளார். திரு தொட்டவத்தே ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் வணிகவியல் இளங்கலை (சிறப்புப் பட்டம்) மற்றும் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் நிதிப் பொருளாதாரத்தில் முதுகலைப் பட்டம் பெற்ற இலங்கையின் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் சக உறுப்பினர். நிதி முகாமைத்துவம், பெருநிறுவன நிர்வாகம், மூலோபாய முகாமைத்துவம் மற்றும் பொது உறவுகள் ஆகிய துறைகளில் விரிவான அனுபவம் பெற்ற அவர் ஒரு சிறந்த தலைவர் ஆவார், மேலும் பல அரசுக்கு சொந்தமான நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் தலைமை நிர்வாக அதிகாரி, தலைமை நிதி அதிகாரி மற்றும் தலைமை உள்ளக கணக்காய்வாளர் என வெற்றிகரமான சாதனை படைத்தவர். 40 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டுள்ள திரு தொட்டவத்த மக்கள் வங்கியின் நிர்வாக சபை உறுப்பினராகவும் சேவையாற்றுகிறார்.



**திரு ரவீந்திர பத்மப்ரிய**
பணிப்பாளர்

திரு ரவீந்திர பத்மப்ரிய 30 செப்டம்பர் 2022 முதல் பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்டார்.

திரு ரவீந்திர பத்மப்ரிய ஒரு சிறந்த அரச ஊழியர் ஆவார், அவர் 35 ஆண்டுகளுக்கும் மேலாக பொதுத்துறையில் பல்வேறு பதவிகளில் அனுபவம் பெற்றவர். அவர் தற்போது நிதி அமைச்சின் தகவல் தொழில்நுட்ப முகாமைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக பணியாற்றுகிறார்.

அவர் களனிப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானமானி (பௌதீக விஞ்ஞானம்) பட்டதாரி மற்றும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தில் (SLIDA) பொது முகாமைத்துவத்தில் முதுமானிப் பட்டத்தையும் பெற்றவராவார்.



### திரு ரஜிவ் தர்மேந்திர
பணிப்பாளர்

2019 மார்ச்சில் திரு தர்மேந்திர MAS குழுமத்தின் பாரிய தொழில் பிரிவான MAS Intimates நிறுவனத்தின் தலைமைத்துவத்தை பொறுப்பேற்றார். 2003 இல் திரு தர்மேந்திர MAS நிறுவனத்தில் – உனிச்செல பாணந்துறை பொது முகாமையாளராக இணைந்து 21 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட அனுபவத்துடன் MAS/Sara Lee Courtaulds Joint Venture வணிகப் பணிப்பாளர் பதவிக்கு பதவியுயர்த்தப்பட்டார். அவரது பதவி, 2006 இல் அப்போதிருந்த. உலக ஆடை உற்பத்தி. முக்கிய வாடிக்கையாளர்களின் நான்கு பேரின் மேற்பார்வையுடன் MAS Intimates வணிக பணிப்பாளராக உயர்த்தப்பட்டது.

இவர் 2010 இல் 2000 Silueta நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அலுவலராக நியமிக்கப்பட்டார். இங்கு Silueta நிறுவனத்தின் பரிணாம வளர்ச்சியினை வெற்றிகரமான. ஆடை மற்றும் தொழிநுட்ப புத்தாக்க மையமாக வளரச் செய்வதை வழிநடாத்துவதற்கு பொறுப்பாக இருந்தார். அதனை தொடர்ந்து இவர் MAS Intimates நிறுவனத்தின் Limited Brands பணிப்பாளராக நியமிக்கப்பட்டார் பின்னர் 2016 தொடக்கம். பிரதரம நிறைவேற்று அலுவலராக பதவி உயர்த்தப்படும் வரை பிரதான சந்தைப்படுத்தல் பிரதம சந்தைப்படுத்தல் அலுவலர் பதவியினை பொறுப்பேற்றார். at MAS Intimates நிறுவனத்தில் அவரது பொறுப்புகளுக்கு மேலதிகமாக திரு. தர்மேந்திர ஒட்டுமொத்த MAS குழும கம்பெனிகளுக்கிடையிலும். புத்தாக்க நிகழ்ச்சிநிரல் மற்றும் அபிவிருத்திச் செயன்முறை தீர்மானிக்கின்ற. புத்தாக்கமிக்க MAS சபைக்கு. தலைமைத்துவத்தை வழங்குகிறார்.

இவர், லண்டன் கிங்ஸ் கல்லூரியில் இருந்து. கணிதம் மற்றும் பொருளியலில் விஞ்ஞானமானி பட்டத்தை பெற்றுக் கொண்டுள்ளதுடன் லண்டன் பொருளியல் பாடசாலையிலிருந்து. நிதியில் விஞ்ஞான முதுமாணி பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் நிறைவேற்றுத்தரக் கல்வியை Harvard மற்றும் INSEAD; வியாபார பாடசாலைகளில் இருந்து. பெற்றுள்ளார் இவர் 01 ஜனவரி 2025 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில். ஆயுள் மற்றும் பொது காப்புறுதி கம்பனிகள் இரண்டிற்கும் நிறைவேற்று தரமல்லாத பணிப்பாளர் பதவியில் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபணத்தின் சபைக்கு நியமிக்கப்பட்டார்.



### திரு ரொஹான் புல்ட்ஜென்ஸ்
பணிப்பாளர்

தொலைத் தொடர்பாடல், அணு, எரிபொருள் மற்றும் எரிவாயு, நிதியியல் சேவைகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப சிரேஸ்ட தொழில்சார் நிபுணரான திரு ரொஹான் புல்ட்ஜென்ஸ் தொலைத்தொடர்பு, டிஜிட்டல் மாறுதல், தரவுப் பகுப்பாய்வு, இணையப் பாதுகாப்பு, டிஜிட்டல் வணிகம் மற்றும் வளர்ச்சி பெற்று வருகின்ற தொழில்நுட்பவியல் என்பனவற்றில் சாதனை படைத்தல் ஊடாக நிறுவனசார் உபாய நிகழ்ச்சிநிரல் ஒன்றின் மூலம் தூண்டப்படும் தலைமைத்துவத்தை வழங்குவதற்கு பொருத்தமானவராவார்.

இவர் அஸ்திரேலிய பல்கலைக்கழகத்தின் ரோயல் மெல்போன் தொழில்நுட்ப நிறுவனத்திலிருந்து தகவல் தொழில்நுட்பத்தில் வியாபாரம் முதுமாணி பட்டத்தை (MBIT) பெற்றுள்ளார். சேவை உன்னதம், வாடிக்கையாளர் அனுபவம், தொழிற்பாட்டு ரீதியான வினைத்திறனை மேம்படுத்தல். புதிய வருமான வழிகளை உருவாக்குதல் மற்றும் வியாபார உன்னத்த்தை அடைந்துகொள்வதற்கு மாறுதல்மிக்க தகவல் தொழில்நுட்ப கருத்திட்டங்களை பரந்த அளவில் முன்னணி வகித்தல் என்பவற்றை மையப்படுத்தி. தகவல் தொழில்நுட்ப உபாயங்களுடன் அணிசெய்கின்ற வியாபாரத்தை உருவாக்குவதில் அனுபவம் பெற்றவர் ஆவார்.

வியாபார செயல்திறன்னையும் வினைத்திறனையும் மேம்படுத்துவதற்காக. திரு புல்ட்ஜென்ஸ் தொழில்முயற்சி/வியாபார கட்டமைப்பு நடத்தைகளை தாபித்து, வியாபார புத்தாக்கத்தினை கொண்டு சேர்த்து, சேவை வழங்கல். வாடிக்கையாளர் ஈடுபாடு மற்றும் தகவல் தொழில்நுட்ப மாறுதல் கருத்திட்டங்களை உச்சபயன் அடைய செய்து தொழில்முயற்சி வடிவமைப்பு/வியாபார வடிவமைப்பு நடத்தையை தாபித்துள்ளார். அவரது நிபுணத்துவமானது. நிறுவனசார் போட்டி அனுமூலத்தை மதிப்பிடுவதில் தகைமை, டிஜிட்டல் ரீதியான வாய்ப்புகளை அடையாளபபடுத்தல் மற்றும் டிஜிட்டல் உபாயமொன்றில் வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ள அதன் போட்டி நிலையினை இயலச்செய்தல் என்பவற்றை உள்ளடக்குகின்றது. ஒட்டுமொத்த தொலைத்தொடர்பு பெறுமதிச் சங்கிலி வங்கி டிஜிட்டல் மாறுதடைதல் பயணம் மற்றும் வியாபாரங்களுக்கு பெறுமதியினை கொண்டு சேர்ப்பதற்கான தகவல் தொழில்நுட்ப தொழில் படுத்தால் மாதிரிகளை நிறுவுதல் என்பன முழுவதும் தொழில் செயல்திறனையும் வினைத்திறனையும் இயக்குவதில் அவர் சாதனைபடைத்துள்ளார்.

சர்வதேச ரீதியாக, அனுப்பவம் பெற்ற திரு புல்ட்ஜென்ஸ் உடைய நிபுணத்துவமானது. ஐக்கிய அரபு இராச்சயம். அவுஸ்திரேலியா, தன்சானியா, இந்தியா, எகிப்து, சவுதி அரேபியா மற்றும் இலங்கை போன்ற நாடுகளில் நாடப்பட்டு வருகின்றது. முன்மதிமிக்க மற்றும் செலவு சிக்கனமான விதத்தில் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதன் மூலம் இலாகரமான பெறுபேறுகளைக் கொண்டுசேர்ப்பதில் திறமை மிக்கவராக விளங்குகின்ற அதேவேளை, பல பாரிய கருத்திட்டங்கள் முழுவதும் பல் துறைசார் அணியினருக்கு தலைமைதாங்கும் வல்லுநராவார் டிஜிட்டல் தொழில்நுட்ப துறைகளிலும் அதன் தாக்கம் பற்றியும் (இணையத்தில் விடயங்கள், செயற்கை நுண்ணறிவு, டிஜிட்டல் பணியிடம், அறியும் ஆற்றல் கணிமைப்படுத்தல், டிஜிட்டல் பேரேட்டுத் தொழில்நுட்பம், பாரிய வகைத் தரவுகள், இணைய சேமிப்பகம், சமூக ஊடகம் போன்றன) முழுமையான தேர்ச்சியும் புரிதலும் கொண்டவர்.



### திரு நீல் உனம்பூவே, சனாதிபதி சட்டத்தரணி
பணிப்பாளர்

சட்டத் துறையில் மூன்று தசாப்தங்களுக்கும் மேற்பட்ட தொழில்சார் அனுபவத்துடன் கூடிய சனாதிபதி சட்டத்தரணியான திரு உனம்பூவே மேலதிக மன்றாடியார் நாயகமாக ஓய்வுபெற்றவர் ஆவார். அவரது பதவிக் காலத்தின் போது இவர் மிகவும் பிரசித்திபெற்ற சட்டப் விசாரணைகள், மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் இணங்குவித்தல் அத்துடன் அரசாங்க ஆலோசனை வகிபாகங்கள் என்பவற்றில் தனது நிபுணத்துவத்தை பிரயோகித்தார். புலமைச் சொத்துச் சட்டம், வணிகச் சட்டம், நிதியில் சட்டம் போன்றவற்றில் விசேடத்துவம் மிக்க இவர் ஐக்கிய அமெரிக்காவின் ஜோர்ஜ் வோஷிங்டன் பல்கலைக்கழகத்தில் இருந்தும் இத்தாலியின் ட்யூரின் பல்கலைக்கழகத்தில் இருந்தும் இரு முதுமாணி பட்டங்களையும் பெற்றவராவார். இணையச் சட்டம். வான் சட்டம் மற்றும் அணு பாதுகாப்புகள் என்பவற்றில் இவர் சர்வதேச ரீதியான பயிற்சியினை பெற்றுக் கொண்டார்.

சட்டமா அதிபர் திணைக்களத்தில் அவரது பதவி காலத்தின் போது நிதி அமைச்சு, இலங்கை சுங்கம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் என்பவற்றில் அவர் சட்ட ஆலோசனை வழங்கினார். இதற்கு மேலதிகமாக, இவர் அணுசக்தி அதிகாரசபை, இலங்கை கட்டளைகள் நிறுவனம் மற்றும் வேறு பல அரசாங்க முகவராண்மைளில் சட்ட ஆலோசகராக பணியாற்றியுள்ளார். இவர் தற்போது சட்ட தொழில் புரிவதில் ஈடுபட்டுள்ளதுடன் ஸ்ரீலங்கா டெலிகொம் மற்றும் மொபிடல் கம்பெனி லிமிடெட் சபையிலும் பணியாற்றுகிறார்.



**திருமதி ஷிரோமி கோதாகொட**
கம்பனிச் செயலாளர்

திருமதி ஷிரோமி கோதாகொட 2 ஏப்ரல் 2024 முதல் கம்பனிச் செயலாளராக பணிப்பாளர் சபையால் நியமிக்கப்பட்டார்.

அவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைப் பிரிவில் இளங்கலைப் பட்டம் பெற்றுள்ளார். இலங்கை சட்டக் கல்லூரியில் இணைந்து கொண்ட அவர், 1992 இல் சட்டத்தரணியாக சட்டத்தரணியில் தனது பணியை ஆரம்பித்தார்.

நிறுவனத்தில் சேர்வதற்கு முன்பு, திருமதி கோதாகொட கோகோ கோலா நிறுவனத்தில் (Coca-Cola Beverages Sri Lanka Limited) இல் 30 ஆண்டுகளாக பணியாற்றினார். அந்த நிறுவனத்தில் அவர் பணிப்பாளராக (சட்டம் மற்றும் நிர்வாகம்) மற்றும் உள்நாட்டு நெறிமுறை அதிகாரியாக (LEO) நியமிக்கப்பட்டார். அந்த நியமனத்திற்கு முன், அவர் உள்ளகப் பொது சட்ட ஆலோசகராக பணியாற்றினார் மற்றும் அந்த நிறுவனத்தின் சட்ட அதிகாரி மற்றும் முகாமையாளராகவும் சட்டப்பூர்வமாக நியமிக்கப்பட்டார். அவர் ஒரு தசாப்தத்திற்கும் மேலாக Coca-Cola Beverages நிறுவனச் செயலாளராக பணியாற்றியுள்ளார்.

திருமதி கோதாகொட, பெருநிறுவன சட்ட விவகாரத் துறைகளில் 30 ஆண்டுகளுக்கும் மேலான தொழில்முறை சட்ட அனுபவத்தைக் கொண்டுள்ளார். இணக்கம், நிர்வாகம், நெறிமுறைகள், தயாரிப்பு பொறுப்பு வழக்கு மற்றும் சிவில் மற்றும் தொழில்துறை வழக்குகள் என்பவற்றில் நீண்ட அனுபவம் பெற்றுள்ளார். Coca-Cola Beverages இல் தனது பணியின போது, பெருநிறுவன நிர்வாகச் செயல்முறைகள், சட்டப்பூர்வ இணக்கம் மற்றும் துறை இணக்க நிர்வாகம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு பங்களித்துள்ளார்.

# தலைமைத்துவக் குழு

## நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள்



### திரு சந்தன எல் அளுத்கம

குழும பிரதம நிறைவேற்று அலுவலர்
B.com (Sp), CMgr FCMI (UK), MBA, ANZIIF (சிரேஷ்ட இணை உறுப்பினர்) CIP

திரு சந்தன அலுத்கம இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக 2018 இல் கடமைகளைப் பொறுப்பேற்றார். காப்புறுதித் துறையில் பல்வேறு அம்சங்களில் 33 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

அவரது பயணம் 1992 இல் CTC ஈகிள் இன்சூரன்ஸ் கோ லிமிடெட்டில் தொடங்கியது, பல ஆண்டுகளாக, ஈகிள் இன்சூரன்ஸ் பிஎல்சி (ஜூரிச் நிதிச் சேவைக் குழுவின் உறுப்பினர்) மற்றும் HNB அஸ்யூரன்ஸ் பிஎல்சி போன்ற புகழ்பெற்ற நிறுவனங்களில் பல உயர் பதவிகளை வகித்துள்ளார். இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் தனது தற்போதைய பொறுப்பினை ஏற்கும் முன், திரு அளுத்கம HNB General Insurance Ltd இன் பிரதம வர்த்தக அதிகாரியாகவும் முதன்மை அதிகாரியாகவும் பணியாற்றினார். தனது காப்புறுதி துறை சேவைக்கு மேலதிகமாக, உள்நாட்டு மற்றும் சர்வதேச சங்கங்களில் தலைமைப் பதவிகளையும் வகித்துள்ளார். அவர் தற்போது இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன லிமிடெட் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரியாக உள்ளார் மற்றும் இலங்கை காப்புறுதி சங்கத்தின் தலைவராகவும் பணியாற்றுகிறார்.

தனது தொழில்சார் சாதனைகளுக்கு மேலதிகமாக, திரு அளுத்கம கடந்த இரண்டு தசாப்தங்களாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் முதுகலைப் பிரிவு, முகாமைத்துவம் மற்றும் நிதி பீடத்தில் வருகை விரிவுரையாளராக கடமையாற்றியதன் மூலம் கல்வித்துறைக்கு பெரும் பங்களிப்பை வழங்கியுள்ளார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் முதுகலை பிரிவில் முகாமைத்துவம் மற்றும் நிதி பீடத்தில் வருகை விரிவுரையாளராக விரிவுரைகளை நடத்தியுள்ளார். அவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாகத்தில் முதுகலைப் பட்டம் பெற்றவர், களனிப் பல்கலைக்கழகத்தில் வணிகவியல் இளங்கலைப் பட்டம் பெற்றவர், UK CMgr FCMI இன் பட்டய முகாமைத்துவ நிறுவனத்தின் மற்றும் ஆஸ்திரேலிய மற்றும் நியூசிலாந்து இன்சூரன்ஸ் மற்றும் நிதி நிறுவனம் ANZIIF (சிரேஷ்ட இணை) உறுப்பினராகவும் உள்ளார். திரு அளுத்கம காப்புறுதி மற்றும் வங்கிக் காப்புறுதி தொடர்பான உள்நாட்டு மற்றும் சர்வதேச மாநாடுகளில் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்துள்ளார், மேலும் ஆஸ்திரியாவின் வியன்னாவில் உள்ள ஜெனரலி இன்சூரன்ஸ் AG மற்றும் சிங்கப்பூரில் உள்ள NUS பிசினஸ் ஸ்கூல் உட்பட உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் விரிவான பயிற்சி பெற்றுள்ளார்.



### திரு பிரியந்த பெரேரா

பிரதம தொழிற்படுத்தல் அலுவலர்
MBA, ACII, பட்டயக் காப்புறுதியாளர்
(2025 மே 20 தொடக்கம் ஓய்வுபெற்றுள்ளார்)

திரு பிரியந்த 01 செப்டெம்பர் 2021 ஆம் திகதி ஸ்ரீலங்கா இன்சூரன்ஸில் பொது. காப்புறுதியின் பிரதான அதிகாரியாக இணைந்தார். அவர் பொது காப்புறுதித் துறையில் நீண்டகால நிபுணராக உள்ளார், அவர் தொழில்துறையில் 38 ஆண்டுகளுக்கும் மேலாக சேவை செய்துள்ளார். அவர் 1985 ஆம் ஆண்டில் மெர்கன்டைல் கிரெடிட் லிமிடெட் இன் இன்ஷூரன்ஸ் பிரிவில் தனது தொழில் வாழ்க்கையைத் தொடங்கினார் மற்றும் தொழில்துறையில் உள்ள பல்வேறு நிறுவனங்களில் பல பொறுப்பான பதவிகளை வகித்துள்ளார்.

அவரது தொழில் வாழ்க்கையில், அவர் அண்டர்ரைட்டிங், உரிமைகோரல்கள், மறு காப்பீடு போன்ற பல்வேறு சிரேஷ்ட முகாமையாளர் பதவிகளை வகித்துள்ளார். SLIC இல் இணைவதற்கு முன்னர் Fairfirst Insurance Ltd இன் தலைமை தொழில்நுட்ப அதிகாரியாக பணியாற்றினார்.

அவர் ஒரு பட்டய காப்புறுதியாளராகவும் மற்றும் இங்காலந்து பட்டய காப்புறுதி நிறுவனத்தின் இணை உறுப்பினராகவும் உள்ள அதேவேளை இங்கிலாந்தின் கார்டி∴ப் மெட்ரோபாலிட்டன் பல்கலைக்கழகத்தில் MBA பட்டமும் பெற்றவர்.



**திரு ஆசிரி விக்ரமாராச்சி**

பிரதம அலுவலர் – பொதுக் FCII
(காப்புறுதி ஐக்கிய இராச்சியம்)
பட்டயக் காப்புறுதியாளர்
(05 மே 2025 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டவர்)

பல்தேசிய மற்றும் உள்நாட்டு காப்புறுதி கம்பனிகள் இரண்டிலும் 18 வருடங்களுக்கு மேற்பட்ட பல்வகை அனுபவங்களை கொண்ட காப்புறுதி தொழில் துறையில் உயர் தகைமைபெற்ற மற்றும் அனுபவம்வாய்ந்த தொழில்சார் நிபுணர் ஒருவர் ஆவார். அவரது நிபுணத்துவமானது துறையினுள் உபாய ரீதியான சாதனைகளை இயக்குவதற்கு காப்பிட்டு பொறுப்பேற்றல், கோரிக்கைகள் மற்றும் மீள்காப்புறுதி என்பன உள்ளடங்கலாக முக்கிய தொழில்நுட்ப துறைகளில் விரிவடைந்து காணப்படுகின்றது.

2011 இல் திரு ஆசிரி ஐக்கிய இராச்சியத்தின் பட்டய காப்புறுதி நிறுவனத்தின் சிறப்புமிக்க உறுப்புரிமையையும் (ACII) “பட்டயக் காப்புறுதியாளர்” அந்தஸ்தினையும் பெற்றுக் கொண்டவர். இக் கௌரவிக்க தகைமையினை பெற்றுக்கொண்ட இலங்கையின் மிகவும் இளமையானவர் என்ற பாராட்டினையும் இவர் பெற்றுள்ளார். 2011 ஆம் ஆண்டுக்கான ACII தகைமை பெற்ற தனிப்பட்ட அதி கூடிய செயலாற்றத்திற்காக கௌரவிக்கப்படும் இலங்கையில் கொழும்பில் 2012 காப்புறுதி சமேளத்தில் “மிகவும் உன்னதமான மாணவ விருது” இணை அவர் பெற்றுக்கொண்ட போது இது மேலும் கொண்டாடப்பட்டது.

இவ் வலுவான தளத்தை கட்டியெழுப்பியுள்ள திரு ஆசிரி பின்னர் காப்புறுதித் துறையில் அது உயர்மட்ட தொழில்சார் அங்கீகாரமான ஐக்கிய இராச்சியத்தின் பட்டைய காப்புறுதி நிறுவனத்தில் இருந்து சக உறுப்புரிமை (FCII) தகைமையினை பெற்றுக்கொண்டார். ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோபரேஷன் ஜெனரல் லிமிடட்டில் பிரதம அலுவலர் – பொதுக் காப்புறுதி ஆக அவரது பதவி இணை பொறுப்பேற்பதற்கு முன்னர் இவர் கொண்டினெண்டல் இன்ஷூரன்ஸ் லங்கா லிமிடட் இல் பிரதம தொழிபடுத்தல் அலுவலர் – தொழில்நுட்பம் பதவிகளை வகித்தார். இங்கு இவர் இலாபத்தினை மேம்படுத்தி தொழிற்பாட்டு வினைத்திறனை உருவாக்குவதற்காக பல்வேறு தொழில்பாட்டு மற்றும் தொழில்நுட்ப பிரிவுகளுக்கு தலைமை வகித்தார்.



**திரு மாலக்க பண்டார**

பிரதமர் நிதி அலுவலர்/நிதிப் பிரதானி –
ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோபரேஷன் – ஜெனரல்

விஞ்ஞான மானி (சிறப்பு) FCA, MBA (கொழுப்பு) திரு மாலக்க பண்டார, சேவை மற்றும் தயாரித்தல் துறைகள் இரண்டிலும் கணக்காய்வு, கணக்கீடு, உபாய முகாமைத்துவம் மற்றும் முகாமைத்துவ கணக்கீடு என்பவற்றில் 26 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட அனுபவத்துடன் கூடிய சிரேஷ்ட நிதிசார் தொழில் நிபுணர் ஒருவர் ஆவார். இவர் தற்போது ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோபரேஷன் ஜெனரல் லிமிடட்டின் பிரதமர் நிதி அலுவலராக பணியாற்றுகிறார். இங்கு இவர் உபாய ரீதியான நிதியில் தலைமைத்துவத்தினை வழங்கி, நீண்டகால நிறுவனசார் பெறுமதயினை இயக்குகின்றார்.

இவரது தொழில் வாழ்க்கையின் தொடக்கத்தில் திரு மாலக்க, எய்டகென் ஸ்பென்ஸ் பிளான்டேஷன் பீஎல்சி மற்றும் சம்சென் சில்வா அண்ட் கம்பெனி பிரைவேட் லிமிடெட் ஆகியவற்றில் நிதி வகிபாகங்களை வகித்துள்ளார். இவர் தனது தொழில்சார் பயணத்தை எர்னஸ்ட் அன்ட் யங் அத்துடன் நிஹால் ஹெட்டியாராச்சி அன்ட் கம்பெனி என்பவற்றில் கணக்காய்வு மற்றும் உத்தரவாதம் துறையில் தொடங்கினார்.

திரு மாலக்க தொடக்கத்தில் கணக்காளராக 2007 இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் இணைந்து கொண்டதுடன் 16 ஆண்டு காலப்பகுதிக்கும் மேல் பல பதவிகள் ஊடாக உயர்வடைந்து சிரேஷ்ட கணக்காளர், உதவி பொதுப் முகாமையாளர் மற்றும் பிரதி பொது முகாமையாளர் என்பன உள்ளடங்கலாக முக்கிய தலைமைத்துவ வைப்பாகங்களில் சேவையாற்றியுள்ளார். இவர் 20021 இல் பிரதம நிதி அலுவலராக நியமிக்கப்பட்டதுடன் 2023 டிசம்பரில் அவரது பதவி விலகல் வரை அப்பதவியை வகித்தார். 2024 ஜனவரி ஜூன் வரை திரு மாலக்கா, ஐக்கிய அரபு இராச்சியத்தின் யூனியன் காப்புறுதி கம்பனியில் பிரதம இடர்நேர்வு அலுவலராக பணியாற்றினார் 2024 ஜூனில் அவர் ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோபரேஷன் ஜெனரல் லிமிடட் மீண்டும் இணைந்து கொண்டு பிரதம நிதி அலுவலராக தனது பொறுப்புகளை ஏற்று நிறுவனத்திற்கும் அதன் உபாய ரீதியான பணிப்புரைக்கும் அவரது உறுதியான கடமைப் பொறுப்பினை எடுத்துக்காட்டினார்.

திரு மாலக்க, கொழும்பு பல்கலைக்கழகத்தில் இருந்து வியாபார நிர்வாக முதுமானிப் பட்டத்தினை பட்டத்தினையும் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் இருந்து கணக்கீட்டில் (சிறப்பு) விஞ்ஞானமாணி பட்டத்தையும் பெற்றுள்ளார் இவர் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் சக உறுப்பினர் ஒருவருமாவார்.



## திரு சமிந்த குணசிங்க

பிரதம அலுவலர், துணைச் சேவைகள்
வியாபார முகாமைத்தவமானி (கணக்கீடு) சிறப்பு (கௌரவம்), FCA, ACMA, MBA-நிதி (கொழும்பு), ACCA, CERT (UK)
(01 ஏப்ரல் 2025 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளார்)

திரு சமிந்த குணசிங்க வங்கித் தொழில், நிதி மற்றும் காப்புறுதித் துறைகளில் 26 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவத்துடன் கூடிய நிதி, வரிமதிப்பு, கணக்காய்வு நிருவாகம், மனித வளங்கள் சார்ந்த சிறப்புவாய்ந்த தொழில்சார் நிபுணர் ஆவார். இவர் கணக்காளரொருவராக 2007 இல் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து கொண்டு நிதிசார்ந்த பல பதவிகளிலும் இயலளவுகளிலும் பணியாற்றியதுடன் தொழிற்துறை, இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மற்றும் இலங்கை பட்டய கணக்காளர் நிறுவகம் 2012 இல் புதிய சர்வதேச நிதி அறிக்கையிடல் நியமங்களுடன் இசைந்து செல்வதை நடைமுறைப்படுத்துவதில் பங்களித்துள்ளார்.

இவர் இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, உள்நாட்டு இறைவரி திணைக்களம் மற்றும் நிதி அமைச்சு அலுவலர்களுடன் இணைந்து 2018 இல் ஆயுட் காப்புறுதி தொழிலுக்கான புதிய வரித்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கும் பங்களித்துள்ளார். இங்கு இவர் இலங்கை காப்புறுதி அமைப்பின் நிதித்தொழில்நுட்ப துணைக்குழுவின் இலங்கை காப்புறுதி அமைப்பின் வரிக்குழு தலைவராக பணியாற்றினார். இவர் 2018 இல் உள்ளக கணக்காய்வாளர் பதவியினை பொறுப்பேற்று 2020 வரை பிரதிப் பொது முகாமையாளர் உள்ளக கணக்காய்வு பதவியினை வகித்தார். அதன் பின்னர் பிரதிப் பொது முகாமையாளர் நிருவாக கடமைகளை பொறுப்பேற்றார். இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் 2024இல் ஆயுள் மற்றும் பொது என பிரிக்கப்பட்டதன் பின்னர் இவர் துணைச்சேவைகள் பிரதிப் பொது முகாமையாளராக மீள பதவி பெயரிடப்பட்டு சட்டம், மனிதவளங்கள் மற்றும் நிருவாகம் விடயங்கள் ஒப்படைக்ககப்பட்டன.

திரு குணசிங்க இலங்கை பட்டய கணக்காளரகள் நிறுவனத்தின் சக உறுப்பினரும் பட்டய சான்றுபடுத்தப்பட்ட கணக்காளர்கள் (ஐக்கிய இராச்சியம்) அமைப்பின் உறுப்பினராவதுடன் பட்டய காப்புறுதி நிறுவனத்திலிருந்து (ஐக்கிய இராச்சியம்) CERT -CII தகைமையினையும் பெற்றுக் கொண்டார். இவர் களனி பல்கலைக்கழகத்திலிருந்து வியாபார முகாமைத்துவம் (கணக்கீடு) சிறப்பு கௌரவ பட்டத்தினை பெற்றுள்ளதுடன் இதற்கு மேலதிகமாக கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து நிதியியல் வியாபார நிருவாக முதுமானி பட்டத்தையும் பெற்றுள்ளார்.

மேற்குறிப்பிட்டவற்றுக்கு மேலதிகமாக இவர் சிலோன் அசெட் மெனேஜ்மென்ட் லிமிடட் மற்றும் கெல் இன்வெஸ்ட்மென்ட் என்பவற்றின் நிறைவேற்று தர மட்ட பணிப்பாளர் பதவியினையும் வகிக்கின்றார். தற்போது இவர் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்திற்கு முழுமையாக சொந்தமான துணை நிறுவனமான கெனொவின் ஹோட்டேல்ஸ் ஸ்பார்க் பிரைவட் லிமிடட் கணக்காய்வு குழுவின் உறுப்பினராகவுள்ளார்.

## பிரதிப் பொது முகாமையாளர்கள்



**திரு லலித் த சில்வா**

**பிரதிப் பொது முகாமையாளர்/விநியோகப் பிரதானி**

MBA, பட்டப்பின்படிப்பு – நிதி மற்றும் வணிக நிர்வாகம், கணக்கியல் மற்றும் நிதி தொடர்பான நிறைவேற்று டிப்ளோமா



**திரு சரத் பெர்னான்டோ**

**பிரதிப் பொது முகாமையாளர் – கோரல்கள்**

BSc பொறியியல் – (இயந்திரவியல்) சிறப்பு, AMIE (இலங்கை)



**திரு ஆர் கதிர்காமரூபன்**

**பிரதிப் பொது முகாமையாளர் – டிஜிட்டல் நிலைமாற்றல்**

MBA (கொழும்பு பல்கலைக்கழகம்), BSc பொறியியல் (பேராதனை பல்கலைக்கழகம்), சான்றளிக்கப்பட்ட லீன் சிக்ஸ் சிக்மா பிளாக் பிளெட் (கலாநிதி மைக்கெல் ஜே ஹாரி நிறுவனம்), MBCS, AMIESL



**திருமதி நதிரா குணவர்தண**

**பிரதிப் பொது முகாமையாளர் – காப்பீட்டுப் பொறுப்பேற்றல்**

BSc (Hon), MBS (Col), MBA (PIM/University of Canbarra), FII, கடல்சார் விசேட டிப்ளோமா (III), ACII (UK), பட்டயக் காப்பீட்டாளர்

## உதவிப் பொது முகாமையாளர்கள்



**திரு ரொஹான் கொல்லாஸ்**
**உதவிப் பொது முகாமையாளர் – மாற்று விநியோகம் மற்றும் வணிக தக்கவைத்தல்**
MBA, CMA (Aus), Dip. in Marketing (SLIM), MSLIM, FCPM, MIM (இலங்கை)



**திரு சமன்த பீரிஸ்**
**கிளைகள் பிரதானி – பொதுக் காப்புறுதி (மேல்)**
சந்தைப்படுத்தல் டிப்ளோமா SLIM), CPM



**திரு சந்திம சுமனதுங்க**
**மீள்காப்பீட்டு பிரதானி**
FCII (UK), MBA (Wales), AIII (India), ANZIIF (Senior Associate) CIP, LLM (Wales)



**திரு சனத் பெர்னான்டோ**
கிளைகளின் பிரதானி – பொதுக் காப்புறுதி (மேல் தவிர்ந்த)



**திரு அசங்க ஏகநாயக்க**
**உதவிப் பொது முகாமையாளர் – தொழிநுட்பம்**
DBA MSC, MBA, NDES, MCP, G Dip in M.Eng.
(01 ஏப்ரல் 2025 அன்று முதல் அமுலாகும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளார்)



**திரு லலித் ஜயசிங்க**
**உதவிப் பொது முகாமையாளர் – மோட்டார் கோரல்கள்**
கலை இளங்கலை, காப்புறுதி டிப்ளோமா, III
(01 ஏப்ரல் 2025 அன்று முதல் அமுலாகும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளார்)

## சிரேஷ்ட முகாமையாளர்கள்



**திரு அநுர அபேகுணவர்தண**
சிரேஷ்ட முகாமையாளர் – விசேட செயற்றிட்டங்கள்



**ஆள இந்திராணி ஒபடமுதலிகே**
சிரேஷ்ட முகாமையாளர் – மென்பொருள் அபிவிருத்தி



**திருமதி வருணி நோநிஸ்**
சிரேஷ்ட முகாமையாளர் – மோட்டார் வாகன காப்பீட்டுப் பொறுப்பேற்றல்



**திருமதி தில்ஹானி பெரேரா**
சிரேஷ்ட முகாமையாளர் – கடன் கட்டுப்பாடு, அலுவலர் மற்றும் முகவர் கொடுப்பனவுகள் மற்றும் செயற்பாடுகள்



**திரு அருன சிறிமான்ன**
சிரேஷ்ட முகாமையாளர் – வணிக தக்கவைத்தல்



**திரு ஜகத் மைத்ரிரத்ன**
சிரேஷ்ட முகாமையாளர் – காயப்படுதல்



**திருமதி டில்ஷானி டிப்**
சிரேஷ்ட முகாமையாளர் – SHE & PA



**திரு இந்துனில் நவரத்ன**
சிரேஷ்ட முகாமையாளர் – ஊழியர் உறவு



**திரு சந்தன விதானகே**
சிரேஷ்ட முகாமையாளர் – தலைமை அலுவலக வணிக அபிவிருத்தி

## சிரேஷ்ட முகாமையாளர்கள்



**திரு சதுர பெரேரா**
சிரேஷ்ட முகாமையாளர் – தொழிநுட்ப காப்பீட்டுப் பொறுப்பேற்றல்



**திரு தம்மிக குணவர்தன**
சிரேஷ்ட மோட்டார் பொறியியலாளர்



**திரு நாரத விஜேசேகர**
சிரேஷ்ட மோட்டார் பொறியியலாளர்



**திரு திவார உடுரவன்ன**
சிரேஷ்ட முகாமையாளர் – FBD



**திருமதி ஷிரோமி குமாரசிங்க**
சிரேஷ்ட முகாமையாளர் – சட்டம் (பத்திர காப்பீடு)



**திருமதி தேஷானி ஜயதிலக**
சிரேஷ்ட முகாமையாளர் – சட்டம் (வழக்கு)



**திரு விபுஷன் புலத்சிங்ஹல**
சிரேஷ்ட முகாமையாளர் – பொது காப்புறுதி விற்பனைப் பயிற்சி



**திரு மிலந்த வீரக்கொடி**
சிரேஷ்ட முகாமையாளர் – விநியோக செயற்பாடு (தனியாள் துறை – G/I)



**திரு நலின் படபெடிகே**
சிரேஷ்ட முகாமையாளர் – கழக உறுப்பினர் விற்பனைகள்

## சிரேஷ்ட முகாமையாளர்கள்



**திருமதி லக்ஷ்மி பெரேரா**
பதில் பிரதானி – நிறுவன தொடரபுகள்



**திரு ரவி மெடிஸ்**
சிரேஷ்ட முகாமையாளர் – அரச துறை காப்புறுதி



**திரு சிசிர குமார**
சிரேஷ்ட முகாமையாளர் – வரவுசெலவு, வரிவிதிப்பு, வருமான உத்தரவாதம் மற்றும் மீள்காப்புறுதி



**திருமதி மனீஷா குணசேகர**
சிரேஷ்ட முகாமையாளர் – கடல்சார்



**திரு துமிந்த கந்தேகம**
சிரேஷ்ட முகாமையாளர் – தகவல் தொழிநுட்ப தரவு மையம்



**திரு பிரியந்த பீரிஸ்**
சிரேஷ்ட முகாமையாளர் – கொழும்பு வலய வர்த்தக பிரிவு



**திரு ஹசிந்து கல்படகே**
சிரேஷ்ட முகாமையாளர் – முகாமைத்துவ தகவல் முறைமை



**திரு தரண் ஜூரியன்ஸ்**
சிரேஷ்ட முகாமையாளர் – வாடிக்கையாளர் சேவை மற்றும் அனுபவம்



**திரு எரந்த சாமர**
சிரேஷ்ட முகாமையாளர் – கொள்முதல் (17 மார்ச் 2025 அன்று திகதி முதல் அமுலாகும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளார்)

## சிரேஷ்ட முகாமையாளர்கள்



**திரு கோசல அபேரத்ன**
சிரேஷ்ட முகாமையாளர் – கடல்சார் காப்பீட்டு பொறுப்பு
(01 ஏப்ரல் 2025 அன்று முதல் அமுலாகும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளார்)



**ஆள அனுஷா சந்திரரத்ன**
சிரேஷ்ட முகாமையாளர் – SHE/PA கோரல்கள்
(01 ஏப்ரல் 2025 அன்று முதல் அமுலாகும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளார்)



**திரு திலின அபேசிங்க**
சிரேஷ்ட முகாமையாளர் – காப்பீட்டுக் பணிப்பீடு
(01 ஏப்ரல் 2025 அன்று முதல் அமுலாகும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளார்)

## பிராந்திய முகாமையாளர்கள்



**திரு அனுர பஸ்நாயக்க**
பிராந்திய முகாமையாளர் – பொதுக் காப்புறுதி (வடமேல் 2)



**திரு கெலும் ஜயசிங்க**
பிராந்திய முகாமையாளர் – பொதுக் காப்புறுதி (ஊவா)



**திரு ஶ்ரீயந்த குமார**
பிராந்திய முகாமையாளர் – பொதுக் காப்புறுதி (இரத்தினபுரி)



**திரு ஜகத் மெண்டிஸ்**
பிராந்திய முகாமையாளர் – பொதுக் காப்புறுதி (தென் 1)



**திருமதி உத்தரா திஸாநாயக்க**
பிராந்திய முகாமையாளர் – பொதுக் காப்புறுதி (தென் 2)



**திரு இந்திக வெல்கம**
பிராந்திய முகாமையாளர் – பொதுக் காப்புறுதி (வடமத்திய)

## பிராந்திய முகாமையாளர்கள்



**திரு தீபாள் நவகமுவ**
பிராந்திய முகாமையாளர் –
பொதுக் காப்புறுதி (மேல் 2)



**திரு ரன்ஜித் ஹேவாபதிரனகே**
பிராந்திய முகாமையாளர் –
பொதுக் காப்புறுதி (மேல் 3)



**திரு இராசமாணிக்கம் லிங்கேஸ்வரன்**
பிராந்திய முகாமையாளர் –
பொதுக் காப்புறுதி (கிழக்கு)



**திரு சுசந்த திஸாநாயக்க**
பிராந்திய முகாமையாளர் –
பொதுக் காப்புறுதி (வடமேல்)



**திரு சிவரத்னம் கர்ணன்**
பிராந்திய முகாமையாளர் –
பொதுக் காப்புறுதி (மேல் 4)



**திரு பண்டார வீரசூரிய**
பிராந்திய முகாமையாளர் –
பொதுக் காப்புறுதி (வடமேல் 1)
(21 மார்ச் 2025 திகதி ஓய்வு பெற்றார்)

# நிதியியல் சிறப்புக்கூறுகள்

2011 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க காப்புறுதி தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தம்) சட்டத்தின் 13 ஆம் பிரிவுக்கமைவாக இலங்கைக் காப்புறுதி கூட்டுத்தாபனம் 2024 பெப்ரவரி 01 தொடக்கம் இரு வேறான சட்டரீதியான நிறுவனங்களாக பிரிக்கப்பட்டன. அதற்கமைய, இந்நிதியியல் கூற்றுக்கள் 2024 பெப்ரவரி தொடக்கம் 2024 டிசம்பர் வரையான காப்புறுதி வியாபாரத்திற்கான 11 மாதங்களை உள்ளடக்குகின்றது. எனினும் ஒப்பீட்டு நோக்கங்களுக்காக காப்புறுதி தொழிலின் முழு ஆண்டுக்ககுமான (ஜனவரி – டிசம்பர் ) நிதியியல் தகவல்கள் துணைத்தகவல்களின கீழ் 167 ஆம் பக்கத்தின் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

| | அளவீட்டு அலகு | 2024 | 2023 | மாற்றம் (%) |
|---|---|---|---|---|
| **நிதியியல் செயலாற்றம்** | | | | |
| மொத்த வருவாய் | ரூ. மில் | 22,986 | 21,100 | 8.9 |
| மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம் | ரூ. மில் | 25,333 | 23,145 | 9.5 |
| தேறிய உழைத்த கட்டுப்பணங்கள் | ரூ. மில் | 18,071 | 16,457 | 9.8 |
| உற்பட்ட தேறிய கோரல்கள் | ரூ. மில் | 10,510 | 10,018 | 4.9 |
| காப்பீட்டுப் பொறுப்பேற்றல் மற்றும் தேறிய கையகப்படுத்தல் செலவு | ரூ. மில் | 293 | 755 | (61.2) |
| தொழிற்பாட்டு மற்றும் நிருவாகச் செலவுகள்* | ரூ. மில் | 8,144 | 4,934 | 65.1 |
| இலங்கை அபிவிருத்தி முறி திரும்பல் இன்றி தொழிற்பாட்டு மற்றும் நிருவாகச் செலவுகள் | ரூ. மில் | 8,144 | 7,137 | 14.1 |
| முதலீட்டு வருமானம் | ரூ. மில் | 5,321 | 5,796 | (8.2) |
| வரிக்கு முந்திய இலாபம் (PBT) | ரூ. மில் | 4,039 | 5,412 | (25.4) |
| வரிக்கு பிந்திய இலாபம் (PAT) | ரூ. மில் | 3,286 | 4,344 | (24.4) |
| தேறிய கோரல் விகிதம் | % | 58 | 61 | (4.5) |
| செலவு விகிதம் | % | 46 | 45 | 2.2 |
| ஒன்றிணைந்த விகிதம் | % | 104 | 106 | (1.6) |
| பங்குரிமை மீதான ஆதாயம் | % | 18 | 7 | 97.5 |

**இலங்கை அபிவிருத்தி முறிக்கான சேத இழப்பு ஏற்பாடு ரூ. 2,203 மில்லியன் 2023 நிதியாண்டின் போது முழுமையாக திரும்பல் செய்யப்பட்டது.*

| | அளவீட்டு அலகு | 2024 | 2023 | மாற்றம் (%) |
|---|---|---|---|---|
| **நிதியியல் நிலையும் உறுதிப்பாடும்** | | | | |
| நிதியியல் முதலீடு | ரூ. மில் | 36,982 | 45,550 | (18.8) |
| மொத்த சொத்துகள் | ரூ. மில் | 51,134 | 93,387 | (45.2) |
| பங்குரிமை மூலதனம் | ரூ. மில் | 21,978 | 61,725 | (64.4) |
| காப்புறுதி ஒப்பந்த பொறுப்புகள் | ரூ. மில் | 20,441 | 20,496 | (0.3) |
| மொத்த பொறுப்பு | ரூ. மில் | 29,155 | 31,662 | (7.9) |
| கடன் தரப்படுத்தல் (பிட்ச் ரேட்டங்)** | Fitch (lka) | A+(lka) | A(lka) | |

***வேறுபடுத்தலுக்கு முன்னர் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் பிட்ச் ரேட்டிங் மூலம் குறித்தொதுக்கப்பட்டவாறு தேசிய காப்புறுதி வழங்குனர் நிதியியல் வலிமை தரப்படுத்தலை பேணியது. வேறுபடுத்தல் செயன்முறை நிறைவுபெற்றதனைத் தொடர்ந்து பிட்ச் ரேட்டிங் 2025 பெப்ரவரியில் ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோபரேஷன் ஜெனரல் லிமிடட்டிற்கு தேசிய காப்புறுதி வழங்குனர் நிதியியல் வலிமை தரப்படுத்தல் A+ (LKA) தரப்படுத்தலை குறித்தொதுக்கியுள்ளது.*

| | அளவீட்டு அலகு | 2024 | 2023 | மாற்றம் (%) |
|---|---|---|---|---|
| **ஒழுங்குமுறைப்படுத்தல் விகிதங்கள்/முடுக்கு** | | | | |
| மூலதன போதுமை விகிதம் (CAR) | % | 277.3 | 226.6 | 22.4 |
| மொத்த கிடைக்கப்பெறத்தக்க மூலதனம் (TAC) | ரூ. மில் | 21,286 | 46,464 | (54.2) |
| இடர்நேர்வு மூலதனம் அடிப்படையிலமைந்த தேவைப்பாடு (RCR) | ரூ. மில் | 7,675 | 20,504 | (62.6) |

*பிரிவுபடுத்தல் மற்றும் மூலதன கட்டமைப்பு விபரங்களுக்கு குறிப்பு 33 ஐப் பார்க்க.*

*ஒப்பீட்டு நோக்கத்திற்காக காப்புறுதி தொழிலினின் முழு ஆண்டுக்குமான நிதியியல் தகவல்கள் இப்பக்கத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.*

# நிதிசாரா சிறப்புக்கூறுகள்

## பாராட்டுதல்கள்



**ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோபரேஷன் ஜெனரல் லிமிடட் பல்வேறு கௌரவிக்க விருதுகள் மற்றும் சான்றிதழ்கள் ஊடாக அதன் தரத்திற்கும் உன்னதிற்குமான கடமைப்பொறுப்பிற்காக அங்கீகரிக்கப்பட்டது.**

ISO/IEC 27001:2013 தகவல் பாதுகாப்பு முகாமைத்துவ முறைகளுக்கான தரநியம தராசரச் சான்றிதழ் (ISMS)

ISO ISO 14064-1:2018 நியமங்களுக்கு அமைவாக பச்சை வீட்டு வாயு சான்றிதழ் மற்றும் ISO 14064-3:2019 இன் கீழ்உறுதிப்படுத்தப்பட்டது

உலகளாவிய வர்த்தக நாம விருதுகள் மூலம் வாடிக்கையாளர் திருப்திக்கான சிறந்த காப்புறுதிக் கம்பெனி- இலங்கை 2024

LMD Finance மூலம் மிகவும் விரும்பப்படும் காப்புறுதி வர்த்தக நாமம்

## புதிய உற்பத்திகள் மற்றும் சேவைகள்



- 2024 டிசம்பர் 4 அன்று பாடசாலை ஆசிரியர்களுக்கான **“குருபுகுமரி”** உற்பத்தி தொடங்கி வைக்கப்பட்டது.
- Motor Third Party Total Loss Plus தொடங்கி வைக்கப்பட்டது இது நியம மூன்றாம் தரப்பு மோட்டார் காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றின் உயர்வில் வழங்கப்படும் மேம்படுத்தல் ஒன்றாகும். அடிப்படை மூன்றாம் தரப்பு காப்புறுதியானது மூன்றாம் தரப்பினர்களுக்கான காயம், மரணம் அல்லது ஆதன சேதத்தை மாத்திரம் காப்பீடுசெய்கின்ற அதேவேளை “Total Loss Plus” மொத்த இழப்பு நிகழ்வின் உரிமையாளர் சேதக் காப்பீட்டினை வழங்குகின்றது.
- தீவிர நோய் காப்பீட்டுடன் Motor plus Pinnacle உற்பத்தி மர்சீரமைப்புக்கப்பட்டது.

## பங்குடமைகள்



- ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோபரேஷன் ஜெனரல் லிமிடட் மற்றும் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கிய நிறுவனம்
- ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோபரேஷன் ஜெனரல் லிமிடட் மற்றும் பொக்ஸ்ஹில்
- ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோபரேஷன் ஜெனரல் லிமிடட் மற்றும் நவலோக வைத்தியசாலை
- ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோபரேஷன் ஜெனரல் லிமிடட் ஜே எம் விக்ரமாராட்சி
- ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோபரேஷன் ஜெனரல் லிமிடட் மற்றும் ரோயல் கல்லூரி
- ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோபரேஷன் ஜெனரல் லிமிடட் மற்றும் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம்



# சுற்றாடல் நியமங்கள்

- ISO 14064-1:2018 சர்வதேச தரநியமத்துடன் இணங்கியொகியமைக்காக பச்சை வீட்டு வாயு உறுதிப்படுத்தல் அபிப்பிராய விருது வழங்கப்பட்டது

# இடர் ஆளுகை மற்றும் இங்குணங்குவித்தல்



- சர்வதேச நியமங்களை கூட்டிணைத்தல் மற்றும் தொழில்சார் நியமங்களுக்கு இசைவாக விருத்தல் – ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோபரேஷன் ஜெனரல் லிமிடட் IFRS 17 நடைமுறைப்படுத்தலை தொடங்கியது
- கலப்பு நிறுவனம் ஒன்றாக 2023 இல் ISO/IEC 27001 சான்றிதழை பெற்றுக் கொண்டதுடன் புதிய ITSM 20000 சான்றிதழுடன் இணைத்து 27001:2022 ஆக தரம் உயர்த்துவதற்கு 2024இல் சான்றுபடுத்தல் செயல்முறை தொடங்கப்பட்டது
- சுற்றாடல், சமூக மற்றும் ஆளுகை கட்டமைப்பின் செயல்திறன் வாய்ந்த நடைமுறைப்படுத்தல்
- பிந்திய இணங்குவித்தல் தேவைப்பாடுகளை கூட்டிணைத்து ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோபரேஷன் ஜெனரல் லிமிடட்டிற்கான கொள்கைகளை இற்றை வரையாக பேணுதல்

# நிகழ்வுகள்

- பொதுக் காப்புறுதி உச்சிமாநாடு 2023 ஜெட் விங்க் ப்ளூ
- கண்டி பெரஹராவைச் செயல்படுத்தல்
- வினாடி வினாப் போட்டி
- கொழும்பு BYD வாகன கண்காட்சி 2024
- கதிர்காம பெரஹராவைச் செயல்படுத்தல்
- 2024 நவம்பர் மலேசியாவில் இடம்பெற்ற General Insurance Pinnacle Achiever Award (GIPA) சாதனையாளர் விருதுவழங்கல்



# 02

# தலைமைத்துவ மீளாய்வுகள்

25
தலைவரின் செய்தி

29
பிரதம நிறைவேற்று அலுவலரின் மீளாய்வு

# தலைவரின் செய்தி

“நிதியியல் உறுதிப்பாடு மீது அத்திவாரமிடப்பட்ட செயற்பரப்பினை விரிவுபடுத்துவது 2024 இல் எமது தலைசிறந்த சாதனைகளுக்கு முக்கியமானதாக விளங்கியது. வரலாற்று ரீதியான அறிவும் டிஜிட்டல் ரீதியாக மாறுதலும் ஒன்றிணைந்து எமது சந்தைத் தலைமைத்துவத்தை தக்கவைப்பதற்கும் மேலும் கட்டியெழுப்புவதற்குமான தனித்துவமான நிலையில் எம்மை இடம்பெறச்செய்துள்ளது.”



இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் பகுதியொன்றாக முன்னர் இருந்த 2024 நிதியாண்டுக்காக ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோபரேஷன் ஜெனரல் லிமிடட் (ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட்) நிறுவனத்திற்கான ஒருங்கிணைந்த ஆண்டறிக்கையானது 2024 பெப்ரவரியில் நிறுவனம் வெற்றிகரமான சட்ட ரீதியான வேறாக்கத்திற்கு சான்றுபார்கின்றது. தொழில் வேறுபடுத்தலானது 2011இன் 3 ஆம் இலக்க காப்புறுதித் தொழிற்துறை ஒழுங்குபடுத்தல் (திருத்தம்) சட்டத்திற்கமைவாகவும் 23/0431/604/046 ஆம் இலக்க 2023 மார்ச் 17 ஆம் திகதியன்றான அமைச்சரவை தீர்மானத்திற்கமைவாகவும் நிறைவேற்றப்பட்டது.

ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோபரேஷன் ஜெனரல் லிமிடட்டின் நீண்டகால பெறுமதி உருவாக்கச் செயன்முறை, நிலைபெறத்தக்க வளர்ச்சியினை நோக்கிய உபாயரீதியான கட்டமைப்பு, ஆளுகை விஞ்ஞாபனம் மற்றும் கம்பனி அதன் விவகாரங்களை நடாத்துவதில் ஏதுவாகின்ற கோட்பாடுகள் பற்றி எமது வாடிக்கையாளர்களுக்கு விரிவான புரிதலை வழங்குகின்ற இவ் அறிக்கையினை உங்களுக்கு சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

## தொடர்ந்து முன்னெடுக்கப்படும் சந்தை தலைமைத்துவம்

அரசாங்கத்துக்குச் சொந்தமான நிறுவனம் என்ற வகையில் கம்பனியானது சொத்துக்களுக்கு பாதுகாப்பினை வழங்குவதற்கும் அதனூடாக நிதியியல் பாதுகாப்பையும் இறுதியாக இடர்நேர்வை தணிப்பதையும் உறுதி செய்வதற்குமான உபாயரீதியான பொறுப்பாணையுடன் எமது கம்பனி தொழிற்படுகின்றது. ஆகையினால் எமது நிதியியல் சாதனை தனிப்பட்ட பாதுகாப்பினை மீள வலிமைப்படுத்தி இதன்மூலம் தேசத்தின் பொருளாதார உறுதிப்பாட்டினை வலுப்படுத்துவதில் மிகவும் முக்கியமிக்கதாக விளங்குகின்றது. நாம் உயர் பணி ஒழுக்கவியல், ஆளுகை கோட்பாடுகள் மற்றும் ஒழுங்குபடுத்தல் – இணங்குவிப்பு, கடன்தீராற்றல் முகாமைத்துவம் என்பவற்றை நிலைநிறுத்தி, எமது தொழிலில் ஈடுபட்டுள்ளோம். எமது நிறுவனத்தில் இடம்பெற்றுள்ள இந்நிறுவனப் பொறுப்பையும் பொறுப்புக்கூறலையும் புரிந்துகொண்டு, நாம் இலங்கையில் காப்புறுதி தொழிற்துறையில் முன்னோடி சக்தியொன்றாக ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிடெட்டை நிலைநிறுத்துவதற்கு உற்பத்திப் புத்தாக்கம் மற்றும் தரவினால் தூண்டப்படும் தீர்மானம் என்பவற்றுடன் ஒன்றிணைந்த ஆற்றல்வாய்ந்த கணிப்பீட்டு கடமைப்பொறுப்பொன்றின் மீது தொடர்ந்தும் கட்டியெழுப்பப்படுகின்றோம்.

வெளிநாட்டில் எமது தொழிலை, குறிப்பாக மீள்காப்புறுதி பங்குடமைகள், எல்லை கடந்த காப்பீடு மற்றும் டிஜிட்டல் காப்புறுதி தீர்வுகள் என்பனவற்றில் விரிவுபடுத்துவதன் மீது நாம் காலடிவைத்தோம். கம்பனியின் வலிமையான நிதியியல் நிலை, இலங்கையில் தொழிற்துறையில் சந்தை தலைமைத்துவம் மற்றும் எமது எண்பிக்கப்பட்ட நிபுணத்துவம் என்பன இடர்நேர்வு பன்முகப்படுத்தலுக்கும் மூலதன வினைத்திறனுக்கும் உலகளாவிய மீள் காப்புறுதி வழங்குனர்களுடனான உபாயரீதியான கூட்டணியினை கண்டறிவதில் எமக்கு உதவின. மேலும், விசேடத்துவம் மிக்க காப்புறுதி உற்பத்திகளை வழங்குவதற்கு தெற்காசியா மற்றும் மத்திய கிழக்கு பிராந்தியங்களிலும் வியாபார வாய்ப்புக்கள் நாடப்பட்டன. சர்வதேச காப்புறுதி தோற்றவமைப்பில் போட்டி மிக்க செயற்பாட்டாளாராக கம்பனி உருவெடுப்பதற்கு இவை உதவி, சந்தைப் பங்கின் 19.4% இற்கும் மேற்பட்ட உடமையினை பேணி 20% கொண்ட சந்தைப் பங்குடன் எமது மோட்டார் காப்புறுதி சந்தை ஆதிக்கத்தை பேணி எமது தலைமைத்துவ நிலையினை மேலும் மேம்படுத்தினோம்.

## முக்கியத்துவமிக்கதொரு மாறுதல்

2024 ஆம் ஆண்டானது 2011இன் 3 ஆம் இலக்க காப்புறுதி தொழிற்துறை ஒழுங்குபடுத்தல் (திருத்தம்) சட்டத்தின் 53 ஆம் பிரிவுக்கமைவாக ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோபரேஷன் ஜெனரல் லிமிடட் பரிணமிப்பதில் இன்றியமையாததாக விளங்கியது. முன்னைய இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் 2024இல் புதிய இரு சட்ட ரீதியான நிறுவனங்களாக பிரிக்கப்பட்டன. ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் 2024 டிசம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டு காலப்பகுதியில் 11 மாதங்கள் வேறான கம்பனியாக அதன் வியாபாரத்தை தொழிற்படுத்தியது. எவ்வாறாயினும் ஒப்பீட்டு நோக்கங்களுக்காக முழுமையான காப்புறுதி தொழிற்பாடுகளின் செயலாற்றத்தினை பிரதிபலிப்பதற்கு ஜனவரி உள்ளடங்கலாக 2024இல் முழு ஆண்டுக்குமான தகவல்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் கீழ் 2023 ஆம் ஆண்டுக்கான 12 மாத வியாபார செயலாற்றத்திற்கெதிராக இது ஒப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் காப்புறுதி தொழிற்துறையின் சந்தைத் தலைவராக அதன் நிலையினை மீளவலிமைப்படுத்துவதற்கு நன்கு நிலைபெற்றிருக்கின்ற எமது நிறுவனப் பயணப்பாதை, நிதியியல் தாக்கப்பிடிக்கும்தன்மை மற்றும் உபாய ரீதியான முக்கியத்துவங்கள் என்பன பற்றிய பகுப்பாய்வுமிக்க மீளாய்வினை சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

## தொழிற்படுகின்ற சூழல்

கடினமான கொள்கை மறுசீரமைப்புகள் மற்றும் அரசிறைப் பொறுப்பு விளைவுகளை இலங்கை கொண்டிருந்த போதிலும் அது 2024இல் மீட்சிப் பாதையில் தடம்பதித்தது. ஆக்கபூர்வமான வியாபார சூழலை தோற்றுவித்து, தொடர்ந்து வந்த நாணய உறுதிப்பாடு, பணவீக்க வீழ்ச்சி மற்றும் அடுக்கடுக்கான வளர்ச்சி என்பவற்றுக்கு இவை வழிவகுத்தன. நாட்டுக்கான கடன் தரப்படுத்தல் தரம் உயர்த்தல்களுக்கு வழிவகுத்த வெற்றிகரமான படுகடன் மறுசீரமைப்பு இலங்கை அரசாங்கத்தின் பெருந்தன்மையான முயற்சிகளை மேலும் மீள்வலிமைப்படுத்தின. இது முதலீட்டாளர் நம்பிக்கையினை கவருவதில் பொருளாதார ஒழுங்கை மீளமைப்பதற்கு உறுதிபூண்டது.

இலங்கையின் ஒட்டுமொத்த பொதுக் காப்புறுதிச் சந்தை பொருளாதார தளம்பல்களுக்கு மத்தியில் 2024 இல் மிதமான வளர்ச்சியினை அனுபவித்தது.

## உபாய முன்னுரிமைகள்

வேறாக்களுடனான புதிய ஆரம்பம் தோற்றம்பெற்றமையுடன் நாம் எமது உபாயங்களை ஐந்து வகைகளாக பிரித்துள்ளோம்.

தேறிய பதிவு செய்யப்பட்ட கட்டுப்பணம் மீதான மையப்படுத்தலுடன் உயர்தர வளர்ச்சியினை செலுத்தலானது இலக்கிடப்பட்ட சந்தை விரிவாக்கல்கள், உற்பத்தி பன்முகப்படுத்தல் மற்றும் இடர்நேர்வு சீராக்கப்பட்ட காப்பீட்டு உபாயங்கள் என்பன ஊடாக தீவிரமாக நாடப்பட்டது. புத்தாக்கமிக்க காப்புறுதி தீர்வுகள், நிறுவனங்கள் மற்றும் சில்லறை பிரிவுக்கு பொருந்துவதற்கு ஏற்றவாறாக்கப்பட்ட சந்தைப்பங்கு விரிவுபடுத்தப்பட்ட அதேவேளை டிஜிட்டல் தளங்கள் உள்ளடங்கலாக விநியோக மார்க்கங்களை வலுப்படுத்தல் எமது உற்பத்தி பொருத்தத்திற்கு வாடிக்கையாளருக்கு எளிதான பெறுவழியினை இயலச்செய்தது.

ஒன்றிணைந்த தொழிற்பாட்டு விகிதம் மற்றும் இலாபத்தை உச்சப்படுத்தல் என்பவற்றை வலியுறுத்துவதன் மூலம் நாம் செலவுச்சிக்கமான தொழிற்பாட்டு வழிமுறைகளை நடைமுறைப்படுத்தி கோரல் முகாமைத்துவத்தை மேம்படுத்தியதுடன் எமது செயன்முறைகளை குறிப்பிடத்தக்களவு தன்னியக்கமயப்படுத்தி காப்பீட்டுக்கான முன்னேற்றகரமான தொழில்நுட்பத்தில் அனுகூலம் பெறுகின்றோம். இதற்கு மேலதிகமாக, முதலீடு மீதான வலுவான ஆதாயங்களை பன்முகப்படுத்தப்பட்ட முதலீட்டு சொத்துப்பட்டியல் விளைவித்தது.

சேவை உன்னதத்திற்கான எமது அடித்தளமாக வாடிக்கையாளரை மையப்படுத்துகின்றமை, டிஜிட்டல் ரீதியான மாறுதல் உபாயங்கள் என்பன உரிய கால கோரல் தீர்ப்பனவையும் பூட்கை நிருவகித்தலையும் உறுதிசெய்வதற்கு மேற்கொள்ளப்பட்டு, வெளிப்படைத்தன்மையும் பாதுகாப்பும் உறுதிசெய்யப்பட்டது. நாம் 24/7 வாடிக்கையாளர் சேவை மார்க்கத்தை தாபித்து சேவை மார்க்கத்தையும் தொலைபேசி செயலி ஒருங்கிணைப்பையும் தாபித்துள்ளோம்.

தனிப்பட்ட தேவைக்கேற்றவாறான வாடிக்கையாளர் ஈடுபாட்டு உபாயங்கள், லோயல்டி நிகழ்ச்சி திட்டங்கள், வாடிக்கையாளர் தேவைகளை அடையாளப்படுத்தவதற்கு முன்கணிப்பு பகுப்பாய்வுகள் மற்றும் பலமார்க்க தொடர்பாடல் முறையூடாக எமது பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களுடன் செயலூக்கமிக்க ஈடுபாடு என்பன வாடிக்கையாளர் தக்கவைத்தலையும் உயர்வான மீள்புதுப்பித்தல் விகிதங்களையும் உறுதிசெய்தன.

வாடிக்கையாளர்களுக்கு சேவையளிப்பதற்கு நன்கு பயிற்றப்பட்ட அத்துடன் தனிப்பட்ட அபிவிருத்தி மீது கவனம் செலுத்துகின்ற அர்ப்பணிப்புமிக்க அணியொன்று நிறுவனசார் வெற்றிக்கு இன்றியமையாததாகும். நாம் எமது மனித மூலதனத்தில் முதலிட்டு பலவகையான முன்னேற்றகரமான பயிற்சி நிகழ்ச்சி திட்டங்களை வழங்கி, வள ஒதுக்கீடு, செயலாற்றுகையை தடமறிதல் மற்றும் விதிவிலக்கான செயலாற்றுகைக்கு வெகுமதியளித்தல் என்பவற்றை உச்சப்படுத்துகின்றோம்.

## நிதியியல் செயலாற்றம்

ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோபரேஷன் ஜெனரல் லிமிடட்டின் மொத்த பதிவுசெய்யப்பட்ட கட்டுப்பணம் ஆண்டுக்காண்டு 9.5% அதிகரிப்புடன் ரூ. 25.3 பில்லியனாக அதிகரித்த அதேவேளை, தேறிய உழைக்கப்பட்ட கட்டுப்பணம் ஆண்டுக்காண்டு 9.8% கொண்ட கவர்ச்சிகரமான அதிகரிப்புடன் ரூ. 18 பில்லியன் வரை நகர்ந்தது. ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் ரூ. 4 பில்லியன் கொண்ட வரிக்கு முந்திய இலாபத்தினையும் ரூ. 3.3 பில்லியன் வரிக்கு பிந்திய இலாபத்தினையும் பதிவு செய்தது. இது ஆண்டுக்காண்டு முறையே 25.4% மற்றும் 24.4% குறைவாகும். 2023 நிதியாண்டுக்கான வரிக்கு முந்திய இலாபமும் வரிக்கு பிந்திய இலாபமும் ரூ. 2,203 மில்லியன் கொண்ட இலங்கை அபிவிருத்தி முறி ஏற்பாட்டு திரும்பல் மூலம் சாதமாக தாக்கம் செலுத்தப்பட்டிருந்தது. இது அவ்வாண்டுக்கான இலாபத்தன்மையை குறிப்பிடத்தக்களவு உயர்வடையச் செய்திருந்தது. உறுதியான தொழிற்பாட்டு செயலாற்றத்திற்கு மத்தியில் இவ் மீண்டெலாத சீராக்கம் தோற்றுவித்த உயர்வான தளம், 2024 ஆம் நிதியாண்டில் வரிக்கு முந்திய இலாபத்தினதும் வரிக்கு பிந்திய இலாபத்தினதும் ஆண்டுக்காண்டு வளர்ச்சி வீதங்களில் வீழ்ச்சியினை விளைவித்தது.

எமது மொத்த வருவாய் ஈட்டல் ரூ.23 பில்லியனாக உச்சமடைந்து, ஆண்டுக்காண்டு 8.9% அதிகரிப்பினை எடுத்துக்காட்டியது. பங்குரிமை மூலதனம் மீதான ஆதாயம் 97.5% அதிவேக அதிகரிப்பை கொண்டிருந்த அதேவேளை சொத்துத் தளம் ரூ. 51.1 பில்லியனாக உயர்வடைந்து எமது நிதியியல் நிலையினை மேலும் வலுப்படுத்தியது.

ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் செயலாற்றமானது வலுவான இலாபத்தன்மை, சொத்து இடர்நேர்வு பகுப்பாய்வு, மூலதனமாக்கல், முன்மதிமிக்க முதலீட்டு உபாயங்கள் என்பவற்றினதும் அதேபோன்று நிலைபெறுதன்மைக்கான எமது கடமைப்பொறுப்பு மற்றும் பங்குதாரர் என்பவற்றின் ஒன்றினைவின் மூலம் செல்வாக்கு செலுத்தப்பட்டது.

உறுதியான எதிர்கால வாய்ப்பு நிலை என்பவற்றுடன் பிட்ச் ரேட்டிங் CCC+ காப்புறுதி வழங்குனர் நிதியியல் வலிமை (IFS) தரப்படுத்தலையும் A+ (lka) தேசிய காப்புறுதி வழங்குநர் வலிமை தரப்படுத்தலையும் கம்பனிக்கு குறித்தொதுக்கியது.

## முதலீடுகள் மீதான ஆதாயம்

இடர்நேர்வு அடிப்படையிலமைந்த முதலீட்டு ஒதுக்கீட்டு கோட்பாடுகளை கடைப்பிடித்து, அரசாங்க பிணையங்கள். முறிகள் மற்றும் பங்குரிமை மூலதன சந்தை உள்ளடங்கலாக பன்முகப்படுத்தப்பட்ட முதலீட்டு சொத்துப்பட்டியலில் உபாய ரீதியான சொத்து ஒதுக்கீடு எமது முதன்மை ஒழுங்குபடுத்துனரான இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்துனர் ஆணைக்குழுவின் வழிகாட்டல்களை கடைப்பிடித்து தொழிற்துறை நெறிமுறைகளுக்குள் முகாமைசெய்யப்படும் முதலீடுகள் மீதான உச்ச ஆதாயத்தை உறுதிசெய்தது.

## டிஜிட்டல்ரீதியான மாறுதல்

காப்பீடு, கோரல்களைச் செயன்முறைப்படுத்தல் மற்றும் வாடிக்கையாளர் ஈடுபாட்டு தளங்கள் என்பனவற்றில் முன்னேற்றகரமான தன்னியக்கத்தை ஒருங்கிணைப்பதன் மூலம் எமது டிஜிட்டல் மாறுதலை நாம் துரிதப்படுத்தினோம். சந்தை மாற்றங்களுக்கான எமது விரைவான ஊக்கமும் செவிமடுக்கும் தன்மையும் புத்தாக்கமிக்க டிஜிட்டல் மற்றும் தொழில்நுட்பவியல் தீர்வுகள் மூலம் தற்போது தூண்டப்பட்டு, டிஜிட்டல் புத்தாக்கத்தில் முன்னணிவகிக்கின்ற தொழிற்துறைக்கான எமது கடமைப்பொறுப்பினை பிரதிபலிப்பதுடன் எமது வர்த்தகநாம நற்பெயரை மேலும் வலிமைப்படுத்தினோம். வலுவான பண துய்தாக்கல் பரிபாலனத்தை மீள வலிமைப்படுத்தும் நோக்குடன் நாம் நவீன மென்பொருளை நடைமுறைப்படுத்தி, நிதியியல் குற்ற இடர்நேர்வினை தணித்தோம். பயங்கரவாத நடவடிக்கைகளுக்காக அறியப்படும் உள்நாட்டு மற்றும் சர்வதேச இரண்டிலுமான ஆட்களினது விரிவான பட்டியலும் அதேபோன்று அரசியல் ரீதியாக முகம்கொடுக்கின்ற ஆட்களினது பட்டியலும் இத்தரவுத்தளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவசியமானபோது இது இற்றைப்படுத்தப்படுகின்றது. எமது உள்ளக முறைமையுடன் ஒருங்கிணைக்கப்பட்ட இத்தளம் கொடுக்கல்வாங்கல் பற்றிய தன்னியக்கமான பரிசோதனையை இயலச்செய்து தனிநபர் மீதான உரிய விழிப்புக்கவனத்தை செயலாற்றுகின்றது.

இவ்வழிமுறைகள் தொழிற்பாட்டு வினைத்திறனை சீரமைத்து, மேம்படுத்தி வாடிக்கையாளர் சேவை உன்னதத்தை உறுதிசெய்ததுடன் எமது வாடிக்கையாளர் பட்டியலினுள் ஏதேனும் விரும்பத்தகாத செயற்பாடுகளை உரிய காலத்தில் கண்டுபிடிக்கின்றது.

## உபாய ரீதியான முதலீடுகள்

சந்தைப் போக்குகளுடன் உபாய ரீதியாக அணிசேர்ந்துள்ள அத்துடன் பன்முகப்படுத்தப்பட்ட மற்றும் இலாபகரமான நிதியியல் சாதனங்கள் மத்தியில் பரம்பியுள்ள முன்மதிமிக்க முதலீட்டு உபாயங்கள் உச்சமட்ட ஆதாயங்களை ஈட்டுகின்ற அதேவேளை, இடர்நேர்வுகளை தணிக்கின்றன. பசுமை முறிகள் மற்றும் சுற்றாடல், சமூக, ஆளுகை இணங்குவித்தல் சொத்துக்கள் நிலைபேறான முதலீடுகளுக்குள் விரிவடைதல் எமது நிதியியல் ரீதியான தலைமைத்துவத்தினை பிரதிபலிப்பது மாத்திரமன்றி நீண்டகாலத்திற்கான நிலைபேறான தொழிலை கட்டியெழுப்புவதற்கான எமது கடமைப்பொறுப்புக்கும் சான்றுபகர்கின்றது.

## வாடிக்கையாளர் மையப்படுத்தல்

எமது தொழிலின் எமது முதன்மைக் கவனமும் மையமும் இடர்நேர்வை தவிர்ப்பதாகவிருந்து எமது தொலைநோக்கு, பணி மற்றும் மைய விழுமியங்களை என்பவற்றையும் ரூ. 10.5 பில்லியன் கோரல் கொடுப்பனவுகளை பகிர்ந்தளிப்பதன் மூலம் எமது பூட்கை உடமையாளர்களுக்கான கடப்பாட்டையும் நாம் நிலைநாட்டினோம். வாடிக்கையாளரை மையப்படுத்துவதிலும் எமது வர்த்தகநாம வாக்குறுதியை கொண்டு சேர்ப்பதிலும் எமது சந்தை தலைமையில் இது மேலும் வளர்ச்சியை ஏற்படுத்தியது. தனிப்பட்ட தேவைக்கேற்றவான காப்புறுதி தீர்வுகள் துரிதமான கோரல் தீர்ப்பனவு மற்றும் பல்மார்க்க ஈடுபாடு என்பவற்றை நாம் முன்னுரிமைப்படுத்தி வாடிக்கையாளர் மையப்படுத்தலில் தொழிற்துறை அளவுகோல்களை நிர்ணயித்துள்ளோம்.

வளர்ச்சி உபாயங்கள், சந்தை அபிவிருத்தி ஊடுருவல் மற்றும் புதிய அபிவிருத்தி என்பன அனைத்தும் வாடிக்கையாளரின் தேவையின் அடிப்படையில் அமையப்பெற்றுள்ளன. எமது செயன்முறைகள், மக்கள் அபிவிருத்திகள் மற்றும் வர்த்தகநாமத்தை கட்டியெழுப்பும் முயற்சிகள் என்பவற்றில் தொழிற்பாட்டு ரீதியான உன்னதம் வாடிக்கையாளர் மையப்படுத்தலுக்கான எமது கடமைப்பொறுப்பை மேலும் வளர்ச்சியுறச்செய்து அனைத்து தொடர்பு மையங்களிலும் சிறந்த தரத்திலான அனுபவத்தை கொண்டு சேர்க்கின்றது.

## நிறுவன ஆளுகை

ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோபரேஷன் ஜெனரல் லிமிடட் வலுவான ஒழுக்கநெறிக் கோவை மற்றும் ஆற்றல் வாய்ந்த நிதியியல் கட்டுப்பாடுகள் என்பவற்றின் கீழ் தொழிற்படுகின்ற அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சியொன்றாகும். இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட 2022இன் 02 ஆம் இலக்க பணிப்புரைக்கு அமைவாக இலங்கை பட்டய கணக்காளர்கள் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட நிறுவன ஆளுகை மீதான சிறந்த நடத்தைக் கோவையின் 2017 (2023 இல் திருத்தப்பட்டது) ஏற்பாடுகளை நாம் கடைப்பிடிக்கின்றோம். மேலும் நிதி அமைச்சினால் வழங்கப்பட்ட அரசுக்கு சொந்தமான தொழில்முயற்சிகளுக்கான நிறுவன ஆளுகை மற்றும் தொழிற்பாட்டு கையேடு மீதான வழிகாட்டல்களை நாம் பின்பற்றுகின்றோம். நிறுவன ஆளுகையை வலுப்படுத்துவதற்கும் உயர் தரத்திலான பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மையை பேணுவதற்குமான எமது கடமைப்பொறுப்புக்கு இக்கட்டமைப்புகள் கூட்டாக ஆதரவளிக்கின்றன.

நிறுவன ஆளுகை கட்டமைப்பும் குறிப்பான இடர்நேர்வு தணிப்பு பணிப்புரைகளின் அடிப்படையிலமைந்த வலிமையான இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பொன்றுடன் இணைந்துள்ளது. 2024 இல் எமது குறிப்பிடத்தக்க சாதனைக்கான தளமாக கம்பனி கொள்கைகள், ஒழுக்க மற்றும் சட்ட ரீதியான கையாளுகை மீதான விட்டுக்கொடுக்காத நிலை, இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு அத்துடன் ஏதேனும் வடிவிலான துன்புறுத்தலுக்கு பூச்சிய சகிப்பு என்பவற்றை நாம் தொடர்ந்தும் நிலைநாட்டுவோம் என உறுதிசெய்கின்றேன். தொழிற்படை அதன் முழுமையான உள்ளார்ந்த ஆற்றலை அடைவதை ஊக்குவிக்கின்ற பாராபட்சமற்ற, பல்வகைமை மற்றும் அனைவரையும் உள்ளடக்குகின்ற பணியிடத்தினை நாம் தொழிற்படுத்துகின்றோம் என்பதனை பதிவுசெய்வதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம். வெளிப்படைத்தன்மை, செம்மை மற்றும் உரியகாலவிதம் என்பவற்றுடன் நாம் காப்புறுதிச் சேவை வழங்குனர் மற்றும் பொறுப்புமிக்க நிறுவனப் பிரசை என்ற வகையில் அனைத்து ஒழுங்குமுறை வெளிப்படுத்தல்களும் நேர்மையுடன் செய்யப்பட்டு எமக்கு தேவையான உயர் ஒழுக்க நெறிகள் நிலைநாட்டப்படும் என்பதை உறுதிசெய்கின்றோம்.

## சுற்றாடல், சமூக மற்றும் ஆளுகை அத்துடன் நிலைபெறுதன்மை

இடர்நேர்வுகளை தணிப்பதன் மூலம் சொத்துக்களை காத்தல் எமது தொழிலின் பண்பாகும். தொழிற்துறையில் சிறந்த நடத்தைகளுடன் அணிசேர்ந்துள்ள அனைத்தையும் உள்ளடக்கிய சுற்றாடல், சமூக, ஆளுகை நிலைபெறுதன்மை கட்டமைப்பு மற்றும் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதற்கான எமது கடமைப்பொறுப்பில் இது சான்றாக விளங்குகின்றது.

எமது தொழில் உபாயம், நாளாந்த தொழிற்பாடுகள், தீர்மானம் மேற்கொள்ளுதல் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவம் என்பன நிலைபெறுதன்மை கட்டமைப்புக்குள் கொண்டு நடாத்தப்படுகின்றன. நீண்ட கால பெறுமதி உருவாக்குவதானது எமது தொழிலினதும் பங்குடமையாளர்களினதும் நிலைபெறத்தக்க வளர்ச்சிக்கான தொடர்பு மற்றும் முக்கியத்துவம் மீது கவனம் செலுத்துவதன் மூலம் இயக்கப்படுகின்றது. இ.நி.அ.நி.1 மற்றும் இ.நி.அ.நி.2 ஆகியவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு நாம் மாறுதலடைவதனால் நிலைபெறுதன்மைக்கான எமது கடமைப்பொறுப்பினை மையத் தொழிற்பாடுகளுக்குள் நாம் மேலும் பதியச்செய்கின்றோம்.

## ஆற்றல் விருத்தி

தனிப்பட்ட அபிவிருத்தி, தேர்ச்சி மேம்படுத்தல், பயிற்சி, தலைமைத்துவ அபிவிருத்தி என்பவற்றை ஒன்றிணைக்கின்ற எமது முழுமையான அணுகுமுறையானது 2024 இல் நாம் சாதித்துள்ள நிதியியல் செயலாற்றத்தை அடைந்த அர்ப்பணிப்புமிக்க வாடிக்கையாளரை மையப்படுத்திய செயலாற்றமாக இயல்பாகவே மாற்றுகின்ற ஊழியர் நல்வாழ்வை உச்சமடையச் செய்கின்றது. சிறந்த ஆற்றல் படைத்தோரை கவர்ந்து, தக்கவைத்து நாம் பல்வேறு வகையான மனிதவள முன்முயற்சிகள், நலனோம்புகை வழிமுறைகளூடாக தொழில் முன்னேற்றம் மற்றும் தனிப்பட்ட அபிவிருத்திக்காக எமது அணியில் தொடர்ச்சியாக முதலீடு செய்கின்றோம். சிறப்பாக வெகுமதியளிக்கின்ற கட்டமைக்கப்பட்ட பயிற்சியினூடாக இடைவெளிகள் தீர்க்கப்படுகின்ற தேவையான செயலாற்றல் வழிமுறைகளில் அணியினரை முக்கிய செயலாற்ற குறிகாட்டிகள் தெளிவாக வழிநடாத்துகின்றன.

## பூட்கை உடமையாளர் பெறுமதி

வாடிக்கையாளர்களின் பரிணாமவளர்ச்சியடைகின்ற தேவைகளை நிறைவேற்றுகின்ற ஸ்ரீ லங்கா ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடெடின் கடமைப்பொறுப்பானது எமது நிதியியல் செயலாற்றத்தினூடாக சான்றாக விளங்குகின்றது. அனைத்தையும் உள்ளடக்கிய மற்றும் தேவையுடன் தொடர்புடைய உற்பத்தி தொகுப்புடன் ஒன்றிணைக்கப்பட்டு உன்னதமான வாடிக்கையாளர் சேவையினை வழங்கி, நாம் கோரல் கொடுப்பனவுகளில் ரூ. 10.5 பில்லியனை பகிர்ந்தளித்ததன் மூலம் 2024 இல் எமது பூட்கை உடமையாளர் பெறுமதி வழங்குவதை எடுத்துக்காட்டி உரிய கால தீர்ப்பனவுகளையும் பூட்கை உடமையாளர் பாதுகாப்பையும் உறுதி செய்தோம்.

## விநியோகத்தர் பெறுமதி

5000இற்கும் மேற்பட்ட காப்புறுதி ஆலோசகர்கள், வங்கிப் பங்காளர்கள் மற்றும் தரகுநிறுவனங்கள் 2024 இல் 1.4 மில்லியன் இலங்கையர்களுக்கு மேல் பாதுகாப்பினை வழங்குவதில் எம்முடன் உற்சாகத்துடன் பங்காளியானர். இது எமது கம்பனியின் வரலாற்றில் நிதியியல் செயலாற்றத்தில் சிறந்த ஆண்டுகளில் ஒன்றாகவிருந்தது.

## எதிர்கால நோக்கு

முன்னணி தொழில்நுட்ப காப்புறுதி வழங்குனராக தோற்றம்பெறுவதற்கு கம்பனி நன்கு நிலைநிறுத்தப்பட்டு, சமூக விழிப்புணர்வினை வலியுறுத்துகின்ற அதேவேளை பாதுகாப்பினை வழங்குவதற்கும் இடர்நேர்வுகளை முகாமைசெய்வதற்கும் முக்கியமாக இருக்கின்ற வலுவான வாடிக்கையாளர் ஈடுபாட்டினை பேணுகின்றது. முன்னோக்கி சென்று நாம் தரவுகளினால் இயக்கப்படும் இடர்நேர்வு மதிப்பீடுகள், கணிப்பீட்டு செம்மை மற்றும் முன்கணிப்பு பகுப்பாய்வினை கூட்டிணைக்கின்ற முன்னேற்றகரமான காப்பீட்டு மாதிரிகள் மீது கவனம் செலுத்துவதற்கு திட்டமிடுகின்றோம். இம்முயற்சிகள் வெளிப்படையான, வினைத்திறன் மிக்க மற்றும் வாடிக்கையாளர் கவனம் செலுத்தப்பட்ட காப்புறுதி தீர்வுகளை கொண்டு சேர்ப்பதற்கு எம்மை இயலச்செய்து எமது சேவை உன்னதத்தையும் வாடிக்கையாளர் நம்பிக்கையையும் மேலும் வலுப்படுத்தும்.

அரசுக்கு சொந்தமான நிறுவனம் என்ற வகையில் நாம் இலங்கையினை மீள கட்டியெழுப்புவதற்கான அரசாங்கத்தின் பணியுடனும் டிஜிட்டல் உட்கட்டமைப்பை முன்னேற்றுவதற்கான அதன் நோக்கங்களுடனும் கம்பனி அணி சேர்ந்திருப்பதற்கு உறுதிபூண்டு தேசத்தின் அபிவிருத்திக்காக வரிக் கொடுப்பனவுகள் மற்றும் அரசாங்க அறவீடுகள் வாயிலாக குறிப்பிடத்தக்களவு பங்களிக்கின்றோம். இலங்கையின் பொதுக் காப்புறுதி சந்தையில் முன்னணி நிறுவனமாக நாம் நாட்டில் தற்போதைய மற்றும் எதிர்கால தலைமுறையினர்களுக்காக வளம்பெறத்தக்க மற்றும் நிலைபெறத்தக்க வியாபார முயற்சியொன்றினை தொழில்படுத்துவதற்கும் எமது நிலையினை தொடர்ந்தும் வளர்ச்சியடையச் செய்தும் விரிவடையச் செய்தும் எமது வெளிநாட்டில் ஊடுருவல்களை மேம்படுத்துவோம்.

## பாராட்டுதல்

முடிவுரையாக, அர்ப்பணிப்புடனும் சுறுசுறுப்புடனும் எமது வெற்றிக்கும் நிலைபெறுதன்மைக்கும் பங்களித்த அனைவருக்கும் நன்றி கூறுகின்றேன். அலுவலர்களுக்கு இடையூறின்றி தங்குதடையற்ற வேறுபடுத்தலுக்கு உதவிய பணிப்பாளர் சபைக்கும் குழும பிரதம நிறைவேற்று அலுவலருக்கும் அத்துடன் இணங்குவித்தல் சிக்கல்களில் எமக்கு மிகவும் உதவியளித்த ஒழுங்குபடுத்துனர்களுக்கும் எனது இதயம் கனிந்த நன்றியினை தெரிவிக்கின்றேன்.

வியாபாரத்தின் சக்கரங்களை சுழலச் செய்வதற்கு உதவிய எமது முகவர்களுக்கும் அத்துடன் அவர்களின் அர்ப்பணிப்பக்கும் கடமைப்பொறுப்புக்கும் எமது அலுவலர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகும். தீவுமுழுவதும் இலங்கையின் சனத்தொகையின் பாரியளவிலான நிலைபேறான நீண்டகாலத்திற்கு பெறுமதியினை கொண்டு சேர்ப்பதற்கு எமக்கு தூண்டுதல் அளிப்பதில் நம்பிக்கையினை உட்பதியச்செய்த எமது வாடிக்கையாளர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகும்.



**நுசித் குமாரதுங்க,**
தலைவர்
03 யூன் 2025

# குழும பிரதம நிறைவேற்று அலுவலரின் மீளாய்வு

“2024 ஆம் ஆண்டானது ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கம்பனி ஜெனரல் லிமிடட் நிறுவனத்திற்கு இன்றியமையாத பரிணாம வளர்ச்சியினை அடையாளப்படுத்தி, சட்ட ரீதியான வேறாக்கலை அடைந்து மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணத்தில் 9.5% அதிகரிப்புடன் ஆற்றல் வாய்ந்த நிதியியல் செயலாற்றத்தினை எடுத்துக்காட்டுகின்றது. உபாய ரீதியான முதலீடுகள் மற்றும் வாடிக்கையாளரை மையப்படுத்துவது மீது அயராது கவனம் செலுத்துதல் என்பவற்றினூடாக நிலைபேறான வளர்ச்சிக்காக நாம் உறுதிபூண்டு, தொடர்ச்சியான சந்தை தலைமைத்துவத்தையும் தேசிய அபிவிருத்தி இலக்குகளுடன் அணிசேர்ந்திருப்பதையும் உறுதி செய்கின்றோம்.”



2024 இன் ஆரம்பத்தில் முறையான வேறுபடுத்தலின் பின்னர் சுயாதீனமாக ஆளப்படுகின்ற சட்ட ரீதியான நிறுவனமொன்றாக நாம் மாறுதலடைந்தமையினால் எமது பயணத்தில் குறிப்பிடத்தக்க மைல்கல் ஒன்றை அடையாளப்படுத்திய ஆண்டான ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோபரேஷன் ஜெனரல் லிமிடட்டின் (ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட்) ஆண்டறிக்கை 2024 இற்கு பிரதம நிறைவேற்று அலுவலரின் மீளாய்வினை வழங்குவது கௌரவமளிக்கின்றது. இம்மாற்றம் புதுப்பிக்கப்பட்ட உபயரீதியான மையப்படுத்தலை எமக்கு வழங்கி, எமது தொழிற்பாடுகளை நெறிப்படுத்தி எமது சந்தை பிரசன்னத்தை வலுப்படுத்துவதையும் சுறுசுறுப்பும் தாக்குப்பிடிக்கும் தன்மையுடன் வளர்ச்சியினை தூண்டுவதற்கும் எம்மை இயலச்செய்தது. ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் 2024 பெப்ரவரியில் தனியாக இயங்கும் கம்பனியாக தொழிற்பாடுகளை தொடங்கிய போதும் இவ்வறிக்கையானது இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் கீழ் முன்னைய ஆண்டின் போதான ஒத்திசைவையும் ஒப்பீட்டினையும் உறுதிசெய்வதற்கு பொதுக் காப்பறுதி வியாபாரத்தின் முழு ஆண்டுக்குமான செயலாற்றத்தினை பிரதிபலிக்கின்றது.

## நிதியியல் செயலாற்றமும் வளர்ச்சியும்

ஜெனரல் இனஷூரன்ஸ் லிமிடட் 2024 இல் வலிமையான நிதியியல் செயலாற்றத்தினை வழங்கி, சிக்கலான மற்றும் பரிணாம வளர்ச்சியடைகின்ற பேரண்டப் பொருளாதார சூழலுக்கு மத்தியில் அதன் சந்தைத் தலைமைத்துவத்தையும் தாக்குப்பிடிக்கும் தன்மையையும் மீளவலுப்படுத்தியது. கம்பனி ரூ. 4 பில்லியன் கொண்ட வரிக்கு முந்திய இலாபத்தினையும் ரூ 3.3 பில்லியன் கொண்ட வரிக்கு பிந்திய இலாபத்தையும் பதிவுசெய்து, ஆற்றல்வாய்ந்த நிதியியல் முகாமைத்துவத்தையும் மையப்படுத்திய உபாய நிறைவேற்றத்தையும் பிரதிபலித்தது. எமது மொத்த பதிவு செய்யப்பட்ட கட்டுப்பணம் ஆண்டுக்காண்டு 9.5% அதிகரிப்புடன் ரூ. 25.3 பில்லியனாக வளர்ச்சியடைந்து 19.4% கொண்ட சந்தைப் பங்கினை பெற்று தொழிற்துறை சராசரிகளையும் விஞ்சிக் காணப்பட்டது.

சொத்துத்தளம் 51.1 பில்லியனாக விரிடைந்து, இலங்கையின் நிதியியல் ரீதியாக மிகவும் உறுதியான காப்புறுதி வழங்குனர்களில் ஒன்றாக எமது நிலையினை மேலும் மீள் வலிமைப்படுத்தியது. வலுவான கோரல் கொடுப்பனவு இயலுமையினை கம்பனி தொடர்ந்தும் பேணி 2024 இல் ரூ. 10.5 பில்லியன் கொண்ட மொத்த கோரல் தீர்ப்பனவை மேற்கொண்டு உறுதியான நம்பகத்தன்மையையும் வாடிக்கையாளரை மையப்படுத்திய கவனம் செலுத்தலையும் பிரதிபலித்தது.

முறையே ரூ. 14.2 பில்லியன் மற்றும் ரூ. 11.1 பில்லியன் கொண்ட மொத்த பதியப்பட்ட கட்டுப்பணத்தை ஈட்டிய மோட்டார் அல்லது மோட்டார் அல்லாத சொத்துப்பட்டியல்கள் இரண்டினதும் சமநிலையான பங்களிப்புகள் எமது நிதியியல் செயலாற்றத்திற்கு துணையளித்தன. மோட்டார் சொத்துப்பட்டியல் அதன் சந்தை தலைமைத்துவத்தை தக்கவைத்த அதேவேளை மோட்டார் அற்ற தொழில் ஆண்டுக்காண்டு 15.3% அதிகரிப்புடன் தொழிற்துறை வளர்ச்சியினை விஞ்சிச் சென்றது. பன்முகப்படுத்தப்பட்ட இடர்நேர்வு தீர்வுகளும் உபாய ரீதியான பரம்பல் விரிவுபடுத்தலும் இதற்கு தூண்டுதல் அளித்தன. கடுமையான காப்பீட்டு கட்டுப்பாடுகள், மேம்பட்ட டிஜிட்டல் இயலளவுகள் மற்றும் முன்மதிமிக்க மீள்காப்புறுதி உபாயங்கள் என்பன சிறந்த பெறுபேறுகளுக்கு மேலும் துணையளித்து சிக்கலான பொருளாதர தோற்ற அமைப்பிலும் கூட பங்குடமையாளர் பெறுமதியினை உருவாக்குவதற்கு தொடர்ந்தும் எமது இயலுமையினை உறுதிசெய்தன.

## உபாய முன்னுரிமைகள்

2024இல் எமது உபாயம் 5 முக்கிய முன்னுரிமைகளை அதாவது தேறிய எழுதப்பட்ட கட்டுப்பண வளர்ச்சியினை தூண்டுதல், இணைந்த தொழிற்பாட்டு வீதத்தினை மேம்படுத்துதல், சேவையின் தரத்தினை அதிகரித்தல், வாடிக்கையாளர் தக்கவைத்தலை உச்சப்படுத்துதல் மற்றும் மனித மூலதனத்தினை உகப்பாக்கம் செய்தல் என்பவற்றை மையப்படுத்தியிருந்தது. இம்முன்னரங்குகள் முழுவதும் நாம் கணிசமான முன்னேற்றத்தினை ஏற்படுத்தினோம். மேம்பட்ட தொழிற்பாட்டு வினைத்திறன் மற்றும் டிஜிட்டல் ரீதியான ஒருங்கிணைப்பு என்பவற்றுடன் ஒருங்கிணைந்து மொத்த பதியப்பட்ட கட்டுப்பணத்தில் 9.5% வளர்ச்சி எமது சந்தை தலைமைத்துவத்தை 19.4% பங்கை பேணுவதற்கு எம்மை இடம்பெறச்செய்து. லோயல்டி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடக்கம் 24/7 டிஜிட்டல் சேவை வழங்கல் வரை பலவகையான எமது வாடிக்கையாளரை மையப்படுத்திய முயற்சிகள் உறுதியான உறவுகளை கட்டியெழுப்புவதற்கும் தக்கவைத்தலை மேம்படுத்துவதற்கும் எமக்குதவின. இச்சாதனைகள் தொடர்ச்சியாக மேம்படுத்தும் கலாசாரம், ஆற்றல் வாய்ந்த ஆளுகை மற்றும் நீண்டகால பெறுமதி உருவாக்கம் கவனம் செலுத்துகின்ற வலுவூட்டப்பட்ட அணியினர் மூலம் ஆதரவு பெற்றுக்கொண்டது.

## மாறுதலடையச் செய்யும் தொழில்நுட்பமும் டிஜிட்டல்மயப்படுத்தலும்

2024இல் ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் வாடிக்கையாளர் அனுபவத்தையும் தொழிற்பாட்டு வினைத்திறனையும் மேம்படுத்துவதற்கு செயற்கை நுண்ணறிவு மற்றும் தன்னியக்கப்படுத்தல் என்பவற்றை பின்பற்றுவதன் மூலம் அதன் டிஜிட்டலுக்கு முதலிடம் உபாயத்தினை முன்னேற்றியது. நாம் எமது மோட்டார் காப்புறுதி மெய்நிகர் பரிசோதனை முறைமையினை தரமுயர்த்தி சுயசேவை இயலளவுகளைக் கொண்டு விரைவான செயன்முறைப்படுத்தலுக்கு வலுவூட்டுவதையும் இயலச்செய்தது. கோரல் மதிப்பீடு, காப்பீடு, வாடிக்கையாளர் உதவி என்பவற்றில் செயற்கை நுண்ணறிவுக் கருவிகள் பணிக்கமர்த்தப்பட்டு செம்மை, ஒத்திசைவு என்பவற்றை உறுதி செய்ததுடன் செயன்முறைப்படுத்தல் நேரத்தையும் குறைத்தது. நிகழ்நேர கோரல் கண்டறிதல். டிஜிட்டல் பூட்கை வழங்கல், வட்சப் போன்ற அரட்டை தளங்கள் ஊடான சேவை என்பன தங்குதடையற்ற வாடிக்கையாளர் இடைத்தொடர்புகளை இயலச்செய்து காப்பறுதி சேவையை இலகுவாக பெறத்தக்கதாக்கியது. இவ் டிஜிட்டல் புத்தாக்கங்கள் திருப்தி, வெளிப்படைத்தன்மை மற்றும் ஒட்டுமொத்த ஈடுபாடு என்பவற்றை குறிப்பிடத்தக்களவு மேம்படுத்தின.

## உற்பத்தி மேன்மை

ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோபரேஷன் ஜெனரல் லிமிடட் “மோட்டார் பிளஸ்” எமது சொத்துப்பட்டியலில் உயர்தர உற்பத்தியாக திகழ்ந்து, 2024இல் ரூ. 14.2 பில்லியன் கட்டுப்பண வருமானத்தை வழங்கி 5.3% வளர்ச்சியை பதிவுசெய்தது. தொடர்ச்சியாக 6 ஆவது ஆண்டாக அதன் நேர்மைமிக்க பெறுமதி நிலை, வாடிக்கையாளரை மையப்படுத்திய அம்சங்கள் மற்றும் செவிசாய்க்கின்ற சேவை என்பவற்றின் பிரதிபலிப்பாக இலங்கையில் சந்தையின் முன்னணி வகிக்கின்ற மோட்டார் காப்பறுதி தீர்வாக அதன் நிலையினை தக்கவைத்தது. உற்பத்தியின் வலிமை எமது இறுதி இலாபங்களுக்கு கணிசமாக பங்களித்துள்ள அதேவேளை மிகவும் உயர்வான போட்டி மிக்க மோட்டார் காப்பறுதி துறையில் நம்பிக்கைமிக்க மற்றும் நம்பகமான காப்புறுதி வழங்குனராக எமது வர்த்தகநாமத்தை மீள வலுப்படுத்துகின்றது.

மோட்டார் பிளசின் வெற்றி அதன் அனைத்தையும் உள்ளடக்கிய காப்பீடு மற்றும் துரிதமான கோரல் பதிலிறுத்தல் மூலம் மாத்திரமன்றி ஆண்டின் போது அறிமுகப்படுத்தப்பட்ட சிந்தனை மிக்க மேம்படுத்தல்கள் மூலமும் தூண்டப்பட்டது. 2024 இல் நாம் லோயல்டி நிகழ்ச்சித்திட்டங்கள், பிரத்தியேகமான வணிகக் கழிவுகள் மற்றும் இணை-வர்த்தகநாமம் இடப்பட்ட சேவை மேம்படுத்தல்கள் என்பவற்றைக் கொணடு உற்பத்தியினை வலுப்படுத்தினோம். மரபுசார்ந்த காப்புறுதியையும் தாண்டிச் செல்கின்ற முழுமையான வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்குவதற்கான எமது கடமைப்பொறுப்பினை இச்செயல்திறன் பிரதிபலிக்கின்றன. துரிதமான உற்பத்தி பரவல் மீதான எமது தொடர்ச்சியான மேம்பாட்டு உபாயத்திற்கமைவாக நாம் ஒட்டுமொத்தமாக புதிய உற்பத்திகளை தொடங்குவதை விடவும் மையப் படைப்புகளை சீர்மை செய்வதன் மீது கவனம் செலுத்தினோம். பரிணாம வளர்ச்சியடைகின்ற வாடிக்கையாளர் எதிர்பார்க்கைகளுடன் நாம் அணி சேர்ந்திருக்கின்ற அதேவேளை நீண்டகால காப்புறுதி பூட்கை உடமையாளர் பெறுமதி மற்றும் ஈடுபாட்டை மேம்படுத்துவதை இவ்அணுகுமுறை உறுதி செய்தது.

## பூட்கை உடமையாளர்களுக்கு பெறுமதியினை கொண்டுசேர்த்தல்

பூட்கை உடமையாளர்களுக்கு ஆக்கபூர்வமான பெறுமதியினை கொண்டுசேர்ப்பதற்கான எமது கடமைப்பொறுப்பு 2024இல் எமது தொழிற்பாடுகளின் மையமாக விளங்கியது. துரிதமான தீர்ப்பனவுகளுக்காக கோரல் செயன்முறைகளை சீரமைத்தல், பூட்கை சேவைகளுக்கு 24/7 டிஜிட்டல் பெறுவழி மற்றும் வட்ஸ்சப் அத்துடன் மெட்டா போன்ற தளங்கள் ஊடாக வலுவூட்டப்பட்ட ஈடுபாடு என்பன உள்ளடங்கலாக பல்வகை சேவை மேம்படுத்தல்களை நாம் அறிமுகப்படுத்தி மிகுந்த அணுகலையும் பதிலிறுத்தலையும் உறுதிசெய்தோம். தீவு முழுவதும் நம்பியிருக்கத்தக்க கோரிக்கை ஆதரவினை பூட்கை உடமையாளர்களுக்கு வழங்குவதன் மூலம் இக்கட்டான தருணங்களின் போது எமது வாக்குறுதியினை தொடர்ந்தும் நாம் நிறைவேற்றினோம். இதற்கு மேலதிகமாக, லோயல்டி நிகழ்ச்சித்திட்டங்கள் நீண்டகாலம் வாடிக்கையாளர்களாக இருப்பவர்களுக்கு பிரத்தியேகமான நன்மைகளை வழங்கின, ஆழமான உறவுகளை பேணிவளர்த்து, நம்பிக்கையினை மீளவலுப்படுத்தியது. ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோபரேஷன் ஜெனரல் லிமிட்டட்டுடனான அவர்களது பயணம் முழுவதும் வாடிக்கையாளர் உரியகாலத்தில் ஆதரவு, வெளிப்படைத்தன்மை மற்றும் பெறுமதியினை வாடிக்கையாளர்கள் பெற்றுக்கொள்வதை உறுதிசெய்த விதத்தில் ஒட்டுமொத்த அனுபவத்தையும் மேம்படுத்துவதற்கு ஒவ்வொரு முயற்சியும் வடிவமைக்கப்பட்டிருந்தது.

## நிறுவன ஆளுகையும் இணங்குவித்தலும்

ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட், நேர்மை, பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மை என்பவற்றைக் கொண்ட வலுவான கலாசாரமொன்றினூடாக ஒழுக்கம் சார்ந்த வியாபார நடத்தைகளை நிலைநாட்டுகின்றது. அனைத்து வாடிக்கையாளர் தொடர்பு மையங்களிலும் தொழில்சார் நடத்தையினை உறுதி செய்வதற்காக கிரமமான பயிற்சி மற்றும் கண்காணித்தல் என்பவற்றுடன் நன்கு தாபிக்கப்பட்ட நடத்தைக் கோவையொன்றின் மூலம் அனைத்து ஊழியர்களும் விற்பனை குழுக்களும் வழிநடாத்தப்படுகின்றனர். மனிதவள துணைக்குழு மற்றும் உள்ளக கணக்காய்வுகள் மூலமான மேற்பார்வையானது ஒழுக்கநெறி மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் நியமங்கள் என்பவற்றுடனான இணங்குவித்தலை மேலும் வலுப்படுத்துகின்றது. சேவை வழங்குவதிலும் வாடிக்கையாளர் நம்பிக்கையை பேணி வளர்ப்பதிலும் ஒத்திசைவினை பேணுவதற்கு இவ் வழிமுறைகள் உதவுகின்றன.

நிறுவன ஆளுகை பரிபாலனத்தில் இடர்நேர்வு முகாமைத்துவம்முக்கிய தூணாக விளங்குவதுடன் உபாய. நிதியியல், தொழிற்பாட்டு, ஆபத்து இடர்நேர்வுகளை தீர்ப்பதற்கு அனைத்தையும் உள்ளடக்கிய இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பொன்றினை ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் பின்பற்றுகின்றது. தொழிலின் அளவு மற்றும் சிக்கல்நிலை என்பவற்றுக்கு விகிதசமமாக செயல்திறன் வாய்ந்த கட்டுப்பாடுகள் செயற்பாட்டில் இருப்பதை இடர்நேர்வு முகாமைத்துவக் குழு உறுதி செய்கின்றது. காப்பீட்டு நடைமுறைகள், இடர்நேர்வு தெரிவு மற்றும் இணங்குவித்தல் மீதான வலுவான வலியுறுத்தலுடன் கூடிய சிறந்த தொழில்நுட்ப நியமங்கள், தரவு நுண்நோக்குகள் மற்றும் சந்தையுடன் அணிசேர்ந்துள்ள விலையிடல் என்பன மூலம் இயக்கப்படுகின்றன. நிதியியல் தாக்குப்பிடிக்கும் தன்மையையும் நீண்டகால உறுதிப்பாட்டையும் அதிகரிப்பதற்கு மீள் காப்பறுதி ஏற்பாடுகள் இவ் நடைமுறைகளுக்கு முழுமையளிக்கின்றன.

## எமது மக்கள்

அர்ப்பணிப்புமிக்க, நன்கு பயிற்றப்பட்ட அத்துடன் சிறந்த தேர்ச்சிபெற்ற தொழில்சார் நிபுணர்களைக் கொண்ட எமது அணி தொழிற்துறைக்கு குறிப்பான ஒழுங்குமுறைப்படுத்தல் மூலம் வழங்கப்பட்ட விழுமியங்களுக்கும் நெறிமுறைகளுக்கும் உட்பட்டு உன்னதமான வாடிக்கையாளர் சேவையினை வழங்குவதற்கு அர்ப்பணித்துள்ளது. ஆண்டின் ஆரம்ப பகுதியில் மூளைசாலிகளின் வெறியேற்றம் சவால்மிக்கதாகவிருந்த போதிலும், எமது வாடிக்கையாளர்களுக்கு இடையூறுகளற்ற சேவையினை வழங்குவதற்கு புதிய ஆட்சேர்ப்புக்கள் எமது அணிக்கு வலிமை சேர்த்தன. பலவகையான மனிதவள கொள்கைகளும் நடைமுறைகளும் தொழில் முன்னேற்றத்திற்கும் தனிப்பட்ட அபிவிருத்திக்குமான வாய்ப்புகளுடன் மகிழ்ச்சியான, பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான பணியிடமொன்றாக ஜெனரல் இனஷூரன்ஸ் லிமிடட் நிறுவத்தை உறுதிசெய்கின்றன.

## நிலைபெறு தன்மையும் நிறுவன சமூகப்பொறுப்பும்

நிலைபெறுதன்மை என்பது ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் தொழிற்பாடுகளில் வழிகாட்டுகின்ற கோட்பாடொன்றாக விளங்கி, உபாய ரீதியான திட்டமிடல் தொடக்கம் நாளாந்த நிறைவேற்றல்கள் வரை தீர்மானங்களில் செல்வாக்குசெலுத்துகின்றன. 2024 இல் தகவல் பாதுகாப்புக்காக ISO/IEC /27001:2023, தரமுகாமைத்துவத்திற்காக ISO9001:2015 மற்றும் பச்சை வீட்டு உறுதிப்படுத்தலுக்காக ISO14062-01:2018 போன்ற சான்றுப்படுத்தல்கள் உடாக உலகளாவியளவில் அங்கீகரிக்கப்பட்ட தரநியமங்களை நாம் நிலைநாட்டினோம். சுற்றாடலை பாதுகாத்தல் மற்றும் பொறுப்புமிக்க ஆளுகை என்பவற்றுக்கான எமது கடமைப்பொறுப்பினை இச்சான்றுபடுத்தல்கள் எடுத்தியம்புகின்றன. நிறுவனம் முழுவதும் இரத்ததானம் போன்ற நிறுவன சமூக பொறுப்பு முன்முயற்சிகளில் உற்சாகமாக பங்கேற்பதனூடாக ஊழியர் விழிப்புணர்வு வலுப்படுத்தப்பட்டு சமூக பொறுப்பைக் கொண்ட கலாசாரமொன்றை பேணிவளர்ப்பதற்கு தூண்டுதலளிக்கின்றது. டிஜிட்டல் செயன்முறைகளுக்கான எமது நகர்வு கடதாசி பாவனையையும் கழிவையும் குறைவடையச் செய்து எமது தொழிற்பாடுகள் மிகவும் சுற்றாடல் சிநேகமிக்கதாக தொழிற்பாடுகளை நீண்டகால நிலைபெறத்தக்க இலக்குகளுடன் அணிசேர்ந்துள்ளது.

ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் 2024 இல் முக்கிய சமூக முன்முயற்சிகள் ஊடாக சமூகத்தை தரமுயர்த்துவதற்கு செயலாக்கம் மிக்க வகிபாகத்தை ஆற்றியது. கல்வி அமைச்சுடனான கூட்டுமுயற்சியுடன் சுரக்ஷா காப்புறுதி திட்டத்தை முகாமைசெய்வதன் மூலம் தேசிய கல்வித் துறைக்கு நாம் ஆதரவளித்து, இலங்கை முழுவதுமுள்ள பாடசாலை மாணவர்களுக்கு காப்புறுதிக் காப்பீட்டினை வழங்கினோம். கல்விக்கும் பிள்ளைகளுக்கும் பாதுகாப்பளிப்பதற்கான எமது கடமைப்பொறுப்பினை இம்முயற்சி மீளவலுப்படுத்துகின்றது. அழிவுமிக்க வெள்ளப்பெருக்குகள் ஏற்பட்ட போது நாம் கம்பஹா, இரத்தினபுரி மற்றும் மாத்தறை பிரதேசங்களில் பாதிக்கப்பட்ட 1,100 மேற்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகளை வழங்குவதற்கு அனர்த்த முகாமைத்து நிலையத்துடன் கூட்டிணைந்தோம். அலுவலர்களை முன்னணியாக கொண்ட எமது வருடாந்தஇரத்த தானமும் தேசிய சுகாதாரக் கவனிப்பு சேவைகளுக்கு ஆதரவளிப்பதிலும் ஊக்கமும் குடியியல் பொறுப்பும் கொண்ட கலாசாரத்தை வளர்ப்பதிலும் எமது வகிபாகத்தை அடிக்கோடிட்டு காட்டுகின்றன.

## எதிர்கால நோக்குகள்

மைற்கல் சாதனையொன்றுடன் நாம் பாராட்டத்தக்க ஆண்டினை கடந்துள்ளோம். அதிகரித்தளவில் இயக்கவாற்றலும் போட்டியும் மிக்க காப்பறுதிச் சூழலில் எமது சந்தை தலைமைத்துவத்தை பேணுவதற்காக் ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் அதன் மைய வலிமைகளில் தொடர்ந்தும் அனுகூலம் அடைகின்ற அதேவேளை, வளர்ந்து வருகின்ற சந்தைத் தேவைகளை நிறைவுசெய்வதற்கு படிப்படியாக வளர்ச்சியடைகின்றது. அனைத்து வாடிக்கையாளர் தொடர்பு மையங்கள் முழுவதும் சேவை உன்னதத்தை மேம்படுத்துவதன் மீதான கவனம் செலுத்தலுடன் புத்தாக்கமிக்க, வாடிக்கையாளரை மையப்படுத்திய காப்புறுதி தீர்வுகள் மீது கம்பனி வலுவான வலியுறுத்தலை இடம்பெறச் செய்கின்றது. இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளை வலுப்படுத்தி, தற்போது இடம்பெறுகின்ற டிஜிட்டல் மாறுதலூடாக தொழிற்பாட்டு ரீதியான வினைத்திறன்களை தூண்டுவதன் மூலம் ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் மாறுதலடைகின்ற சூழலில் தாக்கப்பிடிக்கும் தன்மையினையும் சுறுசுறுப்பையும் உறுதிசெய்கின்றது. ஒழுக்கமிக்க செலவு முகாமைத்துவம் மற்றும் மேம்படுத்தப்பட்ட வியாபார வினைத்திறன்கள் ஊடாக தொழிற்பாட்டு செயற்திறனை உயர்த்துவதன் மீதும் நாம் கவனம் செலுத்துகின்றோம். உபாய ரீதியான கூட்டு முயற்சிகளும் பங்குடமைகளும் சந்தை அடைவினை வரிவுபடுத்துவதிலும் புதிய இயலளவுகளை அணுகுவதிலும் முக்கிய வகிபாகத்தை ஆற்றுகின்றன.

சுறுசுறுப்பு, பொறுப்புக்கூறல் மற்றும் செயலாற்றுகை கலாசாரமொன்றை மனதிற் பதியச்செய்கின்றமை தொழிற்துறை மாறுதல்களுக்கு செயலூக்கத்துடன் எதிர்வினையாற்றுவதற்கு கம்பனியை இயலச்செய்து இதனூடாக அதன் தலைமைத்துவ நிலையினை உறுதிப்படுத்தி அனைத்து பங்குடமையாளர்களுக்கும் உறுதியான பெறுமதியினை கொண்டுசேர்க்கின்றது.

2025 ஆம் ஆண்டையும் அதற்கப்பாலும் கவனம்செலத்தி ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் மோட்டார் மற்றும் மோட்டார் அற்ற துறைகள் இரண்டிற்கும் காப்புறுதி வழங்குனர் தெரிவொன்றாக அதன் நிலையினை மேலும் உறுதிப்படுத்துகின்ற அதேவேளை நிலைபேறான வளர்ச்சியினை அடைவதற்கு உறுதிபூண்டுள்ளது. முக்கிய உபாய முன்னுரிமைகளாக நிதியியல் உறுதிப்பாட்டை வலுப்படுத்தல், முன்னேற்றமடைந்த தொழிற்பாட்டு இயலளவுகளில் முதலிடுதல் என்றும் நிலைக்கும் நம்பிக்கை மற்றும் விசுவாசத்தை கட்யெழுப்புவதற்கு வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்தல் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. புத்தாக்கத்தையும் வினைத்திறனையும் தூண்டுகின்ற ஆக்கபூர்வமான உபாயரீதியான பங்குடமைகளை கம்பனி தொடர்ந்தும் நாடிச்செல்லும். நிறுவனத்தின் நீண்ட கால தொலைநோக்குடன் அணிசேர்ந்திருக்கும் தேர்ச்சிபெற்ற, எதிர்காலத்திற்கு தயாரான தொழிற்படையினை தயார்படுத்துவதை இலக்குடன் முயற்சிகளைக் கொண்டு ஆற்றல் படைத்தோரை விருத்தி செய்வது மைய கவனம் செலுத்தலாக அமைந்திருக்கும். இக்குறிக்கோள்கள் மூலம் வழிநடாத்தப்பட்டு ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் அதன் பங்குடமையாளர்களுக்கு தாக்கம்மிக்க பெறுபேறுகளை கொண்டுசேர்ப்பதற்கும் இலங்கையின் காப்பறுதி தொழிற்துறையின் முன்னேற்றத்திற்கு குறிப்பிடத்தக்களவு பங்களிப்பதற்கும் நன்கு நிலைபெற்றுள்ளது.

## பாராட்டுதல்கள்

தாக்கமிக்க மற்றுமொரு ஆண்டை நாம் நிறைவுசெய்வதனால் 2024இல் ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட்டின் தொடர்ச்சியான முன்னேற்றத்திற்கும் வெற்றிக்கும் பங்களித்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவிக்கின்றேன்.

எமது அர்ப்பணிப்பு மிக்க ஊழியர்களின் ஆர்வம், தொழில்சார் பண்பு மற்றும் ஏற்றதாகிக்கொள்ளும் பண்பு என்பவற்றுக்காக அவர்களுக்கு நன்றி கூறுகின்றேன். உங்களது அயராத முயற்சிகள் பலவகையான உற்பத்திகள் மற்றும் சேவைகள் முழுவதும் கவனிப்பு மற்றும் தேர்ச்சி அத்துடன் ஒத்திசைவு என்பவற்றைக் கொண்டு எமது வாடிக்கையாளர்களின் தேவைகளை நிறைவு செய்வதற்கு எம்மை இயலச்செய்தன.

எமது பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களுக்காக மிகவும் முக்கியத்துவம் மிக்கதான விடயமான பாதுகாப்பிற்காக எம்மீது வைத்த நம்பிக்கைக்காக நாம் மிகுந்த நன்றியினை தெரிவிக்கின்றோம். உங்களது நம்பிக்கை உறுதியான புத்தாக்கத்திற்கு எம்மைத் தூண்டி, எமது படைப்புகளையும் சேவை வழங்கலையும் மேம்படுத்தச் செய்கின்றது. நாடு முழுவதும் எமது சென்றடைவை விரிவுபடுத்துவதிலும் எமது சேவை இயலளவுகளை வலுப்படுத்துவதிலும் ஏதுவாகவிருந்து வருகின்ற அவர்களது கடமைப்பொறுப்புக்கும் பங்களிப்புக்கும் எமது விற்பனை அணியினர், தரகர்கள், முகவர்கள், மோட்டார் வாகன மதிப்பீட்டாளர்கள், வாகன திருத்துமிட பங்காளர்கள் மற்றும் நிறுவன இடையீட்டாளர்கள் உள்ளடங்கலாக எமது விநியோக வலையமைப்பிற்கு ஆற்றிய இன்றியமையாத வகிபாகத்தையும் நான் பாராட்டுகின்றேன்.

இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மற்றும் நிதி பொருளாதார உறுதிப்பாடு தேசிய கொள்கைகள் அமைச்சு என்பவற்றின் தொடர்ச்சியான வழிகாட்டலுக்கும் ஆதரவுக்கும் நாம் நன்றி கூறவேண்டும். அவர்களது ஆக்கபூர்வமான ஈடுபாடு பரிணாம வளர்ச்சியடைகின்ற ஒழுங்குபடுத்தல் சூழலில் நம்பிக்கையுடனும் தெளிவுடனும் தொழிற்படுவதற்கு எம்மை இயலச் செய்துள்ளது. இறுதியாக ஆண்டு முழுவதும் அவர்கள் வழங்கிய உறுதியான தலைமைத்துவம் உபாயரீதியான நோக்கு மற்றும் தளராத ஆதரவு என்பவற்றுக்காக தலைவருக்கும் பணிப்பாளர் சபைக்கும் எனது உண்மையான பாராட்டை தெரிவிக்க விரும்புகின்றேன். நோக்கம் மற்றும் நம்பிக்கையுடன் மாற்றத்தை வழிநடாத்துவதற்கு அவர்களது தொலைநோக்கு எமக்கு சக்தியளித்தது.

நாம் எதிர்காலத்தை நோக்குவதனால் புத்தாக்கம், தொழிற்பாட்டு உன்னதம் வாடிக்கையாளரை மையப்படுத்தல் என்பன மூலம் தூண்டப்பட்டு, இலங்கையில் மிகவும் நம்பிக்கையான மற்றும் தாக்குப்பிடிக்கும் தன்மைமிக்க பொதுக் காப்புறுதி வழங்குனராக எமது நிலையினை வலுப்படுத்துவதற்கு நாம் உறுதி பூண்டுள்ளோம்.



**சந்தன எல் அலுத்கம**
குழும பிரதம நிறைவேற்று அலுவலர்

03 யூன் 2025

# 03

# அறிக்கை பற்றிய முகக்குறிப்பு

**ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோபரேஷன் ஜெனரல் லிமிடட் “கம்பனி” 2024 பெப்ரவரியில் அதன் தொழிற்பாடுகள் வேறாக்கப்பட்டதிலிருந்து கம்பனியின் முதலாவது ஆண்டறிக்கையான அதன் 2024 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையினை சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம். 2024 டிசம்பர் 31 அன்று முடிவுற்ற ஆண்டுகாலப்பகுதியில் கம்பனியின் செயலாற்றம் பற்றி அனைத்தையும் உள்ளடக்கிய ஆயினும் சுருக்கமான கண்ணோட்டம் ஒன்றை இது வழங்குகின்றது. இவ்வறிக்கை எமது பெறுமதி உருவாக்கச் செயன்முறை மற்றும் உபாயங்களை விபரித்து நிதியியல், சமூக, சுற்றாடல், எமது தொழிற்பாட்டு சூழல் பற்றிய பின்னணியினுள் ஆளுகைத் துறைகள் என்பன முழுவதும் தொடர்புடைய தகவல்களை எடுத்துரைக்கின்றது. மேலும், எதிர்காலத்திற்கான முன்னோக்கிய நோக்கை வழங்கி எதிர்காலத்திற்கான எமது அபிலாசைகளை பகிர்ந்து நிதியியல் ஆண்டின் பொருளாதார யதார்த்தங்கள் மூலம் இவை எவ்வாறு நெறிப்படுத்தப்படக்கூடும் என்பதை அங்கீகரிக்கின்றோம்.**

அறிக்கையின் அடிப்படை நோக்கெல்லையானது துறைக்கு ஏற்புடைய சட்டங்களில் உள்ளடக்கப்பட்ட தகைமைப் பிரமாணங்களின் கீழ் பொதுக் காப்புறுதி உற்பத்திகளை வழங்குகின்ற கம்பனியின் மைய உபாயத்தினை உள்ளடக்குகின்றது. இவ்வறிக்கை கம்பனியின் உபாயம் மற்றும் தொழிற்பாடுகளின் விரிவான கண்ணோட்டத்தினை வழங்கி, ஒருங்கிணைந்த அறிக்கையிடல் நோக்கில் பல்வேறு தொழிற்பாடுகளுக்கிடையிலான இடைத்தொடர்புகளை ஒத்திசைவான விதத்தில் பிரதிபலிக்கின்றது. சிறந்த ஆளுகை மற்றும் நிலைபெறுதன்மை கோட்பாடுகள் மீது உருவாக்கப்பட்ட கம்பனியின் பெறுமதி உருவாக்கத்திற்கான அணுகுமுறை மற்றும் இவை எவ்வாறு நீண்டகாலத்தில் பொருளாதாரம், சுற்றாடல், சமூகம் எனபவற்றில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதையும் இது எடுத்துக்காட்டுககின்றது.

## நோக்கெல்லையும் வரம்புகளும்

இவ்வறிக்கையானது கம்பனியின் நிதிசார் மற்றும் நிதிசாரா செயலாற்றத்தை உள்ளடக்குகின்றது. 2023 டிசம்பர் 31 அன்று முடிவுற்ற நிதியாண்டுக்கான முன்னைய அறிக்கை மீது இது உருவாக்கப்பட்டு எமது தொழில் உபாயத்திலிருந்து தோன்றுகின்ற பல்வேறு இடர்நேர்வுகள் மற்றும் வாய்ப்புகள், பலவகை பங்குடமையாளர்கள், எமது வியாபார நடவடிக்கைகள் ஊடாக எவ்வாறு நாம் பெறுமதியினை உருவாக்குகின்றோம், பேணுகின்றோம் அல்லது இல்லாதொழிக்கின்றோம் என்பதை உள்ளடக்குகின்றது.

சிக்கல்வாய்ந்த இச்தொழில் உறவுகளை முகாமைசெய்வதையும் எமது வெற்றியினை வரைவிலக்கணம் செய்கின்ற முக்கிய விடயங்கள் மீது கவனம் செலுத்துவதையும் நாம் நோக்காக கொள்கின்றோம், அவையாவன:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எமது தொழில் மாதிரி – பக்கம் 38 | எமது உபாயம் – பக்கம் 44 | எமது தொழிற்பாட்டு பின்னணி – பக்கம் 46 | எமது முக்கிய பிரச்சினைகள் – பக்கம் 40 | நிதியியல் கூற்றுகள் அறிக்கையிடல் வரம்புடன் அணிசேர்ந்துள்ள எமது நிதியியல் அறிக்கையிடல் வரம்பு | எமது பங்குதாரர் உறவுகள் – பக்கம் 42 |

பொறுப்புக்கூறத்தக்க ஒருங்கிணைந்த அறிக்கையிடல் நடத்தைகள், பெறுமதி உருவாக்கம் மற்றும் வெளிப்படை மிக்க விதத்தில் எமது பங்குதாரர்களுடனான தொடர்பாடல் என்பவற்றுக்கான எமது கடமைப்பொறுப்பை பிரதிபலித்து, கம்பனியினதும் பரந்த சமூகத்தினதும் நிலைபெறுதன்மையை உறுதிப்படுத்துகின்ற 06 மூலதனங்களையும் அவற்றின் ஒன்றிணைந்த வெளியீட்டையும் உள்ளமைக்கின்ற சர்வதேச ஒருங்கிணைந்த அறிக்கையிடல் சபையின் கட்டமைப்புடன் தொடர்புடையது.

| | | |
|---|---|---|
| நிதியியல் மூலதனம் | தயாரிக்கப்பட்ட மூலதனம் | புலமைச்சொத்து மூலதனம் |
| மனித மூலதனம் | இயற்கை மூலதனம் | சமூக மற்றும் உறவு மூலதனம் |

அரசுக்கு சொந்தமான நிறுவனம் என்ற வகையில் அறிக்கையிடும் எமது அணுகுமுறையானது பின்வரும் முக்கிய கட்டமைப்புகள், தரநியமங்கள் மற்றும் வேறுபட்ட அறிக்கையிடல் பின்வரும் ஆட்சி எல்லைகளுக்கிடையிலான ஒழுங்குவிதிகள் என்பன மூலம் வழிகாட்டப்பட்டுள்ளது.

| ஒழுங்குபடுத்தல் | உள்ளக உத்தரவாதம் | வெளிவாரி உத்தரவாதம் |
|---|---|---|
| | நிதியியல் அறிக்கையிடல், ஆளுகை, இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் தொழிற்பாடுகள் | |
| இலங்கை கணக்கீட்டு நியமங்கள் | சபை கணக்காய்வு மற்றும் இணங்குவித்தல் குழுவுக்கு அறிக்கையிடல் | ஆண்டு நிதியியல் கூற்றுகள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதி நியாயமான உத்தரவாத்தை வழங்குகின்றார் 107 ஆம் பக்கத்தை பார்க்க |
| இலங்கையில் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களுக்கு ஏற்புடைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பு | | |
| நிறுவவன ஆளுகை ஒழுங்குவிதிகள் | | |
| | ஒருங்கிணைந்த அறிக்கையிடல் | |
| சர்வதேச ஒருங்கிணைந்த அறிக்கையிடல் சபையின் சர்வதேச கட்டமைப்பு | | |
| ஐக்கிய நாடுகள் நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகள் | | |

## முக்கியத்துவம்

கம்பனிக்கு முக்கியமாகவுள்ள பிரச்சினைகளை கட்டமைக்கப்பட்ட, நிறுவனம் முழுவதுமான முக்கியமான மதிப்பீட்டு செயன்முறை இனங்காண்கின்றது. இரட்டை முக்கியத்துவ கோட்பாட்டின் அடிப்படையில் இச்செயன்முறை கம்பனி மீதான சாத்தியமான விளைவுகளையும் மக்கள் மற்றும் சுற்றாடல் மீதான அதன் தாக்கங்களையும் தீர்க்கின்றது. மூலதனத்திற்கும் அத்துடன் அதன் பங்குதார்களுக்கு பெறுமதியினை வழங்குவதற்கும் பெறுமதி சீர்குலைவதை தடுப்பதற்குமான கம்பனியின் இயலுமைக்குமான இணைத்தொடர்பில் முக்கியத்தில் செல்வாக்கு செலுத்துகின்ற இடர்நேர்வுகள், வாய்ப்புகள், பேரண்ட பொருளாதார போக்குகள் மற்றும் வேறு கூறுகளை இம்மதிப்பீடு முறைமைசார்ந்து தீர்க்கின்றது. காப்புறுதிச் சேவை வழங்குனர் என்ற வகையில் முக்கிய பொருண்மிய நோக்குகளை இனங்காண்பதற்கு நாம் ஆற்றல்வாய்ந்த, நன்கு சிந்திக்கப்பட்ட மற்றும் முழுமையான அணுகுமுறையினை பிரயோகிக்கின்றோம். அறிக்கையில் 40 ஆம் பக்கத்தில் இது ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. செயலாற்றத்தை மேம்படுத்துவதற்கும் எமது நிலைபெறுதன்மை கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்கும் நாம் இப்பிரச்சினைகளை கவனமாக தீர்த்து, வலுவான ஆளுகை கோட்பாடுகளை கடைப்பிடித்து, எமது ஒழுங்குமுறைப்படுத்தல் இணங்குவித்தலூடாக பொறுப்புக்கூறலை எடுத்துக் காட்டுகின்றோம்.

## முன்நோக்கி எதிர்பார்கும் கூற்றுகளினதும் தரவுகளினதும் வெளியீட்டுக்காக உரிமைதுறத்தல்

இவ்வறிக்கை கம்பனியின் சாத்தியமான எதிர்கால செயலாற்றுகையின் எதிர்கால வாய்ப்புகள் தொடர்பில் முன்நோக்கிய கூற்றுகளை உள்ளடக்குகின்றது. எதிர்கால பெறுபேறுகளுக்கு உத்தரவாதங்கள் அல்ல என்பதுடன் எதிர்பாராத நிகழ்வுகள், தளம்பல் மிக்க பொருளாதாரம் மற்றும் அரசியல் நிலைமைகள் அத்துடன் எமது கட்டுப்பாட்டை தாண்டிய வேறு காரணிகள் உள்ளடங்கலாக பல்வேறு இடர்நேர்வுகளுக்கும் நிச்சயமின்மைகளுக்கும் இக்கூற்றுகள் உட்பட்டவையாகும். உண்மையான பெறுபேறுகள் தற்போதைய எதிர்பார்க்கைகளிலிருந்து குறிப்பிடத்தக்களவு வேறுபடலாம். அத்தகைய அனைத்து நோக்குகளிலும் தொழில்சார் ஆலோசனையை நாடுமாறு வாசகர்களுக்கு ஆலோசனை வழங்கப்படுகின்றது.

## பெறுமதி உருவாக்கம்

எமது பெறுமதி உருவாக்கச் செயல்முறையானது தொழில் மாதிரியில் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளது (38 ஆம் பக்கத்தை பார்க்க) மூலதனங்கள் முழுவதும் உள்ளீடுகள், வெளியீடுகள் பெறுபேறுகள் அத்துடன் பெறுமதி உருவாக்கத்தில் பொறுப்புமிக்க முகாமைத்துவம் என்பவற்றை அது விளக்குகின்றது. நிதியியல் மூலதனத்தை ஈட்டுதல் கம்பனிக்கான அத்துடன் அதன் பங்குதாரர்களுக்கு பெறுமதி உருவாக்கத்திற்கான நிதிசார் மற்றும் நிதிசாரா இடைத்தொடர்புகளுக்கு இடையில் சுயாதீனமான ஒத்திசைவின் மூலம் இயக்கப்படுகின்ற அதேவேளை செயன்முறையில் இம்மூலதனங்களை நுகர்கின்றது, விருத்தி செய்கின்றது மற்றும் மாறதலடையச் செய்கின்றது என்பதை ஒருங்கிணைந்த அறிக்கையிடல் ஊகிக்கின்றது.

## முன்னெச்சரிக்கை கோட்பாடு

எமது தொழிற்பாடுகளின் நீண்டகால வளம்பெறத்தக்க தன்மையினை உறுதி செய்வதற்கான முழுமையான சான்று அல்லது தகவல்கள் இல்லாதபோதும் கூட சாத்தியமான இடர்நேர்வுகளின் தணிப்பு நடவடிக்கையினை எடுப்பதன் மூலம் சமூக மற்றும் சுற்றாடல் தீர்மானம் மேற்கொள்ளலுக்கான எமது கடமைப்பொறுப்பாக நாம் முன்னெச்சரிக்கை கோட்பாடுகளை பயன்படுத்துகின்றோம். பொறுப்புமிக்க நிறுவன பிரசையொன்றாக நாம் தொழிற்படுவதற்கு இது எம்மை இயலச்செய்து, நாம் தாக்கம்செலுத்துகின்ற எமது பங்குதாரர்களையும் சூழலையும் மற்றும் சமூகத்தையும் பாதுகாக்கின்றது. முன்னெச்சரிக்கை கோட்பாடுகளை நடைமுறைப்படுத்துகின்றமை எமது தாக்குப்பிடிக்கத்தக்க தன்மையினை மீள வலுப்படுத்துகின்ற சவால்கள் மற்றும் புத்தாக்க தீர்வுகளை நாம் எதிர்பார்ப்பதற்கு எமக்குதவி எமது பங்குதாரர்கள் மத்தியில் நம்பிக்கையினை ஊக்குவிக்கின்றது.

## ஒன்றிணைந்த உத்தரவாதம்

ஒருங்கிணைந்த இவ்வறிக்கையில் பொதிந்துள்ள உள்ளடக்கத்திற்கான உத்தரவாதம் உள்ளக மற்றும் வெளிவாரி மூலங்களின் கவனமாக பரீட்சிக்கப்பட்ட ஒருங்கிணைப்பின் மூலம் மீள வலிமைப்படுத்தப்பட்டுள்ளது. இவ் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள் தொடர்புடைய வியாபார பிரிவுகளின் தலைவர்களிடமிருந்து அனுமதியினை பெற்றுள்ளதுடன் இறுதி அனுமதிக்காக பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிப்பதற்கு முன்னர் நிறுவன முகாமைத்துவ அணி மூலம் நுண்ணாய்வு செய்யப்பட்டுள்ளன. கணக்குகளுக்கான குறிப்புகள் உள்ளடங்களாக நிதியியல் கூற்றுகள் பற்றிய கட்டாய சுயாதீன மீளாய்வு இவ்வறிக்கையின் 116-165 பக்கத்தில் விபரிக்கப்பட்டுள்ள இலங்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளதுடன் அப்பக்கங்களில் தரப்பட்டள்ளன. இவ் வெளிவாரி உறுதிப்படுத்தலானது அறிக்கையில் எடுத்துரைக்கப்பட்ட நிதியியல் தகவல்களின் நம்பகத்தன்மையினையும் வெளிப்படைத்தன்மையினையும் வலுப்படுத்துகின்றது.

## சபையின் பொறுப்புடமைக் கூற்று

ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை 2024/2025 இல் அதன் செயலாற்றம் பற்றிய சமநிலையான நோக்கொன்றினை வழங்குகின்றதென்று உறுதிசெய்வதற்கு அதன் பொறுப்புடமையினை சபை ஏற்றுக்கொள்வதுடன் குறுகிய காலத்தில் பெறுமதியினை உருவாக்குவதற்கு கம்பனியின் இயலளவில் தாக்கத்தைகொண்டிருக்கக்கூடியதென அது நம்புகின்ற அனைத்து முக்கிய பிரச்சினைகளையும் அது மதிப்பிடுகின்றது என அபிப்பிராயப்படுகின்றது. முகாமைத்துவ அணி ஒருங்கிணைந்த ஆண்டறிக்கையினை தயாரித்து மீளாய்வுசெய்து அதிகார ஒப்படைப்புக்கமைவாக அனுமதிக்காக சபைக்கு அறிக்கைகளை பரிந்துரைக்கின்ற கணக்காய்வு குழுவுக்கு அதனை சமர்ப்பித்தது. அறிக்கை 2025 ஏப்பிரல் 28 அன்று சபையினால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

## வழிகாட்டுகின்ற கோட்பாடுகள்

எமது செயலாற்றம் மற்றும் தொழிற்பாடுகள் பற்றிய நம்பகமான மீளாய்வினை வழங்கும் பொருட்டு அறிக்கையை தயாரிக்கையில் பின்வரும் கோட்பாடுகள் பிரயோகிக்கப்பட்டன.

- **நம்பகத்தன்மை** – நிதி மற்றும் நிதிசாரா தகவல்கள் இரண்டினதும் நம்பகத்தன்மையினை வழங்குகின்ற உள்ளக கட்டுப்பாடுகளும் செயன்முறைகளும் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.
- **சுருக்கம்** – நாம் முழுமையான ஆனால் சுருக்கமான விதத்தில் அனைத்து முக்கியமான விடயங்களையும் உள்ளடக்கியுள்ளோம்.
- **உண்மையான எடுத்துரைத்தல்** – சாதகமான மற்றும் எதிர்மறையான பெறுபேறுகளின் அடிப்படையில் சமநிலைப்படுத்தப்பட்ட மீளாய்வு நம்பத்தகுந்த விதத்தில் அறிக்கையிடப்பட்டுள்ளது.
- **முக்கியத்துவம்** – முக்கிய கருமங்கள் பொறுப்புமிக்க விதத்தில் அடையாளப்படுத்தப்பட்டு அறிக்கையிடப்பட்டுள்ளது.
- **ஒருங்கிணைந்த அறிக்கையிடலை உறுதிசெய்தல்** – அறிக்கையிடுகின்ற பல்வேறு வகையான விடயங்களை ஒருங்கிணைப்பதற்கு உருக்கள் பயன்படுத்தப்பட்டு தகவல் பற்றிய தொடர்புகையினை வழங்குகின்றது.

## தகவல்கள் பற்றிய மீள்கூற்று

2024/2025 தொழிற்பாடுகள் தொடர்பில் வேறுவகையில் தொடர்புபட்டாலன்றி கடந்த ஆண்டில் கணக்காய்வு செய்யப்பட்டிருந்த நிதிசார் மற்றம் நிதிசார தகவல்களின் மீள்கூற்று எதுவும் காணப்படவில்லை.

## பின்னூட்டல்

அறிக்கைகளின் தரத்தை மேம்படுத்துவதற்கான அதன் முன்னெடுக்கப்படுகின்ற கடமைப்பொறுப்பின் பாகமாக இவ்வறிக்கை மற்றும் வேறு விடயங்கள் பற்றிய பங்குதாரர்களின் பின்னூட்டலை நாம் வரவேற்கின்றோம்.

**கம்பனிச் செயலாளர்**
ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோபரேஷன் ஜெனரல் லிமிடட்
ரக்ஷன மந்திரய – 21 வொக்ஷோல் வீதி கொழும்பு – 2
தொலைபேசி – + 94 11 2357 7471

# 04

# மூலோபாய கவனம்

38
வியாபார மாதிரி

40
பொருள் சார்ந்த சிக்கல்கள்

42
பங்குதாரர் ஈடுபாடுகள்

44
உபாய ரீதியான முன்னுரிமைகள்

# தொழில் மாதிரி

## தொலை நோக்கு

| உள்ளிட்டு மூலங்கள் | உள்ளீடுகள் |
|---|---|
| **பங்குடமையாளர்கள்**<br>100 % – இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம்<br>99.7% இலங்கை அரசாங்கத்தின் திசைசேரிக்கான செயலாளர் | **நிதியியல் மூலதனம்**<br>பங்குடமையாளர் நிதியங்கள் முதலீடுகள் |
| **வாடிக்கையாளர்கள்**<br>**1,400,446**<br>காப்பீட்டுக் கொள்கைகள் | **சமூக மற்றும் உறவு மூலதனம்**<br>**வாடிக்கையாளர்கள்**<br>உற்பத்தி ஏற்றுக்கொள்ளல்<br>கட்டுபணக் கொடுப்பனவுகள்<br>பூட்கைளை புதுப்பித்தல்கள் |
| **ஊழியர்கள்**<br>ஆண்கள் **1,122**<br>பெண்கள் **721**<br>மொத்தம் **1,843** | **மனித மூலதனம்**<br>வாடிக்கையாளர் இடைத்தொடர்புகள்<br>உற்பத்திறன்<br>சிறந்த நடத்தைகள்<br>விற்பனைக்கு பிந்திய சேவைகள், தொழிற்பாடுகள் |
| **தொழில் பங்காளர்கள்**<br>மீள்காப்புறுதி வழங்குநர்<br>முகவர்கள்/காப்புறுதி<br>தரகு முகவராண்மைகள் வங்கிகள்/<br>அலுவலக விநியோகங்களுக்கான<br>வழங்கல் சங்கிலி | **சமூக மற்றும் உறவு மூலதனம்**<br>தொழில் பங்காளர்கள்<br>உத்தரவாதச் சேவைகள்<br>கூட்டுமுயற்சி மற்றும் கூட்டணி<br>சேவை மற்றும் வழங்குநர்<br>உபயோகச் சேவைகள் |
| **வளாகங்கள்/கிளை வலையமைப்பு** | **தயாரிக்கப்பட்ட மூலதனம்**<br>ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்<br>தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம்<br>நிரந்தர சொத்துக்களில் ரூ. 147 மில்லியன் முதலீடு |
| **நிறுவனசார் அறிவு** | **புலமை சொத்து மூலதனம்**<br>கூட்டான நிபுணத்துவம்<br>நிறுவனசார் அறிவு<br>தரவுப் பகுப்பாய்வு<br>கணக்கெடுப்பில் கண்டறியப்பட்டவைகள் மற்றும் நடவடிக்கை |
| **சமுதாய இடைத்தொடர்பு** | **சமூக மற்றும் உறவு மூலதனம் –**<br>நிறுவன சமூக பொறுப்புச் செயற்பாடுகளில் முதலிடுதல் |
| **ஒழுங்குமுறைப்படுத்நர்கள் – இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, கம்பனிகள் பதிவாளர் திணைக்களம், நிதியில் உளவறிதல் பிரிவு – இலங்கை மத்திய வங்கி** | **சமூக மற்றும் உறவு மூலதனம்**<br>ஒழுங்குபடுத்துநர்கள் சட்டங்களை மற்றும் ஒழுங்குவிதிகளைக் கடைப்பிடித்தல் |
| **நுகர்வு** | **இயற்கை மூலதனம்**<br>சக்தி<br>மின்சாரம்<br>நீர் |

## பணி

### செயன்முறைகள்/செயற்பாடுகள்




*குறிப்பு: இவ்வறிக்கையானது ஒரே நிலையையும் ஒப்பீட்டுத்தன்மையும் உறுதிசெய்வதற்காக பொதுக் காப்புறுதி தொழிலின் முழு ஆண்டின் செயலாற்றத்தை பிரதிபலிக்கின்றது.*

**தொழிற்படுகின்ற சூழல்**

## குறிக்கோள்கள்




ஒழுங்குபடுத்தல் தோற்றவமைப்பு

| உள்ளீடு | வெளிவருவிளைவுகள் |
|---|---|
| **நிதியியல் மூலதனம்**<br>**11%** மூலதனம் மீதான ஆதாயம்<br>**ரூ. 4,039 மில்லியன்** வரிக்கு முந்தைய இலாபம்<br>**277.3%** கடன்தீராற்றல் விகிதம்<br>**19.4%** சந்தைப் பங்கு | ரூ. 250 மில்லியன் பங்கிலாபமாக முன்மொழிவு<br>ரூ. 3,481மில்லியன் வரிகள் கொடுப்பனவு |
| **சமூக மற்றும் உறவு மூலதனம் – வாடிக்கையாளர்கள்**<br>**483,934** புதிய பூட்கைகள்<br>**6.3%** ஆண்டுக்காண்டு வளர்ச்சி<br>**65.8%** வாடிக்கையாளர் தக்கவைத்தல் வீதம் | ரூ. 10,510 மில்லியன் கோரிக்கை தீர்ப்பனவு |
| **மனித மூலதனம்**<br>**293** புதிய ஆட்சேர்ப்பு/நிரந்தரப் பதவியாணி<br>**88.6%** அலுவலர் தக்கவைத்தல் வீதம் | ரூ. 5,337 மில்லியன் சம்பளங்கள் மற்றும் நலன்களாக கொடுப்பனவு<br>ரூ. 84 மில்லியன் ஓய்வூதிய நலன்களாக கொடுப்பனவு<br>ரூ. 29 மில்லியன் பயிற்சியில் முதலீடு |
| **சமூக மற்றும் உறவு மூலதனம் – தொழில் பங்காளர்கள்**<br>**07** புதிய வியாபார உறவுகள் | ரூ. 7,253 மில்லியன் மீள்காப்புறுதிக் கட்டுப்பணமாக செலுத்தல் தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு செலுத்திய தொகைகள் உள்ளடங்கலாக<br>ரூ. 193 மில்லியன் உபயோக சேவை நுகர்வுக்காக கொடுப்பனவு |
| **தயாரிக்கப்பட்ட மூலதனம்**<br>**02** கிளைகள் தரம் உயர்த்தப்பட்டன<br>புதிய தொழிநுட்பங்கள்/டிஜிட்டல் தளங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன<br>வர்த்தகநாமம் உயர்வாகப் புலப்படுவதற்கு பங்களித்தல் | உயர்வாகப் புலப்படுதல், நாடளாவிய அடைவு வர்த்தகநாம நம்பிக்கை |
| **புலமைச் சொத்து மூலத்தானம்**<br>காப்புறுதி உற்பத்திகளுக்கு எளிதான மற்றும் தங்குதடையற்ற பெறுவழிக்கு டிஜிட்டல்மயமாக்கம் பங்களிக்கின்றது<br>நேர வினைத்திறன் செயன்முறைப்படுத்தல் | செவிசாய்த்தால், ஆக்கத்திறன் புதாக்கம், குறுகிய காலத்தில் செய்துமுடித்தல் |
| **சமூக மற்றும் உறவு மூலதனம்-சமுதாயம்**<br>நிறுவன சமூக பொறுப்புச் செயற்பாடுகள் தொழில்படுவதற்கான சமூக உத்தரவாதத்தை மேம்படுத்துவதற்கு பங்களிக்கின்றது. | சமூகத்துக்கு நன்மையான நிறுவன சமூக பொறுப்பு செயற்பாடுகள்<br>நிறுவன சமூக விழுமியங்கள், உரிமையம் தக்கவைத்தல் மற்றும் மேம்படுத்தல் |
| **சமூக மற்றும் உறவு மூலதனம் ஒழுங்குபடுத்துநர்கள்**<br>இடைத்தானங்கலற்ற தொழிற்பாடுகள் | கணக்காய்வாளர் அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டவற்றை விட ஏற்புடைய விதிகள் ஒழுங்குவிதிகள் அனைத்துடனும் இணங்குவித்தல் |
| **இயற்கை மூலதனம்**<br>பொறுப்புமிக்க நுகர்வுக்கு சுற்றாடல் பாதுகாப்பதற்கு பங்களிக்கின்றது | வலுவான சமுதாயங்கள், நிலைபெறும்தன்மை, ஐக்கிய நாடுகள் நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகளுடன் அணிசேர்ந்து தேசிய இலக்குகளை அடைவதற்கு பங்களித்தல் |

# முக்கியத்துவம் மிக்க விடயங்கள்

**முக்கியத்துவம் என்பது பெறுமதியினை உருவாக்குவதற்கும் அதன் பயணப் பாதையினை மாற்றியமைப்பதற்கும் ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோபரேஷன் ஜெனரல் லிமிடடின் இயலுமைக்கு கனிசமாக தாக்கம் செலுத்துகின்ற பிரச்சினைகளை எடுத்துக்காட்டுகின்றது. எமது உபாயம், ஆளுகை மற்றும் அறிக்கையிடல் செயன்முறைகளை இனங்கண்டு முக்கிய பிரச்சினைகளுடன் அணிசேர செய்வது அதிகரித்த அளவில் நுணுகி நோக்குகின்ற பங்குதாரர்களின் எதிர்பார்க்கைகளை நிறைவுசெய்வதற்கும் அதன் குறிக்கோள்களை அடைவதற்கும் கம்பனிக்கு உதவுகின்றது.**

## எமது அணுகுமுறை

எமது வியாபார தொழிற்பாடுகளுக்கு மற்றும் பங்குதாரர்களுக்கு செல்வாக்குச்செலுத்துகின்ற முக்கிய பிரச்சினைகளை ஈடுபடுத்துகின்ற உபாயங்களை நாம் இனங்கண்டு, ஒன்றுசேர்த்து உள்ளீடு செய்து, தாக்கத்தினை மதிப்பிட்டு, உபாயங்களை உருவாக்குகின்றோம். பேரண்ண்டப் பொருளாதார தோற்றவமைப்பினை மதிப்பிடுதல், ஒழுங்குபடுத்தும் தேவைப்பாடுகள் மற்றும் எதிர்பார்க்கைகள் அத்துடன் உபாய ரீதியான முன்னுரிமைகளை உருவாக்குகின்ற கரிசனைகள் என்பவற்றை மதிப்பிடுவதை இது உள்ளடக்குகின்றது. ஆகையினால், நாம் கடுமையான மதிப்பீடு, கவனமான பகுப்பாய்வு மற்றும் இனங்காணப்பட்ட பிரச்சினைகள் பற்றிய செயல்திறன் வாய்ந்த தரப்படுத்தல் என்பவற்றை ஈடுபடுத்துகின்ற கட்டமைக்கப்பட்ட மற்றும் முறைமைசார்ந்த விதத்தில் முக்கியத்துவத்தை நிர்ணயித்தலை நாம் அணுகுகின்றோம்.

## முக்கியத்துவத்தை தீர்மானித்தல்

நிலைபெறுத்தன்மை மீதான எமது கவனம்செலுத்தல் வலுப்பெற்றுள்ளமையினால் முக்கியத்துவம் சார்ந்த பிரச்சினைகளை அடையாளங்காண்பதற்கான எமது அணுகுமுறை பல ஆண்டுகளாக பரிணாமவளர்ச்சியடைந்துள்ளது. வாடிக்கையாளர்கள் தங்கள் பொறித்தொகுதி, ஆதனம் மற்றும் வளாகங்களைப் பாதுகாப்பதில் நியதிச்சட்டரீதியாக வேண்டப்பபட்டுள்ள மற்றும் அவர்கள் ஏற்றுக்கொள்ளத் தேர்ந்தெடுக்கும் இடர்நேர்வுகளைத் தணிக்கும் தொழிலில் நாம் ஈடுபட்டுள்ளதால், எமது தொழிற்பாட்டு நடவடிக்கைகளையும் மூலோபாய இலக்குகளை வடிவமைப்பதில் குறிப்பிடத்தக்க பங்கை வகிக்கும் முக்கிய நோக்குகளை தீர்மானிப்பதில் உள்ளக மற்றும் வெளிவாரி பங்குதாரர்கள் இருசாராரையும் நாம் கருத்தில் கொள்கின்றோம்.

## முக்கியத்துவத்தை தீர்மானிக்கும் செயன்முறை

முக்கியத்துவத்தை தீர்மானிக்கும் செய்னமுறையானது பெறுதிமதி உருவாக்கத்திற்கான அவற்றின் சாத்தியமான திறனின் அடிப்படையில் முக்கிய விடயங்களை நிவர்த்திசெய்ய முனைகின்றது. இம்முக்கிய தேவைப்படுத்தலானது செயலாற்றத்தை இயக்கி நிலைபெறுத்தக்க நடத்தைகளுக்கான எமது கடமைப்பொறுப்பை வலுப்படுத்துகிறது. எங்கள் பங்குதாரர் ஈடுபாட்டு செயன்முறை மூலம் நாங்கள் அடையாளம்காணும் அனைத்து பங்குதாரர் குழுக்களுடனுமான செயல்திறன்மிக்க ஈடுபாட்டுடனும் தாக்கம் நிகழும்தன்மை மற்றும் பருமன் பற்றித் தீர்மானிப்பதற்கு மேலும் பகுப்பாய்வுசெய்யப்படுகின்ற அவர்களின் கரிசனைகளுடனும் இது தொடங்குகின்றது. இச்செயன்முறை முழுவதும், ஜெனரல் இனஷூரன்ஸ் கம்பனி லிமிடடிற்கும் பங்குதாரர்களுக்கும் முதன்மையான கரிசனையாகவிருப்பவற்றைத் தேர்ந்தெடுப்பதற்கு அத்தியாவசியமற்றவற்றை நாம் கவனமாக வடிகட்டுகிறோம்.




| இல | முக்கிய விடயம் | ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடெட்டிற்கு முக்கியத்துவம் | பங்குதாரர்களுக்கு முக்கியத்துவம் | அறிக்கையில் தொடர்புபடுமிடம் |
|---|---|---|---|---|
| 01. | பொருளாதார செயலாற்றம் | மிக உயர்வானது | மிக உயர்வானது | தொழிற்படுகின்ற சூழல் பக்கம் 46 |
| 02. | சந்தைப் பிரசன்னம் | மிக உயர்வானது | மிக உயர்வானது | சமூக மற்றும் உறவு மூலதனம் பக்கம் 62 |
| 03. | ஊழலுக்கெதிரானது | மிக உயர்வானது | உயர்வானது | நிறுவன ஆளுகை பக்கம் 80 |
| 04. | போட்டி நடத்தைக்கு எதிரானது | உயர்வானது | உயர்வானது | நிறுவன ஆளுகை பக்கம் 80 |
| 05. | தொழில்நிலை | மிக உயர்வானது | மிக உயர்வானது | மனித மூலதனம பக்கம் 57 |
| 06. | தொழில் ஆரோக்கியமும் பாதுகாப்பும் | உயர்வானது | உயர்வானது | மனித மூலதனம் பக்கம் 57 |
| 07. | பயிற்சி மற்றும் அபிவிருத்தி | மிக உயர்வானது | மிக உயர்வானது | மனித மூலதனம் பக்கம் 57 |
| 08. | பல்வகைமை, அனைவரையும் உள்ளடக்குதல், சமத்துவம் | மிக உயர்வானது | மிக உயர்வானது | மனித மூலதனம் பக்கம் 57 |
| 09. | பாகுபாடின்மை | உயர்வானது | உயர்வானது | மனித மூலதனம் பக்கம் 57 |
| 10. | ஒன்றுகூடுதல் மற்றும் கூட்டாக பேரம்பேசுவதற்கான சுதந்திரம் | உயர்வானது | உயர்வானது | மனித மூலதனம் பக்கம் 57 |
| 11. | உள்நாட்டு சமூகங்கள் | உயர்வானது | நடுத்தரமானது | சமூக மற்றும் உறவு மூலதனம் பக்கம் 62 |
| 12. | வாடிக்கையாளர் சொத்தும் பாதுகாப்பும் | உயர்வானது | உயர்வானது | சமூக மற்றும் உறவு மூலதனம் பக்கம் 62 |
| 13. | சந்தைப்படுத்தலும் சுட்டுத்துண்டிடலும் | உயர்வானது | நடுத்தரமானது | சமூக மற்றும் உறவு மூலதனம் பக்கம் 62 |
| 14. | சமூக – பொருளாதார இணங்குவித்தல் | உயர்வானது | உயர்வானது | நிறுவன ஆளுகை பக்கம் 80 |
| 15. | பேரண்டப் பொருளாதார அபிவிருத்தி | மிக உயர்வானது | உயர்வானது | தொழிற்படுகின்ற சூழல் பக்கம் 46 |


ஆர்வலர்களுக்கான முக்கியத்துவம்
மிக உயர்வானது
உயர்வானது
நடுத்தரமானது
1, 2, 5, 7, 8
4, 6, 9, 10, 12, 14
3, 15
11, 13
நடுத்தரமானது
உயர்வானது
மிக உயர்வானது
ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோபரேஷன் ஜெனரல் லிமிடட்டிற்கான முக்கியத்துவம்

# பங்குதாரர் ஈடுபாடு

**பங்குதாரர் ஈடுபாடு என்பது எமது கம்பனியின் உபாய பணிப்பரையின் இன்றியமையாத அம்சமொன்றாக விளங்குவதுடன் பங்குதாரர் உறவின் வாழ்க்கைச் சுழற்சி முழுவதும் திட்டமிடலை ஈடுபடுத்தி, திறந்த தொடர்பூட்டல்களில் ஈடுபட்டு, எமது ஈடுபாட்டு முறைகளை ஏற்றதாகிக் கொள்கின்ற தன்மையாகும். பங்குதாரர் கண்டறியும் செயற்பாட்டை நாம் நடாத்தி பங்குதார்களின் ஒவ்வொருவரினருக்கும் பொருந்துகின்ற தேவைகளுக்கு பொருத்தமான எமது இடைத்தொடர்பு உபாயங்களை ஏற்றதாக அமைப்பதனால் எமது பங்குதார்களின் பல தேவைகளையும் அடையாளப்படுத்தி வகைப்படுத்தி புரிந்துகொள்வதிலேயே இது தொக்கி நிற்கின்றது.**

### முகாமைத்துவ அணுகுமுறை

வெளிப்படையான மற்றும் பரஸ்பர பெறுமதி சேர்த்தலானது நீண்டகாலம் நிலைக்கும் உறவுகளுக்கு பெறுமதியளிக்கின்ற, மற்றும் பரஸ்பர பெறுமதியினை இயக்குவதற்கு பேணிவளர்க்கக் கூடிய புதிய உறவுகளை கட்டியெழுப்பவதற்கு நாம் நாடுகின்ற எமது வியாபாரங்களின் இந்நோக்கினை நாம் அணுகுகின்றதான எமது தொழிலின் இலங்கை இந்நோக்கை அணுகுகின்ற வழிகளாகும். ஆகையினால் கம்பனியின் இறுதிப் பெறுபேற்றில் நேரடியான தாக்கத்தை அவற்றின் உள்ளீடுகளும் ஈடுபாடும் கொண்டிருப்பதனால் கீழேயுள்ள அளவுருவில் விளக்கப்பட்டுள்ள பல முக்கிய பங்குதாரர்களை நாம் அடையாளப்படுத்தியுள்ளோம்.

### பங்குதாரர் ஈடுபாட்டு கட்டமைப்பு




| | | | | |
|---|---|---|---|---|
| இவ்வுறவுகளின் நிலைபெறுதன்மையை உறுதிப்படுத்துவதற்கு நன்கு கட்டமைக்கப்பட்ட வழியொன்றினை தாபிப்பதற்கு நாம் நாடுகின்ற முக்கிய உறவுகளை இனங்காண்பதன் மீது நாம் ஊடுருவிக் கவனம் செலுத்துகின்றோம். | ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடெட்டின் தரநியமங்களை அதன் வியாபார நடத்தைகள் நிறைவு செய்கின்றன என்பதனை உறுதிசெய்வதற்கு உத்தேசிக்கப்பட்ட உறவுகள் பற்றிய தகவல்களை சேகரிப்பதை மதிப்பீட்டுச் செயன்முறை ஈடுபடுத்துகின்றது. | அதன் பின்னர் பாகுபாடற்ற அணுகுமுறையொன்றை ஈடுபடுத்துகின்ற உறவுகளை நாம் தாபிக்கின்றோம். | இவ்வுறவுகளை பேணிவளர்ப்பதற்கும் பேணுவதற்கும் நாம் மிகுந்த கவனத்தையும் வெளிப்படைத் தன்மையையும் திறந்த தொடர்பாடலையும் ஈடுபடுத்துகின்றோம். | பெறுமதியை பெறுவிக்கின்ற அதேவேளை, நீண்டகாலத்துக்கு பெறுமதியை கொண்டு சேர்ப்பதற்கு இவ்வுறவுகளை நாம் கவனமாக கண்காணிக்கின்றோம். |

### பங்குதாரர் ஈடுபாட்டுக் கோட்பாடுகள்

பங்குதாரின் வகை மற்றும் உறவுக்கமைவாக ஈடுபாட்டு மார்க்கங்கள் வேறுப்படுகின்றன. எவ்வாறாயினும், முறையியலானது அனைத்து உறவுகளுக்கிடையிலும் நடைமுறைப்படுத்தப்படுகின்ற மூன்று அடித்தளங்கள் மீது தொடர்ச்சியாக அமைந்துள்ளது.

ஆலோசனைக் கலந்துரையாடல், உரியகால விதம், செம்மை மற்றும் தகவல்களின் தொடர்பு என்பவற்றை பேணிவளர்ப்பதற்கான திறந்ததன்மையும் வெளிப்படைத்தன்மையும். பதிலிறுத்தலை மேம்படுத்துவதற்கு தொடர்ச்சியான மற்றும் முன்னெடுக்கப்படுகின்ற மீளாய்வு.

மேலும், கட்டமைப்பினுள் வெளிவாரி மற்றும் உள்ளக உறவுகளை முகாமைசெய்வதற்கு ஒவ்வொரு ஊழியரும் பொறுப்பாக இருப்பதன் மூலம் ஆர்வலர் ஈடுபாடு பரவச் செய்யப்பட்டுள்ளது. நிறுவப்பட்ட உள்ளக தொடர்பூட்டல் மார்க்கங்கள் ஊடாக முக்கிய கரிசனைகள் பற்றி பணிப்பாளர் சபைக்கு அறிவிக்கப்படுகின்றது. இப்பெறுமதி மிக்க நோக்கு உயர்மட்ட தீர்மானங்களை மேற்கொள்வதற்கான முக்கிய உள்ளீடாக பணியாற்றுகின்றது.

| பங்குதாரர் வகை | பங்குதாரர்களுடன் தொடர்புடைய முக்கிய விடயங்கள் | ஈடுபாட்டு பொறிமுறை | கால இடைவெளி | முன்னுரிமை |
|---|---|---|---|---|
| **இலங்கை அரசாங்கம்** | முதலீடு, வியாபார அபிவிருத்தி, ஆதாயங்கள், புத்தாக்கம் மற்றும் தொழிற்துறை வளர்ச்சி, இணங்குவித்தல் | சபை மற்றும் சிரேஸ்ட முகாமைத்துவத்துடன் கூட்டங்களும் கலந்தரையாடல்களும் | தேவையின் அடிப்படையில் | உயர்வானது |
| | | ஊடக வெளியீடுகள் | தேவையின் அடிப்படையில் | |
| | | ஆண்டறிக்கை | ஆண்டு தோறும் | |
| **ஏனைய ஒழுங்குபடுத்தநர்கள்** | சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்குவித்தல், சிறந்த நிறுவன ஆளுகை, தொமிற்துறை உறுதிப்பாடு, ஒழுக்கரீதியான நடத்தை | ஒழுங்குபடுத்தல் அதிகாரிகளுடன் கூட்டங்கள் | தேவையின் அடிப்படையில் | உயர்வானது |
| | | ஆண்டறிக்கை | ஆண்டு தோறும் | |
| | | ஊடக வெளியீடுகள் | தேவையின் அடிப்படையில் | |
| | | தொழிற்துறை மன்றங்கள் | தேவையின் அடிப்படையில் | |
| | | நியதிச்சட்ட திரட்டுக்கள் மற்றும் நிலைமை அறிக்கைகள் | காலாண்டு ஆண்டு தோறும் | |
| **வாடிக்கையாளர்கள்** | வாடிக்கையாளர் உறவு, தக்கவைத்தல், உரிய உற்பத்திகள், உற்பத்தித் தகவல், பூட்கை, மிகைக் கொடுப்பனவுகள், பூட்கை கோரிக்கைள், ஏனைய ஒழுங்குபடுத்துநர்கள் | அழைப்பு நிலையம் | கிரமமாக | உயர்வானது |
| | | வாடிக்கையாளர் திருப்தி அளவீடு | தேவையின் அடிப்படையில் | |
| | | ஒருவருக்கொருவர் இடைத்தொடர்பு | கிரமமாக | |
| | | வெப்தளம் மற்றும் சமூக ஊடகம் | கிரமமாக | |
| | | வாடிக்கையாளர் பின்னூட்டல் | கிரமமாக | |
| **வியாபாரப் பங்காளர்கள்** | வழங்கல் சங்கிலி முகாமைத்துவத்திற்கானவை, தொழிற்துறை தொடர்புபட்ட மன்றங்கள், மூன்றாம் தரப்பு இணைவுகள் | கூட்டங்கள் | தேவையின் அடிப்படையில் | உயர்வானது |
| | | மின்னஞ்சல்/ தொலைபேசிகள்/கடிதங்கள் | | |
| **ஊழியர்கள்** | ஊழியர் நலனோம்புகை, திருப்தி, தக்கவைத்தல், பயிற்சி மற்றும் அபிவிருத்தி, பாராட்டு மற்றும் வெகுமதிகள், தொழில் முன்னெற்றம், தொழில் பாதுகாப்பு | கூட்டங்கள் | கிரமமாக | உயர்வானது |
| | | மின்னஞ்சல், தொவைபேசி, இணையவழித் தளங்கள் | தேவையின் அடிப்படையில் | |
| | | பதவியுரிமை திட்டமிடல் | ஆண்டுதோறும்/ தேவையின் அடிப்படையில் | |
| | | பயிற்சி மற்றும் அபிவிருத்தி | தேவையின் அடிப்படையில் | |
| | | விருது வழங்கும் வைபவங்கள் | ஆண்டுதோறும் | |
| | | சமுதாய கருத்திட்டங்களுடனான ஈடுபாடு | தேவையின் அடிப்படையில் | |
| | | ஆளுகையை கையாளுதல் | ஆண்டிற்கிருமுறை | |
| | | இணையம், B-connect செயலி வாயிலாக தகவல்களை பகிர்தல் | கிரமமாக | |
| | | குறிக்கோள்களை அமைத்தல் மற்றும் முக்கிய செயலாற்றுகை குறிகாட்டிகள் | ஆண்டுதோறும் | |
| | | செயலாற்றுகை மதிப்பீடு | ஆண்டுதோறும் | |
| **சமுதாயம் மற்றும் சுற்றாடல்** | சமுதாய முதலீடு, நிறுவன சமூகப் பொறுப்பு முன்முயற்சிகள் | சமுதாய கருத்திட்டங்கள் | கிரமமாக | நடுத்தர மானது |
| | | ஊடக வெளியீடுகள் | தேவையின் அடிப்படையில் | |
| | | வலைத்தளம் சமூக ஊடகம் | கிரமமாக | |
| | | நிகழ்வுகள் | தேவையின் அடிப்படையில் | |
| | | நிறுவன சமூகப் பொறுப்பு கருத்திட்டங்கள் | கிரமமாக | |
| | | நிலைபெறுதன்மை முயற்சிகள் | கிரமமாக | |

# உபாய ரீதியான முன்னுரிமைகள்

**2024 ஆம் ஆண்டில் ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் குறிப்பிடத்தக்க உள்ளக மறுசீரமைப்புக்கு உட்பட்டும், நாட்டினுள் பொருளாதார நிச்சயின்மை சிக்கலான சமூக இயக்கவாற்றல் என்பன மூலம் அடையாளப்படுத்தப்பட்ட காலப்பகுதியொன்றினூடாக பயணித்தமை என்பவற்றுக்கு மத்தியில் அதன் பொதுக் காப்புறுதிவியாபாரத்தில் ஆற்றல்வாய்ந்த மற்றும் உறுதியான வளர்ச்சியினை எடுத்துக்காட்டியது. இச்செயலாற்றம் கம்பனியின் தாக்குப்பிடிக்கும்தன்மை உபாயரீதியான முன்னோக்கிய பார்வை மற்றும் அதன் பங்குதாரர்களுக்கு பெறுமதியினை கொண்டுசேர்ப்பதற்கான கடமைப்பொறுப்பு என்பவற்றை பிரதிபலிக்கின்றது.**

கீழே எடுத்துக்காட்டப்பட்டவை பொதுக் காப்புறுதி வியாபாரத்தில் 2025 ஆம் ஆண்டுக்கான கோட்பாடு சார்ந்த உபாயங்களாகும்.

## பொதுக் காப்புறுதி

1. தேறிய பதிவுசெய்யப்பட்ட கட்டுப்பணத்தின் மையப்படுத்தலுடன் உயர் வருவாயினை தூண்டுதல்
2. வருவாய் மீதான செலவை மேம்படுத்துதல் மற்றும் இலாபத்தினை உச்சப்படுத்தல்
3. சேவை மட்டங்களையும் தரநியமங்களையும் அதிகரித்தல்
4. வாடிக்கையாளர் தக்கவைத்தலை உச்சப்படுத்தல்
5. மனித மூலதனத்தை உகப்பாக்கம் செய்தல்

# 05

# முகாமைத்துவக் கருத்துரை

46
தொழிற்பாட்டுச் சூழல்

48
நிதியியல் மூலதனம்

52
தயாரிக்கப்பட்ட மூலதனம்

55
புலமைசார் மூலதனம்

57
மனித மூலதனம்

62
சமூக மற்றும் உறவுமுறை மூலதனம்

75
இயற்கை மூலதனம்

# தொழிற்பாட்டுச் சூழல்

## உலகளாவிய பொருளாதாரம் – தாக்குப்பிடிக்கும் தன்மை மற்றும் மீளமைப்பு

கொவிட்-19 நோய்த்தொற்றால் ஏற்பட்ட முன்னெப்பொழுதுமில்லாத சிக்கல்கள், அதிகரித்துவருகின்ற புவிசார் அரசியல் முரண்பாடுகள், தீவிரமான மற்றும் பாதகமான காலநிலை மாற்ற நிகழ்வுகள் ஆகியவற்றால் உலகளாவிய பொருளாதாரம் பாதிப்பிற்குட்பட்டதுடன், இது வர்த்தகத்தைத் தடங்கலுக்குட்படுத்தி, பணவீக்கத்தின் சடுதியான அதிகரிப்புக்கு வழிவகுத்தது. உலகப் பொருளாதார மன்றத்தின் புள்ளிவிவரங்களிற்கமைய, உலகளாவிய ஒத்துழைப்பானது புவிசார் அரசியல் பதட்டங்களால் 91 சதவீதமாகவும் உள்நாட்டு அரசியல் பதட்டங்களால் 83 சதவீதமாகவும் காணப்படுகின்றது. சவால்களுக்கு மத்தியில், உலகளாவிய பொருளாதாரம் வலுவான மற்றும் தாக்குப்பிடிக்கக்கூடியதன்மையுடன் காணப்பட்டு, 2024இற்கு 3.2 சதவீத மற்றும் 2025இற்கு சதவீத வளர்ச்சியொன்றை எதிர்வுகூறியுள்ளது. நான்கு ஆண்டுகாலம் தொடர்ச்சியாக உயர்வடைந்த பணவீக்கத்திற்குப் பிறகு, முதன்மைப் பணவீக்கம் 2025இல் 4.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடையுமென எறிவுசெய்யப்பட்டுள்ளது. உலகளாவிய பொருளாதாரச் சூழமைவிலுள்ள மத்திய வங்கிகள் நாணயக் கட்டுப்பாட்டை இறுக்கமடையச்செய்த வேளையில் நிரம்பல் சங்கிலி இடையூறுகளில் மெதுவான வேகத்திலான தளர்வொன்று காணப்பட்டமையானது இதற்குக் காரணமாயமைந்தது. பொருளாதார ஒத்துழைப்பிற்கும் அபிவிருத்திக்குமான அமைப்பு நாடுகளின் பணவீக்கமானது 2024இல் பதிவுசெய்யப்பட்ட 5.4 சதவீதத்திலிருந்து 2025இல் 3.8 சதவீதத்திற்குத் தளர்த்தப்படுமென எதிர்பார்க்கப்படுவதனால் உலகளாவிய பொருளாதாரம் குறித்த எச்சரிக்கையுடனான நம்பிக்கையொன்று நிலவுகின்றது.

2024இல் மொ.உ.உற்பத்தியின் எறிவுசெய்யப்பட்ட 6.5 சதவீத விரிவாக்கமொன்றினைப் பாதுகாக்கின்ற விதத்தில் பொருளாதார வளர்ச்சிக்கான முக்கிய வகிபாகத்தை இந்தியா கொண்டுள்ளதுடன், இது 2025இல் மேலும் 0.3 சதவீதமொன்றினால் வளர்ச்சியடையுமென எதிர்வுகூறப்பட்டுள்ளது. இந்தியாவுக்கு அடுத்தபடியாக இந்தோனேசியா, சீனா மற்றும் துருக்கி ஆகிய நாடுகள் காணப்படுகின்ற வேளையில், மேம்பட்ட பொருளாதாரங்கள் 2024இல் தாழ்ந்தளவிலான வளர்ச்சி வாக்குறுதியைக் காட்டுகின்றன. முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் ஒட்டுமொத்தமாக 1.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த வேளையில் ஐக்கிய அமெரிக்கா பொருளாதாரத்தின் வலுவான விரிவாக்கத்தைக் காட்டியதுடன் ஐரோப்பா அதன் பொருளாதார வளர்ச்சியை ஓரளவு உயர்த்தியது. இருப்பினும், யப்பானியப் பொருளாதாரம் 2024இல் மிதமான வளர்ச்சியினை மாத்திரமே பதிவுசெய்தது.

### உலகப் பொருளாதாரம் – வளர்ச்சி மற்றும் அதன் வீச்சுகள்




அ – தோற்றம்பெற்று வருகின்ற மற்றும் அபிவிருத்தியடைந்து வருகின்ற ஆசியா

ஆ – தோற்றம்பெற்று வருகின்ற சந்தைகள் மற்றும் அபிவிருத்தியடைந்து வருகின்ற பொருளாதாரங்கள்

இ – மத்திய கிழக்கு மற்றும் மத்திய ஆசியா

***மூலம்:** சர்வதேச நாணய நிதியத்தின் உலகப் பொருளாதாரத் தோற்றப்பாடு 2025 ஜனவரி*

வாகன உற்பத்தி ஆலைகளின் மூடுகை, நுகர்வில் சொற்பளவிலான மீட்சி, குறைந்தளவிலான நுகர்வோர் நம்பிக்கை என்பன காரணமாக ஜப்பான் நாடு குறிப்பாக சிக்கலுக்குட்பட்டுக் காணப்பட்ட போதிலும், கூலிகள் மீட்சியடைதல்சார் சமிக்ஞைகளைக் காட்டின. சீனா 2024இல் 4.9 சதவீத வளர்ச்சியைக் காட்டிய வேளையில், ஐக்கிய அமெரிக்கப் பொருளாதாரம் முதலாவது இரண்டு காலாண்டுகளில் வலுவான வளர்ச்சியைக் காட்டிய அதேவேளையில் ஆண்டின் இறுதியை நோக்கிச் செல்கையில் உத்வேகத்தை இழந்தன.

## இலங்கைப் பொருளாதாரம்

2024இல், இலங்கைப் பொருளாதாரமானது வலுவான மீளெழுச்சியொன்றைக் கொண்டிருந்ததுடன் தொடர்ச்சியான இரண்டு ஆண்டுகால பொருளாதாரச் சுருக்கத்தைத் தொடர்ந்து உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் திடமான 5.0 சதவீத வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தது. இம்மீட்சி ஆண்டு முழுவதும் சீராகக் காணப்பட்டு, 2017 இற்குப் பிறகு முதலாவது தடவையாக நான்கு காலாண்டுகளும் நேர்நிலையான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியைப் பதிவுசெய்ததைக் குறித்துக்காட்டியது. ஒட்டுமொத்த பொருளாதார விரிவாக்கமானது உற்பத்தி மற்றும் கட்டுமான நடவடிக்கைகளின் புத்துயிரூட்டலால் துணைபுரியப்பட்டு, கைத்தொழில் துறையால் முதன்மையாக உந்தப்பட்டது. தங்குமிடம் மற்றும் போக்குவரத்துச் சேவைகளின் தொடர்ச்சியான வளர்ச்சியினால் ஆதரவளிக்கப்பட்டு, சேவைத் துறையும் குறிப்பிடத்தக்களவு பங்களிப்பை வழங்கியது. மேலும், வேளாண்மைத் துறையானது ஒட்டுமொத்த பொருளாதாரச் செயலாற்றத்திற்கும் சாதகமான பங்களிப்பொன்றினை வழங்கியது. இப்போக்கு எதிர்காலத்திற்கான சாதகமான தோற்றப்பாடொன்றைக் குறித்துக்காட்டுகின்றது.

2024இல், வேளாண்மையானது 1.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து, 2023இல் பதிவுசெய்யப்பட்ட 1.6 சதவீதத்திலிருந்து சிறிதளவு குறைவடைந்து காணப்பட்டமைக்கு விலங்கு உற்பத்தி மற்றும் பழப் பயிர்ச்செய்கை என்பவற்றில் ஏற்பட்ட வளர்ச்சி முக்கிய காரணமாக அமைந்த போதிலும், தெங்கு உற்பத்தி தொடர்ந்து வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. கைத்தொழிலானது அதிகரித்துச் செல்கின்ற உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கேள்வி மற்றும் கட்டுமானத் திட்டங்களில் ஏற்பட்ட மீளெழுச்சி என்பவற்றினால் உந்தப்பட்டு வலுவான மீட்சியொன்றைப் பதிவுசெய்து 2023இல் காணப்பட்ட 9.2 சதவீத சுருக்கமொன்றிற்குப் பிறகு 11.0 சதவீதத்தினால் விரிவடைந்தது. சுற்றுலாத் துறையிலிருந்தான ஓர் ஊக்குவிப்பு, மேம்பட்ட நிதியியல் மற்றும் உண்மைச் சொத்துப் பணிகள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொலைத்தொடர்பாடல்களிலிருந்தான ஈட்டல்கள் என்பவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு பணிகள் 2.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்ததுடன், இது முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 0.2 சதவீத வீழ்ச்சியொன்றிலிருந்தான அதிகரிப்பொன்றாகக் காணப்பட்டது.

2023 இன் நடுப்பகுதியில் தொடங்கப்பட்ட பரந்தளவிலான 775 அடிப்படை புள்ளிகளைக் கொண்ட தளர்த்தல் சுழற்சியொன்றின் பகுதியொன்றாக மத்திய வங்கி 2024 இல் கொள்கை வீதங்களை மொத்தமாக 125 அடிப்படைப் புள்ளிகளால் குறைத்ததன் மூலம் நாணயக் கொள்கையானது ஆண்டு முழுவதும் தொடர்ந்தும் தளர்வடைந்து காணப்பட்டது. முன்னைய இரட்டை வீத முறைமையை ஒற்றைக் கொள்கை வீதக் கட்டமைப்பொன்றுடன் மாற்றியமைக்கின்ற ஓரிரவுக் கொள்கை வீதம் அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் நவம்பரில் முக்கிய கொள்கை மாற்றமொன்று ஏற்பட்டது. மேம்பட்ட திரவத்தன்மை நிலைமைகள் மற்றும் வீழ்ச்சியடைகின்ற பணவீக்கம் என்பவற்றுடன் இணைந்து இம்மாறுதலானது சந்தை வட்டி வீதங்களில் தொடர்ச்சியான வீழ்ச்சியொன்றிற்குப் பங்களித்தது.

சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதமானது ஆண்டு காலப்பகுதியில் படிப்படியாக வீழ்ச்சியடைந்து, டிசம்பர் மாதமளவில் ஏறத்தாழ 8 சதவீதத்தில் உறுதிநிலையை அடைந்தது. 2024 இன் நடுப்பகுதியில் அரச பிணையங்களின் விளைவு வீதங்களில் தற்காலிக உயர்வொன்று காணப்பட்ட போதிலும், கடன் வழங்கல் மற்றும் வைப்பு வீதங்கள் ஆண்டின் இறுதியில் தமது கீழ்நோக்கிய போக்கினை மீண்டும் ஆரம்பித்தன. இவ்வபிவிருத்திகள் மேம்படுகின்ற நிதியியல் நிலைமைகள், படுகடன் மறுசீரமைப்பின் முன்னேற்றத்திற்கு மத்தியில் குறைவடைந்த இடர்நேர்வு மிகை மற்றும் 2025 இனை நோக்கிய நகர்வில் முதலீடு மற்றும் கொடுகடன் வளர்ச்சிக்கு அதிக ஆதரவுமிக்கதொரு சூழல் என்பவற்றைப் பிரதிபலிக்கின்றன.

2024 இல், வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறைக்கு நிதியளிப்பதற்கு உள்நாட்டு மூலங்களில் அரசாங்கம் முதன்மையாகத் தங்கியிருந்தமையானது வெளிநாட்டு நிதியிடலிற்கான மட்டுப்படுத்தப்பட்ட அணுகலைப் பிரதிபலித்தது. தேறிய உள்நாட்டு நிதியிடலின் பெரும்பகுதி அரச பிணையங்களின் வழங்கலின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

2025 இல், வணிகப்பொருள் வர்த்தகப் பற்றாக்குறையானது இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் தளர்விலிருந்து தோற்றம்பெற்ற அதிகரித்த இறக்குமதிக் கேள்வி, வலுவான பொருளாதார நடவடிக்கை மற்றும் தளர்த்தப்பட்ட நாணய நிலைமைகளால் ஆதரவளிக்கப்பட்டு வியாபாரங்களிலும் வீட்டாரிடத்திலும் மேம்பட்ட செலவிடல் இயலளவு என்பவற்றின் முதன்மைக் காரணமாக விரிவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. வாகன இறக்குமதிகளுக்கான கேள்வி குறுங்காலத்தில் எதிர்பார்ப்புக்களிலும் பார்க்கக் குறைவாகத் தொடர்ந்தும் காணப்பட்ட வேளையில், இப்பிரிவில் படிப்படியானதொரு மீட்சி ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது.

உலகளாவிய மசகு எண்ணெய் விலைகள் 2025 இல் ஒப்பீட்டளவில் தாழ்ந்த அளவில் தொடர்ந்தும் காணப்படுமென எதிர்வுகூறப்பட்டிருப்பினும், எதிர்பார்க்கப்படுகின்ற உள்நாட்டுப் பொருளாதார மீட்சி மற்றும் விலைத் தளம்பல் குறித்த புவிசார் அரசியல் இடர்நேர்வுகளின் சாத்தியமான தாக்கம் என்பவற்றுடன் இணைந்து அதிகரித்த இறக்குமதி அளவுகளினால் உந்தப்பட்டு, பெற்றோலிய இறக்குமதிச் செலவினம் 2024 உடன் ஒப்பிடுகையில் சிறிதளவு அதிகரித்துக் காணப்படுமென எதிர்வு கூறப்பட்டுள்ளது. அதேபோன்று, பொருளாதார நடவடிக்கைகளின் தொடர்ச்சியான மீட்சியுடன் இசைந்து செல்லும் விதத்தில் ஏனைய இடைநிலை மற்றும் முதலீட்டுப் பொருட்களுக்கான இறக்குமதிச் செலவினமானது உயர்வடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இருப்பினும், தொடர்ச்சியான இறக்குமதி விரிவாக்கத்திற்கு மத்தியில் ஏற்றுமதிகளில் வலுவான வளர்ச்சியொன்றினால் ஆதரவளிக்கப்பட்டு வர்த்தகப் பற்றாக்குறையானது நடுத்தர காலத்தில் முகாமைசெய்யத்தக்க மட்டமொன்றில் தொடர்ந்து காணப்படுமென எதிர்வு கூறப்பட்டுள்ளது. அதிகரித்துச்செல்கின்ற சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள் மற்றும் ஏனைய சேவைகள் ஏற்றுமதிகளில் மேம்பட்ட போட்டித்தன்மை ஆகியவற்றால் துணைபுரியப்பட்டு, பணிகள் கணக்கு மிகையானது 2025 மற்றும் அதற்கப்பாலுமான காலப்பகுதியில் மேலும் வலுவடையுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டினை நிச்சயப்படுத்தும் பொருட்டு பரந்தளவிலான கட்டமைப்புசார், சட்ட மற்றும் கொள்கைச் சீர்திருத்தங்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். இலங்கை 2026 இல் தனது மூன்றாவது பரஸ்பர ரீதியிலான மதிப்பீட்டிற்கும் தயாராகி வருவதானது உலகளாவிய தரநியமங்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் பணமாற்று மோசடிக்கு எதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான நிறுவனத்தின் அர்ப்பணிப்பினை எடுத்துக்காட்டுகின்றது.

இலங்கையின் எதிர்காலப் பொருளாதாரச் சுபீட்சமானது கடின உழைப்பின் மூலம் வென்றெடுக்கப்பட்ட பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டைப் பேணுதல் மற்றும் வினைத்திறன்மிக்க, வளர்ச்சியை மையமாகக் கொண்ட சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தல் என்பவற்றில் பாரியளவில் தங்கியிருக்கும். அடிக்கடி மேற்கொள்ளப்படும் கொள்கை ஒழுங்கமைவின்மைகள் மற்றும் திரும்பல்கள் பல ஆண்டுகளாக நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தைத் தடுத்து, பெரும்பாலும் ஈட்டப்பட்ட ஆதாயங்களை இழக்கச்செய்துள்ளன. அண்மைய பொருளாதார வீழ்ச்சி, நெருக்கடியின் போது பிரஜைகளால் எதிர்கொள்ளப்பட்ட இன்னல்கள் மற்றும் திரட்டப்பட்ட பாதிப்படையக்கூடியதன்மைகள் என்பன மேலதிக கொள்கைத் தவறிழைத்தல்களுக்கு அதிக இடமளிக்கவில்லை. இறை மற்றும் படுகடன் நீடித்து நிலைத்திருக்கின்ற தன்மையை நிச்சயப்படுத்தும் வேளையில் நிலையான பொருளாதார உறுதிப்பாடு மற்றும் வளர்ச்சிக்கான நீண்டகால கட்டமைப்புசார் தடைகளை நிவர்த்தி செய்வதற்கும் தற்போது முன்னெடுக்கப்படுகின்ற சீர்திருத்த முயற்சிகள் இன்றியமையாதனவாயுள்ளன.

## பொதுக் காப்புறுதித் துறை

மொத்தச் சொத்துக்களில் விரிவாக்கம் காணப்பட்ட போதிலும், 2024 இல், பொதுக் காப்புறுதித் துறை கலப்பான செயலாற்றல் ஒன்றினை வெளிப்படுத்தியது. 2024 இன் இறுதியிலிலுள்ளவாறு பொதுக் காப்புறுதிப் பிரிவில் தொழிற்படுகின்ற 14 கம்பனிகளையும் 81 காப்புறுதித் தரகுக் கம்பனிகளையும் பொதுக் காப்புறுதித் துறை உள்ளடக்கியிருந்தது. துறையானது 2023 உடன் ஒப்பிடுகையில் ஆண்டு காலப்பகுதியில் மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணங்களில் வளர்ச்சியினைப் பதிவுசெய்ததுடன், பொதுக் காப்புறுதி 11.7 சதவீத ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியினை அடைந்தது. இருப்பினும், பொதுக் காப்புறுதிச் சொத்துக்கள் 5.3 சதவீத சுருக்கமொன்றினைக் கொண்டிருந்தது. இலாபத்தன்மையினைப் பொறுத்தவரை, பொதுக் காப்புறுதித் துணைத் துறையானது வரிக்கு முன்னைய இலாபத்தில் 2.4 சதவீத வீழ்ச்சியொன்றினைப் பிரதிபலித்தது. கோரல்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பொதுக் காப்புறுதிப் பிரிவில் 2.2 சதவீதத்தினால் அதிகரித்தன. ஒட்டுமொத்தமாக, இலாபத்தன்மை மற்றும் மூலதன வினைத்திறன் மீதான அழுத்தங்கள் காணப்பட்ட போதிலும் துறையானது தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையினைத் தொடர்ந்தும் கொண்டிருந்தது.

**மூலங்கள்:**

*(1) சர்வதேச நாணய நிதியத்தின் உலகப் பொருளாதாரத் தோற்றப்பாடு 2025 ஜனவரி*

*(2) இலங்கை மத்திய வங்கியின் ஆண்டிற்கான பொருளாதார மீளாய்வு 2024*

*(3) இலங்கைக் காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு, காலாண்டு அறிக்கை*

# நிதியியல் மூலதனம்

பொருளாதார நிச்சயமற்றதன்மைகள் மற்றும் வளர்ச்சியடைந்து வருகின்ற ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள் என்பன மூலம் வடிவமைக்கப்பட்ட தொழிற்பாட்டுச் சூழலொன்றில், போதியளவிலான திரவத்தன்மைத் தாங்கியிருப்புக்களைப் பேணுதல், மூலதனப் போதுமான தன்மை மட்டங்களைப் பூர்த்தி செய்தல் மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டினைப் பாதுகாத்தல் என்பவற்றினை மேற்கொள்ள நாம் தொடர்ந்தும் திடசங்கற்பம் பூண்டுள்ளோம். விழிப்புடனான இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் முன்னோக்கிய பார்வையிலமைந்த நிதியியல் திட்டமிடல் என்பவற்றினூடாக எமது நிதியியல் மூலதனமானது ஆர்வலர்களுக்கான பெறுமதி உருவாக்கத்தின் வலுவான செயற்படுத்துநரொருவராகத் தொடர்ந்திருப்பதனை நாம் நிச்சயப்படுத்துகின்றோம்.

## முகாமைத்துவ அணுகுமுறை

நிதியியல் மூலதனத்தின் முன்மதியுடைய மற்றும் உபாய முகாமைத்துவமானது நீடித்து நிலைத்திருக்கக்கூடிய பெறுமதியினை உருவாக்குவதற்கும் நீண்டகால நிதியியல் ரீதியாகத் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையினை நிச்சயப்படுத்துவதற்கும் எமது திறனை மையமாகக் கொண்டுள்ளது. எமது அணுகுமுறையானது ஒழுக்கவியலினையுடைய நிதியியல் முகாமைத்துவம், ஆற்றல்வாய்ந்த முதலீட்டு நடைமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் இணங்குவிப்பிற்கானதோர் அர்ப்பணிப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, எமது கடப்பாடுகளை நிறைவேற்றுவதனை இயலச்செய்கின்ற வேளையில் எதிர்கால வளர்ச்சியை ஊக்குவிக்கின்றது.

நிதியியல் மூலதனத்தை முகாமைசெய்வதில், திரவத்தன்மை, கடன் தீராற்றல் மற்றும் இலாபத்தன்மை ஆகியவற்றிற்கான தேவையை சமநிலைப்படுத்துவதில் முனைப்புமிக்க உபாயமொன்றினை நாம் பின்பற்றினோம். மூலதனப் போதுமான தன்மையினைப் பேணுதல், வியாபாரத் தொடர்ச்சிக்கு ஆதரவளித்தல், நாட்டமுள்ளோரின் செல்வத்தை மேம்படுத்தல் என்பவற்றிற்குத் தொழிற்பாட்டு ரீதியான மற்றும் உபாய ரீதியான முன்னுரிமைகளில் நிதியியல் மூலவளங்களைக் கவனமாக ஒதுக்கீடு செய்வதனை இது உள்ளடக்கின்றது.

நிதியியல் மூலதனத்தின் மேற்பார்வை மற்றும் ஆளுகை என்பன கணக்காய்வுக் குழு, முதலீட்டுக் குழு மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவக் குழு போன்ற பிரத்தியேகக் குழுக்களினால் ஆதரவளிக்கப்பட்டு வலுவான கட்டமைப்பொன்றினுள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இக்குழுக்கள் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூம் தன்மை மற்றும் இலங்கைக் காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு மற்றும் ஏனைய தொடர்புடைய ஆர்வலர்களின் எதிர்பார்க்கைகளுடன் இசைந்திருப்பதனை நிச்சயப்படுத்துவதில் சபைக்கு உதவுகின்றன.

பொருளாதார நிச்சயமற்றதன்மைகள் மற்றும் வளர்ச்சியடைந்து வருகின்ற ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள் என்பன மூலம் வடிவமைக்கப்பட்ட தொழிற்பாட்டுச் சூழலொன்றில், போதியளவிலான திரவத்தன்மைத் தாங்கியிருப்புக்களைப் பேணுதல், மூலதனப் போதுமான தன்மை மட்டங்களைப் பூர்த்தி செய்தல் மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டினைப் பாதுகாத்தல் என்பவற்றினை மேற்கொள்ள நாங்கள் தொடர்ந்தும் திடசங்கற்பம் பூண்டுள்ளோம். விழிப்புடனான இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் முன்னோக்கிய பார்வையிலமைந்த நிதியியல் திட்டமிடல் என்பவற்றினூடாக எமது நிதியியல் மூலதனமானது ஆர்வலர்களுக்கான பெறுமதி உருவாக்கத்தின் வலுவான செயற்படுத்துநரொருவராகத் தொடர்ந்திருப்பதனை நாம் நிச்சயப்படுத்துகின்றோம்.

## நிதிசார் செயலாற்றல்

### பொதுநோக்கு

ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பொதுக் காப்புறுதியானது தமது ஆர்வலர்களுக்கு நீடித்து நிலைத்திருக்கக்கூடிய பெறுமதியினை வழங்குவதற்காக அதன் நிதியியல் மூலதனத்தின் முன்மதியுடைய முகாமைத்துவத்திற்குத் தொடர்ந்து முன்னுரிமை அளித்துள்ளது. மூலதன முகாமைத்துவத்தில் இக்கவனம் செலுத்துதலானது கம்பனி தொடர்ந்தும் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையினைக் கொண்டிருப்பதனையும் காப்புறு பூட்கை உடமையாளர்கள் மற்றும் பங்குதாரர்களுக்கான அதன் கடப்பாடுகளை ஒரே மாதிரியாகப் பூர்த்தி செய்யக்கூடியதாயிருப்பதனையும் நிச்சயப்படுத்தியுள்ளது. எமது நிதியியல் மூலதனத்தின் தொடர்ச்சியான வளர்ச்சியானது எமது உபாயக் குறிக்கோள்களை அடைதல், எமது தொழிற்பாடுகளை வலுப்படுத்தல் மற்றும் பரந்தளவிலான பொருளாதாரத் தோற்றப்பாட்டிற்குச் சாதகமான பங்களிப்பினை வழங்குதல் என்பவற்றிற்கு முக்கியமானதாகத் திகழ்கின்றது.

இவ்வறிக்கை ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் கீழ் முன்னைய ஆண்டின் பெறுபேறுகளுடனான நிலையான தன்மையினையும் ஒப்பீட்டினையும் நிச்சயப்படுத்தும் பொருட்டு பொதுக் காப்புறுதித் தொழிலின் முழுமையான ஆண்டு ரீதியிலான செயலாற்றத்தினைப் பிரதிபலிக்கின்றது.

## நிதியியல் செயலாற்றல்

### மொத்த எழுதப்பட்ட கட்டுறிதி

2024 நிதியாண்டில் ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பொதுக் காப்புறுதியானது ரூ. 22,986 மில்லியன் தொகையிலான வருவாயினையும் ரூ. 25,333 மில்லியன் தொகையிலான மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணத்தினையும் அடைந்தமையானது முறையே 8.9 சதவீதம் மற்றும் 9.5 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியினைப் பிரதிபலித்து, கம்பனியின் தற்போதைய சந்தை வலிமையினை எடுத்துக்காட்டுகின்றது. 2019 தொடக்கம் 2024 வரையான ஐந்து ஆண்டு காலப்பகுதியில், மொத்த எழுதப்பட்ட கட்டுறிதியில் 5.95 சதவீதம் கொண்ட கூட்டு ஆண்டு வளர்ச்சி வீதமொன்றினை கம்பனி பதிவுசெய்தது. ஆண்டு காலப்பகுதியில் ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பொதுக் காப்புறுதியானது ஒட்டுமொத்த பொதுக் காப்புறுதித் தொழில் சந்தையில் முன்னணி இடத்தினைப் பிடித்தது.



2024இல், ஒட்டுமொத்த மொத்த எழுதப்பட்ட கட்டுநிதியானது பின்வரும் வர்த்தக வகுப்புக்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டது.

| வகை | மொத்த எழுதப்பட்ட கட்டுநிதித் தொகை (ரூ. மில்.) |
|---|---|
| தீ மற்றும் பொறியியல் சேவை | 2,963 |
| மோட்டார் சேவை | 14,218 |
| கடல்சார் சேவை | 1,004 |
| சுகாதார சேவை | 3,803 |
| நானாவித சேவை | 3,343 |
| மொத்த எழுதப்பட்ட கட்டுநிதித் தொகை | **25,333** |




### மோட்டார் காப்புறுதிக்கான மொத்த எழுதப்பட்ட கட்டுநிதி

ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பொதுக் காப்புறுதியானது முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூ. 13,508 மில்லியன் தொகையுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் நிதியாண்டில் ரூ. 14,218 மில்லியனிற்கான மொத்த எழுதப்பட்ட கட்டுநிதி அதிகரிப்புடன் மோட்டார் காப்புறுதித் துறையில் தொடர்ந்து முன்னிலை வகித்தது. இது 5.3 சதவீத வளர்ச்சியொன்றினைப் பிரதிநிதித்துவப்படுத்தி, மேலும் இப்போட்டித்தன்மைவாய்ந்த சந்தைப் பிரிவில் கம்பனியின் மேலாதிக்க நிலையினை மேலும் உறுதிப்படுத்துகின்றது.




### மோட்டார் அல்லாத காப்புறுதிக்கான மொத்த எழுதப்பட்ட கட்டுநிதி

மோட்டார் அல்லாத காப்புறுதிப் பிரிவானது முன்னைய நிதியாண்டான 2023இல் பதிவுசெய்யப்பட்ட ரூ. 9,637 மில்லியன் தொகையுடன் ஒப்பிடுகையில் 2024ஆம் நிதியாண்டில் ரூ. 11,114 மில்லியன் தொகையிலான மொத்த எழுதப்பட்ட கட்டுநிதியொன்றினைப் பதிவுசெய்தமையானது 15.3 சதவீத அதிகரிப்பொன்றினைப் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளது.




### மீள்காப்புறுதியாளர்களுக்கு ஒப்படைக்கப்பட்ட கட்டுநிதி

கம்பனியின் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பின் இன்றியமையாத கூறொன்றாக மீள்காப்புறுதி தொடர்ந்தும் திகழ்ந்து, இடர்நேர்வின் வினைத்திறன்மிக்க மாற்றலினையும் இயக்கவாற்றல் வாய்ந்த தொழில் சூழலொன்றில் மூலதனப் பாதுகாப்பினையும் இயலச் செய்கின்றது. 2024 நிதியாண்டு காலப்பகுதியில், மீள்காப்புறுதியாளர்களுக்கு ஒப்படைக்கப்பட்ட கட்டுநிதியானது முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூ. 5,701 மில்லியன் தொகையுடன் ஒப்பிடுகையில் ரூ. 7,253 மில்லியன் தொகையாக விளங்கியமையானது 27 சதவீத அதிகரிப்பொன்றினைப் பிரதிபலித்தது.

மீள்காப்புறுதிக் கட்டுநிதிகளின் மிகப்பெரிய பங்கு மோட்டார் அல்லாத வகுப்புகளுக்குக் காரணமாயமைந்து, ஒப்படைக்கப்பட்ட கட்டுப்பணங்களில் ரூ. 5,103 மில்லியன் தொகைக்கு வகைகூறியது. வேலைநிறுத்தம், கலவரம், பொது மக்கள் கிளர்ச்சி மற்றும் பயங்கரவாதப் பாதுகாப்புக் கட்டுநிதிகளின் 100 சதவீத கட்டாய ஒதுக்கீட்டினை 2024 ஜனவரி 01 தொடக்கம் நடைமுறைக்கு வரும் விதத்தில் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கு மேற்கொள்ள வேண்டியதன் முதன்மைக் காரணமாக மோட்டார் காப்புறுதி ஒதுக்கீடுகள் ஆண்டு காலப்பகுதியில் அதிகரித்து, மொத்தமாக ரூ. 2,150 மில்லியன் தொகையாக விளங்கின. இது முன்னைய ஏற்பாட்டிலிருந்து கணிசமானளவிலான மாற்றமொன்றினைக் குறித்துக்காட்டுவதுடன், இதன் கீழ் 12 சதவீத கட்டுநிதி மாத்திரமே ஒதுக்கீடுசெய்யப்பட்டது.

### தேறிய அனுகூலங்கள், கோரல்கள் மற்றும் தொழிற்பாட்டு மற்றும் நிர்வாகச் செலவுகள்

இலங்கையின் காப்புறுதித் துறையில் சந்தை முன்னோடியா உள்ள, ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பொதுக் காப்புறுதியானது 2024 இல் ரூ. 10,510 மில்லியன் தொகையிலான கோரல்களை அறிக்கையிடுவதன் மூலம் காப்புறு பூட்கை உடமையாளர்களுக்கான தமது தொடர்ச்சியான அர்ப்பணிப்பினை எடுத்துக்காட்டியது. இது கடப்பாடுகளை நிறைவேற்றுவதிலும் நம்பிக்கைமிக்க பாதுகாப்பினை வழங்குவதிலும் கம்பனியின் நம்பகத்தன்மையினைப் பிரதிபலிக்கின்றது. கம்பனி கோரல்களிற்கான கொடுப்பனவுகளை உடனடியாகத் தொடர்ந்து செலுத்தி வருவதுடன் நம்பகத்தன்மை மற்றும் வாடிக்கையாளர் நம்பிக்கைக்கான அதன் நற்பெயரை மேலும் வலுப்படுத்துகின்றது.

தொழிற்பாட்டுச் செலவுகள் 2023 நிதியாண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூ. 7,137 மில்லியன் தொகையுடன் ஒப்பிடுகையில் (2023 நிதியாண்டில் இலங்கை அபிவிருத்தி முறிகளின் பெறுமதியிழப்புத் திரும்பல்கள் நீங்கலாக) 2024 நிதியாண்டில், ரூ. 8,144 மில்லியன் தொகைக்கு 14.1 சதவீதத்தினால் அதிகரித்துக் காணப்பட்டன. இவ்வதிகரிப்பானது உயர்ந்தளவிலான சம்பளச் செலவுகள், வணிகக் கையகப்படுத்தல் செலவுகள் மற்றும் ஏனைய நிர்வாகச் செலவுகளால் முதன்மையாக உந்தப்பட்டுக் காணப்பட்டது.

### உறப்பட்ட தேறிய கோரல்கள்




### வரிக்குப் பின்னரான இலாபம்




## இலாபத்தன்மை

கம்பனி 2024ஆம் நிதியாண்டில் ரூ. 4,039 மில்லியன் தொகையிலான வரிக்கு முன்னரான இலாபமொன்றினையும் ரூ. 3,286 மில்லியன் தொகையிலான வரிக்குப் பின்னரான இலாபமொன்றினையும் பதிவுசெய்தமையானது தொடர்ச்சியான நிதியியல் உறுதிப்பாட்டினைப் பிரதிபலித்தது. இருப்பினும், வரிக்குப் பின்னரான இலாபமானது ரூ. 4,344 மில்லியன் தொகையிலான முன்னைய ஆண்டின் இலாபத்துடன் ஒப்பிடுகையில் 24.4 சதவீத வீழ்ச்சியொன்றினைப் பிரதிபலிக்கின்றது. இவ்வீழ்ச்சியானது மூலதனக் கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு முதன்மைக் காரணமாயமைந்து, முதலீட்டு வருமானத்தில் ரூ. 475 மில்லியன் தொகையளவிலான குறைவொன்றிற்கு வழிவகுத்தது. மேலும், 2023ஆம் நிதியாண்டில் ரூ. 2,203 மில்லியன் தொகையிலான இலங்கை அபிவிருத்தி முறிகளின் பெறுமதியிழப்பு ஏற்பாட்டின் திரும்பலும் ஆண்டிற்கு ஆண்டு ஒப்பீட்டில் தாக்கம்செலுத்தியது.

### வரிக்கு முன்னரான இலாபம்




## செலுத்தப்பட்ட வரி

ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பொதுக் காப்புறுதியானது 2024 பெப்ரவரி 01ஆம் திகதியிலிருந்து 2024 இன் 11 மாத காலப்பகுதியில் இலங்கை அரசாங்கத்திற்கு ரூ. 3,481 மில்லியன் தொகையிலான வரி செலுத்தியமையானது தேசிய பொருளாதாரத்திற்கு அதன் தொடர்ச்சியான பங்களிப்பினையும் அதன் அரசிறைக் கடப்பாடுகளின் பின்பற்றுகையினையும் எடுத்தியம்புகின்றது.

## நிதியியல் நிலைமை

### சொத்துகள் மற்றும் பொறுப்புகள்

2011ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க காப்புறுதித் தொழிலை ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தின் பிரிவு 53 இற்கமைய, நீண்ட கால காப்புறுதித் தொழில்கள் மற்றும் பொதுக் காப்புறுதித் தொழில்கள் என்பன 2024 பெப்ரவரி 1 ஆம் திகதியிலிருந்து இரண்டு தனித்தனி சட்ட நிறுவனங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. (மேலதிக தகவல்களுக்கு குறிப்பு 39 இனைப் பார்க்கவும்)

இதன் விளைவாக, மொத்தச் சொத்துக்கள் 2023 இல் பதிவுசெய்யப்பட்ட ரூ. 93,387 மில்லியன் தொகையுடன் ஒப்பிடுகையில் 2024 இல் ரூ. 51,134 மில்லியனிற்கு 45.2 சதவீதத்தினால் குறைவடைந்தன. இக்குறைப்பு பிரிவாக்கத்தின் நேரடி விளைவொன்றாகக் காணப்படுகின்ற வேளையில், மூலதனக் கட்டமைப்பு சீராக்கப்பட்டு, ஏற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில் புதிதாகக் கட்டமைக்கப்பட்ட நிறுவனங்களுக்கிடையில் சொத்துக்கள் மீளொதுக்கீடு செய்யப்பட்டன.

### மொத்தச் சொத்துக்கள்



மொத்தப் பொறுப்புக்கள் கம்பனி பிரிக்கப்பட்டதனைத் தொடர்ந்து கட்டமைப்புசார் மாற்றங்களின் முக்கிய காரணமாக 2023இல் பதிவுசெய்யப்பட்ட ரூ. 31,662 மில்லியன் தொகையிலிருந்து 2024இல் ரூ. 29,155 மில்லியன் தொகைக்குக் குறைவடைந்தன. காப்புறுதி ஒப்பந்தப் பொறுப்புக்கள் 2023 இல் பதிவுசெய்யப்பட்ட ரூ. 20,496 மில்லியன் தொகையிலிருந்து சொற்பளவு குறைவடைந்து 2024 இல் ரூ. 20,441 மில்லியன் தொகையாக விளங்கின. ஏனைய பொறுப்புக்கள் 2023 இல் பதிவுசெய்யப்பட்ட ரூ. 11,160 மில்லியனிலிருந்து ரூ. 8,714 மில்லியனிற்குக் குறைவடைந்தன

## நிதியியல் முதலீடுகள்

2024 ஆம் நிதியாண்டிற்கான பங்குரிமை மீதான கம்பனியின் வருவாயானது 18 சதவீதமாகக் காணப்பட்டமையானது 2023ஆம் நிதியாண்டில் அறிக்கையிடப்பட்ட 7 சதவீதத்திலிருந்து குறிப்பிடத்தக்க முன்னேற்றமொன்றினைப் பிரதிபலிக்கின்றது. இருப்பினும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் சொத்துக் கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக, நிதியியல் சொத்துக்களிலிருந்தான முதலீட்டு வருமானமானது 2023 இல் பதிவுசெய்யப்பட்ட ரூ. 5,777 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 இல் 7.8 சதவீதத்தினால் ஆண்டிற்கு ஆண்டு வீழ்ச்சியடைந்து ரூ. 5,321 மில்லியனாக விளங்கியது.

| நிதியியல் சாதனங்கள் | தொகை (ரூ. மில்.) |
|---|---|
| அரச பிணையங்கள் | 11,228 |
| நிலையான வைப்புக்கள் | 3,310 |
| தொகுதிக் கடன்கள் | 5,852 |
| பட்டியலிடப்பட்ட/பட்டியலிடப்படாத இருப்பு | 10,320 |
| வர்த்தக ஆவணங்கள் | 1,718 |
| கூறு நம்பிக்கைகள் | 3,096 |
| மொத்த நிதியியல் முதலீடு | **35,524** |

### முதலீட்டு உள்ளடக்கம்




### நிதியியல் முதலீடுகளிலிருந்தான முதலீட்டு வருமானம்




## பொதுக் காப்புறுதித் தொழிலின் உறுதிப்பாடு

காப்புறுதித் தொழிலை ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தின் பிரிவு 26(1) இற்கமைய, அனைத்துக் காப்புறுதியாளர்களும் தமது பொதுக் காப்புறுதித் தொழிலிற்கு ஆற்றல்வாய்ந்த கடன் தீராற்றல் மற்றும் இடர்நேர்வின் அடிப்படையிலமைந்த மூலதன போதுமான தன்மை விகிதங்கள் என்பவற்றினைப் பேண வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கைக் காப்புறுதிப் பொதுத் தொழிலானது கடந்த ஐந்து ஆண்டுகளில் குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளிலும் பார்க்க நன்கு மேலாக அதன் மூலதன போதுமான தன்மை விகிதங்களைத் தொடர்ந்து பேணியுள்ளமையானது எமது நிதியியல் உறுதிப்பாடு குறித்த ஆர்வலர்களின் நம்பகத்தன்மையினையும் நம்பிக்கையினையும் வலுப்படுத்துகின்றது. 2024ஆம் நிதியாண்டில், கம்பனியானது 277 சதவீதம் கொண்ட மூலதன போதுமான தன்மை விகிதமொன்றினை அறிக்கையிட்டமையானது 2023 ஆம் நிதியாண்டில் பதிவுசெய்யப்பட்ட 226 சதவீதத்திலிருந்தான குறிப்பிடத்தக்க முன்னேற்றமொன்றினைப் பிரதிபலித்தது.

### மூலதனப் போதுமான தன்மை விகிதம்



# தயாரிக்கப்பட்ட மூலதனம்

நீடித்து நிலைத்திருக்கின்ற பெறுமதியினை உருவாக்கின்ற, பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிக்கின்ற மற்றும் நீண்டகால உறுதிப்பாட்டிற்கான அர்ப்பணிப்பினை வலுப்படுத்துகின்ற வகையிலான சொத்துக்களில் முதலீடு செய்வதே ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பொதுக் காப்புறுதியின் உபாய ரீதியிலான கவனம் செலுத்துதலாகக் காணப்படுகின்றது.

## தயாரிக்கப்பட்ட மூலதனம் மற்றும் அதன் பெறுமதியினை உருவாக்கின்ற எமது செயன்முறை

ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பொதுக் காப்புறுதியின் தயாரிக்கப்பட்ட மூலதனமானது அதன் அலுவலகங்கள், கிளைகள், கணினிகள் மற்றும் உபகரணங்கள், டிஜிட்டல் தளங்கள் மற்றும் வலையமைப்பு உட்கட்டமைப்பு என்பவற்றினை உள்ளடக்கியது. பௌதீக வலையமைப்பானது 142 கிளைகள், 59 முகவராண்மைத் தொழில் மேம்பாட்டு மையங்கள் மற்றும் லங்கா ஹொஸ்பிடல்ஸ் கோப்பரேஷன் பி.எல்.சியில் ஒரு கருமபீடமென்றவாறு விரிவடைந்து காணப்படுகிறது. எமது வலையமைப்பானது இலங்கையில் உள்ள அனைத்து 9 மாகாணங்களையும் 25 மாவட்டங்களையும் உள்ளடக்கியது.

தனிப்பட்ட இடைத்தொடர்புகளை நாம் மதிக்கின்ற அதேவேளையில், எமது வாடிக்கையாளர்களுக்கு வசதியான அணுகலினை நிச்சயப்படுத்துவதற்கு மெய்நிகர் தகவல்தொடர்பு வழிமுறைகளையும் நாம் வழங்குகின்றோம். எமது 24 மணி நேர அழைப்பு மையம் வாடிக்கையாளர் ஆதரவிற்காகக் கிடைப்பனவாயுள்ளதுடன் எமது கம்பனித்துறை இணையத்தளமும் 24/7 கிடைப்பனவாயுள்ளமையானது எமது சாதனம் மற்றும் பணிகளுக்கான தகவல்களினையும் அணுகலினையும் வழங்குகின்றது.

வசதி மற்றும் போட்டித்தன்மையை மேலும் மேம்படுத்துவதற்குச் செல்லிடத் தொலைபேசிக் கொடுப்பனவுத் தீர்வுகள் மற்றும் ஏனைய ஒருங்கிணைந்த வழிமுறைகளை நாங்கள் வழங்கி, இன்றைய இயக்கவாற்றல் வாய்ந்த சந்தையில் எமது பணிகளுக்கான தடங்கலற்ற அணுகலினை நிச்சயப்படுத்துகின்றோம்.

### முக்கிய அம்சங்கள்

**4**
முகவராண்மைத் தொழில் மேம்பாட்டு மையங்கள் திறக்கப்பட்டன

**1**
கிளை இடமாற்றம் செய்யப்பட்டது

**1**
கிளை புதுப்பிக்கப்பட்டது

## பெறுமதி உருவாக்கக் குறிக்கோள்களை நிறைவேற்றுதல்

### கிளை விரிவாக்கம் மற்றும் இடமாற்றம்

தொழில் ஆற்றல்வாய்ந்த தன்மை தொடர்பில் கவனம் செலுத்துகின்ற கிளை விரிவாக்கங்களுக்கான நன்கு திட்டமிடப்பட்ட உபாயமொன்றினை ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பொதுக் காப்புறுதி கொண்டுள்ளது. கிளை விரிவாக்கத்திற்காக விரைவான நகரமயமாக்கலுடன் வளர்ச்சியடைந்து வருகின்ற சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நகரங்களை நாம் இலக்காகக் கொண்டுள்ளோம். உகந்த கிளை ஊடுருவல் விகிதம், போதுமான தன்மையிலான சனத்தொகை அடர்த்தி மற்றும் போதுமான வருமான மட்டங்கள் உள்ள பகுதிகளில் புதிய கிளைகள் அல்லது முகவராண்மைத் தொழில் மேம்பாட்டு மையங்களை அமைப்பதனை எமது அணுகுமுறை உள்ளடக்கியுள்ளது. இது எமக்குச் செலவுகள் மற்றும் புதிய தொழில் வாய்ப்புக்களைச் சமநிலைப்படுத்துவதற்குத் துணைபுரிகின்றது. கிளை இடமாற்றத்திற்கும் அதே உபாயத்தையே நாம் பின்பற்றுவதுடன் இதன் அடிப்படையிலேயே 2024 காலப்பகுதியில் நகர அலுவலகக் கிளை மாற்றம்செய்யப்பட்டது.

### கிளை வினைத்திறனை மேம்படுத்தல்

எமது கிளை வலையமைப்பின் செயற்திறனை மேம்படுத்தும் விடயத்தில், நாம் விரிவாக்கத்தில் மாத்திரமன்றி, எமது கிளைகளின் வினைத்திறனையும் பௌதீகத் தோற்றத்தையும் மேம்படுத்துவதிலும் கவனம் செலுத்துகின்றோம். புத்தளத்தில் ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பொதுக் காப்புறுதிக்குச் சொந்தமான புதிய கட்டிடத்தின் கட்டுமானம் உட்பட, எமது ஐந்து கிளைகளை அண்மையில் மேம்படுத்தி, கிளைக்குப் புத்துணர்ச்சியூட்டும் புதிய தோற்றமொன்றினை அளித்திருக்கின்றோம். 2024 காலப்பகுதியில் புதுப்பித்தல் நடவடிக்கைகள் நிறைவடைந்தன.

## நிலையான சொத்துக்களில் முதலீடுகள்

| | **2024ஆம் நிதியாண்டு ரூ. '000** | 2023ஆம் நிதியாண்டு ரூ. '000 | 2022ஆம் நிதியாண்டு ரூ. '000 | 2021ஆம் நிதியாண்டு ரூ. '000 | 2020ஆம் நிதியாண்டு ரூ. '000 |
|---|---|---|---|---|---|
| நிலையான சொத்துக்களுக்கான சேர்க்கைகள் | **147,144** | 371,582 | 515,245 | 256,147 | 231,437 |
| நிலையான சொத்துக்களின் தேறிய புத்தகப் பெறுமதி | **611,198** | 12,644,259 | 12,763,092 | 12,737,635 | 10,867,358 |

குறிப்பு: 2024 இற்கான எண் தொகைகள் ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பொதுக் காப்புறுதிக்கு மாத்திரம் உரித்தானவையாயுள்ள (பிரிவாக்கம் பற்றிய தகவல்களுக்கு 39ஆவது குறிப்பிலுள்ள பிரிவாக்கத்தினைப் பார்க்கவும்) வேளையில் ஒப்பீட்டு ரீதியிலான எண் தொகைகள் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கானதாகக் காணப்படுகின்றன.

## கிளை ஊடுறுவல் எதிர் சனத்தொகை அடர்த்தி

| மாகாணம் | **2024ஆம் நிதியாண்டு ரூ. '000** | 2023ஆம் நிதியாண்டு ரூ. '000 | 2022ஆம் நிதியாண்டு ரூ. '000 |
|---|---|---|---|
| | கிளை ஊடுருவல் (முகவராண்மைத் தொழில் மேம்பாட்டு மையங்கள் மற்றும் எல்எச்சீ இலுள்ள கருமபீடங்கள் உள்ளடங்கலாக கிளைகளின் எண்ணிக்கை) | (கிளைகள்/ முகவராண்மைத் தொழில் மேம்பாட்டு மையங்கள் உள்ளடங்கலாக கிளை ஊடுருவல்களின் எண்ணிக்கை) | (கிளைகள்/ சீஎஸ்சீ உள்ளடங்கலாக கிளை ஊடுருவல்களின் எண்ணிக்கை) |
| மேற்கு மாகாணம் | **64** | 65 | 69 |
| தெற்கு மாகாணம் | **32** | 32 | 32 |
| மத்திய மாகாணம் | **15** | 18 | 17 |
| வடக்கு மாகாணம் | **18** | 14 | 10 |
| வட மத்திய மாகாணம் | **15** | 13 | 12 |
| கிழக்கு மாகாணம் | **11** | 11 | 11 |
| வட மேற்கு மாகாணம் | **25** | 25 | 25 |
| சப்ரகமுவ மாகாணம் | **12** | 13 | 13 |
| ஊவா மாகாணம் | **10** | 10 | 09 |

## 2024இல் நிறைவடைந்த செயற்றிட்டங்கள் மற்றும் 2025 இற்கான திட்டம்




### 2024 இல் நிறைவடைந்த செயற்றிட்டங்கள்

- முழங்காவில், மானிப்பாய் பளை மற்றும் நைவல ஆகிய இடங்களில் புதிய முகவராண்மைத் தொழில் மேம்பாட்டு மையங்கள்
- நகர அலுவலகக் கிளை இடமாற்றம் செய்யப்பட்டது
- புத்தளம் கிளை புதுப்பிக்கப்பட்டது

### 2025 இற்கான முன்னோக்கிய பார்வையிலமைந்த திட்டம்

- புதிய கிளைத் திறப்புக்கள் – 0
- புதுப்பித்தல்கள் – 5 (கம்புறுபிட்டிய, ஹம்பாந்தோட்டை, கலவான, வத்தளை, கிரியுள்ள)
- புதுப்பித்தல்கள் – 2 (ரிக்கிலகஸ்கட – சொந்த ஆதனம், பக்கமூன – வாடகைக் கட்டிடம்)
- இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் சொந்த ஆதனங்களில் புதிய கட்டுமானச் செயற்றிட்டம் – 5 (நுவரெலியா, பதுளை, நகர அலுவலகம் கொழும்பு, களுத்துறை மற்றும் யாழ்ப்பாணம்)
- முகவராண்மைத் தொழில் மேம்பாட்டு மையங்கள் அதிகரித்து வருகின்றமையினால், ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பொதுக் காப்புறுதியின் நாடளாவிய ரீதியிலான ஊடுறுவலை அதிகரிக்கும் பொருட்டு குறிப்பிட்ட வழிமுறையின் பின்பற்றுகையினால் அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் புதிய 29 முகவராண்மைத் தொழில் மேம்பாட்டு மையங்களை நிறுவுவதன் மூலம் எமது வலையமைப்பினை மேலும் விரிவுபடுத்தத் திட்டமிட்டுள்ளோம்.

# இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன பிராந்திய வரைபடம் – 2024




## மத்திய மாகாணம்

| | |
|---|---|
| கிளை – 12 | திகன, கம்பளை, கண்டி நகரம், கண்டி பிரதான, கடுகஸ்தோட்டை, கேகாலை, மாத்தளை, மாவனெல்ல, மாவத்தகம, நாவலப்பிட்டி, பிலிமத்தலாவ, ரிக்கிலகஸ்கட |
| முகவராண்மைத் தொழில் மேம்பாட்டு மையங்கள் – 5 | அரநாயக்க, புலத்கொஹூபிட்டிய, கலகெதர, பேராதனை, வத்தேகம |

## கிழக்கு மாகாணம்

| | |
|---|---|
| கிளை – 5 | அக்கரைப்பற்று, மட்டக்களப்பு, கல்முனை, கந்தளாய், திருகோணமலை |
| முகவராண்மைத் தொழில் மேம்பாட்டு மையங்கள் – 3 | களுவாஞ்சிகுடி, பொத்துவில், மூதூர் |

## கிழக்கு மாகாணம் 02

| | |
|---|---|
| கிளை – 2 | அம்பாறை, சம்மாந்துறை |

## வட மத்திய மாகாணம்

| | |
|---|---|
| கிளை – 10 | அநுராதபுரம், அரலகங்வில, பகமுன, தெஹியத்தகண்டிய, ஹிங்குராக்கொட, ஹொரோவ்பத்தனை, கதுருவெல, கெக்கிராவ, மெதவாச்சிய, பதவி பராக்கிரமபுர. |
| முகவராண்மைத் தொழில் மேம்பாட்டு மையங்கள் – 3 | ஹபரணை, மஹாஓயா, மெதிரிகிரிய |

## வடக்கு மாகாணம்

| | |
|---|---|
| கிளைகள் – 8 | சங்கானை, சாவகச்சேரி, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, நெல்லியடி, வவுனியா |
| முகவராண்மைத் தொழில் மேம்பாட்டு மையங்கள் – 5 | சுன்னாகம், மல்லாவி, கைதடி, விசுவமடு, கொடிகாமம் |

## இரத்தினபுரி

| | |
|---|---|
| கிளைகள் – 9 | அவிசாவளை, பலாங்கொட, எஹலியகொட, எம்பிலிபிட்டிய, கஹவத்த, கலவான, பல்லேபெத்த, இரத்தினபுரி, ருவன்வெல்ல |
| முகவராண்மைத் தொழில் மேம்பாட்டு மையங்கள் – 2 | தெரணியகல, ஹங்வெல்ல |

## தெற்கு 1

| | |
|---|---|
| கிளைகள் – 12 | அளுத்கம, அம்பலாங்கொட, பத்தேகம, பண்டாரகம, எல்பிட்டிய, காலி, ஹொரண, களுத்துறை, மத்துகம, பாணந்துறை, தல்கஸ்வல, உடுகம |
| முகவராண்மைத் தொழில் மேம்பாட்டு மையங்கள் – 6 | பதுரலிய, ஹபரதுவ, கராபிட்டிய, பிடிகல, தனிபொல்கஹா, உரகஹா |

## தெற்கு 2

| | |
|---|---|
| கிளைகள் – 7 | அக்குரஸ்ஸ, கம்புறுபிட்டிய, தெனியாய, டிக்வெல்ல, ஹக்மன, மாத்தறை, வெலிகம |
| முகவராண்மைத் தொழில் மேம்பாட்டு மையங்கள் – 9 | தெய்யந்தர, இமதுவை, கம்புறுபிட்டிய, கேகனதுர, மித்தெனிய, மொரவக, சூரியவெவ, ஊருபொக்க, வலஸ்முல்ல |

## தெற்கு 3

| | |
|---|---|
| கிளைகள் – 6 | தங்காலை, பெலியத்த, அம்பலாந்தோட்டை, நெலுவ, திஸ்ஸ மஹாராமய, ஹம்பாந்தோட்டை |

## மேல் மேற்கு

| | |
|---|---|
| கிளைகள் – 11 | கம்பஹா, ஜா-எல, கந்தானை, கொச்சிக்கடை, மாரவில, மினுவாங்கொடை, நீர்கொழும்பு, நிட்டம்புவ, வெயங்கொடை, வென்னப்புவ, யக்கல |
| முகவராண்மைத் தொழில் மேம்பாட்டு மையங்கள் – 11 | தங்கொடுவ, திவுலப்பிட்டிய, கணேமுல்ல, கிரில்லவல, கிரிந்திவெல, மஹாபாகே, மீரிகம, பூகொட, உடுகம்பொல, ஊராபொல, வெலிவேரிய |

## ஊவா

| | |
|---|---|
| கிளைகள் – 10 | பதுளை, பண்டாரவளை, பிபில, ஹட்டன், மஹியங்கனை, மொனராகலை, நுவரெலியா, வெலிமடை, வெல்லவாய |
| முகவராண்மைத் தொழில் மேம்பாட்டு மையங்கள் – 3 | பசறை, சியம்பலாண்டுவ, ஹெட்டிபொல |

## வயம்ப 1

| | |
|---|---|
| கிளைகள் – 10 | கிரிஉல்ல, குளியாபிட்டிய, குருநாகல் நகரம், குருநாகல் பிரதான, மெல்சிறிபுர, நாரம்மல, பொல்கஹவெல, ரம்புக்கன, ரிதீகம, வரகாபொல |
| முகவராண்மைத் தொழில் மேம்பாட்டு மையங்கள் – 5 | அலவ்வ, ஹெட்டிபொல, இப்பாகமுவ, கட்டுபொத, பன்னல, பொல்பிட்டிகம |

## வயம்ப 2

| | |
|---|---|
| கிளைகள் – 9 | ஆனமடுவ, சிலாபம், தம்புள்ளை, கலேவெல, கல்கமுவ, மஹவ, நிக்கவெரட்டிய, புத்தளம், தம்புத்தேகம, வாரியபொல |
| முகவராண்மைத் தொழில் மேம்பாட்டு மையங்கள் – 2 | ஆனமடுவ, நுரைச்சோலை |

## மேற்கு 1

| | |
|---|---|
| கிளைகள் – 8 | பத்தரமுல்ல, கொழும்பு நகர அலுவலகம், தெஹிவளை, கிருலப்பனை, மொரட்டுவ, நுகேகொட, பிடகோட்டே, இரத்மலானை |
| முகவராண்மைத் தொழில் மேம்பாட்டு மையங்கள் – 1 | மொரட்டுமுல்ல |
| கருமபீடம் – 1 | லங்கா ஹொஸ்பிடல் கருமபீடம் |

## மேற்கு 2

| | |
|---|---|
| கிளைகள் – 9 | கொழும்பு மெட்ரோ 1, கொழும்பு மெட்ரோ 10, கொழும்பு மெட்ரோ 11, கொழும்பு மெட்ரோ 2, கொழும்பு மெட்ரோ 3, கொழும்பு மெட்ரோ 4, கொழும்பு மெட்ரோ 6, கடவத்தை, கிரிபத்கொட |
| முகவராண்மைத் தொழில் மேம்பாட்டு மையங்கள் – 0 | |

## மேற்கு 3

| | |
|---|---|
| கிளைகள் – 8 | அதுருகிரிய, ஹோமாகம, இங்கிரிய, கடுவெல, கொட்டாவ, மஹரகம, மாலம்பே, பிலியந்தலை |
| முகவராண்மைத் தொழில் மேம்பாட்டு மையங்கள் – 1 | பாதுக்க |

## மேற்கு 4

| | |
|---|---|
| கிளை – 7 | பம்பலப்பிட்டி, பொரளை, கொட்டாஞ்சேனை, கொட்டிகாவத்தை, புறக்கோட்டை, ராகம, வத்தளை |
| முகவராண்மைத் தொழில் மேம்பாட்டு மையங்கள் – 1 | வெள்ளவத்தை |

# புலமைசார் மூலதனம்

தகவலினால் உந்தப்பட்ட காப்புறுதிப் பணிகளில் முன்னோடியாக சந்தையில் எமது தற்போதைய செயற்றிறன் மற்றும் போட்டித்தன்மையினைப் பேணுவதற்கு ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பொதுக் காப்புறுதியின் புலமைசார் மூலதனம் இன்றியமையாததொன்றாகும்.

### ஐக்கிய நாடுகளின் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தி இலக்குகளிற்கான எமது பங்களிப்பு

9 INDUSTRY, INNOVATION AND INFRASTRUCTURE

- தகவல் தொழில்நுட்ப முறைமைகளின் அபிவிருத்திக்கான முதலீடு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024இல் 30 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.
- தவிர்க்க முடியாத விற்பனைத்திறனை அங்கீகரிப்பதனை நோக்கி 05 தூண் அளவீட்டுடனான விற்பனையாளர் அடுக்கில் உள்ள பொதுக் காப்புறுதி நிபுணர்களுக்கான பிரத்தியேகமான அங்கீகாரம் மற்றும் சாதனையாளர் திட்டமான பொதுக் காப்புறுதியில் உயரிய சாதனையாளர் விருதினை அங்குரார்ப்பணம் செய்வதன் மூலம் புதிய உலகளாவிய முன்னுதாரணமொன்றினை உருவாக்கியது. ஆயுள் வகையில் மில்லியன் டொலர் வட்ட மேசைத் திட்டத்தின் இடைவெளியைப் பூர்த்திப் செய்வதற்கான பிரிவினைக்கு ஏற்ப பகிர்ந்தளிப்பு உபாயத்திற்கு அவசியமான புத்துருவாக்கமொன்றாக இது காணப்பட்டது.

12 RESPONSIBLE CONSUMPTION AND PRODUCTION

- தொழில்துறை இல. 01
- மிகவும் விரும்பப்படும் காப்புறுதி வர்த்தக நாமம்

### புள்ளிவிபரவியல் சிறப்பம்சங்கள்

**தகவல் தொழில்நுட்பத்தில் முதலீடு**

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் மூலதனச் செலவு முதலீடு

**ரூ. 192 மில்லியன்**

அதிகரித்ததுடன் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்திற்கான மொத்தச் செலவு 2024 காலப்பகுதியில்

**ரூ. 316 மில்லியன்**

அதிகரித்தது.

*குறிப்பு: ஒப்பீட்டு நோக்கத்திற்காக முழு ஆண்டின் செயலாற்றத்தினை வரைபடங்கள் பிரதிபலிக்கின்றன.*

### வர்த்தக நாம ஒப்புரவு

தேசத்தின் காப்புறுதியாளர் என்ற பட்டத்தினை வைத்திருக்கும் ஒரு சந்தை முன்னோடியாக, கம்பனியின் சிறந்த பணி தளம்பல்மிக்க பொருளாதார மற்றும் சமூக நிலைமைகளிற்கு மத்தியிலும் அதன் வர்த்தக நாமப் பெறுமதியினை மேம்படுத்தியுள்ளது. பொது காப்புறுதி வர்த்தக நாமப் பெறுமதியானது ரூ. 3.2 பில்லியன் தொகையாக விளங்குவதுடன் அதன் சொத்துத் தளமானது ரூ. 51.1 பில்லியனிற்கு அதிகரித்தது. இச்சாதனைகள் இலங்கையின் மிகப்பெரிய மற்றும் வலிமையான பொதுக் காப்புறுதி வழங்குநராக கம்பனியின் நிலையினை வலுப்படுத்துகின்றன.

### வர்த்தக நாமச் சாதனைகள்

வர்த்தக நாமமொன்றாக ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பொதுக் காப்புறுதியானது தொடர்ந்து மதிப்பில் வளர்ச்சியடைந்து வருவதுடன், இது அதன் வெற்றியீட்டுகின்ற விருதுகளின் எண்ணிக்கை மற்றும் பாராட்டுக்களினால் நிரூபிக்கப்பட்டுள்ளது. 2024 இல், இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் பொதுக் காப்புறுதி வர்த்தக நாமங்களை இவ்வாண்டின் "மிகவும் விரும்பப்படும் காப்புறுதி வர்த்தக நாமமாக" எல்.எம்.டி அங்கீகரித்தமையானது, தொடர்ச்சியாக 6 ஆவது ஆண்டாக மீண்டும் மீண்டும் கிடைக்கப்பெற்ற பாராட்டொன்றாகக் காணப்படுகின்றது. அதன் வலுவான சாதனை, வர்த்தக நாமப் படிமம் மற்றும் பல ஆண்டுகளாகக் கட்டமைக்கப்பட்ட நிறுவனசார் அறிவின் கருவூலத்துடன் ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பொதுக் காப்புறுதியானது அனைத்து ஆர்வலர்களுக்கும் அதன் வர்த்தக நாம வாக்குறுதியை வழங்குவதற்கு நன்கு தயார்நிலையிலுள்ளது. எமது அளவு, சந்தை, அறிவு மற்றும் திறன்களைக் கருத்தில் கொண்டு, வேறுபட்ட பெறுமதி முன்மொழிவுகள் மூலம் எமது வாடிக்கையாளர்களை விரிவுபடுத்த எமக்கு இயலுமாயமைந்துள்ளது. ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பொதுக் காப்புறுதியானது சிறந்த தரத்திலான சேவையினால் ஆதரவளிக்கப்பட்டு, தனது பன்முக வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ஒரு பரந்த உற்பத்தித் தொகுதியொன்றினைக் கொண்டுள்ளது.

ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பொதுக் காப்புறுதியானது 2008 தொடக்கம் சர்வதேச தரநியம அமைப்பின் 9001:2015 உடன் இசைந்து செல்லும் விதத்திலான தரக் கொள்கையொன்றினைக் கொண்டுள்ளதுடன், இது சர்வதேச தரநியம அமைப்பின் 9001:2015 தரநியமத் தேவைப்பாடுகளை கடுமையாக நடைமுறைப்படுத்துவதுடன் ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பொதுக் காப்புறுதி வாடிக்கையாளர்கள், ஊழியர்கள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் அமைப்புக்களின் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்கிறது.

கொள்கையானது "நாம் மேற்கொள்கின்ற எல்லாவற்றிலும் வாடிக்கையாளரிற்கு முதலிடம்" என்ற கம்பனியின் இலக்குகளைக் குறிக்கின்றது. இத்தத்துவம் அனைத்து அணிகளினாலும் உள்வாங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து இடங்களிலும் நடைமுறைப்படுத்தப்படுகின்ற அனைத்து உற்பத்திகள், சேவைகள் மற்றும் செயன்முறைகளுக்கான குறைந்தபட்ச தொழிற்பாட்டு தரநியமங்களை இக்கொள்கை வகுக்கின்றது. இச்சான்றிதழின் நோக்கம் ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பொதுக் காப்புறுதியின் பொறுப்பேற்றல், கோரல்கள், தீர்வு மற்றும் ஆதரவுப் பணிகளை உள்ளடக்கியது.


Certificate LK08/02138.02

SGS

Sri Lanka Insurance Corporation General Limited

HO: 21, Vauxhall Street, Colombo 02, Sri Lanka

Has been assessed under the management system of the certified organisation defined in the main certificate LK08/02138 as meeting the requirements of

**ISO 9001:2015**

For the following activities
General insurance underwriting, claim settlement and support services in Sri Lanka Insurance Corporation General Limited head office and its branches.

This certificate is valid from 26 June 2024 until 31 December 2026 and remains valid subject to satisfactory surveillance audits.
Issue 1.
The validity of this certificate depends on the validity of the main certificate.

Authorised by
Jonathan Hall
Global Head - Certification Services

SGS United Kingdom Ltd
Rossmore Business Park, Ellesmere Port, Cheshire, CH65 3EN, UK
t +44 (0)151 350-6666 - www.sgs.com

ISO 9001 SGS | UKAS MANAGEMENT SYSTEMS | MEMBER OF MULTILATERAL RECOGNITION ARRANGEMENT IAF

This document is an authentic electronic certificate for Client' business purposes use only. Printed version of the electronic certificate are permitted and will be considered as a copy. This document is issued by the Company subject to SGS General Conditions of certification services available on Terms and Conditions | SGS. Attention is drawn to the limitation of liability, indemnification and jurisdictional clauses contained therein. This document is copyright protected and any unauthorized alteration, forgery or falsification of the content or appearance of this document is unlawful.

Page 1 / 1

## தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உபாயம் மற்றும் கொள்கை

புதிய தயாரிப்புக்களை விரைவாக சந்தை வேகத்தில் வழங்குவதற்கும், வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்துவதற்கும், டிஜிட்டல் வழிமுறைகளை வலுப்படுத்துவதற்கும், தொழிற்பாடுகளை நெறிப்படுத்துவதற்கும், இடர்நேர்வுகளைத் தணிப்பதற்கும் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதன் அடிப்படையில் ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பொதுக் காப்புறுதிக்கான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உபாயம் கட்டமைக்கப்பட்டுள்ளது.

வாடிக்கையாளர் நடத்தை, கோரல்கள், போக்குகள் மற்றும் இடர்நேர்வு மதிப்பீடு பற்றிய ஆழமான நுண்ணோக்குகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தரவு முகாமைத்துவத்திற்கும் பகுப்பாய்வுகளுக்கும் நாம் முன்னுரிமை அளித்து, தனிப்பயனாக்கப்பட்ட சலுகைகள் மற்றும் செயலூக்கமான இடர்நேர்வு முகாமைத்துவ உபாயங்கள் என்பவற்றினை இயலச்செய்கின்றோம். இது அமைப்பு முழுவதும் தரவினால் உந்தப்பட்ட தீர்மானம் மேற்கொள்கின்ற கலாசாரமொன்றினை நோக்கிய நகர்விற்கு முகாமைத்துவத்திற்கு உதவுகின்றது.

வளர்ச்சியடைந்து வருகின்ற தொழில்நுட்பங்களிற்கான கிரமமான கண்காணிப்பு மற்றும் பின்பற்றுகை எமது உபாயத்துடன் ஒருங்கிணைந்ததாகக் காணப்பட்டு, இயக்கவாற்றல்மிக்க மற்றும் உயர் போட்டித்தன்மை கொண்ட காப்புறுதித் தோற்றப்பாட்டில் நாம் சுறுசுறுப்பாகவும் போட்டித்தன்மையுடனும் தொடர்ந்திருப்பதை நிச்சயப்படுத்துகின்றது.

## எமது முக்கிய கவனம் செலுத்தும் பகுதிகள் மற்றும் சாதனைகள்

**டிஜிட்டல் வாடிக்கையாளர் அனுபவம்:** தொலைபேசிச் செயலிகள், இணையத்தளங்கள் மற்றும் சமூக ஊடகத் தளங்கள் போன்ற டிஜிட்டல் தொடுதிரைகள் தடங்கலற்ற மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட வாடிக்கையாளர் அனுபவத்தினை வழங்க எமக்கு உதவுகின்றன. வாடிக்கையாளர்கள் கொள்கை தகவல்களை அணுக முடியும், கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியும், கோரல்களைத் தாக்கல் செய்ய முடியும் மற்றும் இந்த டிஜிட்டல் வழிமுறைகள் மூலம் உதவிகளை எளிதாகப் பெற முடியுமென்பது பெருமளவிலான திருப்திக்கும் விசுவாசத்திற்கும் வழிவகுக்கின்றது. தொலைபேசிச் செயலி மற்றும் இணையவழிப் புறையங்கள் எமது பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களுக்கு 24X7 என்ற முறையில் எங்களுடன் ஈடுபாடு கொள்வதற்குத் துணைபுரிகின்றன. இது பணம் செலுத்துவதற்கும், தொடர்புகொள்வதற்கும், கோரல் நிலையை பெறுவதற்கும் துணைபுரிகின்றது. பயண மற்றும் மோட்டார் புதுப்பித்தலுக்கு அப்பால் எமது இணையவழிச் சலுகையை நாம் மேம்படுத்தி, மூன்றாம் தரப்பு மோட்டார் வாகனப் பூட்கைகள் மற்றும் "மெடி60" பிளஸ் ஆகியவற்றின் பூட்கைக் கொள்வனவினை மீளாய்வின் கீழான ஆண்டு காலப்பகுதியில் அறிமுகப்படுத்தினோம்.

**மரபார்ந்த மைய-முறைமை நவீனமயமாக்கல் மற்றும் மேகத்தளப் பயன்பாடு:** இன்றைய வேகமாக வளரச்சியடைந்து வரும் டிஜிட்டல் தோற்றப்பாட்டில் போட்டித்தன்மையுடன் இருக்கவும், வினைத்திறனை மேம்படுத்தவும், பாதுகாப்பை மேம்படுத்தவும், புத்துருவாக்கங்களை உந்தச்செய்வதற்கும் அவசியமான தகவல் தொழில்நுட்ப நவீனமயமாக்கலில் நாம் தொடர்ந்து முதலீடு செய்கின்றோம். சுமூகமான ஒருங்கிணைப்புடன் பயன்பாட்டு நிரலாக்க இடைமுகத்தினூடாக ஏனைய முறைமைகளுடன் எமது மைய முறைமையினை மேம்படுத்துவதில் எமது முதலீட்டை நாம் மேம்படுத்துகிறோம். இது சுறுசுறுப்பு, அளவீட்டுத்திறன்மிக்க மற்றும் இணைப்பாட்டுத்தன்மை என்பவற்றினை மேம்படுத்த எமக்குத் துணைபுரிந்தது.

அளவீட்டுத்திறன், நெகிழ்ச்சித்தன்மை மற்றும் வினைத்திறனான செலவிடல் ஆகியவற்றிற்காக எமது செயலிகளை மேகத்தளத்திற்கு நகர்த்தத் தொடங்கினோம். விரும்பத்தக்க செயற்பாட்டிற்கமைய, பொது, தனியார் அல்லது கலப்பு மேகத்தள நிறுவல்சார் மாதிரிகளின் பொருந்தக்கூடியதன்மை நகர்த்தப்படுவதற்கு முன்னர் மதிப்பீடு செய்யப்பட்டது.

**டிஜிட்டல் நிலைமாற்றம் மற்றும் தொழிற்பாட்டு வினைத்திறன்:** மாறிவருகின்ற சந்தை இயக்கவாற்றல்கள், வாடிக்கையாளர் எதிர்பார்ப்புக்கள் மற்றும் வளர்ச்சியடைந்து வரும் தொழில்நுட்பங்களுக்கு ஏற்ப டிஜிட்டல் நிலைமாற்ற முயற்சிகளில் நாம் கவனம் செலுத்துகிறோம். அனைத்து ஆர்வலர்களும் புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் செயன்முறைகளைச் சீராகப் பின்பற்றுவதை உறுதிசெய்வதற்காக மாற்ற முகாமைத்துவச் செயன்முறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

நிபுணத்துவம், மூலவளங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளைப் பயன்படுத்த தொழில்நுட்ப விற்பனையாளர்கள், காப்புறுதித் தொழில்நுட்ப நிறுவனங்கள், தொழில்துறைச் சங்கங்கள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் அமைப்புக்களுடன் ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பொதுக் காப்புறுதியானது பங்குடைமைகள் மற்றும் ஒத்துழைப்புக்களை மேம்படுத்தியது.

**தரவு பகுப்பாய்வுகள் மற்றும் தொழில்சார் நுண்ணறிவு:** வாடிக்கையாளர் நடத்தை பற்றிய நுண்ணோக்குகளைப் பெறுவதற்கும், பொறுப்பேற்றல்சார் துல்லியத்தை மேம்படுத்துவதற்கும், மோசடியைக் கண்டறிவதற்கும், கோரல் செயன்முறைகளை மேம்படுத்துவதற்கும் தரவுப் பகுப்பாய்வுகளைப் நாம் பயன்படுத்தினோம். சமீபத்திய ஐபீம் காக்னோஸ் தளம் வணிக நுண்ணறிவு மற்றும் தரவுப் பகுப்பாய்வுக் கருவிகளின் விரிவான தொகுப்பொன்றினை வழங்குகின்றது. இது ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பொதுக் காப்புறுதிக்குச் சிறந்த தீர்மானங்களை எடுக்கவும், தொழில் செயலாற்றத்தினை மேம்படுத்தவும், வளர்ச்சியை ஊக்குவிக்கவும் திறனளிக்கின்றது. அதன் மேம்பட்ட பகுப்பாய்வுகள், அறிக்கையிடல் மற்றும் காட்சிப்படுத்தல் இயலளவுகள், சுய சேவைசார் தொழில் நுண்ணறிவு மற்றும் தொலைபேசி அணுகலுடன் இணைந்து, எமது விற்பனைக் குழு, முகவர்கள், கோரல் அதிகாரிகள், முகாமைத்துவக் குழு மற்றும் ஆதரவுக் குழுக்களுக்கு இது பெறுமதிமிக்க சொத்தொன்றாக அமைகிறது.

**தகவல் பாதுகாப்பு, ஆளுகை மற்றும் இணக்கப்பாடு:** தனிப்பட்ட வாடிக்கையாளர் தரவுகளைப் பாதுகாப்பதற்கும் தரவு மீறல்களைத் தடுப்பதற்கும் தகவல் மற்றும் இணையப் பாதுகாப்பு வழிமுறைகளை வலுப்படுத்துவதில் நாம் கவனம் செலுத்தினோம். இம்முயற்சியின் பகுதியொன்றாக, இணையத்தளப் பயன்பாடுகளைப் பாதுகாக்க மேகத்தளத்தின் அடிப்படையிலான இணையப் பாதுகாப்புச் சுவர் மற்றும் உள்நிறுவல் இணையப் பாதுகாப்புச் சுவர், மேம்பட்ட மின்னஞ்சல் தடுப்பு நுழைவாயில் தீர்வு மற்றும் தொடர்ச்சியான பாதிப்படையக்கூடியதன்மை மற்றும் ஊடுருவல் சோதனை போன்ற பல பாதுகாப்புத் தீர்வுகளை நாங்கள் செயற்படுத்தியுள்ளோம். இம்முயற்சிகள் அனைத்தும் 2023இல் சர்வதேச தரநியம அமைப்பு/சர்வதேச இலத்திரனியல் தொழில்நுட்ப ஆணைக்குழு 27001 சான்றிதழை கலப்பு அமைப்பொன்றாகப் பெற எமக்கு உதவியதுடன் நாம் 2024 இல் மீள்சான்றிதழ் செயன்முறையைத் தொடங்கி 27001:2022 இற்கு மேம்படுத்தியுள்ளோம். இது தகவல் பாதுகாப்பில் சிறந்து விளங்குவதற்கான எங்கள் இடைவிடாத முயற்சிக்கு சான்றொன்றாகக் காணப்படுகின்றது.

எமது வாடிக்கையாளர்களின் உணர்வுபூர்வமான தகவல்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை நாம் அங்கீகரித்து, தரவுப் பாதுகாப்பின் மிகவும் உயர்ந்த தரநியமங்களை உறுதிசெய்வதில் கணிசமானளவு முதலீடு செய்துள்ளோம். 2024 ஆம் ஆண்டில், எமது அனைத்து டிஜிட்டல் சொத்துக்களையும் கண்காணிக்கின்ற 24X7 முறையிலமைந்த பாதுகாப்புத் தொழிற்பாடுகள் மையத் தொழிற்பாட்டுடன் இணைந்து வலுவான விரிவாக்கப்பட்ட கண்டறிதல் மற்றும் பதிலிறுப்புத் தீர்வொன்றினை நாங்கள் நடைமுறைப்படுத்தியுள்ளோம்.

# மனித மூலதனம்

காப்புறுதித் துறையின் அறிவு சார்ந்த தன்மை உயர்தர மனித வளங்களைப் பேணுவதன் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது. திறன்கள் தொடர்ந்து இற்றைப்படுத்தப்பட்டுள்ள எமது நன்கு பயிற்றப்பட்ட தொழில்சார் நிபுணத்துவம் வாய்ந்த குழுவானது நாடு முழுவதும் எமது உற்பத்திகளின் வலுவான புலப்படுதன்மையினை நிச்சயப்படுத்துகின்றது.

**ஐக்கிய நாடுகளின் நீடித்துநிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தி இலக்குகளிற்கான எமது பங்களிப்பு**

3 GOOD HEALTH AND WELL-BEING

சுகாதாரம் மற்றும் பாதுகாப்புக் கொள்கை உள்ளடங்கலாக ஊழியர்களின் உடல் நலம்

4 QUALITY EDUCATION

ஊழியர் பயிற்சித் திட்டங்கள்

5 GENDER EQUALITY

பாலின சமநிலையைப் பேணுதல் – 55 சதவீதம் தொடக்கம் 45 சதவீதம் வரை

8 DECENT WORK AND ECONOMIC GROWTH

பன்முகத்தன்மை மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி

10 REDUCED INEQUALITIES

- ஊழியர் வயதுப் பன்முகத்தன்மையைப் பேணுதல்
- தொழிற்படையில் வலுவான பிராந்தியப் பிரதிநிதித்துவத்தைப் பேணுதல்
- ஆட்சேர்ப்பு நடைமுறையில் வெளிப்படைத்தன்மை மற்றும் பக்கசார்பற்ற தன்மை

## எமது மனிதவள நடைமுறைகள்

மனித உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் வசதிக்குட்படுத்தல் என்பவற்றை அனுமதிக்கின்ற பாகுபாடற்ற பணிச் சூழலொன்றினை உருவாக்குதல் என்பன எமது மனிதவள நடைமுறைகள் மற்றும் மனிதவள உபாயங்களை நிலைநிறுத்துகின்ற அடிப்படைத் தூண்களாகக் காணப்படுகின்றன.

## கொள்கைக் கட்டமைப்பு

| | |
|---|---|
| **பாகுபாடற்ற மற்றும் சம வாய்ப்பினைக் கொண்ட வேலைவாய்ப்பு** | ஆட்சேர்ப்பு தொடக்கம் ஓய்வூதியம் வரை ஊழியர்களின் வாழ்க்கைச் சுழற்சியின் அனைத்துக் கட்டங்களிலும் பாகுபாடற்ற கொள்கையொன்றினைக் கம்பனி பேணுகின்றது. |
| **பன்முகத்தன்மை மற்றும் வசதிக்குட்படுத்தல்** | இனம், சமயம், பாலினம் அல்லது வயது ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் அனைத்து ஊழியர்களும் சமத்துவமாக நடத்தப்படும் சூழலொன்றினை ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பொதுக் காப்புறுதியானது உருவாக்கியுள்ளது. மாற்றுத் திறனாளிகளுக்கு சாத்தியமான வாய்ப்புக்களை வழங்க நாம் முயற்சி செய்கின்றோம். |
| **சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு** | எமது தொழில்துறையின் தன்மையினைப் பொறுத்தவரை, ஊழியர்கள் பெரிய தொழில்சார் இடர்நேர்வுகளுக்கு ஆளாவதில்லை. இருப்பினும், நாங்கள் எங்கள் பணிச் சூழலை முடிந்தவரை பாதுகாப்பாக வைத்திருக்கின்றோம். ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பொதுக் காப்புறுதியானது ஊழியர்களின் ஆரோக்கியத்தைப் பேணுவதற்கு வசதியாக அனைத்தையும் உள்ளடக்கிய சுகாதார மற்றும் பாதுகாப்புக் கொள்கையொன்றினைக் கொண்டுள்ளது. பல ஆர்வலர்களுடன் கலந்தாலோசித்து இடர்நேர்வுகளின் மதிப்பீடு மேற்கொள்ளப்படுகிறது.<br><br>ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பொதுக் காப்புறுதியின் இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் சுகாதார இடர்நேர்வுகள் குறித்து கிரமமான மதிப்பீட்டை மேற்கொண்டு சரியான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. மனிதவளத் திணைக்களமானது ஏனைய திணைக்களங்களுடன் ஒருங்கிணைந்து சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்கின்றது. |

**நெறிமுறைகளும் ஒருமைப்பாடும்**

எமது ஊழியர்கள் தங்கள் கடமைகள் அனைத்தையும் மிகவும் நெறிமுறைமிக்க விதத்தில் நிறைவேற்றுவதன் முக்கியத்துவத்தை நாங்கள் கற்பிக்கிறோம். எமது நன்னடத்தைக் கோவை அனைத்து ஊழியர்களுக்கும் பரப்பப்பட்டுள்ளதுடன் அனைவரும் அதனையும் அவர்களின் நியமனக் கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளையும் கடைப்பிடிப்பார்களென எதிர்பார்க்கப்படுகின்றது.

அனைத்து வகையான குழந்தைத் தொழிலையும் திணிக்கப்பட்ட தொழிலையும் கட்டாய தொழிலையும் நாம் கண்டிப்பாக தடை செய்கிறோம்.

**ஊழியர்களின் மனக்குறைகள்**

ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பொதுக் காப்புறுதியானது ஊழியர்களின் மனக்குறைகளைக் கையாள்வதற்கான விரிவான நடைமுறையொன்றினைக் கொண்டுள்ளதுடன் இதனை எவ்வூழியரும் பாதகமான விளைவுகளைப் பற்றிய எவ்வித அச்சமுமின்றி பயன்படுத்திக் கொள்ளலாம். இது தனிப்பட்ட மற்றும் உத்தியோகபூர்வ மனக்குறைகள் மற்றும் தனிப்பட்ட அல்லது குழுக் பிரச்சினைகள் என்பன தொடர்பாகப் பயன்படுத்தப்படலாம்.

மனக்குறைகள் குறித்து முறைப்பாடு மேற்கொள்வதற்கும் மனக்குறைகளைக் கையாள்வதற்குமான நடைமுறைகள் தெளிவாக வகுக்கப்பட்டுள்ளன.

மனிதவள சபைத் துணைக்குழுவின் ஆதரவின் கீழ் மனக்குறைகளை குறை தீர்க்கும் குழுவொன்று கையாள்கின்றது.

**ஆட்சேர்ப்பு உபாயங்கள்**

அனைத்து ஊழியர்களுக்கும் தேவையான அறிவு, திறன்கள், அனுபவம், மனப்பான்மை மற்றும் உளச்சார்ப்பு என்பவற்றினைக் கொண்டிருப்பதை உறுதிசெய்வதற்காக ஆட்சேர்ப்புக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இப்புதிய ஆட்சேர்ப்புக்களை நிச்சயப்படுத்துவதற்காக உளச்சார்ப்புப் பரீட்சைகளின் தொடரொன்றினைப் பூர்த்திசெய்ய வேண்டியுள்ளது. பணிக்கு அமர்த்தும் போது, தொழில்துறையின் வேகமான தன்மை ஊழியர்கள் மீது வைக்கும் கோரிக்கைகளை நாம் அறிந்திருக்கிறோம்.

உயர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் போது, முதலாவது முன்னுரிமை எப்போதும் உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படுகிறது. பொருத்தமான உள்ளக விண்ணப்பதாரர் இல்லையென்றால் மாத்திரமே வெளியாட்கள் கருத்திற்கொள்ளப்படுவர்.

ஆட்சேர்ப்புக் குழு உறுப்பினர்களில் துறைசார் நிபுணர்கள் மற்றும் முதுநிலை முகாமைத்துவக் குழுவின் உறுப்பினர்கள் ஆகியோர் அடங்குவர். அனைத்துக் குழு மதிப்பீடுகளும் முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட தரநியமங்களைப் பின்பற்றுகின்றன. அனைத்து நேர்முகப்பரீட்சைகளிலும் ஒரு மனிதவள பிரதிநிதி கலந்து கொள்வதன் மூலம் பின்வரும் தரநியமங்கள் மற்றும் செயன்முறையின் வெளிப்படைத்தன்மை உறுதிப்படுத்தப்படுகிறது. அனைத்துப் புதிய பணியாளர்களுக்கும் கம்பனியுடன் பழக்கப்படுவதற்கும் ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பொதுக் காப்புறுதிக் கலாசாரத்தில் ஊக்குவிக்கப்படுவதற்கும் அறிமுக நிகழ்ச்சித்திட்டமொன்று நடத்தப்படுகிறது.

**தக்கவைப்பு மற்றும் பதவியுரிமை**

தொழில்துறையின் போட்டித்திறன் மற்றும் வேகமாக நகரும் தன்மை மற்றும் தரநியம படிமத்தினைப் பேண வேண்டிய அவசியம் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு திறமையான அலுவலர்களைத் தக்கவைத்துக்கொள்வது அவசியமானதொன்றாகவுள்ளது. நாம் அவர்களைத் தக்கவைத்துக் கொள்ள முயற்சிப்பது மட்டுமல்லாமல், கம்பனியின் எதிர்காலத் தலைவர்களாக அவர்களை வளர்த்தெடுப்பதற்கும் முயற்சிக்கிறோம்.

ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பொதுக் காப்புறுதியானது முறையான பதவியுரிமைத் திட்டமொன்றினைக் கொண்டுள்ளதுடன் இது திறமையான மற்றும் அர்ப்பணிப்புள்ள ஊழியர்களுக்கு ஊக்கமளிக்கும் காரணியொன்றாகக் காணப்படுகின்றது. எமது செயலாற்ற மதிப்பீட்டு முறைமையானது திறமைமிக்க குழுவொன்றினை வசதிப்படுத்துவதற்காக நம்பிக்கைக்குரிய ஊழியர்களைத் தேர்ந்தெடுக்கின்றது. திறமைமிக்க குழு என்பது சிறந்த செயலாற்றம் கொண்டவர்களின் குழுவொன்றாகவுள்ளதுடன் பதவி வெற்றிடங்கள் ஏற்படும் போது அவற்றை நிரப்புவதற்கான ஆற்றல்வாய்ந்த அபேட்சகர்களாக அவர்கள் காணப்படுவார்கள். திறமைமிக்க குழுவின் உறுப்பினர்களுக்கு கடின திறன் மற்றும் மென் திறன் பயிற்சியளிப்பு மற்றும் வழிகாட்டுதல் நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்க வாய்ப்பு வழங்கப்படுகிறது.

**அனுகூலங்கள்**

ஊழியர்களைத் தக்கவைத்துக்கொள்வதற்கும் ஊக்குவிப்பதற்கும் சந்தை வழங்க வேண்டிய சிறந்தவற்றுடன் போட்டிமிக்க ஊதியத் தொகுதியொன்றை நாம் வழங்குகிறோம். எங்கள் ஊழியர்களுக்கு அவர்களின் அடிப்படை ஊதியத்துக்கு அப்பால் பல்வேறு வகையான அனுகூலங்களையும் நாங்கள் வழங்குகிறோம்.

ஊழியர்கள் எதிர்கொள்ளும் எந்தவொரு இன்னல்களையும் மனதில் வைத்து கம்பனி அதன் நடைமுறைகளை சீராக்கின்றது. எரிசக்தி நெருக்கடியின் போது, ஒவ்வொரு விடயத்திற்கு விடய அடிப்படையில் நெகிழ்வான வேலை நேரங்களை நாங்கள் அறிமுகப்படுத்தினோம்.

ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பொதுக் காப்புறுதியானது ஊழியர்களின் நலனோம்புகையினை உறுதிப்படுத்துவதற்காக, பணி நிலைமைகள் தொடர்பான அனைத்து நியதிச்சட்ட ஏற்பாடுகளையும் கவனமாகப் பின்பற்றுகின்றது. இதில் பெண் ஊழியர்களுக்கான மகப்பேற்று அனுகூலங்களும் இதில் அடங்குகின்றது. ஊழியர்கள் ஊதியமின்றி இரண்டு மாதங்கள் வரை நீடிக்கப்பட்ட காலப்பகுதியொன்றினைக் கோரும் தெரிவினைக் கொண்டுள்ளனர். தந்தைவழி விடுப்புக்கான உண்மையான கோரிக்கைகள் சாதகமாகக் கருத்திற்கொள்ளப்படுகின்றன. கம்பனி அனைத்து ஊழியர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் மருத்துவக் காப்புறுதியினை வழங்குகிறது.

எமது ஊழியர்களின் வேலை மற்றும் வாழ்க்கைச் சமநிலை என்பது நாங்கள் மிகவும் அக்கறை கொண்ட பகுதியொன்றாகும். அவர்களின் உடல் மற்றும் உள நலனோம்புகைக்காக, நன்கு பொருத்தப்பட்ட உடற்பயிற்சிக்கூடம் மற்றும் யோகா வகுப்புக்களை நாம் வழங்குகிறோம். உடற்பயிற்சிக்கூடத்தில் வழிகாட்டுதல்களை வழங்குகின்ற ஒரு தகுதிவாய்ந்த பயிற்றுவிப்பாளர் உள்ளார்.

நுவரெலியா, அநுராதபுரம் மற்றும் கதிர்காமம் ஆகிய இடங்களில் மூன்று விடுமுறை விடுதிகளை நாங்கள் பேணிவருவதுடன் அவை எமது ஊழியர்களின் பயன்பாட்டிற்குக் கிடைப்பனவாயுள்ளன. இவ்விடுதிகள் அனைத்து நவீன வசதிகளையும் கொண்டுள்ளதுடன் இங்கு திறமையான பராமரிப்பாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றுகின்ற மாணவர்களுக்கான கருத்தரங்குகள் உட்பட ஊழியர்களின் குழந்தைகளுக்குக் கல்வி அனுசரணையினையும் கம்பனி வழங்குகிறது.

“ஒரு தந்தையைப் போல, ஒரு தாயைப் போல” என்ற எமது உறுதிமொழிக்கமைய, ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பொதுக் காப்புறுதியானது துயர நேரங்களில் அனுதாபமிக்க அணுகுமுறையொன்றினை மேற்கொண்டு உதவிக்கரம் நீட்டுகின்றது. கம்பனி இறப்புச் சலுகைகளையும் ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு உணர்வுபூர்வமான மற்றும் உளவியல் ரீதியிலான உதவிகளையும் வழங்குகின்றது.

எமது ஊழியர்கள் புனைகதை மற்றும் புனைகதையல்லாத ஆகிய இரண்டிலுமான ஏறத்தாழ 1,800 புத்தகங்களைக் கொண்ட ஒரு நூலகத்தைப் பயன்படுத்துகின்றனர். புனைகதையல்லாத பிரிவில் காப்புறுதி, முகாமைத்துவம், நிதி, சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை பற்றிய புத்தகங்கள் அடங்கும். இது அவர்களின் அறிவை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்பினை வழங்குகிறது.

## முக்கிய புள்ளிவிபரவியல் சிறப்பம்சங்கள்

### வகைப்பாட்டு ரீதியில் அலுவலர்கள்

| | 2024 | 2023* | 2022* | 2021* | 2020* | 2019* |
|---|---|---|---|---|---|---|
| நிரந்தர அலுவலர்கள் | 1,586 | 2,514 | 2,513 | 2,535 | 2,517 | 2,527 |
| ஒப்பந்த அலுவலர்கள் | 257 | 170 | 130 | 232 | 109 | 133 |
| **மொத்தம்** | 1,843 | 2,684 | 2,643 | 2,767 | 2,626 | 2,660 |

** ஒப்பீட்டு ரீதியிலான எண் தொகைகள் ஆயுள் மற்றும் பொது ஆகிய இரண்டிற்குமானவையாகும்.*

### வயதுப் பகுப்பாய்வு

| வயதுக் குழு | ஆண் | பெண் | சதவீதம் |
|---|---|---|---|
| 18-24 | 48 | 20 | 3.7 |
| 25-29 | 129 | 89 | 11.8 |
| 30-34 | 182 | 125 | 16.7 |
| 35-39 | 166 | 120 | 15.5 |
| 40-44 | 210 | 65 | 14.9 |
| 45-49 | 160 | 33 | 10.5 |
| 50-54 | 134 | 126 | 14.1 |
| 55 மற்றும் அதற்கு மேல் | 93 | 143 | 12.8 |
| **மொத்தம்** | 1,122 | 721 | 100.0 |

### பணிப் பகுப்பாய்வு

| ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பொதுக் காப்புறுதியில் பணியாற்றும் ஆண்டுகளின் எண்ணிக்கை | ஆண் | பெண் | சதவீதம் |
|---|---|---|---|
| 0-5 | 386 | 110 | 26.9 |
| 6-10 | 152 | 156 | 16.7 |
| 11-15 | 198 | 108 | 16.6 |
| 16-20 | 250 | 68 | 17.3 |
| 21 மற்றும் அதற்கு மேல் | 136 | 279 | 22.5 |
| **மொத்தம்** | 1,122 | 721 | 100.0 |

### தரம் மற்றும் பாலின ரீதியிலான தொழில்நிலை

| தரம் | எண்ணிக்கை | | | வகை சதவீதம் (%) | |
|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் |
| முதுநிலை முகாமையாளர் | 44 | 11 | 55 | 80 | 20 |
| முகாமையாளர் | 146 | 45 | 191 | 76 | 24 |
| உதவி முகாமையாளர் | 63 | 31 | 94 | 67 | 33 |
| நிறைவேற்று | 227 | 276 | 503 | 45 | 55 |
| எழுதுவினைஞர் | 379 | 346 | 725 | 52 | 48 |
| தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 171 | 0 | 171 | 100 | 0 |
| எழுதுவினைஞரல்லாத பதவி | 58 | 4 | 62 | 94 | 6 |
| சிற்றூழியர் | 34 | 8 | 42 | 81 | 19 |
| **மொத்தம்** | 1,122 | 721 | 1,843 | 61 | 39 |

### பணியாட்டொகுதியினரின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கான தொழில்நெறி மேம்பாடு

ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பொதுக் காப்புறுதி வளர்ச்சியுடன் இசைந்து செல்லும் பொருட்டு எமது ஊழியர் மேம்பாட்டுத் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. கம்பனியின் பயிற்சித் தேவைகள் செயலாற்ற மதிப்பீட்டு முறைமையினால் அடையாளம் காணப்படுவதுடன் இப்பயிற்சித் தேவைகளுக்கு முன்னுரிமை அளிக்கவும் நடைமுறைப்படுத்தவும் பொறிமுறையொன்றினை நாம் உருவாக்கியுள்ளோம். உருவாக்கப்பட்ட திறன்கள் மற்றும் தேர்ச்சிகளின் அடிப்படையில் பெறுபேறுகள் கிரமமாக மதிப்பீடு செய்யப்படுகின்றன.

எம்மிடம் பதவியுரிமைத் திட்டமிடல் மற்றும் திறமை முகாமைத்துவ குழுத் திட்டமும் உள்ளது. இதற்கு ஆதரவளிக்கும் பொருட்டு ஒவ்வொரு திணைக்களத்திலிருந்தும் ஆற்றல் வாய்ந்த தலைவர்களை உருவாக்க பயிற்சியளிப்புத் தொகுதியொன்றினை உருவாக்கியுள்ளோம். மேலதிக தகுதிகளைப் பெற விரும்புகின்ற ஊழியர்களுக்கு நிதியுதவியினை வழங்குவதன் மூலம் எமது ஊழியர்களின் தொழில்சார் நிபுணத்துவ மேம்பாட்டிற்கும் நாம் ஆதரவளிக்கின்றோம். தொடர்ச்சியான தொழில்சார் நிபுணத்துவ வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும் பொருட்டு தொழில்சார் நிபுணத்துவ உறுப்புரிமைக் கட்டணத்தையும் நாங்கள் மீளச்செலுத்துகிறோம்.

### பயிற்சியளிப்பிலும் விருத்திகாணலிலும் மேற்கொள்ளப்படும் முதலீடு

| வகை | 2024 மில். |
|---|---|
| உள்வாரிப் பயிற்சி | 20.7 |
| வெளிவாரிப் பயிற்சி | 0.7 |
| மாநாடுகள் | 1.7 |
| கரைகடந்த பயிற்சி | 4.5 |
| காப்புறுதி மற்றும் தொழில்சார் நிபுணத்துவக் கல்வி | 1.4 |
| தொழில்சார் நிபுணத்துவ உறுப்புரிமைக் கட்டணம் | 1.0 |

### பரீட்சைச் செலவுகளின் மீளச்செலுத்துதல்

| வகை | 2024 ரூ. மில். | 2023* ரூ. மில். | 2022* ரூ. மில். | 2021* ரூ. மில். | 2020* ரூ. மில். | 2019* ரூ. மில். |
|---|---|---|---|---|---|---|
| ஊழியர்கள் மீதான மொத்த முதலீடு | 1.5 | 9.4 | 5.4 | 3.2 | 3.1 | 3.9 |

** ஒப்பீட்டு ரீதியிலான எண் தொகைகள் ஆயுள் மற்றும் பொது ஆகிய இரண்டிற்குமானவையாகும்.*

### பயிற்சியளித்தல் நிகழ்ச்சித் திட்டங்கள்

| வகை | 2024 | 2023* | 2022* | 2021* | 2020* | 2019* |
|---|---|---|---|---|---|---|
| திட்டங்களின் எண்ணிக்கை | 61 | 81 | 97 | 70 | 85 | 186 |

** ஒப்பீட்டு ரீதியிலான எண் தொகைகள் ஆயுள் மற்றும் பொது ஆகிய இரண்டிற்குமானவையாகும்.*

### ஆரம்ப நிகழ்ச்சித் திட்டங்கள்

| வகை | 2024 | 2023* | 2022* | 2021* | 2020* | 2019* |
|---|---|---|---|---|---|---|
| நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | 5 | 4 | 2 | 2 | – | 3 |

** ஒப்பீட்டு ரீதியிலான எண் தொகைகள் ஆயுள் மற்றும் பொது ஆகிய இரண்டிற்குமானவையாகும்.*

## சேவைக்கான அங்கீகாரம் மற்றும் வெகுமதிளித்தல்கள்

செயலாற்றலினை வழிப்படுத்துவதற்கான வெகுமதியளித்தல் முறைமையொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன் இது ஜெனரல் இன்ஷுரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பொதுக் காப்புறுதியின் வளர்ச்சி மற்றும் அபிவிருத்தியுடன் ஒத்திசைந்ததாகக் காணப்படுகின்றது. தனிப்பட்ட மற்றும் கம்பனித்துறை அபிவிருத்தி ஆகிய இரண்டிற்கும் வழங்கும் பொருட்டு உருவாக்கப்பட்டுள்ள செயலாற்ற மதிப்பீட்டு முறைமையொன்றின் மூலம் இவ்வொருங்கிசைவு அடையப்படுகிறது. செயலாற்ற மதிப்பீட்டு முறைமையானது "மேன்மைக்காகப் பாடுபடுதல்" என்ற நெறிமுறையின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. இது அனைத்து ஊழியர்களையும் நியாயமாகவும் வெளிப்படையாகவும் மதிப்பீடு செய்கிறது. அனைத்து ஊழியர்களும் ஓராண்டில் இரு முறை சுய மதிப்பீட்டை நிறைவுசெய்யத் தேவைப்படுத்தப்பட்டுள்ளதுடன், அங்கு அவர்கள் முன்னர் சமர்ப்பித்த முக்கிய செயலாற்றக் குறிகாட்டிகளுக்கு மாற்றமாகவும் தமது சுய செயலாற்றத்தினைத் தரப்படுத்தும் வாய்ப்பினைக் கொண்டுள்ளனர். ஊழியர்கள் அவர்களின் தொடர்புடைய நிரல் முகாமையாளருடன் செயலாற்ற மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையொன்றினை எதிர்கொள்கிறார்கள். செயலாற்றம், பயிற்சித் தேவைகள் மற்றும் நீண்டகால தொழில் இலக்குகள் குறித்து விரிவான மற்றும் திறந்த கலந்துரையாடலிற்கு இது ஒரு வாய்ப்பினை வழங்குகிறது. தேவையான தரநியம தரமிடலிற்குக் குறைவாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ஊழியர்களுக்கு மேலதிக வளர்ச்சிக்கான வாய்ப்புக்கள் வழங்கப்படுகின்றன. இத்தகைய சூழ்நிலைகளில் மனிதவளத் திணைக்களமானது உடனடி மேற்பார்வையாளர்களின் ஒத்துழைப்புடன் தனிப்பயனாக்கப்பட்ட தனிநபர் மேம்பாட்டுத் திட்டத்தை வழங்கும். செயலாற்ற மதிப்பீடுகளின் பெறுபேறுகளின் அடிப்படையில், ஊழியர்களுக்கு அவர்களின் இறுதிச் சாதனைகளின் அடிப்படையில் சம்பள உயர்வுகள் வழங்கப்படுகின்றன. இம்முயற்சி 2023ஆம் ஆண்டில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டதுடன் குறிப்பிடத்தக்க வெற்றியினையும் ஈட்டியது. மேலும், இது நிறுவனத்திற்குள் செயலாற்றத்தினால் உந்தப்பட்ட கலாசாரமொன்றினை மேம்படுத்துவதில் இன்றியமையாத வகிபாகமொன்றினை ஆற்றுகின்றது.

தலைமை அலுவலகம் மற்றும் கிளைகளிலிருந்தான விற்பனை வகைகள் மற்றும் முதுநிலை முகாமைத்துவம் என்பன நீங்கலாக, அனைத்து அலுவலர் உறுப்பினர்களுக்கும் இத்தளம் கிடைப்பனவாகக் காணப்படுகின்றது. கம்பனியின் பெறுமதிச் சங்கிலி முழுவதும் ஊழியர்களின் பங்களிப்பினைக் கட்டமைக்கப்பட்டதொரு முறையில் மேம்படுத்துவதே இதன் நோக்கமாகும். பல்வேறு மட்டங்களில் நிறுவனத்தின் மனித மூலதனத்தை அங்கீகரித்து ஊக்குவிப்பதன் மூலம், சிறந்த ஊழியர் விருதுத் திட்டமானது வெகுமதியளித்தல் மற்றும் வலுப்படுத்தல் பகுதிகளில் உள்ள இடைவெளிகளைக் குறைப்பதை நோக்காகக் கொண்டுள்ளது.

## ஏனைய குறிப்பிடத்தக்க புள்ளிவிபரங்கள்

### பிராந்திய ரீதியிலான ஊழியர்கள்

| பிராந்தியம் | எண்ணிக்கை |
|---|---:|
| மத்திய | 129 |
| கிழக்கு | 42 |
| தலைமை அலுவலகம் | 712 |
| வட மத்திய | 64 |
| வடக்கு | 34 |
| இரத்தினபுரி | 68 |
| தெற்கு 1 | 100 |
| தெற்கு 2 | 53 |
| தெற்கு 3 | 34 |
| மேல் மேற்கு | 120 |
| ஊவா | 70 |
| வட மேற்கு 1 | 83 |
| வட மேற்கு 2 | 60 |
| மேற்கு | 23 |
| மேற்கு 1 | 81 |
| மேற்கு 2 | 46 |
| மேற்கு 3 | 66 |
| மேற்கு 4 | 58 |
| மொத்தம் | 1,843 |

### ஊழியர் ஆட்சேர்ப்பு

| வயதுக் குழு | ஆண் | பெண் | மொத்தம் | சதவீதம் |
|---|---:|---:|---:|---:|
| 18-24 | 61 | 17 | 78 | 27 |
| 25-29 | 64 | 44 | 108 | 37 |
| 30-34 | 42 | 9 | 51 | 17 |
| 35-39 | 21 | 4 | 25 | 9 |
| 40-44 | 17 | 1 | 18 | 6 |
| 45-49 | 10 | – | 10 | 3 |
| 50-54 | 3 | – | 3 | 1 |
| 55 மற்றும் அதற்கு மேல் | – | – | – | – |
| மொத்தம் | 218 | 75 | 293 | 100 |

### ஊழியர் வெளியேற்றம்

| வயதுக் குழு | ஆண் | பெண் | மொத்தம் | சதவீதம் |
|---|---:|---:|---:|---:|
| 18-24 | 20 | 2 | 22 | 10 |
| 25-29 | 32 | 12 | 44 | 20 |
| 30-34 | 39 | 9 | 48 | 22 |
| 35-39 | 25 | 8 | 33 | 15 |
| 40-44 | 20 | 5 | 25 | 11 |
| 45-49 | 9 | 2 | 11 | 5 |
| 50-54 | 3 | 2 | 5 | 2 |
| 55 மற்றும் அதற்கு மேல் | 13 | 21 | 34 | 15 |
| மொத்தம் | 161 | 61 | 222 | 100 |

## அலுவலர் தக்கவைப்பு வீதம்

| | **2024** | 2023* | 2022* | 2021* | 2020* | 2019* |
|---|---:|---:|---:|---:|---:|---:|
| அலுவலர்களின் எண்ணிக்கை | **1,843** | 2,684 | 2,643 | 2,767 | 2,626 | 2,660 |
| அலுவலர் தக்கவைப்பு வீதம் | **88.6** | 91.4 | 95.4 | 96.2 | 98.0 | 91.5 |

** ஒப்பீட்டு ரீதியிலான எண் தொகைகள் ஆயுள் மற்றும் பொது ஆகிய இரண்டிற்குமானவையாகும்.*

# சமூக மற்றும் உறவுமுறை ரீதியிலான மூலதனம்

ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பொதுக் காப்புறுதியின் சமூக மற்றும் உறவுமுறை ரீதியிலான மூலதனமானது பன்முக ஆர்வலர்களுடன் வலுவான வலையமைப்புக்களில் கட்டமைக்கப்பட்டுள்ளது. இப்பெறுமதிமிக்க உறவுமுறைகள் நம்பிக்கையை மேம்படுத்தி, பரஸ்பர ரீதியில் நன்மை பயக்கின்ற பங்குடைமைகளை வளர்த்தெடுப்பதற்கு உதவி, கம்பனி மற்றும் நாம் சேவை செய்யும் சமூகங்கள் ஆகிய இரண்டிற்கும் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய பெறுமதியினைத் தூண்டுகின்றன.



## பொது காப்புறுதித் திட்டங்களின் தொகுப்பு

SLIC
ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்
GENERAL

### சுகாதாரக் காப்புறுதித் தீர்வுகள்

Sri Lanka Insurance MEDI 60 – Senior Citizen Health Insurance Plan

Sri Lanka Insurance MEDI PLUS – Health Insurance Plan

Sri Lanka Insurance HEALTH PLUS

நாகராஜ

### வணிகக் காப்புறுதித் தீர்வுகள்

Sri Lanka Insurance Business Club – TRADE INSURANCE POLICY

Sri Lanka Insurance MARINE CARGO

Sri Lanka Insurance HULL INSURANCE

Sri Lanka Insurance WORKMEN'S COMPENSATION INSURANCE

Sri Lanka Insurance TEA FACTORY INSURANCE

### மோட்டார் காப்புறுதித் தீர்வுகள்

Sri Lanka Insurance MOTOR PLUS – The Best Option

MOTOR PLUS PINNACLE

Sri Lanka Insurance MOTOR PLUS Ladies Only

Sri Lanka Insurance MOTOR PLUS COMMERCIAL

Sri Lanka Insurance MOTOR PLUS TUK

Sri Lanka Insurance MOTOR PLUS RIDER

Sri Lanka Insurance MOTOR PLUS Drive60 – Senior Citizens Comprehensive Motor Insurance

### வீட்டுடமையாளர் காப்புறுதித் தீர்வுகள்

Sri Lanka Insurance HOME PROTECT

Sri Lanka Insurance FIRE INSURANCE

Sri Lanka Insurance HOME PROTECT LITE

### பயணக் காப்புறுதித் தீர்வுகள்

Sri Lanka Insurance TRAVEL PROTECT

### தனிநபர் விபத்துக் காப்புறுதித் தீர்வுகள்

SRI LANKA INSURANCE GURU BUHUMAN

Sri Lanka Insurance PERSONAL ACCIDENT COVER

Sri Lanka Insurance Jana Rekuma – Individual Personal Accident Cover

| திட்ட வகை | தீர்வுகள் | இலக்கு வாடிக்கையாளர்கள் | விவரணம் |
|---|---|---|---|
| தனிநபர் மருத்துவக் காப்புறுதி | மெடி 60 | 60 தொடக்கம் 70 வயதினரிற்கிடையிலான மூத்த குடிமக்கள் | “மெடி 60” என்பது மூத்த குடிமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு வடிவமைக்கப்பட்ட ஒரு சுகாதாரக் காப்புறுதிக் கொள்கையொன்றாகும். இது வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் நிதியியல் முதலீட்டின் அடிப்படையில் தெரிவு செய்வதற்கு மூன்று தொகுப்புக்களை வழங்குகின்றது. |
| | மெடி பிளஸ் | 18 தொடக்கம் 59 வயதினரிற்கிடையிலான இலங்கைக் குடிமக்கள் | தனிநபர் சுகாதாரக் காப்புறுதிக் கொள்கைகள் பரந்தளவிலான உள்நோயாளி சுகாதாரக் காப்புறுதித் தேவைகளை உள்ளடக்கியது. கொள்கை ஆண்டுதோறும் புதுப்பிக்கத்தக்கதென்பதுடன் ஒவ்வொரு கோரலற்ற ஆண்டிலும் கொள்கையின் காப்புறுதித் தொகையை அதிகரிக்கின்ற கோரலின்மைக்கான சிறப்பு மிகையூதியத்தினை உள்ளடக்கியது. |
| மோட்டார் | மோட்டார் பிளஸ் லேடிஸ் ஒன்லி | தனியார் கார்கள் மற்றும் தனியார் இரட்டை நோக்கிலான வாகனங்களை வைத்திருக்கும் பெண்கள் | வாடிக்கையாளரின் குறிப்பிட்ட வாகனக் காப்புறுதித் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற சிறப்பு அம்சங்களைக் கொண்ட மோட்டார் காப்புறுதிக் கொள்கை |
| | மோட்டார் பிளஸ் டுக் | டுக் ஓட்டுநர்கள் | மோட்டார் காப்புறுதிக் கொள்கை முச்சக்கரப் பிரிவின் காப்புறுதித் தேவைகளைப் பூர்த்தி செய்ய வடிவமைக்கப்பட்டுள்ளது. |
| | மோட்டார் பிளஸ் ரைடர் | சவாரி செய்வோர் | காப்புறுதிக் கொள்கை மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. |
| | மோட்டார் பிளஸ் வணிகம் | வணிக ரீதியிலான வாகனங்களின் உரிமையாளர்கள் | நாட்டின் பொருளாதாரத்திற்குப் பங்களிக்கின்ற வணிக ரீதியிலான வாகனங்களுக்கு (வாடகைக் கார்கள், இரட்டை நோக்கிலான வாகனங்கள், தனியார் மற்றும் வாடகைப் பாரவூர்திகள்) பிரத்தியேக மோட்டார் காப்புறுதியினை வழங்குகிறது. |
| | மோட்டார் பிளஸ் டிரைவ் 60 | மூத்த குடிமக்களுக்கான மோட்டார் காப்புறுதி | டிரைவ் 60 காப்புறுதித் திட்டத்தின் கீழ் பின்வரும் சிறப்பு அனுகூலங்கள் வழங்கப்படுகின்றன:<br>● ரூ. 10,000/- வரையான இலவச இலுவைச் செலவுகள்<br>● ரூ. 5 மில்லியன் கொண்ட காப்புறுதி செய்யப்பட்ட தொகைக்கு மேல் உள்ள வாகனங்களுக்கு அழைப்பு மற்றும் நகர்வு வசதி (தனியார் கார் மற்றும் தனியார் இரட்டை நோக்கிலான வாகனங்கள்)<br>● இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் பதிவு செய்யப்பட்ட பழுதுபார்க்குமிடங்களிலிருந்து பணமில்லாப் பழுதுபார்க்கும் வசதி<br>● ரூ. 100,000/- இற்குக் கீழ் உள்ள கோரல்களுக்கு பீ எக்ஸ்பிரஸ் விரைவுத் தீர்வு வசதி<br>● ரூ. 100,000/- இற்குக் கீழ் உள்ள கோரல்களுக்கு பழுதுபார்ப்புக்குப் பின்னரான பரீட்சிப்புத் தள்ளுபடி<br>● கோரல்களுக்குச் விசேட பழுதுபார்ப்புச் சலுகைகள்<br>● ரூ. 50,000/- இற்குக் குறைவான கோரல்களுக்கு மீட்டெடுப்புப் பாகங்களைத் தள்ளுபடி செய்தல்.<br>● 75 சதவீதம் வரையான தள்ளுபடிகள் (70 சதவீத என்சிபி மற்றும் 5 சதவீத எம்ஆர்) |
| | மோட்டார் பிளஸ் பினாக்கிள் | பிரீமியம் வாகன உரிமையாளர் சந்தை பிரிவு | இலங்கைக் காப்புறுதி மோட்டார் பிளஸ் பினாக்கிள் என்பது பரந்தளவிலான இடர்நேர்வுகளுக்கு எதிராக விரிவான உள்ளடக்கமொன்றினை வழங்குகின்ற முதன்மையான மோட்டார் காப்புறுதித் திட்டமொன்றாகும். இது மேம்பட்ட தனிநபர் விபத்துக் காப்புறுதி, அவசரக் கோளாறின் போதான உதவிச் செலவு திருப்பிச்செலுத்துதல், அவசர தங்குமிட செலவு திருப்பிச்செலுத்துதல், தொந்தரவின்றிய கோரல் செயன்முறை மற்றும் மேலதிக பிரீமியம் தெரிவுகளையும் வழங்குகின்றது. ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பொதுக் காப்புறுதி மோட்டார் பிளஸ் பினாக்கிள் மூலம், நுகர்வோர் அனைத்து எதிர்பார்ப்புகளையும் விஞ்சிய சேவை மட்டமொன்றினை எதிர்பார்க்க முடியுமென்பது, உள்ளூர் காப்புறுதித் தோற்றப்பாட்டில் புதிய அளவுகோல்களை நிர்ணயிக்கின்றது. |
| வீட்டுடமையாளர்கள் | கொள்ளைக் காப்புறுதி | | உடைப்புக்களால் ஏற்படும் சொத்து இழப்பு அல்லது சேதத்திலிருந்து உங்கள் வீடு மற்றும் குடும்பத்தைப் பாதுகாக்கின்றது. |
| | குடியிருப்பு வீடுகளின் வீட்டுடமையாளர்களுக்கான தீ காப்புறுதி | | உங்கள் வீடு கட்டி முடிக்கப்பட்டாலும், ஆக்கிரமித்திருந்தாலும் அல்லது கட்டுமானத்தில் இருந்தாலும் தீ மற்றும் தீயுடன் தொடர்பான பல்வேறு இடர்நேர்வுகளிலிருந்து காப்புறுதி செய்கின்றது. |
| | வீட்டுப் பாதுகாப்புக் காப்புறுதி | | பேரழிவொன்று ஏற்படும் பட்சத்தில் உங்கள் வீடு, உங்கள் குடும்பம் மற்றும் உங்களது பெறுமதிமிக்க பொருட்கள் மற்றும் உங்கள் வீட்டு ஊழியர்களை உள்ளடக்கியது. |
| | வீட்டுப் பாதுகாப்பு லைட் | | முதல் இழப்பு அடிப்படையில் முன்னதாகப் பொறுப்பேற்கப்பட்ட வீட்டுடமையாளர் காப்புறுதிக் கொள்கை. இதனைக் கருமபீடத்தில் கொள்வனவு செய்ய முடியும். |

| திட்ட வகை | தீர்வுகள் | இலக்கு வாடிக்கையாளர்கள் | விவரணம் |
|---|---|---|---|
| பயணம் | பயணப் பாதுகாப்பு | அனைத்துப் பயணிகளுக்கும் | மருத்துவ அவசரநிலைகள், பயணத்தை இரத்துசெய்தல், இழந்த பொதிகள் அல்லது எதிர்பாராத பயண இடையூறுகளுக்கு எதிராக காப்புறுதி வழங்குதல் மற்றும் பயணிகள் எவ்வித இடையூறுமின்றி தங்கள் பயணத்தை அனுபவிப்பதில் கவனம் செலுத்துவதை நிச்சயப்படுத்துகிறது. |
| தனிநபர் விபத்து | *ஜன ரெகும* | இலங்கையின் தொழிற்படை | எங்கும் எப்போதும் (உலகளவில் 24X7) நடக்கக்கூடிய விபத்துக்களுக்கு எதிராக தனிநபர்களுக்கு விரிவான பாதுகாப்பினை வழங்குகிறது |
| **வணிகம்** | | | |
| சொத்து | வணிக வளாகங்களுக்கான காப்புறுதி | வணிக உரிமையாளர்கள் | உங்கள் தொழில்துறை அல்லது வர்த்தக சொத்துக்களுக்கு ஏற்படும் இழப்பு அல்லது சேதத்திற்கான காப்புறுதியினை வழங்குகின்றது. |
| | இலங்கைக் காப்புறுதி வணிகக் கழக வர்த்தகர்கள் ஒருங்கிணைந்த காப்புறுதிக் கொள்கை | சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சித் துறை | தீ மற்றும் அதனுடன் தொடர்புடைய ஆபத்துக்கள், தகடு வடிவிலான கண்ணாடி, பணம், இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் பங்கு வீழ்ச்சிக்கான காப்புறுதி மற்றும் ஏனைய தொடர்புடைய அபாயங்கள் உள்ளிட்ட ஒரே கொள்கையில் விரிவான மற்றும் முழுமையான தீர்வொன்றினை அவர்களுக்கு வழங்குகிறது. |
| | தேயிலைத் தொழிற்சாலைக் காப்புறுதி | இலங்கையில் பெருந்தோட்டத் துறை | தேயிலைத் தோட்டங்கள், தொழிற்சாலைகள் மற்றும் சேமிப்பு, அத்துடன் அவற்றின் இயந்திரங்கள், கட்டமைப்புக்கள், பங்குகள் மற்றும் தற்போதைய செயற்பாடுகளுக்கு ஏற்படும் இடர்நேர்வுகள் ஆகியவை உள்ளடங்கின்றன |
| | உணவக உரிமையாளர்களிற்கான விரிவான காப்புறுதி | இலங்கையில் உள்ள உணவக உரிமையாளர்கள் | சுற்றுலா வணிகம் காலப்போக்கில் தனித்துவமான தடைகளை எதிர்கொள்வதால் இலங்கையில் உள்ள உணவக உரிமையாளர்களுக்கு விரிவானதொரு காப்புறுதிப் பாதுகாப்பு. |
| | கட்டுமானத்தில் ஈடுபடுவோருக்கான அனைத்து இடர்நேர்வுக் காப்புறுதி | கட்டுமானத் திட்டங்களை மேற்கொள்கின்ற ஒப்பந்ததாரர்கள் | இன்றைய வேகமான மற்றும் அதிக கேள்வியினைக் கொண்ட கட்டுமான வணிகத்துடன் தொடர்புடைய பல இடர்நேர்வுகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு கட்டுமானத்தில் ஈடுபடுவோருக்கு விரிவானதொரு காப்புறுதி |
| | நிறுவல் சேவைக்கான அனைத்து இடர்நேர்வுக் காப்புறுதி | கட்டுமானத் திட்டங்கள் | இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் நிறுவல்களை உள்ளடக்கியது. |
| | இலத்திரனியல் உபகரணக் காப்புறுதி | வணிக வளாகங்கள் மற்றும் தொழிற்சாலைகள் | உங்கள் இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் கருவிகளைச் சேதப்படுத்தக்கூடிய இடர்நேர்வுகளிலிருந்து உங்கள் கம்பனியைப் பாதுகாக்கும் தனிப்பயன் காப்புறுதி. |
| | இயந்திரம் பழுதடைதல்சார் காப்புறுதி | வணிக வளாகங்கள் மற்றும் தொழிற்சாலைகள் | எதிர்பாராத மற்றும் திடீர் பௌதீக இழப்பு அல்லது காப்புறுதி செய்யப்பட்ட பொருட்களுக்குச் சேதம் ஏற்படுவதற்கான காப்புறுதியானது அவசர பழுதுபார்த்தல் மற்றும்/அல்லது பதிலீட்டினை அனுமதிக்கிறது. |
| | ஒப்பந்ததாரர்கள் ஆலை மற்றும் இயந்திரக் காப்புறுதி | கட்டுமானத் திட்டங்கள் | வேலைத் தளத்தில் எதிர்கொள்ளும் அனைத்து வகையான இடர்நேர்வுகளிற்கும் எதிராக ஒப்பந்ததாரர்களின் தொழிற்சாலை மற்றும் இயந்திரங்களுக்கான பாதுகாப்பை வழங்குகின்றது |
| | பங்கு வீழ்ச்சிக் காப்புறுதி | வணிக வளாகங்கள் மற்றும் தொழிற்சாலைகள் | இயந்திர சிக்கல்கள் காரணமாக உணவு, மருந்தாக்கல் பொருட்கள் போன்ற பொருட்களுக்கான குளிர்பதன சேமிப்பில் சிறிய வெப்பநிலை மாற்றங்களின் இடர்நேர்வுகளையும் எதிர்பாராத சூழ்நிலைகளில் அத்தகைய பண்டங்கள் விரைவாக மோசமடைவதையும் உள்ளடக்கியது. |
| | இலாபங்களின் இயந்திர இழப்புக் காப்புறுதி | வணிக வளாகங்கள் மற்றும் தொழிற்சாலைகள் | இயந்திரங்களால் ஏற்படும் இடையூறுகளின் (எந்தவொரு உற்பத்தி அல்லது தொழில்துறை வசதியிலும் இயந்திர செயலிழப்பானது வழக்கமான தொழிற்பாடுகளை சீர்குலைப்பதுடன் வருமான வழிகளையும் சேதப்படுத்துகிறது) விளைவாக ஏற்படும் மொத்த இலாபத்தின் உண்மையான இழப்பை உள்ளடக்கியுள்ளது. |
| கடல்சார் | கப்பலின் பௌதீகவமைப்பு மற்றும் இயந்திரங்கள் காப்புறுதி | மீன்பிடி படகு உரிமையாளர்கள் மற்றும் கப்பல்களின் உரிமையாளர்கள் | பல்வேறு வகையான இடர்நேர்வுகளால் ஏற்படும் சேதங்களிலிருந்து நீர்வழிகளில் இயங்கும் கடல் மற்றும் ஏனைய படகுகள்/ கப்பல்களின் பௌதீக அமைப்பு மற்றும் இயந்திரங்களுக்கு மொத்த பாதுகாப்பை வழங்குகிறது. |
| | கடல்சார் சரக்கேற்றல் காப்புறுதி | ஏற்றுமதியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்கள் | ஏற்றுமதியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்களின் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு குறிப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது. |
| ஊழியர் தொடர்பானது | தொழிலாளர் இழப்பீட்டுக் காப்புறுதி | தொழிற்சாலைகள், உற்பத்திக் கம்பனிகள் மற்றும் அலுவலகங்கள் | சமீபத்தில் இற்றைப்படுத்தப்பட்ட 2005ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க வேலையாட்கள் நட்டஈட்டுச் சட்டத்தின் கீழ் தொழில்தருநரின் பொறுப்புக்களை எடுத்துக்காட்டுவதுடன் இது வேலையிலுள்ள போது காயமடைந்த தொழிலாளர்களுக்கு நட்டஈடு வழங்குகின்றது. |
| | தனிநபர் விபத்துக் காப்புறுதி | தொழிற்சாலைகள், உற்பத்திக் கம்பனிகள் மற்றும் அலுவலகங்கள் | தாக்குதல், விபத்து அல்லது ஏனைய வெளிப்புற மற்றும் புலப்படும் முறைகளால் ஏற்படும் இறப்பு மற்றும் உடல் காயங்களுக்கு நட்டஈடு வழங்குவதுடன் அத்தகைய எதிர்பாராத நிகழ்வுகள் ஏற்படும் பட்சத்தில் பூட்கை உடமையாளரைப் பாதுகாக்கிறது. |

| திட்ட வகை | தீர்வுகள் | இலக்கு வாடிக்கையாளர்கள் | விவரணம் |
|---|---|---|---|
| | குழு மருத்துவக் காப்புறுதி | அனைத்து வகையான நிறுவனங்கள்/கம்பனிகள் | குழு மருத்துவக் காப்புறுதியானது மருத்துவ மற்றும் சுகாதாரம் தொடர்பான அபாயங்களுக்கு எதிராக ஊழியர்கள், முகாமைத்துவம் மற்றும் கம்பனிகள்/நிறுவனங்களின் பணிப்பாளர் சபைக்கு காப்புறுதியினை வழங்குகிறது. |
| விசேட மோட்டார் வகைகள் | மோட்டார் வாகனத் தொகுதிக்கான தீர்வுகள் | தனிநபர் மற்றும் கம்பனிக்குச் சொந்தமான கார் தொகுதிகள் | கம்பனித்துறைக்குச் சொந்தமான கார் தொகுதிகளுக்கான விபத்து இடர்நேர்வு மற்றும் சேதக் காப்புறுதி |
| | வேளாண்மைசார் வாகனங்கள் மற்றும் விசேட வாகனங்கள் | தனிநபர் மற்றும் கம்பனிக்குச் சொந்தமான வேளாண்மை அல்லது விசேட வாகன வகைகள் | வேளாண்மை மற்றும் விசேட வாகனக் காப்புறுதித் தீர்வுகள் வாகனத்தின் பயன்பாட்டின் தன்மை மற்றும் வாகன வகை என்பவற்றினைக் கருத்திற்கொண்டு தொடர்புடைய வகையின் குறிப்பிட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளன. |

## ஏனைய கொள்கைகள்

- வங்கியாளர்கள் இழப்பீடு
- இறப்பர் தொழிற்சாலை
- தொழில்முறை இழப்பீடு
- விமானக் காப்புறுதி
- பொதுப் பொறுப்பு
- தயாரிப்பு பொறுப்பு

## 2024 நிதியாண்டில் சந்தையில் புதிய உற்பத்திகள் அறிமுகப்படுத்தப்பட்டன

ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் தனது சலுகைகளை விரிவுபடுத்தும் தொடர்ச்சியான முயற்சிகளின் ஓர் அங்கமாக 2024 ஆம் நிதியாண்டில் சந்தையில் புதிய உற்பத்திகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதில் பின்வருவன உள்ளடங்குகின்றன:

### எதிர்காலத்தைப் பாதுகாத்தல் – “சுரக்ஷா” இலவச மாணவர் காப்புறுதித் திட்டம்




இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களின் நல்வாழ்வைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்ட கல்வி அமைச்சின் மாபெரும் தொடக்க முயற்சியான “சுரக்ஷா” காப்புறுதித் திட்டத்திற்கு உதவுவதில் ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் பெருமை கொள்கிறது.

*சுரக்ஷா* என்பது அரச பாடசாலைகள், அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் விசேட தேவைகள் உடைய பாடசாலைகளில் கல்விகற்கும் அனைத்து மாணவர்களையும் உள்ளடக்கிய இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்படும் ஓர் இலவச காப்புறுதித் திட்டமாகும். ஒவ்வொரு மாணவரும் நம்பிக்கையுடன் தனது கல்வியைத் தொடரத் தேவையான பாதுகாப்பைப் பெறுவதை உறுதி செய்து இந்தத் திட்டம் மருத்துவச் செலவுகள், தனியாள் விபத்துப் பாதுகாப்பு மற்றும் பெற்றோரின் இழப்புக்கான நிதியியல் உதவி உள்ளிட்ட விரிவான காப்புறுதியை வழங்குகிறது.

இத்துவக்க முயற்சி, சிறுவர்களின் நலன் மற்றும் கல்விசார் சமத்துவத்திற்கான தேசத்தின் அர்ப்பணிப்பை பிரதிபலிப்பதுடன், மேலும் இலங்கையின் அடுத்த தலைமுறையின் எதிர்காலத்தைப் பாதுகாக்கின்ற இப்பயனுள்ள திட்டத்தை செயல்படுத்துவதிலும் நிர்வகிப்பதிலும் ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் முக்கிய பங்கு வகிப்பதில் பெருமை கொள்கிறது.

### "குருபுகுமன்" உற்பத்தி

பாடசாலை ஆசிரியர்களுக்காக பிரத்தியேகமாக உருவாக்கப்பட்டு விசேடமாக வடிவமைக்கப்பட்ட காப்புறுதித் தீர்வான “குருபுகுமன்” காப்பீடு 2024 ஆம் ஆண்டு டிசம்பர் 4 ஆம் திகதி அன்று வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதி பொதுக் கூட்டுத்தாபனத்தினால் ஆரம்பிக்கப்பட்டது. இந்த விரிவான ஒரு வருடகால கொள்கையானது வேலைத்தளத்திலும் வீட்டிலும் மன அமைதியை உறுதி செய்து வருடமொன்றுக்கு வெறுமனே ரூ. 6,000க்கு தனிப்பட்ட, விபத்து காப்புறுதி மற்றும் வீட்டு காப்புறுதி போன்றவற்றுடன் பெறுமதியான ஒரு தொகுப்பை வழங்குகிறது.

இந்த சிந்தனைமிக்க முயற்சி, எதிர்காலத்தை வடிவமைப்பதற்காக தங்களது வாழ்க்கையை அர்ப்பணிக்கும் ஆசிரியர்களுக்கு அத்தியாவசிய பாதுகாப்பை வழங்குவதுடன், ஆசிரிய சமூகத்தின் மீது ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் கொண்டுள்ள ஆழ்ந்த மரியாதையையும் நன்றியையும் எடுத்துக்காட்டுகின்றது.

### மூன்றாம் தரப்பு மோட்டார் மொத்த இழப்பு பிளஸ்

மோட்டார் மூன்றாம் தரப்பு மொத்த இழப்பு பிளஸ் என்பது பொதுவாக நியமமிக்க மூன்றாம் தரப்பு மோட்டார் காப்புறுதிக் கொள்கையின் மீது வழங்கப்படும் பெறுமதி சேர்க்கப்பட்ட மேம்பாடொன்றாகும். அடிப்படை மூன்றாம் தரப்பு காப்பீடு மூன்றாம் தரப்பினருக்கு ஏற்படும் காயம், இறப்பு அல்லது சொத்து சேதத்திற்கான பொறுப்பை மட்டுமே உள்ளடக்குகின்ற அதே வேளையில், “மொத்த இழப்பு பிளஸ்” சில வரையறுக்கப்பட்ட சூழ்நிலைகளில் – குறிப்பாக மொத்த இழப்பு சூழ்நிலைகளில் வரையறுக்கப்பட்ட சொந்த சேதக் காப்பீட்டை வழங்குகிறது.

### பொறுப்புமிக்க சந்தைப்படுத்தல் மற்றும் வெளிப்படையான தொடர்பு

ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் வாடிக்கையாளர் தொடர்பு உபாயமானது வாடிக்கையாளர்கள் விரைவானதும் தகவலறிந்த வகையிலுமான முடிவுகளை எடுக்க உதவும் வகையில் தெளிவான, சுருக்கமான மற்றும் துல்லியமான தகவல்களை வழங்குவதில் கவனம் செலுத்துகிறது. பரந்த அளவிலான தெரிவுகளுக்கு வாடிக்கையாளர்கள் முகம்கொடுக்கும் போது, வாடிக்கையாளர்கள் எதிர்கொள்ளக்கூடிய சிக்கலைக் குறைக்க நாம் முனைகின்றோம். அதன்படி, எமது விளம்பர மற்றும் சந்தைப்படுத்தல் கருவிகளை வடிவமைக்கும் போது அனைத்து ஒழுங்குமுறை வெளிப்படுத்தல் தேவைகளையும் நாம் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கிறோம். வாடிக்கையாளர்கள் எங்களுடன் தொடர்புறும் போது விவேகமான முடிவுகளை எடுக்க உதவும் வகையில், தேவையானதும் பொருத்தமானதுமான அனைத்து தகவல்களையும் வழங்குவதன் மூலம் தொழில்துறை நியம அளவுகோல்களை நிறுவுதல் எமது குறிக்கோளாகும்.

வாடிக்கையாளர்கள் எமது உற்பத்திகள் மற்றும் சேவைகள் பற்றிய தகவல்களை இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் உள்ளிட்ட பல வழிகள் மூலம் பெற்றுக்கொள்கின்றனர். மேலும், அனைத்து கிளை ஊழியர்களும் விசாரணைகளுக்கு தொழில்சார் முறையில் எதிர்வினையாற்றவும், எமது உற்பத்திகள் மற்றும் சேவைகளுடன் தொடர்புடைய இடர்நேர்வுகளை விபரிக்கவும், வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கான மிகவும் பொருத்தமான தீர்வுகளை நோக்கி வழிகாட்டவும் பயிற்சி பெற்றுள்ளனர். இணையவழி ஊடான காப்புறுதித் தீர்வுகளை அறிமுகப்படுத்தியமை எமது வாடிக்கையாளர்களுக்கு நாம் வழங்கும் வசதியளிப்பு மற்றும் வெளிப்படைத்தன்மையை மேலும் மேம்படுத்துகிறது.

## சந்தைப்படுத்தல் பிரச்சாரங்கள்

### விருதுகளும் அங்கீகாரமும்

“வாடிக்கையாளர் திருப்திக்கான மிகச்சிறந்த காப்புறுதி நிறுவனம் – இலங்கை 2024” என்னும் விருது குளோபல் பிராண்ட்ஸ் அவார்ட்ஸ் நிறுவனத்தினரால் வரையறுக்கப்பட்ட ஜெனரல் இன்ஷுரன்ஸ் லிமிடட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது.

“வாடிக்கையாளர் திருப்திக்கான மிகச் சிறந்த காப்புறுதி நிறுவனம் – இலங்கை 2024” என்னும் விருது ஜெனரல் இன்ஷுரன்ஸ் லிமிடட் நிறுவனத்திற்கு குளோபல் பிராண்ட்ஸ் பத்திரிகையால் வழங்கப்பட்டது. இக்கௌரவ அங்கீகாரம், மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவையை வழங்குவதில் ஜெனரல் இன்ஷுரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பையும், அதன் வாடிக்கையாளர்களின் வளர்ந்து வரும் தேவைகளைப் புரிந்துகொள்வதற்கும் நிவர்த்தி செய்வதற்கான அதன் அர்ப்பணிப்பையும் எடுத்துக்காட்டுகிறது.




### பங்குடைமை

#### மாஸ்டர் அட்டையுடன் பங்குடைமை ஊடான மூலோபாய வாடிக்கையாளர் நன்மைகள்

ஜெனரல் இன்ஷுரன்ஸ் லிமிடட் நிறுவனம் அத்தியாவசிய காப்புறுதி உற்பத்திகளை மலிவாகவும் இலகுவாகவும் பெற்றுக்கொள்வதை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டு, 2024 ஆம் ஆண்டில் மாஸ்டர் அட்டையுடன் இணைந்து இலக்கு வைக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு நன்மை பயக்கும் வகையிலான பிரச்சாரத்தைத் ஆரம்பித்தது.

இத்துவக்க முயற்சியின் ஓர் அங்கமாக, மாஸ்டர் அட்டையைப் பயன்படுத்தி பணம் செலுத்தும் போது வாடிக்கையாளர்களுக்கு மூன்று முக்கிய காப்புறுதித் திட்டங்களுக்கு 10 சதவீத தள்ளுபடி வழங்கப்பட்டது.

**எஸ்.எல்.ஐசீ ஜெனரல் ஹோம் ப்ரொடெக்ட்** – வசிப்பிட சொத்து மற்றும் உள்ளடக்கங்களை உள்ளடக்கியது
**மெடி ஐ 60** – சிரேஷ்ட பிரஜைகளுக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்ட ஒரு சுகாதார காப்புறுதித் திட்டம்
**மெடி ப்ளஸ்** – தனிநபர்கள் மற்றும் குடும்பங்களுக்கான விரிவான சுகாதார பாதுகாப்பு

வாடிக்கையாளரைத் தக்கவைப்பதை பலப்படுத்துகின்ற அதே வேளையில், மூலோபாய நிதியியல் பங்குடைமைகள் மூலம் பெறுமதியை அதிகரிக்கும் நோக்கில் இந்த ஊக்குவிப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. வாடிக்கையாளர்கள் குறைந்த செலவில் நீண்டகால பாதுகாப்பு தீர்வுகளிலிருந்து பயனடைய முடிவதுடன் இந்த சலுகை 28 பெப்ரவரி 2025 வரையே செல்லுபடியாகும்.

இந்த முயற்சியானது எமது தொழில்நாமத்தின் வாக்குறுதிக்கு அமைய வாடிக்கையாளர் திருப்தியையும் ஈடுபாட்டையும் மேம்படுத்தி, அர்த்தமுள்ள ஒத்துழைப்புகள் மூலம் மலிவு விலையில் காப்புறுதித் தெரிவுகளை வழங்குவதற்கான ஜெனரல் இன்ஷுரன்ஸ் நிறுவத்தின் உறுதிப்பாட்டை எடுத்துக்காட்டுகின்றது.




### மோட்டார் பிளஸ் லோயல்டி வெகுமதிகள்

#### மோட்டார் பிளஸ் லோயல்டி வெகுமதிகள் மூலம் வாடிக்கையாளர்களைப் பண்டிகைக் காலத்தில் தொடர்புகொள்ளச் செய்தல் – கிறிஸ்துமஸ் 2024

மேம்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் தொடர்புகொள்ளல் முகாமைத்துவ உத்தியின் ஓர் அங்கமாக, ஜெனரல் இன்ஷுரன்ஸ் லிமிடட் 2024 பண்டிகைக் காலத்தில் மோட்டார் பிளஸ் லோயல்டி வெகுமதிகளைச் நடைமுறைப்படுத்தியது. விரிவான காப்புறுதி பாதுகாப்பிற்காக பணம்செலுத்தியவர்களுக்கு பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட இந்த மோட்டார் பிளஸ் பிரச்சாரம், கிறிஸ்துமஸ் பண்டிகைக் காலத்தைக் கொண்டாடும் வகையில் தொடர்ச்சியான விசேட சலுகைகளை வழங்கியது.

லோயல்டி நடைமுறையானது பலன்களை ஊக்குவிக்கும் அதே வேளையில் ஜெனரல் இன்ஷுரன்ஸ் லிமிடட் நிறவனத்தில் காப்புறுதி செய்யப்பட்டிருப்பதன் பெறுமதியை வலுப்படுத்தி, விரிவான காப்புறுதிப் பாதுகாப்பிற்காக பணம்செலுத்தியவர்கள் தெரிவுசெய்யப்பட்ட பங்குடைமை விற்பனை நிலையங்களில் பிரத்தியேக விலைக்கழிவுகளையும் சலுகைகளையும் அனுபவித்துள்ளனர்.

இந்த பண்டிகைக் கால செயற்பாடு சிந்தனைமிக்க, அனுபவம் சார்ந்த ஈடுபாட்டு உத்திகள் மூலம் நீண்டகால உறவுகளை வளர்ப்பதற்கான பரந்தளவிலான வாடிக்கையாளர் தொடர்புகொள்ளல் முகாமைத்துவப் பார்வையை எடுத்துக்காட்டுகின்றது.




### கொழும்பு மோட்டார் கண்காட்சியில் ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் – 2024

நாடு பூராகவும் உள்ள ஆயிரக்கணக்கான மோட்டார் வாகன ஆர்வலர்கள், தொழில்சார் நிபுணர்கள் மற்றும் குடும்பங்களை கவரும் வகையில் ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் மோட்டார் வாகனக் கண்காட்சி – 2024 இற்கு துணைபுரிந்ததையிட்டு பெருமிதம் அடைகின்றது.

முக்கிய அனுசரனையாளரான ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் இந்த முதன்மையான வாகன காட்சி நிகழ்வை பிராண்ட் தெரிவுநிலையை மேம்படுத்தவும், கொள்வனவு செய்யச் சாத்தியமான வாடிக்கையாளர்களுடன் தொடர்புகொள்ளவும், எமது சந்தையில் முன்னணி வகிக்கும் மோட்டார் பிளஸ் காப்புறுதித் தீர்வுகளை காட்சிப்படுத்தவும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டது. மூன்று நாள் நிகழ்வாக நடந்தேறிய தொடர்பாடல் அரங்குகள், வாடிக்கையாளர் கல்வி மற்றும் பிரத்தியேக தளத்திலான சலுகைகள் என்பன முழுவதும் வலுவான தொழில்நாம இருப்புக்குப் பங்களித்தன.

எமது பங்கேற்பு, பொது காப்புறுதித் துறையில் எமது தலைமையை வலுப்படுத்துகின்ற அதே வேளையில், எமது வாடிக்கையாளர் தளத்துடன் ஒத்துப்போகும் தேசிய நிகழ்வுகளுடன் ஒன்றிணைவதற்கான ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகின்றது.







### தொழிலாளர் பாதுகாப்பிற்காக தொழில்சார் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்திற்கான தேசிய நிறுவனத்திற்குத் துணைபுரிதல் 2024 – காலநிலை மாற்றத்தில் கவனம் செலுத்துதல்

தொழில்சார் ஆரோக்கியம் மற்றும் தொழிலாளர் பாதுகாப்பு தொடர்பாக காலநிலை மாற்றத்தினால் வளர்ந்து வரும் தாக்கத்தை மையமாகக் கொண்ட தொழில்சார் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்திற்கான தேசிய நிறுவனத்தின் 2024 ஆண்டு மாநாட்டின் உத்தியோகபூர்வ காப்புறுதிப் பங்காளராக பணியாற்றியமையையிட்டு ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் பெருமையடைகின்றது.

இந்த மூலோபாய ஒத்துழைப்பானது நாட்டின் தொழிலணியினரைப் பாதுகாப்பதற்கும், விரிவான காப்புறுதித் தீர்வுகள் ஊடாக தொழில்களை மேம்படுத்துவதற்குமான ஜெனரல் இன்ஷூரன்ஸ் நிறுவனத்தின் அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகிறது. தொழில்சார் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்திற்கான தேசிய நிறுவனத்தின் பணியுடன் இணைந்து செயல்படுவதன் மூலம், வளர்ந்து வரும் சுற்றுச்சூழல் மற்றும் தொழில்சார் சவால்களை எதிர்கொள்ளும் போது ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் முன்னெச்சரிக்கையான இடர்நேர்வு முகாமைத்துவத்தையும் தாக்குப்பிடிக்கும் தன்மையையும் தொடர்ச்சியாக மேம்படுத்தி வருகின்றது.

எமது பங்களிப்பானது காப்புறுதியாளராக மாத்திரமின்றி நிலையான நடைமுறைகளை ஊக்குவிப்பதிலும், இலங்கையின் பொருளாதார வளர்ச்சியை முன்னெடுப்பவர்களைப் பாதுகாப்பதிலும் தேசத்தின் அபிவிருத்தியின் பங்களிப்பாளராக எமது வகிபாகத்தை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

### பொதுக் காப்புறுதி உச்ச சாதனையாளர் விருதுகள் 2023 இல் சிறந்து விளங்குபவர்களை கௌரவித்தல் – பொதுக் காப்புறுதியில் ஒரு மைல்கல் தருணம்

ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் அர்ப்பணிப்பு, புத்தாக்கம் மற்றும் உன்னத சேவையின் முக்கிய பெறுமானங்களை எடுத்துக்காட்டும் 18 சிறந்த நபர்களைக் கொண்டாடும் வகையில் 2023 ஆம் ஆண்டுக்கான அங்குரார்ப்பண பொதுக் காப்புறுதி உச்ச சாதனையாளர் விருதுகளை நவம்பர் 22, 2024 அன்று, மலேசியாவின் இயக்கவாற்றல்மிக்க நகரமான கோலாலம்பூரில் பெருமையுடன் நடத்தியது.

செயலாற்றல் கலாசாரம், தரமான வணிக நடைமுறைகள் மற்றும் வலுவூட்டல் ஆகியவற்றைப் பெறுவதில் எமது நம்பிக்கையை வலுப்படுத்தி பொது காப்புறுதித் துறையில் சிறப்பாகச் செயல்படும் நிபுணர்களை அங்கீகரித்து வெகுமதி அளிக்கும் சிறந்த நடவடிக்கையைப் பொதுக் காப்புறுதி உச்ச சாதனையாளர் விருதுகள் பிரதிபலிக்கின்றன.

இந்த பெறுமதிமிக்க சர்வதேச நிகழ்வை மாபெரும் வெற்றியாக மாற்றியமைப்பதில் எமது விநியோகக் குழு மற்றும் மதிப்புமிக்க பங்காளர்கள் உள்ளிட்ட முக்கிய வகிபாகத்தை வழங்கிய தலைவர், பணிப்பாளர்கள் குழு, குழும தலைமை நிறைவேற்று அதிகாரி, தலைமை செயற்படுத்தல் அதிகாரி மற்றும் தலைமைத்துவக் குழுவின் உறுப்பினர்கள் அனைவரையும் ஒன்றிணைத்தது.

தொழில்துறை நியமங்களை உயர்த்துதல், தொழில்சார் வளர்ச்சியை ஊக்குவித்தல் மற்றும் இலங்கையின் பொது காப்புறுதித் திறமையை உலக அரங்கில் நிலைநிறுத்துதல் போன்ற ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் அர்ப்பணிப்பை பொதுக் காப்புறுதி உச்ச சாதனையாளர் விருதுகள் மீண்டும் உறுதிப்படுத்துகின்றன.



**உற்சாகத்தையும் பாதுகாப்பையும் ஊக்குவித்தல் – இலங்கை பந்தய ஓட்டுநர்கள் மற்றும் ரைடர்ஸ் சங்கத்தின் கிரியுல்ல நகர்ப் பேரணி – 2024 இன் உத்தியோகபூர்வ காப்புறுதிப் பங்காளர்**

2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31 மற்றும் செப்டம்பர் 01 ஆம் திகதிகளில் நடைபெற்ற இலங்கை பந்தய ஓட்டுநர்கள் மற்றும் ரைடர்ஸ் சங்கத்தின் கிரியுல்ல மஹாமெருவ பேரணிக்கான உத்தியோகபூர்வ காப்புறுதிப் பங்காளராக ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் பெருமையுடன் செயல்பட்டது.

இலங்கை பந்தய ஓட்டுநர்கள் மற்றும் ரைடர்ஸ் சங்கத்தின் பதாகையின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த விறுவிறுப்பான மோட்டார் விளையாட்டு நிகழ்வானது போட்டியையும் ஆர்வமுள்ள பேரணி ஆர்வலர்களையும் ஒன்றிணைத்தது. ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பங்கேற்பு மோட்டார் விளையாட்டு மற்றும் காப்புறுதி ஆகிய இரண்டுடனும் ஆழமாக இணைந்த பெறுமதிகள், உன்னத தன்மை, துல்லியம் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கான எமது உறுதிப்பாட்டைக் காட்டுகின்ற அதேவேளை நிகழ்வின் பாதுகாப்புத் நியமங்களை உயர்த்துவதில் முக்கிய பங்கு வகித்தது.

எமது பங்கேற்பு, இயக்காவற்றல்மிக்க பொது நிகழ்வுகளில் ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் இருப்பை வலுப்படுத்தியது. மேலும், சமூகங்கள் மற்றும் பங்குதாரர்களுக்கு மறக்க முடியாத அனுபவங்களை வழங்கும் அதே வேளையில் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான எமது அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டியுள்ளன.







**காப்புறுதியை சமூக மட்டத்தில் நெருக்கமாக்குதல் – கன்னொருவ சந்தியில் வாடிக்கையாளர்களைக கவரும் வகையிலான நிகழ்வு**

வாடிக்கையாளர் தொடர்பு மற்றும் சமூக ஈடுபாட்டிற்கான ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பின் ஓர் அங்கமாக, உள்ளூர் சமூகத்திற்கு அத்தியாவசிய காப்புறுதித் தீர்வுகளுக்கான நேரடி அணுகலை உருவாக்குவதற்காக ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் கன்னொருவ சந்தியில் வாடிக்கையாளரைக் கவரும் வகையிலான வெற்றிகரமான நிகழ்வொன்றை நடத்தியது,

இது நாடு முழுவதும் உள்ள தனிநபர்கள் மற்றும் குடும்பங்களுக்கு மிகவும் முக்கியமானவற்றைப் பாதுகாப்பதற்கான ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் நோக்கத்தை வலுப்படுத்தியதன் ஊடாக, இந்த துவக்க முயற்சி பல்வேறு பொது காப்புறுதி சலுகைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், தனிப்பயனாக்கப்பட்ட வழிகாட்டுதலை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டமைந்திருந்தது.

இத்தகைய பிராந்திய இருப்பின் மூலம், ஒவ்வொரு இலங்கையரும் தன்னம்பிக்கைமிக்க எதிர்காலத்திற்கான வாய்ப்பை பெறுவதை உறுதிப்படுத்தி ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் தொடர்ச்சியான நம்பிக்கையைக் கட்டமைத்து, அதன் தடத்தை விரிவுபடுத்தி காப்புறுதியை மேலும் அணுகக்கூடியதாக மாற்றுகிறது.






**எசல பெரஹெரவின் போது வீதிப் பாதுகாப்பை உறுதி செய்தல் – இலவச வாகன பராமரிப்பு துவக்க முயற்சி**

வாடிக்கையாளர் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை நோக்கிய ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் தொடர்ச்சியான அர்ப்பணிப்புக்கமைய, ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் டொட்டாச்சி ஸ்ரீ லங்கா மற்றும் இந்திரா டிரேடர்ஸுடன் இணைந்து, 2024 ஆம் ஆண்டு புனித எசல பெரஹெரா கொண்டாட்டத்தின் போது இலவச வாகனப் பராமரிப்பை ஆரம்பித்தது.

இது இலங்கையின் மிக முக்கியமான கலாச்சார பண்டிகைகளில் ஒன்றின் போது பாதுகாப்பானதும் சௌகரியமானதுமான பயணங்களை உறுதி செய்வதற்காக ஆகஸ்ட் 19 வரை நடைபெறும் இந்த முனைப்பானது, யாத்திரிகர்களுக்கும் பயணிகளுக்கும் விரிவான வாகன சுகாதார பரிசோதனைகள் மற்றும் பயணத்தின்போதான தள்ளுபடிகள் போன்றவற்றை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த பண்டிகைக் காலப் பிரச்சாரம், பயண காலங்களில் வாகன ஓட்டுநர்கள் மற்றும் சமூகங்களை முன்கூட்டியே ஆதரிக்கும் வகையிலான ஒரு பொறுப்பான காப்புறுதியாளர் மற்றும் வீதி பாதுகாப்பு உதவியாளராக ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனம் செயற்படுவதற்கான அதன் பங்களிப்பை வலுப்படுத்தியுள்ளது.









**எதிர்கால வெற்றி வீரர்களைப் பாதுகாத்தல் – பாடசாலைகளின் ரக்பி வீரர் காப்புறுதித் திட்டத்திற்கான உத்தியோகபூர்வ காப்புறுதிப் பங்காளர்**

2024 ஆம் ஆண்டு விளையாட்டு அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளின் ரக்பிக்கான புதிய வீரர் காப்புறுதித் திட்டத்திற்கான உத்தியோகபூர்வ காப்புறுதி பங்காளராகச் செயல்படுவதில் ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் பெருமை கொள்கிறது.

போட்டித் தன்மைவாய்ந்த பாடசாலை மட்டத்திலான ரக்பியுடன் தொடர்புடைய தனித்துவமான இடர்நேர்வுகளுக்கு ஏற்ப விரிவான காப்புறுதித் திட்டத்தை வழங்கி, இந்த முன்னோக்கிய திட்டமானது இளம் விளையாட்டு வீரர்களின் பாதுகாப்பையும் நல்வாழ்வையும் உறுதி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த ஒத்துழைப்பின் மூலம், இளைஞர்களின் திறமைகளை வளர்த்தல், பாதுகாப்பான விளையாட்டுச் சூழல்களை மேம்படுத்தல் மற்றும் எதிர்கால விளையாட்டு தொழில்சார் நிபுணர்களின் முழுமையான வளர்ச்சியை ஆதரித்தல் போன்ற ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகின்றது.

விளையாட்டு உட்கட்டமைப்பு மற்றும் இளைஞர் நலனை வலுப்படுத்துவதற்கான தேசிய முயற்சிகளுடன் இணைந்த வகையில், அடுத்த தலைமுறை வெற்றி வீரர்களைக் களத்திலும் வெளியேயும் மேம்படுத்துவதில் ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் தொடர்ந்தும் ஒரு முன்னோடிப் பங்கை வகிக்கிறது.



### யாத்திரை வசதியளிப்புக்கான துவக்க முயற்சி (அனுராதபுரம், ஜூன் 2024)

மோட்டார் பிளஸ் லோயல்டி வெகுமதிகள் திட்டத்தின் ஊடாக பெறுமதி சேர்க்கப்பட்ட சேவைகளை வழங்குகின்ற எமது தொடர்ச்சியான முயற்சிகளின் ஓர் அங்கமாக, ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் 2024 ஜூன் 21 முதல் 23 வரை அனுராதபுரத்திற்கு யாத்திரை மேற்கொள்ளும் மோட்டார் பிளஸ் காப்புறுதியாளர்களுக்கு பிரத்தியேகமான தரைவழி உதவியை வழங்கியுள்ளது.

ஆன்மீக பயணங்களின் போதான தடையற்ற பயணத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து, ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் சம்பத் மோட்டார்ஸ் மற்றும் லைன் 360 உடன் இணைந்து அனுராதபுர நகரத்தினுள் பாதையோர உதவியை வழங்கியுள்ளது.

**முக்கிய உதவியாக பின்வருவனவற்றை உள்ளடக்கியிருந்தது:**
சம்பத் மோட்டார்ஸ்:

- அனுராதபுரம் நகர எல்லைக்குள் இலவச பழுதுபார்த்தல் சேவை
- சிறிய பழுதுபார்ப்புகளுக்கான இலவச சேவை
- இயக்கவாற்றல்மிக்க சேவைகள்
- ஒரு பிரத்தியேக தொடர்பு மூலம் உதவி ஒருங்கிணைப்பு

**தொடர்பு இல. 360:**

- கழிவுகளுடன் கூடிய பழுதுபார்ப்புச் சேவை
- இயந்திரவியல் மற்றும் இலத்திரனியல் பழுதுபார்ப்புக்களுக்கு 25 சதவீத கழிவு

இந்த முயற்சி பெறுமதியான காப்புறுதிச் சேவைகளின் அர்த்தமுள்ள ஈடுபாட்டின் மூலம் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையையும் திருப்தியையும் மேம்படுத்தி, காப்புறுதியாளர்களுக்கு உடனடியாகவும் அவர்களின் இருப்பிடத்திலும் ஆதரவை வழங்கும் ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் முனைப்புமிக்க அணுகுமுறையை பிரதிபலிக்கிறது.




### பயிற்சியில் சிறந்து விளங்கியதற்கான அங்கீகாரம் – இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனத்தின் கௌரவிப்பு வழங்கும் இரவு மற்றும் நன்றிபாராட்டல் விழா 2024

2024 ஆம் ஆண்டு ஜூன் 13 ஆம் திகதி அன்று, கொழும்பில் உள்ள கிங்ஸ்பரி ஹோட்டலில் நடைபெற்ற இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனத்தின் கௌரவிப்பு வழங்கும் இரவு மற்றும் நன்றிபாராட்டல் நிகழ்வில் கிளை முகாமையாளர்களுக்கான விற்பனை முகாமைத்துவ சான்றிதழ் பாடநெறியில் சிறந்த பங்களிப்பிற்காக ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பயிற்சி வழங்கல் துறைக்கு கௌரவமளிக்கப்பட்டது.

இந்த முக்கியமான திட்டத்தை ஒருங்கிணைத்து வசதியளிப்பதில் ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பயிற்சித் துறையின் முயற்சிகளை அங்கீகரிக்கும் விதமாக இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனம் பயிற்சித் துறைக்கு ஒரு பாராட்டு நினைவுப்பலகையை வழங்கியது. கிளை முகாமையாளர்களின் தலைமைத்துவம் மற்றும் விற்பனை முகாமைத்துவ திறன்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட இந்தப் பாடநெறி, நிறுவனத்தின் விற்பனைத் திறன்களை வலுப்படுத்துவதில் முக்கிய பங்கு வகித்தது.

இந்த அங்கீகாரம், நிறுவனத்தினுள் தொடர்ச்சியான ஊழியர் மேம்பாடு மற்றும் கற்றல் கலாசாரத்தையும் வளர்ச்சியையும் மேம்படுத்துவதில் ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகிறது.




### மைல்கல் சாதனை - யூனியன் வங்கியுடனான வங்கி காப்புறுதியின் கீழ் வெற்றிகரமான வியாபார வழங்கல்

யூனியன் வங்கியுடன் புதிதாக உருவாக்கப்பட்ட வங்கி காப்புறுதி பங்களிப்பின் கீழ் முதல் வியாபார வழங்கலை வெற்றிகரமாக நிறைவு செய்வதன் மூலம் ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் 2024 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டியது. இந்த முக்கிய சாதனை 2024 ஆம் ஆண்டு ஜூன் 11 ஆம் திகதி அன்று யூனியன் வங்கியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த கூட்டுப்பங்களிப்பு பரந்த வாடிக்கையாளர் தளத்திற்கு விரிவான நிதியியல் மற்றும் காப்புறுதித் தீர்வுகளை வழங்க இரு நிறுவனங்களுக்கும் புதிய வழிகளைத் திறந்து கொடுத்தது. இந்த நிகழ்வில் இக்கூட்டாண்மையைத் தொடங்குவதில் ஆதரவு பங்களித்த யூனியன் வங்கியின் உப தலைவர் திரு மனிஷ பெர்னாண்டோ மற்றும் யூனியன் வங்கியின் வங்கி காப்புறுதி மற்றும் பணம் அனுப்புதல் துறையின் தலைவர் திரு தசுன் சிறிவர்தன ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டுப்பங்களிப்பைத் தொடங்குவதிலும் எளிதாக்குவதிலும் முக்கிய பங்கு வகித்தமைக்காக மாற்று விநியோகம் மற்றும் வணிக தக்கவைப்பு, வங்கி காப்புறுதி துணைப் பொது முகாமையாளர் திரு ரொஷான் கொலாஸ் மற்றும் வரையறுக்கப்பட்ட ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் வழிகள் மேம்பாடு (வங்கிகள் மற்றும் பங்குடைமைகள்) முகாமையாளர் திருமதி திலினி கல்லகே ஆகியோருக்கும் விசேட பாராட்டுகள் வழங்கப்பட்டன.

இந்த மைல்கல்லானது விநியோக வழிகளை விரிவுபடுத்துவதிலும் வங்கி காப்புறுதி ஊடாக நிதியியல் துறை ஒத்துழைப்புகளை ஆழப்படுத்துவதிலும் ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் மூலோபாய நோக்கினை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.



### சிங்கிள் ட்ரீ ஹில் மலை ஏறுதலுக்கான காப்புறுதிப் பங்காளர் 2024

2024 ஆம் ஆண்டு ஏப்ரல் 08 மற்றும் 09 ஆம் திகதிகளில் வசீகரமிக்க நுவரெலியா நகரில் நடைபெற்ற சிங்கிள் ட்ரீ ஹில் மலை ஏறுதலுக்கான போட்டி நிகழ்வின் உத்தியோகபூர்வ காப்புறுதிப் பங்காளராக ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் பெருமையுடன் பணியாற்றியது.




இந்தக் கூட்டுப்பங்களிப்பு உற்சாகமானதும் மறக்கமுடியாததுமான நிகழ்விற்கான விரிவான பாதுகாப்பு மற்றும் கள ஆதரவை வழங்கியதுடன் மோட்டார் விளையாட்டுப் பாதுகாப்பு மற்றும் சமூக ஈடுபாட்டிற்கான எமது தொடர்ச்சியான அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியது. இந்நிகழ்வில் ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பிரசன்னமானது இலங்கை முழுவதும் பாதுகாப்பானதும் பொறுப்புமிக்குமான விளையாட்டுச் சூழல்களை மேம்படுத்துவதற்கான எமது அர்ப்பணிப்பை வலுப்படுத்தியது.

### தேசிய விற்பனைகள் முன்னெடுப்பு – சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு 2024

அனைத்து இலங்கையர்களுக்கும் பாதுகாப்பையும் பத்திரத்தையும் ஊக்குவிக்கும் அதே வேளையில் சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்து, இயக்கவாற்றல்மிக்க தேசிய விற்பனை முன்னெடுப்பின் ஓர் அங்கமாக ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் 05 ஆந் திகதி அன்று நாடு தழுவிய பயணத்தைத் தொடங்கியது.

நாடு முழுவதும் உள்ள சமூகங்களுக்கு ஏற்ற வகையிலான காப்புறுதித் தீர்வுகளை வழங்கி, புதிய உற்பத்திகள், சேவைகள் மற்றும் பெறுமதி சேர்ப்புக்களை அறிமுகப்படுத்துவதற்கான ஒரு தளமாக இந்த பிரச்சாரம் அமைந்திருந்தது. கவனமாகத் திட்டமிடல் முதல் தடையற்ற செயற்படுத்தல் வரை, இந்த முன்னெடுப்பானது ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் ஆர்வத்தையும் அர்ப்பணிப்பையும் பிரதிபலித்தது.

இந்த முயற்சியின் மூலம், வாடிக்கையாளர் உறவுகளை வலுப்படுத்தி ஆர்வலர்களுடன் ஆழமான ஈடுபாட்டை ஏற்படுத்தப்பட்டதுடன் எமது குறிப்பிடத்தக்க சலுகைகள் தொடர்பில் பொது விழிப்புணர்வையும் வலுப்படுத்த முடிந்தது. எமது பிரஜைகளின் அதிகரித்துவரும் தேவைகளுக்கு ஏற்ப காப்புறுதியானது அணுகக்கூடியதாகவும், பொருத்தமானதாகவும் விரைவாக எதிர்வினையாற்றக்கூடியதாகவும் உள்ளதென்பதை ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பணிக்கு இந்த பிரச்சாரம் ஒரு உண்மையான சான்றாக அமைந்திருந்தது.




### பொது காப்புறுதி உச்சி மாநாடு 2023 – எமது விற்பனை தீர்களைக் கொண்டாடுதல்

2024 ஆம் ஆண்டு பெப்ரவரி 22 மற்றும் 23 ஆம் திகதிகளில் நீர்கொழும்பில் உள்ள ஜெட்விங் ப்ளூவில் நடைபெற்ற பொது காப்புறுதி உச்சி மாநாடு 2023, வரையறுக்கப்பட்ட ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் தொடர்ச்சியான வெற்றிக்குப் பலமூட்டும் சிறந்த திறமை மற்றும் அர்ப்பணிப்பின் ஒரு பாரிய கொண்டாட்டமாகும்.

இந்த உச்சிமாநாடு நிறுவனம் முழுவதும் சிறப்பாகச் செயற்படும் விற்பனை நிபுணர்கள் மற்றும் வளர்ந்து வரும் திறமையாளர்கள் ஆகியவர்களை அங்கீகரித்து வெகுமதி வழங்கியது. உன்னத தன்மையை கொண்டாடவும், மூலோபாய அகநோக்குகளைப் பகிர்ந்து கொள்ளவும், விநியோக செயற்பாட்டாளர்களின் ஒற்றுமையை வலுப்படுத்தவும் இது ஒரு தளமாக அமைந்தது. அங்கீகாரம் வழங்கும் நிகழ்வுகள் தொடக்கம் அறிவைப் பகிர்ந்து கொள்வதற்கான அமர்வுகள் வரை, இந்த நிகழ்வானது குழு வேலை, புத்தாக்கம் மற்றும் செயற்றிறன் சார்ந்த கலாச்சாரத்தின் இயங்குதன்மையை வெளிப்படுத்தியது.






வளர்ச்சியைத் தொடர்ந்தும் இயக்கி, நிறுவனத்தின் பெறுமதியை நிலைநாட்டுகின்ற அதன் விற்பனை சாம்பியன்களின் முயற்சிகளுக்கும் மற்றும் சாதனைகளுக்கும் ஜெனரல் இன்ஷூரன்ஸ் கம்பனி லிமிடட் பெருமையுடன் பாராட்டுகிறது. இவ் உச்சமடைந்த சாதனை அங்கீகரீப்பதற்கான தருணம் மாத்திரமின்றி எமது மக்களில் முதலிடுவதற்கும் ஒவ்வொரு மைல்கல்லிலும் வெற்றியைக் கொண்டாடுவதற்குமான எமது கடமைப்பொறுப்பை மீளவும் உறுதிப்படுத்துகின்றது.

### இலங்கை லைப் இன்ஷூரன்ஸ் லிமிடட் மற்றும் இலங்கை ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தில் சர்வதேச மகளிர் தின கொண்டாட்டங்கள் 2024

எமது நிறுவனத்திற்குள் பெண்களின் சிறந்த பங்களிப்புகளை கௌரவிக்கும் வகையில், இலங்கை காப்புறுதி ஆயுள் மற்றும் இலங்கை பொதுக் காப்புறுதி ஆகிய நிறுவனங்கள் 2024 ஆம் ஆண்டுக்கான சர்வதேச மகளிர் தினத்தை பெருமையுடன் கொண்டாடின.

ஒரு வாரம் நீடித்த இந்தக் கொண்டாட்டத்தில் ஊக்கமளிக்கும் செயற்பாடுகள், மறக்கமுடியாத தருணங்களைப் பதிவுசெய்ய விசேடமாக வடிவமைக்கப்பட்ட புகைப்படப் பின்னணியில் குறிப்பிடப்பட்டிருந்த “பெண்களை வலுவூட்டல்: நிறுவன உலகில் தொழில் வாழ்க்கை மற்றும் தொழில்முறை என்பவற்றை சமனிலையாக கொண்டுசெல்லல்” என்ற தலைப்பில் விருந்தினர் உரைகளும் இடம்பெற்றன. பேராசிரியர் அரோஷா அதிகாரம் அவர்கள் நிகழ்த்திய உரையில் சிந்தனையைத் தூண்டும் நுட்பங்கள் எமது ஊழியர்களை உற்சாகப்படுத்தி, தொழில் இலக்குகள் மற்றும் தனிப்பட்ட இலக்குகளை சமநிலைப்படுத்துவதற்கான நடைமுறைசார் வழிகாட்டுதலை வழங்கின.

அனைத்துப் பெண்களும் தமது பயணங்களை மேற்கொள்ளவும், சிறந்து விளங்கவும், அவர்களின் சாதனைகளைக் கொண்டாடவும் ஊக்கத்தை வழங்கி இந்நிகழ்வு நிறைவடைந்தது. பாலின சமத்துவம், வலுவூட்டல் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய எமது தொடர்ச்சியான அர்ப்பணிப்பின் உண்மையான பிரதிபலிப்பாக இந்நிகழ்வு அமைந்தது.




### வளர்ந்து வரும் இடர்நேர்வுகளுக்கான விரிவான காப்புறுதி

இலங்கை பொதுக் காப்புறுதியில் வியாபார இடர்நேர்வுகளின் இயக்கவாற்றல் தன்மையை அங்கீகரித்து, பரந்த அளவிலான சவால்களை நிவர்த்தி செய்ய பொருத்தமான காப்புறுதியை வழங்கியுள்ளோம். உற்பத்தி இடர்நேர்வு, இலத்திரனியல் சாதனம் தொடர்பான இடர்நேர்வுகள், சைபர் தாக்குதல்கள் அல்லது இயற்கை பேரழிவுகளின் தாக்கம் என எதுவாக இருந்தாலும், எங்கள் வாடிக்கையாளர்கள் தங்கள் தனித்துவமான தேவைகளைப் பூர்த்தி செய்யும் விரிவான காப்புறுதியைப் பெறுவதை நாங்கள் உறுதிசெய்துள்ளோம்.

வியாபாரங்கள் அதன் சொத்துக்களையும் தொழிற்பாடுகளையும் பாதுகாக்கும் அதே வேளையில் வளர்ச்சியில் கவனம் செலுத்த அனுமதியளித்து, எமது தீர்வுகள் வலுவான பாதுகாப்பை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. வியாபாரப் பரப்பு தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்ததனால், அவை பொருத்தமானதாகவும் வினைத்திறனாகவும் இருப்பதை உறுதிசெய்ய எமது வழங்கல்களை நாம் மாற்றியமைத்துள்ளோம்.







### நம்பிக்கையுடன் வியாபாரங்களை வலுவூட்டல்

இலங்கை பொதுக் காப்புறுதியானது எமது நிறுவன வாடிக்கையாளர்களுக்கு பெறுமதியான அகப்பார்வைகளை வழங்கி ஒப்பந்ததாரர்கள் அனைவருக்கும் இடர்நேர்வு காப்புறுதி என்ற தலைப்பில் ஒரு பிரத்தியேக நிகழ்வை நடத்தியது. இந்த நிகழ்வு, இடர்நேர்வுகளைக் குறைப்பதற்கும் நம்பிக்கையுடன் பெரிய அளவிலான திட்டங்களை மேற்கொள்வதற்கும் தேவையான அறிவு மற்றும் கருவிகளுடன் வியாபாரங்களை உருவாக்குவதில் கவனம் செலுத்தியது.

பொருத்தமான காப்புறுதித் தீர்வுகளை வழங்குதல் மற்றும் தொழில்துறை சார்ந்த இடர்நேர்வுகள் பற்றிய ஆழமான புரிதலை வளர்ப்பதன் ஊடாக வியாபாரங்களுக்கு உதவுவதில் நாம் உறுதியாக இருக்கிறோம். உங்களது வியாபாரத்தின் வளர்ச்சியையும் பாதுகாப்பையும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட மேலதிக நிகழ்வுகளுக்காக் காத்திருங்கள்.




### மோட்டார் வாகனத்துடன் தொடர்புறா துறையில் நிலையான வளர்ச்சி

ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் தொழில்துறையின் சராசரி வளர்ச்சியான 12 சதவீதத்தை விடக் கணிசமாக சிறப்பாக செயல்படும் மோட்டார் வாகனம் தொடர்புபடாத துறையில் 27 சதவீத நிலையான வளர்ச்சி தொடர்பில் நாம் பெருமிதமடைகின்றோம். இந்த குறிப்பிடத்தக்க சாதனை எமது தோற்றப்பாட்டை பன்முகப்படுத்துவதற்கும் எமது வாடிக்கையாளர்களின் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பொருத்தமான காப்புறுதித் தீர்வுகளை வழங்குவதற்குமான எமது அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகின்றது.

இந்தத் துறையில் எமது வளர்ச்சியானது எமது வாடிக்கையாளர்கள் எம் மீது வைத்திருக்கும் நம்பிக்கையையும், பெறுமதி சார்ந்த உற்பத்திகள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கான எமது இயலளவையும் சுட்டிக் காட்டுகிறது.




## மோட்டார் காப்புறுதிச் சந்தைப் பங்கில் வளர்ச்சி

சந்தை வீழ்ச்சி இருந்தபோதிலும், இலங்கை பொதுக் காப்புறுதியானது மோட்டார் காப்புறுதிச் சந்தைப் பங்கில் 5.2 சதவீத அதிகரிப்புடன் 2022 ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் காண்பித்துள்ளது. எமது சந்தைப் பங்கு 2022 இல் 20 சதவீதத்திலிருந்து 2023 இல் 21 சதவீதமாக உயர்ந்தது. இது போட்டித்தன்மை வாய்ந்த, நம்பகமான மற்றும் வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட மோட்டார் காப்புறுதித் தீர்வுகளை வழங்குவதற்கான எமது தொடர்ச்சியான அர்ப்பணிப்பைப் பிரதிபலிக்கிறது.

இந்த வளர்ச்சி எமது வியாபார நாமத்தின் மீதான தாக்குப்பிடிக்ககூடிய தன்மையையும், சவால்மிக்க சந்தை நிலைமைகளிலும் வலுவான வாடிக்கையாளர் நம்பிக்கையைப் பேணுவதற்கான எமது இயலுமையையும் எடுத்துக்காட்டுகிறது.







## சிலோன் மோட்டார் விற்பனையாளர்கள் சங்கத்தின் ஆறுக்கு ஆறு கிரிக்கெட் சுற்றுப் போட்டி

ஜனவரி 27 ஆம் திகதி MCA மைதானத்தில் நடைபெற்ற சிலோன் மோட்டார் விற்பனையாளர்கள் சங்கத்தின் ஆறுக்கு ஆறு அசத்தலான கிரிக்கெட் போட்டியில் பங்கேற்றமையை இட்டு ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் பெருமை கொள்கிறது. அங்கத்துவ அமைப்புகளின் ஊழியர்கள் சிறப்பான கிரிக்கெட் திறமையை வெளிப்படுத்தியதால், சிலோன் மோட்டார் விற்பனையாளர்கள் சங்கத்துடனான எமது கூட்டாண்மை புதிய உயர்வுகளை எட்டியுள்ளது.

வெற்றியாளர்களையும் அவர்களின் குறிப்பிடத்தக்க ஆற்றுகைகளுக்கான சிறப்பு விருதுகளையும் அங்கீகரித்து கொண்டாடுவதில் காப்புறுதிப் பங்காளரான ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் பெருமை கொள்கிறது.

களத்தில் வெளிப்படுத்திய சிறந்த சாதனைகளுக்காக அனைத்து அணிகளுக்கும் வாழ்த்துக்கள்!



# இயற்கை மூலதனம்

பற்றாக்குறையாகவும் பெறுமதிமிக்கதுமாக உள்ள இந்த வளம் தொடர்பில் ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் நடவடிக்கைகள் குறைந்தளவு தாக்கத்தையே கொண்டுள்ளன. மாத்திரமன்றி, அந்த வளத்தை பொறுப்புணர்ச்சியுடன் உபயோகப்படுத்துவது பேண்தகுநிலையை நோக்கிய எமது முன்நகர்வுகளுக்கான முக்கியமான அங்கமாகவும் காணப்படுகின்றது.

## பொறுப்புணர்வு மிக்க அணுகுமுறை

எமது வியாபார நடவடிக்கைகள் பொருள் மற்றும் ஆற்றல் சார்ந்தவை அன்றி தகவல் சார்ந்தவை ஆகும். எனவே, இயற்கை மூலவளத்தின் எமது நுகர்வு நீர், மின்சாரம், எரிபொருள், கடதாசி மற்றும் கழிவுகள் (உணவு, கடதாசி மற்றும் மின்னணு கழிவுகள்) ஆகியவற்றைப் பயன்படுத்துவதைக் கொண்டு வரையறுக்கப்பட்டுள்ளது. எமது நுகர்வும் கழிவு முகாமைத்துவமும் சுற்றுச்சூழலை பாதிப்பதுடன் இயற்கை மூலதனத்தை மேம்படுத்தவோ அல்லது அதன் வரையறுக்கப்பட்ட வளங்களை குறைக்கவோ செய்யும் என்பதை நாம் அறிவோம். இருப்பினும், “பூமியின் அறிவுக்கு நாம் சரணடைந்தால், மரங்களைப் போல வேரூன்றி உயர முடியும்” (ரைனர் மரியா ரில்கே) என்ற பழமொழியில் நம்பிக்கை கொண்டு, இந்த வரையறுக்கப்பட்ட வளத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் கௌரவத்துடன் கவனிக்கின்றோம்.

### சிறப்பம்சங்கள்

| | 2024 | 2023 | மாற்றம் |
|---|---|---|---|
| மின்சார நுகர்வு | 3,240,186 kWh | 3,179,305 kWh | 1.91% |
| தண்ணீர் நுகர்வு | 49,539 m3 | 34,756 $m^3$ | 42.5% |
| கடதாசி மீள்சுழற்சி | 7 1,000 Kgs | 3.49 1,000 Kgs | 100.6% |

### ஐக்கிய நாடுகள் நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகளுக்கான எமது பங்களிப்பு

**12 RESPONSIBLE CONSUMPTION AND PRODUCTION**

**நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்கு பற்றிய வரைவிலக்கணம்**

நிலைபேண்தகு நுகர்வையும் உற்பத்தி முறைகளையும் உறுதி செய்தல்.

**எமது எதிர்வினை**

வீடுகள், பொது மற்றும் தனியார் துறையுடன் இணைந்து பணியாற்றுவதில் எமது கடுமையான ஈடுபாடு

**13 CLIMATE ACTION**

**நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்கு பற்றிய வரைவிலக்கணம்**

காலநிலை மாற்றம் மற்றும் அதன் தாக்கங்களை எதிர்த்துப் போராட அவசர நடவடிக்கை எடுத்தல்.

**எமது எதிர்வினை**

தேசிய சட்டங்கள் மற்றும் சுற்றுச்சூழல் கொள்கைகளுக்கு இணங்குவதன் மூலம்

## வாய்ப்புக்கள்

பொருளாதார மீட்சி, ஒழுங்குபடுத்தல் மேம்பாடு மற்றும் அதிகரித்து வரும் நுகர்வோர் தேவைகள் ஆகியவற்றால் இலங்கையில் பொதுக் காப்புறுதிக்கான வளர்ச்சி வாய்ப்புகள் அதிகரித்துள்ளன.

| டிஜிட்டல் மாற்றம் மற்றும் காப்புறுதித் தொழில்நுட்பம் | நுண் காப்புறுதி மற்றும் உள்ளடக்க அளவு | காலநிலை மற்றும் பேரிடர் இடர்நேர்வு காப்புறுதி | நிறுவன மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி காப்புறுதி வளர்ச்சி | ஒழுங்குபடுத்தல் மற்றும் கொள்கை முன்னேற்றங்கள் |
|---|---|---|---|---|
| சைபர் காப்புறுதி, டிஜிட்டல் காப்புறுதி தளங்களில் வளர்ச்சி. செயற்கை நுண்ணறிவால் இயக்கப்படும் காப்புறுதி மற்றும் உரிமைகோரல் செயல்படுத்தல் என்பன இந்தத் துறையில் எளிதான அணுகலையும் சரியான நேரத்தில் செயல்படுவதையும் வழங்குகிறது. | விவசாய சமூகங்களில் காப்புறுதி, சுகாதார நுண் காப்புறுதி மற்றும் குறைந்த வருமானக் குழுக்களுக்கு மலிவு விலையில் காப்புறுதித் தயாரிப்புகளுக்கான தேவை அதிகரித்து வருகிறது. | அளவுறுக் காப்புறுதி, வெள்ளக் காப்புறுதி மற்றும் பொது மற்றும் தனியார் காப்புறுதித் திட்டங்களுடன் அரசாங்கத்தின் கூட்டாண்மைக்கான தளம். | உலகளாவிய ரேண்டப் பொருளாதார நிலைமைகள் காரணமாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான வியாபார இடையூறு காப்புறுதி, நிறுவன இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கான பொறுப்பு காப்புறுதி மற்றும் வர்த்தக கடன் காப்புறுதி ஆகியவற்றின் விரிவுபடுத்தல். | காப்புறுதி ஊடுருவலை வலுப்படுத்துதல், கட்டாய காப்புறுதிக் கொள்கைகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் காப்புறுதி வழங்குபவர்கள் மீதான நம்பிக்கையை அதிகரிக்கும் மேம்பட்ட நுகர்வோர் பாதுகாப்புச் சட்டங்கள். |

## சவால்கள்

| பொருளாதார மற்றும் சந்தை நிலை உறுதிப்பாடு | ஒழுங்குபடுத்தல் மற்றும் இணங்குவிப்பு | காலநிலை மற்றும் பேரிடர் இடர்நேர்வுகள் | டிஜிட்டல் மற்றும் தொழில்நுட்ப போட்டித்தன்மை | பணியாளர் தேவைகள் |
|---|---|---|---|---|
| காப்பீட்டுத் துறையில் குறைந்த காப்பீட்டு ஊடுருவல் நீண்டகால பிரச்சினையாக இருந்து வருகிறது. இது முதலீட்டு வருமானத்தைப் பாதித்த வட்டி விகித ஏற்ற இறக்கங்களால் மேலும் மோசமடைந்ததுடன் நாணய ஏற்ற இறக்கங்களால் மேலும் பாதிக்கப்பட்டது. | அழுத்தம் இடர்நேர்வு அடிப்படையிலான மூலதனத் தேவை, பணம் தூயதாக்கல் மற்றும் மோசடி தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் வரிவிதிப்புக்கு கடுமையான பயன்பாடு ஆகியவை இலாபத்தைப் பாதித்தன. | கடுமையான வானிலை காலகட்டங்கள் கோரிக்கை கொடுப்பனவுகளை அதிகரித்த அதே வேளையில் குறைந்த அளவிலான அளவுரு காப்புறுதி பேரிடர் காப்புறுதிப் பயன்பாட்டை மட்டுப்படுத்தியது. | மிகவும் போட்டி நிறைந்த துறையில் டிஜிட்டல் உட்கட்டமைப்பில் முதலீடு செய்வதற்கான எல்லைகளைத் தள்ளி, தடையற்ற மற்றும் எளிதில் அணுகக்கூடிய காப்புறுதித் தயாரிப்புகளுக்கான தேவை அதிகரித்துள்ளது. | கணக்கியல் மற்றும் காப்புறுதி இடர்நேர்வு முகாமைத்துவத்தில் வரையறுக்கப்பட்ட மூலவளங்கள் கிடைப்பது, தொடர்ச்சியான பயிற்சிக்கான தேவை மற்றும் தக்கவைப்பு ஆகியவை உறுதி செய்யப்பட்ட ஆண்டில் மூளை வடிகால் மற்றும் பெருமளவிலான இடம்பெயர்வு நடைமுறைக்கு வந்ததால் குறிப்பிடத்தக்க சவால்களை ஏற்படுத்தின. |

## மூலதன இணைப்புக்கள்

| நிதியியல் மூலதனம் | தயாரிக்கப்பட்ட மூலதனம் | அறிவுசார் மூலதனம் | சமூக மற்றும் உறவு மூலதனம் | மனித மூலதனம் |
|---|---|---|---|---|
| இயற்கை மூலதனத்தின் நிலைபேண்தகு பயன்பாடு நீண்ட கால செலவு சேமிப்பு மற்றும் இலாபத்தை உறுதி செய்வதுடன் இடர்நேர்வுக் குறைப்பு மற்றும் சந்தை வாய்ப்புகளை உருவாக்குகிறது. | இயற்கை மூலதனத்தின் பொறுப்புடன் கூடிய பயன்பாடு மூலவள வினைத்திறன், உட்கட்டமைப்பு நீண்டகால நிலைத்திருப்பு, ஒழுங்குபடுத்தல் இணங்குவிப்பு மற்றும் புத்தாக்க மற்றும் நிலைபேறுதன்மையை உறுதி செய்கிறது. | வியாபார நாம உருவாக்கம் மற்றும் வியாபார நாமத்தின் நற்பெயர், மூலோபாய தீர்மானம் எடுத்தல், அறிவுப் பகிர்வு, புத்தாக்கம் மற்றும் ஆராய்ச்சி ஆகியவற்றிற்கு உதவுகிறது. | சமூக நல்வாழ்வை உறுதி செய்து, நம்பிக்கையையும் ஒத்துழைப்பையும் உருவாக்குகி, பொருளாதார சமத்துவத்திற்கும் பங்களிக்கிறது. | ஆரோக்கியமான சூழல், வலுவான பணியாளர்கள், மகிழ்ச்சியான பணிச்சூழல் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்கிறது. |

## எமது இயற்கை மூலதனத்தை நிர்வகித்தல்

மனித நல்வாழ்விற்கும் இப்புவியின் பாதுகாப்பிற்கும் அவசியமான நிலைபேண்தன்மையைத் தக்கவைத்துக்கொள்ளும் நோக்கில், அமைப்புகள், கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் செயன்முறைகளை உள்ளடக்கிய எமது ஆளுகைக் கட்டமைப்பு, இயற்கை மூலதனத்தின் பொறுப்பான நுகர்வை நிர்வகிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. சுற்றுச்சூழல் பாதுகாப்பை நோக்கிய எமது செயற்பாடுகளை உரிய விடாமுயற்சியுடன் முன்னெடுப்பதுடன் கார்பன் பாவனை மூலம் அடிக்குறிப்புகள் மேற்கொள்வதைக் குறைத்து அதற்கு மாற்றீடான முனைப்புகளில் தொடர்ந்தும் முதலீடு செய்கிறோம். நிலைபேறுதன்மைக்கான முக்கிய அளவுகோலாக, கடதாசி நுகர்வைக் குறைப்பதற்கு எமது அமைப்புகள் மற்றும் செயல்முறைகளை டிஜிட்டல் மயமாக்குவதற்கும் தானியங்குபடுத்துவதற்கும் நாம் உறுதிபூண்டுள்ளோம்.

இயற்கை மூலதனத்தை நிர்வகிப்பதற்கான எமது உபாயம் மூன்று அம்சத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது.




## சுற்றுச்சூழல் விதிமுறைகளுடன் இணங்குதல்

ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் ஒரு சேவை நிறுவனம் என்ற வகையில் தேசிய சுற்றுச்சூழல் கொள்கையில் உள்வாங்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு இணங்கி செயற்படுவது தன்னார்வமான பொறுப்பாகும். இருப்பினும், இயற்கை மூலதனத்தின் வரையறுக்கப்பட்ட பயன்பாட்டிற்கான எமது பொறுப்பான மேற்பார்வை குறித்து நாம் அறிந்திருக்கிறோம், மேலும் நீர், வலு மற்றும் கழிவு உற்பத்தியின் பயன்பாட்டை அளவிடுவதில் ஓர் உன்னிப்பான கண்காணிப்பு மற்றும் அவதானிப்புப் பொறிமுறையை நாம் பயன்படுத்துகிறோம். இது எமது இயற்கை வளப் பயன்பாட்டையும் எங்கள் கார்பன் அடிக்குறிப்பெடுத்தல் முறையையும் குறைக்க உதவியுள்ளது.

## டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் கடதாசியற்ற செயல்பாடுகளுக்கு மாறுதல்

### குறைக்கப்பட்ட கடதாசி நுகர்வு

டிஜிட்டல் மயமாக்கலுடன், நிறுவனம் மனிதவளம், நிதி, கொள்முதல் மற்றும் பொது நிர்வாகப் பணிகள் உள்ளிட்ட செயல்பாட்டு செயல்முறைகளில் கடதாசியற்ற செயல்பாடுகளுக்கு மாறியுள்ளது. கடதாசி பயன்பாட்டின் தேவையை மேலும் குறைக்க டிஜிட்டல் ஆவண சேமிப்பு, இலத்திரனியல் கையொப்பங்கள் மற்றும் இணையவழி மூலம் படிவங்கள் நிரப்புதல் ஆகியவற்றை நாம் ஆரம்பித்ததன் மூலம் மரங்களை காப்பாற்றவும் காடழிப்பைக் குறைக்கவும் பங்களித்துள்ளோம். கடதாசி உற்பத்தி, போக்குவரத்து மற்றும் அகற்றல் ஆகியவற்றினால் ஏற்படுகின்ற புகை வெளிப்படல் போன்ற மாசடைதல் காரணிகளைக் குறைத்தல் என்பன இதன் மறைமுக நன்மைகள் ஆகும்.

### வலுசக்தியை வினைத்திறனாகப் பயன்படுத்தல்

தரவு மையங்கள் மற்றும் பொது சக்தி வழங்கிகளால் வலு வினைத்திறன் கொண்ட வன்பொருள், புதுப்பிக்கத்தக்க வலுசக்திப் பயன்பாட்டை பயன்படுத்துவதன் மூலம், பொதுவாக அதிக அளவு வலுசக்தியைப் பயன்படுத்தும் கணிசமான அளவிலான தரவைச் சேமிப்பதிலும் செயலாக்குவதிலும் மின் நுகர்வை மேம்படுத்தியுள்ளோம். இணையவழி சந்திப்புகளுக்குப் பயன்படுத்தப்பட்ட தொலைதூர தளங்கள் அலுவலக இடங்களில் நுகர்வை மேலும் குறைத்து, எங்கள் செலவுகளைக் குறைத்து, வலுசக்தியைச் சேமிப்பதில் பங்களித்துள்ளன.

### குறைக்கப்பட்ட புதைபடிவ எரிபொருளின் பயன்பாடு

எமது டிஜிட்டல் தளங்கள் மற்றும் தானியங்கி சேவைகள் என்பன எமது பணியாளர்கள் அவர்களின் பணிகளை பணியிடத்திற்கு அப்பால் இருந்து மேற்கொள்ள அனுமதித்துள்ளன. இது வீதிப் பயணத்தின் தேவையைக் குறைத்தது. இதனால் கார்பன் வெளியேற்றம் குறைந்ததுடன் சுற்றுச்சூழல் மாசுபாடடைவதையும் அது தடுத்துள்ளது.

ஒட்டுமொத்தமாக, காப்புறுதித் துறையில் தானியக்கம் மற்றும் டிஜிட்டல் மயமாக்கலானது செயல்திறன் மற்றும் குறைக்கப்பட்ட கடதாசி பயன்பாடு மூலம் கார்பன் தடயத்தைக் குறைக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளன. சக்திவலுப் பயன்பாட்டை மேம்படுத்துதல், புதுப்பிக்கத்தக்க சக்திவலு ஊக்கிகளைப் பயன்படுத்தல் மற்றும் நிலைபேண்தகு நடைமுறைகளை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் காப்புறுதித் துறையில் தானியக்கம் மற்றும் டிஜிட்டல் மயமாக்கலின் நேர்நிலையான சுற்றுச்சூழல் தாக்கத்தை மேலும் மேம்படுத்தலாம்.

## கார்பன் அற்ற துறையில் முதலீடு செய்தல்

ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் வெளியேற்ற மதிப்பீடு 2021 இல் ஆரம்பித்ததுடன் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகிறது. இதன் விளைவாக கார்பன் பாவனை அற்ற சூழ்நிலையைப் படிப்படியாக அடைய முடியும் என்று நாங்கள் நம்புகிறோம்.

2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் பெறப்பட்ட கார்பன் தடயச் சான்றிதழை நாம் தொடர்ந்து நாம் பேணி வருகிறோம். இச்சான்றிதழ் 2024 இல் வழங்கப்பட்டதுடன் பசுமை வீட்டு வாயு உறுதிப்படுத்தல் என்பது கணக்காய்வின் போது தேவைப்படுத்தப்படுவதனால் ISO 14064-1:2018 தேவைப்பாடுகளுக்கு இணங்கி செயற்படுதல், ISO-14064-3:2019 இன் விவரக்குறிப்புகளுக்கு இணங்க நியாயமான அளவிலான உத்தரவாதத்துடன் உறுதிப்படுத்திக்கொள்ளல் போன்ற விடயங்கள் இந்த அறிக்கையை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தில் தற்போது கணக்காய்வு செயல்முறையின் கீழ் உள்ளது.

பச்சை வீட்டு வாயு வெளியேற்றத்திற்குப் பொருந்தக்கூடிய நிலைத்தன்மை நடைமுறைகளைப் புகுத்தவும், கார்பன் அற்ற பாவனை முறையை அடைவதில் ஊழியர்களின் பங்களிப்பைப் பெறவும் எமது ஊழியர்களுக்கு விழிப்புணர்வு அமர்வுகள் நடத்தப்பட்டுள்ளன.

## கொள்கைசார் கட்டமைப்பு

எமது குறிக்கோள்களை அடையும் பொருட்டு, எமது செயற்பாடுகள் முழுவதும் உள்ள நடைமுறை மற்றும் செயல்முறையை வரையறுக்கும் ஒரு வலுவான கொள்கைக் கட்டமைப்பிற்குள் நாம் பணியாற்றுகின்றோம். இவை பின்வருவனவற்றை உள்ளடக்குவதுடன், மேலும் பொருத்தத்திற்காக அவ்வப்போது மதிப்பாய்வு செய்யப்பட்டு, தேவைப்பட்டால், தற்போதைய தேவைகள் மற்றும் செயல்பாட்டுத் தேவைகளை ஒருங்கிணைக்க திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- கொள்கைகள் மற்றும் நடைமுறைகள்
- சபை மட்ட மேற்பார்வை
- பொருத்தமான உரிய கடின முயற்சியுடன் கூடிய செயன்முறைகள்
- பொறுப்பான விநியோகச் சங்கிலி முகாமைத்துவம்
- வெளிப்படைத்தன்மை மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவம்
- வணிக மற்றும் வரி உபாய ஆளுகை

## வலுசக்தி முகாமைத்துவம்

வலுசக்தி நுகர்வை நிர்வகிப்பதில் நாம் ஒரு இறுக்கமான கொள்கைக் கட்டமைப்பிற்குள் நின்று நாம் பணியாற்றுகிறோம். இது நுகர்வு மற்றும் பயன்பாட்டில் ஒரு பொறுப்பான நிறுவன குடிமகனாக இருக்க எம்மை அனுமதிக்கிறது.




## எரிபொருள் பயன்பாடு

| எரிபொருள் வகை | மொத்த லீட்டர் | பச்சை வீட்டு வாயு வெளியேற்றம் (CO e) | | | |
|---|---|---|---|---|---|
| | | $CO_2$ | $CH_4$ | $N_2O$ | மொத்தம் |
| பெற்றோல் | 568,061.650 | 1,290.518 | 18.31307 | 16.26835 | 1,325.0997 |
| டீசல் | 36,260.9 | 97.051997 | 0.152218 | 0.214536 | 97.41875 |

## நீர் முகாமைத்துவம்

### பொறுப்புணர்ச்சியுடனான நுகர்வு

எமது அலுவலக வளாகத்தில் நீர் பயன்பாட்டை மேம்படுத்துதல் நீர் வளத்தைப் பாதுகாப்பதற்கும், அதன் மூலம் சுற்றுச்சூழல் நிலைபேண்தன்மையை ஆதரிப்பதற்குமான எமது பங்களிப்பாகும்.




பயனுள்ள கழிவு முகாமைத்துவம் என்பது எமது நிலைபேண்தன்மை உபாயத்தின் ஒரு முக்கிய அம்சமாகும். தகவல் சார்ந்த சேவை அமைப்பாக, கடதாசிப் பயன்பாட்டைக் குறைத்தல் மற்றும் கடதாசியற்ற சேவை வழங்கல், டிஜிட்டல் பணப்பரிமாற்ற செயலாக்கம் மற்றும் குறைந்த அளவில் சக்திவலுவைப் பயன்படுத்திப் பணியாற்றும் அலுவலக நடைமுறையைப் பேணுதல் போன்றவற்றில் எமது செயற்பாடுகள் மூலம் கவனம் செலுத்தப்படுகின்றன. கடதாசி மீள்சுழற்சியைத் தொடங்குவதன் மூலமும், தேசிய சுற்றுச்சூழல் விதிமுறைகளுக்குக் கண்டிப்பாக இணங்கி நடப்பதன் மூலமும் பசுமையான பணியிட செயற்பாடுகளை நாம் ஊக்குவிக்கிறோம்.

## கழிவு மற்றும் கழிவுநீர் முகாமைத்துவம்




## கழிவு வெளியேற்ற முகாமைத்துவம்

ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் ஒட்டுமொத்த பச்சை வீட்டு வாயு வெளியேற்றங்களில் மின்சாரம் அதிக தாக்கத்தை ஏற்படுத்துவதால், மின்சாரத்தைப் பயன்படுத்துவதால் ஏற்படும் கார்பன் வெளியேற்றத்தைக் குறைப்பதற்காக நிறுவனம் வலு செயல்திறனை மேம்படுத்துகிறது. மேலும் பின்வரும் அம்சங்கள் கவனத்திற்கொள்ளப்படுகின்றன:

- நிறுவனத்தின் பெரும்பாலான பிரிவுகளில் LED விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன
- அலுவலகப் பகுதிகளில் 24°C முதல் 26°C வரையிலான வெப்பநிலையில் குளிரூட்டி வெப்ப நிலைகள் அமைக்கப்பட்டுள்ளன
- வெப்பம் அதிகரிப்பதைத் தடுக்க கண்ணாடிகளில் வர்ண ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டுள்ளன
- விளக்குகள், கணினிகள், அச்சு இயந்திரங்கள், போட்டோப்பிரதி இயந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்கள் ஆகியவற்றை அணைக்கவும், ஆளில்லாத இடங்களில் குளிரூட்டி மின்சாரம் வீணாவதைத் தடுக்கவும், வலுசக்தியைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் குறித்தும் ஊழியர்களுக்கு அடிக்கடி விழிப்புணர்வு அமர்வுகள் நடத்தப்பட்டுள்ளன.

## பொருள் முகாமைத்துவம்

ஒரு சேவை வழங்கும் நிறுவனம் என்ற வகையில், பெரும்பாலும் பயன்படுத்தப்படும் பொருள்களாகிய கடதாசியின் பாவனையைக் குறைத்து கடதாசிப் பாவனையற்ற செயற்பாட்டை அடைவதை இலக்காகக் கொண்டு நாம் செயற்பட்டு அதை வெற்றிகரமாகக் குறைத்துள்ளோம்.

## எதிர்கால நோக்கு

எமது வியாபாரத்தின் ஒட்டுமொத்த சாதகத் தன்மையே நெறிமுறைப் பாதுகாப்பு மற்றும் நெறிபிறழ்வு தணிப்பு என்பதால், எமது நிலையான வியாபார நடவடிக்கைகளின் பிரதான அம்சமாகிய, இயற்கை மூலதனத்தின் பொறுப்பான பயன்பாட்டை நாம் தொடர்ந்து உறுதி செய்வோம்.

# 06

# ஆளுகையும் இடர்நேர்வு கண்காணித்தலும்

**80**
நிறுவன ஆளுகை பற்றிய அறிக்கை

**84**
கணக்காய்வு மற்றும் இணக்கப்பாட்டுக் குழு அறிக்கை

**86**
முதலீட்டுக் குழு அறிக்கை

**88**
இடர்நேர்வு முகாமைத்துவ அறிக்கை

**94**
இணக்கப்பாட்டு அறிக்கை

**98**
உள்ளகக் கட்டுப்பாட்டு அறிக்கை

# நிறுவன ஆளுகை அறிக்கை

## தலைவர் வழங்கும் அறிமுகம்

ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோபரேஷன் ஜெனரல் (ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட்) ஒரு அரச நிறுவனமாக இருப்பதால், பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை, நெறிமுறை முகாமைத்துவம் மற்றும் நியாயப்பாடு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட வலுவான ஆளுகை நடைமுறைகளை தனது செயற்பாடு முழுவதிலும் நிலைநிறுத்தியுள்ளது. இது முனைப்பான மற்றும் துரிதமான தீர்மானம் மேற்கொள்ளலை நோக்கமாகக் கொண்டுள்ளதுடன், ஒரு தெளிவான நடத்தைக் கோவை மற்றும் நடத்தை நெறிமுறை, சீரான இடர் மதிப்பீடுகள் மற்றும் வலுவான நிதிக் கட்டுப்பாடுகள் ஆகியவற்றையும் உள்ளடக்கியுள்ளது.

நிறுவன ஆளுகையின் தூண்களில் நிறுவனம் செயற்படும் விதம் தொடர்பாக பணிப்பாளர் சபை நான்கு விதமான தூண்களைக் கொண்டு ஒரு முன்னுதாரணத்தை கட்டியமைத்து தனது பெறுமதிகளைப் பகிர்ந்து கொள்கிறது அத்தகைய தூண்களாவன: பொறுப்புடைமை, பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை மற்றும் நியாயப்பாடு ஆகும். இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட இல. 17ஆம் இலக்கப் பணிப்புரைக்கு இணங்க, இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் நவம்பர் 2023 இல் திருத்தப்பட்ட "நிறுவன ஆளுகைக்கான நடத்தை விதிக்கோவை-2017" இன் ஏற்பாடுகளுக்கு இணங்கிய வகையில் நாம் செயற்படுகின்றோம்.

நிதி அமைச்சினால் 2021 இல் வெளியிடப்பட்ட அரச நிறுவனங்களுக்கான நிறுவன ஆளுகை மற்றும் செயற்பாட்டு கையேடுக்கான வழிகாட்டல்களின் அடிப்படைக் கோட்பாடுகளை நாம் ஏற்றுக்கொண்டுள்ளோம்.

எமது நிறுவன ஆளுகை நடைமுறைகளை மேம்படுத்துவதற்காக, பணிப்பாளர் சபை "சபைக்காக ஒதுக்கப்பட்ட விடயங்களின் அட்டவணையை" ஏற்றுக்கொண்டுள்ளது. இந்த ஆவணம் பணிப்பாளர் சபையின் பொறுப்புகளுக்குள் வரும் விடயங்களுக்கும், ஒப்படைக்கப்படக்கூடிய விடயங்களுக்கும் இடையிலான வேறுபாட்டைத் தெளிவாக வரையறுத்துக் காட்டுகிறது. இது பங்குதாரர்களுக்கு விடயங்களைத் தெளிவுபடுத்தவும், சபை மூலோபாய முன்னுரிமைகளில் கவனம் செலுத்தவும், இடர்களைக் குறைக்கவும் உதவுகிறது.

மீளாய்வு செய்யப்படும் கடந்த நிதியாண்டில், எமது நிறுவன ஆளுகைக்கான அணுகுமுறை பின்வருவனவற்றை உள்ளடக்கியிருந்தது: நிறுவனம் முழுவதும் வலுவான ஆளுகை நடைமுறைகளைப் பேணும் வகையில் நாம் பணியாற்றியுள்ளோம். பணிப்பாளர் சபையும் அதன் பல்வேறு உபகுழுக்களும், அவற்றின் ஒருங்கிணைந்த நிபுணத்துவத்துடன், மேற்பார்வையையும் மூலோபாய வழிகாட்டலையும் தொடர்ந்து வழங்கியுள்ளன. எமது ஆளுகைக் கட்டமைப்பை நிலைநிறுத்த அவர்கள் தெளிவான கொள்கைகளையும் நடைமுறைகளையும் வகுத்தனர்.

முகாமைத்துவத்தின் செயற்பாடுகளைக் கண்காணிக்கவும், நாம் திறம்பட இயங்குகிறோம் என்பதை உறுதிப்படுத்தவும் சபை சீரான இடைவெளியில், கிட்டத்தட்ட ஒவ்வொரு மாதமும் ஒன்று கூடியுள்ளது. நிறைவேற்றுத் தரப் பதவிநிலை அல்லாத பணிப்பாளர்கள் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் நிபுணத்துவ ஆலோசனையையும் வழங்கினர்.

எமது நீண்டகால வணிக வெற்றிக்கு வலுவான நிறுவன ஆளுகை இன்றியமையாதது என நாம் நம்புகிறோம். எனவே, பின்வரும் அறிக்கைகளில் விரிவாகக் காணக்கூடியவாறு, வரும் ஆண்டில் எமது ஆளுகையைத் தொடர்ந்து மேம்படுத்துவதற்கு நாம் உறுதிபூண்டுள்ளோம்.



**நுசித் குமாரதுங்க**
தலைவர்
03 [{d; 2025

**ஆளுகைக் கட்டமைப்பு**

நிறுவனம் தனது பணிப்பாளர் சபை மற்றும் சபை உபகுழுக்கள் மூலம், முறைப்படுத்தப்பட்ட கொள்கைகள், நடைமுறைகள், வழிகாட்டல்கள் மற்றும் பொருத்தமான முகாமைத்துவ அறிக்கையிடல் கோடுகள் உட்பட, தனது செயற்பாடுகளின் அனைத்துப் பகுதிகளிலும் ஒரு ஆளுகைக் கட்டமைப்பைப் பேணுகிறது.




## சபையின் கட்டமைப்பு மற்றும் சபையின் பொறுப்புக்கள்

அறிக்கையிடும் திகதி வரையில், பணிப்பாளர் சபை (சபை) ஏழு (07) பணிப்பாளர்களைக் கொண்டிருந்தது. நிறைவேற்றுத்தரப் பதவிநிலை அல்லாத பணிப்பாளர்கள் தனிப்பட்ட துறைகளில் கைதேர்ந்த நிபுணர்கள் ஆவர். சபையின் கட்டமைப்பு, நிறுவனத்தின் திறமையான செயற்பாடுகளை

மேற்பார்வையிடத் தேவையான விரிவான பொருத்தமான வணிக அனுபவத்தை வழங்குகிறது என்று சபை கருதுகிறது, அதே நேரத்தில் தனிப்பட்ட துறைகளின் பணிப்பாளர்கள் பல்வேறு வகையான திறன்கள், அறிவு மற்றும் நிபுணத்துவத்தைக் கொண்டுள்ளனர். நிறுவனம் ஒரு அரச நிறுவனமாக (SOE) இருப்பதால், பணிப்பாளர் சபை, பிரதான பங்குதாரரான அரசிற்கும், நிறுவனத்திற்கும் அதன் முகாமைத்துவத்திற்கும் இடையில் ஒரு இடைத்தரகராகச் செயற்படுகிறது. சபை ஒட்டுமொத்தப் பொறுப்பிற்கும் தலைமைத்துவத்திற்கும் நேரடியாகவும் மறைமுகமாகவும் பங்குதாரர்களுக்குப் பொறுப்பாக உள்ளது. சபையின் முக்கிய பங்கு மேற்பார்வையும் திட்டமிடலுமாகும். நிறுவனத்தின் நிதி மற்றும் வணிகச் செயற்பாடுகள் சபையினால் சீராக மதிப்பீடு செய்யப்படுகின்றன. அத்துடன், நிறுவனம் எதிர்கொள்ளக்கூடிய அனைத்து இடர்நேர்வுகளை முகாமைத்துவத்துவம் செய்வதன் போதுமான தன்மையை சபை மீளாய்வு செய்து மதிப்பீடு செய்கிறது.

## கம்பனிச் செயலாளர்

ஒரு அரச நிறுவனத்தின் (SOE) கம்பனிச் செயலாளர், பாரம்பரிய நிர்வாக கடமைகளுக்கு அப்பால், மூலோபாய ஆலோசனை மற்றும் இணக்கச் செயற்பாடுகளையும் உள்ளடக்கி, ஆளுகைக் கட்டமைப்பின் ஒருமைப்பாட்டை உறுதி செய்வதற்குப் பொறுப்புடையவர் ஆவார். கம்பனிச் செயலாளரின் கடமைகளும் பொறுப்புகளும் முதன்மையாக 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம், மற்றும் இலங்கை காப்புறுதி ஒழுங்குறுத்தல் ஆணைக்குழுவினால் (IRCSL) வெளியிடப்பட்ட குறிப்பிட்ட பணிப்புரைகள் மற்றும் வழிகாட்டல்கள், அத்துடன் நிறுவன ஆளுகைக் கோவை ஆகியவற்றால் வழிநடாத்தப்படுகின்றன. அனைத்துப் பணிப்பாளர்களுக்கும் கம்பனிச் செயலாளரின் ஆலோசனைகள் மற்றும் சேவைகளுக்கான அணுகல் உள்ளது, மேலும் அவர் சபை நடைமுறைகளுக்கு இணங்கி செயற்படுவதை உறுதிப்படுத்துவதற்கு சபைக்குப் பொறுப்புக் கூறுபவர் ஆவார்.

## சபை மற்றும் குழு நடவடிக்கைகளின் ஒழுங்குமுறைகள்

சபை உறுப்பினர்கள் தங்கள் அனைத்துக் கடமைகளையும் திறம்பட நிறைவேற்றுவதை உறுதிப்படுத்த மாதத்திற்கு ஒருமுறை ஒன்று கூடுகின்றனர். அத்துடன், விசேடமான முறையில் திட்டமிடப்பட்ட கூட்டங்களுக்காக தேவைக்கேற்ப சபை உறுப்பினர்கள் ஒன்று கூடுவர். நிதியாண்டில் நடைபெற்ற சபைக் கூட்டங்களின் எண்ணிக்கை மற்றும் ஒவ்வொரு பணிப்பாளரின் வரவுப் பதிவும் கீழே வழங்கப்பட்டுள்ளன.

## சபை நியமித்த உபகுழுக்கள்

நிபுணத்துவத்தை மேம்படுத்தவும், செயற்திறனை அதிகரிக்கவும், மேற்பார்வையை மேம்படுத்தவும், மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் செயன்முறைகளை மதிப்பிடுவது உட்பட பொறுப்புடைமையை மேம்படுத்தவும் சபை உபகுழுக்களை வடிவமைத்துள்ளது.

சபையால் நியமிக்கப்பட்ட உபகுழுக்கள், நிறுவனத்தின் செயற்பாடுகள், மூலோபாயம் மற்றும் மேற்பார்வையின் குறிப்பிட்ட துறைகளில் கவனம் செலுத்துவதன் மூலம் வினைத்திறனுள்ள நிறுவன ஆளுகையில் ஒரு முக்கிய பங்கை வகிக்கின்றன. அவற்றின் முதன்மைப் பொறுப்பு, தங்களால் நியமிக்கப்பட்ட சாசனங்களுக்குள் உள்ள விடயங்கள் குறித்து முழுச் சபைக்கும் ஆழமான பகுப்பாய்வு, தகவலறிந்த பரிந்துரைகள் மற்றும் ஊக்கமுள்ள மேற்பார்வையை வழங்குவதாகும். இவ்வாறு ஒப்படைக்கப்பட்ட அதிகாரம், கணக்காய்வு மற்றும் இணக்கம், மனிதவளம் மற்றும் ஊதியம், இடர்நேர்வு முகாமைத்துவம் போன்ற முக்கியமான செயற்பாடுகளுக்குச் விசேட நிபுணத்துவம் பிரயோகிக்கப்படுவதை உறுதிசெய்து, சபை சிக்கலான விடயங்களை மிகவும் திறமையாகவும் முழுமையாகவும் கையாளுவதற்கு அனுமதிக்கிறது. உபகுழுக்கள் முழுமையான உரிய வழிப்புக்கவனத்தை மேற்கொள்வதற்கும், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை உருவாக்குவதற்கும், நோக்கங்களுக்கு எதிரான செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்கும், அவற்றின் கண்டறிகைகள் மற்றும் பரிந்துரைகளை முழுச் சபைக்கும் சீராக அறிக்கையிடுவதற்கும் பொறுப்புடையவை ஆகும். இதன் மூலம் சபையின் தீர்மானம் மேற்கொள்ளும் திறன்களை வலுப்படுத்தி, ஒட்டுமொத்த நிறுவனப் பொறுப்புடைமை மற்றும் செயற்பாட்டை மேம்படுத்துகின்றன.

இக்குழுக்கள் சபையால் அங்கீகரிக்கப்பட்ட சாசனங்கள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளால் நிர்வகிக்கப்படுவதுடன், சபை கூட்டங்களில் சபைக்கு சீரான முறையில் அறிக்கையிடுகின்றன.

2024 ஆம் ஆண்டிற்கான, கம்பனிகளின் சட்ட ரீதியான பிரிப்பினால் ஏற்பட்ட தவிர்க்க முடியாத நிர்வாக மற்றும் நடைமுறை தாமதங்கள் காரணமாக, சபையால் அங்கீகரிக்கப்பட்ட உபகுழுக்களின் கூட்டங்கள் அவற்றின் சாசனங்களின்படி திட்டமிடப்பட்டவாறு ஒன்று கூட்டப்பட முடியவில்லை. இருப்பினும், பணிப்பாளர் சபை அனைத்து தேவைகளுக்கும் இணங்கி, மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் உபகுழு கூட்டங்களை நடாத்தியுள்ளது, அதன் விபரங்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன.

01. **சபையின் இடர்நேர்வு முகாமைத்துவக் குழு** (BRMC): இந்தக் குழு நிறுவனத்தின் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பை மேற்பார்வையிடுகிறது. இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கையை உருவாக்குதல், புதுப்பித்தல், அமுல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல், இடர்களைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல், மற்றும் தீர்மானம் மேற்கொள்ளும் செயற்பாட்டில் இடர் மதிப்பீடு ஒருங்கிணைக்கப்படுவதையும் சபையின் இடர்நேர்வு தணிப்பு நிலைகளுடன் இணங்கி வருவதையும் உறுதிப்படுத்துதல் ஆகியவற்றுக்கு இது பொறுப்புடையமதாகும்.

02. **முதலீட்டுக் குழு** (IC): முதலீட்டுக் குழு, கடுமையான இடர்நேர்வு மற்றும் ஒழுங்குமுறை வழிகாட்டல்களைப் பின்பற்றி முதலீட்டு வருமானங்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது முதலீடுகளை முழுமையாகச் சரிபார்த்து, பணப்புழக்கம், கடன், விலை மற்றும் செறிவு போன்ற பல்வேறு இடர்களை பகுப்பாய்வு செய்வதன் மூலம் முதலீட்டு ரீதியாக வினைத்திறனான மற்றும் பயனுறுதியுள்ள தீர்மானம் மேற்கொள்ளும் செயல்முறையை உறுதிப்படுத்துகிறது.

03. **கணக்காய்வு மற்றும் இணக்கக் குழு** (ACC): முதன்மையாக, கணக்காய்வு மற்றும் இணக்கக் குழுவானது நிறுவனத்தின் நிதி அறிக்கைகளின் துல்லியத் தன்மையை உறுதிப்படுத்தும் பணியைக் கொண்டுள்ளது. நிறுவனம் நெறிமுறை நியமங்களுக்கும் அனைத்துப் பொருத்தமான ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகளுக்கும் இணங்கி செயற்படுவதையும் இது சரிபார்க்கிறது.

04. **மனிதவள மற்றும் ஊதியக் குழு** (HR and Rem. Com.): ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் (SLICGL) நிறுவனத்தின் மனிதவள மற்றும் ஊதியக் குழு, நிறுவனத்தின் மனிதவளச் செயற்பாடுகளின் வினைத்திறனான ஆளுகையை உறுதிப்படுத்துகிறது. சிறந்த தொழிற்றுறை நடைமுறைகள் மற்றும் தரவு சார்ந்த, மக்கள் மையக் கலாச்சாரம் ஆகியவற்றின் மூலம் வழிநடாத்தப்பட்டு, இக்குழு ஆட்சேர்ப்பு, பயிற்சி, செயல்திறன் முகாமைத்துவம் (முக்கிய முடிவுகள் மற்றும் முக்கிய செயல்திறன் குறிகாட்டிகள்), பணியாளர் ஈடுபாடு, இழப்பீடு மற்றும் நன்மைகள், தொழில்சார் உறவுகள் மற்றும் நிர்வாகம் ஆகியவற்றை மேற்பார்வை செய்கின்றது. இது சபைக்கு மூலோபாய ரீதியான மனிதவளம் சார் பரிந்துரைகளையும் வழங்குகிறது.

    இக்குழு குறைந்தது நான்கு உறுப்பினர்களைக் கொண்டுள்ளது: இரண்டு நிறைவேற்றுத்தரம் அல்லாத பணிப்பாளர்கள் (ஒருவர் தலைவராகச் செயற்படுவார்), பிரதம நிறைவேற்று அதிகாரி, மற்றும் மனிதவளப் பிரதிப் பொது முகாமையாளர் ஆகிய உறுப்பினர்களாவர். முக்கிய மனிதவளக் கொள்கைகள் மற்றும் தீர்மானங்களை ஆராய்வதற்காக கூட்டங்கள் மாதாந்தம் அல்லது தேவைக்கேற்ப நடாத்தப்படுகின்றன. மனிதவள மற்றும் ஊதியக் குழு பணமில்லாத கொள்கை மாற்றங்கள், கட்டமைப்பு சரிசெய்தல்கள் மற்றும் சிரேஷ்ட முகாமையாளர் நிலைக்குக் கீழான ஊழியர்களுக்கான ஒழுங்குமுறை நடவடிக்கைகளையும் இக்குழு அங்கீகரிக்கிறது, மேலும் முக்கிய முடிவுகளைச் சபைக்குப் பரிந்துரைக்கிறது. வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக கூட்டப் பதிவுகள் சபையுடன் பகிரப்படுகின்றன, மேலும் இக்குழு தனது செயற்திறன் மற்றும் சாசனம் தொடர்பில் வருடாந்த மீளாய்வையும் நடத்துகிறது.

05. **மூலோபாய மீளாய்வுக் குழு** (SRC): மூலோபாய மீளாய்வுக் குழு, நிறுவனத்தின் மூலோபாயத் திட்டத்தை உருவாக்குதல் மற்றும் செயல்படுத்துதல் தொடர்பான பரிந்துரைகள் மற்றும் வழிகாட்டுதல்களை வழங்குவதன் மூலம் பணிப்பாளர் சபையை ஆதரிக்கிறது. இது நிறுவனத்தின் நீண்டகால நோக்கங்கள், முக்கிய முன்னெடுப்புகள் மற்றும் அதன் மூலோபாய திசையுடன் தொடர்புடைய இடர்நேர்வுகளை மீளாய்வு செய்வதையும் உள்ளடக்கியுள்ளது.

06. **எண்ணிம உருமாற்றக் குழு** (DTC): எண்ணிம உருமாற்றக் குழு, நிறுவனத்தின் எண்ணிம மூலோபாயம் மற்றும் புதிய, புதுமையான தொழில்நுட்பத் தீர்வுகளைச் செயல்படுத்துதல் தொடர்பாக பணிப்பாளர் சபைக்கு உதவி மற்றும் ஆலோசனை வழங்குகிறது. இத்தீர்மானங்கள் எண்ணிம தொழில்நுட்பங்கள் மற்றும் நடைமுறைகளை முழு நிறுவனம் முழுவதும் திறம்பட ஒருங்கிணைத்து, அவற்றைப் பரந்த அளவில் உள்வாங்குதல் மற்றும் வெற்றிகரமாக செயற்படுத்தல் ஆகியவற்றை உறுதிப்படுத்துகின்றன. இக்குழுவிற்கு ஒரு பிரபலமான தகவல் தொழில்நுட்ப நிபுணரான நிறைவேற்றுத் தரப் பதவிநிலை அல்லாத பணிப்பாளர் ஒருவர் தலைமை தாங்குகிறார்.

## சபை கூட்டங்கள் – 2024

2024 ஆம் ஆண்டில் பன்னிரண்டு (12) சபை கூட்டங்கள் நடைபெற்றன.

| பணிப்பாளர் பெயர் | கலந்து கொண்ட கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| திரு நுசித் குமாரதுங்க, 2024 அக்டோபர் 23 முதல் நியமனம் | 03 |
| திரு ரொனால்ட் சி பெரேரா, பீ சி, 2024 அக்டோபர் 08 முதல் பதவி துறப்பு | 09 |
| திரு அனில் கொஸ்வத்த, 2025 ஜனவரி 02 முதல் பதவி துறப்பு | 07 |
| திரு நிஷாந்த தயானந்த, 2024 டிசம்பர் 31 முதல் பதவி துறப்பு | 12 |
| திரு துஷ்மந்த தியுவட்ட, 2024 ஏப்ரல் 29 முதல் நியமனம் | 07 |
| கலாநிதி கித்ஸ்ரீ மன்சநாயக்க, 2024 அக்டோபர் 09 முதல் பதவி துறப்பு | 04 |
| திரு நாவோமல் பெல்போல, 2024 அக்டோபர் 08 முதல் பதவி துறப்பு | 09 |
| திரு ரவீந்திர பத்மப்பிரிய, 2024 ஏப்ரல் 29 முதல் நியமனம் | 06 |

## கணக்காய்வு மற்றும் இணக்கக் குழு (ACC) கூட்டங்கள்

2024 ஆம் ஆண்டில் இரண்டு (02) ACC கூட்டங்கள் நடைபெற்றன.

| பணிப்பாளர் பெயர் | கலந்து கொண்ட கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| திரு துஷ்மந்த தியுவட்ட, (குழுவின் தலைவர்) | 02 |
| திரு நிஷாந்த தயானந்த, 2024 டிசம்பர் 31 முதல் பதவி துறப்பு | 02 |
| திரு ரவீந்திர பத்மப்பிரிய | 02 |

ஆண்டு அறிக்கை திகதியின்படி ACC இன் உறுப்பினர்கள்: திரு துஷ்மந்த தியுவட்ட (குழுவின் தலைவர்), திரு ரவீந்திர பத்மப்பிரிய, திரு ரோஹான் பிலிப் புல்ட்ஜன்ஸ்.

## முதலீட்டுக் குழு (IC) கூட்டங்கள் – 2024

2024 ஆம் ஆண்டில் ஐந்து (05) முதலீட்டுக் குழு கூட்டங்கள் நடைபெற்றன. ஒரு நிறைவேற்று அல்லாத பணிப்பாளர் கூட்டங்களுக்குத் தலைமை தாங்கினார்.

| பணிப்பாளர் பெயர் | கலந்து கொண்ட கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| திரு ரவீந்திர பத்மப்பிரிய (குழுவின் தலைவர்) | 05 |
| திரு ரொனால்ட் சி பெரேரா, பீ சி, 2024 அக்டோபர் 08 முதல் பதவி துறப்பு | 04 |
| கலாநிதி கித்ஸ்ரீ மன்சநாயக்க, 2024 அக்டோபர் 09 முதல் பதவி துறப்பு | 04 |
| திரு துஷ்மந்த தியுவட்ட | 05 |
| திரு நுசித் குமாரதுங்க, 2024 அக்டோபர் 18 முதல் நியமனம | 01 |

ஆண்டு அறிக்கை திகதியின்படி IC இன் உறுப்பினர்கள்: திரு ரவீந்திர பத்மப்பிரிய (குழுவின் தலைவர்), திரு நுசித் குமாரதுங்க, திரு துஷ்மந்த தியுவட்ட, திரு ராஜீவ் தர்மேந்திரா.

## இடர்நேர்வு முகாமைத்துவக் குழு (BRMC) கூட்டங்கள் – 2024

2024 ஆம் ஆண்டில் மூன்று (03) இடர்நேர்வு முகாமைத்துவக் குழு கூட்டங்கள் நடைபெற்றன. இக்குழு நிதியியல், முதலீடுகள், காப்பீட்டு கணிதவியல், மறு காப்புறுதி, இணக்கம், உள்ளக கணக்காய்வு, மனித வள முகாமைத்துவம் மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறைகளில் இருந்து இடர்நேர்வு முகாமையாளர்களின் பல்வேறு பிரிவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பரந்த உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. கூட்டங்களுக்கு ஒரு நிறைவேற்று அல்லாத பணிப்பாளர் தலைமை தாங்கினார்.

| பணிப்பாளர் பெயர் | கலந்து கொண்ட கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| திரு நாவோமல் பெல்போல (குழுவின் தலைவர்) 2024 அக்டோபர் 08 முதல் பதவி துறப்பு | 02 |
| கலாநிதி கித்ஸ்ரீ மன்சநாயக்க, 2024 அக்டோபர் 09 முதல் பதவி துறப்பு | 02 |
| திரு துஷ்மந்த தியுவட்ட (குழுவின் தலைவர், 2024 டிசம்பர் 13 முதல் நியமனம்) | 03 |
| திரு நிஷாந்த தயானந்த, 2024 டிசம்பர் 31 முதல் பதவி துறப்பு | 01 |
| திரு ரவீந்திர பத்மப்பிரிய | 01 |

## மனிதவள மற்றும் சன்மானக் குழு கூட்டங்கள் – 2024

2024 ஆம் ஆண்டில் ஐந்து (05) மனிதவளக் குழு கூட்டங்கள் நடைபெற்றன.

| பணிப்பாளரின் பெயர் | சமூகமளித்த கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| திரு நிசாந்த தயானந்த (குழுவின் தலைவர்), 2024 டிசம்பர் 31 ஆம் திகதி முதல் பதவி விலகினார் | 05 |
| திரு ரொனால்ட் சி பெரேரா, சட்டத்தரணி, 2024 அக்டோபர் 08 ஆம் திகதி முதல் பதவி விலகினார் | 04 |
| கலாநிதி கித்ஸிரி மன்சானாயக்க, 2024 அக்டோபர் 09 ஆம் திகதி முதல் பதவி விலகினார் | 04 |
| திரு நுசித் குமாரதுங்க, 2024 அக்டோபர் 23 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டார் | 01 |

ஆண்டு அறிக்கையின் திகதி வரையில் மனிதவள மற்றும் சன்மானக் குழுவின் உறுப்பினர்கள்: திரு நீல் டி பி உனம்பூவ (தலைவர்), திரு நுசித் குமாரதுங்க, திரு துஷ்மந்த தோட்டவத்தே.

## மூலோபாய மீளாய்வுக் குழு கூட்டங்கள் (SRC) – 2024

2024 ஆம் ஆண்டில் ஒரு (01) மூலோபாய மீளாய்வுக் குழு கூட்டம் நடைபெற்றது.

| பணிப்பாளரின் பெயர் | சமூகமளித்த கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| திரு ரொனால்ட் சி பெரேரா, சட்டத்தரணி, 2024 அக்டோபர் 08 ஆம் திகதி முதல் பதவி விலகினார். | 01 |
| திரு ரவீந்திர பத்மப்பிரிய | 01 |
| திரு துஷ்மந்த தோட்டவத்தே | 01 |

ஆண்டு அறிக்கையின் திகதி வரையில் மூலோபாய மீளாய்வுக் குழுவின் (SRC) உறுப்பினர்கள்: திரு துமிந்த தோட்டவத்தே (தலைவர்), திரு கே ராஜீவ் தர்மசேன, திரு நீல் டி பி உனம்பூவ, திரு ரோஹான் பிலிப் புல்ஜன்ஸ்.

## எண்ணிம மாற்றக் குழு கூட்டங்கள் – 2024

2024 ஆம் ஆண்டில் ஒரு (01) எண்ணிம மாற்றக் குழு கூட்டம் நடைபெற்றது.

## செயற்பாட்டு முகாமைத்துவக் குழுக்கள்

மேலே குறிப்பிடப்பட்ட பணிப்பாளர் சபையின் உப குழுக்களுக்கு மேலதிகமாக, பிரதம நிறைவேற்று அதிகாரியின் (GCEO) பணிகளுக்கு உதவுவதற்காக நிறைவேற்றுக் குழு (EXCO), மீள் காப்பீட்டுக் குழு, கணக்காய்வைத் தொடரும் குழு, கிளை முகாமைத்துவ கண்ணோட்டக் குழு, சட்டக் குழு மற்றும் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மீளாய்வுக் குழு போன்ற வேறு சில செயற்குழுக்களும் உள்ளன. இவை அனைத்தும் நிறுவனத்தின் நிர்வாக கட்டமைப்பில் அத்தியாவசியமான பங்கை வகிக்கின்றன. இந்தக் குழுக்களின் உறுப்பினர்கள் நிறுவனத்திற்குள்ளேயே தெரிவு செய்யப்படுவதுடன், அவர்கள் தத்தமது நிபுணத்துவத் துறைகளுக்கு அமைய தெரிவு செய்யப்படுகின்றனர்.

நிறைவேற்றுக் குழுவானது (EXCO) மூலோபாயம், செயற்பாட்டுத் திட்டங்கள், கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் வரவுசெலவுத் திட்டங்கள் போன்றவற்றை உருவாக்கி நடைமுறைப்படுத்துவதன் மூலம் அன்றாட வணிக நடவடிக்கைகளை நிர்வகிக்கிறது. நிறுவனத்தின் கூட்டுறவு மூலோபாயத்தை உருவாக்குவதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் நிறைவேற்றுக் குழுவும் பணிப்பாளர் சபையும் இணைந்து செயற்படுகின்றன. இக்குழு மாதந்தோறும் கூடுவதுடன், தேவைக்கேற்பவும் கூடுகிறது. நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியான குழுவின் தலைவர் குழுவின் இக்குழுவின் அதிகார வரம்புக்குட்பட்ட எந்தவொரு விடயத்தையும் ஆராய்வதற்காக, எந்த நேரத்திலும் கூட்டங்களை கூட்ட முடியும்.

## தகவல் பரிமாற்றம்

அனைத்து பணிப்பாளர் சபை மற்றும் உபகுழுக் கூட்டங்களுக்கு முன்னதாகவும், பணிப்பாளர்கள் விரிவான தகவல்களடங்கிய ஆவணங்களைப் பெற்றுக்கொள்வர். இது தேவையான தகவல்களை வழங்கி, பணிப்பாளர் சபை மற்றும் உபகுழுக் கூட்டங்களில் தகவலறிந்த தீர்மானங்களை மேற்கொள்ள அவர்களுக்கு உதவுகிறது. நிறைவேற்று முகாமைத்துவக் குழுவின் உறுப்பினர்களும் மற்ற முக்கிய ஊழியர்களும் கூட்டங்களுக்குச் சமூகமளித்து, தேவைக்கேற்ப விளக்கங்களை வழங்குவர். பணிப்பாளர்கள், தங்களது கடமைகளை நிறைவேற்றுவதற்காக நிறுவனத்தின் செலவில் சுயாதீனமான நிபுணத்துவ ஆலோசனைகளைப் பெற அதிகாரம் பெற்றுள்ளனர்.

மேலும், அனைத்துப் பணிப்பாளர்களுக்கும் கம்பனிச் செயலாளரின் சேவைகள் கிடைக்கப்பெறுகின்றன. நடைமுறை ஒழுங்குகள் பின்பற்றப்படுவதை பணிப்பாளர் சபை உறுதி செய்வதற்கும், கூட்டுறவு நிர்வாக விடயங்கள் குறித்து பணிப்பாளர் சபைக்கு ஆலோசனை வழங்குவதற்கும் கம்பனிச் செயலாளர் பொறுப்பானவராவார். அனைத்துப் பணிப்பாளர்களும் பணிப்பாளர் சபை மற்றும் தொடர்புடைய உபகுழுக் கூட்டங்களுக்கான ஆவணங்களை இலத்திரனியல் தளம் வழியாக அணுகலாம். இது பணிப்பாளர்களுக்குத் தகவல்களை உரிய நேரத்திலும் பாதுகாப்பான முறையிலும் வழங்குவதோடு, பணிப்பாளர் சபை/குழுக் கூட்டங்களினால் ஏற்படும் சூழற் தாக்கத்தையும் குறைக்கிறது. அனைத்துப் பணிப்பாளர் சபை உபகுழுக் கூட்டங்களின் கூட்டறிக்கைகள் பணிப்பாளர் சபைக்கு காலக்கிரமப்படி சமர்ப்பிக்கப்படுகின்றன.

## நிதி அறிக்கைப்படுத்தல்

ஏற்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க, திரட்டப்பட்ட நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதற்கு பணிப்பாளர்கள் பொறுப்புடையவர்களாவர்.

# கணக்காய்வு மற்றும் இணக்கப்பாட்டுக் குழு அறிக்கை

கணக்காய்வு மற்றும் இணக்கப்பாட்டுக் குழுவின் (ACC) முதன்மையான பொறுப்பு, நிறுவனத்தின் நிதி அறிக்கைகளின் துல்லியத்தன்மையை மேற்பார்வையிடுவதுடன், அவை நிறுவனத்தின் நிதி நிலைமையைச் சரியாகப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனவா என்பதை உறுதி செய்வதாகும். அத்துடன், நிறுவனம் நெறிமுறைசார் தரநிலைகள் மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகளுக்கு இணங்க செயல்படுவதையும் இக்குழு உறுதி செய்கிறது. கணக்காய்வு மற்றும் இணக்கப்பாட்டுக் குழுவானது பணிப்பாளர் சபையில் அங்கம் வகிக்கும் ஒரு நிறைவேற்றுப் பதவிநிலை சாராத பணிப்பாளரால் தலைமை தாங்கப்படுகிறது. நிறுவனச் செயலாளர் கூட்டங்களுக்கான செயலாளராகச் செயல்படுகிறார். இணக்கப்பாடு மற்றும் கணக்காய்வுச் செயற்பாடுகள் இரண்டும் கணக்காய்வு மற்றும் இணக்கப்பாட்டுக் குழுவிடம் அறிக்கையிடப்பட்டாலும், கடமைகளைத் தெளிவாக பிரிப்பு மூலம் அவற்றின் செயற்பாட்டுச் சுதந்திரம் பேணப்படுகிறது.

கணக்காய்வு மற்றும் இணக்கப்பாட்டுக் குழுவிற்கு நிதி, கணக்காய்வு மற்றும் காப்பீட்டுத் துறைகளில் நிபுணத்துவம் பெற்ற முதுநிலை நிபுணர்கள் துணைபுரிகின்றனர். இது நிதியியல் அறிக்கைப்படுத்தல், உள்ளகக் கட்டுப்பாடுகள், இணக்கப்பாடு மற்றும் வெளிவாரிக் கணக்காய்வுகள் உள்ளிட்ட அதன் பொறுப்புகளை திறம்பட நிறைவேற்ற இக்குழுவுக்கு துணைபுரிகின்றது.

## அதிகார வரம்பு

வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதி பொது நிறுவனத்தின் கணக்காய்வு மற்றும் இணக்கப்பாட்டுக் குழுவின் (ACC) அதிகார வரம்பானது, பணிப்பாளர் சபையின் கணக்காய்வு மற்றும் இணக்கப்பாட்டுக் குழுவின் சாசனத்தில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. இச்சாசனம், இலங்கையின் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவும் (SEC) இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனமும் (2023) இணைந்து வெளியிட்ட “கூட்டுறவு நிர்வாகத்திற்கான சிறந்த நடைமுறைகள் விதி” அத்துடன் 2021 இல் வெளியிடப்பட்ட அரச நிறுவனங்களுக்கான கூட்டுறவு நிர்வாக வழிகாட்டல் உட்பட, கணக்காய்வுக் குழுக்களுக்கான வழிகாட்டல் கோட்பாடுகள் மற்றும் சிறந்த நடைமுறைகளுடன் ஒத்துப்போகிறது.

இக்குழு நிதி அறிக்கைப்படுத்தல், உள்ளகக் கட்டுப்பாடுகள், இணக்கப்பாடு மற்றும் உள்ளக மற்றும் வெளிவாரிக் கணக்காய்வு தொடர்பான மேற்பார்வைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் பணிப்பாளர் சபைக்கு துணைபுரிகின்றது. இந்தச் செயற்பாடுகள், நிறுவனத்தின் நிதி அறிக்கைகளின் நம்பகத்தன்மையையும் அதன் நிர்வாகக் கட்டமைப்பின் செயல்திறனையும் உறுதி செய்வதற்காக மேற்கொள்ளப்படுகின்றன. இக்குழு பணிப்பாளர் சபைக்கு தொடர்ச்சியாக அறிக்கையிடுவதுடன் ஆண்டு முழுவதும் தேவைக்கேற்ப பரிந்துரைகளை வழங்குகிறது. இது முகாமைத்துவம் மற்றும் பணிப்பாளர் சபையால் தாபிக்கப்பட்ட வணிகஞ்சார் இடர்நேர்வு முகாமைத்துவத்தையும் கண்காணிக்கிறது. இக்குழு பணிப்பாளர் சபைக்கு பொறுப்புக்கூறுவதுடன், அதன் செயற்பாடுகள் குறித்து பணிப்பாளர் சபைக்கு தொடர்ச்சியான அறிக்கைகளையும் வழங்குகிறது.

## குழு கூட்டங்கள்

2024 டிசம்பர் 31 இல் நிறைவடைந்த நிதியாண்டில், குழுவின் இரண்டு கூட்டங்கள் நடைபெற்றன. குழு கூட்டங்களின் நடவடிக்கைகள் போதுமான விவரங்களுடன் பதிவு செய்யப்பட்டு, பணிப்பாளர் சபைக்குத் தொடர்ச்சியாக அறிக்கையிடப்படுகின்றன. கணக்காய்வாளர் நாயகத்தின் பிரதிநிதிகள் அழைப்பின் பேரில் இக்கூட்டங்களில் கலந்து கொள்கின்றனர்.

2024 ஆம் ஆண்டில் நடைபெற்ற கூட்டங்களுக்கு சமுகமளித்த குழு உறுப்பினர்களின் வருகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:

| பணிப்பாளரின் பெயர் | சமூகமளித்த கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| **திரு ரவீந்திர பத்மப்பிரிய**<br>(2024 பெப்ரவரி 26 ஆம் தேதி முதல் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார்) | 02 |
| **திரு துஷ்மந்த தோட்டவத்தே**<br>(2022 ஆகஸ்ட் 31 முதல் 2024 பெப்ரவரி 26 வரை குழுவின் தலைவராகப் பணியாற்றினார்) | 02 |
| திரு நிசாந்த தயானந்த | 02 |

*அறிக்கையிடப்பட்ட திகதி வரையில், பின்வரும் நிறைவேற்றுப் பதவிநிலை சாராத பணியாளர்கள் கணக்காய்வு மற்றும் இணக்கப்பாட்டுக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்: திரு கே ஆர் பத்மப்பிரிய, திரு டி தோட்டவத்தே மற்றும் திரு நிசாந்த தயானந்த.*

## உள்ளகக் கணக்காய்வு

நிறுவனமானது, ஒரு தகுதிவாய்ந்த பட்டயக் கணக்காளரால் தலைமை தாங்கப்படும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவைக் கொண்டு செயற்படுகின்றது. கணக்காய்வுக் குழு உள்ளகக் கணக்காய்வு உத்திகளை அங்கீகரிப்பதுடன், அவற்றின் சுதந்திரத்தையும் உயர் தரங்களுக்கான இணக்கப்பாட்டையும் உறுதி செய்வதற்காக உள்ளகக் கணக்காய்வு மற்றும் பரிசோதனைச் செயன்முறைகளைத் தொடர்ந்து மதிப்பாய்வு செய்து மேற்பார்வையிடுகின்றது. தமது கடமைகளைத் திறம்பட நிறைவேற்றுவதற்குத் தேவையான அதிகாரமும் வளங்களும் இத்துறைக்கு வழங்கப்படுவதை இக்குழு உறுதி செய்கிறது. திட்டமிடப்பட்ட கூட்டங்களின் போது, உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தின் முன்னேற்றத்தைக் கண்காணிக்கவும், முக்கிய கண்டறிதல்களை மதிப்பிடவும், உள்ளகக் கணக்காய்வுத் தலைவரின் அறிக்கைகளை இக்குழு மீளாய்வு செய்கிறது.

## வெளியகக் கணக்காய்வு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரைக்கு இணங்க, கணக்காய்வாளர் நாயகம் வெளிவாரிக் கணக்காய்வாளராக நியமிக்கப்பட்டார். அரசியலமைப்பின் 154 (4) ஆம் உறுப்புரைக்கு அமைய, 2024 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவனத்தின் நிதி அறிக்கைகளின் வருடாந்த கணக்காய்வுக்கு உதவுவதற்காக, மெஸ்ஸர்ஸ் பி.டி.ஓ பார்ட்னர்ஸ் கணக்காய்வாளர் நாயகத்தால் ஒரு தகுதிவாய்ந்த கணக்காய்வாளராக நியமிக்கப்பட்டனர். அத்துடன், வெளிவாரிக் கணக்காய்வாளரால் வழங்கப்பட்ட கண்டறிதல்கள் மற்றும் பரிந்துரைகள் மீதான முகாமைத்துவத்தின் பதிலுடன், முகாமைத்துவக் கடிதத்தையும் இக்குழு மீளாய்வு செய்தது.

## கணக்காய்வுக் குழுவுக்கு தகவல் பரிமாற்றம்

முகாமைத்துவம் மற்றும் வெளியகக் கணக்காய்வாளர்கள் இருவரிடமிருந்தும் போதுமான, நம்பகமான மற்றும் சரியான நேரத்தில் தகவல்களைப் பெற்றுள்ளதாக கணக்காய்வு மற்றும் இணக்கப்பாட்டுக் குழு (ACC) உறுதிப்படுத்துகிறது. இது கணக்காய்வு மற்றும் இணக்கப்பாட்டுக் குழு தனது பொறுப்புகளைத் திறம்பட நிறைவேற்ற உதவுகிறது.

## சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் விலைமதிப்பு மற்றும் தேய்மானம்

நியாயமான பெறுமதி கணக்கீட்டின் மீதான அதிகரித்து வரும் தங்கியிருத்தலையும் அதன் குறிப்பிடத்தக்க தாக்கத்தையும் கருத்திற் கொண்டு, நியாயமான பெறுமதிகளைத் தீர்மானிப்பதில் பயன்படுத்தப்படும் முக்கியமான அனுமானங்கள் வெளிப்படையாக வெளிப்படுத்தப்படுவதையும், முழுமையாக மீளாய்வு செய்யப்படுவதையும், அவசியமானபோது கேள்விக்குட்படுத்துவதையும் கணக்காய்வுக் குழு உறுதி செய்கிறது. மேலும், தேய்மானத்தை மதிப்பிடுவதற்கான நடைமுறைகள் திருப்திகரமாக உள்ளதா என்பதையும் இக்குழு உறுதிப்படுத்துகிறது.

## சர்வதேச நிதி அறிக்கைப்படுத்தல் நியமங்களை (IFRS) பின்பற்றுதல்

சர்வதேச நிதி அறிக்கைப்படுத்தல் நியமங்களை (IFRS) நிறுவனத்திற்குள் பின்பற்றுவதன் முன்னேற்றத்தை கணக்காய்வுக் குழு மேற்பார்வையிடுகின்றது. இந்த நியமங்களை நடைமுறைப்படுத்துவதில் உள்ள நிலை மற்றும் முன்னேற்றங்கள் குறித்து காலக்கிரமமான பணிப்பாளர் சபை கூட்டங்களின் போது, பணிப்பாளர் சபைக்கு தொடர்ச்சியான இற்றைப்படுத்தல்களை இக்குழு வழங்குகிறது.

## சுயாதீன வெளியக ஆலோசனை

கணக்காய்வுக் குழுவின் சாசனமானது, பொருத்தமான சந்தர்ப்பங்களில் சுயாதீன வெளியக ஆலோசனையைப் பெறுவதற்கு அக்குழுவிற்கு அனுமதி வழங்குகிறது.

## உள்ளகக் கணக்காய்வுத் தலைவர், இணக்கப்பாட்டுத் தலைவர் மற்றும் இடர்நேர்வு மூத்த முகாமையாளரின் கணக்காய்வு மற்றும் இணக்கப்பாட்டுக் குழு (ACC) கூட்டங்களுக்கான அணுகல்

உள்ளகக் கணக்காய்வுத் தலைவர், இணக்கப்பாட்டுத் தலைவர் மற்றும் இடர்நேர்வு மூத்த முகாமையாளர் ஆகியோர் கணக்காய்வு மற்றும் இணக்கப்பாட்டுக் குழுவுக்கு (ACC) நேரடி அணுகலைக் கொண்டுள்ளனர். இந்த ACC ஆனது பணிப்பாளர் சபைக்கு நேரடியாகப் பொறுப்புக்கூறுகிறது.

## கணக்காய்வு சாரா சேவைகள்

இவ்வாண்டில், வெளியகக் கணக்காய்வாளரால் வழங்கப்பட்ட அனைத்து கணக்காய்வு சாரா சேவைகளையும் குழு மதிப்பீடு செய்துள்ளது. இவ்வாறான சேவைகளை வழங்குவது கணக்காய்வாளரின் சுதந்திரத்தன்மைக்கும் புறவயத்தன்மைக்கும் பங்கம் விளைவிக்கவில்லை என்பதை உறுதிப்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

## இணக்கப்பாட்டுச் செயற்பாடு

நிறுவனத்தின் இணக்கப்பாட்டுச் செயற்பாடானது, இணக்கப்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகளை மேற்பார்வையிடுவதற்கும், தொடர்புடைய கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுக்குத் துணைபுரிவதற்கும் பொறுப்பாக உள்ள செயற்பாடாகும். ஒவ்வொரு பிரிவிலும் உள்ள இணக்கப்பாட்டு ஒருங்கிணைப்பாளர்களின் ஆதரவுடன், இணக்கப்பாட்டுத் தலைவர், இடர்நேர்வு மூத்த முகாமையாளர் மற்றும் பிரதம நிதி உத்தியோகத்தர் ஆகியோர் இணக்கப்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பானவர்களாவர். இணக்கப்பாட்டு உத்தியோகத்தருக்கும் கணக்காய்வு மற்றும் இணக்கப்பாட்டுக் குழுவுக்கும் (ACC) இடையிலான அறிக்கையிடல் கட்டமைப்பு, ஆண்டு முழுவதும் எழக்கூடிய குறிப்பிட்ட விடயங்கள் மற்றும் இடர்களை நிவர்த்தி செய்கிறது. பொறுப்பான அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ள பிரிவின் தலைவர்கள், குறிப்பிட்ட கடமைகளுக்கு இணங்கி செயற்படுவதை உறுதி செய்வதற்குப் பொறுப்புக்கூறுபவர்களாக உள்ளனர்.

நிறுவனமானது, வலுவான, சுயாதீனமான இணக்கப்பாட்டுச் செயற்பாட்டைப் பேணிச் செலவுகளைத் திறம்பட முகாமைத்துவம் செய்வதற்காக, “தனித்த” இணக்கப்பாட்டு மாதிரியை ஏற்றுக்கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிலும் உள்ள இணக்கப்பாட்டு ஒருங்கிணைப்பாளர்கள் பயனுள்ள ஈடுபாட்டை உறுதி செய்வதில் ஒரு முக்கியமான பங்கினை வகிக்கின்றனர்.

இந்த மீளாய்வுக் காலத்தில், முக்கிய செயற்பாட்டுப் பகுதிகளில் சிறந்த நடைமுறைகளை உள்வாங்கிக் கொள்வதற்காக இணக்கப்பாட்டுச் செயற்பாடு வலுப்படுத்தப்பட்டுள்ளது. இணக்கப்பாட்டுச் செயற்பாடு ஒரு மேலதிக சுமையாகக் கருதப்படாமல், நிறுவனத்தின் ஒருங்கிணைந்த ஒரு பகுதியாகக் கருதப்படுவதை உறுதி செய்வதற்காக நிறுவனம் ஒரு இணக்கப்பாட்டு கலாச்சாரத்தை வளர்த்தெடுத்துள்ளது.

## முடிவுரை

கடந்த ஆண்டில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு மற்றும் வெளியகக் கணக்காய்வாளர்கள் ஆகிய இருவரின் செயற்திறன் மற்றும் சுதந்திரத்தன்மை குறித்து இக்குழு திருப்தி கொண்டுள்ளது. இது கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரயோகத் தன்மையை அங்கீகரிப்பதுடன், நிறுவனத்தின் நிதிநிலை அறிக்கைகள் நம்பகமானவை எனவும் கருதுகின்றது. மேலும், வெளியகக் கணக்காய்வாளர்களின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, அனைத்து தொடர்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு முழுமையாக இணங்குவதை உறுதி செய்யும் நிறுவனத்தின் இணக்கப்பாட்டு கட்டமைப்பிலும் குழு திருப்தி கொண்டுள்ளது. மீளாய்வுக் காலத்தில் இனங்காணப்பட்ட இணக்கமற்ற எந்தவொரு சந்தர்ப்பத்திற்கும் திருத்த நடவடிக்கைகள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



**திரு துஷ்மந்த தோட்டவத்தே**

தலைவர் – கணக்காய்வு மற்றும் இணக்கப்பாட்டுக் குழு

03 ஜூன் 2025

# முதலீட்டுக் குழு அறிக்கை

## முதலீட்டுக் குழுவின் (IC) நோக்கங்கள்

முதலீட்டுக் குழுவின் (IC) நோக்கங்களாக, கடுமையான இடர்நேர்வு மற்றும் ஒழுங்குபடுத்தல் அம்சங்களுக்குள் நின்று முதலீட்டு வருமானங்களை மேம்படுத்துவதுடன், தொழில்துறையின் சிறந்த நடைமுறைகளுக்கு இணங்க முதலீட்டு ரீதியான தீர்மானங்களை மேற்கொள்ளும் செயன்முறையையும் முதலீட்டு நடவடிக்கையையும் திறமையானதாகவும், பயனுள்ளதாகவும், சரியான நேரத்தில் அமைக்கும் வகையில் காணப்படுகின்றன.

முதலீட்டுக் குழு, அனைத்து முதலீடுகளையும் செயற்படுத்துவதற்கு முன்னர் முழுமையாக அவற்றை ஆய்வு செய்கின்றது. திரவநிலை இடர்நேர்வு (liquidity risk), கடன்சார் இடர்நேர்வு (credit risk), விலை சார் இடர்நேர்வு (price risk), மற்றும் திரட்சி இடர்நேர்வு (concentration risk) போன்ற இடர்கள் முதலீட்டுக் குழுவால் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.

## முதலீட்டு ரீதியான வியூகங்கள்

2024 இல் இலங்கையின் பொருளாதாரச் சூழல் பல முக்கிய அம்சங்களில் குறிப்பிடத்தக்க மீள் எழுச்சியைக் கண்டுள்ளது. இது கடுமையான பொருளாதார நெருக்கடிக்குப் பிந்தைய மீட்சியை நோக்கிய ஒரு முக்கிய முன்னேற்றத்தைக் குறிக்கிறது. நாடு பாராட்டத்தக்க அளவில் 5% மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. இது முந்தைய வீழ்ச்சிகளுடன் ஒப்பிடுகையில் ஒரு பலத்த வேறுபாடாக அமைந்துள்ளது. நிதிசார் ஒழுக்கம் பலனளிக்கத் தொடங்கியதுடன், அரசாங்க வருவாய்கள் கணிசமான அளவு அதிகரித்துள்ளன மற்றும் முதன்மை இருப்பு (primary balance) சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) இலக்குகளைத் தாண்டி ஒரு மிகை நிலையை (surplus) அடைந்துள்ளது. வட்டி விகிதங்களில் படிப்படியான குறைப்பால் வகைப்படுத்தப்பட்ட சாதகமான நாணயக் கொள்கைகள், கடன் விரிவாக்கத்தின் ஆரம்ப அறிகுறிகளை வளர்த்துள்ளன. மேலும், வெளிநாட்டுத் துறை வலுவடைந்து, வளர்ச்சியடைகின்ற ஒதுக்குகள், வெளிநாட்டுப் பணம் அனுப்புதல் மற்றும் சுற்றுலா வருவாய் உயர்வு, மற்றும் இலங்கை ரூபாயின் பெறுமதி வலுவடைதல் ஆகியவற்றுடன் முன்னேற்றத்தைக் காட்டியுள்ளன. இந்த பொருளாதார முன்னேற்றக் காலப்பகுதி ஒரு ஜனாதிபதித் தேர்தலின் முடிவுடன் உடனமைந்த நிகழ்வாய் மாறியது, இது ஒரு புதிய நிர்வாகத்தை அதிகாரத்திற்குக் கொண்டு வந்தது. இந்த முக்கிய அபிவிருத்திகளுக்கு மேலதிகமாக, இலங்கை தனது பொருளாதார மீட்சிப் பயணத்தில் ஒரு முக்கியமான மைல்கல்லை எட்டியுள்ளது. வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு முனைப்புகளின் கணிசமான தீர்மானம், அதிக நிதி ஸ்திரத்தன்மைக்கும், புதுப்பிக்கப்பட்ட முதலீட்டாளர் நம்பிக்கைக்கும் வழி வகுத்தது. 2024 டிசம்பரில் வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு நிறைவடைந்துள்ளமை முதலீட்டாளர்களுக்கு வலுவான நம்பிக்கையை அளித்துள்ளது, அது நாட்டின் அரச தரவரிசையை CCC (பிட்ச் மதிப்பீடுகள்) ஆக, அதன் கடன்செலுத்த முடியா நிலையிலிருந்து மேம்படுத்தியுள்ளது. இதன் விளைவாக, 2025 ஆம் ஆண்டு முதல் அரச பிணைமுறிதாரர்களுக்கு வட்டி மற்றும் அசல் கொடுப்பனவுகள் மீண்டும் தொடங்கப்படவுள்ளது.

முதலீட்டுக் குழுவின் (IC) அறிவு, நிபுணத்துவம் மற்றும் அனுபவம் SLIC இற்கு எதிர்பார்க்கப்பட்டதை விட அதிக முதலீட்டு வருமானத்தைப் பெறுவதற்கு சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டது. முதலீட்டுக் குழுவின் விரைவான முடிவெடுக்கும் திறன், நிலையான வருமானமீட்டும் துறைகளில் (fixed income instruments) கவர்ச்சிகரமான வருமானத்தை உறுதி செய்ய உதவியது. நாணயக் கொள்கை தளர்வின் சாத்தியமான நன்மைகளைப் பெறுவதற்காக சொத்துக்களின் பாவனைக் காலப்பகுதிகள் நீடிக்கப்பட்டன. பங்குச் சந்தையின் வலுவான மீள் எழுச்சியும் முதலீட்டு வருமானத்தின் உறுதியான வளர்ச்சியை எளிதாக்கியது.

## கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடு

முதலீட்டுச் செயற்பாடுகள் தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றன. குழுவானது புறக்காரணிகளில் ஏற்படும் முன்னேற்றங்கள் குறித்து தொடர்ந்து விழிப்புடன் இருப்பதுடன், இடர்நேர்வு வழிகாட்டல்களுக்கு உட்பட்டு முதலீட்டு இலக்குகளை அடைய அவற்றை பயன்படுத்திக் கொள்வதில் கவனம் செலுத்துகிறது. முதலீட்டுக்கான பொதுமக்கள் அலுவலகம் (Front Office), உத்தியோகத்தர் அலுவலகம் (Middle Office), மற்றும் அதிகாரிகள் அலுவலகம் (Back Office) ஆகியவை ஒரு திறமையான முதலீட்டுச் செயல்முறையை எளிதாக்குவதற்காக திறம்பட தொடர்பாடலை மேற்கொள்கின்றன.

## மீளாய்வு செய்யட்பட்ட ஆண்டு – முதலீட்டுச் செயற்பாடுகளின் சுருக்கம்

பொதுக் காப்பீட்டு நிதியம் ரூ. 20.4 பில்லியனாக இருந்தது.

## முதலீடுகளின் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மை

ஒழுங்கற்ற இடர்நேர்வுகளைக் (non-systematic risks) குறைப்பதற்காக, சொத்துப் பட்டியல் பன்முகப்படுத்தல் (portfolio diversification) முதலீட்டுக் குழுவின் (IC) ஒரு முக்கிய கருப்பொருளாகும். கீழே உள்ள பை வரைபடங்கள் 2024 டிசம்பர் 31 ஆம் திகதியன்று பொதுக் காப்பீட்டு நிதியத்தின் முதலீட்டுச் சொத்துக்களின் ஒதுக்கீட்டை எடுத்துக்காட்டுகின்றன. (பெறுமதிகள் சந்தைப் பெறுமதிகளின் அடிப்படையில் அமைந்துள்ளன).

### துறைசார் ஒதுக்கீடு – 2024 டிசம்பர் 31 திகதியன்று பட்டியலிடப்பட்ட பங்குரிமை பொது நிதி




- அ – 91.84% நிதிச் சேவைகள்
- ஆ – 0.00% சுகாதாரப் பராமரிப்பு
- இ – 2.03% கைத்தொழில்கள்
- ஈ – 0.18% பயன்பாட்டு சேவைகள்
- உ – 0.16% தொலைத்தொடர்பு சேவைகள்
- ஊ – 4.03% நுகர்வோர் அத்தியாவசியப் பொருட்கள்
- எ – 1.75% முக்கியத்துவமிக்கவை
- ஏ – 0.01% நுகர்வோர் விருப்பப் பொருட்கள்
- ஓ – 0.00 அசையாச் சொத்து
- ஐ – 0.00% – வலுசக்தி

## முதலீட்டு வருமானம்

பொதுக் காப்பீட்டிற்கான மொத்த முதலீட்டு வருமானம் இந்த ஆண்டில் ரூ. 3.9 பில்லியனாக காணப்பட்டது. அறிக்கையிடல் காலப்பகுதியில், முதலீட்டு வருமானம் பொதுக் காப்பீட்டிற்கான மொத்த வருவாயில் 16.4% ஆக அமைந்திருந்தது.

## சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவக் (ALM) கருத்தாய்வுகள்

முதலீட்டுக் குழு (IC) சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவத்தில் கவனம் செலுத்துகிறது. நிதியத்திற்குச் சாதகமான தவறான முறையில் ஈடுகட்டப்படும் (mismatches) விடயங்களை நிர்வகிப்பது ஒரு முக்கிய விடயமாகக் காணப்படுகின்றது. 2024 ஆம் ஆண்டில் வட்டி விகிதங்கள் குறைந்து வந்ததால், நீண்ட கால முதலீடுகளில் முதலீடு செய்ய முதலீட்டுக் குழு உணர்வுபூர்வமாக முடிவு செய்தது. இலங்கை பொருளாதாரம் ஒருங்கிணைந்து, சமபங்கு மற்றும் நிலையான வருவாய் முதலீடுகளுக்கு நல்ல வருமானத்தை வழங்கி, வலுவான மீட்சியைப் பெறும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். அடுத்தடுத்த ஆண்டுகளில் மேலும் பெரிய சாதனைகளை அடைய முதலீட்டுக் குழு முயற்சி எடுக்கவுள்ளது.



**திரு ரவீந்திர பத்மப்பிரிய**
தலைவர் – முதலீட்டுக் குழு
03 ஜூன் 2025

# இடர்நேர்வு முகாமைத்துவ அறிக்கை

## அறிமுகம்

**ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட், பாரம்பரிய நிதி நிர்வாகத்திற்கு அப்பால் முன்னேறி, தகவல் பாதுகாப்பு, தகவல் தொழில்நுட்பம், மூன்றாம் தரப்பு உறவுகள், நிர்வாக ரீதியான இடர்நேர்வு மற்றும் ஒழுங்குமுறை இணக்கப்பாடு உள்ளிட்ட பல முக்கிய களங்களை நிவர்த்தி செய்யும் ஒரு விரிவான இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பை நிறுவியுள்ளது.**

நிறுவனத்தின் மூலோபாய, செயற்பாட்டு மற்றும் வணிக நோக்கங்களை அடைவதற்கும், நிலையான வணிகப் பெறுமானத்தை வழங்குவதற்கும் வினைத்திறன் மிக்க இடர்நேர்வு முகாமைத்துவம் அவசியம் என்பதை நிறுவனம் அங்கீகரிக்கிறது. அதற்கிணங்க, ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் ஆனது தனது முதன்மை வணிக மற்றும் மூலோபாய இடர்களை முறையாக அடையாளம் காண்பதற்கும், மதிப்பீடு செய்வதற்கும், தணிப்பதற்கும் துணைபுரியும் வகையில், ISO:31000 தரத்துடன் இணைந்த ஒரு கட்டமைக்கப்பட்ட மற்றும் வலுவான கட்டமைப்பை உருவாக்கியுள்ளது.

**அக்கட்டமைப்பானது வரைபடமாகக் கீழே வழங்கப்பட்டுள்ளது:**




மதிப்பீட்டு செய்யும் கட்டத்தின் போது, ஒவ்வொரு இடரும் சம்பவிப்பதற்கான நிகழ்தகவு/சாத்தியக்கூறு மற்றும் சாத்தியமான தாக்கம் இரண்டும் அதன் ஒட்டுமொத்த இடர் வகைப்பாட்டைத் தீர்மானிப்பதற்கு மதிப்பிடப்படுகின்றன. இந்த மதிப்பீடு பொதுவாக ஒரு இடர்நேர்வு கணிப்பு மூலம் விளக்கப்படுகிறது. இது நிகழ்வு சம்பவிக்கும் நிகழ்தகவு மற்றும் அதன் தாக்கத்தின் தீவிரம் போன்றவை தொடர்பான ஒட்டுமொத்த இடர் மட்டத்தைக் காட்சி ரீதியாகக் எடுத்துக்காட்டுகிறது.

## இடர்நேர்வை நிர்வாகித்தல்

ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பணிப்பாளர் சபையானது, அதன் ஒட்டுமொத்த இடர்நேர்வு முகாமைத்துவச் செயற்பாடுகளை மேற்பார்வையிடும் பணியில், பணிப்பாளர் சபை இடர்நேர்வு முகாமைத்துவ உபகுழுவின் ஆதரவைப் பெற்றுக்கொள்கிறது. கம்பனியின் நிறுவன மூலோபாயத்தின் பிரதான அம்சமாக இடர்நேர்வு முகாமைத்துவத்தை உட்படுத்துவதில் இந்த உபகுழு ஒரு முக்கிய பங்கை வகிக்கிறது. நிறுவனத்தின் இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் SLICGL இன் மூலோபாய நோக்கங்களுடனும், அதன் வரையறுக்கப்பட்ட இடரை எதிர்கொள்ளல் மற்றும் தாக்குப்பிடித்தல் ஆகிய மட்டங்களில் தொடர்ச்சியாக ஒத்திசைந்து கருமமாற்றுவதை உறுதிசெய்வது இதன் முக்கிய பொறுப்புகளில் ஒன்றாகும். இடர்நேர்வு முகாமைத்துவ உபகுழுவுக்கு மேலதிகமாக, பணிப்பாளர் சபை கணக்காய்வு மற்றும் இணக்கப்பாட்டுக் குழு மற்றும் முதலீட்டுக் குழு போன்ற வேறு விசேட உபகுழுக்களையும் நிறுவியுள்ளது. இவை அவற்றுக்குப் பொறுப்பாக்கப்பட்டுள்ள துறைகளில் இடர்நேர்வு குறித்த மேற்பார்வை மேற்கொள்வதை எளிதாக்குவதற்குத் துணைபுரிகின்றன.

## கண்காணிப்புக் கட்டமைப்பு

நான்கு தனித்தனியான மற்றும் தெளிவாக அடையாளம் காணப்பட்ட வணிக நிலைகள் இருக்கும்போது இடர்நேர்வு முகாமைத்துவம் மிக வலுவான நிலையில் காணப்படும், அவை பின்வருமாறு:

அ. “யாரால் இடர் நேருகின்றதோ அவர்கள் மூலம் அதனை நிவர்த்தி செய்ய மேற்கொள்ளப்படும் செயற்பாட்டு முகாமைத்துவம்” – இது முதல்நிலை பாதுகாப்பு ஆகும் (இடரைப் பொறுப்பேற்று முகாமை செய்தல்).

ஆ. “நிதிசார் கட்டுப்பாடுகள், இடர் கட்டுப்பாடுகள் மற்றும் இணக்கம்” – இது இரண்டாம்நிலை பாதுகாப்பு (இடரைக் கண்காணித்தல்).

இ. “உள்ளகக் கணக்காய்வு” – இது மூன்றாம்நிலை பாதுகாப்பு (சுயாதீனமான உறுதிப்படுத்தல்).

ஈ. “வெளியகக் கணக்காய்வாளர்கள் மற்றும் ஒழுங்குபடுத்துநர்கள்” – இது நான்காம்நிலை பாதுகாப்பு (முறையான தொடர்பாடல்).

நான்காம்நிலை பாதுகாப்பின் வெளிப்பாடு, உள்ளகக் கணக்காய்வாளர்கள், வெளியகக் கணக்காய்வாளர்கள் மற்றும் மேற்பார்வை அதிகாரிகளுக்கிடையேயான மேம்பட்ட முறையிலான ஒத்துழைப்பை உள்ளடக்கியதாகும். காப்புறுதித் துறையின் சூழலில், ஒழுங்குபடுத்தல் மேற்பார்வை பிரதானமாக இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படுகிறது.

கணக்காய்வுக் குழுவிற்கு அறிக்கையிடுவது, கணக்காய்வுச் செயற்பாடுகளின் சுயாதீனத் தன்மையை உறுதிசெய்கிறது. அதேவேளை, இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவிற்கு அறிக்கையிடுவது, இடர்நேர்வு முகாமைத்துவ நிகழ்ச்சி நிரலின் ஒருமைப்பாட்டைப் பாதுகாக்கிறது, இது கணக்காய்வில் முன்னுரிமையளித்தல் போன்ற விடயங்களுக்குக் கீழ்ப்படியாமல் தனித்துவமாக செயற்படுவதை உறுதிசெய்கிறது.




## உள்ளகக் கட்டுப்பாட்டு கட்டமைப்பு ரீதியான இடர்நேர்வு மதிப்பீடு

நிறுவனம் தொடர்ச்சியாக வினைத்திறனான இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளை அனுசரித்து வருகிறது. இந்த இலக்கை அடைய, வங்கித்தொழில் மேற்பார்வை மீதான பாசல் குழுவினால் (Basel Committee on Banking Supervision) கோடிட்டுக் காட்டப்பட்ட பதிமூன்று கோட்பாடுகளுடன் இணக்கமான உள்ளகக் கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றை நடைமுறைப்படுத்தியுள்ளது.

## கடனிறுக்க இயலுமான நிலை (கரையொட்டி நிற்கும் நிலை)

ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் (SLICGL) நிறுவனத்தின் வலுவான இடர்நேர்வு முகாமைத்துவ அடிப்படைகள், 2024 ஆம் ஆண்டில் இடர்களை முகாமை செய்வதற்கு ஒரு வலுவான தளத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளன. 2024 ஆம் ஆண்டிலும் SLICGL தனது இடர்நேர்வை அடிப்படையாகக் கொண்ட மூலதன இருப்பு விகிதத்தை (Risk Based Capital Adequacy Ratio) தேவையான மட்டங்களுக்கு மேலாகத் தொடர்ந்து பேணி வந்துள்ளது. பொதுக் காப்புறுதி வணிகத்திற்கான இடர்நேர்வை அடிப்படையாகக் கொண்ட மூலதன இருப்பு விகிதம் 2023 ஆம் நிதியாண்டில் 226.6% ஆக இருந்தபோதிலும், 2024 நிதியாண்டில் 277.3% ஆக உயர்ந்துள்ளது.

## தற்போதைய பொருளாதாரக் காரணிகளின் தாக்கம்

தற்போது நிலவும் பொருளாதார நிலைமைகள் காப்புறுதித் துறையில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. இதன் விளைவாக, பணிப்பாளர் சபை இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவின் (BRMC) ஒவ்வொரு கூட்டத்திலும், பிரதான பணவீக்கம், உணவுப் பணவீக்கம், வேலைவாய்ப்புப் போக்குகள், நாணயக் கொள்கை, சந்தை வட்டி விகிதங்கள், அரச பிணையங்களின் வருமானம், நிதிக் குறைபாடுகள், அரசாங்கத்தின் கடன் மற்றும் கடன் சேவை, முக்கிய வெளிநாட்டு நாணயங்களுக்கு எதிராக ரூபாயின் பெறுமதி மாற்று விகித ஏற்ற இறக்கங்கள், சுற்றுலா வருவாய், தொழிலாளர் பணவனுப்பல்கள் மற்றும் பிற தொடர்புடைய பொருளாதார மாறிகள் போன்ற முக்கிய பொருளாதார காரணிகளின் தாக்கம் குறித்து முழுமையான கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன. மேலும், இடர்நேர்வு முகாமைத்துவக் கண்ணோட்டத்தில், இந்த இடர்வுக்கான காரணிகளை நிவர்த்தி செய்வதற்கான உத்திகளை உருவாக்க நிதி, முதலீடு, ஆயுள் காப்புறுதி, பொதுக் காப்புறுதி மற்றும் பிற திணைக்களங்கள் போன்ற முக்கிய பிரிவுகளுடன் நாம் நெருக்கமாக இணைந்து பணியாற்றுகிறோம். நாணயக் கொள்கைகளை படிப்படியாகத் தளர்த்துவதன் மூலமும், மேம்பட்ட வெளிநாட்டுத் துறைச் செயற்பாடுகளின் அனுசரணையூடாகவும் பொருளாதாரத்தை மீட்டெடுப்பது இலங்கையின் பொருளாதார வளர்ச்சியை நிலைநிறுத்துவதற்கு இன்றியமையாதது என்பதையும் BRMC அங்கீகரிக்கிறது.

## பொதுக் காப்புறுதி தொடர்பிலான இடர்நேர்வு

2016 ஜனவரி 01 ஆம் திகதி முதல், இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் (IRCSL) நிறுவனம் கட்டாயத் தேவைக்கு அமைய, ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் (SLICGL) இடர்சார் மூலதனக் (RBC) கட்டமைப்பின் கீழ் தேவையான இடர்சார் மூலதனத் தீர்வுத்திறன் கட்டமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்தியுள்ளது.

இதன்படி, கொடுப்பனவுக்கான கோரிக்கை சார் பொறுப்புடைமையானது, கொடுப்பனவுக்கான கோரிக்கை சார் பொறுப்புடைமை குறித்த மத்திய மதிப்பீடு மற்றும் இடர்நேர்வதற்கான எல்லை ஆகியவற்றின் தொகுப்பாக வரையறுக்கப்படுகிறது. காலாவதியாகாத இடர்நேர்வு ஒதுக்கு (Unexpired Risk Reserve) தொடர்பான மத்திய மதிப்பீட்டுடன் இடர்நேர்வதற்கான எல்லையுடன் சேர்த்து, கட்டுநிதி சார் பொறுப்புடைமை வரையறுக்கப்படுகிறது.

## ஒதுக்குகளை நிறுவுதலில் உள்ள சாமர்த்தியம்

பொது காப்புறுதி சார் இடர் காப்பு நிதிகளில் இரண்டு முக்கிய கூறுகள் உள்ளன. அவை கட்டுநிதிசார் பொறுப்புடைமை மற்றும் கொடுப்பனவுக் கோரிக்கை சார் பொறுப்புடைமை என்பனவாகும். வரையறுக்கப்பட்ட ஜெனரல் இனஷூரன்ஸ் நிறுவனம் கொடுப்பனவுக் கோரிக்கை சார் பொறுப்புடைமையை (நிலுவையிலுள்ள கொடுப்பனவுக் கோரிக்கைகள் மற்றும் போதுமான அளவு அறிவிக்கப்படாத/ அறிவிக்கப்படாத கொடுப்பனவுக் கோரிக்கைகள் [IBN(E)R] உட்பட) 75% நம்பிக்கையின் அடிப்படையிலேயே அமைகின்றது. இது கொடுப்பனவுக் கோரிக்கை சார் பொறுப்புடைமையின் மைய மதிப்பீடு (CECL), எதிர்கால கொடுப்பனவுக் கோரிக்கை தீர்வுகளுக்கான ஒன்றிணைந்த கொடுப்பனவுக் கோரிக்கையைக் கையாளுதல் தொடர்பிலான செலவுகள் (CHE) மற்றும் மைய மதிப்பீட்டுப் பொறுப்புடைமை மற்றும் CHE இல் ஏற்படக்கூடிய பாதகமான விலகல்களுக்கான ஏற்பாடு ஆகியவற்றை இது உள்ளடக்குகின்றது. கட்டுநிதி சார் பொறுப்புடைமையும் 75% நம்பிக்கையின் அடிப்படையிலேயே அமைகின்றது. இது கடந்த இரண்டு முதல் மூன்று விபத்து ஆண்டுகளுக்கான மைய மதிப்பீட்டு இறுதி இழப்பு விகிதத்தின் சராசரியை அடிப்படையாகக் கொண்ட மைய மதிப்பீட்டு காலாவதியாகாத இடர்நேர்வு ஒதுக்கு நிதியைக் கொண்டு கணக்கிடப்படுகிறது. இக்கணக்கீடு மைய மதிப்பீடு, கடந்த இரண்டு மூன்று விபத்து சம்பவ ஆண்டுகளுக்கான மொத்த இழப்பு விகிதம் மற்றும் விபத்து ஒன்று சம்பவிப்பதற்கான தளம்பல் தன்மையை எடுத்துக்காட்டும் வகையில் அமையும் அத்தகைய பாதகமான சூழ்நிலைக்காக வழங்கும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றது.

## கொடுப்பனவுக் கோரிக்கைகளை மேம்படுத்திக் கொள்வதற்கான தகவல்கள்

கீழே உள்ள அட்டவணை, வரலாற்று ரீதியான ஆயுள் காப்புறுதி அல்லாத ஒதுக்குகளில் தேறிய மீள்காப்பீடாக ஏற்படும் மாற்றங்களை எடுத்துக்காட்டுகின்றது. அட்டவணையின் மேல் வரி, ஒவ்வொரு இருப்புநிலைக் குறிப்பு திகதியின்படி செலுத்தப்படாதுள்ள இழப்புகள் மற்றும் இழப்பைச் சரிசெய்தலுக்கான செலவுகளுக்கான மதிப்பிடப்பட்ட மொத்த இருப்புகளைக் காட்டுகிறது, இது அந்தந்த ஆண்டு மற்றும் முந்தைய ஆண்டுகளில் ஏற்பட்ட இழப்புகளுக்கான எதிர்கால கொடுப்பனவுகளின் மதிப்பிடப்பட்ட தொகையைக் குறிக்கிறது. அட்டவணையின் ஒட்டுமொத்த செலுத்தல்கள் என்ற பகுதி, ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும் நிறுவப்பட்ட இருப்புக்கள் தொடர்பாக ஒவ்வொரு அடுத்தடுத்த ஆண்டிலும் செலுத்தப்பட்ட ஒட்டுமொத்தத் தொகைகளை எடுத்துக்காட்டுகின்றது. இதேபோல், ஒட்டுமொத்தமாக அறிவிக்கப்பட்ட இழப்புகள் என்ற பிரிவு, ஒட்டுமொத்தமாக செலுத்தப்பட்ட தொகைகளின் கூட்டுத்தொகை மற்றும் நிதியாண்டின் இறுதியில் நிகர நிலுவையில் உள்ள நிலை போன்றவற்றை விவரிக்கிறது.

| | 2024 | 2023 | 2022 | 2021 | 2020 | 2019 |
|---|---|---|---|---|---|---|
| இழப்புகள் மற்றும் இழப்புகளைச் சரிசெய்தல் செலவுகளுக்கான மொத்த இடர் காப்பு நிதிகள் | **9,602** | 9,675 | 11,856 | 9,549 | 7,862 | 7,311 |
| மீள்காப்புறுதி மீட்பனவுகள் | **(1,740)** | (1,656) | (3,104) | (1,888) | (1,395) | (1,061) |
| இழப்புகள் மற்றும் இழப்புகளைச் சரிசெய்தல் செலவுகளுக்கான நிகர இடர் காப்பு நிதிகள் | **7,862** | 8,018 | 8,751 | 7,661 | 6,466 | 6,250 |
| டிசம்பர் 31 திகதியன்று திரட்டப்பட்ட கொடுப்பனவுகள்: | | | | | | |
| ஒரு வருடத்தின் பின்னர் | **7,984** | 7,948 | 6,790 | 6,995 | 5,371 | 7,723 |
| இரண்டு வருடங்களின் பின்னர் | **–** | 9,949 | 9,271 | 9,312 | 7,043 | 9,451 |
| மூன்று வருடங்களின் பின்னர் | **–** | – | 9,695 | 9,537 | 7,093 | 9,589 |
| நான்கு வருடங்களின் பின்னர் | **–** | – | – | 9,624 | 7,170 | 9,666 |
| ஐந்து வருடங்களின் பின்னர் | **–** | – | – | – | 7,211 | 9,724 |
| ஆறு வருடங்களின் பின்னர் | **–** | – | – | – | – | 9,772 |
| டிசம்பர் 31 திகதியன்று திரட்டப்பட்டு அறிவிக்கப்பட்டவை: | | | | | | |
| ஒரு வருடத்தின் பின்னர் | **9,782** | 9,651 | 8,893 | 8,980 | 6,493 | 9,153 |
| இரண்டு வருடங்களின் பின்னர் | **–** | 10,246 | 9,682 | 10,015 | 7,255 | 9,718 |
| மூன்று வருடங்களின் பின்னர் | **–** | – | 10,025 | 10,030 | 7,322 | 9,852 |
| நான்கு வருடங்களின் பின்னர் | **–** | – | – | 9,874 | 7,367 | 9,898 |
| ஐந்து வருடங்களின் பின்னர் | **–** | – | – | – | 7,367 | 9,881 |
| ஆறு வருடங்களின் பின்னர | **–** | – | – | – | – | 9,907 |

**மேற்கண்ட புள்ளிவிவரங்கள் ரூ. மில்லியன் தொகையாக உள்ளன.*

## பொதுக் காப்புறுதி இடர் நேர்வை உணர்திறன் அடிப்படையில் மேற்கொள்ளும் பகுப்பாய்வு

கொடுப்பனவுக் கோரிக்கையாக அறிக்கையிடப்பட்டுள்ள கொடுப்பனவுக் கோரிக்கைகளில் ஒரு சதவீத புள்ளி பாதகமான முறையில் அதிகரித்துள்ளமையின் விளைவாக, வரிக்கு முந்தைய நிகர வருமானம் மற்றும் நிகர சொத்துக்களின் உணர்திறன் போன்றவற்றைப் பின்வரும் அட்டவணை எடுத்துக்காட்டுகிறது. இத்தகைய அதிகரிப்பு காப்பீடு செய்யப்பட்ட சம்பவங்கள் அதிகரித்த அளவில் சம்பவிக்கும் சதவீதம், அல்லது ஏற்படும் கொடுப்பனவுக் கோரிக்கைகளின் அதிகரித்த தன்மை, அல்லது நிகழ்வு சம்பவிக்கும் சதவீதம் மற்றும் அதன் தீவிரத் தன்மை போன்ற இரண்டின் அடிப்படையிலும் ஏற்படலாம். இந்த உணர்திறன்கள் இத்தகைய நிகழ்வின் நிகழ்தகவைக் குறிக்கவில்லை, மீள்காப்புறுதியின் நேரியல் அல்லாத விளைவுகளையும் கருத்தில் கொள்ளவில்லை. இங்கு, நிலுவையிலுள்ள கொடுப்பனவுக் கோரிக்கை தொகையுடன் மைய மதிப்பீட்டு IBN(E)R புள்ளி ஒரு சதவீதம் பாதிக்கப்படுகிறது என்றும், CHE பாதிக்கப்படுவதில்லை என்றும் நாங்கள் அனுமானித்தோம். கீழேயுள்ள அட்டவணையில் உணர்திறன் பகுப்பாய்வை முன்வைப்பதில் பயன்படுத்தப்பட்ட அனுமானங்களின் அடிப்படையில், அறிவிக்கப்பட்ட நிலுவையிலுள்ள கொடுப்பனவுக் கோரிக்கைகளில் ஒவ்வொரு மேலதிக சதவீத புள்ளி அதிகரிப்பும் வரிக்கு முந்தைய நிகர வருமானம் மற்றும் நிகர சொத்துக்களில் ஒரு நேரியல் தாக்கத்தை ஏற்படுத்தும். மேலும், நிறுவனம் மீள்காப்புறுதி ஒப்பந்தங்களின் நேரியலற்ற விளைவுகளைக் கருத்தில் கொண்டு, தீவிரத்தன்மை குறித்த சூழ்நிலைகளை மதிப்பிடுவதன் மூலம் காப்புறுதி இடரைக் கண்காணிக்கிறது.

| | அனுமானங்களில் மாற்றம் % | அறிக்கையிடப்பட்ட மொத்தக் கொடுப்பனவுக் கோரிக்கை நிலுவை ரூ. மில்லியன் | அறிக்கையிடப்பட்ட நிகரக் கொடுப்பனவுக் கோரிக்கை நிலுவை ரூ. மில்லியன் | மொத்தப் பொறுப்புடைமைகளில் தாக்கம் ரூ. மில்லியன் | நிகரப் பொறுப்புடைமைகளில் தாக்கம் ரூ. மில்லியன் | வரிக்கு முந்தைய இலாபத்தில் தாக்கம் ரூ. மில்லியன் | பங்குரிமையில் தாக்கம் (வரிக்குப் பின்) ரூ. மில்லியன் |
|---|---|---|---|---|---|---|---|
| 31 டிசம்பர் 2024 | +1 | 6,783 | 5,121 | 90 | 72 | (72) | (50) |

## முதலீட்டு இடர்நேர்வு முகாமைத்துவம்

பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து வெளிநாட்டுக் கடனை மறுசீரமைத்தல், 2024 ஆம் ஆண்டின் முக்கிய மையமாகக் காணப்பட்டது, இது ஒரு தேர்தல் ஆண்டாகவும் அமைந்திருந்தது. இதனால், நிச்சயமற்ற தன்மை காரணமாக ஏற்பட்ட ஏற்ற இறக்கம் 2024 இன் ஆரம்பப் பகுதியில் சந்தையின் முக்கிய அம்சமாகக் காணப்பட்டது. குறிப்பிடப்பட்ட காலகட்டத்தில் இந்த காரணிகள் தீர்க்கப்பட்ட பின்னர், ஆண்டின் இரண்டாம் அரையாண்டில் பொருளாதாரம் ஸ்திரப்பட்டு வளர்ந்து வருவதற்கான அறிகுறிகள் தென்பட்டன. இலங்கை காப்புறுதி குழுமம் (SLIC Group) முதலீட்டு வருமானத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன், இக்காலப்பகுதியில் சந்தை ஏற்ற இறக்கத்தை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டது.

நாணய மற்றும் நிதி கொள்கை தளர்வு குறித்த எதிர்பார்ப்புகள் காரணமாக, நிலையான வருமான வழிகளின் கால அளவை நீடிப்பதில் முதலீட்டுக் குழு (IC) கவனம் செலுத்தியது. அதேவேளை, சந்தை மீண்டு வரும்போது வளர்ச்சி அடையக்கூடிய சாத்தியக்கூறுகள் கொண்ட தனது பங்குகளில் முதலீடு செய்தும், அவற்றை தக்கவைத்துக் கொண்டும் செயற்பட்டது. முதலீட்டு இடர்நேர்வு முகாமைத்துவம் மிகுந்த கவனத்துடனும் விவேகத்துடனும் மேற்கொள்ளப்பட்டது.

முறையற்ற இடர்களைக் குறைக்கும் பொருட்டு, முதலீட்டுப் பங்கமைப்பு தொடர்ந்து பல்வகைப்படுத்தப்பட்டது. நீர்மைத்தன்மை, கடன், சொத்துப்பட்டியல் மற்றும் மீள் முதலீட்டு இடர்களும் முதலீட்டுக் குழுவின் உரிய கவனத்தைப் பெற்றுள்ளன.

முதலீடு தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளல் தொடர்ந்து சுறுசுறுப்பாகவும் வினைத்திறமையுடனும் இருந்ததால், முதலீட்டு வருமானம் தொடர்ச்சியான சாதனையை எட்டியுள்ளது.

இடர்நேர்வு முகாமைத்துவக் கோட்பாடுகளுக்கும், ஏற்புடைய ஐசுஊளுடு வழிகாட்டுதல்களுக்கும் கண்டிப்பான முறையில் இணங்கி செயற்பட்டமை ஒழுங்குபடுத்தல் இடர்களைக் குறைக்க உதவியது.

## சந்தை இடர்நேர்வு

### வட்டி வீத இடர்நேர்வு

வட்டி வீத இடர்நேர்வு என்பது வட்டி வீதங்களில் ஏற்படும் மாற்றங்கள் அல்லது வருமான அமைப்பின் வடிவம் ஒரு முதலீட்டின் அல்லது நிதி நிலையின் பெறுமதியை எதிர்மறையாகப் பாதிக்கும் இடரைக் குறிக்கிறது. இது குறிப்பாகப் பிணைப்பத்திரங்கள் மற்றும் பிற நிலையான வருமானப் பிணையங்களுக்கு ஏற்புடையதாகும், ஆனால் இது கடன்கள், சேமிப்புகள் மீதும் பங்குகள் மீது ஓரளவாகவும் தாக்கத்தை ஏற்படுத்தலாம். இயன்ற போதெல்லாம், வரையறுக்கப்பட்ட ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிட்டட், வட்டி வீதங்கள் குறைந்து வருவதை உணர்ந்து, நீண்ட காலப் பிணையங்களில் முதலீடு செய்துள்ளது.

### மீள்முதலீட்டு இடர்நேர்வு

மீள்முதலீட்டு இடர்நேர்வு என்பது ஒரு பிணைப்பத்திரத்திலிருந்து கிடைக்கும் கூப்பன் கொடுப்பனவுகள் அல்லது அசல் மீளச் செலுத்தல்கள் போன்ற எதிர்காலப் பணப்புழக்கங்கள், அசல் முதலீட்டை விடக் குறைந்த வட்டி வீதத்தில் மீண்டும் முதலீடு செய்யப்பட வேண்டிய இடராகும். இவ்வாண்டின் போது வட்டி வீதங்கள் குறைந்ததாலும், எதிர்காலத்திலும் அவை குறைந்த மட்டத்திலேயே இருக்கும் என எதிர்பார்க்கப்படுவதாலும், மீள்முதலீட்டு இடர் அதிகமாகவே காணப்பட்டது.

### நாணய மாற்று வீத இடர்நேர்வு

நாணய மாற்று வீத இடர்நேர்வு, நாணய இடர் அல்லது வெளிநாட்டு நாணய இடர் எனவும் அறியப்படுகிறது. இது வெளிநாட்டு நாணய மாற்று வீதங்களில் ஏற்படும் மாற்றங்கள் ஒரு முதலீடு, சொத்து அல்லது பொறுப்புடைமையின் பெறுமதியை எதிர்மறையாகப் பாதிக்கும் இடரைக் குறிக்கிறது.

2024 ஆம் ஆண்டில் அமெரிக்க டொலர் இலங்கை ரூபாய்க்கு எதிராகத் தொடர்ந்தும் மதிப்பிழந்தது. இருப்பினும், இலங்கை பொருளாதாரம் மீட்சியடைந்து வெளிநாட்டு முதலீடுகளும் சுற்றுலா வருமானமும் அதிகரிக்கும் பட்சத்தில், 2025 ஆம் ஆண்டில் அமெரிக்க டொலர் நிலைத்திருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. வாகன இறக்குமதிகள் அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்பட்டாலும் தற்போதைய நிலையே தொடரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### ஒப்புரவு இடர்நேர்வு

ஒப்புரவு இடர்நேர்வு என்பது பங்குரிமைகளின் மதிப்பு குறைவதனால் பணம் இழக்கப்படும் இடரைக் குறிக்கும்.

2024 ஆம் ஆண்டில், தேர்தலுக்கு முந்தைய நிச்சயமற்ற தன்மைகள் நீங்கியதாலும், பொருளாதாரம் மீட்சிப் பாதைக்குத் திரும்பியதாலும், இலங்கைச் சுட்டெண்கள் இரண்டும் குறிப்பிடத்தக்க ஆதாயங்களைப் பதிவு செய்துள்ளன.

கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி, ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிட்டட் (SLICGL) நிறுவனம் பன்முகப்படுத்தல் மூலம் ஒழுங்கற்ற இடர்களைக் குறைத்திருந்தாலும், பங்குரிமைகள் இயல்பாகவே முழு சந்தைக்கும் பொதுவான நிச்சயமற்ற தன்மை கொண்ட சீரான இடருக்கு (Systematic Risk) உட்பட்டவையாகும்.

#### துறைசார் ஒதுக்கீடு – 2024 டிசம்பர் 31 ஆந் திகதியன்று பட்டியலிடப்பட்ட பங்குரிமை பொது நிதி




- அ – 91.84 நிதிச் சேவைகள்
- ஆ – 0.00 சுகாதாரப் பராமரிப்பு
- இ – 2.03 கைத்தொழில்கள்
- ஈ – 0.18 பயன்பாட்டு சேவைகள
- உ – 0.16 தொலைத்தொடர்பு சேவைகள
- ஊ – 4.03 நுகர்வோர் அத்தியாவசியப் பொருட்கள
- எ – 1.75 பொருட்கள
- ஏ – 0.01 நுகர்வோர் விருப்பப் பொருட்கள்
- ஐ – 0.00 அசையாச் சொத்து
- ஒ – 0.00 வலுசக்தி

## பணப்புழக்கம் சார் இடர்நேர்வு

பணப்புழக்க இடர்நேர்வு என்பது ஒரு சொத்தின் விலையை கணிசமாகப் பாதிக்காமல் விரைவாக வாங்கவோ அல்லது விற்கவோ முடியாமல் போகும் இடரைக் குறிக்கும்.

ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் (SLICGL) நிறுவனத்தின் சொத்துக்களின் பெரும்பகுதி அரச பிணையங்கள் போன்ற அதிக பணப்புழக்கம் கொண்ட சொத்துக்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

முதிர்வுப் பட்டியல் – 2024 டிசம்பர் 31 நிலவரப்படி பொது நிதி




## கடன் சார் இடர்நேர்வு

கடன்சார் இடர்நேர்வு என்பது, கடன் வாங்கியவர் வட்டி அல்லது அசல் தொகையைச் செலுத்த வேண்டிய கடமை ஏற்பட்டதும், அதனைச் செலுத்தத் தவறிவிடும் இடரைக் குறிக்கிறது. ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் (SLICGL) நிறுவனத்தின் முதலீடுகள், உள்நாட்டில் உருவாக்கப்பட்டுள்ள இறுக்கமான கடன் தரப்படுத்தல் நிபந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு நிர்வகிக்கப்படுகின்றன.

## திரட்சி இடர்நேர்வு

திரட்சி இடர்நேர்வு என்பது ஒரு தனிப்பட்ட முதலீட்டாளர், முதலீட்டுத் துறை, கடன் வாங்கியவர் அல்லது முதலீட்டு நிலப்பிரதேசத்துக்கு அதிகளவு பொறுப்புகள் இருப்பதன் காரணமாக ஏற்படும் இழப்பு சம்பந்தப்பட்ட இடர் நேர்வைக் குறிக்கிறது. திரட்சி இடர்நேர்வுகளைக் குறைப்பதற்காக, முதலீடுகளில் போதுமான பரம்பல் இருப்பதை முதலீட்டுக் குழு (IC) உறுதி செய்கிறது.

## தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப ரீதியான இடர்நேர்வை முகாமை செய்தல்

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) இடர்நேர்வை முகாமை செய்தல் என்பது தகவல் தொழில்நுட்ப தொகுதிகள் மற்றும் செயலிகளுடன் தொடர்புடைய இடர்களை அடையாளம் காணுதல், மதிப்பிடுதல் மற்றும் குறைத்தல் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். நிதி மற்றும் தனிப்பட்ட தரவுகள் மற்றும் கொடுக்கல்வாங்கல்களின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, தரவுகளை ஒருமுகப்படுத்தல், இரகசியத்தன்மையைப் பேணுதல், கிடைக்கப்பெறும் தன்மை மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளுக்கு இணங்கி செயற்படுதல் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்குத் தகவல் தொழில்நுட்பத்தில் வினைத்திறனுள்ள இடர்நேர்வு முகாமைத்துவம் இன்றியமையாததாகும். மாறிவரும் அச்சுறுத்தல்கள், தொழில்நுட்பங்கள் மற்றும் வணிகத் தேவைகளின் அடிப்படையில் இடர்நேர்வு முகாமைத்துவ மூலோபாயங்கள், கொள்கைகள் மற்றும் கட்டுப்பாடுகளை நாம் தொடர்ந்து மீளாய்வு செய்து இற்றைப்படுத்தி வருகின்றோம்.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப ரீதியான இடர்நேர்வு முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்கான எமது முக்கிய கவனம் செலுத்தும் பகுதிகள் மற்றும் வியூகங்கள் வருமாறு:

1. **இடர் மதிப்பீடு:** தகவல் தொழில்நுட்ப தொகுதிகள், செயலிகள் மற்றும் செயன்முறைகளுடன் தொடர்புடைய சாத்தியமான பலவீனங்கள், அச்சுறுத்தல்கள் மற்றும் இடர்களை அடையாளம் காண்பதற்காக ஒரு வலுவான கட்டமைப்பை நிறுவி, வழக்கமான இடர் மதிப்பீடுகளை மேற்கொள்கிறோம். வன்பொருள், மென்பொருள், வலையமைப்புகள் மற்றும் தரவு சேமிப்புத் தொகுதிகளின் பாதுகாப்பை மதிப்பிடுவதும் இதில் அடங்கும்.
2. **இணையப் பாதுகாப்பு நடவடிக்கைகள்:** ஆதிகாரமளிக்கப்படாத அணுகல், தரவு மீறல்கள், தீம்பொருள், ஆள்மாறாட்ட ஊடுருவல்கள் மற்றும் பிற இணைய அச்சுறுத்தல்களிலிருந்து பாதுகாப்பதற்காக விரிவான இணையப் பாதுகாப்பு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தியுள்ளோம். இணையவழி செயலிகளைப் பாதுகாப்பதற்காக மேகக்கணி சார்ந்த WAF (Web Application Firewall) மற்றும் உள்நாட்டு WAF போன்ற பல பாதுகாப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளோம். அத்துடன், ஏழு நாட்களும் 24 மணித்தியாலங்களும் நிர்வகிக்கப்படும் வகையிலான SOC (Security Operations Center) உடன் கூடிய நீடிக்கப்பட்ட கண்டறிதல் மற்றும் பதில் (XDR) நடைமுறை, மேம்படுத்தப்பட்ட ஸ்பேம் கேட்வே நடைமுறை மற்றும் தொடர்ச்சியான பாதிப்பு மற்றும் ஊடுருவல் குறித்த பரிசோதனைகளையும் மேற்கொள்கிறோம்.
3. **இணக்க முகாமைத்துவம்:** காப்புறுதித் துறையில் தகவல் பாதுகாப்பு மற்றும் இணையப் பாதுகாப்புகளை அவை தொடர்பான ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் மற்றும் தொழிற்துறைத் தரங்களுடன் இணைந்து தொடர்ச்சியாக இற்றைப்படுத்தி வருகிறோம். தகவல் பாதுகாப்பில் சிறந்து விளங்குவதற்கான எமது இடைவிடாத முயற்சியின் அடையாளமாக, 2023 இல் ISO/IEC27001:2013 சான்றிதழைப் பெற்றுள்ளோம். தற்போது ITSM (IT Service Management) க்கான ISO 20000 சான்றிதழைப் பெறுவதற்காக மேம்படுத்துதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோம்.
4. **சம்பவிப்புகளுக்கு எதிர்வினையாற்றும் திட்டம்:** தகவல் தொழில்நுட்பப் பாதுகாப்புச் சம்பவங்கள் மற்றும் தரவு மீறல்களின் தாக்கத்தை வினைத்திறனாக நிர்வகிப்பதற்கும் குறைப்பதற்கும் ஒரு சம்பவிப்பு எதிர்வினையாற்றல் திட்டத்தை உருவாக்கி நடைமுறைப்படுத்தியுள்ளோம். இதில் தெளிவான பாத்திரங்கள் மற்றும் பொறுப்புகள், தொடர்பாடல் நெறிமுறைகள் மற்றும் சம்பவத்தைக் கண்டறிதல், முறைப்பாடளித்தல் மற்றும் நிவர்த்தி செய்தல் ஆகியவற்றுக்கான நடைமுறைகள் என்பன உள்ளடங்கும். இதன் ஒரு பகுதியாக, ஏழு நாட்களும் 24 மணித்தியாலங்களும் நிர்வகிக்கப்படும் வகையிலான SOC பொறிமுறையினை நிறுவியுள்ளோம்.
5. **ஊழியர் பயிற்சி மற்றும் விழிப்புணர்வு:** தகவல் தொழில்நுட்பப் பாதுகாப்புக்கான சிறந்த நடைமுறைகள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் குறித்து ஊழியர்களுக்கு அறிவூட்டுவதற்கான வழக்கமான பயிற்சி மற்றும் விழிப்புணர்வுத் திட்டங்களை நாம் வழங்குகிறோம். மனிதப் பிழைகள் மற்றும் உள்ளக அச்சுறுத்தல்களைக் குறைப்பதற்காக சந்தேகத்திற்கிடமான நடவடிக்கைகள் குறித்து முறைப்பாடளிக்கவும், பாதுகாப்பு நெறிமுறைகளைப் பின்பற்றவும் ஊழியர்களை நாம் ஊக்குவிக்கிறோம்.
6. **வணிகத்தைத் தொடர்தல் மற்றும் அசம்பாவிதங்களிலிருந்து மீட்பு:** இடையூறுகள், அசம்பாவிதங்கள் அல்லது எதிர்பாராத சம்பவங்களின் போது அத்தியாவசியமான தகவல் தொழில்நுட்ப தொகுதிகள் மற்றும் சேவைகளின் மீள்திறன் மற்றும் கிடைக்கும் தன்மையை உறுதிப்படுத்துவதற்காக விரிவான வணிகத் தொடர்ச்சி மற்றும் அசம்பாவித மீட்புத் திட்டங்களை உருவாக்கியுள்ளோம். வழக்கமாக மேற்கொள்ளப்படும் பரிசோதனை, இற்றைப்படுத்தல் மற்றும் மீட்பு வியூகங்கள் மற்றும் திட்டங்களை மேம்படுத்துதல் என்பன இதில் அடங்கும்.

## மனித வள ரீதியான இடர்நேர்வு

ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் (SLICGL) நிறுவனம் மனித வள ரீதியான இடர்களைப் பல்வேறு வியூகங்களையும் நடைமுறைகளையும் செயற்படுத்துவதன் மூலம் நிர்வகித்துள்ளது. அவற்றுள் சில கீழே வழங்கப்பட்டுள்ளன: பின்னணிச் சோதனைகள், சான்றுச் சரிபார்ப்புகள் மற்றும் திறன் மதிப்பீடுகள் உள்ளிட்ட முழுமையான பரிசோதனைச் செயன்முறை மூலம் சரியான நபர்களைப் பணியமர்த்துதல் ஊழியர் நடத்தை, ஒழுங்குமுறை நடைமுறைகள், பாகுபாடு, துன்புறுத்தல் மற்றும் இரகசியத்தன்மை போன்ற விடயங்களைக் கையாளும் அனைத்து மனித வளங்கள் தொடர்பான செயற்பாடுகளையும் நிர்வகிக்கும் தெளிவான கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை உருவாக்குதல், வழக்கமான பயிற்சி வழங்கல் மற்றும் முன்னேற்றம், வழக்கமான பின்னூட்டம் மற்றும் பயிற்சி வழங்கல் உள்ளடங்கலாக வினைத்திறனுள்ள செயற்திறன் முகாமைத்துவ நடைமுறைகளை அமுல்படுத்துதல், ஏற்புடைய சட்டங்களுக்கு அமைவாகச் செயற்படுதல் மற்றும் ஊழியர்களுடன் வழக்கமான முறையில் தொடர்பாடல் மேற்கொள்ளுதல்.

## மோசடி மற்றும் தவறான நடத்தைகளை முகாமைத்துவம் செய்தல்

எமது நடைமுறைக்கு ஏற்புடைய பல்வேறு சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் பின்வருமாறு, மோசடி செய்தல், துர்நடத்தையில் ஈடுபடுதல் போன்றவற்றுக்கு எதிராக நாம் கூட்டிணைத்து உள்வாங்கியுள்ள நடைமுறைகளின் தொகுப்பு பின்வருமாறு,

அ. பணமாற்று மோசடி தடுப்பு மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை எதிர்த்தல் சட்டவாக்கம்: 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க பணமாற்று மோசடி தடுப்புச் சட்டம் (PMLA), 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கத்தில் திருத்தப்பட்டவாறான நிதி கொடுக்கல்வாங்கல் அறிக்கைச் சட்டம் (FTRA), 2019 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க காப்புறுதியாளர்கள் (வாடிக்கையாளர் உரிய கவனம்) விதிகள், ஐ.நா. தடைப்பட்டியல்கள், நிதிப் புலனாய்வுப் பிரிவினால் உருவாக்கப்பட்ட விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் மற்றும் இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட வழிகாட்டல்கள் என்பன இதில் அடங்கும். ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் (SLICGL) நிறுவனத்தில், பணமாற்று மோசடி தடுப்புக் கட்டமைப்பு, சபை அங்கீகரிக்கப்பட்ட பணமாற்று மோசடி தடுப்பு நடைமுறையால் இயக்கப்படுவதுடன், நாம் பணமாற்று மோசடியைத் தடுப்பதற்கான ஒரு வலுவான கட்டமைப்பை அமுல்படுத்தியுள்ளோம்.

ஆ. 1975 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புடைமை அறிவித்தல் சட்டம் மற்றும் 1954 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க இலஞ்சச் சட்டம் என்பன நீக்கம் செய்யப்பட்டு, 2023 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் தேவைப்பாட்டுக்கேற்ப, சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் தமது சொத்துக்களையும் பொறுப்புடைமைகளையும் ஆண்டுதோறும் அறிவித்து வருகின்றனர். மேலும், இச்சட்டத்தின் கீழ் நடத்தப்படும் அனைத்து விசாரணைகளுக்கும் எமது முழுமையான ஆதரவை வழங்க நாம் கடமைப்பட்டுள்ளோம்.

இ. நிறுவன ஆளுகை விதி: மோசடிகளைத் தடுப்பதில் அத்தகைய கோட்பாடுகளால் தேவைப்படுத்தப்படும் அடிப்படைகளை நாம் ஏற்றுக்கொண்டுள்ளதுடன், மோசடி முகாமைத்துவக் கொள்கையும் நடைமுறையில் உள்ளது.

## தரவுப் பாதுகாப்பு இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு

தனிப்பட்ட தரவுகளைச் சேகரித்தல், செயலாக்குதல், சேமித்தல் மற்றும் வெளியகற்றல் ஆகியவற்றுடன் தொடர்புடைய இடர்களை அடையாளம் காணவும், மதிப்பிடவும் மற்றும் நிர்வகிக்கவும், 2022 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்கத் தரவுப் பாதுகாப்புச் சட்டத்திற்கு இணங்க, நிறுவனம் தரவுப் பாதுகாப்பு இடர்களை நிர்வகிப்பதற்கான ஒரு வலுவான கட்டமைப்பை நடைமுறைப்படுத்தியுள்ளது. சட்டத்திற்கு இணங்கி செயற்படுவதனை உறுதி செய்வதற்காக, நிறுவனம் ஒரு தரவுப் பாதுகாப்பு உத்தியோகத்தரை நியமித்துள்ளதுடன், தனது இணையத்தளத்தில் தனியுரிமைக் கொள்கையொன்றையும் வெளியிட்டுள்ளது. தனிப்பட்ட தரவுகளை வைத்திருப்பதற்கும் செயலாக்குவதற்கும் கொள்கைதாரர்களின் சம்மதத்தைப் பெறுவதில் நிறுவனம் ஈடுபட்டு வருகிறது. சட்டத்திற்கு இணங்கி செயற்படுவதற்காகப் பணியாளர்களுக்குத் தேவையான பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன. மேலதிகமாக, நிறுவனம் தனது முழுமையான தரவுப் பாதுகாப்பு இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பின் ஒரு பகுதியாக, "முத்திறன் அணுகுமுறை "(Triple-A approach)" எனப்படும் அங்கீகாரம் (Authentication), அதிகாரமளித்தல் (Authorisation), மற்றும் கணக்காய்வு (Audit) ஆகியவற்றை உள்ளடக்கிய அணுகுமுறையைப் பயன்படுத்துகிறது.

## சமூக ஊடக இடர்நேர்வு முகாமைத்துவம்

ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் (SLICGL) நிறுவனம் தனது சமூக ஊடக இருப்பு மற்றும் பங்குதாரர் தொடர்பாடல்களைப் பாதுகாப்பதற்காக, கட்டமைக்கப்பட்ட செயன்முறைகளைக் கொண்ட ஒரு வலுவான சமூக ஊடக இடர்நேர்வு முகாமைத்துவத் திட்டத்தை நிறுவியுள்ளது. இந்த முன்முயற்சியானது கணக்குகளை அணுகுவதற்கான உரிமைகளை வரையறுப்பதன் மூலமும், பதிப்பிக்கும் அதிகாரத்தையும், வர்த்தகநாமத்தின் இணையவழி ஒருமைப்பாட்டைப் பேணுவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்வதன் மூலமும் சாத்தியமான வணிக இடர்களைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.



**திரு துஷ்மந்த தோட்டவத்தே**

தலைவர் – பணிப்பாளர் சபையின் இடர்நேர்வு முகாமைத்துவ உபகுழு

03 யூன் 2025

# இணக்கப்பாட்டு அறிக்கை

## இணக்கப்பாட்டை நோக்கிய எமது அணுகுமுறை

காப்புறுதித் துறையில், மாறிவரும் ஒழுங்குமுறைக் கடப்பாடுகள் மற்றும் வணிகச் சூழலில் ஏற்படும் மாற்றங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு தீர்க்கதரிசனமான இணக்கமின்மை காரணமாக எழும் இடர்நேர்வை முகாமை செய்தல் பரந்தளவில் இன்றியமையாத ஒன்றாக மாறியுள்ளது. இது வாடிக்கையாளர் மற்றும் தரவுப் பாதுகாப்பு, தனியுரிமை மற்றும் பிற சட்டபூர்வமான கடமைகள் மீது மேம்படுத்தப்பட்ட அவதானம் செலுத்தப்படுவதனை உள்ளடக்குகிறது. காப்புறுதி வழங்குநர்கள் நிறுவப்பட்ட இணக்கப்பாட்டுத் நியமங்களைக் கண்டிப்பாகக் கடைப்பிடிப்பதன் மூலம் வெளிப்படைத்தன்மையைப் பேண வேண்டியது அவசியமாகும். ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் (SLICGL) நிறுவனத்தில், இணக்கப்பாட்டுத் தேவைகள் அன்றாட வணிக நடவடிக்கைகளில் உள்ளீர்க்கப்பட்டுள்ளன. ஒழுங்குமுறை வளர்ச்சிகளின் வேகம் மற்றும் சிக்கல்தன்மை போன்றன காப்புறுதியாளர்களுக்குத் தொடர்ச்சியான சவால்களை கொண்டு வருகின்றன. அதேவேளை, நிதிசார் அறிக்கையிடல் தொடர்பான புதிய நியமமாகிய IFRS 17 இன் அறிமுகம் காப்புறுதி கணக்கியல் நடைமுறைகளில் ஒரு பெரிய மாற்றத்தைக் குறிக்கிறது. SLICGL ஒரு அரசாங்க நிறுவனம் என்ற வகையில், வரையறுக்கப்பட்ட பொறுப்பு நிறுவனங்கள், காப்புறுதி நிறுவனங்கள் மற்றும் அரச நிறுவனங்களுக்கு ஏற்புடைய பரந்த அளவிலான சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்கிய வகையிலேயே கடமைப்பட்டுள்ளது.

SLICGL அனைத்து ஏற்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்கி செயற்படுவதற்கு உறுதிபூண்டுள்ளதுடன், இணக்கப்பாட்டை அடையாளம் காணுதல், கண்காணித்தல், முறைப்பாடளித்தல் மற்றும் உறுதிப்படுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு முறையான இணக்கப்பாட்டுக் கட்டமைப்பை நடைமுறைப்படுத்தியுள்ளது. இணக்கப்பாட்டுக்கான கடப்பாடானது, நிறுவன இணக்கப்பாட்டு நடைமுறையினை நிறுவுதல் மற்றும் செயற்படுத்துதல் போன்றவற்றுக்கான வழிகாட்டலை வழங்குகிறது. இது இணக்கப்பாட்டுத் தலைவரின் மேற்பார்வையில் அமைந்துள்ளது. அவர் கணக்காய்வு மற்றும் இணக்கப்பாட்டுக் குழு, இடர்நேர்வு முகாமைத்துவக் குழு மற்றும் சபைக்குத் தொடர்ச்சியான அறிக்கைகளை வழங்குகிறார். “மேல்மட்டத்திலிருந்து வரும் தொனி” நிறுவனத்தின் அனைத்து மட்டங்களிலும் ஒரு வலுவான முறையில் இணக்கப்பாட்டுக் கலாச்சாரம் வினைத்திறனாக நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்வதன் மூலம் நிர்வாகக் குழுவும் இணக்கப்பாட்டு நடைமுறைகளுக்குத் துணைபுரிகின்றது.

“இணக்கமின்மை காணரமாக எழும் இடர்நேர்வு” என்பது ஏற்புடைய சட்டங்கள், ஒழுங்குமுறைகள், உள்ளகக் கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் கோட்பாடுகளுக்கு இணங்கி செயற்படாமையினால் SLICGL இன் ஒருமைப்பாட்டிற்கு ஏற்படும் இடர் அல்லது தீங்கு என வரையறுக்கப்படுகிறது. இணக்கமின்மை காணரமாக எழும் இடர்நேர்வினைச் செயற்திறனுடன் நிர்வகிக்கத் தவறினால், SLICGL அபராதங்கள் மற்றும் சிவில் மற்றும் குற்றவியல் தண்டனைகளுக்கு உள்ளாக நேரிடும். அனைத்து மட்டங்களிலும் உள்ள அனைத்து ஊழியர்களும் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்கிய வகையில் செயற்படுவதுடன், ஒருமைப்பாடு மற்றும் பொறுப்புக்கூறலுடன் செயல்பட வேண்டும் என்று SLICGL இன் வணிகக் கொள்கைகள் தேவைப்படுத்துகின்றன. வினைத்திறனான இணக்கப்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவம் வாடிக்கையாளர்கள் மற்றும் பிற பங்குதாரர்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்வதை உள்ளடக்குகிறது என்பதை நிறுவனம் அங்கீகரிக்கிறது.

## இணக்கப்பாட்டுக் கட்டமைப்பு

பணிப்பாளர் சபை, ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் (SLICGL) நிறுவனத்தின் இணக்கமின்மை காரணமாக எழும் இடர்நேர்வை எதிர்கொள்வதை வரையறை செய்வதற்கான பொறுப்பைக் கொண்டுள்ளது. இது ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகள் மற்றும் தொழிற்துறைக் கோட்பாடுகள் போன்ற கட்டாய இடர்நேர்வுகளுக்கும், வணிக வியூகம், நோக்கங்கள் மற்றும் நிறுவனத்தின் உள்ளகக் கொள்கைகள் உள்ளிட்ட தற்றுணிபுசார் இடர்நேர்வுகளுக்கும் இடையில் சமநிலையைப் பேணுகிறது. இணக்கமி காரணமாக எழும் இடர்நேர்வினை வினைத்திறனாக முகாமை செய்வதற்கு, இடர்நேர்வு முகாமைத்துவம், உள்ளகக் கட்டுப்பாடு, சட்டம் மற்றும் மனித வளங்கள் உட்பட நிறுவனத்தின் அனைத்துக் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகளையும் ஒருங்கிணைக்கும் ஒரு ஒருங்கிணைந்த அணுகுமுறை அவசியமாகும்.

இணக்கமின்மை காணரமாக எழும் இடரை நிர்வகிப்பதற்கு, ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நான்கு பாதுகாப்பு மாதிரிகளைப் பின்பற்றுகிறது:

1. இடர்நேர்வுக்கான முதன்மைக் காரணியாக உள்ள நிறுவனத்தின் பிரிவுகள்:
2. இடர்நேர்வு முகாமைத்துவக் குழு மற்றும் கணக்காய்வு மற்றும் இணக்கப்பாட்டுக் குழு
3. குறிப்பாக பணமாற்று மோசடியைத் தடுக்கும் செயற்பாட்டிற்கான உள்ளகக் கணக்காய்வு
4. ஒழுங்குபடுத்துநர், இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு (IRCSL), மற்றும் வெளியகக் கணக்காய்வாளர்கள்.

இணக்கமின்மை காணரமாக எழும் இடர்நேர்வின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதற்காக, இணக்கப்பாட்டுத் துறை இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவிற்கும் கணக்காய்வு மற்றும் இணக்கப்பாட்டுக் குழுவிற்கும் அறிக்கைகளைச் சமர்ப்பிக்கிறது.

இணக்கப்பாட்டுத் துறையானது ஏற்புடைய சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்குப் பொறுப்பான பிரிவுகளை அடையாளம் கண்டுள்ளதுடன், இணக்கப்பாட்டுத் தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்படுவதை உறுதிப்படுத்த ஒரு கூட்டுச் செயன்முறையை நடைமுறைப்படுத்துகிறது. முனைப்பான ஓர் அணுகுமுறையின் ஓர் அங்கமாக, எதிர்பார்க்கப்படும் எதிர்கால ஒழுங்குமுறைகள் குறித்து முகாமைத்துவ நிர்வாகத்திற்கான வழிகாட்டலை இணக்கப்பாட்டுத் துறை வழங்குகிறது. இந்த முனைப்பான வணிக நடைமுறை முகாமைத்துவ வியூகம், புதிய ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகளைச் செலவு குறைந்த முறையில் கையாளத் தேவையான விடயங்களை நிறுவனத்திற்கு வழங்குகிறது.

## பணமாற்று மோசடியற்ற ஆளுகை (AML)

பணமாற்று மோசடி மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் போன்ற நடவடிக்கைகளை SLICGL நிறுவனம் கடுமையாகத் தடைசெய்துள்ளதுடன், அவற்றை முன்கூட்டியே தடுக்க தீவிரமாக முயல்கிறது. ஜெனரல் இன்ஷூரன்ஸ் நிறுவனமானது, பணமாற்று மோசடியற்ற ஆளுகைக்கான (AML) ஏற்புடைமைச் சட்டங்கள் மற்றும் கட்டளைகளுக்கு இணங்கிய வகையில் செயற்படுவதற்கு உறுதியளிக்கிறது. அத்துடன், தனது முகாமைத்துவம், ஊழியர்கள் மற்றும் நியமிக்கப்பட்ட முகவர்கள் இத்தகைய நியமங்களைப் பின்பற்றி, கம்பனியின் உற்பத்தி மற்றும் சேவைகள் பணமாற்று மோசடி நோக்கங்களுக்காக தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுக்க வேண்டும் எனவும் பணிக்கின்றது.

## பணமாற்று மோசடியற்ற ஆட்சிக்கான (AML) பயிற்சி

பணமாற்று மோசடி, அதன் வழிமுறைகள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து ஊழியர்களுக்கு முழுமையான அறிவை வழங்குவதற்காக, SLICGL நிறுவனமானது ஒரு உள்ளக இணையவழி கற்றல் (e-learning) திட்டத்தை உருவாக்கியுள்ளது. ஊழியர்கள் அனைவரும் அந்தப் பரீட்சை ஒன்றில் சித்தியடைவது கட்டாயமாகும். இது அவர்களின் செயற்திறன் மதிப்பீடுகளுடன் இணைக்கப்பட்டுள்ளது.

## முன்னேற்றகரமான உரிய வழிப்புக்கவனம்

SLICGL நிறுவனம் பணமாற்று மோசடியற்ற ஆளுகை (AML) இணக்கப்பாட்டுக் கட்டமைப்பை வலுப்படுத்தும் முகமாக, World-Check Refinitive தரவுத்தள அமைப்பில் முதலீடு செய்துள்ளது. இத்தரவுத்தளம், வாடிக்கையாளரை அறிந்து கொள்ளல் (KYC) மற்றும் முழுமையான உரிய வழிப்புக்கவனம் ஆகியவற்றுக்குத் துணைபுரிகின்ற ஓர் இடர் புலனாய்வு கருவியாகும். இக்கருவியின் முக்கிய அம்சங்களில் உள்ளடங்குவன:

- அரசியல் ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட நபர்களைக் (PEP) கண்காணித்தல்,
- தடைகள் மற்றும் அவதானிப்புப் பட்டியல் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களை இனங்கண்டு தேர்ந்தெடுத்தல்,
- பாதகம் விளைவிக்கும் ஊடகங்கள் குறித்த பரிசோதனை,
- மூன்றாம் தரப்பு உரிய வழிப்புக்கவனம் போன்றவை ஆகும்.

ஆண்டு முழுவதும், இணக்கப்பாட்டுத் துறை நிறுவனத்தின் இடர்நேர்வுப் பிரிவினருடன்இணைந்து, பணமாற்று மோசடி மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலுக்கு எதிரான (AML/CFT) தலைப்புகளில், குறிப்பாக கிளை முகாமையாளர்கள் மற்றும் ஊழியர்களை இலக்காகக் கொண்டு, பயிற்சி அமர்வுகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகளை நடாத்தியுள்ளது.

## இரகசியமாகக் காட்டிக்கொடுத்தல் பொறிமுறைக்கான கொள்கை (Whistleblower Policy)

SLICGL நிறுவனமானது இரகசியமான முறையில் காட்டிக்கொடுக்கின்ற பொறிமுறைக்கான கொள்கையொன்றை நிறுவியுள்ளது. இதற்கமைய, இணக்கப்பாட்டு உத்தியோகத்தரே, இக்கொள்கையின் அமுலாக்கத்தைக் கண்காணிக்கும் இரகசிய காட்டிக்கொடுப்பு அலுவலராகச் செயற்படுவார்.

## வணிக நடத்தை மற்றும் நெறிமுறைகள் பற்றிய விதிக்கோவை

பணிப்பாளர்கள், முக்கிய முகாமைத்துவ அலுவலர்கள் மற்றும் அனைத்து ஊழியர்களுக்கான “வணிக நடத்தை மற்றும் நெறிமுறைகள் பற்றிய விதிக்கோவை” நிறுவனத்தின் உறுப்பினர்கள் வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது கோட்பாடுகள், விதிகள், விழுமியங்கள், நியமங்கள் மற்றும் சட்டரீதியான இணக்கப்பாடுகளைக் கடைப்பிடிப்பதை உறுதி செய்வதற்காக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

இணக்கப்பாடு மற்றும் இடர்நேர்வு கண்காணிப்பு ஒருங்கிணைப்பு, வெளிப்படையான மற்றும் பகிரங்கமான அறிக்கைப்படுத்தலை ஊக்குவித்தல், மற்றும் வலுவான பங்குதாரர் உறவுகளை மேம்படுத்துவதன் மூலம் இணக்கமின்மை காரணமாக எழும் இடர்நேர்வின் சாத்தியக்கூறு குறைக்கப்படுகிறது. இணக்கப்பாடின்மையால் ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் அத்தகைய சம்பவங்கள் ஆகியன அவ்விடயங்களைத் திருத்துதல் மற்றும் தடுத்தல் நடவடிக்கைகள் தொடர்பில் சபைக்கும் அதன் உபகுழுக்களுக்கும் பெரும் தலையிடியை ஏற்படுத்தியுள்ளன. அதனால் இணக்கப்பாட்டு கட்டமைப்பு, நெறிமுறைகள் மற்றும் சிறந்த நடைமுறைகளை இன்னும் இறுக்கமாக அமுல்படுத்த வேண்டிய தேவை காணப்படுகின்றது.

## வாடிக்கையாளர் தரவுப் பாதுகாப்பு

நிறுவனமானது, ஏற்புடைய ஒழுங்குவிதிகளுக்கு இணங்க, தனது தரவுப் பாதுகாப்புக் கட்டமைப்பை வலுப்படுத்தும் முகமாக, குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதில், நிறுவனத்தின் அனைத்து மட்டங்களிலும் தரவுப் பாதுகாப்பைப் பேணும் நடைமுறைகளை உறுதிப்படுத்தும் வகையில், ஊழியர்களுக்கான பயிற்சித் திட்டங்கள் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்தல் என்பதும் அடங்கும். முக்கிய கொள்கை ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு, உள்ளக அங்கீகாரச் செயன்முறைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன. தரவுப் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளதோடு, இது தொடர்பான நடைமுறை விடயங்கள் கவனத்திற் கொள்ளப்பட்டு வருகின்றன. கொள்கைதாரர்களிடமிருந்து வெளிப்படைத்தன்மையைப் பேணுவதற்கும் சம்மதத்தைப் பெறுவதற்கும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, நிறுவன இணையத்தளத்தில் தனியுரிமைக் கொள்கையை வெளியிடுவது உட்பட முழுமையான இணக்கப்பாட்டை உறுதிப்படுத்த மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில், வெளியகக் கணக்காய்வாளர் அறிக்கை, நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள் மற்றும் நிறுவன ஆளுகை அறிக்கை ஆகியவற்றில் வெளிப்படுத்தப்பட்டமை தவிர, வேறு வகையில் நிறுவனமானது அனைத்துச் சட்டரீதியான தேவைகள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கும் இணங்கிய வகையிலேயே செயற்பட்டுள்ளது. மேலும், இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிடமிருந்து (IRCSL) சில ஒழுங்குமுறை அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கான கால நீடிப்பை நிறுவனம் பெற்றுள்ளது. ஒழுங்குமுறை மற்றும் சட்டரீதியான இணக்கம் – 2024 பெப்ரவரி 01 ஆம் திகதி தொடக்கம் 2024 டிசம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கான விபர அறிக்கைகள் மற்றும் கொடுப்பனவுகள் ஒழுங்குமுறை/கண்காணிப்பு உத்தியோகத்தர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

### ஒழுங்குமுறை மற்றும் சட்டரீதியான இணக்கம் –

### 2024 பெப்ரவரி 01 ஆம் திகதி தொடக்கம் 2024 டிசம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கான ஒழுங்குமுறை/ கண்காணிப்பு உத்தியோகத்தர்களிடம் அறிக்கைகள் மற்றும் கொடுப்பனவுகள் சமர்ப்பிப்பதற்கான இணக்கப்பாட்டு அறிக்கை

### ஒழுங்குமுறைக்கும் சட்டத்திற்கும் இணங்கி செயற்படுதல்

| ஒழுங்குபடுத்தல்/கண்காணித்தல் அதிகாரிகளிடம் விபரத்திரட்டையும் கொடுப்பனவுகளையும் சமர்ப்பித்தல் | விபரத்திரட்டைத் சமர்ப்பிக்கும்/ கொடுப்பனவினைச் செலுத்தும் கால இடைவெளி | சமர்ப்பிப்பதற்கான/கொடுப்பனவிற்கான இறுதித் திகதி | நிறைவேற்றப்பட்ட திகதி | இணக்கப்பாடு மற்றும் குறிப்புகள் |
|---|---|---|---|---|
| **ஒழுங்குபடுத்தல்/சட்டரீதியான அறிக்கைகள்/கொடுப்பனவுகள் குறித்த காலப்பகுதியில் செலுத்தப்பட வேண்டியவை:** | | | | |
| இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு (IRCSL) | | | | |
| **காப்புறுதி ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் பிரிவு 49 (ஆ) இன் கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ளவாறு IRCSL இன் காலாண்டு அறிக்கைகள் 2012 ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் காப்புறுதி ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் பிரிவு 49 (ஆ) இன் கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ளவாறு IRCSL இற்கு திருத்தப்பட்ட காலாண்டு அறிக்கைகள் (49 படிவங்கள்)** | | | | |
| தீர்வுகள் பற்றிய படிவங்கள் | காலாண்டின் முடிவிலிருந்து 30 நாட்களுக்குள் | 1 ஆம் காலாண்டு (24) – ஏப்ரல் 30 | 2024 ஜுன் 10 | வகைப்படுத்தல் செயன்முறை காரணமாக கால நீடிப்பு கோரப்பட்டது |
| | | 2 ஆம் காலாண்டு (24) – ஜுலை 30 | 2024 ஜுலை 30 | |
| | | 3 ஆம் காலாண்டு (24) – ஒக்டோபர் 30 | 2024 ஒக்டோபர் 30 | |
| இடர்நேர்வு அடிப்படையிலான மூலதனம் (படிவங்கள்) | காலாண்டின் முடிவிலிருந்து 30 நாட்களுக்குள் | 1 ஆம் காலாண்டு (24) – ஏப்ரல் 30 | 2024 ஜுன் 10 | வகைப்படுத்தல் செயன்முறை காரணமாக கால நீடிப்பு கோரப்பட்டது |
| | | 2 ஆம் காலாண்டு (24) – ஜுலை 30 | 2024 ஜுலை 30 | |
| | | 3 ஆம் காலாண்டு (24) – அக்டோபர் 30 | 2024 அக்டோபர் 30 | |
| இருப்புநிலை மற்றும் இலாப நட்டக் கணக்கு (படிவங்கள்) | காலாண்டின் முடிவிலிருந்து 30 நாட்களுக்குள் | 1 ஆம் காலாண்டு (24) – ஏப்ரல் 30 | 2024 ஜுன் 10 | வகைப்படுத்தல் செயன்முறை காரணமாக கால நீடிப்பு கோரப்பட்டது |
| | | 2 ஆம் காலாண்டு (24) – ஜுலை 30 | 2024 ஜுலை 30 | |
| | | 3 ஆம் காலாண்டு (24) – அக்டோபர் 30 | 2024 அக்டோபர் 30 | |
| IRCSL சுற்றறிக்கை 12 இன் கீழ் பிரதான செயற்பாட்டு அதிகாரி/பிரதம நிதி அதிகாரி மற்றும் CFO இனால் வழங்கப்பட்ட காலாண்டு சான்றிதழ் (சான்றிதழ் A) | காலாண்டின் முடிவிலிருந்து 30 நாட்களுக்குள் | 1 ஆம் காலாண்டு (24) – ஏப்ரல் 30 | 2024 ஜுன் 10 | வகைப்படுத்தல் செயன்முறை காரணமாக கால நீடிப்பு கோரப்பட்டது |
| | | 2 ஆம் காலாண்டு (24) – ஜுலை 30 | 2024 ஜுலை 30 | |
| | | 3 ஆம் காலாண்டு (24) – அக்டோபர் 30 | 2024 அக்டோபர் 30 | |

| ஒழுங்குபடுத்தல்/கண்காணித்தல் அதிகாரிகளிடம் விபரத்திரட்டையும் கொடுப்பனவுகளையும் சமர்ப்பித்தல் | விபரத்திரட்டைத் சமர்ப்பிக்கும்/ கொடுப்பனவினைச் செலுத்தும் கால இடைவெளி | சமர்ப்பிப்பதற்கான/கொடுப்பனவிற்கான இறுதித் திகதி | நிறைவேற்றப்பட்ட திகதி | இணக்கப்பாடு மற்றும் குறிப்புகள் |
|---|---|---|---|---|
| காலாண்டு சான்றிதழ் (பிரதான செயற்பாட்டு அதிகாரி/பிரதான அதிகாரி, பிரதம நிதி அதிகாரி மற்றும் இணக்கப்பாட்டு அலுவலரால் வழங்கப்பட்டது) – IRCSL சுற்றறிக்கை 12 (சான்றிதழ் B) இன் கீழ் | காலாண்டின் முடிவிலிருந்து 30 நாட்களுக்குள் | முதலாம் காலாண்டு (24) – ஏப்ரல் 30 | 2024 ஜூன் 10 | வகைப்படுத்தல் செயன்முறை காரணமாக கால நீடிப்பு கோரப்பட்டது |
| | | இரண்டாம் காலாண்டு (24) – ஜூலை 30 | 2024 ஜூலை 30 | |
| | | மூன்றாம் காலாண்டு (24) – அக்டோபர் 30 | 2024 அக்டோபர் 30 | |
| **துணை ஒப்பந்த ஏற்பாடு** | | | | |
| காலாண்டுக்கு ஒருமுறை | காலாண்டுக்கு ஒருமுறை | முதலாம் காலாண்டு (24) – ஏப்ரல் 30 | 2024 ஜூன் 10 | வகைப்படுத்தல் செயன்முறை காரணமாக கால நீடிப்பு கோரப்பட்டது |
| | | இரண்டாம் காலாண்டு (24) – ஜூலை 30 | 2024 ஜூலை 30 | |
| | | மூன்றாம் காலாண்டு (24) – அக்டோபர் 30 | 2024 அக்டோபர் 30 | |
| **கொடுப்பனவுகள்** | | | | |
| செஸ் வரி (நிகர காப்பீட்டு பிரீமியத்தில் 0.4%) | காலாண்டுக்கு ஒருமுறை | முதலாம் காலாண்டு (24) – ஏப்ரல் 30 | 2024 ஏப்ரல் 30 | |
| | | இரண்டாம் காலாண்டு (24) – ஜூலை 31 | 2024 ஜூலை 31 | |
| | | மூன்றாம் காலாண்டு (24) – அக்டோபர் 31 | 2024 அக்டோபர் 30 | |
| ஆண்டு கட்டணங்கள் | ஆண்டுதோறும் | 2024 ஏப்ரல் 30 | 2024 ஏப்ரல் 30 | |
| **உள்நாட்டு இறைவரித் திணைக்கள அறிக்கைகள்** | | | | |
| VAT (பெறுமதி சேர் வரி) அறிக்கைகள் | காலாண்டுக்கு ஒருமுறை | முதலாம் காலாண்டு (24) – ஏப்ரல் 30 | 2024 ஏப்ரல் 30 | |
| | | இரண்டாம் காலாண்டு (24) – ஜூலை 31 | 2024 ஜூலை 31 | |
| | | மூன்றாம் காலாண்டு (24) – அக்டோபர் 31 | 2024 அக்டோபர் 31 | |
| முத்திரை வரி (Stamp Duty) | காலாண்டுக்கு ஒருமுறை | முதலாம் காலாண்டு (24) – ஏப்ரல் 15 | 2024 ஏப்ரல் 11 | |
| | | இரண்டாம் காலாண்டு (24) – ஜூலை 15 | 2024 ஜூலை 15 | |
| | | மூன்றாம் காலாண்டு (24) – அக்டோபர் 15 | 2024 அக்டோபர் 15 | |
| SSCL (சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி) | காலாண்டுக்கு ஒருமுறை | முதலாம் காலாண்டு (24) – ஏப்ரல் 20 | 2024 ஏப்ரல் 19 | |
| | | இரண்டாம் காலாண்டு (24) – ஜூலை 20 | 2024 ஜூலை 19 | |
| | | மூன்றாம் காலாண்டு (24) – அக்டோபர் 20 | 2024 அக்டோபர் 18 | |
| AIT (முற்பண வருமான வரி) | ஆண்டுதோறும் | 2023 – 2024 ஏப்ரல் 30 | 2024 ஏப்ரல் 30 | |
| APPIT அறிக்கை (நியமிக்கப்பட்ட நபர்களின் முற்பண தனிநபர் வருமான வரி) | ஆண்டுதோறும் | 2023 – 2024 ஏப்ரல் 30 | 2024 ஏப்ரல் 30 | |
| பயிர் காப்புறுதி அறவீடு (Crop Insurance Levy) | காலாண்டுக்கு ஒருமுறை | முதலாம் காலாண்டு (24) – ஜூலை 30 | 2024 ஜூலை 30 | |
| | | இரண்டாம் காலாண்டு (24) – அக்டோபர் 30 | 2024 அக்டோபர் 30 | |
| **கொடுப்பனவுகள்** | | | | |
| VAT (பெறுமதி சேர் வரி) | மாதாந்தம் | அடுத்த மாதத்தின் 20 ஆம் திகதி | குறித்த திகதியில் நிறைவேற்றப்பட்டது | |
| APPIT (நியமிக்கப்பட்ட ஆட்களின் முற்பண தனிநபர் வருமான வரி) | மாதாந்தம் | அடுத்த மாதத்தின் 15 ஆம் திகதி | குறித்த திகதியில் நிறைவேற்றப்பட்டது | |
| வருமான வரி | காலாண்டுக்கு ஒருமுறை | ஆகஸ்ட் 15 அல்லது அதற்கு முன்னர் | குறித்த திகதியில் நிறைவேற்றப்பட்டது | |
| | | நவம்பர் 15 அல்லது அதற்கு முன்னர் | குறித்த திகதியில் நிறைவேற்றப்பட்டது | |

| ஒழுங்குபடுத்தல்/கண்காணித்தல் அதிகாரிகளிடம் விபரத்திரட்டையும் கொடுப்பனவுகளையும் சமர்ப்பித்தல் | விபரத்திரட்டைத் சமர்ப்பிக்கும்/ கொடுப்பனவினைச் செலுத்தும் கால இடைவெளி | சமர்ப்பிப்பதற்கான/கொடுப்பனவிற்கான இறுதித் திகதி | நிறைவேற்றப்பட்ட திகதி | இணக்கப்பாடு மற்றும் குறிப்புகள் |
|---|---|---|---|---|
| முத்திரை வரி | காலாண்டுக்கு ஒருமுறை | காலாண்டு (24) – ஏப்ரல் 15 | குறித்த திகதியில் நிறைவேற்றப்பட்டது | |
| | | இரண்டாம் காலாண்டு (24) – ஜுலை 15 | குறித்த திகதியில் நிறைவேற்றப்பட்டது | |
| | | மூன்றாம் காலாண்டு (24) – அக்டோபர் 15 | குறித்த திகதியில் நிறைவேற்றப்பட்டது | |
| SSCL (சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி) | மாதாந்தம் | அடுத்த மாதத்தின் 20 ஆம் திகதி | குறித்த திகதியில் நிறைவேற்றப்பட்டது | |
| பயிர் காப்புறுதி அறவீடு | காலாண்டுக்கு ஒருமுறை | முதலாம் காலாண்டு (24) – ஜுலை 30 | குறித்த திகதியில் நிறைவேற்றப்பட்டது | |
| | | மூன்றாம் காலாண்டு (24) – அக்டோபர் 30 | குறித்த திகதியில் நிறைவேற்றப்பட்டது | |
| APIT (முற்பண வருமான வரி) | மாதாந்தம் | அடுத்த மாதத்தின் 15 ஆம் திகதி | குறித்த திகதியில் நிறைவேற்றப்பட்டது | |
| **இலங்கை மத்திய வங்கி** | | | | |
| ஊழியர் சேமலாப நிதிய (EPF) அறிக்கைகள் | அரையாண்டுக்கு ஒருமுறை | ஜனவரி 31 மற்றும் ஜுலை 31 | குறித்த திகதியில் நிறைவேற்றப்பட்டது | |
| பணமாற்று மோசடி எதிர்ப்பு (AML) அறிக்கைகள் | | | | |
| பணப் பரிமாற்ற அறிக்கை | மாதாந்தம் | பரிமாற்றத் திகதியிலிருந்து 31 நாட்களுக்குள் | குறித்த திகதியில் நிறைவேற்றப்பட்டது | |
| ஊழியர் சேமலாப நிதியப் (EPF) பங்களிப்பு | மாதாந்தம் | அடுத்த மாதத்தின் கடைசி வேலை நாளுக்கு ஒரு நாள் முன்னதாக | குறித்த திகதியில் நிறைவேற்றப்பட்டது | |
| **ஊழியர் நம்பிக்கை நிதியச் சபை** | | | | |
| ETF விபரத்திரட்டுகள் | அரையாண்டுக்கு ஒருமுறை | ஜனவரி 31 மற்றும் ஜுலை 31 | குறித்த திகதியில் நிறைவேற்றப்பட்டது | |
| ETF பங்களிப்பு | மாதாந்தம் | அடுத்த மாதத்தின் கடைசி வேலை நாளுக்கு ஒரு நாள் முன்னதாக | குறித்த திகதியில் நிறைவேற்றப்பட்டது | |
| **மோட்டார் வாகன போக்குவரத்துப் பதிவாளர்** | | | | |
| கொடுப்பனவு – சொகுசு மற்றும் அரைச் சொகுசு வாகன வரி | மாதாந்தம் | அடுத்த மாதத்தின் 10 ஆம் திகதி | குறித்த திகதியில் நிறைவேற்றப்பட்டது | |
| **போக்குவரத்து அமைச்சு** | | | | |
| கொடுப்பனவு – வீதிப் பாதுகாப்பு நிதி | மாதாந்தம் | அடுத்த மாதத்தின் 15 ஆம் திகதி | குறித்த திகதியில் நிறைவேற்றப்பட்டது | |
| தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் | | | | |
| கொடுப்பனவு – SRCC மற்றும் பயங்கரவாதத் தடுப்பு நிதியம் | மாதாந்தம் | மோட்டார் – மாத இறுதிக்குள் 75 நாட்களுக்குள் | குறித்த திகதியில் நிறைவேற்றப்பட்டது | |
| | | மோட்டார் அல்லாதவை – மாத இறுதிக்குள் 45 நாட்களுக்குள் | குறித்த திகதியில் நிறைவேற்றப்பட்டது | |
| **கம்பனிப் பதிவாளர்** | | | | |
| நிதிக் கூற்றுகளின் பதிவு | ஆண்டுதோறும் | கம்பனியின் நிதி அறிக்கைகளுக்குப் பிறகு 20 வேலை நாட்களுக்குள் | குறித்த திகதியில் நிறைவேற்றப்பட்டது | |
| **தொழிலாளர் நட்டஈட்டு ஆணையாளர்** | | | | |
| உரிமத்தைப் புதுப்பித்தல் – தொழிலாளர் நட்டஈட்டு காப்புறுதி | ஆண்டுதோறும் | மே 30 இற்கு முன்னர் | குறித்த திகதியில் நிறைவேற்றப்பட்டது | |

# உள்ளகக் கட்டுப்பாட்டு அறிக்கை

பணிப்பாளர் சபை, உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவம் தொடர்பில் இறுதியான மேற்பார்வையை மேற்கொள்வதுடன், மூலோபாய வழிகாட்டலையும் வழங்குகின்றது. இது, வலுவான உள்ளகக் கட்டுப்பாட்டு கட்டமைப்பினை நிறுவி அதனைப் பேணி வருவதை உறுதிப்படுத்துகின்றது. பங்குதாரர்களின் நலன்களைப் பாதுகாப்பதில் இந்தக் கட்டமைப்புகளின் வினைத்திறனான செயற்பாட்டை நிலைநிறுத்துவதற்கு, இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் நிர்வாகத்தில் ஏற்படும் முன்னேற்றங்கள் குறித்து சபை தொடர்ச்சியாகத் தகவல்களைப் பெற்றுக்கொள்கின்றது.

வலுவான உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகள் நிறுவனத்தின் ஒட்டுமொத்த இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பின் அத்தியாவசியக் கூறுகள் என்பதை நிறுவனத்தின் பணிப்பாளர் சபை ஏற்றுக்கொள்கின்றது. உள்ளகக் கட்டுப்பாட்டு கட்டமைப்பு, எதிர்பார்க்கப்படும் விளைவுகள் மற்றும் மூலோபாய இலக்குகளை அடைவதில் வெற்றியை எட்டவிடாது நேரும் அனைத்து இடர்களையும் நீக்குவதற்குப் பதிலாக, இடர்களை எதிர்கொள்ளக்கூடிய மட்டத்திற்கு நிர்வகிக்கும் வகையில் இக்கட்டமைப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த நோக்கத்தை அனுசரிக்கும் வகையில், சபை ஆறு பிரதான உப குழுக்களையும், பொறுப்புக்கூறல் மற்றும் அதிகாரப் பகிர்வுகளை தெளிவாக வரையறுக்கும் ஒரு நிறுவனக் கட்டமைப்பையும் நிறுவியுள்ளது. இந்த ஆறு சபை உப குழுக்கள்: கணக்காய்வு மற்றும் இணக்கப்பாட்டு குழு (ACC), இடர்நேர்வு முகாமைத்துவக் குழு, மனிதவளம் மற்றும் ஊதியக் குழு (HR & Rem.Com), முதலீட்டுக் குழு, மூலோபாய மீளாய்வுக் குழு மற்றும் எண்ணிம மாற்றக் குழு ஆகியவையாகும். இந்த முக்கிய குழுக்கள் சபையால் அங்கீகரிக்கப்பட்ட நியமங்களின் கீழ் இயங்குவதுடன், நல்லாட்சியின் அடிப்படைக் கொள்கைகளுக்கும் இணங்கிய வகையில் செயற்படுகின்றன.

நிதி அறிக்கைப்படுத்தல், உள்ளகக் கட்டுப்பாட்டு கட்டமைப்புகள், இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்புகள் மற்றும் உள்ளக மற்றும் வெளியகக் கணக்காய்வுச் செயற்பாடுகள் போன்ற துறைகளில் அதன் மேற்பார்வை சார் பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் சபைக்கு ஆதரவளிப்பதில் கணக்காய்வு மற்றும் இணக்கப்பாட்டு குழு ஒரு முக்கிய பங்கை வகிக்கின்றது.

உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களமானது நிறுவப்பட்ட கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுக்கு ஏற்ப செயற்பாடுகள் இணங்குவதை சரிபார்ப்பதுடன், உள்ளகக் கட்டுப்பாட்டு கட்டமைப்புகளின் போதுமான தன்மை மற்றும் வினைத்திறனை மதிப்பிடும் பொறுப்பையும் அது கொண்டுள்ளது. இணங்கியொழுகாது செயற்படுகின்ற எந்தவொரு நடவடிக்கை தொடர்பான கண்டறிதல்கள் உரியவாறு எடுத்துக்காட்டப்படுகின்றன. அனைத்து பிரிவுகளிலும் கிளைகளிலும் கணக்காய்வுகள் நடத்தப்படுகின்றன. அவற்றின் ஆயிடை இடர் மட்டத்தின் மதிப்பீட்டின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதுடன், செயற்பாட்டு மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகளின் சுயாதீன மற்றும் புறவய மதிப்பீடுகளை உறுதிப்படுத்துகின்றது.

வருடாந்த கணக்காய்வுத் திட்டம், கணக்காய்வு மற்றும் இணக்கப்பாட்டு குழுவால் பரிசீலிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படுவதுடன், கணக்காய்வின் மூலம் அறியப்பட்ட கண்டறிதல்கள் அதன் காலாகாலக் கூட்டங்களின் போது குழுவின் பரிசீலனைக்காகச் சமர்ப்பிக்கப்படுகின்றன. மேலும், கிளைகளில் மேற்கொள்ளப்படும் கணக்காய்வுகளில் இருந்து எழும் கண்டறிதல்கள் குறித்து கலந்துரையாடுவதற்காக ஒரு பிரத்தியேக உப குழு நிறுவப்பட்டுள்ளது.

நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடு, நிறுவனத்தின் ஆட்சி நிர்வாக கட்டமைப்பின் ஒரு முக்கிய அங்கமாகும். கணக்காய்வு மற்றும் இணக்கப்பாட்டு குழு நிதி அறிக்கையிடல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடுகளை மேற்பார்வையிடும் முதன்மைப் பொறுப்பை கொண்டுள்ளது. வினைத்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டு கட்டமைப்பை நிறுவிப் பராமரிக்கும் பொறுப்பு முகாமைத்துவத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதேவேளையில், இந்தக் கட்டுப்பாடுகளை மேற்பார்வையிடுவது மற்றும் கட்டமைப்பின் ஒட்டுமொத்த வினைத்திறனை மறுபரிசீலனை செய்வது கணக்காய்வு மற்றும் இணக்கப்பாட்டு குழுவின் பொறுப்பாகும்.

உள்ளகக் கட்டுப்பாட்டுத் துறையின் செயல்பாடு, தொடர்ச்சியான கண்காணிப்புச் செயற்பாடுகள், உள்ளகக் கணக்காய்வுகள் போன்ற தனித்தனி மதிப்பீடுகள் மற்றும் அடையாளம் காணப்பட்ட கட்டுப்பாடுகளின் பொருத்தப்பாடு மற்றும் வினைத்திறனை கண்காணிப்பதற்காக நிறுவனத்தின் செயற்பாடுகளுக்குள் உள்ளடக்கப்படும் நடைமுறைகள் மூலம் மதிப்பீடு செய்யப்படுகிறது.

நிறுவனத்தின் ஒட்டுமொத்த இடர்நேர்வு முகாமைத்துவ மூலோபாயத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டவாறான வலுவான இணக்கப்பாட்டு முகாமைத்துவக் கட்டமைப்பு நடைமுறையில் உள்ளது. இது இணக்கப்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறையில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளது. இணக்கப்பாட்டு நிகழ்ச்சித்திட்டம், வரையறுக்கப்பட்ட பொறுப்புடைய நிறுவனமாக கம்பனிகள் சட்டத்தின் கீழும், பதிவுசெய்யப்பட்ட காப்பீட்டாளராக உள்ள காப்புறுதித் தொழில் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் கீழும், அரசாங்கத்துக்குச் சொந்தமான வரையறுக்கப்பட்ட பொறுப்புடைய நிறுவனங்களை நிர்வகிக்கும் பிற சட்டக் கட்டமைப்புகளின் கீழும் நிறுவனத்திற்கு ஏற்புடைய சட்ட மற்றும் ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகளுக்கு இணங்கி செயற்படுவதை இது உள்ளடக்கியுள்ளது.

செயற்பாட்டுக் கட்டமைப்பின் நேர்மையையும் ஸ்திரத்தன்மையையும் பாதுகாக்க, ஒரு விரிவான பணமாற்று மோசடி எதிர்ப்பு (AML) கட்டமைப்பு அமுல்படுத்தப்பட்டுள்ளது. இக்கட்டமைப்பில், நிறுவப்பட்டுள்ள தரவுத்தளங்களை அணுகுவதிலிருந்து வாடிக்கையாளர்களைத் தூரப்படுத்துதல், வாடிக்கையாளர் உரிய வழிப்புக்கவனச் செயன்முறைகள், ஊழியர் செயற்றிறன் மதிப்பீடுகளில் இணைக்கப்பட்ட மின் கற்றல் தொகுதி, வருடாந்த உள்ளகக் கணக்காய்வுகள் மற்றும் காலமுறையான AML இடர் மதிப்பீடுகள் என்பன அடங்கும்.

நிறுவனத்தின் மிக முக்கியமான இடர்கள் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவத் திறன்களை மேற்பார்வையிடுவதில் கவனம் செலுத்தும் ஒரு பிரத்தியேக இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவுக்கு இடர்நேர்வு முகாமைத்துவச் செயற்பாட்டை சபை பொறுப்புச் சாட்டியுள்ளது. நிறுவனத்தால் தாபிக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் அதன் ஒட்டுமொத்த மூலோபாயம் மற்றும் இடரை எதிர்கொள்ளல் நடைமுறைகளுக்கு ஒத்துப்போகின்றன என்று பணிப்பாளர்கள் திருப்தி கொள்கின்கின்ற அதேவேளை இடர்நேர்வு குறித்து நிறுவன ரீதியான விழிப்புணர்வுக் கலாசாரம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதனையும் அவர்கள் ஊக்குவிக்கின்றனர்.

சபை நியமித்த உப குழுக்களான இடர்நேர்வு முகாமைத்துவக் குழு மற்றும் முதலீட்டுக் குழு அத்துடன் நிர்வாக மட்டக் குழுக்களான நிறைவேற்றுக் குழு, கணக்காய்வைப் பின்தொடரும் குழு மற்றும் உற்பத்தி மேம்பாட்டுக் குழு உள்ளிட்ட பல குழுக்களுக்கு அறிக்கைகளை இடர்நேர்வுத் துறை வழங்குகிறது. இந்த செயன்முறை மூலம், நிறுவனத்தின் இடர்நேர்வு முகாமைத்துவம் (ERM) இடர்நேர்வு குறித்த கண்ணோட்டத்தில் சுயாதீனமான உள்ளார்ந்த விடயங்களை எடுத்துக்காட்டுகின்றது. இது முகாமைத்துவம் மற்றும் சபை ஆகிய இரு துறைகளும் சாத்தியமான இடர் தாக்கங்களை உரியவாறு கருத்தில் கொண்டு தகவலறிந்த தீர்மானங்களை மேற்கொள்வதற்குத் துணைபுரிகின்றது.

**திரு நுசித் குமாரதுங்க**
தலைவர்

**திரு துஷ்மந்த தொட்டவத்தே**
தலைவர் – கணக்காய்வு மற்றும் இணக்கப்பாட்டு குழு

03 ஜூன் 2025

# 07

# நிதி அறிக்கைகள்

100
கம்பனியின் பணிப்பாளர்கள் சபையின் ஆண்டு அறிக்கை

104
பணிப்பாளர்களின் பொறுப்புடைமைக் கூற்று

105
பிரதம நிதியியல் அலுவலரின் பொறுப்புடைமைக் கூற்று

106
உறப்பட்ட ஆனால் (போதுமான அளவில்) அறிக்கையிடப்படாத உரிமைக்கோரல்கள் பற்றிய சான்றிதழ்

107
சுயாதீன கணக்காய்வாளர் அறிக்கை

110
நிதி நிலை அறிக்கை

111
இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்று

112
பங்குரிமையில் மாற்றங்கள் பற்றிய கூற்று

114
காசுப்பாய்ச்சல் கூற்று

116
நிதி அறிக்கைகள் மீதான குறிப்புகள்

# கம்பனியின் பணிப்பாளர்கள் சபையின் ஆண்டறிக்கை

2024 டிசம்பர் 31 அன்று முடிவுற்ற ஆண்டுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கைகளுடன் சேர்த்து 2024 ஆம் ஆண்டுக்கான அதன் ஆண்டறிக்கையை உறுப்பினர்களுக்கு சமர்ப்பிப்பதில் கம்பனியின் பணிப்பாளர்கள் சபை மகிழ்ச்சியடைகின்றது.

2024 டிசம்பர் 31 அன்று முடிவுற்ற ஆண்டுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் அதன்மீதான கணக்காய்வாளரின் அறிக்கையுடன் சேர்த்து கம்பனியின் ஆண்டறிக்கையை சமர்ப்பிப்பதில் கம்பனியின் பணிப்பாளர்கள் சபை மகிழ்ச்சியடைகின்றது. 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்புடைய ஏற்பாடுகளுக்கும் 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிற்துறை ஒழுங்குபடுத்தல் (திருத்தப்பட்டவாறான) சட்டத்தின் ஒழுங்குவிதி மற்றும் 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கியல் மற்றும் கணக்காய்வு தரநிலைகள் சட்டம் மற்றும் அதில் செய்யப்பட்ட திருத்தங்கள் என்பவற்றுக்கிணங்க இவ்வறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக நிறுவன சிறந்த ஆளுகை நடைமுறைகள் இவ்வறிக்கை கடைப்பிடிக்கின்றது.

## கம்பனியின் நிறுவனசார் பின்னணி

2011 இல் இலங்கைக் காப்புறுதி கூட்டுத்தாபனம், 2011 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க காப்புறுதி தொழிற்துறை ஒழுங்குபடுத்தல் (திருத்தம்) சட்டத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட கட்டாயத் தேவைபாட்டின் கீழ் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் நீண்ட கால ஆயுள் மற்றும் பொதுக் காப்புறுதி தொழிலை வேறுபடுத்துமாறு வேண்டப்பட்டது. அதற்கமைய, ஸ்ரீலங்கா இன்வெஸ்டமென்ட் ஹோல்டிங் லிமிடெட் ஏக பங்குடமையாளராகவிருந்து ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோபரேஷன் ஜெனரல் லிமிடட், என 2024 ஜுலை 25 அன்று கூட்டிணைக்கப்பட்டது.

ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோபரேஷன் ஜெனரல் லிமிடட் அதன் தொடக்கத்திலிருந்து 2024 ஜுலை 25 அன்று ஸ்ரீலங்கா இன்வெஸ்டமென்ட் ஹோல்டிங் லிமிடெட் இன் முழுமையாக உரித்தான துணை நிறுவனமாக கூட்டிணைக்கப்பட்டது. ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோபரேஷன் ஜெனரல் லிமிடட் சொத்தாண்மை 2023 ஆம் ஆண்டில் வேறுபடுத்தும் திட்டத்தின் நோக்கத்திற்காக 2023 ஒக்டோபர் 16 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்திற்கு கைமாற்றப்பட்டது.

அதற்கமைய, இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் பொது காப்புறுதி வியாபார தொழிற்பாடுகள் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் வேறுபடுத்தலுடன் 2024 பெப்ரவரி 01 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ் கோர்பரேஷன் ஜெனரல் லிமிடடிடம் கைமாற்றப்பட்டது.

2011 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க காப்புறுதி தொழித்துறை (திருத்தம்) சட்டத்தின் ஒழுங்குவிதிக்கும் 23/0431/604/046 ஆம் இலக்க 2023 மார்ச் 17 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைவாக இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் இரு வேறான நிறுவனங்களாக சட்ட ரீதியாக பிரிக்கப்பட்டது. இதன் விளைவாக, உரித்துக் கம்பனியின் முகாமைத்துவத்தின் கீழ் இலங்கைக் காப்புறுதி கூட்டுத்தாபனம் ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோபரேஷன் ஜெனரல் லிமிடட் மற்றும் ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோபரேஷன் லைப் லிமிடட் என்ற இரு முழுமையாக சொந்தமான துணை கம்பனிகளாக அதன் தொழிற்பாடுகள் பிரிக்கப்பட்டன. 2024 பெப்ரவரி 01 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தானம் தற்போது தொழிற்படுபடுகின்றது.

## பங்குடமையாளர்கள் பற்றிய தகவல்கள்

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தானம் கம்பனியின் ஏக பங்குடமையாராவதுடன், பங்குகளின் 99.98% இலங்கை அரசாங்கம் சார்பில் திறைசேரியின் செயலாளருக்கு உரித்தளிக்கப்பட்டுள்ளது.

## பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்

கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் இல. 21, வொக்ஷோல் வீதி, கொழும்பு 2 இல் அமைந்துள்ளது.

## கம்பனியின் முதன்மைச் செயற்பாடுகள்

ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோபரேஷன் ஜெனரல் லிமிடட் இன் முதன்மை நடவடிக்கை 2024 பெப்ரவரி 01 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் மோட்டார், தீ, கடலசார், மருத்துவ மற்றும் ஏனைய வகை காப்புறுதி வணிகத்தை நடத்துவதாகும். மீளாய்வு செய்யப்படும் வருடத்தில் நிறுவனத்தின் முக்கிய நடவடிக்கைகளில் எந்தவிதமான பெரிய மாற்றங்களும் காணப்படவில்லை.

## நிதி அறிக்கையிடலுக்கும் பணிப்பாளர்களின் பொறுப்பு

கம்பனியின் விவகாரங்கள் பற்றிய உண்மையான மற்றும் நியாயமான நோக்கொன்றினை பிரதிபலிப்பதற்கு கம்பனியின் நிதியியல் கூற்றுகளை தயாரிப்பதும் எடுத்துரைப்பதும் பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும். மோசடி அல்லது பிழை காரணமாக ஏற்படும் குறிப்பிடத்தக்க பிறழ்கூற்றுகளிலிருந்து விடுபட்ட நிதியியல் கூற்றுகளைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக எடுத்துரைத்தல், கணக்கீட்டுக் கொள்கைகளைத் தேர்ந்தெடுத்து ஏற்றுக்கொள்ளல் மற்றும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப நியாயமான கணக்கீட்டு மதிப்பீடுகளைச் செய்தல் ஆகியவற்றுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகளை வடிவமைத்தல், செயற்படுத்துதல், பேணுதல் ஆகியவை பணிப்பாளர்களின் பொறுப்புகளில் அடங்கும்.

ஆண்டறிக்கையில் உள்ள நிதி நிலைக் கூற்று, இலாப, நட்டக் மற்றும் ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய கூற்று, பங்குரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கிய கண்கீட்டுக் கொள்கைகள் மற்றும் அதற்கான குறிப்புகள் என்பன இலங்கை நிதி அறிக்கை நியமங்கள் தரயமங்கள் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள், 2000 இன் 43 ஆம் இலக்க காப்புறுதி தொழில்துறை ஒழுங்குபடுத்தல் சட்ட மற்றும் 2007 இன் கம்பனிகள் சட்ட ஒழுங்குவிதிகள் என்பவற்றின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன என் பணிப்பாளர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

## நிதியியல் கூற்றுகளும் கணக்காய்வாளரின் அறிக்கையும்

இலங்கையின் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தால் வழங்கப்பட்ட இலங்கை நிதி அறிக்கை நியமங்கள் தரயமங்கள் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் என்பவற்றின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன. தலைமை நிதியியல் அலுவரல் மற்றும் இரு பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் மூலம் உரியவாறு கையொப்பமிடப்பட்டுள்ளன. இந்நிதியியல் கூற்றுகளும் அறிக்கைகள் மற்றும் குறிப்புகளும் 2024 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு கமபனியின் நிதியியல் நிலை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டுக்கான அதன் செயலாற்றம் பற்றிய உண்மையான மற்றும் நியாயமான நோக்கொன்றைத் தருகின்றன.

## கணக்காய்வாளரின் அறிக்கையும்

வெளிவாரிக் கணக்காய்வாளராக கணக்காய்வாளர் தலைமை அதிபதி நியமிக்கப்பட்டுள்ளார். 2024 டிசம்பர் 31 அன்று முடிவுற்ற ஆண்டுக்கான நிதியியல் கூற்றுகளின் கணக்காய்வில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி உதவுவதற்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் 154(1) உறுப்புரையின் நியதிகளுக்கமைய பட்டயக் கணக்காளர்கள் நிறுவனமான பிடிஓ பார்ட்னரஸ் நியமிக்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் அறிக்கையின் முக்கிய பாகத்தை தோற்றுவிக்கின்ற நிதியியல் கூற்றுகள் மீதான கணக்காய்வாளரின் அறிக்கை இவ்வாண்டறிக்கையில் தரப்பட்டுள்ளது.

## கணக்காய்வு மற்றும் ஏனைய தொடர்புடைய சேவைகளுக்கான கட்டணம்

மீளாய்வு செய்யப்படும் ஆண்டில் கணக்காய்வுக் கட்டணமாக செலுத்தப்பட்ட தொகை மற்றும் ஏனைய தொடர்புடைய சேவைகளுக்காக செலுத்தப்பட்ட தொகை கீழே கொடுக்கப்பட்டுள்ளன. இப்பந்தியில் வெளிப்படுத்தப்பட்டதைத் தவிர, கணக்காய்வாளர்களுக்கு நிறுவனத்தில் எந்த உறவுமுறை ஆர்வமும் இல்லை என்பதை பணிப்பாளர்கள் அறிவார்கள்.

| | 2024 ரூ. '000 | 2023 ரூ. '000 |
|---|---|---|
| நியமிச்சட்டக் கணக்காய்வுக் கட்டணம் | 3,211 | 64 |
| கணக்காய்வற்றி செய்யாததுதொடர்புடைய சேவைகள் | 394 | – |

## கணக்கீட்டு கொள்கைகள்

இந்நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பதில் ஏற்றுக்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க கணக்கீட்டு கொள்கைகள் ஆண்டறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன.

## இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை

கம்பனியின் இடர்நேர்வு முகாமைத்துவ தொழிற்பாடுகளை பணிப்பாளர் சபை நடைமுறைப்படுத்தி மேற்பார்வை செய்கின்றது.

நிறுவனம் சிறந்த உள்ளகக் கட்டுப்பாட்டுக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை செயல்படுத்தியுள்ளது மற்றும் அத்தகைய கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் நிறுவனத்தின் உள்ளகக் கணக்காய்வுத் பிரிவினால் கண்காணிக்கப்படுகின்றன. கணக்காய்வு மற்றும் இணங்குவித்தல் குழு, நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டு செயற்பாட்டை மேற்பார்வை செய்கிறது.

மீளாய்வு ஆண்டிற்கான நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவம் செயறபாட்டின் செயல்திறன் குறித்து சபை திருப்தியடைந்துள்ளது.

## தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு

ஆண்டின்போது தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவுடன் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கான கம்பனியின் இயலுமையின் மீது குறிப்பிடத்தக்க சந்தேகத்தை தோற்றுவிக்கக்கூடிய நிகழ்வுகள் எதுவும் இனங்காணப்படவில்லை. அத்துடன் முக்கிய நிச்சயமின்மைகள் எதுவும் இது தொடர்பில் அவதானிக்கப்படவில்லை. கம்பனியின் நிதியியல் நிலை, தொழிற்பாட்டு செயலாற்றம், காசுப்பாய்ச்சல் மற்றும் ஒழுங்குபடுத்தல் அத்துடன் நியதிச்சட்ட தேவைப்பாடுகள் என்பவற்றுடனான இணங்குதல் என்பவற்றை பணிப்பாளர் சபை பரிசீலனையிற் கொண்டு, எதிர்பார்க்கின்ற எதிர்காலத்திற்கு அதன் தொழிற்பாடுகளை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு கம்பனி போதுமான வளங்களை கொண்டுள்ளதென திருப்தியடைகின்றது.

## புரள்வு/மொத்த பதியப்பட்ட கட்டுப்பணம்

2024 ஆம் ஆண்டுக்கான ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடடின் மொத்த புரள்வு ரூ. 20,199 மில்லியனாக பதிவாகிய அதேவேளை, முழு மொத்த பதியப்பட்ட கட்டுப்பணம் ரூ. 23,571 மில்லியன் தொகையாகவிருந்தது. கம்பனி மூலம் அடையப்பெற்ற மொத்த முழு பதியப்பட்ட கட்டுப்பணம் பற்றிய விரிவான பகுப்பாய்வு நிதியியல் கூற்றுகளில் தரப்பட்டுள்ளது.

## நிதியியல் பெறுபேறுகளும் உரிமைப்படுத்தல்களும்

| | 2024 ரூ. '000 |
|---|---|
| வரிக்கு முந்திய இலாபம் | 3,573,323 |
| வருமான வரிச் செலவுகள் | (911,984) |
| வரிக்கு பிந்திய இலாபம் | 2,661,339 |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்/நட்டம் | (126,638) |
| உரிமைப்படுத்தப்படாத இலாபம் முன் கொண்டு வரப்பட்டது. | 76,345 |
| உரிமைப்படுத்தலுக்காக கிடைக்கப்பெறுகின்ற இலாபங்கள் | 2,611,046 |
| செலுத்தப்பட்ட பங்கிலாபங்கள் | – |
| உரிமைப்படுத்தப்படாத இலாபம் முன் கொண்டு செல்லப்பட்டது | 2,611,046 |

## பங்கிலாபங்கள்

2024 நிதியாண்டுக்காக பங்கொன்றுக்கு ரூ. 0.18 கொண்ட இறுதி பங்கிலாபமொன்றினை (ரூ. 250,000,000 கொண்ட மொத்தத் தொகை) பிரகடனப்படுத்துவதற்கு பணிப்பாளர் சபை முன்மொழிந்துள்ளது.

பங்கிலாபங்களை கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் கம்பனி இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட 2024 இன் 4 ஆம் இலக்க பணிப்புரையுடனும் அதேபோன்று 2007இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 57 ஆம் பிரிவிற்கமைய வெளிவாரி கணக்காய்வாளர் மூலம் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுடனும் இணங்குவதை கம்பனி உறுதிசெய்ய வெண்டும்.

## அன்பளிப்புகள்

2024 காலப்பகுதியில் கம்பனி மூலம் அன்பளிப்புகள் எதுவும் செய்யப்படவில்லை.

## வரிவிதிப்புக்கான ஏற்பாடு

கம்பனியின் வரி நிலமை நிதியியல் கூற்றகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

## ஒதுக்குகள்

ஆண்டின் போது ஒதுக்குகளில் அசைவு பங்குரிமை மூலதன கூற்றில் மாற்றங்கள் பற்றிய கூற்றில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

## காப்புறுதி பொறுப்புகளும் ஏற்பாடுகளும்

அனைத்து அறிந்த பொறுப்புக்களுக்கும் கடமைப்பொறுப்பகளுக்கும் போதுமான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன என்பதை உறுதிசெய்வதற்கு பணிப்பாளர்கள் அனைத்து நியாயமான நடடிக்கைளையும் எடுத்துள்ளனர்.

பணிக்கொடைப் பொறுப்பும் இகநி-19 ஊழியர் நலன்கள் மூலம் வேண்டப்பட்டவாறு சுயாதீன கணிப்பீட்டாளர் ஒருவர் மூலம் விலைமதிப்பீடு செய்யப்பட்டது.

அறிக்கையிடும் திகதி அன்றுள்ளவாறு நிதியியல் கூற்றுகளில் போதுமான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு வேண்டுகின்ற ஏதேனும் சூழ்நிலைகள் பற்றி பணிப்பாளர்கள் அறியவில்லை.

## முதலீடுகள்

2024 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு கம்பனியினால் வைத்திருக்கப்படும் முதலீடுகளின் பெறுமதி ரூ. 39,585 மில்லியனாகும். வைத்திருக்கப்படும் முதலீடுகள் பற்றிய விரிவான வகைப்படுத்தல் நிதியியல் கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

## ஆதனம் பொறித்தொகுதி உபகரணங்கள்

ஆதனம் பொறித்தொகுதி உபகரணங்கள் பற்றிய விபரம் ஆண்டறிக்கையில் தரப்பட்டுள்ளது.

## நிரந்தர ஆதனங்களின் சந்தைப் பெறுமதி

ஆதனம் பொறித்தொகுதி உபகரணங்களை பதிவு செய்வதற்கான கணக்கீட்டு கொள்கையாக கம்பனி செலவு முறையினை பயன்படுத்துகின்றது. சொத்துக்களை மீள் விலைமதிப்பீடு செய்வதற்கான கம்பனியின் கொள்கை ஒவ்வொரு மூன்று ஆண்டுக்கும் ஒருதடவை இடம்பெறுகின்றது. அதற்கமைய, மோட்டார் வாகனங்கள் ஆதன விலைமதிப்பீட்டில் பொருத்தமான அனுபவத்துடன் கூடிய சுயாதீன பட்டய விலைமதிப்பீட்டாளர் திரு ஏ ஏ எம் ஆத்திஹு மூலம் 2024 நிதியாண்டில் மீள் விலைமதிப்பீடு செய்யப்பட்டன. அத்தகைய மீள் விலைமதிப்பீட்டின் பெறுபேறுகள் 2024 டிசம்பர் 31 அன்று அதன் செயலுறு திகதியிலிருந்து நிதியியல் கூற்றுகளுக்கு கூட்டிணைக்கப்பட்டுள்ளன.

## அறிக்கையிடும் திகதிக்கு பிந்தி நிகழும் நிகழ்வுகள்

அறிக்கையிடும் திகதிக்கு பிந்தி நிகழ்கின்ற நிகழ்வுகள் நிதியியல் கூற்றுக்கான 41 ஆம் குறிப்பில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

## தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல்வாங்கல்கள்

இலங்கை கணக்கீட்டு நியமம் 24 இற்கமைவாக தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல்வாங்கல்கள், நிதியியல் கூற்றுகளை தயாரிக்கையில் பின்பற்றப்பட்ட தொடர்புடைய தரப்பு வெளிப்படுத்தல்கள் இவ்வாண்டறிக்கையில் தரப்பட்டுள்ளன.

### பணிப்பாளர் சபை

அனைத்து பணிப்பாளர்களும் இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிடமிருந்து அனுமதி பெறுவதற்குட்பட்டு 2007இன் 07 ஆம் இலக்க கம்பனியின் சட்டத்திற்கமைவாக கம்பனியின் முதன்மைப் பங்குடமையாளராகவிருக்கின்ற திறைசேரிக்கான செயலாளரினால் ஆக்கப்பட்ட பெயர்குறித்தலின் அடிப்படையில் நிறைவேற்று தரமற்ற பணிப்பாளர்களாக நியமிக்கபட்டுள்ளனர்.

2024 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு கம்பனியின் பணிப்பாளர்கள் பின்வருமாறு:

**திரு ரொனால்ட் சீ பெரேரா, சனாதிபதி சட்டத்தரணி,**
2022 ஒக்டோபர் 24 அன்று நியமிக்கப்பட்டார் – 2024 ஒக்டோபர் 08 அன்று பதவிவிலகினார்.

**திரு எம் பல்பொல**
2022 ஒக்டோபர் 24 அன்று நியமிக்கப்பட்டார் – 2024 ஒக்டோபர் 08 அன்று பதவிவிலகினார்.

**கலாநிதி எஸ் எம் பி கித்சிறி மஞ்சநாயக்க**
2024 ஏப்ரல் 24 அன்று நியமிக்கப்பட்டார் – 2024 ஒக்டோபர் 19 அன்று பதவிவிலகினார்.

**திரு எஸ் நிஷாந்த தயானந்த**
2022 ஒக்டோபர் 24 அன்று நியமிக்கப்பட்டார் – 2024 டிசம்பர் 31 அன்று பதவிவிலகினார்.

**திரு அனில் கொஸ்வத்த**
2024 ஏப்ரல் 29 அன்று நியமிக்கப்பட்டார்.

**திரு கே ரவீந்திர பத்மபிரிய**
2024 ஏப்ரல் 29 அன்று நியமிக்கப்பட்டார்.

**திரு துஷ்மந்த தொட்டவத்தே**
2024 ஏப்ரல் 29 அன்று நியமிக்கப்பட்டார்.

**திரு பி நுசித் எஸ் குமாரதுங்க**
2024 ஒக்டோபர் 23 அன்று நியமிக்கப்பட்டார்.

இவ்வறிக்கையின் திகதியன்று உள்ளவாறான பணிப்பாளர் சபைகளின் உள்ளமைப்பு

1. திரு பி நுசித் எஸ் குமாரதுங்க
2. திரு துஷ்மந்த தொட்டவத்த
3. திரு கே ரவீந்திர பத்மபிரிய
4. திரு ரொஹான் பி புல்ட்ஜென்ஸ் – 2025 ஜனவரி 01 அன்று நியமிக்கப்பட்டார்.
5. திரு கே ரஜீவ் தர்மேந்திர – 2025 ஜனவரி 01 அன்று நியமிக்கப்பட்டார்.
6. திரு என் டி பி உனம்புவே -சனாதிபதி சட்டத்தரணி – 2025 ஜனவரி 01 அன்று நியமிக்கப்பட்டார்.

சுழற்சி அல்லது வேறு வகையில் பணிப்பாளர்கள ஓய்வும் மீண்டும் தெரிவுசெய்தலுதலும்.

1. **சாதாரண தீர்மானம்**
   கம்பனியின் அகவிதியின் 108 ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 105 ஆம் உறுப்பரையின் நியதிகளுக்கமைய பணிப்பாளரான திரு கந்தேகமகே ரவீந்திர பத்மபிரிய மற்றும் திரு. பலவின்னகே நுஷித் சமரசீ குமாரதுங்க ஆகியோர் சுழற்சி ஓய்வுபெறுவதுடன் இருவரும் மீண்டும் தெரிவுசெய்வதற்கு தகைமையுடையவராவர்.

2. **விசேட திர்மானம் – 01**
   திரு சோமதாச பலிகவர்தன (70 வயதிற்கு மேற்பட்டவர்) என்பவரை ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோபரேஷன் ஜெனரல் லிமிடட் சபைக்கு நியமித்தல்.

திரு சோமதாச பலிகவர்தன 72 வயதுடையவர் என்றும் 2025 ஜூன் 07 அன்று 72 வயதை எய்துவார் என்றும் அறிவித்து அவரிடமிருந்து 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 212 ஆம் பிரிவின் கீழ் முறையான அறிவித்தலொன்று கம்பனிக்கு கிடைக்கப்பெற்றது.

அதற்கமைய, அறிவித்தலின் குறித்துரைக்கப்பட்டவாறு அதன் பங்குடமையாளர்களின் அனுமதிக்குட்பட்டு ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோபரேஷன் ஜெனரல் லிமிடட் சபைக்கு அவரை நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

## கம்பனியுடனான ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் ஆர்வம்

ஒப்பந்தங்களில் பணிப்பாளர்கள் ஆர்வம் நிதியியல் கூற்றுகளில் வெளிப்படுத்தபட்டுள்ளன. இவ்வார்வங்கள் பணிப்பாளர்களின் கூட்டங்களில் உரியவாறு வெளிப்படுத்தப்படுகின்றன. கம்பனியின் ஏதேனும் பங்குடமையில் உரித்தினை பணிப்பாளர்கள் கொண்டிருப்பதில்லை.

### பணிப்பாளர்களின் ஊதியங்கள்

ஆண்டுகாலப்பகுதியில் கொடுப்பனவு செய்யப்பட்ட பணிப்பாளர்களின் கட்டணங்களும் ஊதியங்களும் ரூ. 1,988,000 ஆகவிருந்தது.

## குறிப்பிடப்பட்ட மூலதனம்

2024 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு கம்பனியின் குறிப்பிடப்பட்ட மூலதனம் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கிணங்க ரூ. 14,000 மில்லியனாவிருந்தது. 100% இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்திற்கு உரித்தளிக்கப்பட்டதாகும்.

## நியதிச்சட்ட கொடுப்பனவுகள்

பணிப்பாளர்கள் அவர்களது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் அரசாங்கம், காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மற்றும் ஊழியர்கள் தொடர்பிலான அனைத்து நியதிச்சட்ட கொடுப்பனவுகளும் உரியநேரத்தில் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதென திருப்தியடைகின்றனர்.

## அருவச் சொத்துக்கள்

2024 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு அருவச் சொத்துக்கள் கம்பனியின் நிதியியல் கூற்றில் பதிவுசெய்யபட்டுள்ளன.

## சுற்றாடல்

கம்பனியானது இயைபுடைய சுற்றாடல் சட்டங்களுடனும் ஒழுங்குவிதிகளுடனும் தொழிற்படுவதுடன் ஏதேனும் ஆபத்தான செயற்பாடுகளில் ஈடுபடவில்லை.

## சட்டங்களுடனும் ஒழுங்குவிதிகளுடனும் இணங்குதல்

சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கையில் வேறு வகையில் வெளிப்படுத்தினாலன்றி கம்பனி நிதியாண்டின் போது அனைத்து ஏற்புடைய சட்டங்களுடனும் ஒழுங்குவிதிகளுடனும் இணங்கியொழுகியுள்ளது. கம்பனியின் இணங்குவித்தல் தொழிற்பாட்டை இணங்குவித்தல் திணைக்களம் கண்காணித்து கணக்காய்விற்கும் இணங்குவித்தல் குழுவுக்கும் இடர்நேர்வு முகாமைத்துவ குழுவுக்கும் அறிக்கையிடுகின்றது. மேலும் காலமுறையான இணங்குவித்தல் அறிக்கைகள் சபைக்கு சமர்ப்பிக்கின்றன.

## நிதியியல் கூற்றுகளுக்கான அனுமதி

கணக்காய்வுசெய்யப்பட்ட நிதியியல் கூற்றுகள் 2025 ஏப்ரல் 28 அன்று பணிப்பாளர் சபையினால் அனுமதிக்கப்பட்டன.

## ஆண்டுப் பொதுக்கூட்டம்

ஆண்டுப் பொதுக்கூட்டம் கொழும்பு 02, வொக்ஷோல் வீதி, இல 21 இல் அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தில் கம்பனியின் சபை அறையில் 2025 யூன் 30 அன்று பி.ப 12 மணிக்கு இடம்பெறும்.

## அறிக்கையின் உள்ளடக்கங்களை ஏற்றுக்கொள்ளுதல்

2007இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 168(1) ஓ பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு இவ்வறிக்கையின் உள்ளடக்கங்களை பணிப்பாளர் சபை இத்தால் ஏற்றுக்கொள்கின்றது.

சபையின் கட்டளைப்படி

**ஷிரோமி கோதாகொட**
கம்பனிச் செயலாளர்

பணிப்பாளர் சபைக்காக

**திரு பி நுசித் எஸ் குமாரதுங்க**
தலைவர்/பணிப்பாளர்

**திரு கே ரவீந்திர பத்மபிரிய**
பணிப்பாளர்

2025 ஏப்ரல் 28

# பணிப்பாளர்களின் பொறுப்புடமைக் கூற்று

நிதியியல் கூற்றுக்கள் தொடர்பில் பணிப்பாளர்களின் பொறுப்பு பின்வரும் கூற்றில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

2007 இன் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக ஒவ்வொரு நிதியாண்டுக்குமான பொதுக்கூட்டம் ஒன்றுக்கு முன்னர் ஆண்டறிக்கையினை தயாரிப்பதற்கு பணிப்பாளர்கள் வேண்டப்பட்டுள்ளனர். நிதியியல் கூற்றுகளுக்கான கணக்காய்வாளரின் பொறுப்பானது இவாண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள கணக்காய்வாளரின் அறிக்கையில் விளக்கபட்டுள்ளது.

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கமைவாக கம்பனியின் நிதியியல் கூற்றுகள், ஐந்தொகை திகதியன்று உள்ளவாறு கம்பனியின் நிதியியல் நிலை, அத்திகதியில் முடிவடைகின்ற கணக்கீட்டு காலப்பகுதிக்கான அதன் இலாபம் அல்லது நட்டம் அல்லது வருமானம் அல்லது செலவு உள்ளடங்கலாக உண்மையான மற்றும் நியாயமான நோக்கொன்றினை தருகின்றன என்பதனை உறுதிசெய்வது பணிப்பாளர்களின் பொறுப்பாகும். கம்பனியின் ஒட்டுமொத்த விவகாரங்களின் நிலை பற்றிய நியாயமான எடுத்துரைத்தலையும் நிதியியல் கூற்றுகள் வழங்க வேண்டும்.

நிதியியல் கூற்றுகள், இலங்கை கணக்கீட்டு நியமங்கள், 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம், 1995 இன் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு கணக்காய்வு நியமங்கள் சட்டம் மற்றும் 2000 இன் 43 ஆம் இலக்க காப்புறுதி தொழிற்துறை ஒழுங்குபடுத்தல் சட்டம் என்பவற்றுக்கமைவாக தயாரித்து எடுத்துரைக்கப்படுவதை உறுதி செய்வதற்கும் கம்பனியின் பணிப்பாளர்கள் வேண்டப்பட்டுள்ளனர்.

நிதியியல் கூற்றுகளை தயாரிக்கையில் பொருத்தமாக கணக்கீட்டு கொள்கைகளை பணிப்பாளர்கள் ஒத்திசைவாக பிரயோகித்துள்ளனர் என்றும் ஆற்றல்வாய்ந்த தீர்மானம் மற்றும் மதிப்பீடுகளை பிரயோகித்துள்ளனர் என்றும் அவர்கள் உறுதிப்படுத்துகின்றனர். இதற்கு மேலதிகமாக, எதிர்பார்க்கக்கூடிய எதிர்காலத்திற்கு கம்பனி தொடர்ந்தும் தொழிற்படுவதற்கான போதுமான வளங்களை கொண்டுள்ளதென்றும் ஆகையினால் நிதிக்கூற்றுகளை தயாரிக்கையில் தொடர்ந்து இயங்கும் அடிப்படை பின்பற்றப்பட்டது எனவும் அவர்கள் நியாயமான எதிர்பார்க்கையினை கொண்டுள்ளனர்.

சகையின் கட்டளைப்படி,



**ஷிரோமி கோதாகொட**
கம்பனிச் செயலாளர்
ஸ்ரீ லங்கா இன்ஷுரன்ஸ் கோபரேஷன் ஜெனரல் லிமிடட்

2025 மே 30

# பிரதம நிதியியல் அலுவலரின் பொறுப்புடமைக் கூற்று

எமது அறிவுக்கு எட்டிய வரையில் 2024 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோபரேஷன் ஜெனரல் லிமிடட்டின் நிதியியல் கூற்றுகள் பின்வரும் தேவைப்பாடுகளுக்கு இணங்கி தயாரிக்கப்பட்டு முன்வைக்கபட்டுள்ளன:

i. இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள் (இ.நி.அ.நி/இ.க.நி) மற்றும் பரிந்துரைக்கப்பட்ட கூற்று
ii. 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்
iii. திருத்தப்பட்டவாறான 2000 இன் 43 ஆம் இலக்க காப்பறுதித் தொழிற்துறை ஒழுங்குபடுத்தல் சட்டம்

நிதியியல் கூற்றுகளை தயாரிக்கையில் பயன்படுத்தப்பட்ட வடிவங்களும் அதிலுள்ள வெளிப்படுத்தல்களும் தொடர்புடைய ஒழுங்குபடுத்தல் அதிகாரிகளால் வழங்கப்பட்ட குறித்துரைக்கபட்ட வடிவங்களுடன் இணங்கியொழுககின்றன. அத்துடன் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் வெளிப்படுத்தல் தேவைப்படுத்தல்களுக்கு இயைபாகவுள்ளன.

இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்ட நிதியியல் கூற்றுகள், முக்கிய கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய நிதியியல் தகவல்கள் என்பன 2024 டிசம்பர் 31 அன்று முடிவுற்ற ஆண்டுக்கான கம்பனியின் நிதியியில் நிலை செயலாற்றம், காசுப்பாய்ச்சல் ஆகிய அனைத்து முக்கிய தொடர்புகளிலும் நியாயமாக எடுத்துரைக்கின்றன என்பதை நாம் உறுதிப்படுத்தகின்றோம்.

மேலும், எதிர்வருகின்ற எதிர்காலத்தில் தொடர்ந்தும் தொழிற்பாட்டு ரீதியாக நிலைத்திருப்பதற்கு கம்பனி போதுமான வளங்களைக் கொண்டுள்ளதுடன் ஆகையினால், நிதியியல் கூற்றுகளைத் தயாரிக்கையில் கணக்கீட்டின் தொடர்தியங்கும் அடிப்படை பின்பற்றப்படுள்ளது என நாம் உறுதிப்படுத்துவதுடன்

முகாமைத்துவம் அதன் நிதியிடல் அறிக்கை பொறுப்புகளை நிறைவுசெய்கின்றது என்பதை உறுதி செய்வதற்கு பணிப்பாளர் சபை பொறுப்புடையதாகும். முதன்மை நிதி அலுவலர் என்ற வகையில் நிதியியில் அறிக்கையிடல் மீதான ஆற்றல்வாய்ந்த கணக்கீட்டு கொள்கைகளை, நடைமுறைகளை மற்றும் உள்ளக கட்டுப்பாடுகளை உறுதிசெய்வதும் பேணுவதும் எனது பொறுப்பாகும். நிதியியல் கூற்றுகளின் செம்மை, முழுமை மற்றும் நேர்மை என்பன தொடர்பில் நியாயமான உத்தரவாதத்தை வழங்குவதற்கு வடிவமைக்கப்பட்ட உள்ளக கட்டுப்பாடுகள் முறைமையொன்றை முகாமைத்துவம் நடைமுறைப்படுத்தியுள்ளது. இக்கட்டுப்பாடுகள் நிதியியல் பதிவேடுகளின் நம்பகத்தன்மை, சொத்துக்களை பாதுகாத்தல், நிதியியல் கூற்றுக்களை முறையாக தயாரித்தல் என்பவற்றை உறுதிசெய்வதற்கு போதுமானவை என நாம் நம்புகிறோம்.

உள்ளக கட்டுப்பாடுகளையும் நடைமுறைகளையும் தொடர்ச்சியாக கடைப்பிடிப்பதை உறுதிசெய்வதற்கு ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் உள்ளக கட்டுப்பாட்டு பிரிவு காலமுறையான மீளாய்வுகளை நடாத்துகின்றது.

சுயாதீன நிறைவேற்றுதரமற்ற பணிப்பாளரொருவரினால் தலைமை வகிக்கப்படுகின்ற கணக்காய்வுக் குழுவொன்றை சபை நியமித்துள்ளது. கணக்காய்வுக் குழு உள்ளக கணக்காய்வுச் செயன்முறைகள், கணக்காய்வு பின்தொடர் அறிக்கைகள் மற்றும் நிதியியல் கூற்றுகள் என்பவற்றை மீளாய்வு செய்துள்ளது. பங்குடமையாளர்கள் சார்பில் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியல்யாப்பின் 154 (1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக இலங்கையின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி மூலம் நிதியியல் கூற்றுகள் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளன. கணக்காய்வுக் குழுவுக்கு முழுமையான மற்றும் வரையறையற்ற பெறுவழியினை கணக்காய்வாளர் கொண்டுள்ளதுடன் தேவைப்படுமாயின் சுயாதீனமாக முகாமைத்துவத்தை சந்திக்கலாம்.

நாம் பின்வருவனவற்றை மேலும் உறுதிப்படுத்துகின்றோம்:

i. கம்பனி நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டவாறு அனைத்து ஏற்புடைய சட்டங்களுடன், ஒழுங்குவிதிகளுடன் மற்றும் வழிகாட்டல்களுடன் இணங்கியொழுகியுள்ளது
ii. நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்பில் வேறுவகையில் வெளிப்படுத்தப்பட்டவாறானவை தவிர முக்கிய இனங்காமைகள் எதுவும் காணப்படவில்லை
iii. கம்பனி மற்றும் ஊழியர்கள் சார்பில் செலுத்தப்பட வேண்டிய அறிக்கையிடும் திகதியன்றுள்ளவாறான அனைத்து வரிகள், தீர்வைகள் அனைத்தும் நியதிச்சட்ட கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டுள்ளன அல்லது போதுமானவு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன
iv. அனுமதிக்கத்தக்க சொத்துக்களை பொருத்துவதன் மூலம் ஒதுக்கீடு செய்தல் மற்றும் கடன்தீராற்றல் வழிகாட்டல்கள் இணங்கியொழுகப்பட்டுள்ளன அத்துடன் அனைத்து ஒதுக்குகளுக்கும் துணையளிக்கப்பட்டுள்ளன
v. கம்பனியின் பங்குரிமை மூலதனம் ஏற்புடைய ஒழுங்குவிதிகளால் குறித்துரைக்கப்பட்டவாறு குறைந்தபட்ச மூலதன தேவைப்பாடுகளை நிறைவு செய்கிறது.

**மாலக்க மிஹிர பண்டார**
பிரதம நிதியியல் அலுவலர்

20215 மே 16

# உறப்பட்ட ஆனால் (போதுமான அளவில்) அறிக்கையிடப்படாத உரிமைக்கோரல்கள் பற்றிய சான்றிதழ்

2025 ஏப்ரல் 9

சேரல்: ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோபரேஷன் ஜெனரல்
லிமிடட் பங்குதாரர்கள்

**ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோபரேஷன் ஜெனரல் லிமிடட் 2024 டிசம்பர் 31 தேறிய உறப்பட்ட ஆனால் (போதுமானளவில்) அறிக்கையிடப்படாத உரிமைகோரல்கள் (IBNR) மற்றும் பொறுப்பு போதுமைப் பரிசோதனை (LAT) பற்றிய சான்றிதழ்**

ரூ. 2,749,084,709 கொண்ட 75% நம்பிக்கை மட்டம் 2024 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோபரேஷன் ஜெனரல் லிமிடட் இன் கோரிக்கைப் பொறுப்பு தொடர்பில் தேறிய உறப்பட்ட ஆனால் (போதுமானளவில்) அறிக்கையிடப்படாத உரிமைகோரல்கள், மீள் காப்புறுதி கழித்து (கழிவுவழங்கப்படாத) போதுமானது என இத்தால் சான்றுப்படுத்துகின்றேன். உறப்பட்ட ஆனால் (போதுமான அளவில்) அறிக்கையிடப்படாத உரிமைகோரல்கள் ஏற்பாடானது கம்பனியினால் வைத்திருக்கப்படுகின்ற விடய ஒதுக்குகளுடன் சேர்த்து, எதிர்கால அனுபவத்தின் பல ஆனால் எல்லா சூழ்நிலைகளிலுமன்றி, 2024 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு கம்பனியின் உறப்பட்ட கோரல்கள் கடப்பாடுகள் தொடர்பில் கோரல் கையாளுதல் செலவு உள்ளடங்கலாக எதிர்காலப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு 75 ஆவது சதமானத்தில் போதுமானதாகவிருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது (கோரிக்கைகள் கையாளுதலுக்கான செலவுக்கான ஒதுக்கீடு உள்ளடங்கலாக 75% நம்பிக்கை மட்ட தேறிய உறப்பட்ட ஆனால் (போதுமானளவில்) அறிக்கையிடப்படாத உரிமைகோரல்கள் ஏற்பாடு, மீள்காப்புறுதி மொத்தம், ரூ. 2,827,243,767).

ஒவ்வொரு அறிக்கையிடும் காலப்பகுதியின் பின்னரும் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 4 இல் குறித்துரைக்கப்பட்டவாறு பொறுப்பு போதுமை பரிசோதனை ஒன்றை ('LAT') மேற்க்கொள்வதற்கு கம்பனிகள் வேண்டுப்பட்டுள்ளன. பொறுப்பு போதுமை பரிசோதனைப் பரிசோதனையானது உழைக்காத கட்டுப்பண ஒதுக்கின் கொண்டுசெல்கின்ற தொகையின் போதுமையினை கணிப்பிடுவதற்கு செயலாற்றுகின்றது. மீள்காப்புறுதி மற்றும் பிற்போடப்பட்ட கையகப்படுத்த செலவுகள் கழித்து, கம்பனி மூலம் ஏற்பாடுசெய்யப்பட்ட ரூ. 10,098,370,461 கொண்ட உறப்படாத கட்டுப்பண ஒதுக்கு எதிர்கால அனுபவத்தின் பல ஆனால் அனைத்தையுமல்லாத சூழ்நிலைகளில் ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோபரேஷன் ஜெனரல் லிமிடடின் காலாவதியடையாத இடர்நேர்வுகள் தொடர்பில் 50 ஆவது சமதமானத்தில் போதுமானதாகும் என இத்தால் சான்றுபபடுத்துகின்றேன். ஆகைனால் கம்பெனி மூலம் இனங்காணப்பட வேண்டிய கட்டுப்பண பற்றாக்குறை எதுவும் காணப்படவில்லை.

இப்பெறுபேறுகள் சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆயுட்கணிப்பிட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தீர்மானிக்கப்பட்டுள்ளன.

மேலே கம்பனியின் முகாமைத்துவத்தினால் வழங்கப்பட்ட தகவல்கள் மற்றும் தரவுகள் மீது நான் நம்பி இருப்பதுடன் தரவுகளின் நியாயமானதன்மை என்ற ரீதியில் திருப்தியடைவதற்கு பரிசோதனைகளை பிரயோகிப்பதற்குகப்பால் வழங்கப்பட்ட தரவுகளை சுவாதீனமாக உறுதிப்படுத்தவில்லை.

**ரொபர்டோ மலாட்டியா**
காப்பீட்டு கணிப்பீட்டு நிறுவனம் மற்றும் பீட சக உறுப்பினர் (FIA)

என் எம் ஜி பைனான்சியல சேர்விஸஸ் கென்சல்டிங் நிறுவத்திற்காகவும் சார்பிலும்

2025 ஏப்ரல் 09

T: +65 6325 9855 F: +65 6325 4700 E: contact@NMG-Group.com
www.NMG-Group.com
109 North Bridge Road #05 21, Singapore 179097

# சுயாதீன கணக்காய்வாளர் அறிக்கை

[redacted]

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

| | | |
|---|---|---|
| මගේ අංකය / எனது இல. / My No. INF/A/01/SLIC-GENERAL/AR/2024 | ඔබේ අංකය / உமது இல. / Your No. | දිනය / திகதி / Date 30 April 2025 |

தலைவர்
ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோபரேஷன் ஜெனரல் லிமிடட்

**2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் 2024 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இன்சூரன்ஸ் கோர்ப்பரேஷன் ஜெனரல் லிமிடடின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1.(அ) முனைப்பலியுள்ள அபிப்பிராயம்

ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோபரேஷன் ஜெனரல் லிமிடட்டின் (கம்பனி) 2024 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் 116 தொடக்கம் 165 ஆம் பக்கங்களில் எடுத்துரைக்கப்பட்ட வாறான முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும். இக்கணக்காய்வினைக் கொண்டுநடாத்தவதற்கு பொதுவான நடைமுறையாக பட்டயக் கணக்காளர்கள் நிறுவனதொன்றினால் எனக்கு உதவியளிக்கப்படுகின்றது.

எனது அபிப்பிராயத்தின் பிரகாரம், எனது அறிக்கையின் முனைப்பலியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விவரிக்கப்பட்ட விடயங்களுக்கான விளைவுகள் தவிர, இணைந்துள்ள நிதிக்கூற்றுகள் 2024 டிசம்பர் 31 அன்று உள்ளவாறான கம்பனியின் நிதியியல் நிலைமை மற்றும் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக அப்போது முடிவுற்ற ஆண்டுக்கான அதன் நிதியியல் செயலாற்றம் மற்றும் அதன் காசுப்பாய்ச்சல் பற்றிய உண்மையான மற்றும் நியாயமான நோக்கொன்றினைத் தருகின்றன.

### 1.2 முனைப்பலியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைவாக எனது கணக்காய்வை நான் நடாத்தினேன். அந்நியமனங்களின் கீழ் எனது பொறுப்புகள், எனது அறிக்கையின் நிதிக்கூற்றுகள் பிரிவின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புகளில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. நான் பெற்றுக்கொண்ட கணக்காய்வுச் சான்றானது எனது முனைப்பலியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதுமானதும், பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

### 1.3 விடயங்கள் மீதான அழுத்தம்

2011 இன் 3 ஆம் இலக்க காப்புறுதி ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் 53 ஆம் பிரிவிற்கமைவாக நடைமுறைப்படுத்தப்பட்ட வேறுபடுத்தல் செயன்முறையின் நிலைமைகளை விவரிக்கின்ற அத்துடன் 2011 இன் 3 ஆம் இலக்க காப்புறுதித் தொழில்துறை (திருத்தம்) சட்டத்தின் 30 ஆம் பிரிவு தொடர்பில் நிருவாகச் செயன்முறை பற்றிய நிலைமைகளை விவரிக்கின்ற நிதியியல் கூற்றுகளின் குறிப்பு 39 இற்கு நான் கவனத்தை ஈர்க்கின்றேன். இவ் விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயம் முனைப்பலியற்றதாகும்.

### 1.4 கம்பனியின் 2024 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்

கம்பனியின் 2024 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட தகவல்களை ஏனைய தகவல்கள் கொண்டுள்ளன ஆனால் நிதிக் கூற்றுகளையும் அதன் மீதான எனது கணக்காய்வாளரின் அறிக்கையையும் அது உள்ளடக்கவில்லை. இது கணக்காய்வாளரின் இவ்வறிக்கையின் திகதியின் பின்னர் எனக்கு கிடைக்கப்பெறச் செய்யப்பட்ட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்புடையதாகும்.

நிதிக் கூற்றுகள் மீதான எனது அபிப்பிராயம் வேறு தகவல்களை உள்ளடக்குவதுடன் அதன் மீதான உத்தரவாத தீர்மானத்தினை எவ்வடிவிலும் நான் வெளிப்படுத்துவதில்லை.

நிதிக் கூற்றுகள் பற்றிய எனது கணக்காய்வு தொடர்பில் எனது பொறுப்பானது ஏனைய தகவல்கள் கிடைக்கப்பெறுகின்றதாகின்ற போது மேலே இனங்காணப்பட்ட வேறு தகவல்களை வாசிப்பதாகும். என்பதுடன் அவ்வாறு செய்கையில் ஏனைய தகவல்கள் நிதியியல் கூற்றுடன் அல்லது கணக்காய்வில் பெற்றுக்கொண்ட எனது அறிவுடன் முக்கியமாக முரண்படுகின்றதா அல்லது முக்கிய பிறழ் கூற்றாக உள்ளதாக அல்லது வேறு வகையில் தவறாக குறிப்பிடப்பட்டதாக தென்படுகின்றதா என்பதை பரிசீலிப்பதாகும்.

கம்பனியின் 2024 ஆண்டறிக்கையினை நான் வாசிக்கின்ற போது அதில் முக்கிய பிறழ் கூற்றுகள் காணப்படுகின்றன என நான் தீர்மானிப்பதாயின், சரிப்படுத்தலுக்கான ஆளுகையுடன் பொறுப்பானவர்களுக்கு அவ்விடயத்தினை அறிவிப்பதற்கு வேண்டப்படுகின்றேன். மேலும், முக்கிய சரிப்படுத்தப்படாத தவறுக் கூற்றுகள் காணப்படுமாயின், காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படவுள்ள அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளை அநுசரித்து பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கையில் அவை உள்ளடக்கப்படும்.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

## 1.5 முகாமைத்துவத்தினதும் நிதி கூற்றுக்களின் நிர்வாகத்துக்கு பொறுப்பளிக்கப்பட்டோரினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கிட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனி கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாகவுள்ளது.

கம்பனி நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ்ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 ஆம் ஆண்டின 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16 (1) இன் பிரகாரம் கம்பனியானது, கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானம், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளுக்கான முறையான ஏடுகளையும் பதிவுகளையும் பராமரித்தல் வேண்டும்.

## 1.6 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாகக் காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதியியல் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாகக் கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வு முழுவதன் போதும் நான் தொழில்சார் நிபுணத்துவ கருதுகோள்களையும் தொழில்சார் நிபுணத்துவ ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்:

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதியியல் கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான இடர்நேர்வுகளை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்நேர்வுகளை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.
- கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான விளக்கத்தைப் பெற்றுக்கொள்வது சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்றிறன் மீது அபிப்பிராயமொன்றைத் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் நாணயச் சபையால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்தவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனியிடமுள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாகக் காணப்படாதிருக்கையில், நிதியியல் கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்குக் காரணங்களாக அமையலாம்.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதியியல் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதியியல் கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

ஏனைய விடயங்களிடையே, என்னுடைய கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்பட்ட உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏதாவது முக்கிய குறைபாடுகள் உள்ளடங்கலாக முக்கியமான கணக்காய்வு காண்புகள் தொடர்பாக ஆளுகைக்குப் பொறுப்பானவர்களுக்கு நான் தெரிவிக்கின்றேன்.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

## 2. ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் ரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

**2.1** 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 2001 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் என்பன பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன:

**2.1.1** எனது அறிக்கையின் முனைப்பலியுள்ள அபிப்பிராயப் பிரிவில் விவரிக்கப்பட்ட விடயங்களுக்காக தாக்கங்கள் தவிர, கணக்காய்விற்கு அவசிமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு 2001 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 163(2) ஆம் பிரிவு மற்றும் 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவு என்பவற்றின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கம்பனியினால் முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் வைத்திருக்கப்படுகின்றன.

**2.1.2** கம்பனியின் நிதிக் கூற்றுகள் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுகின்றன.

**2.1.3** சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு அமைய கடந்த வருடத்துடன் ஒத்ததாகக் காணப்படுகின்றது.

**2.1.4** 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு அமைய, சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகள் என்னால் செய்யப்பட்ட அனைத்து பரிந்துரைகளையும் உள்ளடக்கியுள்ளது.

**2.2** மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

**2.2.1** பினவருபவை தவிர 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு அமைய ஏதேனும் ஏற்புடைய சட்டம், கம்பனியின் ஆளுகைக் குழுவின் மூலம் வழங்கப்பட்ட பொதுவான மற்றும் விசேட பணிப்புரைகளுடன் கம்பின் இணங்கியொழுகவில்லை என்பதைக் குறிப்பிடுதல்.

**2.2.2** பின்வருவனவற்றைத் தவிர்த்து 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (உ) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு அமைய கம்பனியானது ஏதேனும் பிரயோகிக்கத்தக்க எழுத்து மூல சட்டங்கள், கம்பனியின் ஆளுகைக் குழுவினால் வழங்கப்பட்ட பொது மற்றும் விசேட வழகாட்டல்களுடன் இணங்கியொழுகவில்லை என குறிப்பிடுதல்.

2011 இன் 3 ஆம் இலக்க காப்புறுதி ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் 53 ஆம் பிரிவுடன் இணங்கி, இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தானம் 2024 பெப்ரவரி 01 தொடக்கம் மற்றும் பொதுக் காப்புறுதித் தொழில் மற்றும் ஆயுட் காப்புறுதித் தொழில் என (கமபனி) அதன் வியாபாரத் தொழிற்பாடுகளை பிரித்துக்கொண்டது. வேறுபடுத்தல் வழிகாட்டல்களுக்கும் மேல் நீதி மன்றத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட ஏற்பாட்டுத்திட்டத்திற்கும் அமைவாக இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தானத்தின் சொத்துகள் கம்பனிக்கு கைமாற்றப்பட்டுள்ளதுடன் 2007 இன் 07 அம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 256 ஆம் பிரிவிற்கதைவாக கைமாற்றல் செயலுறுத்தப்பட்டது.

என்னும், நிருவாக ரீதியான பெயர் மாற்றங்கள் அடங்கலாக மூன்றாம் தரப்பினர்களுடனான ஏற்பாடுகள் இன்னும் இடம்பெறுகின்றன.

மேலும், வேறுபடுத்தலுடன் தொடர்புடைய நிருவாக ரீதியான பெயர் மாற்றங்கள் உள்ளடங்கலாக சில நிருவாக ரீதியான விடயங்கள் இன்னும் இடம்பெறுதல், பரந்த வேறுபடுத்தல் நடைமுறைப்படுத்தலுக்கு பிந்திய பாகமொன்றாகத் தீர்க்கப்பட்டு வருவதல், இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிடமிருந்து எழுத்து மூலமான பதிலை பெற்றுக்கொள்ளும் செயன்முறையில் உள்ளமை என்பதனால் இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிடமிருந்து கம்பனி நீடிப்பொன்றைக் கோரியுள்ளது.

அதற்கமைய, இவ்விடம்பெறுகின்ற தொழிற்பாட்டு மற்றும் நிரவாக ரீதியான சவால்கள் காரணமாக, 2011 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க காப்புறுதி தொழிற்துறை ஒழுங்குபடுத்தல் (திருத்தம்) சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் நிரவாக ரீதியான நடைமுறைகளுடன் தொடர்புபட்ட இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டுள்ளது.

**2.2.3** பின்வருவனவை தவிர 2018 ஆம் ஆண்டில் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாட்டிற்கு அமைவாக அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளுக்கு அமைவாக கம்பனி செயலாற்றவில்லை என குறிப்பிடுதல்.

**2.2.4** கம்பனியின் மூலவளங்கள் பின்வருவன தவிர 2018 ஆம் ஆண்டின் 19 அம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(ஏ) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு அமைவாக ஏற்புடைய நேரக் கட்டமைப்பினுள் மற்றும் சட்டங்களுக்கு இசைவாக சிக்கனமாகவும், வினைத்திறன் மிக்கதாகவும் செயல்திறன் வாயந்ததாகவும் பெற்றுக்கொள்ளப்பட்டு பயன்படுத்தப்படவில்லை என்பதை குறிப்பிடுதல்.

**ஜி எச் டி தர்மபால**
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

எம்மைப் பற்றி
தலைமைத்துவ மீளாய்வுகள்
அறிக்கை பற்றி முகக்குறிப்பு
மூலோபாய கவனம்
முகாமைத்துவக் கருத்துரை
ஆளுகையும் இடர்நேர்வு கண்காணித்தலும்
நிதி அறிக்கைகள்
துணைத் தகவல்கள்

# நிதி நிலை அறிக்கை

| டிசம்பர் 31 அன்று உள்ளவாறு | இல. | பக்கம் | 2024 ரூ. '000 | 2023 ரூ. '000 |
|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | |
| அருவச் சொத்துக்கள் | 5 | 120 | **61,879** | – |
| சொத்து, பொறி மற்றும் உபகரணங்கள் | 6 | 122 | **611,198** | – |
| ஒத்திவைக்கப்பட்ட வரி சொத்துகள் | 7 | 124 | **254,677** | – |
| நிதி முதலீடுகள் | 8 | 125 | **36,982,166** | – |
| மீள்காப்புறுதி கிடைக்கப்பெறத்தக்கவை | 9 | 130 | **1,972,225** | – |
| பெறத்தக்க கட்டுப்பணம் | 10 | 131 | **5,144,352** | – |
| ஏனைய சொத்துக்கள் | 11 | 131 | **1,583,253** | 1,905 |
| ஒத்திவைக்கப்பட்ட செலவுகள் | 12 | 132 | **732,566** | – |
| காசும் காசுக்கு சமமானவைகளும் | 13 | 132 | **3,791,489** | 579,400 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | | **51,133,805** | 581,305 |
| **பொறுப்புகள் மற்றும் பங்குரிமை மூலாதனம்** | | | | |
| குறிப்பிடப்பட்ட மூலதனம் | 14 | 132 | **14,000,000** | 500,000 |
| வரையறுக்கப்பட்ட மூலதன ஒதுக்கு | 15 | 133 | **1,000,000** | – |
| மீள்விலைமதிப்பீட்டு ஒதுக்கு | 16 | 133 | **185,236** | – |
| விற்பனைக்கு கிடைக்கப்பெறும் ஒதுக்கு | 17 | 133 | **4,182,152** | – |
| வருவாய் ஒதுக்கு | 18 | 133 | **2,611,046** | 76,345 |
| **மொத்தப் பங்குரிமை மூலதனம்** | | | **21,978,434** | 576,345 |
| **பொறுப்புகள்** | | | | |
| காப்பீட்டு ஒப்பந்த பொறுப்புகள் | 19 | 133 | **20,441,265** | – |
| ஊழியர் நலப் பொறுப்புக்கள் | 20 | 135 | **1,391,859** | – |
| மீள்காப்றுதி செலுத்தத்தக்கவை | 21 | 137 | **1,751,702** | – |
| நடப்பு வரிப் பொறுப்புகள் | 22 | 137 | **404,367** | 4,876 |
| ஏனைய பொறுப்புகள் | 23 | 137 | **4,898,032** | 84 |
| வங்கி மேலதிக பற்று | 24 | 137 | **268,146** | – |
| **மொத்தப் பொறுப்புகள்** | | | **29,155,371** | 4,960 |
| **மொத்தப் பொறுப்புகள் மற்றும் பங்குரிமை மூலதனம்** | | | **51,133,805** | 581,305 |

பக்கம் 116 முதல் 165 வரையிலான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்நிதி அறிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்படுத்தல்களுக்கு இணங்க இந்நிதிக்கூற்றுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

**மாலக மிஹிர பண்டார**
பிரதம நிதி அதிகாரி

இந்த நிதி அறிக்கைகளைத் தயாரித்து மற்றும் சமர்பிப்பது பணிப்பாளர்கள் குழுவின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுகள் பணிப்பாளர்கள் சபையினால் அனுமதிக்கப்பட்டு அது சார்பில் கையொப்பமிடப்பட்டுள்ளது

**நுசித் குமாரதுங்க**
தலைவர்

**ஆர் பீ புல்ட்ஜென்ஸ்**
பணிப்பாளர்

கொழும்பு
28 ஏப்ரல் 2025

# இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்று

| டிசம்பர் 31 அன்று முடிவடைந்த ஆண்டிற்கானது | குறிப்புகள் | பக்கம் | 2024 ரூ. '000 | 2023 ரூ. '000 |
|---|---|---|---|---|
| **வருமானம்** | 25 | 138 | **20,199,038** | 19,798 |
| **மொத்த பதியப்பட்ட கட்டுப்பணம்** | 26 | 138 | **23,570,648** | – |
| மொத்தமாக ஈட்டப்படாத கட்டுப்பணத்திற்கான ஒதுக்கில் மாற்றம் | 27.1 | 139 | **420,875** | – |
| **மொத்தமாக ஈட்டிய கட்டுப்பணம்** | | | **23,991,523** | – |
| மீள்காப்புறுதி வழங்குநர்களுக்கு செலுத்திய கட்டுப்பணம் | 27.2 | 139 | **(6,998,145)** | – |
| ஈட்டப்படாத பெறப்படாத மீள்காப்புறுதி கட்டுப்பணத்திற்கான ஒதுக்கில் மாற்றம் | 27.3 | 139 | **(432,281)** | – |
| **தேறிய ஈட்டப்பட்ட கட்டுப்பணம்** | 27 | 138 | **16,561,097** | – |
| **ஏனைய வருமானம்** | | | | |
| முதலீட்டு வருமானம் | 28 | 139 | **3,987,625** | 19,798 |
| நிகர தேறிய/தேறாத இலாபங்கள் | 29 | 140 | **(419,807)** | – |
| ஏனைய வருமானம் | 30 | 140 | **70,123** | – |
| | | | **3,637,941** | 19,798 |
| **வருமானம்** | | | **20,199,038** | 19,798 |
| **நலன்கள், நட்டங்கள் மற்றும் செலவுகள்** | | | | |
| நிகர நலன்கள் மற்றும் உரிமைகோரல்கள் | 31 | 140 | **(9,482,391)** | – |
| காப்பீடு மற்றும் தேறிய கையகப்படுத்தல் செலவுகள் | 32 | 141 | **(221,274)** | – |
| ஏனைய தொழிற்பாட்டு மற்றும் நிர்வாகச் செலவுகள் | | | **(6,922,050)** | (114) |
| **தேறிய நலன்கள், நட்டங்கள் மற்றும் செலவுகள்** | | | **(16,625,715)** | (114) |
| **வரிக்கு முந்திய இலாபம்** | 33 | 142 | **3,573,323** | 19,684 |
| வருமான வரிச் செலவு | 34 | 142 | **(911,984)** | (4,876) |
| **ஆண்டுக்கான தேறிய இலாபம்** | | | **2,661,339** | 14,808 |
| **ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்** | | | | |
| ***இலாபத்திற்கு அல்லது நட்டத்திற்கு அதனைத் தொடர்ந்து மீள்வகைப்படுள்ள அல்லது மீள்வகைப்படுத்தக் கூடிய விடயங்கள்*** | | | | |
| விற்பனைக்கு கிடைக்கும் நிதிச்சொத்துக்களின் சீர்மதிப்பு பெறுமதியில் தேறிய மாற்றம் | 17 | 133 | **4,349,529** | – |
| விற்பனைக்கு கிடைக்கும் நிதிச்சொத்துக்களின் சீர்மதிப்பு பெறுமதியில் ஒத்திவைக்கப்பட்ட வரி விளைவு | 17 | 133 | **(167,377)** | – |
| ***இலாபத்திற்கு அல்லது நட்டத்திற்கு அதனைத் தொடர்ந்து மீள்வகைப்படுத்தப்படாத விடயங்கள்*** | | | | |
| சொத்து, பொறிகள் மற்றும் இயந்திரங்களின் மீள்விலைமதிப்பீட்டின் மீதான தேறிய இலாபம் | 16 | 133 | **264,623** | – |
| சொத்து, பொறிகள் மற்றும் இயந்திரங்களின் மீதான ஒதுக்கு மீள்விலைமதிப்பீட்டின் தேறல் மீதான ஒத்திவைக்கப்பட்ட வரிவிளைவுகள் | 16 | 133 | **(79,387)** | – |
| ஓய்வு நலக்கடப்பாடுகள் மீதான கணிப்பீட்டு இழப்பு | 18 | 133 | **(180,910)** | – |
| கணிப்பீட்டு இலாபம்/(நட்டம்) மீதான ஒத்திவைக்கப்பட்ட வரி விளைவு | 18 | 133 | **54,272** | – |
| **ஆண்டிற்கான ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானங்கள் வரி நீங்கலாக** | | | **4,240,750** | – |
| **ஆண்டிற்கான மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்** | | | **6,902,089** | 14,808 |
| பங்கொன்றிற்கான அடிப்படை/குன்றிய உழைப்புகள் (ரூ.) | 35 | 143 | **2.07** | 0.03 |

அடைப்புக்குறிக்குள் உள்ள தொகைகள் கழித்தல்களைக் குறிக்கின்றன.

பக்கம் 116 முதல் 165 வரையிலான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்நிதி அறிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

கொழும்பு

28 ஏப்ரல் 2025

# பங்குரிமையில் மாற்றங்கள் பற்றிய கூற்று

| டிசம்பர் 31 அன்று முடிவடைந்த ஆண்டிற்கானது | குறிப்பு | பக்கம் | குறிக்கப்பட்ட மூலதன ஒதுக்கு ரூ. '000 | மீள்விலைமதிப்பீடு ஒதுக்கு ரூ. '000 |
|---|---|---|---|---|
| **2023 ஜனவரி 01 அன்றுள்ளவாறு ஒதுக்கு** | | | 100,000 | – |
| விநியோகிக்கப்பட்ட பங்குகள் | | | 400,000 | |
| | | | 500,000 | – |
| **ஆண்டுக்கான மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்** | | | | |
| ஆண்டுக்கான இலாபம் | | | – | – |
| **ஆண்டுக்கான மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்** | | | – | – |
| **2023 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு மீதி** | | | 500,000 | – |
| | | | | |
| **2024 ஜனவரி 01 அன்றுள்ளவாறு மீதி** | | | 500,000 | – |
| வேறுபடத்தலின் மூலம் விநியோகிக்கப்பட்ட பங்குகள் | | | 13,500,000 | – |
| வரையறுக்கப்பட்ட மூலதன ஒதுக்கு | | | – | – |
| **2024 பெப்ரவரி 01 அன்றுள்ளவாறு ஒதுக்கு** | | | 14,000,000 | – |
| **ஆண்டுக்கான மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்** | | | | |
| ஆண்டுக்கான இலாபம் | | | – | – |
| **ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்** | | | | |
| விற்பனைக்கு கிடைக்கும் நிதிச் சொத்துக்களின் சீர்மதிப்பு பெறுமதியில் தேறிய மாற்றம், வரி நீங்கலாக | 17 | 133 | – | – |
| சொத்து, பொறி மற்றும் உபகரணங்களின் மீள்விலைமதிப்பீட்டின் மூலம் பெறப்பட்ட ஆதாயம், வரி நீங்கலாக | 16 | 133 | – | 185,236 |
| வரையறுக்கப்பட்ட நலதிட்டங்களின் மீள்விலைமதிப்பீட்டு நட்டம் மற்றும் நிகர வரி | 18 | 133 | – | – |
| **மொத்த ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம், வரி நீங்கலாக** | | | – | 185,236 |
| **ஆண்டுக்கான மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்** | | | – | 185,236 |
| **2024 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு மீதி** | | | 14,000,000 | 185,236 |

அடைப்புக்குறிக்குள் உள்ள தொகைகள் கழித்தல்களைக் குறிக்கின்றன.

பக்கம் 116 முதல் 165 வரையிலான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்நிதி அறிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

கொழும்பு

28 ஏப்ரல் 2025

| | மட்டுப்படுத்தப்பட்ட மூலதன ஒதுக்கு ரூ. '000 | விற்பனைக்கு கிடைக்கும் ஒதுக்கு ரூ. '000 | பிடித்துவைக்கப்பட்ட உழைப்பு ரூ. '000 | மொத்த பங்குரிமை மூலதனம் ரூ. '000 |
|---|---|---|---|---|
| | – | – | 61,537 | 161,537 |
| | | | | 400,000 |
| | – | – | 61,537 | 561,537 |
| | – | – | 14,808 | 14,808 |
| | – | – | 14,808 | 14,808 |
| | – | – | 76,345 | 576,345 |
| | | | | |
| | – | – | 76,345 | 576,345 |
| | – | – | – | 13,500,000 |
| | 1,000,000 | – | – | 1,000,000 |
| | 1,000,000 | – | 76,345 | 15,076,345 |
| | – | – | 2,661,339 | 2,661,339 |
| | – | 4,182,152 | – | 4,182,152 |
| | – | – | – | 185,236 |
| | – | – | (126,638) | (126,638) |
| | – | 4,182,152 | (126,638) | 4,240,750 |
| | – | 4,182,152 | 2,534,701 | 6,902,089 |
| | 1,000,000 | 4,182,152 | 2,611,046 | 21,978,434 |

# காசுப்பாய்ச்சல் கூற்று

| டிசம்பர் 31 அன்று முடிவடைந்த ஆண்டிற்கானது | குறிப்பு | பக்கம் | 2024<br>ரூ. '000 | 2023<br>ரூ. '000 |
|---|---|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து காசுப்பாய்ச்சல்** | | | | |
| வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட கட்டுப்பணம் | | | 22,887,058 | – |
| செலுத்தப்பட்ட மீள்காப்புறுதி கட்டுப்பணம் | | | (6,480,361) | – |
| செலுத்தப்பட்ட காப்பீட்டுக் கோரிக்கைகள் மற்றும் நன்மைகள் | | | (10,199,723) | – |
| உரிமைகோரல்கள் மற்றும் நலன்கள் தொடர்பான மீள்காப்புறுதி கிடைப்பனவுகள் | | | 1,537,161 | – |
| ஊழியர்களுக்கு மற்றும் ஊழியரின் சார்பாக செலுத்தப்பட்ட காசு | | | (4,324,150) | – |
| ஏனைய செயற்பாட்டு பண கொடுப்பனவுகள் | | | (502,037) | 13,394 |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து காசுப்பாய்ச்சல்** | A | | 2,917,948 | 13,394 |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | 20 | 135 | (77,555) | – |
| செலுத்தப்பட்ட வருமான வரி | 22 | 137 | (379,465) | (393) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசு** | | | 2,460,928 | 13,001 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து காசுப்பாய்ச்சல்** | | | | |
| நிதி முதலீடுகளை கையகப்படுத்துதல் | | | (11,773,912) | – |
| நிதி முதலீடுகள் மூலம் கிடைக்கும் வருமானம் | | | 9,169,116 | – |
| சொத்து, பொறி மற்றும் உபகரணங்களை அகற்றுவதன் மூலம் கிடைத்த வருமானம் | | | 5,310 | – |
| சொத்து, பொறி மற்றும் உபகரணங்கள் கையகப்படுத்தல் | 6 | 122 | (147,143) | – |
| அசையா சொத்துக்களை கையகப்படுத்துதல் | 5 | 120 | (42,730) | – |
| வட்டிப் பெறுகைகள் | | | 2,551,522 | – |
| பங்கிலாப பெறுகைகள் | | | 211,213 | – |
| அலுவலர் மற்றும் வெளிக்கள அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் | | | (214,296) | – |
| அலுவலர் மற்றும் வெளிக்கள அலுவலர்களிடமிருந்து மீள் அறவிடப்பட்ட கடன்கள் | | | 460,281 | – |
| **நிதி முதலீட்டு நடவடிக்கைகளின் மூலமான தேறிய காசு** | | | 219,361 | – |
| **நிதி நடவடிக்கைகளில் இருந்து காசுப்பாய்ச்சல்** | | | | |
| வேறுபடுத்தல் மீது இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற காசு | | | 683,461 | – |
| பங்கு வழங்கல் மூலம் கிடைத்த வருமானம் | | | – | 400,000 |
| **நிதி நடவடிக்கைகளில் மூலமான தேறிய காசு** | | | 683,461 | 400,000 |
| காசும் காசுக்கு சமமானவைகளின் செலாவணி வீத மாற்றங்களின் விளைவு | | | (419,807) | – |
| காசும் காசுக்கு சமமானவைகளில் தேறிய அதிகரிப்பு | | | 2,943,943 | 413,001 |
| ஆண்டின் ஆரம்பத்தில் காசும் காசுக்கு சமமானவைகளும் | | | 579,400 | 166,399 |
| **ஆண்டின் இறுதியில் காசும் காசுக்கு சமமானவைகளும்** | B | | 3,523,343 | 579,400 |

அடைப்புக்குறிக்குள் உள்ள தொகைகள் கழித்தல்களைக் குறிக்கின்றன.

பக்கம் 116 முதல் 165 வரையிலான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்நிதி அறிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

கொழும்பு

28 ஏப்ரல் 2025

குறிப்பு அ – செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப்பாய்ச்சலுடன் செயற்பாட்டு இலாபத்தின் இணக்கம்

| டிசம்பர் 31 அன்று முடிவடைந்த ஆண்டிற்கானது | **2024**<br>**ரூ. '000** | 2023<br>ரூ. '000 |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து ஈட்டப்பட் காசு** | | |
| **வரிக்கு முன்னர் இலாபம்** | 3,573,323 | 19,684 |
| **சீராக்கங்கள்:** | | |
| தேய்மானங்கள் மற்றும் பெறுமதிக்குறைவு | 129,860 | – |
| சொத்து, பொறி மற்றும் உபகரணங்களை அகற்றுவதன் மூலம் கிடைத்த இலாபம் | (4,173) | – |
| தேறியச சீர்மதிப்புப் பெறுமதி வருவாய்கள் | (881,008) | – |
| ஊழியர் நலன்களுக்கான ஏற்பாடுகள் | 179,579 | – |
| வெளிநாட்டுச் செலாவணி பரிவர்த்தனையினால் ஏற்பட்ட இழப்புகள் | 419,807 | – |
| வட்டி பெறுகைகள் | (2,551,522) | – |
| பங்கிலாபப் பெறுகைகள் | (211,213) | – |
| கடன்தீர்வு வழங்கப்பட்ட அலுவலர் மற்றும் வெளிக்கள அலுவலர் செலவு | 145,674 | – |
| **செயற்பாட்டு மூலதன மாற்றங்களுக்கு முந்திய இலாபம்** | 800,327 | 19,684 |
| **செயற்பாட்டு சொத்துக்களின் தேறிய மாற்றம்** | | |
| கிடைக்கப்பெறத்தக்கவைகளில் (அதிகரிப்பு)/குறைவு | 123,239 | (1,198) |
| **செயற்பாட்டு பொறுப்புக்களின் தேறிய மாற்றம்** | | |
| ஈட்டப்படாத கட்டுப்பணத்தின் (அதிகரிப்பு)/குறைவு | 11,406 | – |
| ஊரிமைக்கோரல் ஏற்பாடுகளின் (அதிகரிப்பு)/குறைவு | (200,147) | – |
| செலுத்தப்பட வேண்டியவைகளின் (அதிகரிப்பு)/குறைவு | 2,183,123 | (5,092) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளின் மூலமான தேறிய காசு** | 2,917,948 | 13,394 |
| **குறிப்பு ஆ – ஆண்டிறுதியில் காசு மற்றும் காசும்** | | |
| **காசுக்கு சமமானவைகளின் பகுப்பாய்வு** | | |
| கையில் மற்றும் வங்கியிலுள்ள காசு | 1,189,148 | – |
| குறுகிய கால முதலீடுகள் | 2,602,341 | – |
| வங்கி மேலதிகப்பற்று | (268,146) | – |
| **காசும் காசுக்கு சமமானவைகளும்** | 3,523,343 | – |

அடைப்புக்குறிக்குள் உள்ள தொகைகள் கழித்தல்களைக் குறிக்கின்றன.

பக்கம் 116 முதல் 165 வரையிலான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்நிதி அறிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

கொழும்பு

2025 ஏப்ரல் 28

# நிதி அறிக்கைகள் மீதான குறிப்புகள்

## 1. அறிக்கையிடுகின்ற நிறுவனம்

### 1.1 நிறுவன பற்றிய தகவல்கள்

ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோபரேஷன் ஜெனரல் லிமிடட் ("கம்பனி/ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட்"), பட்டியலிடப்படாத இலங்கையில் வாழிடத்தைக் கொண்ட பொது வரையறுக்கப்பட்ட நிறுவனமாகும். குழுமம்/நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் கொழும்பு மாவட்டத்தில் அமைந்துள்ளது மற்றும் முக்கிய வணிக அமைவிடம் "ரக்ஷன மந்திரய", இல.21, வோக்ஷோல் வீதி, கொழும்பு 02 இல் அமைந்துள்ளது.

காப்புறுதித் தொழிலை மேற்கொள்வதற்கான உரிமம் 2024 பெப்ரவரி 01 ஆம் முதல் பிரிவிடல் காரணமாக வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கான உரிமம் இரத்துச் செய்யப்பட்டடு ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோபரேஷன் ஜெனரல் லிமிடட் நிறுவனத்திற்கு பொதுக் காப்புறுதி வணிகத்தை மேற்கொள்ள இலங்கைக் காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு காப்புறுதி உரிமம் வழங்கியுள்ளது (குறிப்பு 39 – வேறுபடுத்தல் ஐப் பார்க்க).

### 1.2 தாய்க் கம்பனியும் இறுதித் தாய்க் கம்பனியும்

கம்பனியின் உடனடி மற்றும் உடனடி தாய்க்கம்பனி இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட இலங்கை காப்பறுதிக் கூட்டுத்தாபனமாகும். சாதாரண பங்குகளின் 100% தாய்க்கம்பனியினால் உரிமை கொள்ளப்படுகின்றன.

### 1.3 முதன்மை செயற்பாடுகள் மற்றும் தொழிற்பாடுகளின் தன்மை

கம்பனியின் முதன்மைச் செயற்பாடு, தனிப்பட்டவர்களுக்கும் கூட்டுநிறுவனங்களுக்கும் அனைத்து வகையான பொதுக்காப்புறுதி வகுப்புகளையும் பொறுப்பேற்றலும் கொண்டுநடாத்துதலுமாகும்.

### 1.4 நிதியியல் கூற்றுகளுக்கான பொறுப்புடமை

நிதியியல் கூற்றுகளை தாயரிப்பதும் நியாயமாக எடுத்துரைப்பதும் பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும்.

### 1.5 நிதியியல் கூற்றுகளுக்கான அனுமதி

2024 டிசம்பர் 31 அன்று முடிவுற்ற ஆண்டுக்கான நிதியியல் கூற்றுகள் 2024 ஏப்ரல் 28 அன்று ளெியிடப்படுவதற்கு சபையினால் அனுமதிக்கப்பட்டு அதிகாரமளிக்கப்பட்டது.

## 2. தயாரித்தலுக்கான அடிப்படை

### 2.1 இணக்கக் கூற்று

இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட இலங்கை கணக்கீட்டு தரநியமங்கள் (இலங்கை கணக்கீட்டுத் தரநியமங்கள்ள/இலங்கை நிதி அறிக்கையிடல் தரநியமங்கள்ள), 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் மற்றும் 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதி தொழிற்துறை ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் தேவைப்பாடுகள் ஆகியவற்றின் படி நிதியியல் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 2.2 அளவீட்டின் அடிப்படை

கம்பனியின் நிதியியல் கூற்றுகள், மாற்றுவழி அடிப்படையொன்றின் மீது அளவிடப்பட்டுள்ள பினவரும் முக்கிய விடயங்களுக்கானவை தவிர, வரலாற்றுக் கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

| விடயம் | அளவீட்டு அடிப்படை | குறிப்பு | பக்கம் |
|---|---|---|---|
| **நிதியியல் சொத்துகள்** | | | |
| இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் பெறுதியல்ல நிதியியல் சொத்துகள் | சீர்மதிப்புப் பெறுமதி | 8 | 125 |
| விற்பனைக்கு கிடைக்கப்பெறுகின்ற நிதியியல் சொத்துகள் | சீர்மதிப்புப் பெறுமதி | 8 | 125 |
| **நிதியியல்லாச் சொத்துகள்/பொறுப்புகள்** | | | |
| காப்புறுதி ஒப்பந்தப் பொறுப்புகள் | கணிப்பீட்டு ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட பெறுமதிகள் | 19 | 133 |
| வரையறைசெய்யப்பட்ட நலக் கடப்பாடுகள் | வரையறைசெய்யப்பட்ட நலக் கடப்பாடுகளின் தற்போதய பெறுமதியாக கணிப்பீட்டு ரீதியாக நிர்ணயிக்கப்பட்டு இனங்காணப்பட்வை | 20 | 135 |
| பதிவேட்டுப் பொருட்கள் மீட்கப்பட்ட பொருள் கையிருப்பு | சீர்மதிப்புப் பெறுமதி | 11 | 131 |
| மோட்டார் வாகனங்கள் | சீர்மதிப்புப் பெறுமதி | 6 | 122 |

இகநி 1 – நிதியியல் கூற்றுகளை எடுத்துரைத்தல் இன் கீழ் அனுமதிக்கப்பட்டவாறு திரவத்தன்மை அடிப்படையிலான வடிவத்தைப் பயன்படுத்தி கம்பனி அதன் நிதியியல் நிலைக் கூற்றை எடுத்துரைக்கின்றது.

### 2.3 நிதியியல் காலப்பகுதி

நிதியியல் கூற்றுகள் 2024 டிசம்பர் 31 அன்று முடிவடைகின்ற நிதி ஆண்டு தொடர்பில் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 2.4 தொழிற்பாட்டு மற்றும் எடுத்துரைத்தல் நாணயம்

நிதிக் கூற்றுகள் இலங்கை ரூபாவில் வழங்கப்பட்டுள்ளன, இது குழுமத்தின் செயற்பாட்டு நாணயமாகும். விசேடமாகக் குறிப்பிடப்படாலன்றி சகல தொகைகளும் கிட்டிய ஆயிரத்திற்கு முழுமையாக்கப்பட்டுள்ளன.

### 2.5 மதிப்பீடுகள் மற்றும் தீர்ப்புகளின் பயன்பாடு

இநிஅறி மற்றும் இகநி நியமங்களுக்கமைவாக கம்பனியின் நிதியியல் கூற்றுகளை தயாரித்தலானது இந்நிதிக் கூற்றுகளைத் தயாரிப்பதில், நிர்வாகம் குழுவின் கணக்கீட்டு கொள்கைகளின் பயன்பாட்டையும், சொத்துக்கள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவுகளின் அறிக்கையிடப்பட்ட தொகைகளையும் பாதிக்கும் தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்களைச் வேண்டுகின்றது. உண்மையான முடிவுகள் இந்த மதிப்பீடுகளிலிருந்து வேறுபடலாம். தீர்ப்புகள் மற்றும் மதிப்பீடுகளில் இருந்து தோன்றுகின்ற மதிப்பீட்டு நிச்சயமின்மைகள் தொடர்ந்து மீளாய்வு செய்யப்படுகின்றன. கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள் ஏதுமிருப்பின் வருங்காலத்தில் இனங்காணப்படுகின்றன.

நிதிக் கூற்றுகளில் அங்கீகரிக்கப்பட்ட தொகைகளில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் அனுமானம் மற்றும் மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மை பற்றிய தகவல்கள் பின்வரும் குறிப்புகளின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளன.

## 2. தயாரித்தலுக்கான அடிப்படை (தொடர்ச்சி)

**நாட்டின் தற்போதைய பொருளாதார நிலையும் மதிப்பீட்டு நிச்சயமின்மையும்**

செலவு பிரதிபலிப்பு பயன்பாட்டுச் சேவை விலையிடலை பின்பற்றுதல், முன்மதிமிக்க நாணய மற்றும் இறைகொள்கை, உள்நாட்டு மற்றும் இருதரப்பு படுகடன் மறுசீரமைப்பு போன்ற தொடர்ச்சியான நடவடிக்கைகளின் விளைவாக இலங்கையின் பொருளாதாரம் 2024 இல் எதிர்பார்த்ததையும் விட வரைவான மீட்சியை காண்பித்தது. 2024 இல் வட்டி வீதங்கள், பண வீக்கம் மற்றும் உள்நாட்டு நாணய பெறுமதியேற்றம் போன்ற முக்கிய பொருளாதார குறிகாட்டிகள் நிலைநிறுத்தப்பட்டமை மூலம் இந்நிதியியல் கூற்றுகளை தயாரிக்கின்ற போது ஆக்கப்பட்ட முக்கிய கணக்கீட்டு தீர்வுகள், மதிப்பீடுகள் அனுமானங்கள் என்பவற்றில் முக்கிய நிச்சயமின்மைகள் எதுவும் காணப்படவில்லை.

நிதியியல் கூற்றுகளில் இனங்காணப்பட்ட தொகைகள் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தை கொண்டிருக்கும் அனுமானங்கள் மற்றும் மதிப்பீட்டு நிச்சயமின்மை பற்றிய தகவல்கள் பின்வரும் குறிப்புகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன:

| | குறிப்பு | பக்கம் |
|---|---|---|
| **அனுமானம்** | | |
| வரையறைசெய்யப்பட்ட நலக் கடப்பாடுகளின் அளவீடு: முக்கிய கணிப்பீட்டு அனுமானங்கள் | 20 | 135 |
| நிதியல்லாச் சொத்துக்கள் மற்றும் நிதியியல் சொத்துக்கள் என்பவற்றின் சேதஇழப்பிற்கான ஏற்பாடு: ஏதுவாகின்ற முக்கிய அனுமானங்கள் | 8 | 125 |
| உறப்பட்ட ஆனால் அறிக்கையிடப்படாத/ உறப்பட்ட ஆனால் போதியளவு அறிக்கையிடப்படாத மற்றும் ஈட்டப்படாத கட்டுப்பண ஒதுக்கு உள்ளடங்கலாக ஆயுள் அல்லாத காப்புறுதி ஏற்பாட்டு அளவுகள் | 19 | 133 |
| பிற்போடப்பட்ட கையகப்படுத்தல் செலவு அளவீடு | 12 | 132 |
| இலாபம் அல்லது நட்டம் ஊடாக கோரப்படாத சாதனங்களின் அல்லது முதலீடுகளின் சீர்மதிப்பு பெறுமதி அளவீடு | 8 | 125 |
| குறிப்பிடத்தக்க அவதானிக்கப்படாத உள்ளீடுகளுடன் கூடிய மோட்டார் வாகனங்களின் சீர்மதிப்பு பெறுமதியை நிர்ணயித்தல் | 6 | 122 |
| அருவச் சொத்துகளின் சேதஇழப்பு | 5 | 120 |
| காப்புறுதி மற்றும் மீள்காப்புறுதி ஒப்பந்தங்களை அளவிடுதல்: முக்கிய அனுமானங்கள் | 19 & 25 | 133 & 138 |
| பொறுப்பு போதுமை பரிசோதனை | 19 | 133 |
| **தீர்ப்புகள்** | | |
| காப்புறுதி மீள் காப்புறுதி ஒப்பந்தங்களின் மீள் அளவீடு: இடர்நேர்வை மதிப்பிடுவதற்கான நுட்பங்களை மதிப்பிடுதல் | 19 & 25 | 133 & 138 |
| நிதியியல் சொத்துக்களின் வகைப்படுத்தல் | 8 | 125 |

### 2.6 முக்கியத்துவமும் ஒன்று சேர்த்தலும்

ஒவ்வொரு ஒரேவகையான விடயங்களினதும் முக்கிய வகுப்பு நிதியியல் கூற்றுக்களில் வெவ்வேறாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. ஒரே வகையை சாரா தன்மையுடைய விடயங்கள் அல்லது தொழிற்பாடு இகநி 1 - “நிதியியல் கூற்றுகளை எடுத்துரைத்தல்” இன் கீழ் அனுமதிக்கப்பட்டவாறு அவை முக்கியமற்றவையாக இருந்தாலன்றி வெவ்வேறாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

### 2.7 ஒப்பீட்டு தகவல்கள்

சிறப்பாக எடுத்துரைப்பதற்கும் தற்போதைய ஆண்டுடன் உள்ளவற்றுடன் ஒப்பிடத்தக்கதாகவிருப்பதற்கும் தொடர்புடையவிடத்து ஒப்பீட்டுத் தொகைகள் மீள்வகைப்படுத்தப்பட்டுள்ளன.

கம்பனி இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் உரிமம் வழங்கப்பட்டதன் பின்னர் 2024 பெப்ரவரி 01 தொடக்கம் காப்புறுதி தொழில் செயற்பாடுகளை தொடங்கியது.

முன்னைய ஆண்டில் ஏதேனும் காப்புறுதி தொடர்புபட்ட செயற்பாடுகளை கம்பனி கொண்டு நடாத்தவில்லை.

### 2.8 தொடர்ந்தியங்குகின்ற எண்ணக்கரு

குழுமம்/நிறுவனம் எதிர்காலத்தில் வணிகத்தில் தொடர்வதற்கு தேவையான வளங்கள் உள்ளன என்பதை திருப்திப்படுத்தி, அதன் தொடர்ச்சியான நிறுவனமாகத் தொடரும் திறனை பணிப்பாளர்கள் மதிப்பீடு செய்துள்ளனர். மேலும், குழுமம்/நிறுவனம் தொடர்ந்தியங்கும் நிறுவனமாகத் தொடரும் நிச்சயமற்ற திறனைப் பற்றி பணிப்பாளர்கள் அறிந்திருக்கவில்லை.

தற்போதைய உலகளாவிய மற்றும் உள்நாட்டு பொருளாதார நிலைமைகளின் கீழ் வணிகத்தைத் தொடர நிறுவனத்தால் செயற்படுத்தப்படும் இலாபம், வருவாய் நீரோட்டங்கள், பணி மூலதன முகாமை, மூலதனச் செலவு, பண இருப்பு மற்றும் செலவு முகாமை முயற்சிகள் போன்ற பல்வேறு காரணிகளைக் கருத்தில் கொண்டு, நிறுவனம் அதன் வணிகங்களின் மீள்தன்மையை மதிப்பீடு செய்து வருகிறது. கிடைக்கக்கூடிய தகவல்களின் அடிப்படையில் பகுப்பாய்வு மற்றும் எதிர்காலக் கண்ணோட்டத்தின் அடிப்படையில், குழுமம் தொடர்ந்தியங்கும் நிறுவனமாகத் தொடரும் திறனைப் பற்றி குறிப்பிடத்தக்க சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு குறிப்பிடத்தக்க நிச்சயமற்ற தன்மைகளையும் பணிப்பாளர்கள் அறிந்திருக்கவில்லை.

ஆகையினால், நிதியியல் கூற்றுகள் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவின் அடிப்படையில் தொடர்ந்தும் தயாரிக்கப்பட்டுள்ளன.

## 3. முக்கிய கணக்கீட்டு கொள்கை தகவல்கள்

இந்நிதியியல் கூற்றுகளில் எடுத்துரைக்கப்பட்டுள்ள அனைத்து காலப்பகுதிகளுக்கும் கம்பனி பின்வரும் கணக்கீட்டு ஒத்திசைவாக பிரயோகித்துள்ளது. கணக்கீட்டு கொள்கைகள் உரிய குறிப்புகளுடன் சேர்த்து எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

| முக்கிய கணக்கீட்டு கொள்கைகள் | குறிப்பு | பக்கம் |
|---|---|---|
| **சொத்துக்களையும் பொறுப்புகளையும் இனங்காணல்** | | |
| அருவச் சொத்துக்கள் | 5 | 120 |
| ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் | 6 | 122 |
| பிற்போடப்பட்ட வரிசொத்துக்களும் பொறுப்புகளும் | 7 | 124 |
| நிதியியல் முதலீடுகள் | 8 | 125 |
| மீள் காப்புறுதி கிடைக்கப்பெறத்தக்கவை | 9 | 130 |
| கட்டுப்பணம் கிடைக்கப்பெறத்தக்கவை | 10 | 131 |
| ஏனைய சொத்துக்கள் | 11 | 131 |
| தேறிய பிற்போடப்பட்ட செலவுகள்-காப்புறுதி ஒப்பந்தம் | 12 | 132 |
| காசும் காசுக்கு சமமானவையும் | 13 | 132 |
| குறிப்பிடப்பட்ட மூலதனம் | 14 | 132 |
| காப்புறுதி ஒப்பந்த பொறுப்புகள் | 19 | 133 |
| ஓய்வுநல கடப்பாடுகள் | 20 | 135 |
| மீள்காப்புறுதி செலுத்தத்தக்கவை | 21 | 137 |
| ஏனைய பொறுப்புகள் | 23 | 137 |
| வங்கி மேலதிக பற்று | 24 | 137 |
| **வருமானம் மற்றும் செலவுகளை இனங்காணல்** | | |
| வருவாய் | 25 | 138 |
| மொத்த பதியப்பட்ட கட்டுப்பணம் | 26 | 138 |
| தேறிய உழைக்கப்பட்ட கட்டுப்பணம் | 27 | 138 |
| முதலீட்டு வருமானம் | 28 | 139 |
| நிகர தேறிய/தேறாத இலாபங்கள்/(நட்டங்கள்) | 29 | 140 |
| ஏனைய வருமானம் | 30 | 140 |
| தேறிய நன்மைகளும் கோரிக்கைளும் | 31 | 140 |
| காப்பீடு மற்றும் தேறிய கையகப்படுத்தல் செலவுகள் | 32 | 141 |
| வருமான வரிச் செலவுகள் | 34 | 142 |
| **பங்குடமையாளர் தொடர்புபட்டவை** | | |
| பங்கொன்றிற்கான அடிப்படை மற்றும் குன்றிய உழைப்புகள் | 35 | 143 |
| பங்கொன்றிற்கான பங்கிலாபங்கள் | 36 | 144 |
| **பொதுவானவை** | | |
| தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தல்கள் | 40 | 162 |
| அறிக்கையிடும் திகதிக்கு பிந்திய நிகழ்வுகள் | 41 | 165 |
| ஏற்பாடுகளும் எதிர்பாராதவைகளும் | 42 | 165 |

### 3.1 தனிப்பட்ட குறிப்புகளில் உள்ளடக்கப்படாத ஏனைய முக்கிய கணக்கீட்டு கொள்கைகள்

கம்பனியால் தொடர்ச்சியாக பிரயோகிக்கப்பட்டு வருகின்ற பின்வரும் கணக்கீட்டு கொள்கைகள் முக்கியமானவை ஆனாலும் ஏதேனும் வேறு பிரிவில் உள்ளடக்கப்படாதவையென கருதப்படுகின்றன.

### 3.2 வெளிநாட்டு நாணய பரிவர்த்தனைகள்

வெளிநாட்டு நாணயங்களில் செய்யப்படும் பரிவர்த்தனைகள் பரிவர்த்தனை தேதிகளில் மாற்று விகிதங்களில் குழுமத்தின்/நிறுவனத்தின் செயல்பாட்டு நாணயங்களாக மாற்றப்படுகின்றன. வெளிநாட்டு நாணயங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பணச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் அறிக்கையிடல் தேதியில் மாற்றல் வீதத்தில் செயல்பாட்டு நாணயமாக மாற்றப்படுகின்றன.

வெளிநாட்டு நாணயங்களில் நியாயப் பெறுமதியில் அளவிடப்படும் பணச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் நியாய பெறுமதி தீர்மானிக்கப்பட்டபோது மாற்று வீதத்தில் செயல்பாட்டு நாணயமாக மாற்றப்படுகின்றன. வெளிநாட்டு நாணயத்தில் வரலாற்று செலவின் அடிப்படையில் அளவிடப்படும் பணச் சொத்துக்கள் அல்லாத பொருட்கள் பரிவர்த்தனை திகதியில் மாற்றல் விகிதத்தில் மாற்றப்படுகின்றன.

வெளிநாட்டு நாணய வேறுபாடுகள் பொதுவாக இலாபம் அல்லது நட்டத்தில் பதியப்படுகின்றன.

### 3.3 காப்புறுதி ஒப்பந்தங்கள்

#### தயாரிப்பு வகைப்பாடு

இலங்கை நிதி அறிக்கையிடல் தரநியமங்கள் 4 இன் படி, காப்பீட்டாளர்களால் எழுதப்பட்ட ஒப்பந்தங்கள், காப்பீட்டு இடரின் அளவைப் பொறுத்து “காப்பீட்டு ஒப்பந்தங்கள்” அல்லது “முதலீட்டு ஒப்பந்தங்கள்” என வகைப்படுத்தப்பட வேண்டும்.

காப்பீட்டு ஒப்பந்தங்கள் என்பது, ஒரு குறிப்பிட்ட நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வு (காப்பீடு செய்யப்பட்ட நிகழ்வு) காப்புறுதி ஒப்பந்தம் பெறுநர்களை மோசமாகப் பாதித்தால், காப்புறுதி ஒப்பந்தம் பெறுநர்களுக்கு இழப்பீடு வழங்க ஒப்புக்கொள்வதன் மூலம், மற்றொரு தரப்பினரிடமிருந்து (காப்புறுதி ஒப்பந்தம் பெறுநர்கள்) குறிப்பிடத்தக்க காப்பீட்டு இடருடன் நிறுவனம் (காப்புறுதிவழங்குநர்) ஏற்றுக்கொண்ட ஒப்பந்தங்கள் ஆகும். ஒரு பொதுவான வழிகாட்டுதலாக, காப்பீட்டு நிகழ்வு நடக்கவில்லை என்றால் செலுத்த வேண்டிய அனுகூலங்களுடன் செலுத்தப்பட்ட அனுகூலங்களை ஒப்பிடுவதன் மூலம், நிறுவனம் தனக்கு குறிப்பிடத்தக்க காப்பீட்டு இடர் உள்ளதா என்பதை தீர்மானிக்கிறது. காப்பீட்டு ஒப்பந்தங்கள் நிதி இடரையும் மாற்றலாம்.

ஒரு ஒப்பந்தம் காப்புறுதி ஒப்பந்தமாக வகைப்படுத்தப்பட்டவுடன், இந்த காலகட்டத்தில் காப்பீட்டு இடர் கணிசமாகக் குறைந்தாலும், அனைத்து உரிமைகளும் கடமைகளும் நீக்கப்பட்டாலோ அல்லது காலாவதியானாலோ தவிர, அது அதன் வாழ்நாள் முழுவதும் காப்பீட்டு ஒப்பந்தமாகவே இருக்கும்.

#### காசுப்பாய்ச்சல் கூற்று

காசுப்பாய்ச்சல் கூற்று இலங்கைக் கணக்கீட்டு நியமம் 7 “காசுப்பாய்ச்சல் கூற்று” இற்கமைவாக காசுப்பாய்ச்சல் தயாரிக்கம் நேரடி முறையைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளதுள்ளது.

காசுப்பாய்ச்சல் நோக்கங்களுக்காக, காசும் காசுக்கு சமமானவைகளும் வங்கி மேலதிகப் பற்றுகளை கழித்து எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

## 4. வழங்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் ஆனால் அறிக்கையிடும் திகதியிலுள்ளவாறு இன்னும் செயற்பாட்டில்லாதவை

### 4.1 2024 ஜனவரி 01 முதல் ஏற்றுக்கொள்ளப்பட்ட புதிய தரநியங்கள், விளக்கங்கள் மற்றும் திருத்தங்கள்

நிறுவனம் முதல் முறையாக சில தரநிலைகள் மற்றும் திருத்தங்களைப் பயன்படுத்தியது, அவை 01 ஜனவரி 2024 அன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் வருடாந்த காலத்திற்கு அமலில் இருக்கும்.

| கணக்கியல் தரநியமம் | விபரம் |
|---|---|
| LKAS 1 நிதியியல் கூற்றுகளை எடுத்துரைத்தலுக்கான திருத்தங்கள் | நடப்பு, நடப்பற்ற, அல்லது ஒப்பந்தங்களுடனான நடப்பற்ற, பொறுப்புகளாக பொறுப்புகளின் வகைப்படுத்தல் |
| SLFRS 16 குத்தகைக்கான திருத்தங்கள் | விற்பனை மற்றும் செய்து மீண்டும் குத்தகைக்குப் பெறல் என்பவற்றிலுள்ள குத்தகைப் பொறுப்பு |
| LKAS 7 காசுப்பாயச்சல் கூற்று மற்றும் SLFRS 7 நிதியியல் சாதனங்கள்: வெளிப்படுத்தல் இற்கான திருத்தங்கள் | வழங்குநர் நிதி ஏற்பாடுகள் |
| LKAS 7 இற்கான திருத்தங்கள் | சர்வதேச வரிவிதிப்பு மறுசீரமைப்பு – தூண் 2 மாதிரி |

மேலே உள்ள விதி திருத்தங்கள் நிறுவனத்தின் நிதியியல் செயலாற்றத்தையும் மற்றும் நிதி நிலையையும் முக்கியமாகப் பாதிக்காது.

### 4.2 தாக்கத்தைக் கொண்டிருக்ககூடிய வெளியிடப்பட்ட ஆனால் இன்னும் நடைமுறைக்கு வராத தரநிலைகள்

இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் பின்வரும் புதிய இலங்கை கணக்கியல் தரநியமங்களை வெளியிட்டுள்ளது, அவை 01 ஜனவரி 2025 அன்று அல்லது அதற்குப் பின்னர் அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் நிதிக் காலங்களுக்குப் பொருந்தும்.

இந் நிதயியல் கூற்றுகள் வெளியிடப்பட்ட திகதியில வழங்கப்பட்ட ஆனால் இன்னும் நடைமுறைக்கு வராத, புதிய மற்றும் திருத்தப்பட்ட தரநியமங்கள் கீழே வெளிப்படுதப்பட்டுள்ளன:

| கணக்கியல் தரநிலை | விபரம் | அமலுக்கு வரும் திகதி |
|---|---|---|
| LKAS 21 இற்கான திருத்தங்கள் – வெளிநாட்டு செலாவணி வீதங்களில் மாற்றங்களின் விளைவுகள் | பரிமாற்றம் செய்ய முடியாத நிலை | 2025 ஜனவரி 01 |
| SLFRS S1 – நிலைபெறுதன்மை தொடர்பான நிதித் தகவல்களை வெளியிடுவதற்கான பொதுவான தேவைகள் | அதன் நிலைபெறுதன்மை தொடர்பான தகவல்களை வெளியிட பொது நோக்கத்திற்கான நிதி அறிக்கைகளைப் பயன்படுத்துபவர்களுக்கு முடிவுகளை எடுப்பதில் பயனுள்ளதாக இருக்கும் இடர்கள் மற்றும் வாய்ப்புகள் | 2025 ஜனவரி 01 |
| SLFRS S2 – காலநிலை தொடர்பான வெளிப்படுத்தல்கள் | அதன் காலநிலை தொடர்பான இடர்கள் பற்றிய தகவல்களை வெளியிடுதல் மற்றும் பொது நோக்கத்திற்கான பயனர்களுக்கு பயனுள்ள வாய்ப்புகள் முடிவுகளை எடுப்பதில் நிதி | 2025 ஜனவரி 01 |
| SLFRS 17 – காப்புறுதி ஒப்பந்தங்கள் | தற்போதைய நிலையில் காப்புறுதி ஒப்பந்தப் பொறுப்பை அளவிடவும் பூர்த்தி மதிப்பை வழங்குதல் மற்றும் மிகவும் சீரான அளவீட்டை வழங்குதல் அனைத்து காப்புறுதி ஒப்பந்தங்களுக்கும் விளக்கக்காட்சி அணுகுமுறை | 2026 ஜனவரி 01 |
| SLFRS 9 மற்றும் SLFRS 7 இல் திருத்தங்கள் | நிதிக் கருவிகளின் வகைப்பாடு மற்றும் அளவீடு | 2026 ஜனவரி 01 |

#### இநிஅறி 09 இலிருந்து தற்காலிக விதிவிலக்கு

இநிஅறி 09 – “நிதிக் கருவிகள்”

இத் நியமம் இகநி 39 இல் உள்ள தற்போதைய வழிகாட்டுதலை மாற்றுகிறது – “நிதி கருவிகள்: இனங்காணல் மற்றும் அளவீடு” இநிஅறி 9 நிதி கருவிகளின் வகைப்பாடு மற்றும் அளவீடு குறித்த திருத்தப்பட்ட வழிகாட்டுதல், நிதி சொத்துக்கள் மீதான குறைபாட்டைக் கணக்கிடுவதற்கான புதிய எதிர்பார்க்கப்படும் கடன் நட்டம் மாதிரி மற்றும் புதிய பொது காப்பீட்டு கணக்கீடு தேவைகள் ஆகியவற்றை உள்ளடக்கியது. இநிஅறி 9, 01 ஜனவரி 2018 அன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் வருடாந்த அறிக்கையிடல் காலங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும், முன்கூட்டிய ஏற்றுக்கொள்ளல் அனுமதிக்கப்படுகிறது.

இந்நிறுவனம் முக்கியமாக இநிஅறி 4 “காப்புறுதி ஒப்பந்தங்களில்” முன்மொழியப்பட்ட திருத்தங்களை அடிப்படையாகக் கொண்டது, இதன் மூலம் காப்புறுதி ஒப்பந்தங்களை வழங்குவதை முதன்மையாகக் கொண்ட நிறுவனங்கள் 2022 இல் தொடங்கப்பட்ட திருத்தப்பட்ட இநிஅறி 4ஐ ஏற்றுக்கொள்ளும் வரை இநிஅறி 9 இன் முழு பயன்பாட்டையும் ஒத்திவைக்க அனுமதிக்கப்படுகின்றன. 01 சனவரி 2026 முதல் அமலுக்கு வரும் திகதியான இநிஅறி 17 – “காப்புறுதி ஒப்பந்தம்” உலகளாவிய ஒத்திவைப்பின் விளைவாக, தற்காலிக விலக்கு ஜனவரி 2026 வரை ஒத்திவைக்கப்படும் என்று நிறுவனம் எதிர்பார்க்கிறது.

ஒரு காப்புறுதி இநிஅறி 9 இலிருந்து தற்காலிக விலக்கைப் பெறலாம், பின்வரும் சந்தர்ப்பங்களில் மாத்திரம்:

(அ) இலாபம் அல்லது நட்டம் மூலம் நியாயமான மதிப்பில் நியமிக்கப்பட்ட நிதிப் பொறுப்புகள் மீதான ஆதாயங்கள் மற்றும் நட்டம்களை வழங்குவதற்கான தேவைகளைத் தவிர, இநிஅறி 9இன் வேறு எந்தப் பதிப்பையும் இது இதற்கு முன்பு பயன்படுத்தவில்லை.

(ஆ) அதன் செயற்பாடுகள் முக்கியமாக காப்புறுதிடன் தொடர்புடையவை, அதன் வருடாந்த அறிக்கையிடல் திகதி 01 ஏப்ரல் 2016 க்கு முந்தையதாகவோ அல்லது அதற்குப் பிந்தைய வருடாந்த அறிக்கையிடல் திகதியிலோ.

இநிஅறி 4 – காப்புறுதி ஒப்பந்தத்தில் செய்யப்பட்ட திருத்தங்களின்படி, ஒரு காப்புறுதியாளரின் செயல்பாடுகள் முக்கியமாக காப்புறுதிடன் தொடர்புடையவை, பின்வரும் சந்தர்ப்பங்களில் மாத்திரம்:

(அ) இந்த இநிஅறி – இன் எல்லைக்குள் உள்ள ஒப்பந்தங்களிலிருந்து எழும் அதன் பொறுப்புகளின் கொண்டுசெல்லும் தொகை, காப்புறுதி ஒப்பந்தங்களிலிருந்து பிரிக்கப்பட்ட எந்தவொரு வைப்புத்தொகை கூறுகள் அல்லது உட்பொதிக்கப்பட்ட பெறுதிகளையும் உள்ளடக்கியது, அதன் அனைத்து பொறுப்புகளின் மொத்த கொண்டுசெல்லும் தொகையுடன் ஒப்பிடும்போது குறிப்பிடத்தக்கதாகும் மற்றும்

(ஆ) அதன் அனைத்து பொறுப்புகளின் மொத்த சுமக்கும் தொகையுடன் ஒப்பிடும்போது காப்புறுதிடன் தொடர்புடைய அதன் பொறுப்புகளின் மொத்த சுமக்கும் தொகையின் சதவீதம்:

## 4. வழங்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் ஆனால் அறிக்கையிடும் திகதியிலுள்ளவாறு இன்னும் செயற்பாட்டில்லாதவை (தொடர்ச்சி)

### 4.2. தாக்கத்தைக் கொண்டிருக்கககூடிய வெளியிடப்பட்ட ஆனால் இன்னும் நடைமுறைக்கு வராத தரநிலைகள் (தொடர்ச்சி)

**இநிஅறி 09 இலிருந்து தற்காலிக விதிவிலக்கு (தொடர்ச்சி)**

I. 90 சதவீதத்திற்கும் அதிகமாக அல்லது

II. 90 சதவீதத்திற்கும் குறைவாகவோ அல்லது சமமாகவோ ஆனால் 80 சதவீதத்திற்கும் அதிகமாகவோ இருக்கும், மேலும் காப்புறுதி காப்புறுதிடன் தொடர்பில்லாத குறிப்பிடத்தக்க செயல்பாட்டில் ஈடுபடுவதில்லை.

இநிஅறி 9 இலிருந்து தற்காலிக விலக்கு, அதன் செயல்பாடுகள் பெரும்பாலும் காப்புறுதிடன் தொடர்புடையதா என்பதை அடுத்த வருடாந்த அறிக்கையிடல் திகதியில் மறு மதிப்பீடு செய்யப்படும், அந்த திகதியில் முடிவடைந்த வருடாந்த காலத்தில் நிறுவனத்தின் செயல்பாடுகளில் மாற்றம் ஏற்பட்டால் மாத்திரமே.

திருத்தப்பட்ட இநிஅறி 4ஐ ஏற்றுக்கொள்வதற்கு அருகில், இநிஅறி 9 இன் கீழ் அதன் முதலீடுகளின் பொருத்தமான வகைப்பாட்டை நிறுவனம் முடிவு செய்யும், எனவே இநிஅறி 9ஐ ஏற்றுக்கொள்வதால் அதன் நிதிநிலை அறிக்கைகளில் ஏற்படும் தாக்கத்தை முழுமையாக அளவிட முடியவில்லை. அறிக்கையிடல் திகதியின்படி. இருப்பினும், இது நிறுவனத்தின் மொத்த பங்குரிமைமூலதனத்தை கணிசமாக மாற்றாது என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**இநிஅறி 17 – காப்புறுதி ஒப்பந்தங்கள்**

இநிஅறி 17, 01 ஜனவரி 2026 அன்று அல்லது அதற்குப் பின்னர் தொடுங்கும் வருடாந்த காலத்திற்கு அமலில் இருக்கும். இநிஅறி 9 மற்றும் இநிஅறி 15 ஆகியவற்றை ஏற்றுக்கொள்வதோடு, முற்பணஏற்றுக்கொள்வதற்கும் அனுமதி உண்டு. இநிஅறி 17, இநிஅறி 4 காப்புறுதி ஒப்பந்தங்களை மாற்றுகிறது. நிறுவனம் அதன் கட்டாய அமுலுக்கு வரும் திகதியில் புதிய நியமத்தை ஏற்றுக்கொள்ள விரும்புகிறது.

இநிஅறி 4, காப்புறுதி நிறுவனங்கள் ஜனவரி 2005 இற்குக்கு முன்பு தங்கள் அதிகார வரம்பில் இருந்த காப்புறுதி சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளுக்கான கணக்கியலின் சட்டபூர்வ அடிப்படையைத் தொடர்ந்து பயன்படுத்த அனுமதித்தது. இநிஅறி 17 இதை அனைத்து காப்புறுதி ஒப்பந்தங்களுக்கும் ஒரு புதிய அளவீட்டு மாதிரியுடன் மாற்றுகிறது.

இநிஅறி 17 பொறுப்புகளை எதிர்கால காசுப்பாய்ச்சல்களின் தற்போதைய பெறுமதியாக இனங்காண தேவைப்படுத்தி, நிலைமைகளை பிரதிபலிக்கும் வகையில் ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் புதுப்பிக்கப்படும், மேலும் எந்த நாளுக்கும் சமமாகவும் எதிர்மாறாகவும் இருக்கும் ஒப்பந்த சேவை வரம்பு (CSM) – ஆரம்ப இனங்காணலில் எழும் ஒரு இலாபம், நட்டங்கள் நேரடியாக வருமானக் கூற்றில் இனங்காணப்படுகின்றன. அளவீட்டு நோக்கங்களுக்காக வேறாக முகாமைசெய்யப்படும் ஒப்பந்தங்களுக்காக மேலும் பிரிவுகளுடன் ஒப்பந்தங்கள் ஒரே மாதிரியான இடர், இலாப மற்றும் வழங்கும் ஆண்டு ஒப்பந்தங்களாக தொகுக்கப்படுகின்றன.

இநிஅறி 17 இன் கீழ் காப்புறுதி ஒப்பந்தங்களுக்கான இலாபமானது காலப்பகுதியில் பூட்கை உடமையாளர்களுக்கு வழங்கப்பட்ட சேவை மற்றும் பொருளாதாரமற்ற இடர் மற்றும் முதலீட்டு இலாபம் ஏனவற்றிலிருந்து விடுவித்தல் (ஒப்பந்த சேவை வரம்பிலிருந்து விடுவித்தல்) ஆகியவற்றின் இனங்காணல் மூலம் எடுத்துக்காட்டப்படுகின்றது.

காப்புறுதி ஒப்பந்தத்தின் காப்புறுதி காலத்தில் ஒப்பந்த சேவை வரம்பு இலாபமாக வெளியிடப்படுகிறது, இது ஒப்பந்ததாரருக்கு சேவைகளை வழங்குவதை பிரதிபலிக்கிறது. பங்கேற்கும் அம்சங்களுடன் கூடிய சில ஒப்பந்தங்களுக்கு (தொடர்புடைய முதலீடுகள் மற்றும் பிற அடிப்படை பொருட்களின் நியாயமான மதிப்பில் கணிசமான பங்கு ஒப்பந்ததாரர்களுக்கு செலுத்தப்படும் போது) ஒப்பந்த சேவை வரம்பு பங்குதாரர்களுக்கு மாறும் கட்டணத்தை பிரதிபலிக்கிறது. இவ் ஒப்பந்தங்களுக்கு, பொருளாதார அனுபவம் மற்றும் அனுமானங்களில் ஏற்படும் மாற்றங்களை பிரதிபலிக்கும் வகையில் ஒப்பந்த சேவை வரம்பு சரிசெய்யப்படுகிறது. மற்ற அனைத்து ஒப்பந்தங்களுக்கும் ஒப்பந்த சேவை வரம்பு பொருளாதாரம் அல்லாத அனுமானங்களுக்கு மட்டுமே சரிசெய்யப்படுகிறது.

இநிஅறி 17, காப்புறுதி வருவாயின் புதிய அளவீட்டை அறிமுகப்படுத்துகிறது, இது ஒப்பந்ததாரர்களுக்கு சேவை வழங்குவதை அடிப்படையாகக் கொண்டது மற்றும் ஒப்பந்தகளின் முதலீட்டு கூறுகளுடன் தொடர்புடைய எந்தவொரு பிரீமியங்களையும் விலக்குகிறது, இது தற்போது வருமான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள தற்போதைய கட்டுப்பணம் வருமானம் அளவீடுகளிலிருந்து கணிசமாக வேறுபடும். இநிஅறி 17 இற்கு மாற்றுவதற்கு, மாற்ற திகதியில் ஒப்பந்த சேவை வரம்பாகவிருக்கின்ற ஒத்திவைக்கப்பட்ட இலாபத்தின் அளவு, தீர்மானிக்கப்பட வேண்டும்.

இநிஅறி 17, தரநிலைகள் பின்னோக்கிப் பயன்படுத்தப்பட்டதைப் போல ஒப்பந்த சேவை வரம்பு கணக்கிடப்பட வேண்டும் என்று கோருகிறது. இது நடைமுறைக்கு மாறானதாக இருந்தால், ஒரு நிறுவனம் எளிமைப்படுத்தப்பட்ட பின்னோக்கி அணுகுமுறையைத் தேர்வு செய்ய வேண்டும் அல்லது ஒப்பந்த சேவை வரம்பைக் குறிப்பிடுவதன் மூலம் தீர்மானிக்க வேண்டும். மாற்றம் திகதியில் பொறுப்புகளின் நியாயமான பெறுமதி. ஒப்பந்த சேவை வரம்பை நிர்ணயிப்பதற்கான அணுகுமுறை, எதிர்கால அறிக்கையிடல் காலங்களில் பங்குதாரர்களின் பங்குரிமை மூலதனம் மற்றும் நடைமுறையில் உள்ள வியாபாரத்தின் இலாபத்தின் அளவு ஆகிய இரண்டிலும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும்.

புதிய நியமத்தின் தேவைகள் சிக்கலானவை மற்றும் காப்புறுதி ஒப்பந்தங்களுக்கான கணக்கீட்டில் ஒரு அடிப்படை மாற்றம் தேவைப்படுவதோடு குறிப்பிடத்தக்க தீர்ப்பு மற்றும் புதிய மதிப்பீட்டு நுட்பங்களைப் பயன்படுத்துவதும் தேவைப்படுவதால், நிதிநிலை கூற்றுக்கள் மற்றும் வெளிப்படுத்தல்களின் எடுத்துரைப்பில் இநிஅறி 17 கணிசமான மாற்றத்தைக் கொண்டிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்நியமங்களை செயற்படுத்துவதன் விளைவாக நிறுவனத்தின் கணக்கீட்டு கொள்கைகளில் தேவைப்படும் மாற்றங்கள் தற்போது நிச்சயமற்றவை, ஆனால் இம்மாற்றங்கள் மற்றவற்றுடன், இலாப இனங்காணல் நேரத்தை மாற்றும் என்று எதிர்பார்க்கலாம்.

இநிஅறி 17 செயற்படுத்தப்பட்டதன் மூலம், காப்புறுதி தொடர்பான சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளுக்கான நிழல் கணக்கீட்டு பொருந்தாது.

இநிஅறி 17ஐச் செயற்படுத்த நிறுவனம் ஒரு செயற்படுத்தல் திட்டத்தை மேற்கொண்டு வருகிறது. கணக்கீட்டு கொள்கைகளை அமைத்தல் மற்றும் பயன்பாட்டு முறைகளை உருவாக்குதல், பொருத்தமான செயல்முறைகள் மற்றும் கட்டுப்பாடுகளை நிறுவுதல், பொருத்தமான திகதியை ஆதாரமாகக் கொண்டு வருதல் மற்றும் உண்மை மதிப்பீடு மற்றும் நிதி அமைப்பு மாற்றங்களை செயற்படுத்துதல் ஆகியவற்றுக்கு இத் திட்டம் பொறுப்பாகும்.

## 5. அருவச் சொத்துக்கள்

கணக்கீட்டுக் கொள்கை

**இனங்காணலும் அளவீடும்**

இகநி- 38 அருவச் சொத்துகள் இன் பிரகாரம் சொத்துக்கு சாட்டத்தக்க எதிர்காலப் பொருளாதார நலன்கள் கம்பனிக்கு கிடைக்கும் அத்துடன் செலவு நம்பகமாக அளவிடப்படலாம் என்பது நிகழத்தக்கதாகவிருக்குமெனில் அருவச் சொத்தொன்றை கம்பனி இனங்காண்கின்றது.

**அளவீட்டு அடிப்படை – மென்பொருள்**

ஆரம்ப இனங்காணலுக்குப்பின்னர், மென்பொருள் சொத்துக்கள் திரட்டப்பட்ட மதிப்பு குறைத்தல் மற்றும் ஏதேனும் திரட்டப்பட்ட சேதஇழப்பு எனபவற்றைக் கழித்து செலவில் கொண்டுசெல்லப்படுகின்றன. மதிப்பு குறைத்தலானது சொத்தின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலத்தின் மீது முறையாக ஒதுக்கப்படுகிறது, இது அதன் பொருளாதார நன்மைகளின் நியாயமான பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்கிறது.

எதிர்கால பொருளாதார நன்மைகளை உருவாக்கும் வகையில் மென்பொருளை மேம்படுத்துவதையும் பயன்படுத்துவதையும் அதன் நோக்கத்தையும் திறனையும் எடுத்துக் காட்டுகின்றபோது உள்ளகரீதியாக அபிவிருத்திசெய்யப்பட்ட மென்பொருளுக்கான

## 5. அருவச் சொத்துக்கள் (தொடர்ச்சி)

செலவினங்களை நிறுவனம் ஒரு சொத்தாக இனங்காண்கிறது. மேலும், அபிவிருத்தியை நிறைவுசெய்வதற்கான செலவுகள் நம்பத்தகுந்த முறையில் அளவிடக்கூடியதாக இருக்க வேண்டும்.

உள்ளகரீதியாக அபிவிருத்திசெய்யப்பட்ட மென்பொருளின் மூலதனமாக்ப்பட்ட செலவுகள், அபிவிருத்திக் கட்டத்தில் ஏற்படும் அனைத்து நேரடியாகக் உறப்படும் செலவுகளையும், பொருந்தக்கூடிய இடங்களில் மூலதனமாக்ப்பட்ட கடன் செலவுகளையும் உள்ளடக்கும். இச்செலவுகள் மென்பொருளின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலத்தின் மீது மதிப்பிழப்பு செய்யப்படுகின்றன. உள்ளகரீதியாக உருவாக்கப்பட்ட மென்பொருள் மூலதனமாக்கப்பட்ட செலவு, திரட்டப்பட்ட மதிப்பிழப்புச் மற்றும் ஏதேனும் திரட்டப்பட்ட சேதஇழப்புகளைக் கழித்து குறிப்பிடப்பட்டுள்ளது.

### தொடர்ந்துவரும் செலவுகள்

மென்பொருள் சொத்துகள் மீதான தொடர்ந்து வருகின்ற செலவுகள், குறித்த சொத்தின் எதிர்கால பொருளாதார நன்மைகளை அதிகரிக்கும் போது மாத்திரம் மூலதனமாக்கப்படுகின்றன. இப்பிரமாணத்தை நிறைவுசெய்யாத ஏதேனும் வேறு செலவினம் அது ஏற்படுகின்ற காலத்தில் செலவாக இனங்காணப்படும்.

### இனங்காணமை

ஒரு அருவச்சொத்து, அப்புறப்படுத்தப்படும்போது அல்லது அதன் பயன்பாடு அல்லது அப்புறப்படுத்தலில் இருந்து எதிர்கால பொருளாதார நன்மைகள் எதிர்பார்க்கப்படாதபோது இனங்காணப்படாது. அத்தகைய சொத்துக்களின் இனங்காணல் நீக்கப்பட்டதால் ஏற்படும் எந்தவொரு இலாபம் அல்லது இழப்பும் அச்சொத்து இனங்காணப்படாத காலகட்டத்தில் வருமான கூற்றில் ஏனைய தொழிற்பாட்டு வருமானத்தில் இனங்காணப்படும்.

### ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவை கருத்தில் கொள்ளல்

ஆராய்ச்சி செலவுகள் ஏற்பட்டதாகவே செலவிடப்படுகின்றன. தனிப்பட்ட கருத்திட்டத்தின் மீதான அபிவிருத்திச் செலவினமானது, நிறுவனம் பின்வருவனவற்றை எடுத்துக்காட்ட முடிந்தால் மட்டுமே ஒரு அருவச் சொத்தாக அங்கீகரிக்கப்படும்:

- பயன்பாட்டிற்கு அல்லது விற்பனைக்குக் கிடைக்கும் வகையில் அருவச் சொத்தை நிறைவு செய்வதற்கான தொழில்நுட்ப சாத்தியக்கூறு
- சொத்தை நிறைவு செய்து பயன்படுத்த அல்லது விற்க அதன் நோக்கம் மற்றும் இயலுமை.
- எதிர்கால பொருளாதார நன்மைகளை உருவாக்குவதற்கான சொத்தின் இயலுமை.
- அபிவிருத்தி நிறைவுசெய்யப் போதுமான வளங்களின் கிடைக்கும் தன்மை
- அபிவிருத்தியின் போது ஏற்படும் செலவினங்களை நம்பத்தகுந்த முறையில் அளவிடும் இயலுமை.
- உருவாக்கப்பட்டவுடன் அருவச் சொத்தை திறம்பட பயன்படுத்தும் இயலுமை.

2024 நிதியாண்டில் நிறுவனம் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செலவுகள் எதுவும் ஏற்படவில்லை

### பயனுள்ள பொருளாதார ஆயுள், எஞ்சிய பெறுமதி மற்றும் மதிப்பிழப்பு முறை

#### வரையறுக்கப்பட்ட பயனுள்ள ஆயுள் கொண்ட அருவ சொத்துக்கள்

வரையறுக்கப்பட்ட பயனுள்ள ஆயுட்காலம் கொண்ட அருவ சொத்துக்கள், அவை பயன்பாட்டிற்குக் கிடைக்கும் திகதியிலிருந்து தொடங்கி, அவற்றின் மதிப்பிடப்பட்ட பொருளாதார ஆயுட்காலத்தில் தேய்மானம் செய்யப்படுகின்றன. இவ் அணுகுமுறை சொத்தில் உள்ளடங்கிய எதிர்கால பொருளாதார நன்மைகளின் எதிர்பார்க்கப்படும் நுகர்வு முறையை தேய்மானம் நிர்ணயம் பிரதிபலிக்கிறது என்பதை உறுதி செய்கிறது. மேலும், சொத்து பாதிக்கப்படக்கூடும் என்பதற்கான அறிகுறி இருக்கும் போதெல்லாம், தேய்மானத்திற்காக அருவச் சொத்துக்கள் மதிப்பிடப்படுகின்றன.

வரையறுக்கப்பட்ட பயனுள்ள ஆயுட்காலம் கொண்ட அருவ சொத்துக்களின் பயனுள்ள ஆயுள், மதிப்பிழப்பு முறை மற்றும் எஞ்சிய மதிப்பு என்பன ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் மீளாய்வு செய்யப்படுகின்றன. எதிர்பார்க்கப்படும் பயனுள்ள ஆயுளில் ஏதேனும் மாற்றங்கள் அல்லது சொத்தில் உள்ளடங்கிய எதிர்பார்க்கப்படும் எதிர்கால பொருளாதார நன்மைகள் மதிப்பிடப்பட்டு, பயனுள்ள ஆயுட்காலம், மதிப்பிழப்பு முறை அல்லது எஞ்சிய மதிப்பில் மாற்றங்கள் பொருத்தமான முறையில் செய்யப்படுகின்றன.

#### மதிப்பிழப்புச் செலவினம்

வரையறுக்கப்பட்ட ஆயுளுடன் கூடிய அருவச் சொத்துகளின் மதிப்பிழப்புச் செலவினமானது ஏனைய தொழிற்பாட்டு மற்றும் நிர்வாகச் செலவுகளின் கீழ் வருமானக் கூற்றில் இனங்காணப்படுகின்றன.

#### பயனுள்ள பொருளாதார ஆயுள், எஞ்சிய பெறுமதி மற்றும் மதிப்பிழப்பு முறை

| அருவச் சொத்துக்கள் | மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுள்/ மதிப்பிழப்புக் காலம் | எஞ்சிய பெறுமதி | மதிப்பிழப்பு முறை |
|---|---|---|---|
| கணினி மென்பொருள் | 5 ஆண்டுகள் | ஏதுமில்லை | பயன்பாட்டுக்கு அது கிடைக்கின்ற திகதியிலிருந்து மென்பொருளின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுள் மீது நேர் கோட்டு அடிப்படையில் |

அறிக்கையிடும் திகதியன்றுள்ளவாறு வரையறுக்கப்படாத ஆயுளுடன் கூடிய அருவச் சொத்துக்ள் எதனையும் கம்பனி கொண்டிருக்கவில்லை

#### அருவச் சொத்துகளின் சேதழப்பு மீளாய்வு

கம்பனி, ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் சேதஇழப்பிற்காக அருவ சொத்துகளை மதிப்பிடுவதுடன் ஒரு சொத்து சேதமிழந்துள்ளதா என்பதற்கான அறிகுறிகள் இருக்கும் போதெல்லாம், அச்சொத்து சேதழிக்கச்செய்யப்படுகின்றது. வரையறுக்கப்பட்ட-ஆயுள் அருவ சொத்துக்கள், (எ.கா., மூலதனப்படுத்தப்பட்ட அபிவிருத்திச் செலவுகள், காப்புரிமைகள், வர்த்தகநாமங்கள்) அவற்றின் பயனுள்ள ஆயுள் மீது மதிப்பிழப்புச் செய்யப்பட்டு, குறிகாட்டிகள் இருக்கும்போது சேதஇழப்பிற்காக மீளாய்வு செய்யப்படுகின்றன.

சேதழப்பு மீளாய்வானது சொத்தின் கொண்டுசெல்லும் தொகையை அதன் மீட்டெடுக்கக்கூடிய தொகையுடன் ஒப்பிடுகிறது, இது பின்வருவனவற்றில் உயர்வானதாகவிருக்கும்,

(1) விற்பனைக்கான செலவுகளைக் கழித்து சீர்மதிப்புப் பெறுமதி – ஒழுங்கான பரிவர்த்தனையில் சொத்தை விற்றதன் மூலம் மீட்டெடுக்கக்கூடிய தொகை

(2) பயன்பாட்டில் உள்ள பெறுமதி – பொருத்தமான தள்ளுபடி விகிதத்தைப் பயன்படுத்தி, பொருத்தமான கழிவு வீதத்தைப் பயன்படுத்தி சொத்திலிருந்து எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்படும் காசுப்பாய்ச்சல்களின் தற்போதைய பெறுமதி

கொண்டு செல்லும் தொகை மீட்டெடுக்கக்கூடிய தொகையை விட அதிகமாக இருந்தால், சேதஇழப்பு நட்டமானது இலாபம் அல்லது நட்டக் கூற்றில் சேதஇழப்பாக இனங்காணப்படும்.

## 5.1 அருவ சொத்துக்களின் முன்கொண்டு செல்லும் தொகைகளின் செயற்பாடும்

| | 2024 ரூ. '000 | 2023 ரூ. '000 |
|---|---|---|
| **செலவு** | | |
| ஜனவரி 01 அன்றுள்ளவாறு மீதி | – | – |
| இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தானத்திடமிருந்து மாற்றல் | 354,609 | – |
| சேர்த்தல்கள் | 42,729 | – |
| **டிசம்பர் 31 அன்றுள்ளவாறு மீதி** | 397,338 | – |
| **மதிப்பிறக்கம்** | | |
| ஜனவரி 01 அன்றுள்ளவாறு மீதி | – | |
| இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தானத்திடமிருந்து மாற்றல் | 324,407 | – |
| சேர்த்தல்கள் | 11,052 | – |
| **டிசம்பர் 31 அன்றுள்ளவாறு மீதி** | 335,459 | – |
| **கொண்டுசெல்லும் பெறுமதி** | | |
| **டிசம்பர் 31 அன்றுள்ளவாறு தேறிய மீதி** | 61,879 | – |

## 6. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்

கணக்கீட்டுக் கொள்கை

### இனங்காணலும் அளவீடும்

கம்பனி அதன் சொந்த சொத்துக்களை கணக்கிடுவதில் இ.க.நி.16 – “ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்” கோட்பாடுகளை கடைப்பிடிக்கின்றது. சேவை வழங்கல், வாடகைச் செயற்பாடுகள் அல்லது நிருவாக தொழிற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற இச்சொத்துக்கள் ஒரு ஆண்டை விஞ்சுகின்ற அவற்றின் எதிர்பார்க்கப்பட்ட பயன்பாட்டிற்கான காலப்பகுதியினை அடிப்படையாகக் கொண்டு இனங்காணப்படுகின்றன.

### இனங்காணல் அடிப்படை

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் கம்பனிக்கு அச்சொத்துக்கள் எதிர்கால பொருளாதார நன்மைகளை உருவாக்கும் என்ற நிகழ்வு காணப்படுகின்ற போது அத்துடன் செலவு நம்பகமாக அளவிடப்படுகின்ற போது இனங்காணப்படுகின்றன.

### அளவீட்டு அடிப்படை

சொத்தொன்றாக இனங்காண்பதற்கு தகைமை பெறுகின்ற ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரண வகையொன்று தொடக்கத்தில் அதன் கையகப்படுத்தல் செலவில் அளவிடப்படுகின்றன. அச்செலவு அதன் உத்தேசித்த பயன்பாட்டிற்கு சொத்தினை தயார்படுத்துவதற்கு அவசியமான அச்சொத்தின் கொள்வனவுக்கு அல்லது நிர்மாணத்திற்கு நேரடியாக சாட்டத்தக்க அனைத்து செலவினங்களையும் அதேபோன்று வழமையான பராமரிப்பு செலவுகள் மற்றும் அறிவிடத்தக்க வரிகள் நீங்கலாக அதன் தொழிற்பாட்டு தன்மையினை மேம்படுத்துவதற்கு அதனை தொடர்ந்து ஏற்படுகின்ற ஏதேனும் செலவுகள் என்பவற்றையும் உள்ளடக்குகின்றது. சுயமாக நிர்மாணிக்கப்பட்ட சொத்தொன்றின் விடயத்தில் செலவானது பொருட்கள், நேரடி ஊழியர் மற்றும் வேறு நேரடியாக சாட்டத்தக்க அவசியமான செலவுகளை உள்ளடக்குகின்றது.

### இனங்காணாமை

சொத்தொன்று அதன் கையுதிர்தலின் மீது அல்லது அதன் பயன்பாட்டிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால பொருளாதார நலன்கள் எதுவும் இல்லாதபோது இனங்காணப்படாது. அத்தகைய சொத்துக்களின் இனங்காணாமையிலிருந்து தோன்றுகின்ற ஏதேனும் பெறுகை அல்லது இழப்பு அச்சொத்து இனங்காணப்படாத காலப்பகுதியில் வருமானக்கூற்றில் ஏனைய தொழிற்பாட்டு வருமானத்தில் இனங்காணப்படுகின்றது.

### தொடர்ந்து வருகின்ற அளவீடு

#### செலவு மாதிரி

கம்பனி, மோட்டார் வாகனம் தவிர்ந்த அனைத்து ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களுக்கும் செலவு மாதிரியினை பிரயோகிக்கின்றது. இச்சொத்துக்கள் ஏதேனும் நேரடியாக சாட்டத்தக்க செலவுகள் உள்ளடங்கலாக அவற்றின் கொள்வனவு விலையில் பதிவு செய்யப்படுவதுடன் அதனை தொடர்ந்து திரண்ட தேய்மானம் மற்றும் ஏதேனும் சேதஇழப்பு நட்டங்களை கழித்து அளவிடப்படுகின்றன.

#### மீள் விலைமதிப்பீட்டு மாதிரி

மோட்டார் வாகனங்களுக்காக விலைமதிப்பீட்டின் பின்னர் இனங்காணப்பட்ட ஆரம்ப இனங்காணலின் பின்னர் மீள் விலைமதிப்பீட்டு திகதியன்று சீர்மதிப்புப் பெறுமதியினை எடுத்துரைக்கின்ற அவற்றின் மீள் விலைமதிப்பீட்டு தொகையில் அளவிட்டு, அதனைத் தொடர்ந்து ஒன்றுதிரண்ட தேய்மானம் மற்றும் ஏதேனும் சேதஇழப்புகளை கழிக்கின்ற மீள் விலைமதிப்பீட்டு மாதிரியினை கம்பனி பிரயோகிக்கின்றது. கொண்டு செல்கின்ற தொகை சீர்மதிப்புப் பெறுமதியினை பிரதிபலிப்பதை உறுதிசெய்வதற்கு மோட்டார் வாகனங்கள் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை சுயாதீன தொழில்சார் விலைமதிப்பீட்டாளர்களால் மீள் விலைமதிப்பீடு செய்யப்படுகின்றன.

மீள் விலைமதிப்பீடு செய்யப்பட்ட சொத்தொன்றின் கொண்டு செல்லும் தொகையில் ஏதேனும் அதிகரிப்பு ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் ஊடாக பங்குரிமை மூலதனத்தினுள் மீள் விலைமதிப்பீட்டு ஒதுக்கில் இனங்காணப்படுகின்றன அல்லது வருமானக் கூற்றில் பதிவாகிய முன்னைய மீள் மதிப்பீட்டு குறையொன்றை திரும்பல் செய்வதற்கு பயன்படுத்தப்படுகின்றது. அத்தகைய அதிகரிப்பானது இலாபத்தில் அல்லது நட்டத்தில் முன்னர் இனங்காணப்பட்ட அதே சொத்தின் மீள் விலைமதிப்பீட்டு குறைவை அது திரும்பல் செய்கின்ற ரீதியில் மாத்திரம் வருமானமாக இனங்காணப்படுகின்றது. மாறாக கொண்டுசெல்லும் தொகையில் உள்ள ஏதேனும் குறைவு வருமானக்கூற்றில் செலவொன்றாக பதிவுசெய்யப்படுகின்றது அல்லது அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தினூடாக பங்குரிமை மூலதனத்தில் மீள் விலைமதிப்பீட்டு ஒதுக்கிலிருந்து கழிக்கப்படுகின்றது. ஆயினும் அச்சொத்துக்கான மீள் விலைமதிப்பீட்டு ஒதுக்கில் ஏதேனும் ஏற்கனவே காணப்படுகின்ற வரவு மீதி என்ற ரீதியில் மாத்திரமேயாகும். மீள் விலைமதிப்பிடப்பட்ட சொத்தொன்றின் கையுதிர்த்தல் அல்லது ஓய்வின் மீது அச்சொத்துக்கு தொடர்புடைய மீள் விலை கிணக்கப்படகின்றது. மீள் விலைமதிப்பீடு செய்யப்பட்ட சொத்து மீள் விலைமதிப்பீட்டு எஞ்சியிருககக்கிப்பின்ற தேய்மானம் தீர்மானிக்கப்படகின்றது.

### தொடர்ந்து வருகின்ற செலவுகள்

ஆதனத்தின் அல்லது பொறியின் கூறொன்றை மாற்றீடு செய்யும் செலவு கூறுடன் இணைந்த எதிர்கால பொருளாதார நன்மைகள் கம்பனிக்கு கிடைக்கும். அத்துடன் அச்செலவு நம்பகரமாக அளவிடப்படலாம் என்ற சாத்தியக்கூறு காணப்படுகின்ற போது சொத்தில் கொண்டுசெல்லும் தொகையின் பாகமாக மூலதனமாக்கப்படுகின்றது. மாற்றீடுசெய்யப்பட்ட பாகத்தின் கொண்டுசெல்லும் தொகை இனங்காணப்படுவதில்லை.

### பழுதுபார்த்தல்களும் பராமரித்தல்களும்

பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு செலவுகள் அவை ஏற்படுகின்ற காலப்பகுதியில் வருமானக்கூற்றில் செலவாக்கப்படுகின்றன. எனினும், முக்கிய புனரமைப்புச் செலவுகள் சொத்தின் முன்னர் மதிப்பிடப்பட்ட செயலாற்றுகை நியமத்தை புனரமைப்பானது எதிர்கால பொருளாதார நன்மைகளை உருவாக்கி விஞ்சும் அத்துடன் சொத்தின் அடையாளங்காணத்தக்க பாகத்தை மாற்றீடு செய்யும் என்ற சாத்தியக்கூறு இருக்கும்போது சொத்தின் கொண்டுசெல்லும் தொகையின் பாகமாக மூலதனமாக்கப்படுகின்றது.

### பயன்பாடுமிக்க பொருளாதார ஆயுள், எஞ்சியுள்ள பெறுமதி மற்றும் தேய்மானம்

#### தேய்மானம்

சொத்தொன்று பயன்பாட்டுக்காக கிடைக்கப்பெறும் திகதியிலிருந்து அதன் கையுதிர்த்தல் வரை கம்பனி தேய்மானத்தை ஏற்பாடு செய்கின்றது. தேய்மானமானது பல்வேறு சொத்து வகைகளினதும் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டு ஆயுளின் மீது நேர்கோட்டு அடிப்படையில் கணிக்கப்படுகின்றது. மீள் விலைமதிப்பீடு செய்யப்பட்ட சொத்து வகுப்புகளுக்கு மீள் விலைமதிப்பீட்டு நேரத்தில் எஞ்சியிருக்கின்ற பயன்பாட்டு ஆயுட்காலத்தின் அடிப்படையில் தேய்மானம் தீர்மானிக்கப்படுகின்றது.

கம்பனி, வேறுபட்ட பயன்பாட்டு ஆயுளுடன் கூடிய ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரண வகையொன்றின் முக்கிய பாகங்கள் வெவ்வேறாக தேய்மானம் செய்யப்படுகின்ற தேய்மானத்திற்கான கூறு அணுகுமுறையினை பிரயோகிக்கின்றது. ஒவ்வொரு கூறும் நேர்கோட்டு முறையினை பயன்படுத்தி அதன் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டு ஆயுளின் மீது தேய்மானம் செய்யப்பட்டு சொத்தின் எதிர்கால பொருளாதார நன்மைகள் அடையப் பெறப்படுவதற்கு எதிர்பார்கப்படுகின்ற விதத்தினை தேய்மானச் செலவு பிரதிபலிப்பதை உறுதிசெய்கின்றது.

தேய்மானம் வருமானக்கூற்றில் ஏனைய தொழிற்பாட்டு மற்றும் நிருவாகச் செலவுகளின் கீழ் செலவொன்றாக இனங்காணப்படுகின்றது.

### பயன்பாட்டு பொருளாதார ஆயுள், தேய்மான வீதம், எஞ்சியிருக்கும் பெறுமதிகள்

கம்பனியானது ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் அதன் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் எஞ்சிய பெறுமதிகள், பயன்பாட்டு ஆயுள்கள் மற்றும் பெறுமானத் தேய்வு முறைகள் பற்றிய அனைத்தையும் உள்ளடக்கிய மீளாய்வொன்றை நடாத்துகின்றது. மோட்டார் வாகனங்கள் போன்ற சில சொத்து வகைகள் குறிப்பிடத்தக்க எஞ்சிய பெறுமதியை கொண்டிருக்கக்கூடிய அதேவேளை கம்பனி அதன் பெறுமானத்தேய்வுக் கணிப்பீடுகளில் எஞ்சியிருக்கின்ற பெறுமதியினை கருத்திற்கொள்ளாமையின் மூலம் மரபுசார்ந்த அணுகுமுறையொன்றினை பின்பற்றியுள்ளது. அதற்கு பதிலாக முன்மதிமிக்க சொத்து மதிப்பீட்டினை உறுதிசெய்வதற்கு பெறுமானத்தேய்வு சொத்தின் முழுமையான பயன்பாட்டு ஆயுளின் மீது முறைமை ரீதியாக அறவிடப்படுகின்றது.

## 6. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் (தொடர்ச்சி)

எஞ்சியுள்ள பெறுமதிகள், பயன்பாட்டு ஆயுள் அல்லது தேய்மான முறைகளுக்கான ஏதேனும் அவசியமான சீராக்கங்கள் காலமுறையான இம்மீளாய்வுகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன.

| சொத்து வகுப்பு | தேய்மான வீதம் % | மதிப்பிடப்பட்ட பயன்பாட்டு ஆயுள் (ஆண்டுகள்) | எஞ்சியுள்ள பெறுமதி |
|---|---|---|---|
| தளபாடங்களும் பொருத்துக்களும் | 15 | 6 2/3 | ஏதுமில்லை |
| அலுவலக மற்றும் ஏனைய உபகரணங்கள் | 15 | 6 2/3 | ஏதுமில்லை |
| கணனி உபகரணங்கள் | 20 | 5 | ஏதுமில்லை |
| மோட்டார் வாகனங்கள் | 20 | 5 | ஏதுமில்லை |
| சிசிடிவி கெமரா | 33.33 | 3 | ஏதுமில்லை |
| பெயர்ப்பலகை | 25 | 4 | ஏதுமில்லை |

### ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் சேதஇழப்பு மீளாய்வு

ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் கம்பனி அதன் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களுக்கான சேதஇழப்பு குறிகாட்டிகள் ஏதும் காணப்படுகின்றனவா என்பதனை மதிப்பிடுகின்றது. அத்தகைய குறிகாட்டிகள் இனங்காணப்படுமெனில் கம்பனியானது சேதஇழப்பு நட்டம் இனங்காணப்பட வேண்டுமா என்பதனை நிர்ணயிப்பதற்கு சொத்தின் அறிவிடத்தக்க தொகையினை மதிப்பிடுகின்றது. ஏதேனும் சேதஇழப்பு நட்டங்கள் நிதி கூற்றுகளில் சொத்தின் பெறுமதிகளை சரியாக பிரதிபலிப்பதை உறுதிசெய்வதற்கு ஏற்புடைய கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக பதிவுசெய்யப்படுகின்றன.

### மீட்டெடுக்கத்தக்க தொகை மதிப்பீடு

சொத்தின் மீட்டெடுக்கக்கூடிய தொகை பின்வருவனவற்றில் உயர்வானதாகவிருக்கும்,

1. விற்பனைக்கான செலவுகளைக் கழித்து சீர்மதிப்புப் பெறுமதி – ஒழுங்கான பரிவர்த்தனையில் சொத்தை விற்றதன் மூலம் மீட்டெடுக்கக்கூடிய தொகை
2. பயன்பாட்டில் உள்ள பெறுமதி – பொருத்தமான தள்ளுபடி விகிதத்தைப் பயன்படுத்தி, பொருத்தமான கழிவு வீதத்தைப் பயன்படுத்தி சொத்திலிருந்து எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்படும் காசுப்பாய்ச்சல்களின் தற்போதைய பெறுமதி

கொண்டு செல்லும் தொகை மீட்டெடுக்கக்கூடிய தொகையை விட அதிகமாக இருந்தால், சேதஇழப்பு நட்டமானது இலாபம் அல்லது நட்டக் கூற்றில் சேதஇழப்பாக இனங்காணப்படும்.

### சேதஇழப்பு திரும்பல்

அறிவிடத்தக்க தொகையினை தீர்மானிப்பதற்கு பயன்படுத்தப்படும் மதிப்பீடுகளில் மாற்றமொன்று காணப்படுமாயின் சேதஇழப்பு நட்டம் திரும்பல் செய்யப்படுகின்றது. திரும்பலானது சேதஇழப்பு இனங்காணப்பட்டிருந்தால் போன்று பெறுமானத்தேய்வை கழித்து சொத்தின் கொண்டு செல்கின்ற தொகைக்கு மட்டுப்படுத்தப்படுகின்றது.

### ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் சீர்மதிப்புப் பெறுமதி

2024 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு கம்பனி அதன் ஒட்டுமொத்த மோட்டார் வாகன வகுப்புகளுக்கும் பிந்திய மீள் விலைமதிப்பீட்டினை மேற்கொண்டது. கம்பனியின் கொள்கைக்கமைய மோட்டார் வாகனங்கள் ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை விலைமதிப்பீடு செய்யப்பட வேண்டுமென்பதுடன் அடுத்த மதிப்பீடு 2027 டிசம்பர் 31 அன்று இடம்பெறும்.

### ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் மீள் விலைமதிப்பீடு

கம்பனி கொள்கைக்கமைய மீள் விலைமதிப்பீடு மோட்டார் வாகன வகுப்புகளுக்கு மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை மேற்கொள்ளப்பட வேண்டும். கம்பனியின் வேறுபடுத்தலுக்கு முன்னர் இறுதி விலைமதிப்பீடு 2021 ஆம் நிதியாண்டுக்காக மேற்கொள்ளப்பட்டது. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் சீர்மதிப்பு பெறுமதி சொத்து வகுப்புக்களின் மீள் விலைமதிப்பீட்டில் தொடர்புடைய அனுபவத்தை கொண்டிருந்த வெளிவாரி சுயாதீன பட்டய விலைமதிப்பீட்டு அளவீட்டாளர் எப்எம் வெலிவேர்ஸ் மூலம் மதிப்பீடுசெய்யபட்டது.

### சீர்மதிப்பு பெறுமதி படிநிலை

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (இகநி 16) ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் மற்றும் இநிஅறி.13 என்பவற்றிற்கிணங்க கம்பனி அதன் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் விலைமதிப்பீட்டை அளவிடுவதில் சீர்மதிப்பு பெறுமதி படிநிலையினை பிரயோகிக்கின்றது.

| | |
|---|---|
| **மட்டம் 1** | செயற்பாடுமிக்க சந்தைகளில் கோரப்பட்ட விலைகளின் அடிப்படையில் |
| **மட்டம் 2** | அதனையொத்த சொத்துக்களின் அண்மைக்கால கொடுக்கல்வாங்கல்கள் போன்ற அவதானிக்கப்பட்ட சந்தை உள்ளீடுகளில் இருந்து பெறுவிக்கப்படுகின்ற போது |
| **மட்டம் 3** | தொழில்சார் கணிப்பீடுகள் மற்றும் முகாமைத்துவ உள்ளீடுகள் போன்ற அவதானிக்க முடியாத உள்ளீடுகளின் மீது தங்கியிருக்கின்ற போது |

மோட்டார் வாகனங்கள் தவிர்ந்தவை 2024 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் சீர்மதிப்பு பெறுமதி சொத்து வகுப்புக்களின் மீள் விலைமதிப்பீட்டில் தொடர்புடைய அனுபவத்தை கொண்டிருந்த வெளிவாரி சுயாதீன பட்டய விலைமதிப்பீட்டு அளவீட்டாளர் எப்எம் வெலிவேர்ஸ் மூலம் மீள்மதிப்பீடுசெய்யப்பட்டன.

கம்பனியானது முதன்மையாக சுயாதீன விலைமதிப்பீடுகள், சந்தை ஒப்பீடுகள், செலவு அடிப்படையிலான அணுகுமுறைகள் என்பவற்றின் அடிப்படையில் மட்டம் 2 மட்டம் 3 உள்ளீடுகளை பயன்படுத்தி ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் சீர் மதிப்பு பெறுமதியினை தீர்மானிக்கின்றது. அவற்றின் சீர்மதிப்பு பெறுமதியினை சொத்துக்கள் பிரதிபலிக்கின்ற தொகையினை உறுதி செய்வதற்கு விலைமதிப்பீடுகள் காலமுறையாக நடாத்தப்படுகின்றன.

### முழுமையாகப் பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட சொத்துக்கள்

அறிக்கையிடும் திகதியன்றுள்ளவாறு இன்னும் பயன்பாட்டிலுள்ள முழுமையாக பெறுமானத் தேர்வு செய்யப்பட்ட ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின ஆரம்பச்செ சலவு பின்வருமாறு:

| சொத்து வகுப்பு | 2024 ரூ. '000 |
|---|---|
| தளபாடங்களும் பொருத்துக்களும் | 81,563 |
| அலுவலக மற்றும் ஏனைய உபகரணங்கள் | 19,395 |
| கணனி உபகரணங்கள் | 112,519 |
| **மொத்தம்** | **213,477** |

## 6. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் (தொடர்ச்சி)

### 6.1 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் கொண்டுசெல்லும் தொகை இணக்கம்

| | உபகரணங்கள் ரூ. '000 | தளபாடம் மற்றும் பொருத்துக்கள் ரூ. '000 | மோட்டார் வாகனங்கள் ரூ. '000 | ஏனையவை ரூ. '000 | **மொத்தம் 2024 ரூ. '000** | மொத்தம் 2023 ரூ. '000 |
|---|---|---|---|---|---|---|
| **செலவு/மீள் விலைமதிப்பீடு** | | | | | | |
| ஜனவரி 1 அன்றுள்ளவாறு மீதி | – | – | – | – | **–** | – |
| இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்திடம் இருந்து மாற்றல் | 476,680 | 186,820 | 228,145 | – | **891,645** | – |
| ஆண்டு காலப்பகுதியில் சேர்த்தல்கள் | 104,034 | 39,065 | – | 4,045 | **147,144** | – |
| மீள் விலைமதிப்பீட்டு மிகைகள் | – | – | 264,623 | – | **264,623** | – |
| மீள் விலைமதிப்பீடு செய்யப்பட்ட சொத்துகள் மீது திரண்ட பெறுமானத் தேய்வு மாற்றப்பட்டது | – | – | (210,825) | – | **(210,825)** | – |
| ஆண்டின் போது கையுதிர்த்தல்கள் | – | – | (5,875) | – | **(5,875)** | – |
| **டிசம்பர் 31 அன்றுள்ளவாறு மீதி** | 580,714 | 225,885 | 276,068 | 4,045 | **1,086,712** | – |
| **திரண்ட பெறுமானத் தேய்வு** | | | | | | |
| ஜனவரி 1 அன்றுள்ளவாறு மீதி | – | – | – | – | **–** | – |
| இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்திடம் இருந்து மாற்றல் | 269,196 | 111,028 | 192,045 | – | **572,269** | – |
| ஆண்டின் பொது பெறுமானத்தேய்வு அறவீடு | 79,865 | 14,315 | 23,518 | 1,110 | **118,808** | – |
| மீள் விலைமதிப்பீடு செய்யப்பட்ட சொத்துகள் மீது திரண்ட பெறுமானத் தேய்வு மாற்றப்பட்டது | – | – | (210,825) | – | **(210,825)** | – |
| ஆண்டின் போது கையுதிர்த்தல்கள் | – | – | (4,738) | – | **(4,738)** | – |
| **டிசம்பர் 31 அன்றுள்ளவாறு மீதி** | 349,061 | 125,343 | – | 1,110 | **475,514** | – |
| **கொண்டுசெல்லும் பெறுமதி** | | | | | | |
| **டிசம்பர் 31 அன்றுள்ளவாறு மீதி** | 231,653 | 100,542 | 276,068 | 2,935 | **611,198** | – |

## 7. பிற்போடப்பட்ட வரிகள்

கணக்கீட்டுக் கொள்கை

**பிற்போடப்பட்ட வரிச் சொத்துகளையும் பொறுப்புகளையும் இனங்காணல்**

பிற்போடப்பட்ட வரி, நிதி அறிக்கையிடல் நோக்கங்களுக்காக மற்றும் வரி விதிப்பு நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும் தொகைகள் என்பவற்றுக்காக சொத்துகளினதும் பொறுப்புகளினதும் கொண்டுசெல்லும் தொகைக்கு இடையிலான தற்காலிக வேறுபாடுகளை கணக்கிடுவதன் மூலம் இனங்காணப்படுகின்றது.

பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களும் பொறுப்புகளும் அறிக்கையிடும் திகதி அன்று சட்டமாக்கப்பட்ட அல்லது கணிசமான அளவு சட்டமாக்கப்பட்ட வரி வீதங்கள் மற்றும் வரிச் சட்டங்கள் என்பவற்றின் அடிப்படையில் சொத்து தேறுகின்ற அல்லது பொறுப்பு தீர்ப்பனவுசெய்யப்படுகின்ற போதும் ஆண்டுக்கு ஏற்புடைய எதிர்பார்க்கப்பட்ட வரி வீதங்களில் அளவிடப்படுகின்றது.

**பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களை இனங்காணுதல்**

பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் மீளாய்வு செய்யப்படுவதுடன் தொடர்புடைய வரி நலன்கள் அடையப்பெறும் என்று இனிமேலும் நிகழ்தகவு காணப்படாது என்ற ரீதியில் குறைக்கப்படுகின்றன் அத்தகைய குறைப்புகள் எதிர்கால வரிவிதிக்கத்தக்க இலாபங்கள் நிகழும் சாத்தியம் மேம்படுகின்ற போது திரும்பல் செய்யப்படுகின்றன. இனங்காணப்படாத பிற்போடப்பட்ட வரிச் சொத்துகள் ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் மீள்கணிப்பு செய்யப்படுவதுடன் எதிர்கால வரிவிதிக்கத்தக்க இலாபங்கள் அவை பயன்படுத்தப்படக்கூடியதாக இருப்பதற்கு எதிராக கிடைக்கப்பெறுகின்ற சாத்தியம் தோன்றுகின்ற ரீதியில் இனங்காணப்படுகின்றன.

**பிற்போடப்பட்ட வரியை இனங்காணல்**

பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புகள் நற்பெயர் தொடக்க இனங்காணலில் இருந்து அல்லது வியாபார ஒருங்கிணைப்பொன்றல்லாத கொடுக்கல்வாங்கல் ஒன்றில் சொத்து ஒன்றின் அல்லது பொறுப்பு ஒன்றின் ஆரம்ப இனங்காணலில் இருந்து தோன்றுகின்ற போது அத்துடன் கணக்கிட்டு இலாபத்தையோ அல்லது வரிவிதிக்கத்தக்க இலாபத்தை அல்லது நட்டத்தையோ பாதிக்காத கொடுக்கல்வாங்கல் நேரத்தில் தவிர அனைத்து வரிவிதிக்கத்தக்க வேறுபாடுகளுக்கும் பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புகள் இனங்காணப்படுகின்றன. வியாபார ஒருங்கிணைப்பொன்றல்லாத அத்துடன் ஒன்றில் கணக்கிட்டு இலாபத்தையோ அல்லது வரிவிதிக்கத்தக்க இலாபத்தை பாதிக்காத கொடுக்கல்வாங்கலொன்றில் சொத்துக்களின் அல்லது பொறுப்புகளின் ஆரம்ப இனங்காணலில் இருந்து தோன்றுகின்ற தற்காலிக வேறுபாடுகளுக்காக பிற்போடப்பட்ட வரி இனங்காணப்படுவதில்லை.

**பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களையும் பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புகளையும் எதிர்வீடு செய்தல்**

நடப்பு வரி பொறுப்புகளுக்கு எதிராக நடப்பு வரிச் சொத்துக்களை எதிரீடு செய்வதற்கு சட்ட ரீதியாக அமுலாக்கத் தக்க உரிமைகள் காணப்படுமாயின் அத்துடன் பிற்போடப்பட்ட வரிகள் அது வரிவிதிக்கத்தக்க நிறுவனத்திற்கும் அதே வரிவிதிப்பு அதிகாரிக்கும் தொடர்புடையதாக காணப்படுகின்ற போதும் எதிரீடு செய்யப்படுகின்றன

**நிறுவன வரமான வரி வீதத்தில் மாற்றத்திலிருந்து தாக்கம்**

ஆண்டுகாலப்பகுதியில் நிறுவன வரி வீதத்தில் மாற்றம் எதுவும் காணப்படவில்லை.

## 7. பிற்போடப்பட்ட வரிகள் (தொடர்ச்சி)

### 7.1 நிதி நிலைக் கூற்றில் இனங்காணப்பட்ட பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள்/பொறுப்புக்கள் பற்றிய பகுப்பாய்வு

| டிசம்பர் 31 அன்றுள்ளவாறு | 2024 | | | 2023 | | |
|---|---|---|---|---|---|---|
| | தற்காலிக வேறுபாடு ரூ. '000 | வரி வீதம் % | வரித் தாக்கம் ரூ. '000 | தற்காலிக வேறுபாடு ரூ. '000 | வரி வீதம் % | வரித் தாக்கம் ரூ. '000 |
| **பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள்** | | | | | | |
| கழிவுசெய்யத்தக்க தற்காலிக வேறுபாடுகள் | | | | | | |
| ஊழியர் நலன்கள் மீதானவை | 1,391,857 | 30 | 417,557 | – | – | – |
| விற்பனைக்கான கிடைக்கப்பெறுகின்ற நிதிச் சொத்துக்கள் | 370,083 | 30 | 111,025 | – | – | – |
| **பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்கள்** | | | | | | |
| **வரிவிதிக்கத்தக்க தற்காலிக வேறுபாடுகள் மீதானவை** | | | | | | |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் | (355,093) | 30 | (106,528) | – | – | – |
| வர்த்தக கிடைக்கப்பெறதக்கவைகள் மீதான ஏற்பாடுகள் | (557,923) | 30 | (167,377) | – | – | – |
| **டிசம்பர் 31 அன்றுள்ளவாறு தேறிய இனங்காணப்பட்ட பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள்** | – | – | 254,677 | – | – | – |

### 7.2 பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களின் மற்றும் பொறுப்புக்களின் அசைவுகள்

| டிசம்பர் 31 அன்றுள்ளவாறு | இலங்கை காப்புறுதி கூட்டு தாபனத்திடம் இருந்து மாற்றல் | வருமானக் கூற்றில் | ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் இனங்காணப் பட்டவை | **டிசம்பர் 31 அன்றுள்ளவாறு தேறிய நிலுவை 2024** | பிற்போடப்பட்ட வரிச் சொத்து | பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு |
|---|---|---|---|---|---|---|
| ஆதனம், பொறித் தொகுதி, உபகரணங்கள் | – | (27,141) | (79,387) | **(106,528)** | – | (106,528) |
| ஓய்வு நலக் கடப்பாடுகள் | 302,697 | 60,587 | 54,273 | **417,557** | 417,557 | – |
| விற்பனைக்காக கிடைக்கப்பெறுகின்ற நிதிச் சொத்துக்கள் | – | – | (167,377) | **(167,377)** | – | (167,377) |
| வர்த்தக கிடைக்கப்பெறத்தக்கவை மீதான ஏற்பாடுகள் | 277,499 | (166,474) | – | **111,025** | 111,025 | – |
| | 580,196 | (133,028) | (192,491) | **254,677** | 528,582 | (273,905) |

## 8. நிதியியல் முதலீடுகள்

கணக்கீட்டுக் கொள்கை

**நிதியியல் சொத்துக்கள்**

நிதியியல் சொத்து என்பது பல வகைகளில் ஒன்றகவுள்ள ஏதேனும் சொத்தாகும். இது மற்றொரு நிறுவனத்தின் காசு மற்றும் பங்குரிமைமூலதன சாதனங்களை உள்ளடக்கியது. மேலும், ஒரு நிதியியல் சொத்தானது வேறொரு நிறுவனத்திடமிருந்து காசு அல்லது வேறொரு நிதியியல் சொத்தைப் கொள்வதற்கான அல்லது சாத்தியமான சாதகமான நிலைமைகளின் கீழ் நிதியியல் சொத்துக்களை அல்லது நிதியியல் பொறுப்புகளை பரிமாறிக்கொள்வதற்கான ஒப்பந்த உரிமையாக இருக்கலாம். மேலும், ஒரு நிதியியல் சொத்து என்பது நிறுவனத்தின் சொந்த பங்குரிமைமூலதன சாதனங்களின் நிலையான எண்ணிக்கைக்காக நிலையான எண்ணிக்கை பணத் தொகையை அல்லது மற்றொரு நிதியியல் சொத்தை பரிமாறிக்கொள்ளும் வழி தவிர தீர்ப்பனவு செய்யும் அல்லது செய்யக்கூடியதான நிறுவனத்தின் பங்குரிமைச் சாதனங்களின் பல எண்ணிக்கையின் கிடைப்பனவை வேண்டுகின்ற பெறுதியற்ற அல்லது பெறுதியொன்று போன்ற நிறுவனத்தின் சொந்த பங்குரிமை மூலதனச் சாதனங்களில் தீர்ப்பனவு செய்யக்கூடிய ஒப்பந்தமொன்றகவிருக்கலாம்.

பின்வரும் முக்கிய பரிசீலனைகளின் அடிப்படையில் நிதியியல் சொத்துக்களின் வகைப்படுத்தல்

1. **வணிக மாதிரி மற்றும் நோக்கம்**

   சொத்தை வைத்திருப்பதன் பின்னணியில் உள்ள நோக்கம் (உதாரணம்: வர்த்தகம், நீண்ட காலம் வைத்திருத்தல் அல்லது ஒப்பந்த காசுப்பாய்ச்சல்களின் சேகரிப்பு) நிறுவனம் முதிர்ச்சிக்கு முனனர் சொத்தை விற்பனைசெய்ய திட்டமிடுகின்றதா என்பது

2. **ஒப்பந்த காசுப்பாய்ச்சல் பண்புகள்**

   சொத்து நிலையான அல்லது தீர்மானிக்கக்கூடிய கொடுப்பனவுகளை கொண்டுள்ளதா என்பது. சொத்து வட்டிக் கொடுப்பனவுகள் மற்றும் முதன்மைத் தொகை மீள்கொடுப்பனவு ஆகியவற்றை உள்ளடக்குகின்றதாயின்

3. **சந்தைக் கோரல் விலைப்புள்ளி மற்றும் திரவத்தன்மை**

   நிதியியல் சந்தைகளில் தீவிரமாக சொத்து வர்த்தகம் செய்யப்படுகிறதா என்பது சொத்து பட்டியலிடப்பட்டிருந்தால் அல்லது கோரப்பட்ட விலையைக் கொண்டிருந்தால்

4. **முதிர்வு வரை வைத்திருப்பதற்கான இயலுமை மற்றும் நோக்கம்**

   முதிர்வு வரை வைத்திருக்கும் முதலீடுகளுக்கு, நிறுவனம் முதிர்வு வரை சொத்தை வைத்திருக்கும் இயலுமை நோக்கத்தையும் எண்பிக்க வேண்டும்

   முதிர்வு வரை வைத்திருக்கும் சொத்துக்களின் முன்கூட்டிய விற்பனையானது களங்கப்படுத்துவதற்கு வழிவகுத்து, விற்பனைக்குக் கிடைக்கும் என மீள்வகைப்படுத்தலைத் தேவைப்படுத்தலாம்

5. **உட்பொதிகந்துள்ள பெறுதிகள்**

   ஒரு நிதியியல் சொத்தில் உட்பொதிகந்துள்ள பெறுதிகள் வழித் இருக்குமாயின், அது பிரிக்கப்பட்டு தனித்தனியாகக் கணக்கிடப்பட வேண்டுமா என்பதை நிறுவனம் கணிப்பி வேண்டும்.

6. **இடர் மற்றும் தளம்பல் கரிசனைகள்**

   அடிக்கடி விலை ஏற்ற இறக்கங்களுக்கு உட்பட்ட நிதியியல் சொத்துக்கள் (உதாரணம்: பங்குரிமை முதலீடுகள்) பொதுவாக இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அல்லது விற்பனைக்குக் கிடைக்கத்தக்கவை என வகைப்படுத்தப்படுகின்றன.

## 8. நிதியியல் முதலீடுகள் (தொடர்ச்சி)

நிறுவனத்தின் தற்போதைய நிதியியல் சொத்துக்கள் மற்றும் அவற்றின் வகைப்பாடுகள் பின்வருமாறு.

### (1) இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதி

#### ஆரம்ப அளவீடு

இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதி என வகைப்படுத்தப்பட்ட நிதியியல் சொத்துக்கள் ஆரம்பத்தில் வர்த்தக திகதியில் சீர்மதிப்புப் பெறுமதி இனங்கானப்படுகின்றன, இத்திகதி நிறுவனம் கருவியின் ஒப்பந்த விதிகளுக்கு ஒரு தரப்பாகின்ற திகதியாகும். நிதியியல் கருவிகளை கையகப்படுத்துவதற்கு நேரடியாகக் காரணமான பரிவர்த்தனை செலவுகள் இலாபம் அல்லது நட்டத்தில் உடனடியாக செலவிடப்படுகின்றன.

#### வகைப்படுத்தலுக்கான அடிப்படை

நிதியியல் சொத்துக்கள் பின்வரும் பிரமாணங்களின் அடிப்படையில் இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதி என வகைப்படுத்தப்படுகின்றன:

(1) வர்த்தகத்திற்காக வைத்திருக்கப்பட்டவை – குறுகிய காலத்தில் விற்பனை அல்லது மீள் கொள்வனவு நோக்கத்திற்காக அல்லது குறுகிய கால இலாபம் ஈட்டுவதற்காக நிர்வகிக்கப்படும் சொத்துப்பட்டியலொன்றின் ஒரு பகுதியை வாங்குவதற்காக முக்கியமாக பெறப்பட்ட அல்லது ஏற்படும் நிதியியல் கருவிகள்.

(2) சீர்மதிப்பு பெறுமதியில் நியமிக்கப்பட்டவை – பின்வருமாறு இருப்பின் ஒரு நிறுவனம் ஒரு நிதியியல் சொத்தை ஆரம்ப இனங்காணலின் மீது இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் மாற்ற முடியாத வகையில் நியமிக்கலாம்:

- அது அளவீட்டை அல்லது இனங்காணல் ஒத்திசைவின்மையை குறைக்குமாயின் அல்லது கணிசமாகக் குறைக்குமாயின் (கணக்கீட்டுக் பொருத்தமின்மை)
- நிதியியல் கருவி நிறுவனத்தின் இடர் முகாமைத்துவ அல்லது முதலீட்டு உபாயத்திற்கு ஏற்ப சீர்மதிப்பு பெறுமதி அடிப்படையில் நிர்வகிக்கப்படுமாயின்

#### தொடர்ந்துவருகின்ற அளவீடு

ஆரம்ப இனங்காணலுக்குப் பின்னர், அவை சீர்மதிப்பு பெறுமதியில் அளவிடப்படுகின்றன. சீர்மதிப்பு பெறுமதியில் உள்ள மாற்றங்கள் வருமானக் கூற்றில் "சீர்மதிப்பு பெறுமதியில் இலாபங்கள் மற்றும் இழப்புகள்" இன் கீழ் பதியப்படுகின்றன.

வட்டி விளைவு வட்டி முறையைப் பயன்படுத்தி ஒன்றுசேர்க்கப்பட்டு நிதி வருமானத்தில் எடுத்துரைக்கப்படுகின்றது. பங்கிலாப வருமானமானது கொடுப்பனவுக்கான உரிமை தாபிக்கப்பட்டுள்ளபோது "நிதி வருமானத்தில்" பதிவுசெய்யபடுகின்றது.

#### இனங்காணாமை

இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியாக வகைப்படுத்தப்பட்ட நிதியியல் சொத்தொன்று பினவருவனவற்றின் போது இனங்காணப்படுவதில்லை:

(1) சொத்திலிருந்து காசுப்பாய்ச்சலைப் பெற்றுக்கொளவதற்கான ஒப்பந்த உரிமைகள் காலாவதியடைகின்ற போதுபோது அல்லது

(2) சொத்து கைமாற்றப்பட்டு, சொத்தாண்மையின் கணிசமாக அனைத்து இடர்நேர்வுகளும் மாறுகளும் வேறொரு தரப்பினருக்கு கைமாற்றப்படுகின்ற போது

இனங்காணப்படாமையின் மீது, சொத்தின் கொண்டு செல்கின்ற தொகைக்கும் கிடைக்கப்பெற்ற விலையீட்டுக்கும் இடையிலான வேறுபாடு வருமானக்கூற்றில் இனங்காணப்படுகின்றது. ஏதேனும் முன்னர் இனங்காணப்பட்ட சீர்மதிப்புப் பெறுமதி மாற்றங்கள் வருமானக்கூற்றில் காணப்படுவதுடன் பங்குரிமை மூலதனத்திற்கு மீள்வகைப்படுத்தப்படுவதில்லை.

### (2) முதிர்ச்சிக்காக வைக்கப்பட்டவை

#### ஆரம்ப அளவீடு

முதிர்ச்சிக்காக வைக்கப்பட்டவை நிலையான அல்லது தீர்மானிக்கக்கூடிய கொடுப்பனவுகளைக் கொண்ட பெறுதி அல்லாத நிதி சொத்துக்கள் மற்றும் நிலையான முதிர்வுகள் நிறுவனம் முதிர்வு வரை வைத்திருக்கும் நோக்கம் மற்றும் இயலுமை இரண்டையும் கொண்டிருக்கும்போது முதிர்வு வரை வைத்திருக்கும் என வகைப்படுத்தப்படுகின்றன.

இச்சொத்துக்கள் ஆரம்பத்தில் இனங்காணலின் மீது பெறுமதி மற்றும் நேரடியாகக் சாட்டத்தக்க பரிவர்த்தனை செலவுடன் சீர்மதிப்புப் பெறுமதியில் இனங்காணப்படுகின்றன.

#### வகைப்படுத்தலுக்கான அடிப்படை

பின்வருமாறு இருந்தால் மாத்திரம் நிதியின் சொத்துகள் முயற்சிக்காக வைக்கப்பட்டவையாக வகைப்படுத்தப்படுகின்றன.

(1) அவை நிலையான அல்லது நிர்ணயிக்கத்தக்க கொடுப்பனவுகளையும் நிலையான முதிர்ச்சியையும் கொண்டிருத்தல்

(2) முதிர்ச்சி வரையில் சொத்துக்களை வைத்திருப்பதற்கு நிறுவனம் சாதகமான நோக்கத்தையும் இயலுமையையும் கொண்டிருத்தல்.

(3) இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்பு பெறுமதியில் அல்லது விற்பனைக்காக கிடைக்கபெறுகின்றவையாக அவை நியமிக்கப்படாதிருத்தல்.

நிறுவனம் முதிர்ச்சிக்கு முன்னர் முதிர்ச்சிக்காக வைக்கப்பட்ட முதலீடுகளின் முக்கிய பாகத்தினை விற்பனைசெய்தல் அல்லது மீள்வகைப்படுத்தல் செய்யுமாயின் (கொடுகடன் சீர்குலைவு போன்ற அனுமதிக்கப்பட்ட காரணங்கள் தவிர) அனைத்து எஞ்சியிருக்கின்ற முதிர்ச்சிக்காக வைக்கப்பட்ட முதலீடுகளையும் விற்பனைக்குக் கிடைப்பவையாக அது மீளவகைப்படுத்த வேண்டும் என்பதுடன் அடுத்த இரு நிதி ஆண்டுகளுக்கு முதிர்ச்சிக்காக வைக்கப்பட்டவையாக சொத்து வகைப்படுத்தப்பட முடியாது.

#### தொடர்ந்துவருகின்ற அளவீடு

முதிர்ச்சிக்காக வைக்கப்பட்ட முதலீடுகள் விளைவு வட்டி வீத முறையினைப் பயன்படுத்தி கடன்தீர் செலவில் அளவிடப்படுகின்றன.

(1) வட்டி வருமானமானது விளைவு வட்டி வீதம் முறையினை பயன்படுத்தி இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றது.

(2) முதலீடொன்றின் கடன்தீர் செலவு அதன் ஆரம்ப செலவினை கருத்திற் கொண்டு முதன்மைத்தொகை மீள்கொடுப்பனவுகளுக்காக சீராக்கம்செய்வதன் மூலம் நிர்ணயிக்கப்பட்டு, சொத்தின் ஆயுளின் மீது ஏதேனும் கட்டுப்பணங்களை அல்லது கழிவுகளை முறைசார்ந்து கடன்தீர்க்கச்செய்கின்ற அதேவேளை ஏற்புடையதாயின் சேது இழப்புக்கும் கணக்கீடு செய்யப்படுகின்றது.

#### சேதஇழப்பு

ஒவ்வொரு அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியிலும் கொடுகடன் இழப்பு பற்றிய பொருண்மையான சான்று காணப்படுமாயின் முதிர்ச்சிக்காக வைக்கப்பட்ட முதலீடுகள் சேதஇழப்புக்காக மதிப்பிடப்படுகின்றன,

(1) சேதஇழப்பு இணங்காணப்படுமாயின் கொண்டுசெல்லும் தொகை குறைக்கப்பட்டு இழப்பானது இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றது.

(2) சேதஇழப்பு நட்டானது சொத்தின் கொண்டுசெல்லும் தொகைக்கும் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்ல்களின் தற்போதைய பெறுமதிக்கும் இடையில் மூல விளைவு வட்டி வீதத்தில் கழிவுசெய்யப்பட்டு அளவிடப்படுகிறது.

(3) தொடர்ந்துவருகின்ற சேதஇழப்பு திரும்பலடையுமாயின் திரும்பலானது இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்படும் ஆனால் முன்னர் பதிவாகிய சேதஇழப்பு இழப்பினை அது விஞ்சாது

#### இனங்காணாமை

முயற்சிக்காக வைக்கப்பட்டவையாக வகைப்படுத்தப்பட்ட நிதியில் சொத்து பின்வருவனவற்றின் போதும் இனங்காணப்படாது,

(1) காசு பாய்ச்சலுக்கான ஒப்பந்த உரிமைகள் காலாவதியடைதல்

(2) சொத்து விற்பனைசெய்யப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் அத்துடன் சொத்தாண்மையின் அனைத்து இடர்நேர்வுகளிலும் விலையீடுகளும் கைமாற்றப்படுதல்.

இனங்காணமையின் மீது, எதேனும் வருவாய் அல்லது நட்டம் சேதஇழப்பு நட்டங்களுக்கானவை தவிர இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்படும் சொத்து விற்பனை செய்யப்பட்டு இருப்பின் இது இலாபம் அல்லது நட்டம் ஊடாக திரும்பல் செய்யப்படாது.

### (3) கடன்களும் வருமதிகள்களும்

#### ஆரம்ப அளவீடு

கடன்களும் வரும்திகளும் செயற்பாடுமிக்க சந்தையில் விலைகுறிக்கப்படாத நிலையான அல்லது நிர்ணயிக்கத்தக்க கொடுப்பனவுடன் கூடிய பெறுதியற்ற நிதியியல் சொத்துகள் ஆகும். சாதனத்தின் ஒரு தரப்பாக நிறுவனம் வருகின்ற போது அவை இனங்காணப்படுகின்றன

ஆரம்ப இனங்காணலின் மீது கடன்களும் வருமதிகளும் சொத்தினை கையகப்படுத்துவதற்கு நேரடியாக சாட்டத்தக்க கொடுக்கல்வாங்கல்கள் செலவுடன் சேர்த்து சீர்மதிப்பு பெறுமதியில் அளவிடப்படுகின்றன.

## 8. நிதியியல் முதலீடுகள் (தொடர்ச்சி)

சந்தை வட்டி வீதங்களுக்கு குறைவாக வழங்கப்பட்ட அலுவலர் கடன்களுக்காக சீர்மதிப்பு பெறுமதி சந்தை தொடர்புடைய வட்டி வீதத்தை பயன்படுத்தி (அதனையொத்த இடர்நேர்வு தொகுப்பு கடன்களுக்காக நிலவுகின்ற வீதம் போன்ற) எதிர்கால காசுப் பாய்ச்சல்களை கழிவுசெய்வதன் மூலம் தீர்மானிக்கப்படுகின்றது. வழங்கப்பட்ட கடன் தொகைக்கும் சீர்மதிப்பு பெறுமதிக்கும் இடையிலான வேறுபாடு இகநி19- ஊழியர் நலன்கள் இற்கு
அமைவாக ஊழியர் நலச்செலவு ஒன்றாக இனங்காணப்படுகின்றது.

### வகைப்படுத்தலுக்கான அடிப்படை

இகநி 39 இன் கீழ் கடன் மற்றும் வருமதியாக நிதிச் சொத்து ஒன்றை வகைப்படுத்துவதற்கு பின்வரும் காரணிகள் நிறைவுசெய்யப்பட வேண்டும்.

(1) சொத்து நிலையான அல்லது நிர்ணயிக்கத்தக்க கொடுப்பனவுகளை கொண்டிருக்க வேண்டும்.

(2) சொத்து செயற்பாடு மிக்க சந்தையில் விலைகுறிக்கப்படாது இருக்க வேண்டும்.

(3) சொத்து இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்பு பெறுமதியில் அல்லது விற்பனைக்காக கிடைக்கத்தக்கவையாக நியமிக்கப்படாது இருக்க வேண்டும்.

(4) சொத்து பொதுவாக வாடிக்கையாளர்கள், ஊழியர்கள் அல்லது ஏனைய கடன்பெறுநர்கள் உடனாக இருக்க வேண்டும் (அலுவலர் கடன்ங்கள் மற்றும் வர்த்தக வருமதிகள் உள்ளடங்கலாக)

(5) கொடுகடன் இடர்நேர்வு சொத்தின் அறவிடத்தக்க தன்மையினை மதிப்பிடுவதற்கு கணிப்பீடு செய்யப்பட வேண்டும்

### தொடர்ந்துவரும் அளவீடு

ஆரம்ப இனங்காணலின் பின்னர், கடன்களும் வருமதிகளும் விளைவு வட்டி வீத முறையினைப் பயன்படுத்தி கடன்தீர் செலவில் அளவிடப்படுகின்றன

(1) ஆரம்ப இனங்காணலின் பின்னர் கடன்களும் வருமதிகளும் விளைவு வட்டி வீதத்தினை பயன்படுத்தி கடன்தீர் செலவில் அளவிடப்படுகின்றன.

(2) இனங்காணமை அல்லது சேதஇழப்பிலிருந்து தோன்றுகின்ற ஏதேனும் வருவாய் அல்லது இழப்பு இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றது.

(3) அலுவலர் கடன்கள், சந்தை வட்டி வீதங்களுக்கு குறைவாக வழங்கப்பட்டிருப்பினும் கூட விளைவு வட்டி வீதத்தில் வட்டி ஒன்றுசேர்வதுடன் அது ஆரம்ப இனக்கானலில் பிரயோகிக்கப்பட்ட சந்தைக் கழிவு வீதத்தை அடிப்படையாகக்கொண்டதாகும்.

கொண்டுசெல்லும் தொகையானது மீள்கொடுப்பனவுகளுக்காக சீர்செய்யப்படுவதுடன் அறவிடப்படும் பெயரளவு வட்டிக்கும் விளைவு வட்டி வீதத்திற்கும் இடையிலான ஏதேனும் வேறுபாடு கடன் காலத்தின் மீது திரும்பல் செய்யப்படுகின்றது.

### சேத இழப்பு

ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் கம்பனி கொடுப்பதுடன் இடர்நேர்வு பற்றிய பொருண்மையான சான்று காரணமாக சேதஇழப்பிற்காக கடன்களையும் வருமதிகளையும் மதிப்படுகின்றது.

சேதஇழப்பு இனங்காணப்படின்,

(1) கொண்டுசெல்கின்ற தொகை சந்தேகமான கணக்குகளுக்கான ஒதுக்கீடு ஒன்றினூடாக குறைக்கப்படுகின்றது

(2) சேதஇழப்பு நட்டம் கொண்டுசெல்லும் தொகைக்கும் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்சல்களின் தற்போதைய பெறுமதிக்கும் இடையிலான வேறுபாடாக அடிப்படை விளைவு வட்டி வீதத்தில் கழிவுசெய்யப்பட்டு அளவிடப்படுகிறது.

இழப்பானது இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றது.

அலுவலர் கடன்களுக்காக கடனை மீள்கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் அலுவலர் ஒருவர் விலகிச் செல்வாராயின் எதேனும் நிலுவை சேதஇழப்புக்காக கணிப்பிடப்படுகின்றது. அறவிடகூடிய தன்மை நிச்சயமற்றதாயின், எஞ்சியிருக்கின்ற மீதி பதிவழிப்பு செய்யப்படும் அல்லது இறுதி தீர்ப்பனவுகளுக்கு எதிராக எதிரீடு செய்யப்படும்.

முன்னர் சேதமடைந்த கடன் அறவிடப்படுமாயின்:
திரும்பல் இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றது ஆனால் கொண்டு செல்லுகின்ற தொகை அதன் மூல கடன்தீர் செலவை விஞ்ச முடியாது.

### இனங்காணமை

பின்வருவனவற்றின் போதும் அலுவலர் கடன்கள் உள்ளடங்கலாக கடன்களும் வருமதிகளும் இனங்காணப்படுவதில்லை.

(1) காசு பாய்ச்சலுக்கான ஒப்பந்த உரிமைகள் காலாவதியடைதல்

(2) சொத்து கைமாற்றப்படுதல் அத்துடன் சொத்தாண்மையின் அனைத்து இடர்நேர்வுகளிலும் விலையீடுகளும் கைமாற்றப்படுதல்.

(3) அலுவலர் கடன்களுக்காக ஊதியக் கழிவுகள் அல்லது இறுதி இழப்பீட்டு சரிசெய்தல்கள் மூலம் திருப்பிச் செலுத்துதல் நிறைவுபெறும் போது, அல்லது சேகரிபக்க முடியாததாகக் கருதப்பட்டு பதிவழிப்புச் செய்யப்படுதல்.

இனங்காணமையின் மீது, கொண்டுசெல்லும் தொகைக்கும் கிடைக்கப்பெற்ற விலையீட்டுக்கும் இடையிலான வேறுபாடு இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றது.

### (4) விற்பனைக்காகக் கிடைக்கப்பெறுபவை

#### ஆரம்ப அளவீடு

விற்பனைக்காகக் கிடைக்கப்பெறும் நிதிச் சொத்துக்கள் என்பது விற்பனைக்காக கிடைக்கப்பெறுபவையாக நியமிக்கப்பட்ட அல்லது கடன்கள் மற்றும் வருமதிகள், முதிர்ச்சிக்காக வைக்கப்பட்ட முதலீடுகள், இலாபம் நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நிதிச் சொத்துக்கள் (FVTPL) போன்ற வேறு எந்த வகைகளிலும் வகைப்படுத்தப்படாத பெறுதி அல்லாத நிதிச் சொத்துக்கள் ஆகும். விற்பனைக்காகக் கிடைக்கப்பெறும் நிதிச் சொத்துக்கள் பொதுவாக நிறுவனம் காலவரையின்றி வைத்திருக்க விரும்புகின்ற பங்குரிமை மூலதனத்தில் அல்லது படுகடன் சாதனங்களில் உள்ள நிதியியல் சொத்துகளாகும். ஆனால் காசுப்பாய்ச்சல் தேவைகள் அல்லது வட்டி வீதங்கள், செலாவணி வீதங்கள் அல்லது பங்குரிமைமூலதன விலைகளில் ஏற்படும் மாற்றங்கள் என்பனவற்றுக்கு பதிலளிக்கும் வகையில் விற்கப்படலாம்.

விற்பனைக்காகக் கிடைக்கப்பெறும் நிதிச் சொத்துக்கள் ஆரம்பத்தில் சீர்மதிப்புப் பெறுமதியில் இனங்காணப்படுகின்றன, இதில் சொத்தை கையகப்படுத்துவதற்கு நேரடியாகக் காரணமான பரிவர்த்தனை செலவுகள் அடங்கும். ஆரம்ப இனங்காணல் வர்த்தக திகதியில் செய்யப்படுகிறது.

#### தொடர்ந்து வருகின்ற அளவீடு

ஆரம்ப இனங்காணலுக்குப் பின்னர் விற்பனைக்காகக் கிடைக்கப்பெறும் நிதியியல் சொத்துக்கள் பின்வரும் பிரிகாரத்துடன் சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படுகின்றன,

(1) பங்குரிமை மூலதனச் சாதனங்கள்: இவை, ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் நேரடியாக இனங்காணப்பட்ட சீர்மதிப்புப் பெறுமதியில் ஏற்படும் மாற்றங்களுடன் சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படுவதுடன் சொத்து இனங்காணப்படாத அல்லது சேதமிழக்கும் வரை பங்குரிமை மூலதனத்தின் தனியான கூறொன்றில் திரட்டப்படுகின்றன (விற்பனைக்காகக் கிடைக்கப்பெறும் ஒதுக்கு).

(2) படுகடன் சாதனங்கள்: சொத்து சேதமிழந்தாலன்றி இவையும் ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் நேரடியாக இனங்காணப்பட்ட சீர்மதிப்புப் பெறுமதியில் ஏற்படும் மாற்றங்களுடன் சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படுவதுடன் நியாய மதிப்பிலும் அளவிடப்படுகின்றன சேமதிழக்கும் சந்தர்ப்பத்தில் இலாபம் அல்லது நட்டத்தில சேதஇழப்பு நட்டமாக இனங்காணப்படும்.

#### விற்பனைக்குக் கிடைக்கும் சொத்துக்களின் மீதான ஆதாயங்கள் மற்றும் இழப்புகள்

(1) **தேறாத ஆதாயங்கள் மற்றும் இழப்புகள்:** சீர்மதிப்புப் பெறுமதியில் ஏற்படும் மாற்றங்கள், படுகடன் மற்றும் பங்குரிமை மூலதன சாதனங்கள் இரண்டிற்கும், ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் நேரடியாக இனங்காணப்படுகின்றன. படுகடன் சாதனங்களுக்கு, சொத்து விற்கப்படும் அல்லது பலவீனமடையும் வரை தேறாத ஆதாயங்கள் அல்லது இழப்புகள் ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் சேர்க்கப்படும்.

(2) **தேறிய ஆதாயங்கள் மற்றும் இழப்புகள்:** விற்பனைக்காகக் கிடைக்கப்பெறும் நிதிச் சொத்து விற்கப்படும்போது அல்லது இனங்காணப்படாதபோது, ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் முன்னர் இனங்காணப்பட்ட ஒட்டுமொத்த ஆதாயம் அல்லது இழப்பு, இனங்காணாமையின் மீது இலாபம் அல்லது இழப்பின் ஒரு பகுதியாக இலாபம் அல்லது இழப்புக்கு மீள்வகைப்படுத்தப்படும்.

(3) **சேதஇழப்பு நட்டங்கள்:** விற்பனைக்காகக் கிடைக்கப்பெறும் நிதிச் சொத்து சேதமடைந்ததற்கான புறநிலை சான்றுகள் இருந்தால் (உதாரணம்: அதன் விலைக்குக் கீழே சீர்மதிப்புப் பெறுமதியில் ல் குறிப்பிடத்தக்க அல்லது நீடித்த சரிவு), சேதஇழப்பு நட்டம், இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படும், மேலும் ஒட்டுமொத்த இழப்பு அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்திலிருந்து அகற்றப்பட்டு வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

## 8. நிதியியல் முதலீடுகள் (தொடர்ச்சி)

### சேத இழப்பு

விற்பனைக்காகக் கிடைக்கப்பெறும் நிதியியல் சொத்துக்கள் அவை பின்வருவனவற்றைப் போன்ற சேதஇழப்பிற்கான ஏதேனும் புறநிலை சான்றுகள் உள்ளதா என்பதை மதிப்பிடுவதற்காக ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் சேதஇழப்பிற்காக பரிசோதிக்கப்படுகின்றன,

(1) செலவுக்குக் கீழே சீர்மதிப்புப் பெறுமதியில் குறிப்பிடத்தக்க அல்லது நீடித்த சரிவு.

(2) வழங்குபவரின் நிதியியல் கஸ்டம் (படுகடன் சாதனங்களுக்கு).

(3) வழங்குபவர் தவணைதறுதல் அல்லது குறிப்பிடத்தக்க கடன் சீர்குலைவிற்கான

சேத இழப்பு அடையாளம் காணப்பட்டால்:

(1) படுகடன் சாதனங்கள்: ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் இனங்காணப்பட்ட ஒட்டுமொத்த இழப்பு இலாபம் அல்லது நட்டமாக மீள்வகைப்படுத்தப்படுகிறது.

(2) பங்குரிமைமூலதன சாதனங்கள்: சேதஇழப்பு நட்டம் இலாபம் அல்லது நட்டம் ஊடாகத் திரும்பல் செய்யப்படாது. இருப்பினும், தொடரந்துவரும் காலங்களில் ஒரு பங்குரிமைமூலதன சாதனத்தின் சீர்மதிப்புப் பெறுமதியில் மீட்பு காணப்படுமாயின், மீட்பானது இலாபம் அல்லது நட்டதிலன்றி ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் நேரடியாக இனங்காணப்படுகிறது.

**மீள்வகைப்படுத்தல்**

இகநி 39 இன் கீழ் நிதிச் சொத்துக்களின் மீள்வகைப்படுத்தல் மிகவும் கட்டுப்படுத்தப்பட்டதாகும் மற்றும் அரிதான சூழ்நிலைகளில் மாத்திரம் அனுமதிக்கப்படுகிறது.

### மீள் வகைப்படுத்தலுக்கான முக்கிய கருத்திற்கொள்ளல்கள்

| காரணி | உளத்தாக்கம் |
|---|---|
| அளவீட்டு அடிப்படை | சொத்து புதிய வகைப்படுத்தலின் அடிப்படையில் அளவிடப்பட வேண்டும் |
| இலாபம் மற்றும் நட்ட விளைவு | தேறாத இலாபங்கள்/நட்டங்கள் ஏனைய அனைத்ததையும் உள்ளடக்கிய வருமானத்திலிருந்து இலாபம் அல்லது நட்டத்திற்கு மாற்றல்செய்ய தேவைப்படலாம் |
| திரும்பல் தன்மை | இகநி39 இன் கீழ் ஒருதடவை வகைப்படுத்தப்பட்டால் சொத்துகள் பொதுவாக பின்னோக்கி நகர முடியாது. |
| ஒழுங்குபடுத்தல் இணக்கம் | மீள் வகைப்படுத்தலானது இகநி 39 விதிகளுடன் இயைபாக வேண்டுமென்பதுடன் நிதியியல் கூற்றுகளில் நியாயப்படுத்தப்பட வேண்டும். |

### இகநி39 இன் கீழ் மீள் வகைப்படுத்தல் விதிகள்

| இலிருந்து | இற்கு | அனுமதிக்கப்படுதல் | நிபந்தனைகள்/மட்டுப்பாடுகள் |
|---|---|---|---|
| FVTPL | AFS, HTM, L&R | அரிதாக | தொழில் மாதிரியில் முக்கிய மாற்றம் போன்ற அரிதான சூழ்நிலைகளில் மாத்திரம் அனுமதிக்கப்பட்டது. |
| AFS | HTM | ஆம் | கம்பனி முதிர்ச்சி வரை சொத்தை வைத்திருப்பதற்கு தீர்மானிக்குமாயின் ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் உள்ள தேறாத இலாபங்கள்/நட்டங்கள் நிலைத்திருப்பதுடன் காலப்போக்கில் கடன் கழிப்பு செய்யப்படும். |
| HTM | AFS | ஆம் | அனுமதிக்கப்பட்டது, ஆனால் குறிப்பிடத்தக்க தொகை மீள் வகைப்படுத்தப்படுமாயின் ஒட்டுமொத்த முதிர்ச்சிக்காக வைக்கப்பட்ட சொத்துப்பட்டியல் இரு ஆண்டுகளுக்கு விற்பனைக்கு கிடைக்கத் தக்கவையாக மீள் வகைப்படுத்தப்பட வேண்டும். |
| L&R | AFS | ஆம் | அனுமதிக்கப்பட்டது, கம்பனி முதிர்ச்சி சொத்தை வைத்திருப்பதற்கு இனிமேலும் உத்தேசிக்காதவிடத்து |
| HTM அல்லது L&R | FVTPL | இல்லை | FBTPLக்கு மீள் வகைப்படுத்தல் இகநி 39 இன் கீழ் அனுமதிக்கப்படுவதில்லை. |

FVTPL - இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்பு பெறுமதி
HTM - முதிர்ச்சிக்காக வைக்கப்பட்டவை
AFS - விற்பனைக்காக கிடைக்கப்பெறுபவை
L&R - கடன்களும் வருமதிகளும்
AFS - முதிர்ச்சிக்காக வைக்கப்பட்டவை

கம்பனியின் பெறுதி அல்லாத நிதியியல் சொத்துகளும் அவற்றின் வகைப்படுத்தலும் பின்வருமாறு தொகுக்கப்பட்டுள்ளன.

| நிதியியல் சொத்து | HTM | L&R | AFS | FVTPL |
|---|---|---|---|---|
| திறைசேரி முறிகள் | √ | | √ | |
| பட்டியிலிடப்பட்ட தொகுதிக்கடன்கள் | √ | | √ | |
| பட்டியலிடப்படாத தொகுதிக்கடன்கள் | | √ | | |
| வர்த்தகப் பத்திரங்கள் | | | √ | |
| தவணை வைப்புகள் | | √ | | |
| யுனிட் ட்ரஸ்ட் | | | √ | √ |
| பட்டியிலிடப்பட்ட பங்குகள் | | | √ | √ |
| அலுவலர் கடன்களும் வருமதிகளும் | | √ | | |
| மீள்காப்புறுதி வருமதிகள் | | √ | | |
| கட்டுப்பண வருமதிகள் | | √ | | |
| ஏனைய நிதியியல் சொத்துகள் | | √ | | |
| காசும் காசுக்கு சமமானவைகளும் | | √ | | |

## 8. நிதியியல் முதலீடுகள் (தொடர்ச்சி)

கம்பனியின் நிதியியல் முதலீடுகள்

| டிசம்பர் 31 அன்றுள்ளவாறு | குறிப்பு | 2024 கொண்டுள்ள தொகை ரூ. '000 | 2024 சீர்மதிப்புப் பெறுமதி ரூ. '000 | 2023 கொண்டுள்ள தொகை ரூ. '000 | 2023 சீர்மதிப்புப் பெறுமதி ரூ. '000 |
|---|---|---|---|---|---|
| **நிதியியல் முதலீடுகள்** | | | | | |
| முதிர்ச்சிக்காக வைக்கப்பட்டவை | 8.1 | 3,048,129 | 3,051,119 | – | – |
| கடன்களும் வருமதிகளும் | 8.2 | 7,337,968 | 7,337,968 | – | – |
| விற்பனைக்காக கிடைக்கப்பெறுபவை | 8.3 | 23,611,511 | 23,611,511 | – | – |
| இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்பு பெறுமதி | 8.4 | 2,984,558 | 2,984,558 | – | – |
| **மொத்த நிதி முதலீடுகள்** | | 36,982,166 | 36,985,156 | – | – |

### 8.1 முதிர்ச்சிக்காக வைக்கப்பட்டவை

| | | | | |
|---|---|---|---|---|
| திறைசேரி முறிகள் | 1,029,294 | 1,032,284 | – | – |
| பட்டியிலிடப்பட்ட தொகுதிக்கடன்கள் | 2,018,835 | 2,438,835 | – | – |
| | 3,048,129 | 3,471,119 | – | – |

### 8.2 கடன்களும் வருமதிகளும்

| | | | | |
|---|---|---|---|---|
| பட்டியலிடப்படாத தொகுதிக்கடன்கள் | 2,569,781 | 3,197,881 | – | – |
| தவணை வைப்புகள் | 3,310,237 | 3,310,237 | – | – |
| அலுவலர் கடன்களும் வருமதிகளும் | 1,457,950 | 1,457,950 | – | – |
| | 7,337,968 | 7,966,068 | – | – |

### 8.3 விற்பனைக்காக கிடைக்கப்பெறுபவை

| | | | | |
|---|---|---|---|---|
| பட்டியிலிடப்பட்ட பங்குகள் | 8,873,396 | 8,873,396 | – | – |
| யுனிட் ட்ரஸ்ட் | 1,557,712 | 1,557,712 | – | – |
| பட்டியிலிடப்பட்ட தொகுதிக்கடன்கள் | 1,263,668 | 1,263,668 | – | – |
| வர்த்தகப் பத்திரங்கள் | 1,717,952 | 1,717,952 | – | – |
| திறைசேரி முறிகள் | 10,198,783 | 10,198,783 | – | – |
| | 23,611,511 | 23,611,511 | – | – |

### 8.4 இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்பு பெறுமதி

| டிசம்பர் 31 அன்றுள்ளவாறு | 2024 கொண்டுள்ள தொகை ரூ. '000 | 2024 சீர்மதிப்புப் பெறுமதி ரூ. '000 | 2023 கொண்டுள்ள தொகை ரூ. '000 | 2023 சீர்மதிப்புப் பெறுமதி ரூ. '000 |
|---|---|---|---|---|
| பட்டியிலிடப்பட்ட பங்குகள் | 1,446,350 | 1,446,350 | – | – |
| யுனிட் ட்ரஸ்ட் | 1,538,208 | 1,538,208 | – | – |
| | 2,984,558 | 2,984,558 | – | – |

நிதியாண்டின் போது, சேதஇழப்பு நட்டம் எதுவும் இனங்காணப்படவில்லை என்பதுடன் நிதியியல் சொத்துகளின் மீளவகைப்படுத்தல் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

8. நிதியியல் முதலீடுகள் (தொடர்ச்சி)

## 8.5 நிதியியல் முதலீடுகளின் கொண்டுள்ள பெறுமதிகளில் அசைவு

| | விற்பனைக்கு கிடைக்கப் பெறும் நிதியியல் சொத்துகள் ரூ. ’000 | இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்பு பெறுமதி நிதியியல் சொத்துகள் ரூ. ’000 | முதிர்ச்சிக்காக வைக்கப்பட்ட நிதியியல் சொத்துகள் ரூ. ’000 | கடன்களும் வருமதிகளும் ரூ. ’000 | மொத்தம் ரூ. ’000 |
|---|---|---|---|---|---|
| 2024 ஜனவரி 1 அன்று உள்ளவாறு | – | – | – | – | **–** |
| இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்திடமிருந்து மாற்றல் | 17,696,626 | 2,642,060 | 3,561,270 | 7,225,211 | **31,125,167** |
| வேறுபடுத்தல் நேரத்தில் உண்மையான சொத்து ஒதுக்கீடு மீதான தாக்கம் | 3,722 | (94,184) | – | 273,404 | **182,942** |
| கொள்வனவுகள் | 2,045,244 | – | – | 9,942,964 | **11,988,208** |
| முதிர்ச்சிகள் | (1,512,000) | – | (450,000) | (9,828,003) | **(11,790,003)** |
| கையுதிர்த்தல்கள் | – | (444,685) | – | – | **(444,685)** |
| சந்தா உரிமையினை பிரயோகித்தல் (பயன்படுத்தும் உரிமை) | 747,755 | 27 | – | – | **747,782** |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் பதிவு செய்யப்பட்ட தேறிய சீர்மதிப்பு பெறுமதி | 4,331,506 | – | – | – | **4,331,506** |
| வருமானக்கூற்றில் பதிவு செய்யப்பட்ட தேறிய இலாபங்கள்/(நட்டங்கள்) | (39,376) | 59,544 | – | – | **20,168** |
| இலாபம் அல்லது நட்டத்தில் பதிவான சீர்மதிப்பு பெறுமதி இலாபங்கள் மற்றும் வெளிநாட்டு நாணய மாற்றல் | – | 821,796 | – | (215,052) | **606,744** |
| சீர்மதிப்பு பெறுமதி சீராக்கம் | – | – | – | 87,988 | **87,988** |
| ஒன்றுசேர்ந்த வட்டியில் தேறிய மாற்றம் | 346,627 | – | (69,769) | (148,544) | **128,314** |
| மதிப்பிழப்புச் சீராக்கம் | (8,593) | – | 6,628 | – | **(1,965)** |
| **2024 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு** | 23,611,511 | 2,984,558 | 3,048,129 | 7,337,968 | **36,982,166** |

## 9. மீள்காப்புறுதி வருமதிகள்

### கணக்கீட்டுக் கொள்கை

குறிப்பு 8 இல் உள்ள கணக்கீட்டுக் கொள்கையை பார்க்க

கம்பனி, மீள்காப்புறுதி ஒழுங்குகள் ஊடாக சாதாரண தொழில் நடவடிக்கையில் அனைத்து அதன் தொழிற்பாடுகளிலுமுள்ள காப்புறுதி இடர்நேர்வினை கைமாற்றுகின்றது. மீள்காப்புறுதி வருமதிகள், உரிய மீள் காப்புறுதிப் பூட்கைகளுடன் தொடர்புடைய நிலுவையாகவுள்ள கோரிக்கை ஏற்பாடு அல்லது தீர்ப்பனவு செய்யப்பட்ட கோரிக்கைகள் என்பவற்றுடன் அணிசேர்ந்து மதிப்பீடு செய்யப்பட்டுள்ள அறவிடத்தக்க தொகைகளுடன் மீள்காப்புறுதி வழங்குநர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய தொகைகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. இம் மதிப்பீடுகள் தொடர்புடைய மீள்காப்புறுதி ஒப்பந்தங்களின் நியதிகளுக்கமைவாக மதிப்பிடப்படுகின்றன.

**மீள்காப்புறுதி வருமதிகளின் சேதஇழப்பு**

கம்பனியானது நிதியியல் நிலை, தவணை தவறுதல் அல்லது கொடுப்பனவில் கடமை தவறுதல் ஏற்படுதல், மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்களில் அறவிடத்தக்க குறைவினை அவதானிக்கத்தக்க தரவுகள் குறித்துக் காட்டுதல் மற்றும் மீள் காப்புறுதியின் கடன் நம்பகத்தன்மை கிரமமான மீளாய்வுகள் போன்ற பொருமிய சேதஇழப்பு சான்றினை கருத்தில்கொண்டு அறிக்கையிடும் திகதியில் உள்ளவாறு கிடைக்கப்பெறத்தக்க மீள்காப்புறுதி மீது சாத்தியமான சேதஇழப்பு நட்டத்தினை கணிப்பிட்டுள்ளது. இக்கணிப்பீட்டின் அடிப்படையில் ஒழுங்குபடுத்தல் தேவைப்படுத்தல்களுடன் இணங்குவதை உறுதிசெய்வதற்கும் கம்பனியில் நிதியிடல் அறிக்கையிடல் பற்றிய நேர்மை நம்பகத்தன்மையினை நிலைநாட்டுவதற்கும் நிதியியல் கூற்றுகளில் போதிய ஏற்பாடுகள் இனங்காணப்படுகின்றன.

மீள்காப்புறுதி கிடைக்கப்பெறத்தக்கவைகளின் கொண்டுள்ள பெறுமதி அறிக்கையிடும் திகதியில் சீர்மதிப்பு பெறுமதியில் முழுமையாக்கப்படுகின்றது.

**நிலுவையாகவுள்ள கோரிக்கைகள் மீதான முதல் காப்புறுதி கிடைக்கப்பெறத்தக்கவைகள்**

நிலுவையாகவுள்ள கோரிக்கைகள் மீதான கிடைக்கப்பெறத்தக்க காப்புறுதி மீள்காப்புறுதி ஒப்பந்த நியதிகளுக்கமைவாக மீள்காப்புறுதி வழங்குனர்களிடமிருந்து கிடைக்கப்பெறத்தக்க தொகைகளை பிரதிநிதித்துவப்படுகின்றது.

மீள்காப்புறுதி வழங்குநர்களின் நிதியியல் நிலை, கோரிக்கை தீர்ப்பனவு விதங்கள் மற்றும் ஒப்பந்தக் கடப்பாடுகள் என்பவற்றின் அடிப்படையில் கம்பனி இத்தொகைகளின் அறவிடத்தக்க தன்மையினை மதிப்பிடுகின்றது. செலுத்தப்படிருக்காத கோரிக்கைகள் மீதான மீள்காப்புறுதி ஒதுக்குகள் மற்றும் பெற்றுக் கொள்ளப்படாத மீள்காப்புறுதி கிடைக்கப்பெறத்தக்கவைகள் என்பவற்றை இது உள்ளடக்குகின்றது.

## 9.1 மீள்காப்புறுதி கிடைக்கப்பெறத்தக்கவைகளின் விபரம்

| டிசம்பர் 31 அன்றுள்ளவாறு | 2024 ரூ ’000 | 2023 ரூ ’000 |
|---|---|---|
| தீர்ப்பனவுசெய்யப்பட்ட கோரிக்கைகள் மீது மீள்காப்புறுதி கிடைக்கப் பெறத்தக்கவை | **289,315** | – |
| நிலுவையாகவுள்ள கோரிக்கைகள் மீது மீள்காப்புறுதி கிடைக்கப் பெறத்தக்கவை | **1,740,034** | – |
| மீள்காப்புறுதி கிடைக்கப் பெறத்தக்கவை சேதஇழப்பு | **(57,124)** | – |
| **டிசம்பர் 31 அன்றுள்ளவாறு மீதி** | **1,972,225** | – |

## 10. கிடைக்கப்பெறத்தக்க கட்டுப்பணம்

### கணக்கீட்டுக் கொள்கை

கணக்கீட்டுக் கொள்கைக்கு குறிப்பு 8 ஐப் பார்க்க.

காப்புறுதி கிடைக்கப்பெறத்தக்கவை வருமதியாகவுள்ள போது இனங்காணப்படுவதுடன் சீர்மதிப்பு பெறுமதியில் ஆரம்ப இனங்காணல் மீது அளவிடப்படுகின்றது. கட்டுப்பணங்களின் சேகரிக்கும்தன்மை தொடர்ச்சியான அடிப்படையில் மீளாய்வுசெய்யப்படுகிறது.

இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட கட்டுப்பண கொடுப்பனவு உத்தரவாத பணிப்புரையின் பிரகாரம் காப்புறுதி பூட்கைகள் கட்டுப்பணக் கொடுப்பனவு உத்தரவாதத்திற்குட்பட்டு வழங்கப்படுவதுடன் தீர்ப்பனவு செய்யப்படாவிடின், 60 நாட்களைக் கொண்ட காலாவதியின் மீது இரத்துச்செய்யப்படுகின்றன.

**சேதஇழப்பு**

கிடைக்கப்பெறத்தக்க கட்டுப்பணம் மீதான சேதஇழப்பு நட்டங்கள் கொண்டுள்ள தொகைக்கும் அறிவிடத்தக்க தொகைக்குமிடையிலான வேறுபாடாக வருமானக் கூற்றில் இனங்காணப்படும் சேதஇழப்பு நட்டங்களாக அளவிடப்படுகின்றன. சேதஇழப்பு மதிப்பீடானது இணைத்தரப்பின் குறிப்பிடத்தக்க நிதியியல் இன்னல், கொடுப்பனவுகளில் தவணைதவறுதல் அல்லது கடமைதவறுதல், வங்குரோத்து நிகழும்தன்மை அல்லது நிதியியல் மீள்ஏற்பாடமைத்தல் மற்றும் நிலுவையமாக உள்ள தொகைகளை தீர்ப்பனவுசெய்வதற்கு கடன்படுநரின் இயலுமையை பாதிக்கின்ற பொருளாதார நிலமைகளில் பாதகமான மாற்றங்கள் போன்ற குறிகாட்டிகள் உள்ளடங்கலாக பொருண்மிய சான்றினை அடிப்படையாகக் கொண்டது.

கிடைக்கப்பெறத்தக்கவைகள் சேதஇழப்பு சமிக்ஞைகளை காண்பிக்கின்ற சந்தர்ப்பத்தில், அறவிடமுடியாக் கடன்களுக்கான ஏற்பாடுகள் இனங்காணப்படுவதுடன் அறவிடுதல் இடம்பெறாதென கருதப்படுகின்ற போது பதிவழிப்பு செய்யப்படுவதற்கான சாத்தியப்பாட்டுக்காக தவணைகடந்த நிலுவை கணக்குகள் மீளாயப்படுகின்றன. கம்பனியானது கிடைக்கப்பெறத்தக்க கட்டுப்பணங்களை தொடர்ச்சியாக மீளாய்வுசெய்து, அவதானிக்கத்தக்க தரவுகள் மற்றும் வரலாற்று ரீதியான போக்குகளின் அடிப்படையில் கொடுகடன் இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மையினை பகுப்பாய்கின்றது.

| டிசம்பர் 31 அன்றுள்ளவாறு | குறிப்பு | 2024 ரூ. '000 | 2023 ரூ. '000 |
|---|---|---|---|
| பூட்கை உடமையாளர்களிடமிருந்து கிடைக்கப்பெறத்தக்க கட்டுப்பணம் | 10.1 | 2,541,727 | – |
| முகவர்கள், தரகர்கள் மற்றும் இடையீட்டாளர்கள் இடமிருந்து கிடைக்கப்பெறத்தக்க கட்டுப்பணம் | 10.2 | 2,602,625 | – |
| | | 5,144,352 | – |

## 10.1 பூட்கை உடமையாளர்களிடமிருந்து கிடைக்கப்பெறத்தக்க கட்டுப்பணம்

| டிசம்பர் 31 அன்றுள்ளவாறு | 2024 ரூ. '000 | 2023 ரூ. '000 |
|---|---|---|
| ஆண்டின் தொடக்கத்தில் உள்ளவாறு | – | – |
| இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்திடமிருந்து மாற்றல் | 3,163,904 | – |
| ஆண்டின் போது தேறிய மாற்றம் | (489,674) | – |
| பூட்கை உடமையாளர்களிடமிருந்து கிடைக்கப்பெறத்தக்க கட்டுப்பணம் | 2,674,230 | – |
| | 2,674,230 | – |
| **கிடைக்கப்பெறத்தக்க கட்டுப்பணம் மீதான சேதஇழப்பு** | | |
| ஆண்டின் தொடக்கத்தில் உள்ளவாறு | – | – |
| இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்திடமிருந்து மாற்றல் | (509,721) | – |
| ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட திரும்பல் | 377,218 | – |
| ஆண்டின் இறுதியில் உள்ளவாறு | (132,503) | – |
| **பூட்கை உடமையாளர்களிடமிருந்து கிடைக்கப்பெறத்தக்க கட்டுப்பணம்** | 2,541,727 | – |

## 10.2 முகவர்கள், தரகர்கள், இடையீட்டாளர்கள் இடமிருந்து கிடைக்கப்பெறத்தக்க கட்டுப்பணம்

| டிசம்பர் 31 அன்றுள்ளவாறு | 2024 ரூ. '000 | 2023 ரூ. '000 |
|---|---|---|
| ஆண்டின் தொடக்கத்தில் உள்ளவாறு | – | – |
| இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்திடமிருந்து மாற்றல் | 2,165,181 | – |
| ஆண்டின் போது தேறிய மாற்றம் | 617,482 | – |
| பூட்கை உடமையாளர்களிடமிருந்து கிடைக்கப்பெறத்தக்க கட்டுப்பணம் | 2,782,663 | – |
| | 2,782,663 | – |
| **கிடைக்கப்பெறத்தக்க கட்டுப்பணம் மீதான சேதஇழப்பு** | | |
| ஆண்டின் தொடக்கத்தில் உள்ளவாறு | – | – |
| இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்திடமிருந்து மாற்றல் | (358,602) | – |
| ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட திரும்பல் | 178,564 | – |
| ஆண்டின் இறுதியில் உள்ளவாறு | (180,038) | – |
| **முகவர்கள், தரகர்கள், இடையீட்டாளர்கள் இடமிருந்து கிடைக்கப்பெறத்தக்க கட்டுப்பணம்** | 2,602,625 | – |

கம்பனி அறிக்கையிடும் திகதி அன்றுள்ளவாறு கிடைக்கப்பெறத்தக்க கட்டுப்பணம் மீது சாத்தியமான சேதஇழப்பு நட்டத்தை கணிப்பிட்டுள்ளதுடன் நிதிக்கூற்றுகளில் போதுமான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 11. ஏனைய சொத்துக்கள்

### கணக்கீட்டுக் கொள்கை

கணக்கீட்டுக் கொள்கைக்காக குறிப்பு 8 ஐப் பார்க்க

**பதிவேட்டுப் பொருட்கள்**

அச்சிடப்பட்ட படிவங்கள், காகிதாதிகள். சந்தைப்படுத்தல் பொருட்கள் மற்றும் காப்பாற்றப்பட்ட கையிருப்பு என்பவற்றை உள்ளடக்குகின்ற பதிவேட்டு பொருட்கள் குறைவான செலவில் அளவிடப்படுகின்றன அல்லது காப்பாற்றப்பட்ட கையிருப்புகள் நீங்கலாக நிகரத் தேறத்தக்க பெறுமதியில் அளவிடப்படுகின்றன. பொதுவாக, செலவு நிறையேற்றப்பட்ட சராசரி செலவு முறையினை பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்ற அதேவேளை, நிகர தேறிய பெறுமதியானது சாதாரண தொழில் நடவடிக்கையில் மதிப்பிடப்பட்ட விற்பனைச் செலவுகளை கழித்து எடுத்துக் காட்டப்படுகின்றது.

கோரிக்கை தீர்ப்பனவுகளிலிருந்து தோன்றுகின்ற காப்பாற்றப்பட்ட கையிருப்பானது காப்பாற்றப்பட்ட பொருட்களின் கட்டுப்பாட்டை காப்புறுதி கம்பனி பெற்றுக்கொள்கின்ற போதும் எதிர்கால பொருளாதார நலன்கள் கம்பனிக்கு கிடைக்கும் என்ற சாத்தியக்கூறு காணப்படுகின்ற போதும் சொத்தொன்றாக இனங்காணப்படுகின்றது. காப்பாற்றப்பட்ட கையிருப்பின் விலைமதிப்பீடு நடப்புச் சந்தை நிலமைகள், அண்மைய ஏலவிற்பனைப் பெறுபேறுகள் மற்றும் வரலாற்ற ரீதியான மீட்பு அனுபவம் என்பவற்றின் அடிப்படையிலமைந்தது. காப்பாற்றப்பட்ட மீட்புகள் இலாபம் அல்லது நட்டத்தில் தீர்ப்பனவில் உறப்பட்ட மொத்த கோரிக்கைக்கு எதிராக எதிரீடுசெய்யப்படுகின்றன. காப்பாற்றப்பட்ட சொத்துக்களின் கொண்டுசெல்லும் தொகை விற்பனை செய்யப்படும் வரை கம்பனி கிரமமாக மீளாய்வு செய்வதுடன் சந்தை விலையில் மாற்றங்களையும் ஏனைய தொடர்புடைய காரணிகளையும் பிரதிபலிப்பதற்கு விலைமதிப்பீட்டை இற்றைப்படுத்துகின்றது. இவ் அணுகுமுறை கோரிக்கை அறவீடுகள் மீதான கம்பனியின் கொள்கைக்கு ஒத்திசைவாக காணப்படுவதுடன் ஏற்புடைய நிதியியல் அறிக்கையிடல் கட்டமைப்புடன் இணங்குகின்றது.

**ஏனைய கிடைக்கப்பெறத்தக்கவையும் தொடர்புடைய தரப்பினர்களிடமிருந்து வருமதிகளும்**

ஏனைய கிடைக்கப்பெறத்தக்கவையும் தொடர்புடைய தரப்பினர்களிடமிருந்து வருமதிகள் அறவிட முடியா மற்றும் ஐயமான கிடைக்கப்பெறத்தக்கவைகளுக்கான ஒதுக்கீடுகளை கழித்து செலவில் இனங்காணப்படுகின்றது.

## 11. ஏனைய சொத்துக்கள் (தொடர்ச்சி)

### 11.1 கிடைக்கப்பெறத்தக்கவைகள் மற்றும் ஏனைய சொத்துக்கள் பற்றிய பகுப்பாய்வு

| டிசம்பர் 31 அன்றுள்ளவாறு | 2024 ரூ. '000 | 2023 ரூ. '000 |
|---|---|---|
| **நிதியியல் சொத்துகள்** | | |
| அலுவலக மற்றும் முகவர் தொடர்புபட்ட கிடைக்கப்பெறத்தக்கவை | 477,551 | – |
| இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்திடமிருந்து கிடைக்க வேண்டிய தொகைகள் - தொடர்புடைய தரப்பினர் | 805,847 | 676 |
| ஏனைய கிடைக்கப்பெறத்தக்கவைகள் | 34,709 | 1,229 |
| **மொத்த நிதியியல் சொத்துகள்** | 1,318,107 | 1,905 |
| **நிதியல்லாச் சொத்துக்கள்** | | |
| பதிவேட்டு பொருட்கள் | 174,818 | – |
| முற்பணங்களும் கொடுப்பனவுகளும் | 90,328 | – |
| **மொத்த நிதியல்லா சொத்துகள்** | 265,146 | – |
| **மொத்த ஏனைய சொத்துகள்** | 1,583,253 | 1,905 |

## 12. பிற்போடப்பட்ட செலவுகள்

### கணக்கீட்டுக் கொள்கை

புதிய அல்லது மீள்புதுப்பித்தல் காப்புறுதி ஒப்பந்தங்களிலிருந்து தோன்றுகின்ற நிதியியல் காலப்பகுதியின் போது ஏற்படுகின்ற நேரடிச் செலவுகள் பிற்போடப்படுவதுடன் தொடர்புடைய வருவாய்கள் உழைக்கப்படுகின்ற காலத்தின் மீது பெறுமதி குறைப்புச் செய்யப்படுகின்றன. அனைத்து ஏனைய கையகப்படுத்தல் செலவுகளும் ஏற்படுகின்ற போது செலவொன்றாக இனங்காணப்படுகின்றன. கையகப்படுத்தல் செலவுகளுடன் தொடர்புடைய மீள் காப்பறுதி தரகுகளும் பிற்போடப்பட்டு தொடர்புடைய மொத்த பதியப்பட்ட கட்டுப்பணங்கள் உழைக்கப்படுகின்ற அதேகாலப்பகுதி மீது இனங்காணப்படுகின்றன.

இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட ஒழுங்குபடுத்தல் வழிகாட்டல்களுக்கமைவாக பிற்போடப்பட்ட கையகப்படுத்தப்பட்ட செலவுகள் மற்றும் பிற்போடப்பட்ட மீள் காப்புறுதி தரகு வருமானம் இரண்டும் 365 நாள் அடிப்படையில் கணிக்கப்படுகின்றன. இம்மீதிகள் தேறிய பிற்போடப்பட்ட கையகப்படுத்தல் செலவாக நிதியியல் கூற்றுகளில் தேறிய அடிப்படையில் எடுத்துரைக்கப்பட்டு, தொடர்புடைய பிற்போடப்பட்ட மீள் காப்புறுதி தரகு வருமானத்தை கழித்து பிற்போடப்பட்ட கையகப்படுத்தல் செலவுகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. தேறிய பிற்போடப்பட்ட மீதி தொடர்புபட்ட காப்புறுதி அல்லது மீள்காப்புறுதி ஒப்பந்தங்கள் ஒன்றில் தீர்ப்பனவு செய்யப்படுகின்ற போது அல்லது கையுதிர்க்கப்படுகின்ற போது இனங்காணப்படாது

| டிசம்பர் 31 அன்றுள்ளவாறு | 2024 ரூ. '000 | 2023 ரூ. '000 |
|---|---|---|
| **தேறிய பிற்போடப்பட்ட கையகப்படுத்தல் செலவுகள்** | | |
| ஜனவரி 01 அன்றுள்ளவாறு மீதி | – | – |
| இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்திடமிருந்து மாற்றல் | 743,475 | |
| பிற்போடப்பட்ட கையகப்படுத்தல் செலவுகளில் அதிகரிப்பு | 105,075 | – |
| **டிசம்பர் 31 அன்றுள்ளவாறு மீதி** | 848,550 | – |
| **பிற்போடப்பட்ட மீள்காப்புறுதி தரகு** | | |
| ஜனவரி 01 அன்றுள்ளவாறு மீதி | – | – |
| இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்திடமிருந்து மாற்றல் | (111,026) | |
| பிற்போடப்பட்ட கையகப்படுத்தல் செலவுகளில் அதிகரிப்பு | (4,958) | – |
| **டிசம்பர் 31அன்றுள்ளவாறு மீதி** | (115,984) | – |
| **தேறிய பிற்போடப்பட்ட கையகப்படுத்தல் செலவுகள்** | 732,566 | – |

## 13. காசும் காசுக்கு சமமானவைகளும்

### கணக்கீட்டுக் கொள்கை

காசும் காசுக்கு சமமானவைகளும் நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகள், காசு மீதிகள் மற்றும் மூன்று மாதங்களை கொண்ட முதிர்ச்சிகளுடன் கூடிய அவற்றின் சீர்மதிப்பு மாற்றங்களில் முக்கியமற்ற இடர்நேர்வு அத்துடன் அதன் குறுகிய கால கடமைப்பொறுப்புகளினை முகாமை செய்வதில் கம்பனியினால் கையகப்படுத்தல் திகதியிலிருந்து குறைவாகவுள்ள அழைப்பு வைப்புகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

கம்பனியின் காசு முகாமைத்துவத்தின் முக்கிய பாகமொன்றை தோற்றுவிக்கின்ற வங்கி மேலதிக பற்றுகள் ஏதுமிருப்பின் அவை காசுப்பாய்ச்சல் கூற்றில் காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் கூறாக வகைப்படுத்தப்படுகின்றன. எனினும், நிதி நிலைக் கூற்றில் வங்கி மேலதிக பற்றுகள் பொறுப்புகளின் கீழ் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

| டிசம்பர் 31 அன்றுள்ளவாறு | குறிப்பு | 2024 ரூ. '000 | 2023 ரூ. '000 |
|---|---|---|---|
| கையிலும் வங்கியிலும் உள்ள காசு | | 1,189,148 | 401,413 |
| குறுகிய கால முதலீடுகள் | | 2,602,341 | 177,987 |
| **மொத்த காசும் காசுக்கு சமமானவையும்** | | 3,791,489 | 579,400 |
| வங்கி மேலதிகப் பற்றுகள் | 24 | (268,146) | – |
| **காசுப்பாய்ச்சல் கூற்றில் காசும் காசுக்கு சமமானவைகளும்** | | 3,523,343 | 579,400 |

## 14. குறிப்பிடப்பட்ட மூலதனம்

### கணக்கீட்டுக் கொள்கை

**சாதாரண பங்குகள்**

சாதாரண பங்குகள் பங்குரிமை மூலதனமாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. சாதாரண பங்கு வழங்கலுக்கு நேரடியாக சாட்டத்தக்க அதிகரிக்கின்ற செலவுகள் ஏதேனும் வரித் தாக்கங்களை கழித்து பங்குரிமை மூலதனத்திலிருந்து கழிப்பொன்றாக இனங்காணப்பட்டுள்ளன.

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் ஒன்றில் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அல்லது நீதிமன்ற கட்டளையின் அடிப்படையில் அதன் சொந்த பங்குகளை கொள்வனவு செய்வதற்கு அல்லது கையேற்பதற்கு கம்பனி இயலுமையைக் கொண்டுள்ளது. சட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்குட்பட்டு அவற்றின் பங்கு மூலதனத்தையும் சொத்தாண்மை கட்டமைப்பையும் முகாமைசெய்வதில் கம்பனிகளின் நெகிழ்வுத் தன்மையை இவ்வேற்பாடு அனுமதிக்கின்றது.

அறிக்கையிடும் திகதியன்றுள்ளவாறு கம்பனியின் மொத்த குறிப்பிடப்பட்ட மூலதனம் ரூ 14 பில்லியனாகும். ஆண்டின் போது கம்பனி வேறுபடுத்தல் தேவைப்படுத்தலுக்கு உட்பட்டு பங்கொன்றுக்கு ரூ 10 கொண்ட விலையீட்டில் 1,350,000,000 சாதாரண பங்குகளை வழங்கியது. வழங்கப்பட்ட அனைத்து பங்குகளும் முழுமையாக கொடுப்பனவு செய்யப்பட்டவை. சாதாரண பங்குகளின் உடமையாளர்கள் காலத்திற்கு காலம் பணிப்பாளர் சபையினால் பிரகடனப்படுத்தப்பட்டவாறு பங்கிலாபங்களை பெறுவதற்கும் உரித்துடையவராவார்கள்.

### 14.1 1 சாதாரண பங்குகளின் அசைவுகள்

| டிசம்பர் 31 அன்றுள்ளவாறு | பங்குகளின் எண்ணிக்கை அளவு '000 | 2024 ரூ. '000 | 2023 ரூ. '000 |
|---|---|---|---|
| **வழங்கப்பட்டு முழுமையாக கொடுப்பனவு செய்யப்பட்டவை** | | | |
| ஜனவரி 01 அன்றுள்ளவாறு மீதி | 50,000 | 500,000 | 100,000 |
| வழங்கப்பட்ட பங்குகள் | 1,350,000 | 13,500,000 | 400,000 |
| | 1,400,000 | 14,000,000 | 500,000 |

14. குறிப்பிடப்பட்ட மூலதனம் (தொடர்ச்சி)

### 14.2 சாதாரண பங்குடமையாளர்களின் உரிமைகள்

கம்பனி பயன்பாட்டிலுள்ள சாதாரண பங்குகளின் ஒரு வகுப்பினை மாத்திரம் கொண்டுள்ளது. அனைத்து வழங்கப்பட்ட பங்குகளும் பொதுக் கூட்டங்களில் பங்கொன்றுக்கு ஒரு வாக்குக்கு பங்குடமையாளர் உரித்துடன் சமமான வாக்களிக்கும் உரிமைகளைக் கொண்டுள்ளது.

## 15. மட்டுப்படுத்தப்பட்ட மூலதன ஒதுக்கு

கணக்கீட்டுக் கொள்கை

வேறுபடுத்தல் திகதியன்றுள்ளவாறு பணிப்பாளர் சபை விசேட ஒதுக்கொன்றுக்கு ரூ. 1 பில்லியனை மேலதிகமாக ஒதுக்கீடுசெய்து நிதியியல் முன்மதி மற்றும் நீண்டகால உறுதிப்பாட்டுக்கான கம்பனியின் முன்னெடுக்கப்படுகின்ற கடமைப்பொறுப்பினை எடுத்துக்காட்டியது. இம்மட்டுப்படுத்தப்பட் மூலதன ஒதுக்கு (MF/LA/022/CM/2023/305) இலக்க 2023 டிசம்பர் 05 திகதியிடப்பட கடிதத்தில் விளக்கப்பட்டவாறு அமைச்சரவையின் அனுமதிக்கமைவாக தாபிக்கப்பட்டது.

| டிசம்பர் 31 அன்றுள்ளவாறு | 2024 ரூ. '000 | 2023 ரூ. '000 |
|---|---|---|
| விசேட ஒதுக்கு | 1,000,000 | – |
| | 1,000,000 | – |

## 16. மீள்விலைமதிப்பீட்டு ஒதுக்கு

### ஒதுக்கின் தன்மையும் நோக்கமும்

சொத்தொன்றின் மீள்விலைமதிப்பீட்டின் மீது கொண்டுசெல்லும் தொகையின் ஏதேனும் அதிகரிப்பு ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தினூடாக பங்குரிமை மூலதனத்தில் மீள்விலைமதிப்பீட்டு ஒதுக்கில் இனங்காணப்படுகின்றது அல்லது அதே சொத்தின் மீள்விலைமதிப்பீட்டின் முந்திய இழப்பை திரும்பல் செய்வதற்கு பயன்படுத்தப்படுகின்றது. இது வருமானக் கூற்றில் அறிவிடப்பட்டதாகும். இச்சூழ்நிலையில் அதிகரிப்பானது முன்னைய பெறுமதி குறைப்பு என்ற ரீதியல் மாத்திரம் வருமானமாக இனங்காணப்படுகிறது. கொண்டுள்ள தொகையின் ஏதேனும் குறைவு வருமானக் கூற்றில் செலவாக இனங்காணப்படுகின்றது அல்லது அச்சொத்து தொடர்பில் மீள்விலைமதிப்பீட்டில் காணப்படுகின்ற ஏதேனும் வரவு மீதி என்ற ரீதியியல் மாத்திரம் ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக பங்குரிமை மூலதனத்தில் மீள்விலைமதிப்பீட்டு ஒதுக்கிற்கு அறவிடப்படுகின்றது. சொத்தொன்று தொடர்பில் மீள்விலைமதிப்பீட்டு ஒதுக்கில் எஞ்சியிருக்கின்ற ஏதேனும் மீதி சொத்தின் ஓய்வு அல்லது கையுதிர்த்தல் மீது பிடித்து வைக்கப்பட்ட உழைப்புகளுக்கு நேரடியாக மாற்றல் செய்யப்படுகின்றது.

| டிசம்பர் 31 அன்றுள்ளவாறு | 2024 ரூ. '000 | 2023 ரூ. '000 |
|---|---|---|
| **ஜனவரி 01 உள்ளவாறு மீதி** | – | – |
| ஆண்டின் போது மீள் விலைமதிப்பீட்டு மிகை | 264,623 | – |
| தொடர்புடைய வரி (பிற்போடப்பட்ட வரி | (79,387) | – |
| **டிசம்பர் 31 அன்றுள்ளவாறு மீதி** | 185,236 | – |

## 17. விற்பனைக்காக கிடைக்கப்பெறும் ஒதுக்கு

### ஒதுக்கின் தன்மையும் நோக்கமும்

விற்பனைக்காக கிடைக்கும் ஒதுக்கு சொத்து இனங்காணப்படாத அல்லது சேதமிழக்கும் வரை விற்பனைக்காக கிடைக்கப்பெறும் நிதியியல் சொத்தின் சீர்மதிப்பு பெறுமதியில் ஒன்றுசேர்ந்த தேறிய மாற்றத்தை உள்ளடக்குகின்றது.

| டிசம்பர் 31 அன்றுள்ளவாறு | 2024 ரூ. '000 | 2023 ரூ. '000 |
|---|---|---|
| ஜனவரி 01 அன்றுள்ளவாறு மீதி | – | – |
| விற்பனைக்காக கிடைக்கும் நிதியியல் சொத்துக்களின் சீர்மதிப்பு பெறுமதியில் தேறிய மாற்றம் | 4,349,529 | – |
| தொடர்புடைய வரி (பிற்போடப்பட்ட வரி) | (167,377) | |
| **டிசம்பர் 31 அன்றுள்ளவாறு மீதி** | 4,182,152 | – |

## 18. வருமான ஒதுக்குகள்

| டிசம்பர் 31 அன்றுள்ளவாறு | 2024 ரூ. '000 | 2023 ரூ. '000 |
|---|---|---|
| ஜனவரி 01 அன்றுள்ளவாறு மீதி | 76,345 | 61,537 |
| ஆண்டுக்கான இலாபம் | 2,661,339 | 14,808 |
| வரையறை செய்யப்பட்ட நலத்திட்ட கணிப்பீட்டு இழப்புகள் | (180,910) | – |
| தொடர்புடைய வரி (பிற்போடப்பட்ட வரி) | 54,272 | – |
| **டிசம்பர் 31 அன்றுள்ளவாறு மீதி** | 2,611,046 | 76,345 |

## 19. மீள் காப்புறுதி ஒப்பந்த பொறுப்புக்கள்

கணக்கீட்டுக் கொள்கை

### இனங்காணலும் அளவீடும்

காப்புறுதி ஒப்பந்த பொறுப்புக்களானவை ஏற்பட்ட ஆனால் அறிக்கையிடப்படாத (IBNR) மற்றும் ஆனால் ஏற்பட்ட போதுமானளவு அறிக்கையிடப்படாத (IBNER) உள்ளடங்கலாக நிலுவையாக இருக்கின்ற கோரிக்கை ஏற்பாடு, உழைக்காத கட்டுப்பணதிற்கான ஏற்பாடு, கட்டுப்பண பற்றாக்குறைகான ஏற்பாடு என்பவற்றை உள்ளடக்குகின்றது.

உழைக்காத கட்டுப்பண ஒதுக்கின் விலைமதிப்பீடு 2000 இன் 43 ஆம் இலக்க காப்புறுதி தொழிற்துறை சட்டத்தின் ஒழுங்குவிதிகளின் வழிகாட்டல்களுக்கமைவாக செயலாற்றப்படுகின்றது அதாவது 365 அடிப்படையாக கொண்டு). எனினும், ஒப்பந்த காலப்பகுதியில் இருந்து குறிப்பிடத்தக்களவு வேறுபடுகின்ற இடர்நேர்வு காலப்பகுதிக்கான ஒப்பந்தங்களுக்காக கடடுப்பணங்கள் வழங்கப்பட்ட காப்புறுதி காப்பீட்டின் தொகைக்கு விகிதசமமாக இடர்நேர்வு காலப்பகுதியின் மீது ஈட்டப்படுகின்றன.

ஏற்பட்ட ஆனால் அறிக்கையிடப்படாத மற்றும் ஆனால் ஏற்பட்ட போதுமானளவு அறிக்கையிடப்படாத கோரிக்கைகள் ஒதுக்கு கணிப்பீடு ரீதியாக கணிப்பிடப்படுகின்றன.

சமப்படுத்தலுக்கு அல்லது அனர்த்த ஒதுக்கிற்கான ஏற்பாடு எதுவும் இனங்காணப்படவில்லை. கோரிக்கை காலாவதி நிறைவேற்றல் அல்லது காலாவதி அடைகின்ற கோரிக்கையொன்றிற்கு கொடுப்பனவு செய்வதற்கான கடப்பாடடைக் கருத்திற் கொள்ளாத போது அல்லது இரத்துச் செய்யப்படுகின்றபோது பொறுப்புக்கள் இனங்காணப்படுவதில்லை.

இகநி 04 – "காப்புறுதி ஒப்பந்தங்கள்" மூலம் வேண்டப்பட்டவாறு வெளிவாரியான கணிப்பீட்டு உதவிக்கமைவாக காப்புறுதி ஒப்பந்த பொறுப்புக்கள் தொடர்பில் கம்பனி பொறுப்பு போதுமை பரிசோதனையினை செயலாற்றியது.

## 19. மீள் காப்புறுதி ஒப்பந்த பொறுப்புக்கள் (தொடர்ச்சி)

### உரித்துக் காப்புறுதி ஒதுக்கு

உரித்துக் காப்புறுதி ஒதுக்கானது உரித்துக் காப்புறுதி பூட்கைகளிலிருந்து தோன்றுகின்ற சாத்தியமான கோரிக்கைகளிற்கு கொடுப்பனவு செய்வதற்கு கம்பனி மூலம் பேணப்படுகின்றது. உரித்துக் காப்புறுதி பூட்கைகள் ஐந்து ஆண்டு அல்லது அதற்கு மேற்பட்டவை போன்ற நீண்ட காலங்களுக்காக வழங்கப்படுகின்றன. ஆகையினால் அவ்வாண்டில் கோரிக்கைகள் நிகழ்கின்ற உயர்வான சாத்தியத்தினை கருத்திற்கொண்டு பூட்கையின் முதலாம் ஆண்டில் இலாபம் எதுவும் இனங்காணப்படவில்லை. இரண்டாம் ஆண்டில் தொடங்கி கிடைக்கப்பெற்ற கட்டுப்பணத்தை பெறுமதிக் குறைப்ப செய்வதன் மூலம் இலாபம் இனங்காணப்படுவதுடன் நேர்கோட்டு முறையினை பயன்படுத்தி பூட்கையின் எஞ்சியிருக்கின்ற காலப்பகுதி முழுவதும் பரவச் செய்யப்படுகின்றது. முதல் ஆண்டுக்கான இலாபம் இரண்டாம் ஆண்டிலேயே இனங்காணப்படும் என்பதுடன் அதன் பின்னர் காலமுறையாக இனங்காணப்படுகின்றது.

வழங்கப்பட்ட உரித்துக் காப்புறுதி பூட்கையின் நேரொத்த கடன் முதிர்வுக்கு முன்னர் தீர்ப்பனவு செய்யப்படுமாயின் அத்தகைய கடனின் தீர்ப்பனவு திகதியன்றுள்ளவாறு எஞ்சியிருக்கின்ற அத்தகைய பூட்கைகளின் முழுமையான கட்டுப்பணம் உரிய வங்கி மூலம் அதன் உறுதிப்படுத்தலின் மீது அதன் இலாபத்தில் இல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றது.

நிதியியல் நிலைக்கூற்றில் காண்பிக்கப்பட்டவாறு காப்புறுதி ஒதுக்குகள் பின்வருவனவற்றை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

| டிசம்பர் 31 அன்றுள்ளவாறு | குறிப்பு | 2024 ரூ. '000 | 2023 ரூ. '000 |
|---|---|---|---|
| தேறிய உழைக்கப்படாத கட்டுப்பணத்திற்கான ஒதுக்கு | 19.1 | 10,106,019 | – |
| உரித்துக் காப்புறுதிக்கான ஒதுக்கு மற்றும் காலாவதியடையாத இடர்நேர்வு ஒதுக்கு | 19.2 | 724,919 | |
| மொத்த நிலுவை கோரிக்கைகளுக்கான ஒதுக்கு | 19.3 | 9,610,327 | – |
| | | 20,441,265 | – |

### 19.1 தேறிய உழைக்கப்படாத கட்டுப்பணத்திற்கான ஒதுக்கு

| டிசம்பர் 31 அன்றுள்ளவாறு | 2024 ரூ. '000 | 2023 ரூ. '000 |
|---|---|---|
| **உழைக்கப்படாத கட்டுப்பணத்திற்கான ஒதுக்கு** | | |
| இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்திடமிருந்து மாற்றல் | – | – |
| ஜனவரி 01 அன்றுள்ளவாறு மீதி | 11,930,292 | – |
| ஆண்டின் போது மாற்றல் | (497,104) | – |
| **டிசம்பர் 31 அன்றுள்ளவாறு மீதி** | 11,433,188 | – |
| **உழைக்கப்படாத மீள் காப்புறுதி கட்டுப்பணத்திற்கான ஒதுக்கு** | | |
| ஜனவரி 01 அன்றுள்ளவாறு மீதி | – | – |
| ஆண்டின் போது மாற்றல் | (1,759,450) | – |
| ஆண்டின் போது மாற்றல் | 432,281 | – |
| **டிசம்பர் 31 அன்றுள்ளவாறு மீதி** | (1,327,169) | – |
- செயற்பாடுமிக்க சந்தைகளில் வர்த்தகப்படுத்தப்படாத பட்டியலிட்ட தொகுதிக்கடன்களின் சீர்மதிப்பு பெறுமதிகள் ஒப்பீட்டளவில் புதிதாக வழங்கப்படும் நிறுவன படுகடன் சாதனங்கள் கொண்டுள்ள அதனையொத்த முதிர்ச்சிகள் மற்றும் கொடுகடன் தரப்படுத்தல்களின் சந்தை விளைவுகளில் எதிர்கால காசுப்பாய்ச்சல்களை கழிவீடு செய்து இது தீர்மானிக்கப்படுகிறது.
- யுனிட் டிரஸ்ட்களின் சீர்மதிப்பு பெறுமதிகள் யுனிட் டிரஸ்ட் முகாமைத்துவ கம்பனிகள் மூலம் விலை குறிக்கப்படுவதனால் அவற்றின் விலைக் கொரல் விலைகளை அடிப்படையாக கொண்டவை
- பட்டியலிடப்படாத பங்குகளின் சீர்மதிப்பு பெறுமதிகள் கம்பனி கிரமமான பங்கிலாபங்களை கொடுப்பனவு செய்யுமிடத்து கழிவு செய்யப்பட்ட காசுப்பாய்ச்சல் முறையினை பயன்படுத்தி பெறுவிக்கப்படுகின்றன. வேறு வகையில் சீர்மதிப்பு பெறுமதியானது தேறி சொத்து பெறுமதியினை அடிப்படையாக கொண்டிருக்கும்.

## 37. சீர்மதிப்பு பெறுமதிகளை நிர்ணயிப்பதில் பயன்படுத்தப்படும் விலை மதிப்பீட்டு நுட்பங்கள் (தொடர்ச்சி)

இவ் ஆண்டறிக்கையின் பயன்பாட்டாளர்களுக்கு முக்கியமான அரசாங்கம் தொடர்புபட்ட நிறுவனங்களுடனான அனைத்து நிலுவை மீதிகளும் கீழே அட்டவணைபடுத்தப்பட்டுள்ளன.

| கொடுக்கல் வாங்கலின் தன்மை கம்பனியின்/நிறுவனத்தின் பெயர் 2024 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு | இலங்கை வங்கி ரூ. '000 | மக்கள் வங்கி ரூ. '000 | ஸ்ரீ லங்கா டெலிகொம் பிஎல்சி ரூ. '000 | இலங்கை மின்சார சபை ரூ. '000 |
|---|---|---|---|---|
| பட்டியலிடப்பட்ட தொகுதிக்கடன்கள் | 501,027 | – | – | 1,008,602 |
| பட்டியலிடப்படாத தொகுதிக்கடனகள் | 1,001,589 | 507,013 | – | – |
| தவணை வைப்புகள் | 1,626,710 | – | – | – |
| தவணை பங்குகள் | – | – | 17,004 | – |
| | 3,129,326 | 507,013 | 17,004 | 1,008,602 |

## 38. காப்புறுதி மற்றும் நிதியியல் இடர்நேர்வு முகாமைத்துவம்

### பொதுநோக்கு

கம்பனி உள்ளாகின்ற இடர்நேர்வுகளின் முக்கிய வகைகள் மற்றும் அத்தகைய இடர்நேர்வுகளை அளவிடுவதற்கும் முகாமைசெய்வதற்குமான தொடர்புடைய கொள்கைகள்/செயன்முறைகள் கீழே தரப்பட்டுள்ளன.

- உபாய ரீதியிலான இடர்நேர்வு
- காப்புறுதித் தொழில்சார் இடர்நேர்வு
- நிதியியல் இடர்நேர்வு
- தொழிற்பாட்டு ரீதியிலான இடர்நேர்வு

இவ்விடர்நேர்வுகளை அளவிடுவதற்கும் முகாமைத்துவம் செய்வதற்கும் நிறுவப்பட்ட குறிக்கோள்கள், கொள்கைகள் மற்றும் செயன்முறைகள் என்பவற்றுடன் இணைந்து, மேற்கூறிய ஒவ்வோர் இடர்நேர்விற்குமான கம்பனியின் வெளிப்படுத்துகையானது இலங்கை நிதியியல் அறிக்கையிடல் தரநியமங்கள் 4 மற்றும் இலங்கை நிதியியல் அறிக்கையிடல் தரநியமங்கள் 7 என்பவற்றின் தேவைப்பாடுகளுக்கமைவானதாகும். இவ்விடர்நேர்வுகளுடன் தொடர்புடைய கணியம்சார் வெளிப்படுத்துகைகளையும் குறிப்பு உள்ளடக்கின்றது.

### இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு

ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பொதுக் காப்புறுதியானது அதன் தொழில்முயற்சிசார் இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கான சர்வதேச தரநியம அமைப்பின் 31000 (2018) இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பைப் பின்பற்றுகின்றது. கம்பனியின் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பின் முதன்மைக் குறிக்கோளானது நிதியியல் குறிக்கோள்களின் நீடித்துநிலைத்திருக்கின்ற வழங்குதலினைத் தடுக்கக்கூடிய நிகழ்வுகளிலிருந்து கம்பனியின் ஆர்வலர்களைப் பாதுகாப்பதாகும். இடர்நேர்வு முகாமைத்துவச் செயன்முறையானது கம்பனியின் தொழிற்பாடுகள் மற்றும் உபாயம் என்பவற்றுடன் தொடர்புடைய தற்போதைய மற்றும் சாத்தியமான இடர்நேர்வுகளை அடையாளங்கண்டு, மதிப்பீடுசெய்தல் மற்றும் அதனைத்தொடர்ந்து சகிப்புத்தன்மை, தணிப்பு, மாற்றல், தவிர்ப்பு, முடிவுறுத்தல் அல்லது அத்தகைய பதிலிறுப்புக்களின் தொகுப்பு போன்ற பொருத்தமான முகாமைத்துவப் பதிலிறுப்புக்கள் என்பவற்றினை உள்ளடக்கியது.

கம்பனியின் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பின் நிறுவுகை மற்றும் மேற்பார்வைக்கான ஒட்டுமொத்த பொறுப்புடமையினைக் கம்பனியின் பணிப்பாளர் சபை (சபை) கொண்டுள்ளது. கம்பனியின் ஒட்டுமொத்த இடர்நேர்வு முகாமைத்துவத்தினை மேற்பார்வையிடுவதில் ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பொதுக் காப்புறுதியின் பணிப்பாளர் சபையானது சபை இடர்நேர்வு முகாமைத்துவத் துணைக்குழுவிடமிருந்து உதவியினைப் பெற்றுக்கொள்கின்றது. இடர்நேர்வு முகாமைத்துவமானது இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் நிறுவன ரீதியிலான உபாயத்தின் ஒருங்கிணைந்த பகுதியென்பதனை நிச்சயப்படுத்துவதில் துணைக்குழு முக்கிய பங்கு வகிக்கின்றது. இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் வரையறுக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் பொதுக் காப்புறுதியின் உபாயம் மற்றும் இடர்நேர்வு நாட்டம் மற்றும் சகிப்புத்தன்மை ஆகியவற்றுடன் ஒத்திசைந்து செல்கின்றதென்பதனை நிச்சயப்படுத்துவதனை இத்துணைக்குழுவின் பொறுப்புடமைகள் உள்ளடக்கின்றன. கம்பனியினால் எதிர்கொள்ளப்படுகின்ற இடர்நேர்வினை அடையாளங்கண்டு பகுப்பாய்வு செய்தல், பொருத்தமான இடர்நேர்வு எல்லைகள் மற்றும் கட்டுப்பாடுகளை நிர்ணயித்தல் மற்றும் இடர்நேர்வுகளைக் கண்காணித்தல் மற்றும் எல்லைகளிற்கான பின்பற்றுகை என்பவற்றினை மேற்கொள்ளும் பொருட்டு கம்பனியின் இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கை நிறுவப்பட்டுள்ளது. அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கான கம்பனித்துறை ஆளுகை குறித்த வழிகாட்டுதல்களின் பிரகாரம் நிதியியல் பிரச்சனைகள் மாத்திரமன்றி, இணையப் பாதுகாப்பு, பொறிமுறையாக்க நிலையுடன் தொடர்புடைய நீடித்துநிலைத்திருக்கின்றதன்மைசார் பிரச்சனைகள் மற்றும் தொழிற்படையில் அவசியமான தேர்ச்சிகளின் கிடைப்பனவாகுந்தன்மை என்பன உள்ளடங்கலாக தொழிற்பாட்டு ரீதியிலான பிரச்சனைகளிலும் கவனம் செலுத்துதலுடன் இணைந்து இடர்நேர்வு முகாமைத்துவம் தொடர்பிலான கலந்துரையாடல்களுக்குச் சபைக் கூட்டங்களில் கிரமமான மற்றும் போதியளவிலான நேரத்தினை ஒதுக்குவதனை இது தேவைப்படுத்துகின்றது. தொழில்முயற்சிசார் இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கையானது ஆண்டுதோறும் மற்றும் ஏதேனும் பாரியளவிலான சம்பவத்திற்குப் பின்னரும் மீளாய்வு செய்யப்படுகின்றது.

சபை இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவானது இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பின் நடைமுறைப்படுத்தலிற்குப் பொறுப்பாகக் காணப்படுகின்றது. சபை இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவானது குறைந்தபட்சம் மூன்று சபை உறுப்பினர்களைக் கொண்டுள்ளதுடன், அவர்களில் பெரும்பான்மையானோர் நிறைவேற்றுத் தரமற்ற பணிப்பாளர்களாக இருக்க வேண்டுமென்பதுடன் சுயாதீனமான நிறைவேற்றுத் தரமற்ற பணிப்பாளரொருவரினால் தலைமை தாங்கப்பட வேண்டும். முதன்மை நிறைவேற்று அலுவலர் மற்றும் முதன்மை நிதியியல் அலுவலர் ஆகியோர் குழுவின் அனைத்துக் கூட்டங்களிலும் கலந்து கொள்ளத் தேவைப்படுத்தப்பட்டுள்ளனர். முதன்மைத் தகவல் அலுவலர் மற்றும் உபாய ரீதியிலான தொழில் அலகுகளின் தலைவர்கள் ஆகியோர் தேவைக்கேற்ப கலந்து கொள்வதற்கு அழைக்கப்படுகின்றனர். நடைமுறைப்படுத்தலினை மேம்படுத்தல், இற்றைப்படுத்தல், நடைமுறைப்படுத்தல் மற்றும் கண்காணித்தல் என்பவற்றில் சபை இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவானது மேற்பார்வை வகிபாகமொன்றினைக் கொண்டுள்ளது.

நிதியியல் இடர்நேர்வு முகாமைத்துவமானது பண்பு சார்ந்ததாகவும் கணியம் சார்ந்ததாகவும் காணப்பட முடியும். இடர்நேர்வு முகாமைத்துவத்தின் நிபுணத்துவமொன்றாக, நிதியியல் இடர்நேர்வு முகாமைத்துவமானது விலையுயர்வுமிக்க வெளிப்பாடுகளை முகாமைத்துவம் செய்வதற்கு நிதியியல் சாதனங்களை எப்போது மற்றும் எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதில் கவனம் செலுத்துகின்றது.

### ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு

இலங்கைக் காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவானது 2000ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க காப்புறுதித் தொழிலை ஒழுங்குமுறைப்படுத்துகின்ற சட்டம் மற்றும் அதனைத் தொடர்ந்துவந்த திருத்தங்கள் என்பவற்றுடன் இசைந்து செல்லும் விதத்தில் காப்புறுதிக் கம்பனிகளின் மேற்பார்வைக் கட்டுப்பாட்டினூடாக பூட்கை உடமையாளர்களைப் பாதுகாக்கின்றது. எதிர்பாராத நிகழ்வுகளிலிருந்து தோற்றம்பெறுகின்ற இடர்நேர்வுகளை எதிர்கொள்ளும் பொருட்டு விஞ்சியளவிலான பொறுப்புக்களில் கம்பனி ஏற்றுக்கொள்ளக்கூடிய மற்றும் ஒப்புதலளிக்கப்பட்ட முதலீடுகளை பொருத்தமான மட்டத்தில் பேணுகின்றதென்பதனை நிச்சயப்படுத்துவதற்குக் கடன் தீராற்றல் நிலை மற்றும் தேர்மானத் தேவைப்பாடுகள் தொடர்பான விதிமுறைகளுடன் கம்பனி இணங்கியொழுகத் தேவைப்படுத்தப்படுகின்றது. மேலும், கம்பனி இலங்கைக் காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் வழிகாட்டுதல்களின் பிரகாரம் இடர்நேர்வின் அடிப்படையிலான மூலதனத் தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகின்றது. மேலும், இலங்கைக் காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் 17ஆம் பணிப்புரையின் பயனைக்கொண்டு காப்புறுதிக் கம்பனிகள் இணங்கியொழுக வேண்டிய கட்டாயத்தில் காணப்படுகின்ற இலங்கைப் பட்டயக் கணக்காளர்களின் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட கம்பனித்துறை ஆளுகைக் கோவை 2023ஆனது இடர்நேர்வு முகாமைத்துவம் தொடர்பான ஆளுகைக் கட்டமைப்பினை வழங்குகின்றது.

இடர்நேர்வின் அடிப்படையிலான மூலதனத் தேவைப்பாட்டிற்கு ஆதரவளிக்கும் பொருட்டு கம்பனியானது போதியளவான மொத்த கிடைப்பனவாகவுள்ள மூலதனத்தைக் கொண்டுள்ளது.

கம்பனியின் தொழிற்பாடுகள் இலங்கையின் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு, இலங்கை மத்திய வங்கி மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் போன்ற பல்வேறு ஏனைய ஒழுங்குமுறைப்படுத்துநர்களினதும் மேற்பார்வைக்கு உட்பட்டதாகக் காணப்படுகின்றன. 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தினாலும் கம்பனியானது ஒழுங்குமுறைப்படுத்தப்படுகிறது.

## 38. காப்புறுதி மற்றும் நிதியியல் இடர்நேர்வு முகாமைத்துவம் (தொடர்ச்சி)

**ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு (தொடர்ச்சி)**

2024 டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறு கம்பனியின் மொத்த கிடைப்பனவாகவுள்ள மூலதனம் மற்றும் மூலதனப் போதுமை விகிதம் என்பன பின்வருமாறு;

| 2024 டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறு | கம்பனி | குறைந்தபட்ச ஒழுங்கு முறைப்படுத்தல் தேவைப்பாடு |
|---|---|---|
| மொத்த கிடைப்பனவாகவுள்ள மூலதனம் (ரூ. '000) | 21,285,844 | 500,000 |
| இடர்நேர்வின் அடிப்படையிலான மூலதனத் தேவைப்பாடு (ரூ. '000) | 7,674,812 | 416,667 |
| இடர்நேர்வின் அடிப்படையிலான மூலதனப் போதுமை விகிதம் (%) | 277.35 | 120 |

### 38.1 உபாய ரீதியிலான இடர்நேர்வு

பாதகமான வியாபாரத் தீர்மானங்கள், தீர்மானங்களை முறையற்ற விதத்தில் நடைமுறைப்படுத்தல் அல்லது தொழில்துறை, ஒழுங்குமுறைப்படுத்தல் அல்லது பேரண்டப்பொருளாதார மாற்றங்களுக்குப் பதிலிறுத்தத் தவறுதல் என்பவற்றிலிருந்து உபாய ரீதியிலான இடர்நேர்வு தோற்றம்பெறுகின்றது. இவ்விடர்நேர்வுகள் கம்பனித்துறைக் குறிக்கோள்களினை அடையத் தவறுதல், குறைந்தளவிலான போட்டித்தன்மை மற்றும் நற்பெயருக்குச் சேதம் விளைவித்தல் என்பவற்றினைத் தோற்றுவிக்க முடியும்.

**இடர்நேர்வுசார் பதிலிறுப்பு உபாயங்கள்**

பணிப்பாளர் சபையின் பிரதிநிதித்துவத்துடன் உபாய மீளாய்வுக் குழுவொன்றினைக் கம்பனி நிறுவியுள்ளதுடன், இது கம்பனியின் உபாய ரீதியிலான திட்டங்கள், இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை மீளாய்வு செய்து, மதிப்பீடு செய்வதானது கம்பனியின் பணி, தூரநோக்கு மற்றும் மைய விழுமியங்களுடன் ஒத்திசைந்து செல்வதனை நிச்சயப்படுத்துகின்றது. மேலும், குழு அதன் உபாய ரீதியிலான குறிக்கோள்களை நோக்கிய கம்பனியின் முன்னேற்றத்தினைத் தொடர்ந்து கண்காணித்து மதிப்பீடு செய்வதுடன் முக்கிய செயலாற்றக் குறிகாட்டிகளைப் பகுப்பாய்வு செய்து, குறிப்பிடப்பட்ட இலக்குகளை நோக்கி மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்றத்தினை மதிப்பீடு செய்கின்றது.

### 38.2 காப்புறுதித் தொழில்சார் இடர்நேர்வு

பொதுவான காப்புறுதி ஒப்பந்தமொன்று என்பது பூட்கை உடமையாளருக்கும் காப்பீட்டாளருக்கும் இடையிலான உடன்படிக்கையொன்றாகக் காணப்படுவதுடன், இதில் பூட்கை உடமையாளரை மோசமாகப் பாதிக்கின்ற, குறித்துரைக்கப்பட்ட எதிர்பாராத நிகழ்வுவொன்று நடைபெறும் பட்சத்தில் கட்டுப்பணத்திற்கு ஈடாக உடமையாளருக்குக் காப்பீட்டாளர் இழப்பீடு வழங்க உடன்படுகின்றார்.

கம்பனி முதன்மையாக மோட்டார், தீ, பொறியியல், கடல், மருத்துவம், உரித்து, தொழிலாளர்கள் இழப்பீடு மற்றும் நானாவிதக் காப்புறுதி ஒப்பந்தங்களை வழங்குகின்றது. பொதுக் காப்புறுதி ஒப்பந்தங்கள் பெரும்பாலும் ஒரு வருட காலப்பகுதியொன்றிற்கு வழங்கப்படுகின்றன. கடல்சார் காப்புறுதி ஒப்பந்தங்கள் ஒரு வருடத்திற்குக் குறைவான காப்புறுதிக் காலப்பகுதியினைக் கொண்டுள்ளதுடன் உரித்துக் காப்புறுதி மற்றும் சில தீ மற்றும் பொறியியல்சார் ஒப்பந்தங்கள் ஒரு வருடத்தினை விஞ்சிய காலப்பகுதியொன்றிற்கு வழங்கப்படலாம் என்பது விதிவிலக்குகளாகக் காணப்படுகின்றன.

பின்வரும் அட்டவணையானது மீள்காப்புறுதிக்கு முன்னரும் மீள்காப்புறுதிக்குப் பின்னருமான நேரடி எழுதப்பட்ட கட்டுப்பணங்களின் அடிப்படையிலான தொழில் வரிசை மூலம் பொதுக் காப்புறுதித் தொழிலினுள் குழுமத்தின் இடர்நேர்வு செறிவினைக் காட்டுகின்றது.

| 2024 டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறு<br>வகுப்பு | மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம்<br>ரூ. '000 | மீள்காப்புறுதி<br>ரூ. '000 | தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கு ஒப்படைக்கப்பட்ட தொகைகள்<br>ரூ. '000 | தேறிய எழுதப்பட்ட கட்டுப்பணம்<br>ரூ. '000 | % |
|---|---|---|---|---|---|
| மோட்டார் | 13,189,328 | 150,618 | 1,975,623 | 11,063,087 | 67 |
| தீ | 2,842,920 | 1,558,067 | 826,491 | 458,362 | 3 |
| கடல் | 872,291 | 572,311 | 7,206 | 292,774 | 2 |
| ஏனையவை | 6,666,109 | 1,827,898 | 79,931 | 4,758,280 | 29 |
| | 23,570,648 | 4,108,894 | 2,889,251 | 16,572,503 | 100 |

#### 38.2.1 உற்பத்தி வடிவமைப்புசார் இடர்நேர்வு

காலநிலை மாற்றம், இயற்கைப் பேரழிவுகள், பயங்கரவாத நடவடிக்கைகள், மாற்றமடைகின்ற வாழ்க்கை முறைகள் காரணமாக மக்களின் நடத்தைப் போக்குகள், தொற்றுநோய்கள் மற்றும் மருத்துவக் காப்புறுதியின் விடயத்தில் மருத்துவ விஞ்ஞானம்/தொழில்நுட்ப மேம்பாடுகள், நாணய வீத மாற்றங்கள் காரணமாக ஏற்பட்ட செலவுகளின் வலுவான அதிகரிப்பு மற்றும் மோட்டார் தொழில்துறையில் உதிரிப் பாகங்கள் தொடர்பில் ஏற்பட்ட பணவீக்கம் போன்றவற்றின் விளைவுகளின் அடிப்படையிலமைந்த காலங்கடந்த/துல்லியமற்ற கணிப்புக்கள் காரணமாக பொதுக் காப்புறுதித் தயாரிப்பு விலையிடல்சார் இடர்நேர்வானது போதுமானதாகக் காணப்படவில்லையென்பதுடன், இழப்புக்களைத் தோற்றுவித்தன.

**இடர்நேர்வுசார் பதிலிறுப்பு உபாயங்கள்**

- காப்புறுதி ஒப்பந்தங்கள் மற்றும் புவியியல் பகுதிகளின் பாரியளவிலான திட்ட வகையொன்றினைப் பன்முகப்படுத்தல் மற்றும் இடர்நேர்வினைப் பரப்புவதற்காக வழங்கப்பட்ட கொள்கைகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்.
- விலையிடலில் போதியளவிலான மீள்காப்புறுதி ஏற்பாடுகளைக் கருத்திற்கொள்ளல்.
- வெள்ளம், பயங்கரவாத நடவடிக்கைகள், அரசியல் சூழல் மற்றும் பொருளாதாரக் காரணிகள் போன்ற வெளிப்புறக் காரணிகளைக் கண்காணித்தல் மற்றும் அதற்கேற்ப விலையிடலினை மேம்படுத்தல்.

## 38. காப்புறுதி மற்றும் நிதியியல் இடர்நேர்வு முகாமைத்துவம் (தொடர்ச்சி)

### 38.2.2 காப்பீடு சார் இடர்நேர்வு

காப்புறுதிசெய்யப்பட்ட நிகழ்வு அல்லது எதிர்பாராத நிகழ்வு ஏற்படுமாயின், கோரல்களை ஈடுசெய்ய பூட்கை உடமையாளரிடமிருந்து பெறப்பட்ட கட்டுப்பணங்களின் பற்றாக்குறை காரணமாக இவ்விடர்நேர்வு தோற்றம்பெறுகின்றது.

### இடர்நேர்வுசார் பதிலிறுப்பு உபாயங்கள்

இடர்நேர்வு வகை மற்றும் காப்பீட்டு நன்மைகளின் மட்டம் ஆகியவற்றிற்கமைய பன்முகப்படுத்தப்பட்ட இடர்நேர்வுகளை உறுதிசெய்யும் பொருட்டு பொறுப்பேற்றல் உபாயங்களின் கவனமான தேர்ந்தெடுப்பு மற்றும் நடைமுறைப்படுத்தல் என்பன வடிவமைக்கப்பட்டுள்ளன.

பொறுப்பேற்றல் அலுவலர் மற்றும் விநியோக வலையமைப்புக் குழுவின் பயிற்சி மற்றும் அபிவிருத்தியானது தொழில்நுட்ப அறிவை மேம்படுத்துவதனை இலக்காகக் கொண்டு கட்டமைக்கப்பட்ட உள்ளகப் பயிற்சி மற்றும் அபிவிருத்திப் பாடசாலையொன்றான "பொதுக் காப்புறுதிக் கல்விக்கழகத்தின்" ஊடான நடவடிக்கைகளையும் உள்ளடக்கின்றது.

அனைத்து வாடிக்கையாளர் சுயவிவரங்கள் மற்றும் இழப்பினை ஏற்படுத்துகின்ற வாடிக்கையாளர்கள் குறித்து பேணப்பட்ட புள்ளிவிவரவியல் தரவுத்தளங்கள் உபாய ரீதியில் மீளாய்வுசெய்யப்பட்டன.

தற்காலிக காப்பீட்டு ஆவணங்களை வழங்குவதற்கும் அத்தகைய ஆவணங்களை 60 நாட்கள் வரையான செல்லுபடியாகும் காலத்திற்கு வரையறைசெய்வதற்கும் கடுமையான கட்டுப்பாடுகள் பேணப்படுகின்றன.

இடர்நேர்வு நாட்டத்தின் அடிப்படையிலமைந்த மோட்டார் சராசரி கட்டுப்பணத்தின் நாளாந்த கண்காணிப்பு.

உள்வாரியான வெள்ள வரைபடமிடல் மற்றும் கடந்த கால பேரழிவுச் சம்பவங்களுடனான ஒருங்கமைவு ஆகியன பொறுப்பேற்றலில் கருத்திற்கொள்ளப்படுகின்றன.

பொறுப்பேற்பாளர்கள் மற்றும் விநியோக முகாமையாளர்கள் ஆகியோர் மொத்த வருமானம் மற்றும் இலாபத்தன்மை ஆகிய இரண்டிலுமான முக்கிய செயலாற்றக் குறிகாட்டிகளிற்கு ஒதுக்கப்படுவதானது கம்பனியின் குறிக்கோள்களின் ஒருங்கமைவினை நிச்சயப்படுத்துகின்றது.

மோட்டார் காப்புறுதி விலையிடலானது இடர்நேர்வின் அடிப்படையிலமைந்த விலையிடல் கட்டமொன்றின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது.

உத்தரவாதமளிக்கப்பட்ட தொகை மற்றும் இடர்நேர்வு என்பவற்றின் அடிப்படையில் பொறுப்பேற்பதற்கான வரையறைகளைத் தெளிவாகப் பரிந்துரைப்பதற்கு நிதியியல் ரீதியிலான அதிகார வரையறைகள் காணப்படுகின்றன.

### 38.2.3 மீள்காப்புறுதிசார் இடர்நேர்வு

போதியளவிலான மீள்காப்புறுதியின்றி கம்பனியின் தேறிய தக்கவைப்பு இயலளவிற்கு அப்பாற்பட்ட இடர்நேர்வுகளைத் தக்கவைத்துக்கொள்ளல் மற்றும்/அல்லது போதியளவிலற்ற நிதியியல் வலிமை மற்றும் உரிய நேரத்தில் கடப்பாடுகளை நிறைவேற்ற முடியாமை காரணமாக மீள்காப்புறுதியாளர்கள் தமது கடமைகளை நிறைவேற்ற முடியாமை காரணமாக மீள்காப்புறுதிசார் இடர்நேர்வு தோற்றம்பெறுகின்றது.

கோரல்கள் மீதான மீள்காப்புறுதி மீட்டெடுப்புகள் ஒவ்வோர் இடர்நேர்வு தொடர்பிலும் மேற்கொள்ளப்பட்ட ஒப்படைப்பினை அடிப்படையாகக் கொண்டுள்ளதுடன் இழப்புக்கான நிலுவையிலுள்ள கோரல் ஒதுக்கீடுகளுடன் ஒத்திசைந்து செல்லும் விதத்தில் மதிப்பிடப்படுகின்றன. முன்மதியுடைய மீள்காப்புறுதி ஏற்பாடுகளினூடாக எமது வெளிப்பாடுகளை நாம் தணிக்கின்ற போதிலும், பூட்கை உடமையாளர்களிடமிருந்து வருகின்ற கோரல்களைப் பூர்த்தி செய்வதற்கான கடப்பாடுகள் கம்பனியிடம் காணப்படுகின்றது. மீள்காப்புறுதியாளர்களின் தவறுகையானது கடமையை இல்லாதொழிப்பதில்லையென்பதுடன் அவ்விடயத்தில் கம்பனி ஒவ்வொரு மீள்காப்புறுதியாளருக்கும் ஒப்படைக்கப்பட்ட அளவிற்கு கொடுகடன் இடர்நேர்வொன்றினைக் கொண்டுள்ளது.

கம்பனியின் மீள்காப்புறுதி ஒதுக்கீடானது மீள்காப்புறுதியாளரொருவரைச் சார்ந்தோ அல்லது எந்தவொரு மீள்காப்புறுதி ஒப்பந்தமொன்றினையும் கணிசமானளவில் சார்ந்தோ இருக்காத விதத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. அனைத்து மீள்காப்புறுதி ஒப்பந்தங்களும் ஆண்டுதோறும் மீளாய்வு செய்யப்பட்டு, மீள்காப்புறுதியாளர்களின் கவனமான தேர்வின் அடிப்படையில் புதுப்பிக்கப்படுகின்றன. அனைத்துப் பொதுக் காப்புறுதி மீள்காப்புறுதி ஒப்பந்தங்களும் இலங்கைக் காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச தரமிடலிலும் பார்க்க கொடுகடன் தரமிடல்களினை வைத்திருக்கின்ற கம்பனிகளுடன் காணப்படுகின்றன.

### இடர்நேர்வுசார் பதிலிறுப்பு உபாயங்கள்

- இலங்கைக் காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் வழிகாட்டுதல்களுக்கு உட்பட்டு போதியளவிலான மீள்காப்புறுதி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் பேரழிவு/தீவிர நிகழ்வுகளைக் கருத்திற்கொண்டு காப்பீடுகளின் போதுமானளவு குறித்து தொடர்ந்து மீளாய்வு செய்யப்படுகின்றன.
- விகிதாசார மீள்காப்புறுதியின் பெரும்பகுதியானது அநேகமான வணிக வகுப்புக்களுக்கான துணை நிறுவனத்தின் ஒட்டுமொத்த வெளிப்பாட்டினைக் குறைப்பதற்கு ஒதுக்கீட்டுப் பகிர்வு மீள்காப்புறுதியாகக் காணப்படுகின்றது. முதன்மையாக விஞ்சியளவிலான இழப்பு மீள்காப்புறுதியாகப் பயன்படுத்தப்படுகின்ற விகிதாசாரமற்ற மீள்காப்புறுதியானது பேரழிவுசார் இழப்புகளுக்குத் துணை நிறுவனத்தின் தேறிய வெளிப்பாட்டினைத் தணிக்கும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வேற்பாடுகளுக்கான தக்கவைப்பு வரையறைகள் தயாரிப்பு வரிசை மற்றும் பிரதேசத்தினைப் பொறுத்து வேறுபடுகின்றன.
- காப்பீட்டினை ஆதரிக்கின்ற முறையான மீள்காப்புறுதி ஏற்பாடொன்றில்லாமல் காப்புறுதிப் பாதுகாப்பு வழங்கப்படுவதில்லை என்பதை நிச்சயப்படுத்துவதற்கான கடுமையான கட்டுப்பாடுகள்.
- இலங்கை அரசாங்கத்தின் கீழ் தொழிற்படுகின்ற மீள்காப்புறுதியாளரொருவரான தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள மீள்காப்புறுதி நீங்கலாக, ஸ்டான்டர்ட் அன்ட் புவர்ஸ், ஏஎம் பெஸ்ட் அல்லது பிட்ச் ஆகியவற்றினால் உயர் தரமிடல்களைக் கொண்ட மீள்காப்புறுதிக் கம்பனிகளின் உலகளாவிய நம்பகமான மற்றும் நிலையான சொத்துப்பட்டியலிற்கு மீள்காப்புறுதிக் குழுவை வரையறைசெய்தல்.
- கொடுகடன் தரமிடலினைக் காலாந்தர அடிப்படையில் மீளாய்வு செய்தல் மற்றும் அனைத்து மீள்காப்புறுதியாளர்களும் ஆண்டு முழுவதும் தரமிடலினைப் பேணுவதனை நிச்சயப்படுத்தல்.
- அனைத்து நிலுவைத் தொகைகளும் உரிய நேரத்தில் வசூலிக்கப்படுவதை அல்லது செலுத்தத்தக்கவைகளிற்கு எதிராக எதிரீடு செய்யப்படுவதனை நிச்சயப்படுத்தும் பொருட்டு நிலுவையிலுள்ள மீள்காப்புறுதிப் பெறத்தக்கவைகள் மாதாந்த அடிப்படையொன்றில் மீளாய்வுசெய்யப்படுகின்றன.
- மீள்காப்புறுதி ஏற்பாடுகளுக்கான தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ள நிதியியல் அதிகாரம்.

## 38. காப்புறுதி மற்றும் நிதியியல் இடர்நேர்வு முகாமைத்துவம் (தொடர்ச்சி)

### 38.2.3 மீள்காப்புறுதிசார் இடர்நேர்வு (தொடர்ச்சி)

மீள்காப்புறுதிக் கொடுகடன் தரமிடல்

துணை நிறுவனமானது அறிக்கையிடல் காலப்பகுதியின் நிறைவில் ஏற்பாடுகளைக் கொண்டுள்ள மீள்காப்புறுதிக் கம்பனிகளின் கொடுகடன் தரமிடல்களை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| மீள்காப்புறுதியாளர் | தோற்ற நாடு | கொடுகடன் தரமிடல் | நிதியியல் வலிமைத் தரமிடல் | தரமிடல் முகவராண்மையின் பெயர் |
|---|---|---|---|---|
| அபுதாபி தேசிய காப்புறுதிக் கம்பனி | ஐக்கிய அரபு இராச்சியம் | A | a | ஏஎம் பெஸ்ட் |
| ஏஜிஸ் முகாமைத்துவ முகவராண்மை லிமிடட் | இங்கிலாந்து | A+ | aa- | ஏஎம் பெஸ்ட் |
| ஆபிரிக்க மீள்காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | நைஜீரியா | A- | A- | ஸ்டான்டர்ட் அன்ட் புவர்ஸ் |
| ஏஐஜி ஆசிய பசுபிக் காப்புறுதி தனியார் லிமிடட் | சிங்கப்பூர் | A+ | a+ | ஏஎம் பெஸ்ட் |
| ஏஐஜி எம்ஈஏ லிமிடட் | ஐக்கிய அரபு இராச்சியம் | A+ | a+ | ஏஎம் பெஸ்ட் |
| அலியன்ஸ் குளோபல் கார்பரேட் என்ட் ஸ்பெஷாலிட்டி எஸ்ஈ | ஜேர்மனி | A+ | aa | ஏஎம் பெஸ்ட் |
| அலைட் வேர்ல்ட் மேனேஜிங் ஏஜென்சி லிமிடட் | பெர்முடா | A+ | aa- | ஏஎம் பெஸ்ட் |
| ஏஎம் பர்ஸ்ட் ஸ்பெஷாலிட்டி இன்ஷுரன்ஸ் லிமிடட் | அமெரிக்கா | A- | a- | ஏஎம் பெஸ்ட் |
| அன்ட்ரா லிமிடெட் | ஐக்கிய அரபு இராச்சியம் | A+ | A+ | ஸ்டான்டர்ட் அன்ட் புவர்ஸ் |
| ஏஓன் அண்டர்ரைட்டர் மெனேஜர்ஸ் | இங்கிலாந்து | A+ | aa- | ஏஎம் பெஸ்ட் |
| அபொல்லோ சிண்டிகேட் மேனேஜ்மென்ட் லிமிடட் | இங்கிலாந்து | A | a | ஏஎம் பெஸ்ட் |
| ஆர்ச் மேனேஜிங் ஏஜென்சி லிமிடட் | இங்கிலாந்து | A+ | aa- | ஏஎம் பெஸ்ட் |
| ஆர்க் சிண்டிகேட் மேனேஜ்மென்ட் லிமிடட் | இங்கிலாந்து | A+ | aa- | ஏஎம் பெஸ்ட் |
| அஸ்காட் அண்டர்ரைட்டிங் லிமிடட் | இங்கிலாந்து | A+ | aa- | ஏஎம் பெஸ்ட் |
| அரோரா பி என்ட் ஐ கிளப் | இங்கிலாந்து | AA- | AA- | ஸ்டான்டர்ட் அன்ட் புவர்ஸ் |
| ஏஎக்ஸ்ஏ எக்ஸ்எல் | பிரான்ஸ் | AA- | AA- | ஸ்டான்டர்ட் அன்ட் புவர்ஸ் |
| ஆக்சிஸ் மேனேஜிங் ஏஜென்சி லிமிடட் | இங்கிலாந்து | A+ | aa- | ஏஎம் பெஸ்ட் |
| பஜாஜ் அலையன்ஸ் இன்சூரன்ஸ் கம்பனி லிமிடட் | இந்தியா | Aa2 | Aa2 | மூடிஸ் |
| பீஸ்லி பர்லாங்ஞ் லிமிடட் | இங்கிலாந்து | A | a+ | ஏஎம் பெஸ்ட் |
| பெர்க்ஷயர் ஹாத்வே ஸ்பெஷாலிட்டி இன்ஷுரன்ஸ் | அமெரிக்கா | AA+ | AA+ | ஸ்டான்டர்ட் அன்ட் புவர்ஸ் |
| பெஸ்ட் மரிடியன் இன்டெர்ல் இன்ஸ். கம்பெனி | அமெரிக்கா | A- | a- | ஏஎம் பெஸ்ட் |
| கெனோபியஸ் மேனேஜிங் ஏஜெண்ட்ஸ் லிமிடட் | இங்கிலாந்து | A+ | aa- | ஏஎம் பெஸ்ட் |
| காஸ்டெல் அண்டர்ரைட்டிங் ஏஜென்சிஸ் லிமிடட் | இங்கிலாந்து | A+ | aa- | ஏஎம் பெஸ்ட் |
| சீஎப்சீ அண்டர்ரைட்டிங் லிமிடட் | இங்கிலாந்து | A | aa- | ஏஎம் பெஸ்ட் |
| சீனா மீள்காப்புறுதிக் (குழு) கூட்டுத்தாபனம் சிங்கப்பூர் கிளை | சீனா | A | a | ஏஎம் பெஸ்ட் |
| சப் ஐரோப்பிய குரூப் எஸ்ஈ | பிரான்ஸ் | A++ | aa+ | ஏஎம் பெஸ்ட் |
| சப் அண்டர்ரைட்டிங் (டிஐஎப்சி) லிமிடட் | அமெரிக்கா | A++ | aa+ | ஏஎம் பெஸ்ட் |
| கன்வெக்ஸ் இன்சூரன்ஸ் யுகே லிமிடட் | இங்கிலாந்து | A | a | ஏஎம் பெஸ்ட் |
| எக்கோ ரீஇன்சூரன்ஸ் லிமிடட் | ஸ்விட்சர்லாந்து | A- | a- | ஸ்டான்டர்ட் அன்ட் புவர்ஸ் |
| ஈஎல்எஸ்ஈசிஓ டிஐஎப்சி | இங்கிலாந்து | AA- | AA- | ஸ்டான்டர்ட் அன்ட் புவர்ஸ் |
| எவரெஸ்ட் இன்சூரன்ஸ் (அயர்லாந்து) டெசிக்னேடட் எக்டிவிடி கம்பனி | அயர்லாந்து | A- | a- | ஏஎம் பெஸ்ட் |
| பிடெலிஸ் அண்டர்ரைட்டிங் லிமிடட் | இங்கிலாந்து | A+ | aa- | ஏஎம் பெஸ்ட் |
| கார்ட் மரைன் என்ட் எனர்ஜி லிமிடட் (சிங்கப்பூர் கிளை) | பெர்முடா | A+ | A+ | ஸ்டான்டர்ட் அன்ட் புவர்ஸ் |
| இந்திய பொதுக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | இந்தியா | A- | a- | ஏஎம் பெஸ்ட் |
| ஜெனரலி சீனா இன்சூரன்ஸ் கம்பனி லிமிடட் | இத்தாலி | A | a+ | ஏஎம் பெஸ்ட் |
| ஜெனரலி ஐஏஆர்டி எஸ்.ஏ | இத்தாலி | A | a+ | ஏஎம் பெஸ்ட் |
| குளோப் அண்டர்ரைட்டிங் லிமிடட் | இங்கிலாந்து | A- | a- | ஏஎம் பெஸ்ட் |
| கிரேட் லேக்ஸ் இன்சூரன்ஸ் லிமிடெட் | ஜேர்மனி | AA- | AA- | ஸ்டான்டர்ட் அன்ட் புவர்ஸ் |
| கிரீன்லைட் ரீஇன்சூரன்ஸ் லிமிடெட் | அயர்லாந்து | A- | a- | ஏஎம் பெஸ்ட் |
| ஹனோவர் ரக் எஸ்ஈ மலேசியா கிளை | ஜேர்மனி | A+ | aa | ஏஎம் பெஸ்ட் |
| ஹார்டி (அண்டர்ரைட்டிங் ஏஜென்சிஸ்) லிமிடட் | இங்கிலாந்து | A | a+ | ஏஎம் பெஸ்ட் |
| எச்டிஐ குளோபல் ஸ்பெஷாலிட்டி எஸ்ஈ, ஹனோவர், ஸ்காண்டிநேவிய கிளை | ஜேர்மனி | A+ | aa- | ஏஎம் பெஸ்ட் |

## 38. காப்புறுதி மற்றும் நிதியியல் இடர்நேர்வு முகாமைத்துவம் (தொடர்ச்சி)

### 38.2.3 மீள்காப்புறுதிசார் இடர்நேர்வு (தொடர்ச்சி)

| மீள்காப்புறுதியாளர் | தோற்ற நாடு | கொடுகடன் தரமிடல் | நிதியியல் வலிமைத் தரமிடல் | தரமிடல் முகவராண்மையின் பெயர் |
|---|---|---|---|---|
| ஹெல்வெட்டியா அஷ்யூரன்ஸ் எஸ்.ஏ., லீ ஹெவ்றெ, பிரான்ஸ் | ஸ்விட்சர்லாந்து | A+ | A+ | பிட்ச் |
| ஹுவாடை புரோபர்ட்டி என்ட் கெசுஅல்டி இன்ஷுரன்ஸ் கம்பனி லிமிடட் | சீனா | A+ | A+ | பிட்ச் |
| கொரியன் ரீஇன்ஷுரன்ஸ் கம்பனி | தென் கொரியா | A | a | ஏஎம் பெஸ்ட் |
| குவைத் ரீஇன்ஷுரன்ஸ் கம்பனி | குவைத் | A- | a- | ஏஎம் பெஸ்ட் |
| லங்காஷயர் சிண்டிகேட் லிமிடட் | இங்கிலாந்து | A+ | aa- | ஏஎம் பெஸ்ட் |
| லிபர்டி மியூச்சுவல் இன்ஷுரன்ஸ் யூரோப் எஸ்ஈ – யூகே கிளை | இங்கிலாந்து | A | A | ஸ்டான்டர்ட் அன்ட் புவர்ஸ் |
| லிபர்டி ஸ்பெஷாலிட்டி மார்கட்ஸ் மெனா லிமிடட் | இங்கிலாந்து | A | a | ஏஎம் பெஸ்ட் |
| லிபர்டி ஸ்பெஷாலிட்டி மார்கட்ஸ் சிங்கப்பூர் பிடிஈ லிமிடட் | சிங்கப்பூர் | A | a | ஏஎம் பெஸ்ட் |
| மலேசியன் ரீஇன்ஷுரன்ஸ் பெர்ஹாட் | மலேசியா | A- | a- | ஏஎம் பெஸ்ட் |
| மெப்ரே ரீ கம்பனியா டீ ரீயசிகுரோஸ் ஏஸ்ஏ | ஸ்பெயின் | A | a+ | ஏஎம் பெஸ்ட் |
| மார்கெல் இன்டர்நெஷனல் சிங்கப்பூர் பிரைவெட் லிமிடட் | சிங்கப்பூர் | A | a+ | ஏஎம் பெஸ்ட் |
| மார்லின் அண்டர்ரைட்டர்ஸ் (ல்லாய்ட்ஸ்) | இங்கிலாந்து | A+ | aa- | ஏஎம் பெஸ்ட் |
| மெனா ரீ அண்டர்ரைட்டர்ஸ் லிமிடட் | ஐக்கிய அரபு இராச்சியம் | A- | A- | ஸ்டான்டர்ட் அன்ட் புவர்ஸ் |
| எம்எம்ஏ ஐஏஅர்டி எஸ்.ஏ., லே மான்ஸ், பிரான்ஸ் | பிரான்ஸ் | AA- | AA- | ஸ்டான்டர்ட் அன்ட் புவர்ஸ் |
| எம்எஸ் அம்லின் லியோட்டின் சிண்டிகேட் இல. 2001 | இங்கிலாந்து | A+ | aa- | ஏஎம் பெஸ்ட் |
| எம்எஸ் பர்ஸ்ட் கேபிடல் இன்ஷுரன்ஸ் லிமிடட் | சிங்கப்பூர் | A | a+ | ஏஎம் பெஸ்ட் |
| முன்செனர் ரக்வெர்சிசெருங்ஸ்-கெசெல்சாப்ட் ஆக்டியென்ஜெசெல்சாப்ட் (முனிசன் ரீ) | ஜேர்மனி | AA- | AA- | ஸ்டான்டர்ட் அன்ட் புவர்ஸ் |
| முனிச் ரீ சிண்டிகேட் சிங்கப்பூர் பிடிஈ லிமிடட் | சிங்கப்பூர் | A+ | aa- | ஏஎம் பெஸ்ட் |
| நாஸ்கோ பிரான்ஸ் | பிரான்ஸ் | A | a+ | ஏஎம் பெஸ்ட் |
| நேவியம் மரைன் லிமிடட் | இங்கிலாந்து | A | a | ஏஎம் பெஸ்ட் |
| நெக்ஸஸ் அண்டர்ரைட்டிங் லிமிடட் | இங்கிலாந்து | A- | a- | ஏஎம் பெஸ்ட் |
| பிஐசிசி புரோபர்ட்டி என்ட் கெசுஅல்டி இன்ஷுரன்ஸ் கம்பனி லிமிடட் | சீனா | A- | A- | ஸ்டான்டர்ட் அன்ட் புவர்ஸ் |
| பைன் வாக் கெபிடல் லிமிடட் | இங்கிலாந்து | A | a | ஏஎம் பெஸ்ட் |
| சீனாவின் பிங் என் புரோபர்ட்டி என்ட் கெசுஅல்டி இன்ஷுரன்ஸ் கம்பனி | சீனா | A | a+ | ஏஎம் பெஸ்ட் |
| புரோபிடாஸ் மேனேஜிங் ஏஜென்சி லிமிடட் | இங்கிலாந்து | A+ | aa- | ஏஎம் பெஸ்ட் |
| பிவிஐ இன்ஷுரன்ஸ் கூட்டுத்தாபனம் | வியட்நாம் | A- | a- | ஏஎம் பெஸ்ட் |
| கியுபிஈ ஈரோப் எஸ்ஏ/என்வி | பெல்ஜியம் | A | a+ | ஏஎம் பெஸ்ட் |
| ரெட்பிரிட்ஜ் இன்ஷுரன்ஸ் கம்பெனி லிமிடட் | பார்படோஸ் | B++ | bbb | ஏஎம் பெஸ்ட் |
| ரோயல் சன் அலையன்ஸ் இன்ஷுரன்ஸ் லிமிடட் (டிஐஎப்சி) | இங்கிலாந்து | A | a+ | ஏஎம் பெஸ்ட் |
| சாம்சங் ரீஇன்ஷுரன்ஸ் (பிரைவெட்) லிமிடட் | தென் கொரியா | A++ | aa+ | ஏஎம் பெஸ்ட் |
| சிங்கப்பூர் ரீஇன்ஷுரன்ஸ் கம்பனி லிமிடட் (சிங்கப்பூர் ரீ) | சிங்கப்பூர் | A | a | ஏஎம் பெஸ்ட் |
| சினோபெக் ரீஇன்ஷுரன்ஸ் லிமிடட் | சீனா | A+ | A+ | ஸ்டான்டர்ட் அன்ட் புவர்ஸ் |
| சிரியஸ்பொயிண்ட் இன்டர்நெஷனல் இன்ஷுரன்ஸ் கம்பனி (பொது) | ஸ்வீடன் | A- | a- | ஏஎம் பெஸ்ட் |
| எஸ்எம்ஏ எஸ்ஏ | பிரான்ஸ் | A+ | A+ | ஸ்டான்டர்ட் அன்ட் புவர்ஸ் |
| ஸ்டார் இன்டர்நெஷனல் (யூரோப்) லிமிடட் | இங்கிலாந்து | A | a+ | ஏஎம் பெஸ்ட் |
| ஸ்டார் இன்டர்நெஷனல் இன்ஷுரன்ஸ் (சிங்கப்பூர்) பிரைவெட் லிமிடட் லாபுவான் கிளை | சிங்கப்பூர் | A- | a | ஏஎம் பெஸ்ட் |
| ஸ்டீம்ஷிப் மியூச்சுவல் அண்டர்ரைட்டிங் அசோசியேஷன் லிமிடட் | இங்கிலாந்து | A+ | aa- | ஏஎம் பெஸ்ட் |
| சுகூன் இன்ஷுரன்ஸ், முன்பு ஓமான் இன்ஷுரன்ஸ் கம்பெனி என்று அறியப்பட்டது | ஐக்கிய அரபு இராச்சியம் | A | a | ஏஎம் பெஸ்ட் |
| சுவிஸ் ரீ இன்டர்நெஷனல் எஸ்ஈ, லாபுவான் கிளை | லக்சம்பர்க் | AA- | AA- | ஸ்டான்டர்ட் அன்ட் புவர்ஸ் |

## 38. காப்புறுதி மற்றும் நிதியியல் இடர்நேர்வு முகாமைத்துவம் (தொடர்ச்சி)

### 38.2.4 கோரல்சார் இடர்நேர்வு

இது கம்பனிக்கு இழப்புக்களை ஏற்படுத்தும் எதிர்பார்ப்பிலிருந்து வேறுபட்ட உண்மையான கோரல் அனுபவத்தின் இடர்நேர்வாகும்.

### இடர்நேர்வுசார் பதிலிறுப்பு உபாயங்கள்

- காலதாமதத்தைக் குறைக்க 24 மணி நேர முழுமையானதும் திறன்வாய்ந்ததுமான அழைப்பு மையப் பிரிவொன்றின் மூலம் கோரல் தகவல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.
- 24 மணி நேர அடிப்படையில் நாடளாவிய ரீதியில் பணிபுரியும் மதிப்பீட்டாளர்கள்/இழப்பு சீராக்குநர்களின் சுயாதீன நிபுணர் குழுவொன்றினால் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.
- கோரல்கள் அறிவிக்கப்பட்டவுடன் உடனடியாக மதிப்பீடு செய்யப்பட்டு அதற்கேற்ப ஒதுக்கப்படுகின்றன.
- நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள பழுதுபார்க்குமிடங்களின் மூலம் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் செலவுகள் மற்றும் உயர்தர சேவையின் விரிவான மதிப்பீடு.
- நிலுவையில் உள்ள குறிப்பிடத்தக்க கோரல்கள் முகாமைத்துவத்தின் மூலமான மாதாந்த மீளாய்வுகளுக்கு உட்பட்டதாகக் காணப்படுகின்றன.
- சம்பவித்திருப்பினும் இன்னும் தகவல் அறிக்கையிடப்படாத மற்றும் சம்பவம் தொடர்பில் முழுமையான தகவல் அறிக்கையிடப்படாத கோரல்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஒதுக்குகளின் போதுமானளவினை மதிப்பிடுவதற்குத் தகுதிவாய்ந்த கணிப்பாளரொருவரின் சேவை காலாண்டு ரீதியில் பெறப்படுகிறது.
- மூன்றாம் தரப்பு கோரல் தகவல்கள் அனைத்தும் சட்டப் பிரிவின் ஆதரவுடன் தனித்தனியாக மீளாய்வு செய்யப்படுகின்றன.
- கம்பனி பின்பற்றப்படுகின்ற உடன்பட்ட முறையியலிற்கு அமைய போதுமானளவிலான கோரல் ஒதுக்குகள் பேணப்படுகின்றன.
- அனைத்து புதிய மற்றும் தற்போதைய கோரல்களை மதிப்பிடுவதற்கான கோரல் மீளாய்வுக் கொள்கைகள், கோரல்களைக் கையாளுகின்ற நடைமுறைகளின் கிரமமான விரிவான மீளாய்வு மற்றும் சாத்தியமான மோசடிசார் கோரல்களின் தொடர்ச்சியான விசாரணை ஆகியன இடர்நேர்வு வெளிப்பாட்டைக் குறைப்பதற்கு நிறுவப்பட்டுள்ளன.
- கோரல்கள் தொடர்பாக குறிப்பிடத்தக்க/சிக்கல்தன்மையிலான கோரல்கள் மற்றும் மேன்முறையீடுகள் குறித்து முடிவுகளை மேற்கொள்வதில் ஈடுபட்டுள்ள கோரல் குழுவிற்கு உயர்ந்தபட்ச வரையறையினை வழங்கும் கோரல் வரையறைக்கு நிதியியல் அதிகார வரையறைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

### பொதுக் காப்புறுதியில் உள்ள பொறுப்புக்களின் மதிப்பீடு

பொறுப்பு மதிப்பீடுகளின் அடிப்படையிலான முதன்மைக் கணிப்பானது கம்பனியின் எதிர்கால கோரல் மேம்பாடு கடந்த கால கோரல் மேம்பாட்டு அனுபவத்திற்கு ஒத்த வடிவமொன்றினைப் பின்பற்றலாமென்பதாகும். சராசரி கோரல் செலவுகள், கோரல் கையாளல் செலவுகள், கோரல் பணவீக்கக் காரணிகள் மற்றும் ஒவ்வொரு விபத்து ஆண்டிற்குமான கோரல் எண்கள் தொடர்பான கணிப்புக்கள் இதில் அடங்குகின்றன. எதிர்காலத்தில் பொறுப்புக்கள் எவ்வளவிற்கு எழலாம் என்பதை மதிப்பிடுவதற்கு மேலதிக பண்புசார் தீர்மானங்கள் பயன்படுத்தப்படுகின்ற போதிலும், ஒரே தடவையில் நிகழும் நிகழ்வுகள், கோரலுக்கான பொது மனோபாவம் போன்ற சந்தைக் காரணிகளில் ஏற்படும் மாற்றங்கள், பொருளாதார நிலைமைகள் மற்றும் சொத்துப்பட்டியல் கலவை போன்ற உள்ளகக் காரணிகள், கொள்கை நிலைமைகள் மற்றும் கோரல்களைக் கையாளுகின்ற நடைமுறைகள் ஆகியவற்றினை விலக்குகின்றன. நீதித்துறைத் தீர்மானங்கள் மற்றும் அரசாங்க சட்டவாக்கம் போன்ற வெளிப்புற காரணிகள் மதிப்பீடுகளை எந்தளவிற்குப் பாதிக்கின்றன என்பதை மதிப்பிடுவதற்குத் தீர்மானம் மேலும் பயன்படுத்தப்படுகிறது.

மொத்த மற்றும் தேறிய பொறுப்புக்கள், வரிக்கு முன்னரான இலாபம் மற்றும் பங்குரிமை ஆகியவற்றில் ஏற்படும் தாக்கத்தைக் காட்டுகின்ற ஏனைய அனைத்துக் கணிப்புக்களுடனும் நிலுவையில் உள்ள கோரல்களில் சாத்தியமான அசைவுகளுக்குப் பின்வரும் பகுப்பாய்வு மேற்கொள்ளப்படுகிறது. இக்கணிப்புக்களில் உள்ள அசைவுகள் ஒரே நேரத்திலானவையாகக் காணப்படாதென்பதைக் கவனத்திற்கொள்ள வேண்டும்.

### நிலுவையில் உள்ள கோரல்களின் உணர்திறன்

| 2024 டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறு | கணிப்புக்களில் மாற்றம் % | வெளிநின்ற அறிக்கையிடப்பட்ட கோரல் ரூ. '000 | மொத்தக் பொறுப்புக்கள் மீதான தாக்கம் ரூ. '000 | தேறிய பொறுப்புக்கள் மீதான தாக்கம் ரூ. '000 | வரிக்கு முன்னரான இலாபம் மீதான தாக்கம் ரூ. '000 | பங்குரிமை மீதான தாக்கம் (வரிக்குப்பிறகு) ரூ. '000 |
|---|---|---|---|---|---|---|
| **2024** | **+/-10** | **6,783,084** | **678,308** | **678,308** | **678,308** | **474,816** |
| 2023 | | 6,972,431 | 697,243 | 697,243 | 697,243 | 488,070 |

### கோரிக்கை மேம்பாட்டுத் தகவல்

கடந்த ஏழு ஆண்டுகளில் கோரல் மேம்பாடு பற்றிய விரிவான தகவலுக்குக் குறிப்பு 19.5இனைப் பார்க்கவும்.

## 38.3 நிதியியல் இடர்நேர்வுகள்

பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து, வெளிநாட்டுப் படுகடனை மறுசீரமைத்தலானது தேர்தல் ஆண்டொன்றான 2024ஆம் ஆண்டு காலப்பகுதியில் மையப் புள்ளியாகக் காணப்பட்டது. எனவே நிச்சயமற்றதன்மை காரணமாக ஏற்பட்ட தளம்பல்தன்மையானது 2024ஆம் ஆண்டின் தொடக்கத்தில் சந்தையின் கருப்பொருளாகக் காணப்பட்டுள்ளதாகப் புலப்படுகின்றது. குறித்த காலப்பகுதியில் இக்காரணிகள் தீர்க்கப்பட்டவுடன், ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் பொருளாதாரம் உறுதிநிலையினையடைகின்ற மற்றும் வளர்ச்சியடைகின்ற சமிக்ஞைகளைக் காட்டியது. கம்பனி முதலீட்டு வருவாயினை அதிகரிப்பதற்கும் சந்தைத் தளம்பல்தன்மையினை அதன் நன்மைக்காகப் பயன்படுத்துவதற்கும் காலப்பகுதியில் பணியாற்றியது.

முதலீட்டுக் குழு அவ்விடர்நேர்வுகளைத் தணிப்பதற்கும் முதலீட்டு வருவாய்களை மேம்படுத்துவதற்கும் பொறுப்பாகக் காணப்படுகின்றது.

முதலீட்டுக் குழு நாணய மற்றும் இறைக் கொள்கைத் தளர்வுகளின் எதிர்பார்க்கைகள் காரணமாக நிலையான வருமான சாதனங்களின் காலத்தினை நீடிக்கப் பணியாற்றிய வேளையில், அதன் சொத்துப்பட்டியலில் உள்ள பங்குரிமைப் பங்குகளில் வைத்திருப்பது மற்றும் முதலீடு செய்வதானது சந்தை மீட்சியடைந்து வருவதால் மேல்நோக்கிச் செல்லக்கூடிய ஆற்றல்வாய்ந்த தன்மையினைக் கொண்டிருந்தது. முதலீட்டு இடர்நேர்வு முகாமைத்துவமானது மிகுந்த கவனத்துடனும் முன்மதியுடனும் மேற்கொள்ளப்பட்டது.

முறைமைசாராத இடர்நேர்வுகளைத் தணிக்கும் பொருட்டு முதலீட்டுச் சொத்துப்பட்டியல் தொடர்ந்து பன்முகப்படுத்தப்பட்டது. சந்தை இடர்நேர்வு, முதலீட்டுச் செறிவு, திரவத்தன்மை மற்றும் கொடுகடன் என்பனவும் முதலீட்டுக் குழுவினால் உரிய கவனத்துடன் பரிசீலனைசெய்யப்பட்டன.

முதலீடுசார் தீர்மானம் மேற்கொள்ளலானது தொடர்ந்து சுறுசுறுப்பாகவும் வினைத்திறனாகவும் காணப்பட்டமையினால் முதலீட்டு வருமானம் தொடர்ந்து உயர் எண்ணிக்கைகளை எட்டியது.

இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கைகள் மற்றும் பொருந்தக்கூடிய இலங்கைக் காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் வழிகாட்டுதல்கள் என்பவற்றின் கண்டிப்பான கடைபிடித்தலானது ஒழுங்குமுறைப்படுத்தல் இடர்நேர்வுகளைத் தணிக்கத் துணைபுரிந்தன.

38. காப்புறுதி மற்றும் நிதியியல் இடர்நேர்வு முகாமைத்துவம் (தொடர்ச்சி)

## 38.3 நிதியியல் இடர்நேர்வுகள் (தொடர்ச்சி)

### 38.3.1 சந்தை இடர்நேர்வு

சந்தை இடர்நேர்வு என்பது வெளிநாட்டுச் செலாவணி வீதங்கள் மற்றும் வட்டி வீதங்கள் போன்ற பங்குரிமை விலைகளில் ஏற்படும் மாற்றங்களின் இடர்நேர்வாகக் காணப்படுவதுடன், இது கம்பனியின் வருமானம் அல்லது அதன் நிதியியல் சாதனக் கையிருப்புக்களின் பெறுமதியினைப் பாதிக்கும். சந்தை இடர்நேர்வு முகாமைத்துவத்தின் குறிக்கோளானது ஏற்றுக்கொள்ளக்கூடிய பிரமாணங்களினுள் சந்தை இடர்நேர்வு வெளிப்பாடுகளை முகாமைசெய்து, கட்டுப்படுத்தும் வேளையில் வருவாயை மேம்படுத்துவதாகக் காணப்படுகின்றது.

### 38.3.1.அ பங்குரிமை விலை இடர்நேர்வு

பங்குரிமை இடர்நேர்வு என்பது பங்குரிமைகளின் மதிப்பு குறைந்து செல்வதன் காரணமாக பணத்தை இழக்கின்ற இடர்நேர்வாகும்.

தேர்தலுக்கு முன்னைய நிச்சயமற்றதன்மைகள் நீக்கப்பட்டதால் அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் மற்றும் ஸ்டான்டர்ட் அன்ட் புவர் இலங்கை 20 சுட்டெண் ஆகிய இரண்டும் 2024 காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க இலாபமீட்டல்களைப் பதிவுசெய்ததுடன் பொருளாதாரம் மீட்சிப் போக்கினுள் நுழைந்தது.

முதலீட்டுச் சொத்துப்பட்டியலை முகாமைசெய்வதில் பங்குரிமைக்கான உயர்ந்தபட்ச வெளிப்பாட்டு வரையறையினைக் கம்பனி பேணுகின்றது. மேலும், முறைமைசாரா இடர்நேர்வுகளைத் தணிப்பதற்குக் கம்பனி முதலீட்டுச் சொத்துப்பட்டியலைப் பல்வேறு துறைகளில் பன்முகப்படுத்தியுள்ளது.

இலங்கைக் காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவானது கீழே எடுத்துக்காட்டப்பட்டுள்ளவாறு பன்முகப்படுத்தல் மூலம் முறைமைசாரா இடர்நேர்வுகளைக் கொண்டிருப்பினும், பங்குரிமைகள் இயல்பாகவே முறைமைசார் இடர்நேர்விற்கு ஆளாகின்றன. இது ஒட்டுமொத்த சந்தைக்கான உள்ளார்ந்த நிச்சயமற்றதன்மையாகக் காணப்படுகின்றது.

**இடர்நேர்வுசார் பதிலிறுப்பு உபாயங்கள்**

- கம்பனியின் முதலீட்டுக் கொள்கையானது முதலீடுகள் மீதான குறிக்கோள்கள் மற்றும் கட்டுப்பாடுகள், பன்முகப்படுத்தல் திட்டங்கள் மற்றும் பங்குரிமை விலை இடர்நேர்வினை முகாமைத்துவம் செய்வதற்குப் பங்குரிமை வெளிப்பாட்டின் மீதான வரையறைகள் என்பவற்றினை நிர்ணயிக்க/ கண்காணிக்க முகாமைத்துவத்திற்கு வழிகாட்டுகிறது.
- பங்குரிமை சொத்துப்பட்டியல்கள் முதலீட்டுக் குழுவால் காலாண்டு அடிப்படையொன்றில் மீளாய்வு செய்யப்படுகின்றன.
- சந்தை அசைவுகளிலிருந்தான தாக்கமானது முதலீட்டுத் துணைப் பொது முகாமையாளரினால் கிரமமாகக் கண்காணிக்கப்படுகிறது.
- பங்குரிமை முதலீடுகளுக்கான மொத்த வெளிப்பாடானது ஒப்புக்கொள்ளப்பட்ட இலக்குச் சொத்து ஒதுக்கீடு மற்றும் துறைசார் பங்குரிமை வரையறைகளுக்குள் கண்டிப்பாக மேற்கொள்ளப்படுகிறது. பங்குரிமை முதலீடுகள் அடிப்படையில் ஆற்றல் வாய்ந்த பங்குகளில் செய்யப்படுகின்றன.
- முதலீட்டு முகாமைத்துவக் குழுவால் ஆழமான ஆராய்ச்சி மற்றும் மதிப்பீட்டுச் செயன்முறைக்குப் பிறகு அவை அடையாளம் காணப்படுகின்றன.

பங்குரிமை இடர்நேர்வுகளின் சொத்துப்பட்டியல் பன்முகப்படுத்துதல்

| டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறு | | 2024 | | 2023 | |
|---|---|---|---|---|---|
| துறை | தொழில் குழு | சந்தைப் பெறுமதி ரூ. '000 | % | சந்தைப் பெறுமதி ரூ. '000 | % |
| நிதியியல் | வங்கிகள் | 9,046,511 | 88.00 | – | – |
| | பன்முகப்படுத்தப்பட்ட நிதியியல் | 431,322 | 3.90 | – | – |
| நுகர்வோர் விருப்பத்தேர்வு | நுகர்வோர் நீண்டகால பாவனைப் பொருட்கள் மற்றும் ஆடைகள் | 923 | 0.10 | – | – |
| தொழில்துறை | மூலதனப் பொருட்கள் | 209,616 | 2.00 | – | – |
| தொலைத்தொடர்பு சேவைகள் | தொலைத்தொடர்பு சேவைகள் | 17,004 | 0.10 | – | – |
| பொருட்கள் | பொருட்கள் | 181,050 | 1.90 | – | – |
| | உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை | 415,277 | 3.90 | – | – |
| பயன்பாடுகள் | பயன்பாடுகள் | 18,043 | 0.10 | – | – |
| **மொத்தம்** | | 10,319,746 | 100 | – | – |

பங்குரிமைச் சந்தை உணர்திறன்

| 2024 டிசம்பர் 31 இலுள்ளவாறு | சந்தை எழுச்சி | | சந்தை வீழ்ச்சி | |
|---|---|---|---|---|
| | இலாபம் மீதான தாக்கம் ரூ. '000 | ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் மீதான தாக்கம் ரூ. '000 | இலாபம் மீதான தாக்கம் ரூ. '000 | ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் மீதான தாக்கம் ரூ. '000 |
| **அதிர்வு மட்டம்:** | | | | |
| 5% | 72,317 | 443,670 | (72,317) | (443,670) |
| 10% | 144,635 | 887,340 | (144,635) | (887,340) |

## 38. காப்புறுதி மற்றும் நிதியியல் இடர்நேர்வு முகாமைத்துவம் (தொடர்ச்சி)

## 38.3 நிதியியல் இடர்நேர்வு (தொடர்ச்சி)

### 38.3.1.ஆ செலாவணி வீத இடர்நேர்வு

நாணய இடர்நேர்வு அல்லது வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வு என்றும் அறியப்படுகின்ற செலாவணி வீத இடர்நேர்வானது வெளிநாட்டு நாணய செலாவணி வீதங்களில் ஏற்படும் மாற்றங்கள் முதலீடு, சொத்து அல்லது பொறுப்பின் பெறுமதியினை எதிர்க்கணியமாகப் பாதிக்கும் இடர்நேர்வாகும்.

இலங்கை ரூபா தவிர வேறு நாணயமொன்றில் குறித்துரைக்கப்பட்ட நிதியியல் சொத்துக்களில் முதலீடு செய்வதில் கம்பனி நாணய இடர்நேர்விற்கு ஆளாகின்றது. இக்கொடுக்கல்வாங்கல்கள் முதன்மையாகக் குறித்துரைக்கப்படுகின்ற வெளிநாட்டு நாணயங்கள் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் ஆகும்.

2024ஆம் ஆண்டில் இலங்கை ரூபாய்க்கு எதிராக ஐக்கிய அமெரிக்க டொலர் தொடர்ந்து தேய்வடைந்தது. இருப்பினும், வாகன இறக்குமதிகள் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்ற போதிலும் இலங்கைப் பொருளாதாரம் மீட்சியடைந்து வருவதாலும் வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் சுற்றுலாவிலிருந்து வருமானம் அதிகரிப்பதாலும் 2025 காலப்பகுதியில் ஐக்கிய அமெரிக்க டொலர் தொடர்ந்தும் உறுதிநிலையானதாகக் காணப்படலாம்.

### இடர்நேர்வுசார் பதிலிறுப்பு உபாயங்கள்

- கம்பனியின் முக்கிய கொடுக்கல்வாங்கல்கள் இலங்கை ரூபாவில் மேற்கொள்ளப்படுகின்றன.
- வெளிநாட்டு நாணயத் தேவைப்பாடுகளின் உரிய நேரத்திற்கான கிரமமான மீளாய்வு மற்றும் தேவையான வெளிநாட்டுச் செலாவணியைப் பெறுவதற்கு தொடர்புடைய ஆர்வலர்களுடன் ஒத்துழைத்தல்.
- பல்வேறு நெருக்கடிமிக்க சூழ்நிலைகளின் கீழ் நிதியியல் அறிக்கைகளில் வெளிநாட்டுச் செலாவணி வீதத்தின் தாக்கத்தைத் தொடர்ந்து கண்காணிக்கும் செயன்முறை.

#### நாணய இடர்நேர்விற்கான வெளிப்படுத்துகை

வெளிநாட்டு நாணய இடர்நேர்விற்கான கம்பனியின் வெளிப்படுத்துகை பெயரளவிலான தொகைகளின் அடிப்படையில் பின்வருமாறு காணப்பட்டது

| டிசம்பர் 31 இலுள்ளவாறு கணக்குப்பதிவுப் பெறுமதி | 2024 ரூ. '000 | 2023 ரூ. '000 |
|---|---|---|
| **நிலையான வைப்புத்தொகைகள்:** | | |
| ஐ.அ.டொலர் | 3,277,537 | – |
| | 3,277,537 | – |

பின்வரும் குறிப்பிடத்தக்க செலாவணி வீதங்கள் ஆண்டு காலப்பகுதியில் ஏற்புடைத்தாகக்கூடியனவாகக் காணப்பட்டன

| நாணயம் | சராசரி வீதம் 2024 | சராசரி வீதம் 2023 | அறிக்கையிடும் திகதியில் உடன் வீதம் 2024 | அறிக்கையிடும் திகதியில் உடன் வீதம் 2023 |
|---|---|---|---|---|
| ஐ.அ.டொலர் (1$ = இலங்கை ரூபா) | 304.88 | 341.36 | 288.75 | 321.00 |

#### உணர்திறன் பகுப்பாய்வு

கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு 2024 டிசம்பர் 31 இலுள்ளவாறு ஐக்கிய அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாவின் வலுவடைதலானது வெளிநாட்டுச் செலாவணி வருவாயீட்டல்கள்/இழப்பு மற்றும் வட்டி வருமானத்தைக் கீழே காட்டப்பட்டுள்ள தொகைகளால் அதிகரித்திருக்கும்/(குறைத்திருக்கும்). இப்பகுப்பாய்வு ஏனைய அனைத்து மாறிகள், குறிப்பாக வட்டி வீதங்கள் தொடர்ந்தும் நிலையானதாக இருக்குமெனக் கருதுகின்றது.

| 2024 டிசம்பர் 31 இலுள்ளவாறு | செலாவணி வீத அதிர்வு மட்டம் 1.0% ரூ. '000 | 1.5% ரூ. '000 | 2.0% ரூ. '000 |
|---|---|---|---|
| **நிலையான வீதச் சாதனங்கள்** | | | |
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 32,775 | 49,163 | 65,551 |
| | 32,775 | 49,163 | 65,551 |
| **நிலையான வீதச் சாதனங்கள்** | | | |
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 2,330 | 3,496 | 4,661 |
| | 2,330 | 3,496 | 4,661 |

## 38. காப்புறுதி மற்றும் நிதியியல் இடர்நேர்வு முகாமைத்துவம் (தொடர்ச்சி)

### 38.3.1.இ வட்டி வீத இடர்நேர்வு

வட்டி வீத இடர்நேர்வானது விளைவு வளையியின் வடிவத்தில் ஏற்படும் மாற்றங்கள் உள்ளடங்கலாக வட்டி வீதங்களில் ஏற்படும் மாற்றங்களிலிருந்து தோற்றுகின்ற இழப்பின் இடர்நேர்வாகக் காணப்படுகின்ற வேளையில் கொடுகடன் பரவல் இடர்நேர்வானது கொடுகடன் பரவலின் மட்டம் அல்லது தளம்பல்தன்மையில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக இடர்நேர்வின்றிய வட்டி வீத விளைவு வளையியில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் பெறுமதிகளின் உணர்திறனை விவரிக்கிறது.

வட்டி வீத இடர்நேர்வானது ஒவ்வொரு முக்கிய முதிர்ச்சிக் காலப்பகுதியிலும் இடர்நேர்வு வரையறைகளுடன் ஒருங்கிணைந்த நிலைமைகளைப் பின்பற்றி முகாமைத்துவம் செய்யப்படுகிறது. முதலீட்டுக் குழு குறைந்தளவில் விளைவுகளைத் தருகின்ற முதலீடுகளிலிருந்து ஒப்பீட்டளவில் உயர் விளைவுகளைத் தருகின்ற முதலீடுகளுக்கு உபாய ரீதியாக மாறுவதன் மூலம் நிலையான வருமான சொத்துப்பட்டியலை முனைப்புடன் முகாமைசெய்து, வட்டி வருமானத்தின் மீதான அழுத்தத்தைத் தணிக்கின்ற வேளையில் பொருத்தமற்ற காலத்தை உன்னிப்பாகக் கண்காணிக்கிறது.

### இடர்நேர்வுசார் பதிலிறுப்பு உபாயங்கள்

- முதலீடுகளில் கணிசமானதொரு பகுதி இடர்நேர்வில்லாத முதலீடுகளைப் பேணுவதில் இலங்கைக் காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு வழங்கிய விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளைப் பின்பற்றி அரச பிணையங்களின் இடர்நேர்வில்லாத முதலீடுகளில் மேற்கொள்ளப்படுகிறது.
- முதலீட்டுச் சொத்துப்பட்டியலின் பெரும்பகுதி தரமிடப்பட்ட நிதியியல் நிறுவனங்களில் அல்லது தரமிடப்பட்ட சாதனங்களில் மேற்கொள்ளப்படுகிறது.
- முதலீட்டுக் குழு முதலீட்டுத் தீர்மானங்களை மேற்கொள்வதுடன் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் பணிப்பாளர் சபையிடமிருந்து ஒப்புதலைப் பெற்றுக்கொள்கிறது.

#### வட்டி வீத இடர்நேர்விற்கான வெளிப்படுத்துகை

கம்பனியின் முகாமைத்துவத்திற்கு அறிக்கையிடப்பட்டவாறு கம்பனியின் வட்டி உழைக்கின்ற நிதியியல் சாதனங்களின் வட்டி வீத தோற்றப்பாடு பின்வருமாறு.

| டிசம்பர் 31 இலுள்ளவாறு | 2024 | | 2023 | |
|---|---|---|---|---|
| | நிலையான வட்டி வீதம் ரூ. '000 | மாறுதலடைகின்ற வட்டி வீதம் ரூ. '000 | நிலையான வட்டி வீதம் ரூ. '000 | மாறுதலடைகின்ற வட்டி வீதம் ரூ. '000 |
| **முதிர்ச்சிக் காலம் வரை வைத்திருத்தல்** | | | | |
| திறைசேரி முறிகள் | 1,029,294 | – | – | – |
| பட்டியலிடப்பட்ட தொகுதிக்கடன்கள் | 2,018,835 | – | – | – |
| | 3,048,129 | – | – | – |
| **கடன்கள் மற்றும் கிடைக்கத்தக்கவை** | | | | |
| பட்டியலிடப்படாத தொகுதிக்கடன்கள் | 2,569,781 | – | – | – |
| தவணை வைப்புத்தொகைகள் | 3,310,237 | – | – | – |
| அலுவலர் கடன்கள் மற்றும் கிடைக்கத்தக்கவை | 1,457,950 | – | – | – |
| | 7,337,968 | – | – | – |
| **விற்பனைக்கு கிடைப்பனவாகக் காணப்படுகின்றவை** | | | | |
| பட்டியலிடப்பட்ட தொகுதிக்கடன்கள் | 1,263,668 | – | – | – |
| திறைசேரி முறிகள் | 10,198,783 | 6,249,282 | – | – |
| வர்த்தகப் பத்திரங்கள் | 1,717,952 | – | – | – |
| | 13,180,403 | 6,249,282 | – | – |
| **வட்டி வீத இடர்நேர்விற்கான மொத்த வெளிப்பாடு** | 23,566,500 | 6,249,282 | – | – |

#### உணர்திறன் பகுப்பாய்வு

அறிக்கையிடுகின்ற திகதியில் வட்டி வீதங்களில் 100 அடிப்படை புள்ளிகளின் நியாயமானளவிலான சாத்தியமானதொரு மாற்றமானது கீழே காட்டப்பட்டுள்ள தொகைகளால் பங்குரிமை மற்றும் வட்டி வருமானத்தை அதிகரித்திருக்கும் (குறைத்திருக்கும்).

| 2024 டிசம்பர் 31 இலுள்ளவாறு | +100 அடிப்படை புள்ளிகள் | | -100 அடிப்படை புள்ளிகள் | |
|---|---|---|---|---|
| | வட்டி வருமானத்தின் மீதான தாக்கம் ரூ. '000 | பங்குரிமை மீதான தாக்கம் ரூ. '000 | வட்டி வருமானத்தின் மீதான தாக்கம் ரூ. '000 | பங்குரிமை மீதான தாக்கம் ரூ. '000 |
| **நிதியியல் முதலீடுகள்** | | | | |
| கடன்கள் மற்றும் கிடைக்கத்தக்கவை | 62,443 | – | (62,443) | – |
| விற்பனைக்கு கிடைப்பனவாகக் காணப்படுகின்றவை | – | (58,648) | – | 67,705 |

* விளைவு வளையியில் மாற்றமொன்று ஏற்படுமாயின், அங்கு:

முதிர்ச்சிக் காலம் வரை வைத்திருத்தல் மற்றும் கடன்கள் மற்றும் கிடைக்கத்தக்கவை என்பவற்றின் கீழ் வகைப்படுத்தப்பட்ட நிலையான வீதப் படுகடன் சாதனங்களுக்கான வட்டி வருமானம் அல்லது பங்குரிமைக்கு எந்த தாக்கமும் இல்லை.

முதிர்ச்சிக் காலம் வரை வைத்திருத்தல் மற்றும் கடன்கள் மற்றும் கிடைக்கத்தக்கவை என்பவற்றின் கீழ் வகைப்படுத்தப்பட்ட மிதக்கும் வீத படுகடன் சாதனங்களுக்கான வட்டி வருமானத்தில் தாக்கமொன்று காணப்படுகின்ற போதிலும் பங்குரிமைக்கு எந்த தாக்கமும் இல்லை.

வட்டி வருமானத்தில் எந்த தாக்கமும் இல்லையெனினும், விற்பனைக்குக் கிடைப்பனவாகக் காணப்படுகின்றவற்றின் கீழ் வகைப்படுத்தப்பட்ட நிலையான வீதப் படுகடன் சாதனங்களுக்கான பங்குரிமைக்கு தாக்கமொன்று காணப்படுகின்றது.

## 38. காப்புறுதி மற்றும் நிதியியல் இடர்நேர்வு முகாமைத்துவம் (தொடர்ச்சி)

### 38.3.2 முதலீட்டுத் திரட்சி இடர்நேர்வு

திரட்சி இடர்நேர்வு என்பது ஒற்றை முதலீடு, துறை, கடன்பாட்டாளர் அல்லது புவியியல் பகுதி என்பவற்றிற்கான அதிகப்படியான வெளிப்பாடு காரணமாக ஏற்படும் இழப்புசார் இடர்நேர்வாகும். திரட்சி இடர்நேர்வுகளைத் தணிக்கும் பொருட்டு முதலீடுகளின் போதுமான கூறாக்கம் காணப்படுவதனை முதலீட்டுத் திரட்சி உறுதிசெய்கிறது.

#### இடரநேர்வுசார் பதிலிறுப்பு உபாயங்கள்

- முதலீட்டுக் குழு கம்பனியின் முதலீட்டுச் சொத்துப்பட்டியல்களை முகாமைத்துவம்செய்வதற்கான வழிகாட்டுதல்களை உருவாக்கி, வடிவமைக்கின்றது.
- கிடைப்பனவாயுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் முதலீடுகளின் இணங்குவிப்பினை நிச்சயப்படுத்துவதற்கு முதலீட்டுக் குழுவின் மூலமான வலுவான கண்காணிப்புச் செயன்முறை.
- இணங்குவிப்புப் பிரிவின் மூலமான சொத்து ஒதுக்கீட்டு வரையறைகளின் தொடர்ச்சியான மீளாய்வு.
- ஒரே இணைத்தரப்பினருடன் முதலீடு செய்யக்கூடிய உயர்ந்தபட்ச தொகையைக் கம்பனி தொடர்ந்து மீளாய்வு செய்து வரையறைகுட்டுப்படுத்துகிறது.

நிதியியல் முதலீடுகள் தொடர்பான முதலீட்டுத் திரட்சி கீழே தரப்பட்டுள்ளது.

| 2024 டிசம்பர் 31 இலுள்ளவாறு | 2024<br>ரூ. '000 | 2023<br>ரூ. '000 |
|---|---|---|
| **அரச பிணையங்கள்** | | |
| திறைசேரி முறிகள் | 11,228,077 | – |
| **தொகுதிக்கடன்கள்** | | |
| வங்கிகள், நிதி மற்றும் காப்புறுதி | 4,843,682 | – |
| சக்தி மற்றும் வலு | 1,008,602 | – |
| தவணை வைப்புத்தொகை | | |
| வங்கி | 3,310,237 | – |
| **பங்குரிமைப் பங்குகள்** | | |
| வங்கிகள் | 9,046,511 | – |
| பன்முகப்படுத்தப்பட்ட நிதியியல் | 431,322 | – |
| நுகர்வோர் நீண்டகால பாவனைப் பொருட்கள் மற்றும் ஆடைகள் | 923 | – |
| மூலதனப் பொருட்கள் | 209,616 | – |
| தொலைத்தொடர்பு சேவைகள் | 17,004 | – |
| பொருட்கள் | 181,050 | – |
| உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை | 415,277 | – |
| சக்தி மற்றும் வலு | 18,043 | – |
| **வர்த்தகப் பத்திரங்கள்** | 1,717,952 | – |
| **கூறு நம்பிக்கை** | 3,095,920 | – |
| **அலுவலர் கடன்கள் மற்றும் கிடைக்கத்தக்கவை** | 1,457,950 | – |
| | 36,982,166 | – |

### 38.3.3 திரவத்தன்மை இடர்நேர்வு

திரவத்தன்மை இடர்நேர்வு என்பது சொத்தொன்றின் விலையைக் குறிப்பிடத்தக்களவு பாதிக்காமல் விரைவாகக் கொள்வனவு செய்யவோ விற்கவோ முடியாத நிலையில் ஏற்படுகின்ற இடர்நேர்வாகும்.

கம்பனியின் சொத்துக்களின் பெரும்பகுதி திறைசேரி முறிகள் போன்ற உயர்ந்தளவிலான திரவச் சொத்துக்களில் முதலீடு செய்யப்படுகின்றன.

#### இடர்நேர்வுசார் பதிலிறுப்பு உபாயங்கள்

கம்பனியின் திரவத்தன்மை இடர்நேர்வு வெளிப்படுத்துனையினைத் தணிக்க பின்வரும் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் நடைமுறையில் காணப்படுகின்றன.

- கம்பனியின் முதலீட்டுக் கொள்கையில் குறித்துரைக்கப்பட்டுள்ள சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவ வழிகாட்டுதல்களை கம்பனி பின்பற்றுவதுடன் இது முதலீட்டுக் குழுவால் கிரமமாக மீளாய்வு செய்யப்படுகிறது.
- கம்பனியின் காப்புறுதி மற்றும் முதலீட்டு ஒப்பந்தக் கடப்பாடுகளைப் பூர்த்தி செய்ய போதுமான நிதியிடல் கிடைப்பனவாகவுள்ளதனை உறுதிப்படுத்தும் பொருட்டு சொத்து ஒதுக்கீடுகள், சொத்துப்பட்டியல் வரையறைக் கட்டமைப்புக்கள் மற்றும் சொத்துக்களின் முதிர்ச்சித் தோற்றப்பாடுகள் என்பவற்றிற்கான வழிகாட்டுதல்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.
- கம்பனியின் எதிர்பார்க்கப்படும் கடப்பாடுகள் மற்றும் அர்ப்பணிப்புக்களை வசதிப்படுத்துவதற்குப் போதுமான காசு நிலுவைகள், மீள்கொள்வனவு உடன்படிக்கைகள் மற்றும் ஏனைய குறுங்கால முதலீடுகளைப் பேணுதல்.
- அங்கீகரிக்கப்பட்ட காப்புறுதிப் பொறுப்புக்களிலிருந்து தேறிய காசு வெளிப்பாய்ச்சல்களின் மதிப்பிடப்பட்ட நேரத்தின் அடிப்படையில் ஒப்பந்தப் பொறுப்புக்கள் மற்றும் மீள்காப்புறுதிச் சொத்துக்களின் முதிர்ச்சித் தோற்றப்பாடுகளை நிர்ணயித்தல்
- முதலீட்டு சொத்துப்பட்டியலின் முதிர்ச்சிக் கலவையினை முகாமைத்துவம் மற்றும் முதலீட்டுக் குழு கிரமமானதோர் அடிப்படையில் மீளாய்வு செய்தல்
- தேவை ஏற்படுமாயின் காசு அழைப்பு வழியின் மூலம் ஆதரவளிக்க மீள்காப்புறுதியாளர்களுடன் உடன்படுதல்.
- அனைத்துப் பாரிய காசு வெளிப்பாய்ச்சல்ளுக்கும் முன்கூட்டிய எதிர்வுகூறல் மற்றும் திட்டமிடல் மற்றும் அத்தகைய வெளிப்பாய்ச்சல்களை எதிர்கொள்ள நிதியங்கள் கிடைப்பனவாயுள்ளதனை உறுதிசெய்வதற்கு அவசியமான ஏற்பாடுகளை மேற்கொள்ளல்.
- கம்பனி மாதாந்த அடிப்படையொன்றில் காசுப் பாய்ச்சல்கள் மற்றும் திரவத்தன்மை நிலைமை என்பவற்றினை எதிர்வுகூறி, கண்காணிக்கிறது.

## 38. காப்புறுதி மற்றும் நிதியியல் இடர்நேர்வு முகாமைத்துவம் (தொடர்ச்சி)

### 38.3.3 திரவத்தன்மை இடர்நேர்வு (தொடர்ச்சி)

**முதிர்ச்சிப் பகுப்பாய்வு**

செலுத்த வேண்டிய மற்றும் கிடைக்கத்தக்க வட்டி உட்பட மீதமுள்ள தள்ளுபடிசெய்யப்படாத ஒப்பந்தக் கடப்பாடுகளின் அடிப்படையில் பெறுதியல்லாத நிதியியல் சொத்துக்கள் மற்றும் நிதியியல் பொறுப்புக்களின் முதிர்வு விவரங்களை கீழேயுள்ள அட்டவணை சுருக்கமாகக்கூறுகிறது.

| டிசம்பர் 31 இலுள்ளவாறு | 2024 | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மூலப் பெறுமதி ரூ. '000 | நிலையான காலப் பகுதியில்லை ரூ. '000 | 1 ஆண்டு வரை ரூ. '000 | 1 தொடக்கம் 2 ஆண்டுகள் வரை ரூ. '000 | 2 தொடக்கம் 5 ஆண்டுகள் வரை ரூ. '000 | 5 தொடக்கம் 10 ஆண்டுகள் வரை ரூ. '000 | 10 ஆண்டுகளுக்கு மேல் ரூ. '000 | மொத்தம் ரூ. '000 |
| **நிதியியல் சொத்துக்கள்** | | | | | | | | |
